3897

Tamil Nadu Legislative Assembly Debates.

THIRD SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

15th to 18th December 1971.

VOLUME XIV (Nos. 1 TO 4).

TABLE OF CONTENTS.

Wednesday, 15*th December* 1971.

	PAGES
Personnel of the Government of Tamil Nadu ...	i–iv
Principal Officers of the Tamil Nadu Legislative Assembly	v
List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies	vii–xii
1. Questions and Answers	1–49
2. Announcements—	
(a) The Tamil Nadu Practitioners of Homeopathy Bill, 1971 (L.A. Bill No. 25 of 1971) ...	50
(b) The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1971	78
3. Bills—	
(a) The Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 40 of 1971)—*cont.*	50–78
(b) The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1971	79–104
4. Papers laid on the Table	104–105

Thursday, 16*th December* 1971.

1. Questions and Answers	107–153
2. Statemet by Chief Minister *re.* inclusion of more Members in the National Defence (State) Committee	153

D
V211, 31 N71
31N71·1432
61539

PAGES

Thursday, 16*th December* 1971—*cont.*

3. Adjournment Motions—

(*a*) Alleged move by Government to take action against Rajaji and the Weekly '*Swarajya*' ... 153–161

(*b*) Alleged failure of Government to take action against Rajaji and the Weekly '*Kalki*' for publishing views supporting Yahya Khan ... 154–164

(*c*) Students' strike in Madurai and Madras and consequent closure of colleges 164–168

4. Calling Attention—

(*a*) Hunger-strike by Elementary School Teachers' Association (Salem Branch) against Family Planning drive by teachers and consequent hardships 169–172

(*b*) Reduced supply of rice under 'Rupee-a-measure Scheme' 172–174

5. Non-Official Business—

(*a*) Bills—

(i) Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 (L.A. Bill No. 43 of 1971) 174–209

(ii) Madras University (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 44 of 1971) 209–211

6. Papers laid on the Table 211

Friday, 17*th December* 1971.

1. Questions and Answers 221–266

2. Resolutions—

Felicitations on the Victory of Bangla Desh ... 267–291

3. Calling Attention—

Adverse effects caused by letting out of Tiruchi Alcohol Factory drainage water into Uyyakkondan canal 291–294

4. Voting on Demands for Grants for Excess Expenditure for the year 1967-68—

Demand No. 4 Stamps Administration 295

Demand No. 6 State Legislature 295

Demand No. 7 Elections 295

Friday, 17*th December* 1971—*cont.*

PAGES

4. Voting on Demands for Grants for Excess Expenditure for the year 1967–68—*cont.*

Demand No. 8 Head of State, Ministers and Headquarters Staff 295

Demand No. 10 Administration of Justice ... 296

Demand No. 12 Police 296

Demand No. 14 Medical 296

Demand No. 17 Fisheries 296

Demand No. 18 Animal Husbandry 297

Demand No. 28 Public Works—Establishment and Tools and Plant 297

Demand No. 30 Road Transport Schemes ... 297

Demand No. 33 Miscellaneous 297

Demand No. 34 Stationery and Printing ... 298

Demand No. 43 Capital Outlay on Transport Schemes 298

Demand No. 47 Loans and Advances by the State Government 298

5. General Discussion on First Supplementary Statement of Expenditure for the year 1971–72 ... 298–304

6. Voting on Demands for Grants for further Expenditure for the year 1971–72—

Demand No. 1 Land Revenue Department ... 305

Demand No. 3 General Sales Tax and other Taxes and Duties—Administration 305

Demand No. 8 Head of State, Ministers and Headquarters Staff 305

Demand No. 8-A Milk Supply Schemes 305

Demand No. 9 District Administration and Miscellaneous 305

Demand No. 9-A Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 305

Demand No. 12 Police 305

Demand No. 13 Education 306

Friday, 17th December 1971—cont.

PAGES

6. Voting on Demands for Grants for further Expenditure for the year 1971–72—*cont.*
   - Demand No. 14 Medical 306
   - Demand No. 15 Public Health 306
   - Demand No. 16 Agriculture 306
   - Demand No. 17 Fisheries 306
   - Demand No. 18 Animal Husbandry 306
   - Demand No. 19 Co-operation 306
   - Demand No. 20 Industries 307
   - Demand No. 21 Cinchona 307
   - Demand No. 23 Community Development Projects, etc. 307
   - Demand No. 24 Labour including Factories ... 307
   - Demand No. 25 Welfare of the Scheduled Tribes and Castes, etc. 307
   - Demand No. 25-A Welfare of Backward Classes, etc. 307
   - Demand No. 26 Irrigation 307
   - Demand No. 27 Public Works—Works ... 308
   - Demand No. 28 Public Works—Establishment and Tools and Plant 308
   - Demand No. 29 Public Works—Grants-in-Aid ... 308
   - Demand No. 30 Road Transport Schemes ... 308
   - Demand No. 31 Famine Relief 308
   - Demand No. 32 Pensions 308
   - Demand No. 33 Miscellaneous 308
   - Demand No. 34 Stationery and Printing ... 309
   - Demand No. 35 Forest Department 309
   - Demand No. 40 Capital Outlay on Industrial Development 309
   - Demand No. 41 Capital Outlay on Irrigation ... 309
   - Demand No. 42 Capital Outlay on Public Works 309

Friday, 17th December 1971—cont.

PAGES

6. Voting on Demands for Grants for further Expenditure for the year 1971–72—*cont.*
   - Demand No. 43 Capital Outlay on Road Transport Schemes 309
   - Demand No. 46 Capital Outlay on Schemes of Government Trading 310
   - Demand No. 47 Loans and Advances by the State Government 310
7. Announcements—
   - (*a*) The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1971 310
   - (*b*) The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 310
8. Bills—
   - (*a*) The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1971 311
   - (*b*) The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 311
9. Papers laid on the Table 311

Saturday, 18th December 1971.

1. Questions and Answers 319–363
2. Announcements—
   - (*a*) Privilege Motion 364
   - (*b*) Bills passed in Legislative Council 364
3. Adjournment Motion—
   - Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains 364–366
4. Calling Attention—
   - (*a*) Change of shifts in Rajapalayam Alagappa Cotton Mills and consequent hardships to workers 367–368
   - (*b*) Danger facing cotton plantations in Coimbatore district due to non-availability of pesticides ... 369–371

Saturday, 18th December 1971—cont.

	PAGES
5. Motion—	
Change in the Order of the Business of the House	372
6. Bills—	
(a) The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1971 (L.A. Bill No. 54 of 1971)	372–373
(b) The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 (L.A. Bill No. 55 of 1971)	373–400
(c) The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 47 of 1971)	400–405
(d) The Tamil Nadu Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 48 of 1971)	406–411
7. Resolutions—	
(a) Draft Notification under Urban Land Tax Act, 1966	411
(b) Draft Rules amending Schedules to Motor Vehicles Taxation Act, 1931	412–415
(c) Draft Rules to regulate the Municipal Services (Pensionable)	432–433
8. Personal Explanation—	
Health Minister's statement refuting remarks made by a Member	430–431
9. Papers laid on the Table	433

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்:

திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்தியா சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்–வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி ஆட்சிமொழி நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் பொது நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்த்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள், வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான் கிராமதான இயக்கங்கள்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU KODARDAS KALIDAS SHAH

Members of the Council of Ministers.

1. THE HON. THIRU M. KARUNANIDHI (*Chief Minister*)—in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in-charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (*Minister for Public Health*)—in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (*Minister for Labour*)—in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)—in-charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Industries*)—in-charge of Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR (*Minister for Co-operation*)—in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (*Minister for Agriculture*)—in-charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (*Minister for Backward Classes*)—in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (*Minister for Electricity*)—in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்:

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.

பேரவைத் துணைத் தலைவர்:

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்:

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா வெ. கரிவேங்கடம்
திருமதி ஜோதி வெங்கடாசலம்
திரு. நா. வீராசாமி
திரு. நீ. அன்புச்செழியன்
திரு. என். கே. பழனிசாமி
திரு. எம். ஏ. லத்தீப்

சட்டப் பேரவைச் செயலாளர் :

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

இணைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்ரமணியம், பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்கள் :

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. ஜி. இராகவன்
திரு. சி. கே. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி. எஸ்ஸி., பி.எல்:

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி (2)
1 அண்ணுமலே, திரு. சி. வி. எம். ..	காஞ்சிபுரம்.
2 அபுசாலி, திரு. எம். ஏ.	புவனகிரி.
3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. ..	அரவக்குறிச்சி.
4 அரங்கண்ணல், திரு. இராம.	எழும்பூர்.
5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா).	உப்பிலியப்புரம்.
6 அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி.
7 அழகுத்தேவர், திரு. எஸ்.	சாத்தூர்.
8 அனந்தநாயகி, திருமதி த. ந. ..	மயிலாப்பூர்.
9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்).	புரசைவாக்கம்
10 அன்புச்செழியன், திரு. நீ.	பெரியகுளம்.
11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. ..	ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
12 ஆதித்தனர், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்).	ஸ்ரீவைகுண்டம்.
13 ஆலடி அருணு, திரு. வி.	ஆலங்குளம்.
14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி ..	நியமன உறுப்பினர்.
15 ஆறுமுகம், திரு. அ.	எடப்பாடி.
16 ஆறுமுகம், திரு. எஸ்.	வீரபாண்டி.
17 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
18 இரத்தினசபாபதி, திரு. மு.	விளாத்திகுளம்.
19 இராசகோபால், திரு. க. மு.	உத்திரமேரூர்.
20 இராசகோபால், திரு. வீ.	வந்தவாசி (செ.வ.)
21 இராசமாணிக்கம், திரு. அ.	நாகப்பட்டினம்.
22 இராசமாணிக்கம், திரு. கு.	ஆடுதுறை.
23 இராசரத்தினம், திரு. டி.	ஸ்ரீபெரும்புதூர்.
24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	சேலம்-II.
25 இராசு, திரு. ஜே. எஸ்.	பெரம்பலூர் (செ.வ.)
26 இராதாகிருட்டிணன், திரு. எம். ..	தண்டராம்பட்டு.
27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. ..	பரங்கிமலே.
28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
29 இராமநாதன், திரு. சி.	அறந்தாங்கி.
30 இராமலிங்கம், திரு. இரா.	தூத்துக்குடி.
31 இராமலிங்கம், திரு. செ.	கடலாடி (செ.வ.)
32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்).	மேலூர் தெற்கு (செ.வ.
33 இராமன், திரு. மூ.	கண்டமங்கலம் (செ.வ.)
34 இராஜாங்கம், திரு. என்.	குறிஞ்சிப்பாடி (செ.வ.)
35 இராஜாப்பிள்ளே, திரு. வீ. கே. ..	கன்னியாகுமரி.
36 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
37 இளஞ்செழியன், திரு. வீ. சா.	விராலிமலே.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
38 எட்டியப்பன், திரு. பூ.	பெரணமல்லூர்.
39 எட்மண்ட், திரு. க. உரொ.	திருச்செந்தூர்.
40 கணபதி, திரு. என்.	பாபநாசம்.
41 கணபதி, திரு. டி.	நாங்குனேரி.
42 கணேசன், திரு. எல்.	ஒரத்தநாடு.
43 கணேசன், திரு. எஸ்.	குற்றாலம்.
44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்).	கிணத்துக்கடவு.
45 கண்ணன், திரு. எம். ஆர்.	பேஸின்பிரிட்ஜ்.
46 கதிரவன், திரு. கா. மு.	தென்காசி.
47 கந்தசாமி, திரு. கே.	உசிலம்பட்டி.
48 கந்தசாமி, திரு. கே. பி.	சாத்தான்குளம்.
49 கந்தசாமி, திரு. எம்.	குளித்தலை.
50 கந்தப்பன், திரு. செ.	திருச்செங்கோடு.
51 கரிவேங்கடம், திரு. மா. வெ.	பாலக்கோடு.
52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்).	சைதாப்பேட்டை.
53 கருணாநிதி, திரு. தாழை. மு.	திருவாரூர் (செ.வ.)
54 கருணைநாதன், திரு. சோ.	கூனூர்.
55 கருப்பையா, திரு. ஆ.	கங்கைகொண்டான் (செ.வ.).
56 காசிராமன், திரு. நா.	கும்பகோணம்
57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு.	முதுகளத்தூர்.
58 காமாட்சி, திரு. கு.	திருவரம்பூர்.
59 கார்த்திசன், திரு. வீ.	இராதாபுரம்.
60 காவேரிமணியம், திரு. சொ.	திருப்பரங்குன்றம்.
61 காளிமுத்து, திரு. கா.	சிவகாசி.
62 கிட்டப்பா, திரு. என்.	மாயூரம்.
63 கிருட்டிணன், திரு. நா.	பேரணம்பட்டு (செ. வ.)
64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.	நெல்லிக்குப்பம்.
65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ.	திருச்சிராப்பள்ளி-1.
66 கிருஷ்ணன், திரு. கே. ஆர்.	ஊத்தங்கரை.
67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ்.	மதுரை (கிழக்கு).
68 குமாரசாமி, திரு. அ. சே.	திருக்கோயிலூர்.
69 குமாரசாமி, திரு. கே. என்.	பல்லடம்.
70 குருசாமி, திரு. நா. வெ.	ஆண்டிப்பட்டி.
71 கேசவலு, திரு. தே.	கள்ளக்குறிச்சி.
72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ்.	உதனப்பள்ளி.
73 கோபால், திரு. எம்.	குன்னத்தூர் (செ. வ.)
74 கோபால், திரு. கே. பி.	கம்பம்.
75 கோபால், திரு. பி.	கோயம்புத்தூர் மேற்கு.
76 கோவிந்தசாமி, திரு. வி. செ.	காவேரிப்பட்டினம்.
77 கோவிந்தராசன், திரு. ஆர்.	கடலூர்.
78 கோவிந்தராசன், ஜனா. திரு.	கந்தர்வகோட்டை

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
79 கோவிந்தன், புலவர் கா.	செய்யாறு.
80 கோவை செழியன், திரு.	காங்கேயம்.
81 சகாதேவன், திரு. எஸ்.	செஞ்சி.
82 சங்கமுத்து தேவர், திரு. ச.	அம்பாசமுத்திரம்.
83 சதாசிவம், திரு. சே.	ஆண்டிமடம்.
84 சண்முகசுந்தரம், திரு. அ. ப.	பொள்ளாச்சி.
85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்).	திருவண்ணாமலை.
86 சண்முகம், திரு. பெரி.	திருவாடானை.
87 சண்முகம், திரு. மு.	விழுப்புரம்.
88 சத்தியமூர்த்தி, திரு. மு.	புதுக்கோட்டை.
89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்).	பெரம்பூர் (செ.வ.)
90 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே.	இராமநாதபுரம்.
91 சம்பத், திரு. டி. வி.	செம்பனார்கோயில்.
92 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
93 சாரதி, திரு. மா. பா.	வேலூர்.
94 சிதம்பரம், திரு. சித.	காரைக்குடி.
95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ.	சேரன்மகாதேவி.
96 சிவபெருமாள், திரு. கோ.	அரியலூர்.
97 சிறைமீட்டான், திரு. தொ. க.	பரமக்குடி (செ. வ.)
98 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்).	விருதுநகர்.
99 சீனிவாசன், திரு. தொ. ப.	போளூர்.
100 சின்னசாமி, திரு. அ.	செயங்கொண்டம் (செ. வ.)
101 சின்னசாமி, திரு. ஆர்.	தர்மபுரி.
102 சின்னசாமி, திரு. மு.	மொடக்குறிச்சி.
103 சின்னசாமி, டாக்டர் வ.	ஏற்காடு (ஆ.வா.).
104 சின்னராசு, டாக்டர் ச. அ.	ஹஜூர் (செ.வ.)
105 சின்ன வெள்ளையன், திரு. சி.	சேந்தமங்கலம் (ஆ.வா.)
106 சுந்தரம், திரு. ஒ. என்.	திண்டுக்கல்.
107 சுப்ரமணியம், திரு. எஸ். கே.	சத்யமங்கலம்.
108 சுப்பிரமணியம், திரு. ஏ.	சிங்கநல்லூர்.
109 சுப்பிரமணியம், திரு. கே. எம்.	தியாகராயநகர்.
110 சுப்பிரமணியன், திரு. மா.	ஈரோடு.
111 சுப்பிரமணியன், திரு. வீ.	உளுந்தூர்பேட்டை.
112 சுப்பு, திரு. க.	ராஜபாளையம்.
113 சுப்பையா, திரு. ஆ. கு.	கோட்டூர் (செ.வ.).
114 சுப்பையா, திரு. கே. வி.	ஆலங்குடி.
115 சுப்பையா, திரு. ச.	சங்கரன்கோயில் (செ.வ.).
116 சுப்பையா, திரு. ஏ. ஆர்.	கடயநல்லூர்.
117 சுருளிவேல், திரு. மு.	போதிநாயக்கனூர்.
118 சுரேந்திரன், திரு. எம்.	மேட்டூர்.
119 சுவாமிதாஸ், திரு. எ.	பத்மநாபபுரம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
120 செபமாலை, திரு. கோ.	மங்களூர் (செ.வ.).
121 ஜெயராமன், திரு. கி.	சேலம்-1.
122 செல்லதுரை, திரு. வீ.	ஓமலூர் (செ.வ.).
123 செல்லையா, திரு. குழ.	பேராவூரணி.
124 செல்வராஜ், திரு. எம்.	விருத்தாசலம்.
125 சேதுராமன், திரு. சி.	சிவகங்கை.
126 சோனையா, திரு. த.	மானாமதுரை.
127 சோமசுந்தரம், திரு. ந.	வலங்கைமான் (செ.வ.).
128 சௌடி சுந்தரபாரதி, திரு.	அருப்புக்கோட்டை.
129 சௌந்திரபாண்டியன், திரு. பெ.	கிருஷ்ணராயபுரம் (செ.வ.).
130 டென்னில், திரு. என்.	கிள்ளியூர்.
131 தங்கமணி, திரு. கே. டி. கே.	மதுரை மேற்கு.
132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்).	திருச்சிராப்பள்ளி-2.
133 தருமலிங்கம், திரு. ந.	ரிஷிவந்தியம் (செ.வ.)
134 தவமணித் தேவர், திரு. வி.	சேடப்பட்டி.
135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி.	நாட்ரம்பள்ளி.
136 தியாகராசன், திரு. அ.	திருமயம்.
137 தியாகராசன், திரு. இ. எஸ்.	திருத்தணி.
138 திருப்பதி, திரு. கு.	மதுரை (சென்ட்ரல்).
139 துரைசாமி, திரு. எ. க.	குடியாத்தம்.
140 துரைசாமி, திரு. சு.	திருப்பூர்.
141 துரைமுருகன், திரு.	காட்பாடி.
142 துரைராஜ், திரு. சு. ம.	திருவள்ளூர் (செ.வ.).
143 தூயமணி, திரு. மே. சி.	மேட்டுப்பாளையம்.
144 தேவராசன், திரு. எம்.	உதகமண்டலம்.
145 தேவேந்திரன், திரு. அ.	நன்னிலம் (செ.வ.).
146 தோப்பூர் திருவேங்கடம், திரு.	கணியம்பாடி.
147 நடராசன், திரு. ஈ. எம்.	அந்தியூர்.
148 நடராசன், திரு. எஸ்.	தஞ்சாவூர்.
149 நரசிம்மன், திரு. எ. சி.	ஆரணி.
150 நல்லசாமி, திரு. எஸ்.	கரூர்.
151 நாகராஜன், திரு. க.	வடமதுரை.
152 நாகலிங்கம், திரு. பா.	பொன்னேரி (செ.வ.).
153 நாச்சிமுத்து, திரு. நா.	ஒட்டஞ்சத்திரம்.
154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி.	ஆத்தூர்.
155 நாச்சியப்பன், திரு. ந.	சங்கராபுரம்.
156 நாராயணசாமி, திரு. மா. வே.	திருவொற்றியூர்.
157 நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இரா. (அமைச்சர்)	திருவல்லிக்கேணி.
158 நைனாமலை, திரு. இரா.	ராசிபுரம்.
159 பத்மநாபன், திரு. பொ.	திருநெல்வேலி.
160 பத்மாவதி, திருமதி எ. கோ.	முகையூர்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
161 பரந்தாமன், திரு. ஆ.	கடம்பத்தூர்.
162 பரமசிவம், திரு. எம்.	தாரமங்கலம்
163 பலராமன், திரு. என். எஸ்.	அரக்கோணம்.
164 பழனிசாமி, திரு. நா.	பொங்கலூர்.
165 பழனிசாமி, திரு. என். கே.	பெருந்துறை.
166 பழனிசாமி, திரு. மு.	வெள்ளக்கோயில்.
167 பழனிச்சாமி, புலவர் சி.	பழனி (செ.வ.).
168 பழனியப்பன், டாக்டர் ச. மு.	கோபிசெட்டிப்பாளையம்.
169 பழனியம்மாள், திருமதி வி. ப.	தாராபுரம்.
170 பழனிவேலன், திரு. க.	வரகூர்.
171 பழனிவேலன், திரு. மு.	நாமக்கல்.
172 பழனிவேலு, திரு. பி.	ஆத்தூர்.
173 பழனிவேல் ராஜன், திரு	தேனி.
174 பன்னீர்செல்வம், திரு. எம்.	ஆம்பூர் (செ.வ.).
175 பாண்டுரங்கம், திரு. சி.	செங்கம் (செ.வ.).
176 பாலகிருட்டிணன், திரு. கு.	மன்னார்குடி.
177 பாலசுந்தரம், திரு. வை.	அச்சரபாக்கம் (செ.வ
178 பாலையா, திரு. எ.	கொளச்சல்.
179 பெரியசாமி, திரு. கு.	கொடவாசல்.
180 பெரியசாமி, திரு. தி. ஒ.	அவிநாசி.
181 பெருமாள், திரு. செ.	காட்டுமன்னார்கோயில்
182 பெருமாள், திரு. எ. ஆர்.	காரியப்பட்டி.
183 பொம்மன், திரு. கு. அ.	கூடலூர் (செ.வ.).
184 பொன்சொக்கலிங்கம், திரு. பி.	சிதம்பரம்.
185 பொன்னப்ப நாடார், திரு. ஆர்.	விளவங்கோடு.
186 பொன்னுமலை, திரு. தி.	பனைமரத்துப்பட்டி.
187 பொன்னுரங்கம், திரு. எ. எம்.	சோளிங்கபுரம்.
188 மணலி கந்தசாமி, திரு. சி.	திருத்துறைப்பூண்டி.
189 மணியன், திரு. பி. எஸ்.	சோழவந்தான்.
190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. எ. (பேரவைத் தலைவர்).	ஆயிரம் விளக்கு.
191 மருதாசலம், திரு. என்.	பேரூர் (செ.வ.).
192 மலைக்கண்ணன், திரு. வீ.	இளையாங்குடி.
193 மலைச்சாமி, திரு. பெ.	மேலூர் வடக்கு.
194 மன்னியப்பன், திரு. சி.	கிருஷ்ணகிரி.
195 மாணிக்கம், திரு. என்.	பென்னகரம்.
196 மாணிக்கவாசகம், திரு. இரா.	தொண்டாமுத்தூர்.
197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	திருப்பத்தூர்.
198 மாரிமுத்து, திரு. எ. ஆர்.	பட்டுக்கோட்டை.
199 மாரிமுத்து, திரு. மூ.	தலைவாசல் (செ.வ.).
200 மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ்.	மேலப்பாளையம்.
202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந.	லால்குடி.
203 முத்து, திரு. வ.	சங்கரி (செ.வ.).
204 முத்துசாமி, திரு. ப.	வேடசந்தூர்.
205 முத்துச்செல்வன், திரு. பு. செ.	முசிறி.
206 முத்துவேல், திரு. ந.	வானூர் (செ.வ.).
207 முத்தையா, திரு. கே. சே.	கடலூர்.
208 முத்தையா, திரு. எம்.	ஒட்டப்பிடாரம் (செ.வ.).
209 முருகையன், திரு. எஸ்.	கலசப்பாக்கம்.
210 முனியாண்டி, திரு. ஆ.	நிலக்கோட்டை (செ.வ).
211 முனு ஆதி, திரு. மு.	திருப்போரூர்.
212 முனுசாமி, திரு. ரா. ரா.	மேல்மலையனூர்.
213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம்.	துறைமுகம் (சென்னை நகரம்).
214 மோசஸ், திரு. ம.	நாகர்கோயில்.
215 ரங்கநாதன், திரு. கே.	கோயம்புத்தூர் (கிழக்கு)
216 ராமசாமி, திரு. இ.	வால்பாறை.
217 ராமசாமி, திரு. ஜி.	திருப்பத்தூர்.
218 ராமராசன், திரு. வ. க.	பவானிசாகர் (செ.வ.).
219 ராஜா, திரு. ஏ. எம்.	பவானி.
220 ராஜாராம், திரு. ஜி.	திண்டிவனம்.
221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ.	திருமங்கலம்.
222 லத்தீப், திரு. எம். ஏ.	வாணியம்பாடி.
223 வகாப், திரு. கே. ஏ.	ராணிப்பேட்டை.
224 வடிவேலு, திரு. சீ. க.	தோட்டியம்.
225 வடிவேல், திரு. எஸ்.	சீர்காழி (செ.வ.).
226 விசுவநாதன், திரு. செ. கோ.	செங்கல்பட்டு.
227 வீராசாமி, திரு. நா.	ஆற்காடு.
228 வெங்கடசாமி, திரு. பி.	ஹோசூர்.
229 வெள்ளத்துரை, திரு. அ.	வாசுதேவநல்லூர்.
230 வேதாசலம், திரு. மு.	வண்ணாரப்பேட்டை. (சென்னை நகரம்)
231 வேலப்பன், திரு. சி. வே.	கபிலமலை.
232 வேழவேந்தன், திரு. கா.	கும்மிடிபூண்டி.
233 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டார்.
234 ஜோதி வெங்கடாசலம், திருமதி	ஸ்ரீரங்கம் (செ.வ.).
235 ஹாண்டே, டாக்டர் எச். வி.	பார்க் டவுன் (சென்னை நகரம்).

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்

தொடர் எண்ணும், பெயரும்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்	அமைச்சர்.
2 திரு. கோவிந்த் சாமிநாதன்	தலைமை வழக்கறிஞர்.

தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1971 டிசம்பர் 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்---விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

அரசுப் பதவிகளில் அரிசனங்களுக்கு ஒதுக்கீடு

* 394 **வினா—திரு. எம். முத்தையா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கப் பதவிகளில் ஆட்கள் தேர்ந்தெடுக்கும் போது, தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஸ்தானங்கள் குறிப்பிட்ட ஆண்டில் பூர்த்தியாகாத இடங்களை ஒதுக்கி வைத்து மறு தேர்வில் தகுதியுடைய தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுப் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) அரிசனங்கள், பழங்குடி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் ஓராண்டில் நிறைவு செய்யப்படாமல் எஞ்சி நின்ற இடங்களை அடுத்த ஈராண்டுகள் வரை ஒதுக்கியவாறு கணக்கில் எடுத்தெழுதி வைத்திருக்க வேண்டுமென்றும் சாதாரணமாக ஓராண்டில் ஒதுக்கப்படும் காலி இடங்களின் எண்ணிக்கையும் மேற்சொன்ன கணக்கில் எடுத்தெழுதி வைத்துப் பார்க்கும்போது, மொத்தம் ஏற்படும் காலி இடங்களில் 45 சதவீதத்திற்கு மேல் ஆகக் கூடாதென்னும் உத்தரவை அரசு பிறப்பித்திருந்தது.

இதனையடுத்து, பின்தங்கிய வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையை 25 சதவீதத்திலிருந்து 31 சதவீதமாகவும், அரிசனங்கள், பழங்குடி மக்கள் இவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 16 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாகவும் உயர்த்தி, அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. மேற்சொன்ன உத்திரவுகளை யொட்டி ஓராண்டில் எஞ்சி நிற்கும் காலி இடங்களை அடுத்த ஆண்டுக் கணக்கில் எடுத்தெழுதிக் கொள்ள வேண்டுமென்று பிறப்பித்திருந்த உத்திரவுகள் பயனற்றவை ஆயின.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, பொதுவாகவே அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய 18 சதவீத இடங்களும் பூர்த்தி ஆகாத நிலையில்தான் இருக்கிறது. இந்த உத்தரவு முறையாக அமுல்படுத்தப் படுவதற்காக அரசு சுற்றறிக்கை ஏதாவது அனுப்புமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிக் குறைவான அளவில் இருப்பதாகத் தெரியவில்லை. இது சரியாக அமுல்படுத்தப் படுவதற்கு அரசு ஏற்கெனவே சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. இன்னும் குறைபாடுகள் இருக்குமானால் கவனிக்கப்படும்.

காவல் துறை அலுவலர்கள் மாநாடு

* 395 வினா—*திரு. கே. எ. வகாப் :* மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 13-9-1971 அன்று தமிழ்நாடு மாவட்ட போலிஸ் அதிகாரிகள் மாநாடு சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) கீழ்க்காணும் பொருள்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டு அவை ஆய்விலிருந்து வருகின்றன :—

1. மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திவைத்து ஆப்காரி சட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருவது தொடர்பாக காவலர்களுக்குள்ள சிக்கல்கள்.

2. நாட்டு வெடி மருந்து வைத்துப் பாறைகளை உடைப்பதத் தடை செய்வது.

3. மருத்துவ மனைகளில் குற்றவாளி சிகிச்சைப் பிரிவுகள் கட்டுவது.

4. நகரங்களிலும், பட்டணங்களிலும் சாலைகள். தெருக்கள் இவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை நீக்குவதற்கான சிறப்பு நடவடிக் கைகள்.

5. மாநில எல்லைச் சோதனை நிலையங்கள் வெவ்வேறு துறைகள் வெவ்வேறு சோதனை நிலையங்களை வைத்து வருவது-பொதுச் சோதனை நிலையம் ஏற்படுத்துவது.

6. காவலர் செய்தித் தொடர்புகளையும் போக்குவரத்து வசதிகளையும் காலத்திற்கேற்ப மாற்றியமைத்தில்.

7. துப்பறியும் முறைகளை காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல்.

8. காவல்துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சதவீதத்தின ருக்குக் குடியிருப்பு வசதியளிப்பது என்னும் குறிக்கோள் அளவை எய்துவதற்காகக் காவலர் வீட்டு வசதித் திட்டத்தை விரிவு படுத்துதலும், இத் திட்டத்தை அரசிதழ் பதிவு பெற்ற காவல் அதிகாரிகளுக்கு, குறிப்பாக உட்கோட்ட அதிகாரிகளுக்கு நீட்டித்தலும்.

9. சென்னை மாநகர் காவலர் சட்டம் ஊர்வலம் நடத்த விரும்புவோர் அந்த இடத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டருக்குக் குறைந்தது 24 மணி நேர முன்பு அறிவிப்புக் கொடுக்க வேண்டு மென்னும் வகையில் போதிய விதித்துறை செய்தல்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இப்பொழுது எடுக்கப் பட்டிருக்கின்ற இந்த முடிவுகள் மிகவும் சிறப்பான அம்சங்களைக் கொண்டவையாக இருக்கின்றன. எனினும், கைதிகளுக்கு வேண்டிய விடுதிகளில் தனி வார்டுகள் கட்டுவது சம்பந்தமாக ஆலோசிக்கப்படுவதாகக் கூறினார்கள். அப்படிப்பட்ட வார்டுகள் சில நேரங்களில் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்றன. ஆகவே, இதற்கு உடனடியாக முயற்சி செய்து வார்டுகள் கட்டி முடிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவ்வாறு தனி இடங்கள் கட்டும் பணியைப் பல நிலைகளில் மேற்கொள்ளலாம் என்றும், முதலில் வேலூரிலும், பிறகு முறையே மதுரை, கோவை, தஞ்சை கடலூர் ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளலாம் என்றும் குறிப் பிடப்பட்டிருக்கிறது. இவைகளை யெல்லாம் மனத்தில் வைத்து இருக்கும் நிதி நிலைகளுக்கு ஏற்றவாறு இந்தக் காரியம் செயல் படுத்தப்படும்.

திரு. என். கிட்டப்பா: போலீஸ் அதிகாரிகள் தங்களுக்கெனத் தனியே சங்கம் வைத்துக்கொள்ள அனுமதி கோரி அரசாங்கத் திடம் விண்ணப்பம் செய்துள்ளாரா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி ஏதும் தகவல் இல்லை.

திரு. நா. வீராசாமி : போலீஸ் அதிகாரிகளுடைய மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் எடுக்கப்பட்ட முடிவுகளா? அல்லது அகில இந்திய அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளா? மற்ற மாநிலங்களிலும் இதுபோன்ற மாநாடுகளைக் கூட்டி இத்தகைய கோரிக்கைகளை எழுப்பி, முடிவுகளை அந்தந்த மாநில அரசுக்கு அனுப்பியுள்ளனரா? அகில இந்திய அடிப்படையில் முடிவுகளெல்லாம் அங்கீகரிக்கப் பட்டிருக் கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இங்கு 13-9-1971இல் நடைபெற்ற போலிஸ் அதிகாரிகள் மாநாடு தமிழ்நாடு மாவட்டப் போலீஸ் அதிகாரிகளுடைய மாநாடாகும்; அகில இந்திய ரீதியில் நடைபெற்ற மாநாடு அல்ல.

ல்கம்
சண்முக

திரு. எம். தேவராசன் : நாட்டிலே நாச வேலைகள், அவை கின்ற நச்சல்பாரிகளை ஒடுக்க ஏதாவது முடிவு எடுச்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகளுக்கும் ஏற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. அதுபற்றியும் விவாதிக்கப்பட்டது.

மாநில திட்டக் குழு

*396 வினா—**திரு. மா. பா. சாரதி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு திட்டக் கமிஷன் எப்போது செயல்படத் துவங்கும்?

(இ) 1971-72-ம் ஆண்டுக்கான திட்டம் எப்போது தீட்டப் படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) தமிழ்நாடு திட்டக் கமிஷன் 17-6-1971-ம் தேதி முதல் தனது பணியைத் துவக்கியது.

(இ) 1971-72-ம் ஆண்டுக்கான திட்டம் ஏற்கனவே மாநில நிதித் துறையால் தீட்டப்பட்டு, மன்றத்தில் 1971-72-ம் ஆண்டுக் கான திருத்திய வரவு செலவு பட்டியலுடன் வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு திட்டக் கமிஷன் தனது திட்ட அறிக்கை எதுவும் இதுவரை தரவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: கிட்டத்தட்ட 6 மாத காலம் ஆகிவிட்டது. திட்டக் கமிஷன் தனது பணியைத் துவங்கி, 1971-72-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைக் குறித்துக் கருத்துக்கள் ஏதாவது சொல்லக்கூடிய முறையிலோ அல்லது வருஷா வருஷம் எம்மாதிரித் திட்டம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியோ ஒரு இடைக்கால அறிக்கையினைத் திட்டக் கமிஷன் சமர்ப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது அதிலே 'டாஸ்க் ஃபோர்ஸ்' என்று 15 பிரிவுகள் அமைக்கப்பட்டு, அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றியும் இன்றைக்கு ஆய்ந்து வருகி றார்கள். நான் ஏற்கெனவே அறிவித்ததைப் போல் வருகின்ற வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தின் போது ஒரு முன்வரைவு ஒன்றை வைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். எனவே, வரவு-செலவுத் திட்டம் விவாதிப் பதற்குள்ளாக அதைத் தருவார்கள் என்று நாம் எதிர் பார்க்கலாம்.

DR. H. V. HANDE: Sir, may I know whether the State Planning Commission is working in conjunction with the Central Planning Commission and whether there is any co-ordination between the State Planning Commission and the Central Planning Commission? Also, whether the State Planning Commission has ...vered certain new ideas or plans which have escaped the ... of the Central Planning Commission and if so, whether ...lar headway or special contribution has been made by ...ng Commission?

ருக்(ண்டு)—
எய்துவத...
படுத்துதலும்,
அதிகாரிகளுக்கு
நீட்டித்தலும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்தியிலே இருக்கும் திட்டக் கமிஷனுக்கும் இதற்கும் கோ-ஆர்டினேஷன் இருப்பதாகச் சொல்ல முடியாது. இங்கே இப்பொழுது புதிய திட்டங்கள் ஏதையாவது அறிவித்திருக்கிறார்களா என்றால், அவர்கள் அளிக் கின்ற அறிக்கையின் வரைவைப் பொறுத்துத்தான் அதை அறி விக்க முடியும். இப்பொழுது இடைக்காலத்தில் அவைகளை அறி விப்பது சாத்தியமாக இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலும் திட்டக் கமிஷன் அமைப்பதுபற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்ததே, அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாவட்ட அளவில் திட்டக் கமிஷன் வைக்கப்படவில்லை. மாநிலத் திட்டக் கமிஷன் மாவட்ட அளவில் தொடர்புகள் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, மாநில திட்டக் கமிஷன் ஆங்காங்குள்ள பொதுமக்களையும், பொது ஜனப் பிரதிநிதிகளையும், சர்வ கட்சிப் பிரதிநிதிகளையும் கலந்து மாநில அளவில் திட்டம் வகுத்து அரசுக்குப் பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதில் சர்வகட்சிப் பிரச்சினை எதுவும் இல்லை. கட்சிச்சார்பற்ற முறையில் திட்டத் துறையில் ஆழமான கருத்துக்களையுடைய வல்லுநர்களையும் கலந்து ஆலோசிப்பதற்குத் திட்டக் குழுவில் உள்ளவர்கள் எப்போதும் தயாராக இருப்பார்கள்.

திரு. ஆ. பரந்தாமன்: இந்தத் திட்டக் கமிஷன் குறுகிய காலத் திட்டங்களைத் தீட்டாமல் நீண்டகாலத் திட்டங்களைத் தீட்ட முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீண்டகாலத் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்பதற்காகத்தான் திட்டக் கமிஷனே அமைக்கப் பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: May I know whether the State Planning Commission is purely an official Commission or members of the House will be given representation in that?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதிலே இப்போது இருக்கிறவர்களில் யாரும் அவை உறுப்பினர்கள் இல்லை. ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி அதன் தலைவராக அவை முதல்வர் நான் இருக்கிறேன். துணைத் தலைவராக அடிஷனல் சார்ஜில் திரு. இராஜாராம் இருக்கிறார். முழுநேர உறுப்பினர் டாக்டர் ப்ரைட்சிங். பகுதிநேர உறுப்பினராக டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, டாக்டர் பி. நடராசன், டாக்டர் எம். சண்முக சுந்தரம், திரு. என். மகாலிங்கம் ஆகியோர் இருக்கிறார்கள், அவை உறுப்பினர் வேறு யாரும் இல்லை.

திரு. கா. காளிமுத்து: மாநில அளவில் அமைக்கப்பட்டிருக்கிற திட்டக் குழுவைப்பற்றி மைய அரசு அபிப்பிராயம் ஏதாவது தெரிவித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில அரசுத் திட்டக் குழு அமைத்திருப்பதை மைய அரசு வரவேற்று இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: மாநிலத் திட்டக் குழுபோன்று மாவட்ட ரீதியில் திட்டக் குழுவை அமைத்து, அவர்களது ஆலோசனைகளையும் கேட்டு மாநிலத் திட்டக் குழு அரசுக்கு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திட்டங்கள் உச்சியில் இருந்து போடப்படாமல் அடியில் இருந்து போடப்பட வேண்டுமென்ற அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் மாவட்ட அளவிலும் இன்னும் வட்ட அளவிலும், கிராம அளவிலும் தேவையான திட்டங்களைத் தேவையானவர்களுடன் மாநிலத் திட்டக் குழுவினர் ஆராய வேண்டுமென்ற அடிப்படையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்டங்களுக்கென்று தனித்தனி குழுக்கள் போடப்படாவிட்டாலும் திட்டக் குழுவில் உள்ளவர்கள் மாவட்ட அளவில் பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். தேவராசன்: மாநில அளவில் திட்டக்குழு அமைக்கப்பட்டிருப்பதை மைய அரசு வரவேற்று இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, இதற்கு மத்திய அரசிடம் இருந்து நிறையப் பொருள் எதிர்பார்க்கலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதிர்பார்க்கலாம்.

மதுவிலக்குப் பிரச்சாரம்

*397 வினா—திரு. எம். முத்தையா
திரு. கே. எ. வகாப்
மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் மது அருந்துவதின் தீமைகளை எடுத்துக் காட்ட ஒரு பிரச்சாரக் குழு அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(உ). அக் குழுவில் பணியாற்றுபவர்களுக்கு ஊதியம் ஏதேனும் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) தமிழ்நாடு அரசு அமைக்கவில்லை.

(இ) & (உ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, இந்தமாதிரிக் குழுவை அமைத்தால் அதில் உள்ள நன்மை தீமையைப்பற்றி எடுத்துச் சொல்லிப் பிரச்சாரம் செய்ய வசதியாக இருக்கும். அதற்கு இந்தக் குழுவை அமைக்க நமது முதல் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நன்மை தீமை இரண்டையும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. மதுவினால் ஏற்படுகிற தீமையைச் சொன்னால் போதும்.

திரு. கே. எ. வகாப்: அரசுச் சார்பில் இந்தக் குழு அமைக்கப்படவில்லை. அரசுச் சார்பில் அமைக்கப்பட்டால் அதில் தமிழகத்து அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் ஏனையோரும் கலந்து பிரச்சாரத்தில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டதோ ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மதுவின் தீமையைப் பற்றி நாம் எடுத்துச்சொல்லிக்கொண்டு வருகிறோம். மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திவைத்த நேரத்தில் மதுவின் தீமைகளை உணர்ந்துதான் நாட்டின் சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்க நேரிடுவதுபற்றிச் சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு அரசாங்கச் சார்பில்தான் இதன் தீமைகளை எடுத்துப் பிரச்சாரம் செய்ய வேண்டுமா என்பது யோசிக்கப்பட வேண்டும்.

திரு. நா. வீராசாமி: சர்க்கார் சார்பில் மதுவின் தீமைகளை எடுத்துப் பிரச்சாரம் செய்வதற்குக்குழு அமைக்கப்படவில்லை என்றாலும் திராவிட முன்னேற்றக்கழகம் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்திருக்கிறதே, அதைக்கூட எதிர்க்கட்சிகள் கிண்டல் செய்கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது அவர்களுக்குள்ள உரிமை.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு அங்கத்தினர் திரு.எம்.ஜி.ஆர். குழு செயல்பட்டுக்கொண்டிருக்கிறதா ? அதனை அரசாங்கம் அங்கீகரித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அங்கீகரிப்பது என்பது வேறு. ஆதரிப்பது என்பது வேறு. அந்தக் குழு செயல்பட்டு வருகிறது. எந்தக் கட்சியின் சார்பில் இதுபோன்ற பிரச்சாரக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும் அதை இந்த அரசாங்கம் ஆதரிக்கும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: பிரச்சாரக் குழுக்கள் அமைப்பதைவிட சினிமாத்துறையின் மூலமாக இதன் தீமைகளைப் படம் எடுத்துக் காட்டினால் மக்களுக்கு நன்றாகப் புரியும். அப்படிப்பட்ட பிரச்சாரப்படம் எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

[1971 டிசம்பர் 15

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மக்களைக் கவரத்தக்க வகையில் எந்த, எந்தத் துறைகளை எல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்த அந்தத் துறைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி: மதுவினுடைய தீமைகளைப்பற்றி எடுத்து விளக்கும் போஸ்டர்களை எல்லாம் மதுக்கடைகளுக்குப் பக்கத்தில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோன்ற போர்டுகளை வைக்க வேண்டாம். மது அருந்திக் கஷ்டப்படுகிறவர்களைக் கடைகளின் அருகில் பார்த்தாலே அதன் தீமைகளை உணர்ந்து கொள்ளலாம்.

* 398 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state whether there are proposals under the consideration of the Government to enlist the services of religious heads for propagating prohibition?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. என். டென்னிஸ் : மதத் தலைவர்கள் இப்பணியில் ஊதியத்தை எதிர்பார்க்காமல் ஈடுபடுவார்கள். ஆகவே அரசு அவர்களது சேவையைப் பயன்படுத்திக் கொள்ள அவர்களை அழைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சேவை என்பது அவர்களாக முன் வந்து ஆற்ற வேண்டிய ஒன்று. கோரிப்பெறுவது அல்ல. அவர்கள் அதுபோன்ற சேவையில் ஈடுபடத்தாமே முன்வருவார்களானால். அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்.

* 399 **வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுவிலக்கு அமலுக்கு வருவதற்கு முன்பு, அரசு ஒரு ஆண்டிற்குப் பெற்று வந்த கலால் வரி எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இம்மாநிலத்தின் எப்பகுதியிலும் மதுவிலக்கு செயலில் இல்லாத காலத்தில், ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தில் 1945-46-ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை மூலம் கிட்டிய மொத்த வருவாய் ரூபாய் 15.9 கோடி ஆகும். இதில் கன்னியாகுமரி மாவட்டம் தவிர, தற்போதைய தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களின் ஆயத்தீர்வை வருவாய் 1945-46-ல் ரூபாய் 9.46 கோடி ஆகும்.

திரு. கே. எ. வகாப் : மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்ட பிறகு இப்போது வருகிற வருமானம் அரசு எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

1971 டிசம்பர் 15]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிட்டத்தட்ட 15 கோடி வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அடுத்த முழு ஆண்டுக்கு 20 கோடி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே 45-46-இல் கிடைத்ததைவிட இப்போது அதிகமாகக் கிடைக்கிறது என்றுதான் பொருள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 1971-72 இல் 15 கோடி வரும் என்று எதிர்பார்ப்பதாகச் சொன்னார்கள். பத்திரிக்கை மூலமாகக் கிடைத்த தகவல்களில் இருந்து இன்னும் அதிகமாகவே வந்திருக்கும் போலிருக்கிறதே?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆயத்தீர்வை கணக்கில் எடுக்கப்படவில்லை. அவைகளைச் சேர்த்தால் நான் கிட்டத்தட்ட 15 கோடி என்று சொன்னேன். இன்னும் அதிகமாகக் கூட வரலாம்.

Tamil medium students in Colleges

* 400 *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the incentives granted to students taking Tamil medium in Colleges.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பி.ஏ., பி.எஸ்சி., பட்ட வகுப்புகளில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 180 உதவித் தொகையும் புகுமுக வகுப்பில் தமிழைப் பயிற்று மொழியாகத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்க ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகையும் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தத் தொகை போதாது என்கிற கோரிக்கை இந்த அரசுக்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, போதாது என்ற கோரிக்கை வரவில்லை. ஏற்கனவே முழு உதவித் தொகை—ஸ்காலர்ஷிப்—பெற்று வருகிற மாணவர்களுக்கும்கூட இந்தத்தொகை கொடுக்கப்படவேண்டும் என்கிற கோரிக்கைதான் வந்தது அதற்காகக் கிளர்ச்சி செய்தார்கள். எல்லோருக்குமே ரூ. 180 கொடுப்பது என்பது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்படி தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம்பெறுகிற பட்டதாரிகளுக்கு உரிய முதலிடம் எந்த எந்தத் துறைகளில் எந்தப் பதவிகளுக்கு வழங்கப்படுகின்றன? அந்தப் பட்டதாரிகளுக்கு முதலிடம் தருகின்றவகையில் எல்லாத் துறைகளுக்கும் இதை விரிவுபடுத்தி, தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம் பெற்றவர்களை அரசாங்கம் ஊக்குவிக்கத் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கென்று தனியாகப் பதவிகள் அளிக்கின்ற நிலைமைகள் இல்லை. எந்த எந்தத் துறைகளுக்குத் தமிழ் வேண்டுமென்கிற நிலைமை வருகிறபோது தங்களுடைய திறமைகளைக் காட்டக் கூடியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஏற்கெனவே அவர்கள் தமிழில் படித்திருந்தாலும், ஆங்கிலத்தில் படித்திருந்தாலும் தொழில் நிறுவனத்தில் சேருவதில் எந்தவித வேறுபாடும் காட்டுவது இல்லை. அரசாங்கத்திலும் வேறுபாடு காட்டப்படுவ தில்லை. தமிழ் ஆயத்தம் பெற வேண்டுமென்கிற் நிலை இருக்கும் போது, தமிழ் பயிற்சி மூலமாகப் படித்தவர்களுக்கு முதலிடம் தரப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, பி.ஏ., பி.எஸ்சி., வகுப்புகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளைப் புகுமுக வகுப்பிலும் சேரக்கூடிய மாணவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புகுமுக வகுப்பில் ஏற்கெனவே சம்பளம் இல்லாத நிலைமை இருக்கிறது. அந்தவகையில்தான் 50 ரூபாய் புத்தகம் வாங்குவதற்காகவும், அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் தரப்படுகிறது.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சில கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழி மாணவர்களுக்குப் புத்தகம் வாங்குவதற்காகக் கொடுக்கப்படும் பணத்தைக் கல்லூரி நிர்வாகம் கொடுக்கவில்லையென்றும், அதனால் மாணவர்கள் படிப்பு நிறுத்தம் செய்திருப்பதும் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. அப்படிப்பட்ட புகார் இருந்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, 1960-ம் ஆண்டு மாநில அரசு தமிழைப் பயிற்சிமொழியாக ஏற்றுக்கொள்ளாத தனியார் கல்லூரிகளுக்கு மானியத்தை நிறுத்துவது என்று ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த முடிவை அரசு இப்போது அமல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த முடிவு முதலில் எடுக்கப்பட்டது. நடைமுறைபடுத்துகிற போது, ஏற்படுகின்ற சிக்கல்கள் காரணமாக அதை நிறுத்தி வைத்து, ஆங்காங்கு ஒரு வகுப்பையாவது தமிழில் வைக்க வேண்டுமென்கிற வேண்டுகோள் விடுக்கின்ற நிலைமை இருந்தது. டாக்டர் லட்சுமணிசுவாமி முதலியார் கமிட்டி கூட அதைச் சிபாரிசு செய்திருக்கிறது. பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களும் அதைக் ஏற்றுக்கொண்டு எல்லாக் கல்லூரிகளுக்கும் சுற்றறிக்கை

அனுப்பியிருக்கிறார். தென் மாவட்டங்களில் புகுமுக வகுப்பிலே படித்த பிறகு பட்டப் படிப்பையும் தமிழில் பயிற்றுவிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

DR. H. V. HANDE : Sir, is it a fact that in several colleges where this incentive scheme has been implemented all colleges in Tamil Nadu--the boys have not received this amount? For instance, in the Pachayappa's College, Kancheepuram the Minister himself has told me that the amount has not been received by the boys. Is it a fact that many students have not received this incentive and if it is so, may I know whether the Government will exercise some control and see why this delay has taken place and whether they will make good this delay?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கல்லூரி நிர்வாகத்தினருக்குச் சில ஐயப்பாடுகள் ஏற்பட்டதன் காரணமாக இந்தத் தொகையைக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இந்த நேரத்தில் மாணவர்களுக்கு அத் தொகை போய்ச் சேர்ந்திருக்கும். உதவித் தொகை கொடுக்கப்படாத நிலைமை எங்கேயாவது இருந்து, அது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, சிலபல கல்லூரி களில் மாணவர்கள் தமிழில் பயிற்சி பெற விண்ணப்பித்திருந்தும், அதிக மதிப்பெண் பெற்றிருந்த காரணத்தால் கல்லூரி முதல் வர்கள் அந்த மாணவர்களை ஆங்கிலத்தில் பயிலுமாறு சொல்லப் பட்டிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு உண்மையா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே. அப்படிப்பட்ட புகார் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

குலசேகரன் கோட்டையில் பழங்காலச் சிற்பங்கள்

*401 **விளு.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், T வாடிப்பட்டியை அடுத்துள்ள குலசேகரன்கோட்டை கிராமத்தில் பழங்காலச் சிற்பங்களும், சிலைகளும் புதையுண்டு கிடப்பதாக அரசுக்குத் தகவல் கிடைத் துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1971 டிசம்பர் 15

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்டுள்ள குலசேகரன் கோட்டை என்ற இடத்தில் பண்டையக்காலச் சிறப்பு மிக்க ஒரு கோட்டை புதையுண்டு இருப்பதாக அந்த வட்டாரத்து மக்கள் கூறுகிறார்கள். புதைபொருள் ஆராய்ச்சித் துறை மூலமாக இதை ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுவரையில் அதுபற்றிய குறிப்புகள் அரசாங்கத்திற்கோ, புதைபொருள் ஆராய்ச்சித் துறைக்கோ வரவில்லை, புதைப்பொருள் ஆராய்ச்சித்துறையினர் முறைப்படி பல்வேறு இடங்களை ஆராய்ந்து வருகிறார்கள். இதற்கு முக்கியத்துவம் தருகிறார்களா என்பது ஆராய்ச்சித் துறையினரைச் சார்ந்த விஷயம். அவர்களுடைய கவனத்திற்கு வேண்டுமானால் அரசாங்கம் இதைக் கொண்டு வரலாம்.

கல்விராயன்மலையிலுள்ள பள்ளி

*402 வினா.—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்விராயன்மலையில் இருந்த ஓராசிரியர் பள்ளி 1967-க்கு முன்பே மூடப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதை மீண்டும் திறப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கல்விராயன்மலையில் பள்ளியில் சேரவேண்டிய பிள்ளைகள் போதுமான அளவு இருந்து, புதிய பள்ளிகள் திறக்கத் தேவையான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரிடமிருந்து பள்ளிக்கல்வி இயக்குநருக்கோ அல்லது அரசுக்கோ வந்தால் அவை பரிசீலிக்கப்படும்.

மாவட்ட வளர்ச்சி மன்றத் தலைவர்

*403 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு வளர்ச்சி மன்ற உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சிக் குழுவின் தலைவராக இருப்பதன் காரணமாக, கூட்டங்களிலே ஏதாவது விளக்கம் கேட்டால் சிறு விளக்கம்தான் கொடுக்கப்படுகிறதே தவிர செய்ய வேண்டிய வேலைகளைப் பரிசீலனை

1971 டிசம்பர் 15]

செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்களையோ அல்லது வளர்ச்சி மன்ற உறுப்பினர்களில் ஒருவரையோ தலைவராகத் தேர்ந்தெடுத்தால் நல்லதாக இருக்கும். அரசு இதைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிப் பலதடவைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் அதிகமான பலன் ஏற்படாததால், மாவட்ட ஆட்சித் தலைவரே தலைவராக இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாதாரணமாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற நிலைமை இல்லை. இதில் கொள்கைப் பிரச்சினையோ, குறிக்கோள் பிரச்சினையோ இல்லை. மாவட்டத்தின் வளர்ச்சி அத்தனையையும் ஒருசேரக் கவனித்து, பல்வேறு துறை அதிகாரிகளைக் கொண்டு முடிவு எடுக்கப்பட வேண்டும். ஆங்காங்கே ஏற்படுகின்ற சிக்கல்களைப்பற்றி விவாதிக்கவும், பல்வேறு பகுதிகளிலே என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி விவாதிக்கவும், தக்க பரிகாரம் காணவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருந்தால் எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கும். வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்படுகின்ற முடிவுகளை நடைமுறைப் படுத்துகின்ற பொறுப்பு தலைவருக்கு வருகிறது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்குத் தலைவராக இருப்பது நல்லது. மேலும், வேறு ஒருவர் இந்தக் கூட்டத்திற்குத் தலைவராக இருந்து, கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துகிறபோது, அந்த முடிவுகளை யார் நடைமுறைப்படுத்துவது என்ற சிக்கல்கள் ஏற்படும். மேலும் வேறொருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தால் அவர் ஒரு கட்சியைச் சார்ந்தவராக இருந்தால், அதனால் கட்சி மாச்சரியங்கள் ஏற்படலாம். செய்யப்படுகின்ற காரியங்கள் எல்லாம் கட்சியின் அடிப்படையில் செய்யப்படுகின்றன என்ற புகார் வரலாம். இதனால் கட்சிமாச்சரியங்கள் வளருவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் நடுநிலைமை வகிக்கக் கூடியவர். எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்ல. நடுநிலைமை வகித்து கட்சி மாச்சரியங்களுக்கு ஆளாகாமல் பணிகளைச் செம்மையாக ஆற்ற முடியும். கட்சி மாச்சரியங்கள் ஏற்படுகின்ற போது மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் நோக்கமே செயல்பட முடியாமல் போய்விடலாம். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவரே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தின் தலைவராக இருப்பது சரியானது. அவர் இருப்பதால் எந்தவிதமான தகராறும் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் குறித்து மிக விளக்கமாகப் பதில் சொல்லிவிட்ட காரணத்தால், இதற்கு மேலும் துணைக் கேள்விகள் தேவையில்லை.

[1971 டிசம்பர் 15

ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம்

* 404 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொன்னேரி வட்டம், புதுவாயல்-பெரியபாளையம் நெடுஞ்சாலையுடன் புதுப்பாளையம் கிராமத்தை இணைக்க, ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம் (Road Dam) கட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இது சாதாரணமான தரைப்பாலம். இதற்கு ஏறக்குறைய 4 அல்லது 5 லட்சம் ரூபாய் ஆகும் என்ற காரணத்தால் பொதுப்பணித் துறைக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறோம். கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், பொதுப்பணித் துறை விரைவில் இதைக் கட்டிக் கொடுக்குமாறு பரிந்துரை செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைக் கட்டுவதற்குத் தோராயமாக 8¼ லட்சம் ரூபாய் ஆகும் என்று தலைமைப் பொறியாளர் கூறியிருக்கிறார். 1971-72-ம் திட்டத்தில் இதைச் சேர்க்க வேண்டுமென்றால், அதற்கு நிதிநிலைமை இடம் தராததால் இது தள்ளி வைக்கப்பட்டது. இதர வேலைகளின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை 190 லட்சம் ரூபாய். நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை முதல் மூன்று ஆண்டுகளிலேயே செலவழிக்கப்பட்டுவிட்டது. அடுத்த திட்ட சூழ்நிலையில்தான் இது ஏற்றுக்கொள்ளப்படும். இப்போது இருக்கிற நிதிநிலைமை சீராக இல்லை. நிதிநிலைமை சீர்பட்ட பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Encroachment in Singampuneri

* 405 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that evictions are taking place in Singampuneri by orders of the Commissioner of Panchayat Union.

(*b*) whether it is a fact that a protest meeting was held on 2nd September 1971 and representation sent; and

(*c*) the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். சிங்கம்புனரி பேரூராட்சியைச் சேர்ந்த நில அளவை எண் 564/8-ல் உள்ள நிலத்தில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு ஒன்று, 28—8—1971-ல் பேரூராட்சி நிர்வாக அதிகாரியால் அகற்றப்பட்டது.

1971 டிசம்பர் 15]

(இ) ஆம். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்பாடு செய்த கண்டனக் கூட்டம் ஒன்று 2—9—1971-ல் நடைபெற்றது. ஆனால். கூட்ட நாளன்றோ அதன் பின்னரோ பேரூராட்சி நிர்வாக அதிகாரிக்கு முறையீடு ஏதும் வந்து சேரவில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. டி. கே தங்கமணி : இம்மாதிரியாக வெளியேற்றப்படக்கூடிய நேரத்திலே சில குறிப்பிட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்களைத் தனிமைப்படுத்தி அவர்களை மட்டும் வெளியேற்றுகின்ற நிலைமை இருக்கின்றதே அம்மாதிரி வராத அளவுக்கு அரசு பார்த்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த இடம் சிலபல ஆண்டுகளுக்கு முன்பே ஆக்கிரமிக்கப்பட்டு முறைப்படி அவர்கள்—அந்த இடம் கழிவிடத்திற்காக ஒதுக்கப்படவேண்டுமென்ற காரணத்தினால்- -வெளியேற்றப்பட்டார்கள். ஆனால் மறுபடியும் அங்கே ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டதன் காரணமாக அவர்களை அகற்றவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. திருப்பத்தூர் தாசில்தார் முன்னிலையிலும், சிங்கம்புனரி காவல் துறை அதிகாரி முன்னிலையிலும் அகற்றப்பட்டார்கள். அவர்களிடத்திலே ஒரே சமாதான உடன்படிக்கையின் மூலமாக வேறு இடம் பார்த்துக்கொள்ளலாம், இந்த இடம் அவசியமாகத் தேவைப்படுகிறது என்று சமாதான முடிவு ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

சீரணிப்படையினரின் பணிகள்

* 406 வினா.—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971 ஆகஸ்டு திங்கள் 19-ஆம் நாளன்று சென்னை மாநகரில் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து ஆய்வுப் பணிக்கு சீரணிப் படையினரின் உதவி கேட்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.

* 407 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரில் சீரணிப் படையினர் மூலம், பஸ் பயணிகள் நிற்பதற்கான நிழற்குடைகள் தற்போது எத்தனை கட்டப்பட்டுள்ளன ?

(இ) அவற்றிற்கு ஆன செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) 48 நிழற் குடைகளுக்கு ஏற்பாடு செய்து 28 அமைக்கப்பட்டு விட்டன.

(இ) 28 நிழற்கொடைகளுக்கு ஆன செலவு ரூ. 35,500.

[1971 டிசம்பர் 15

அரிசன குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டிகள்

*** 411 வின.—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) அரிசன சேரிகளில் மிகவும் சுத்தமாக உள்ள கிராமங் களுக்கு 1967-லிருந்து 1970-வரை ஒவ்வொரு ஆண்டும் எத்தனை வானொலிப் பெட்டிகள் இனமாக கொடுக்கப்பட்டுள்ளன ?

(இ) அதில் எந்த மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1967-68-லிருந்து 1970-71-வரை மாவட்டங்களிலுள்ள சுத்தமாக பராமரிக் கப்படும் அரிசன காலனிகளுக்கு வழங்கப்பட்ட வானொலிப் பெட்டிகளின் விபரங்கள் அடங்கிய அட்டவணை * இப்பேரவையில் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின்கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்ற எல்லா மாவட்டங்களையும் விட அதிக வானொலிப் பெட்டிகள் பெற்றுள்ளது.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது திருச்சிமாவட்டத்தில்தான் அதிகமாக வானொலிப் பெட்டிகள் கொடுக்கப்பட்டதாகவும் அங்குள்ள சேரிகள் நல்லமுறையிலே இருப்பதால் கொடுக்கப்பட்டதாகவும் சொன்னார்கள். பரிசு வழங்கும் திட்டத்தை மற்ற மாவட்டங் களுக்கும் விரிவுபடுத்தி சேரிகள் துப்புரவாக வைத்துக்கொள்கின்ற முறையிலே ஒரு குழுவை அமைச்சர் அவர்கள் மூலமாக அமைத்துச் செயல்படுத்தவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதை அரசாங்கம் நிறைவேற்றுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாவட்ட வாரியாக யார் யாருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது. எல்லா மாவட்டங் களுக்கும்தான் சலுகை, பரிசுகள் தரப்படுகின்றன. சுத்தமாக வைத்துக்கொள்ளப்படுகின்ற காலனிகளுக்கு இப்படிப்பட்ட பரிசுகள் தரப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தில் அந்தப் பணியை ஏற்றுச் செய்து சுத்தமாக நல்ல முறையிலே வைத்துக்கொண்டால் அவர்களுடைய இடங்களுக்கும் பரிசுகள் கிடைக்கும்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, சுத்தமாக வைத்துக் கொள்ளப்படுகின்ற காலனிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. சுத்தமாக இருக்கின்றனவா என்று பார்வையிடுவதற்கு அங்கங்கே உள்ள அதிகாரிகள்தான் செல்கின்றார்களா? அந்தந்தப் பகுதிகளிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களும் சென்று பார்வையிட்டால்தான் எந்த எந்தக் காலனிகள் சுத்தமாக இருக்கின்றன என்று பார்வையிட்டு

* 106-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

1971 டிசம்பர் 15]

வானொலிப் பெட்டிகள் வழங்க ஏதுவாக இருக்கும் .எனவே, சட்ட மன்ற உறுப்பினர்களும் அந்தப் பணியிலே ஈடுபட வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாவட்டத்திலே இருக்கின்ற அரிசன நலக்குழு சுத்தமான காலனிகளைத் தெரிந் தெடுக்கின்றார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே. தனியாகச் சட்டமன்ற உறுப் பினர்கள் இடம் பெறவேண்டிய நிலைமை இப்பொழுது இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக் கின்ற அறிக்கையிலே கோவையிலே மட்டும் 1967-68-லேயும் 9 தான், 1968-69-லேயும் 9 தான்,1969-70-லேயும் 9 தான், 1970-71-லேயும் 9 தான் என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் வட ஆற்காடு, திருச்சி, மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்களைப் பார்த்தால், 12,13 என்ற அளவுக்கு இருக்கின்றன. இவை எந்த அடிப்படையிலே கொடுக்கப்படுகின்றன? கோவை மாவட்டத்திலே உள்ள அரிசனச் சேரிகளுக்கு இன்னும் அதிகமான அளவுக்கு வானொலிப் பெட்டிகள் தேவைப்படுகின்றன, எனவே, அரசாங்கம் அவற்றைக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள அனைத்துக் காலனிகளுக்கும் கொடுப்பதல்ல இது. அங்கங்கு உள்ள தெருக்கள் சுத்தமாக வைக்கப் பட்டிருந்தால், குழந்தைகள் நல்லமுறையிலே சுத்தமாக பராமரிக் கப்படுகிறார்கள் என்றால், வீடுகள் எல்லாம் சுத்தமாக வைக்கப் பட்டு இருந்தால் அவைகளைப் பார்த்து, மாவட்ட நலக்குழு பார்வையிட்டு எந்த இடங்கள் சுத்தமாக இருக்கின்றன என்று பார்த்துத் தெரிந்தெடுக்கின்றார்கள். அப்படிச் சுத்தமாக வைக்கப் பட்டிருக்கின்ற இடங்களுக்குத்தான் அப்படிப்பட்ட பரிசுகள் வழங்கப்படுகின்றனவே தவிர, எல்லா இடங்களுக்கும் பரிசு என்ப தில்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சற்று அக்கறை காட்டி சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்வார்களானால் நிறைய வானொலிப் பெட்டிகள் கொடுக்கப்படும்.

திரு. என். இராஜாங்கம் : கொடுக்கப்படுகின்ற வானொலிப் பெட்டிகளுக்கான செலவினங்களை அந்தந்தப் பஞ்சாயத்துக்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நல இலாகா கேட்டு இருக் கிறதா ? அல்லது நல இலாகாவே செலவினங்களை ஏற்றுக்கொள் கிறதா ? சில பஞ்சாயத்துக்களிலே பணம் இல்லை என்ற காரணத்தினால், கொடுக்கின்ற வானொலிப் பெட்டிகள் சரியாகச் செயல்படவில்லை என்பதை அரசாங்கம் உணருகிறதா ? அவைகள் நல்லபடி செயல்படுவதற்கு அரசாங்கத்தால் என்ன திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வானொலிப் பெட்டிகள் எல்லாம் நல இலாகா மூலமாகத்தான் வழங்கப்படு கின்றன. சில அரிசனக் காலனிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் நிதிவசதி இருந்தால் அவர்களாகவே தருகிறார்கள். சுத்தமாக

வைக்கப்பட்டிருக்கின்ற காலனிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற வானொலிப்பெட்டிகளின் முழுச் செலவையும் நலத்துறை ஏற்றுக் கொள்கிறது. அந்தப் பெட்டியின் விலை 300 ரூபாய். அது இப்பொழுது உயர்த்தப்படவேண்டுமா என்பது பரிசீலனைக் குள்ளாகியிருக்கிறது.

திரு. கி. பொன்னுமலை : தலைவரவர்களே, இப்படிப்பட்ட வானொலிப் பெட்டிகள் தருவதை சில பஞ்சாயத்துக்களிலே தலைவர்கள் தங்களுடைய வீடுகளிலே வைத்துவிடுகிறார்கள். ஆகவே, வானொலிப்பெட்டி தரும்பொழுது அந்த வானொலிப் பெட்டியை வைக்க ஒரு கட்டடத்தையும் கட்டித் தருவதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கட்டடத்தையும் சேர்த்துத்தான் செலவு என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி பஞ்சாயத்துத் தலைவர்கள் வீட்டில் வைத்துக்கொள்கிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்தால் அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, திருச்சிராப் பள்ளி ஜில்லாவில் எந்தெந்த காலனிகளில் இப்படிப்பட்ட ரேடியோ செட்டுகள் கொடுக்கப்பட்டது என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தனிக்கேள்வி போடவும்.

*** 412 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அரிசனங்கள் வாழும் இடங்களில் எங்கெங்கு "வானொலிப்பெட்டிகள்" வழங்கப்பட் டுள்ளன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

(1) ஆண்டிப்பாளையம்.
(2) கே. ஆண்டிப்பாளையம்.
(3) கரிப்பாளையம்.
(4) நம்பியார்புரம்.
(5) நல்லத்துப்பாளையம்.
(6) நல்லூர்.

Creche at Secretariat

* 413 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to provide a creche at Secretariat to help the working mothers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) இல்லை.

திரு. என். டென்னிஸ் : சார், பணிபுரியும் தாய்மார்கள் அதிகரித்துள்ளதால் இம்மாதிரியான நிலையத்தை அமைத்தால் அவர்கள் வேலையில் முழுக்கவனத்துடன் ஈடுபட வழிவகுக்கும் என்பதை அரசு கருதுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைமைச் செயல கத்தில் பணிபுரியும் தாய்மார்களிடமிருந்து இப்படிப்பட்ட மனுக்கள் எதும் இதுவரையில் வரவில்லை. அப்படியே வரப் பெற்றாலும் தலைமைச் செயலகம் தலைமைச் செயலாளர் அவர்கள் கண்காணிப்பிலே இருப்பதால் அவர்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். மகளிர் நலத்துறை செய்வதற்கு நியாயம் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பணிபுரியும் தாய்மார் களுக்காவது பரவாயில்லை, விடுமுறை எடுத்துக்கொண்டு வீட்டில் இருந்துவிடலாம், ஆனால் இருகோடுகள் சினிமாவில் வரும் நாகேஷ் போன்ற சில தந்தைமார்கள் மனைவியை இழந்தவர்களாய் குழந்தைகளைக் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்களே, அப்படிப்பட்ட குழந்தைகளுக்காவது அரசாங்கம் ஏதாவது வழி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இருகோடுகள் என்பதுபோல பல கோடுகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட தாய்மார்கள் இருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு அரசு நல்ல திட்டங்களை வைத்து அரசு பராமரித்துக்கொண்டு வருகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Have the Government got any scheme of opening creches in those factories where women are working in large numbers?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த ஃபேக்டரிகளே அப்படிப்பட்ட விடுதிகளைத் தொடங்க வேண்டு மென்று அரசு கருதுகிறது.

Ready-made Garments Unit at Tambaram

* 414 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open any Ready-made Garments Unit at Tambaram by the Women's Welfare Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) தாம்பரம் பணி இல்லத்துடன் இணைந்துள்ள தையற்கலைப்பிரிவில் சான்றிதழ் பெறுபவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் ஆடை தயாரிப்புப் பிரிவு ஒன்றை மேற்படி இல்லத்தில் தொடங்குவது குறித்து மகளிர் நலத்துறை இயக்குநர் அனுப்பிய செயற்குறிப்புக்கு அரசு 1971 ஆகஸ்ட் திங்களில் ஒப்பளிப்பு வழங்கியது.

[1971 டிசம்பர் 15

அரசு அலுவலகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய இடங்கள்.

* 415 வினா—**திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய 18 சதவிகிதம் நிரப்பப்படுகிறதா என அறிய ஒரு குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தக் காரியத்திற்காக அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு இதுகுறித்து ஆழ்ந்து பரிசீலித்து வருகிறது.

திரு. அ. தேவேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, 16-ஆக இருந்த சதவிகிதத்தை 18-ஆக உயர்த்தியும்கூட பல இடங்களில் அப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா? அப்படிப்பட்ட குறைகளை நிறைவு செய்ய அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எந்தெந்த இலாக்கா வில் நிறைவுபடுத்தப்படவில்லை, உண்மையிலேயே அந்த இடங்கள் பூர்த்தியாக்கப்பட்டதா இல்லையா என்பதையெல்லாம் ஆராய்வதற்காகத்தான் இந்த மேல் மட்டக் குழுவை அரசு நிறுவியிருக்கிறது. அவர்கள் அவ்வப்பொழுது கூடி ஆராய்ந்து எந்தெந்த இடங்கள் பூர்த்தியாக்க வேண்டுமோ அதைப் பூர்த்தி செய்கிறார்கள். புதிதாக எழும் பதவிகளுக்கு அவர்கள் புதிய முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை இந்தக் குழு விரிவாகப் பரிசீலனை செய்கிறது.

திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அறிவித்துள்ள அந்தக் குழுவில் யார், யார் அங்கம் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்தக் குழுவிற்குத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். துணைத் தலைவர் அரிசன நலத்துறை பொறுப்பு வகிக்கும் அமைச்சர். உறுப்பினர்கள், அரசுத் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணி தேர்வு ஆணைக்குழுத் தலைவர், அரசுச் செயலாளர், சமூக நலத்துறை, அரிசன நல இயக்குநர், தொழில்கள்—வாணிக இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், வேலைவாய்ப்பு பயிற்சி இயக்குநர், அரசு துணைச் செயலாளர், சமூக நலத்துறை (அரிசன நலம்) குழுவின் உறுப்பினர் செயலாளர்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரில் இப்படிப்பட்ட வேலைவாய்ப்புகள் தருவதில் 23½ சதவிகிதம்

1971 டிசம்பர் 15]

வழங்கப்படுகிறது. ஆனால் நாம் இங்கே 18 சதவிகிதம்தான் வழங்குகிறோம். எனவே மத்திய சர்க்காரைப் பின்பற்றி 23½ சதவிகிதம் வழங்க முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய சர்க்காரின் பணிமனைகளிலே அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது மாநில அரசாங்கத்தில் செய்யப்பட்டிருக்கும் ஒதுக்கீடாகும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே. பெரும்பான்மையான பேரூராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்களில் கம்யூனல் ரொட்டேஷன் முறை பின்பற்றப்படவில்லை என்பதை அரசு அறியுமா? அப்படிப் பின்பற்றாமல் இருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள்மீது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அரசு பரிசீலிக்கிறது, ஆனால் நடவடிக்கை எடுக்க முடியாது. ஏன் பூர்த்தி செய்ய முடியவில்லை என்று கேட்டு பூர்த்தி செய்து விடுங்கள் என்ற தாக்கீதுதான் அனுப்புகிறது. சில புகார்கள் நேரடியாகவும் விசாரிக்கப்படுகின்றன.

தண்ணீர்த் தீர்வை

* 416 வினா—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரியாற்றில் இருந்து பம்புசெட்டு மூலம் தண்ணீர் இறைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்துபவர்களுக்கு தண்ணீர்த் தீர்வை போட அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) தமிழ்நாடு பாசனத் தண்ணீர் தீர்வை சட்டம், 1865 (தமிழ்நாடு சட்டம் VII/ 1865) கீழ் ஏற்பட்ட விதிமுறைகளின்படி ஏற்கனவே தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட்டு வசூலித்து வரப்படுகிறது.

(இ) காவிரியாற்றிலிருந்தும் அதன் பிரிவு வாய்க்கால்களிலிருந்தும் பம்பு செட்டு மூலம் தண்ணீர் இறைப்பதற்கு பொதுப்பணித் துறையினுடைய முன் அனுமதி பெறவேண்டும். அப்படி முன் அனுமதி பெறாமல் தண்ணீர் இறைப்பவர்கள்மீதும், தண்ணீர் இறைக்க உத்தரவு பெற்றிருந்தும் அந்த உத்தரவிலுள்ள நிபந்தனைகளை மீறுவோர் மீதும் தண்டத் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுகிறது. நிலையான ஆயக்கட்டுதாரர்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கருத்தை மனதிற்கொண்டே தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. தண்ணீர்த் தீர்வை, தண்டத் தீர்வை அமைப்பையும், அவற்றை விதிப்பது சம்பந்தமாகவும் ஆராய்ந்து விரிவான அறிக்கை அனுப்பும்படி வருவாய்த் துறை வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, அந்தப்பகுதியிலே பல்வேறு விவசாயிகள் அப்படிப்பட்ட பம்பு செட்டுகள் மூலம் பாசன வசதியைச் செய்ய வேண்டுமென்று முன் அனுமதி கேட்டும் பலருக்கு இன்னும் முன் அனுமதி வழங்காமல் இருப்பது உண்மையா என்று அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அனுமதி கேட்கின்றவர்கள் எல்லோருக்கும் அனுமதி வழங்க முடியாது. எவ்வளவு தண்ணீர் எடுத்தால் கீழ் ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதையெல்லாம் கணக்குப் பார்த்துதான் அனுமதி வழங்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், தமிழகத்தில் பல இடங்களில் தண்டத் தீர்வை பல்லாண்டுகளாக பல ஏக்கர்களுக்குப் போடப்படுகின்றது. Hard cases are also there. இதைக்கண்டுபிடிக்க குழு அமைக்கப்பட்டிருக்கிறதா ரெவின்யூ வாரியத்தின் மூலம்? அப்படி அமைத்திருந்தால் அதில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள்? அதில் பொதுமக்கள் இடம் பெற்றிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே நான் ஒரு கேள்விக்குப் பதில் அளித்தபோது தெரிவித்திருக்கிறேன். ஒவ்வொரு ஆற்றின் படுகையிலும் இருப்பவர்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர்த் தண்டத் தீர்வை, போடப்படும் தண்ணீர்த் தீர்வை பற்றி அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று வாரிய உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சார், காவிரியாற்றின் தண்ணீரை இப்படி அனுமதி பெறாமல் பம்பு செட்டுகளின் மூலம் எடுத்து விவசாயம் செய்கின்றவர்கள் பல இடங்களிலும் பல வருஷங்களாகச் செய்து வருகிறார்கள். அப்படிச் செய்து வருகின்றவர்களுக்கு ஒவ்வொரு வருஷமும் தண்டத் தீர்வை போடப்படுகின்றது. இப்படி தொடர்ந்து தண்டத் தீர்வை இருக்கும் பம்பு செட்டுகளை ஆராய்ந்து நிலையாக எதை எதை வைத்துக்கொள்ளலாம் என்று பார்த்து அவைகளை வைத்துக்கொண்டும் எதையெதை விட்டுவிடலாம் என்று பார்த்து அவைகளை எடுத்துவிடும்படியும் கடுமையான உத்தரவை வைத்துக்கொண்டு செய்யமுடியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே இருந்த அரசு ஆணையின்படி 20-8-1966 வரையில், மன்னிக்கவேண்டும், 12-12-1962 வரையில் காவிரிக்கரையில் பம்பு செட்டுக்களுக்கு அரசு அங்கீகாரம் அளித்தது. ஆனால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததால் மேற்கொண்டு பம்பு செட்டுகள் அமைக்கப்பட்ட பலவற்றிற்கு அவைகள் ரத்து செய்யப்பட்டன. மறுபடியும் அரசாங்கம் பரிசீலனை செய்து 1968-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20-3-1968-ஆம் தேதிவரையில் பம்பு செட்டுகளுக்கு அரசு சில நிபந்தனைகளுக்கு

உட்பட்டு அனுமதி வழங்கியது. அதற்கு உட்படடவர்களில் பலர் மீறியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தண்டத் தீர்வை விதிக்கிறோம். அதற்குப்பிறகுதான் பல பம்பு செட்டுகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. தண்டத் தீர்வை விதிக்கிறோம் என்றால் ஏதோ அவர்கள் பம்பு செட்டுகள் போட்டதற்காக மட்டுமல்ல, கீழ் ஆயக்கட்டுக்காரர்களுக்குப் பாதகம் ஏற்படுகின்ற நிலையிலிருந்தாலும் போடுகிறோம். அன்றாடம் புதுப்புது பம்பு செட்டுகளுக்குக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர்க்க இதைத்தவிர வேறு வழியேயில்லை.

திரு. நா. கிருட்டிணன் : பல விவசாயிகள் அரசாங்கத்தினிடமிருந்து கடன் பெற்று பம்ப் செட்ஸ் வாங்கி வைத்திருந்தும் அவர்களுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறது காரணம், பாலாறு படுகை விதி குறுக்கிடுகிறது என்று மின்சார இலாகாவில் இருப்பவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, அரசு இந்தப் பாலாறு படுகை விதிகளை ரத்து செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்போதே சில கிராமங்களுக்கு அதிலிருந்து விலக்கு அளித்திருக்கிறோம். ஆனால் முழுமையாக எடுத்துவிடுவதற்கு தற்சமயம் அரசாங்கத்தினிடம் யோசனை இல்லை.

திரு. சு. துரைசாமி : காவேரி ஆற்றுப் படுகையிலிருந்து உணவுப் பயிர்களுக்கும் விற்பனைபயிர்களுக்கும் எடுக்கப்படும் நீருக்கு சேலம் மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. கோவை மாவட்டத்திற்கும் இதை விஸ்தரிப்பதற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சேலம், திருச்சி மாவட்டங்களில் உணவுப்பொருள்கள் பயிரிட்டால் ஐந்துதடவை தண்டத் தீர்வையும், வேறு விளைபொருள்கள் பயிரிட்டால் இருபது தடவை தண்டத்தீர்வை விதித்து வருகிறார்கள். இதைக் கோவைக்கு விஸ்தரிப்பதுபற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : காவேரி ஆற்றுப் படுகைகளில் இப்படி நிறைய பம்ப் செட்கள் வைத்து சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், திருச்சி மாவட்டத்தைச் சார்ந்தவர்களும் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது கீழ்ப் பகுதியில் உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்குப் பாதகம் இருப்பதால்தான் இந்தப் பம்ப்செட்களுக்கு அனுமதி வழங்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். தஞ்சாவூரில் நிலத்திற்கு அடியில் நிறைய தண்ணீர் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அது அரசுக்கும் தெரியும். அந்த நீரை மேலே கொண்டுவந்துவிட்டால் தஞ்சாவூர் முழுமைக்கும் அந்தத் தண்ணீரை வைத்துக்கொண்டு பல ஆண்டுகளுக்கு பாசனவசதி செய்துகொடுக்க முடியும் என்றும் கூறுகிறார்கள். ஆகவே, அதைச் செய்வதற்கு அரசு உடனடியாக முயற்சிகளை

[1971 டிசம்பர் 15

திரு. நா. வீராசாமி : பெரிய ஹோட்டல் முதலாளிகளைப் பார்த்து ஏன் இவ்வளவு விலையை ஏற்றுகிறீர்கள், குறைக்க கூடாதா என்றால், சாம்பார். சட்டினி, வெங்காய சட்டினி, மிளகாய்த்தூள் என்று இரண்டு இட்டிலிக்கு இவைகளையெல்லாம் கேட்கிறபோது அதிகமாக விலையைக் குறைக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே சட்டினி, சாம்பார் இவையோடு நிறுத்தி விட்டால் விலையைக் குறைக்கலாம். இதை அரசாங்கம் அவர்களுக்கு யோசனையாகச் சொல்லுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உறுப்பினர் அவர்கள் யோசனையை ஓட்டல் முதலாளிகள் சங்கத்திற்கு எழுதியனுப்பலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஓட்டல்களில் மட்டுமல்லாமல் நாட்டில் மக்களின் அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றனவே, அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது ஆலோசனை செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எந்தப் பண்டங்களின் விலையை அரசாங்கம் கட்டுப்படுத்தவில்லை, நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று தெரிவித்தால் விளக்கம் சொல்கிறேன். அரிசி விலையைக் குறைப்பதற்கு இப்போது பால் டிப்போக்கள் மூலம் அரிசி கொடுக்கப்படுகிறது, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொடுக்கப்படுகிறது. சர்க்கரை விலையைக் குறைக்க ஏற்கெனவே மத்திய சர்க்கார் நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்பாகவே மாநில அரசு நடவடிக்கை எடுத்து கிலோ இரண்டு ரூபாய் என்ற அளவில் தமிழ் நாடு முழுவதும் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். மற்றப் பொருள்களின் விலைகளும் சற்று குறைந்திருக்கின்றன. ஒன்றிரண்டு பொருள்களின் விலைகள் ஏறியிருக்கின்றன என்பதும் உண்மைதான்.

திருமதி த. ந. அனந்தநாயகி : காங்கிரஸ் ஆட்சியின்போது இன்றைய கனம் சபாநாயகர் அவர்கள் ஆறு காசு இட்டிலி இளைத்து விட்டது என்று சொன்னார்கள். இன்று பத்து காசுக்கு அந்த இட்டிலி பாதியாக இருக்கிறது. இது குறித்து அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்குமா ?

. . . .

1971 டிசம்பர் 15]

திரு. ஏ. சுப்பிரமணியம் : சென்ற முறை இங்கு இதுபோன்று ஒரு கேள்வி கேட்கப்பட்ட போது அமைச்சர் அவர்களிடம் ஒரு கருத்தைச் சொன்னேன். விலையைக் குறைத்து விடுகிறார்கள், அதோடு கூட பண்டங்களின் அளவையும் குறைக்கிறார்கள். இதற்காக ஓட்டல்களில் புகார் புத்தகம் ஒன்று வைக்கிற யோசனையை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று கேட்டபோது பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். மீண்டும் இப்போது ஓட்டல் உரிமையாளர்களிடம் பேசியிருக்கிறோம் என்ற பதிலைத்தான் சொல்கிறார்கள். ஆகவே, நான் சொன்ன அந்த யோசனையை அரசு நிறைவேற்ற முன்வருமா ? இன்னொன்று, சர்க்கரை விலையைப் பொறுத்து இரண்டு ரூபாய்க்கு எல்லாயிடங்களிலும் கிடைக்க ஏற்பாடு செய்ததாகச் சொன்னார்கள். கோவையில் இருக்கிற சிந்தாமணி கூட்டுறவு மார்க்கெட்டில் ரூ. 2.35-க்கு சென்ற வாரத்தில் நான் வாங்கியிருக்கிறேன். அந்த ரசீதை வேண்டுமானாலும் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சர்க்கரையைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு முழுவதும் இன்னும் சர்க்கரை போய் சேரவில்லை. சென்னைக்கு வந்திருக்கிறது. மற்ற இடங்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர்களை அழைத்து கூட்டுறவு ஸ்தாபனங்களை ஹோல்சேல் டீலர்களாக நியமிக்கும்படிச் சொல்லியிருக்கிறோம். அந்த ஸ்தாபனங்களுக்கு சர்க்கரை ஆலைகளில் இருந்து வாங்கி அவர்கள் வழங்கும்படி விதி போட்டிருக்கிறோம். இன்னொரு விதி பொது மார்க்கெட்டில் சர்க்கரை விற்கிறவர்கள் சர்க்கார் கொடுக்கிற கட்டுப்பாடான சர்க்கரையை விற்கக்கூடாது என்று விதி போட்டிருக்கிறோம். கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். கூட்டுறவு ஸ்தாபனம் மூலம் விற்கப்படுகிற சர்க்கரை அங்கு போய்ச் சேர்ந்திருக்காது என கருதுகிறேன். அப்படி அது போய் சேர்ந்ததற்குப் பிறகு அப்படிக் கொடுத்திருப்பார்களேயானால் நிச்சயமாக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நான் உறுதி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : பருப்பு விலை உயர்ந்தால் உடனே வடையின் விலையும் உயருகிறது. பருப்பு விலை குறைந்தால் வடையின் விலையைக் குறைப்பதில்லை. அப்படிக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை. சென்னை நகரத்தில்தான் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மொபஸல் ஏரியாக்களில் விலையை ஏற்றிவிட்டால் மறுபடியும் அதைக் குறைப்பதில்லை. ஆகவே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மொத்த விலை ஏறும் போதும் இறங்கும்போதும்தான் பத்திரிகைகளில் பார்க்கிறோம், வெளிமார்க்கெட்டிலும் காண்கிறோம். ஆனால் சில்லறை விலை இறங்குவதில்லை. இவைகளை எல்லாம் எஸென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட்டின்கீழ் கொண்டுவந்தாலொழிய அது இயலாத காரியம். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

THIRU K. M. SUBRAMANIAN : Sir, a large number of lower class people are now depending upon hotels—it is assuming a very serious proportion—will this Government consider waiving of sales tax on hotels and restaurants which deal with food articles which are more perishable. For instance, iddlis get spoiled before 12 Noon. So, will this Government consider waiving of sales tax at least in the case of 'C' class hotels?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் : ஏற்கனவே விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 25,000 ரூபாய் வரையில் விற்பனை செய்கிறவர்களுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. ஓட்டல்களுக்கும் அது பொருந்தும். ஆண்டுக்கு 25,000 ரூபாய் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை விற்பனை செய்கிற வர்களுக்கு கம்பவுண்ட் செய்து கொள்ளலாம் என்று வைத்திருக் கிறோம். அதுவும் ஓட்டல்களுக்குப் பொருந்தும். இலட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனை செய்கிறவர்களுக்கு விற்பனை வரியைத் தள்ள வேண்டுமென்று சொல்லுவதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஓட்டல்களில் உணவுப் பொருள்களின் விலை கூடுவதற்குக் காரணம் வெளியே மற்ற உணவுப் பண்டங்களின் விலை ஏறிக்கொண்டு போவதுதான். கன்னியாகுமரி ஜில்லாவில் அரசாங்கம் கொடுக்கக்கூடிய அரிசியே படி இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. உறுப்பினர் நரசிம்மன் அவர்கள் குறிப்பிட்டது போல் உணவுப் பொருளின் விலை ஏறுகிற நேரத்தில் ஓட்டலில் பலகாரங்களின் விலையை ஏற்றுகிறார்கள். உணவுப் பொருளின் விலை குறைகிற நேரத்தில் அவர்கள் பலகாரங்களின் விலையைக் குறைப்பதில்லை. இதுதான் இப்போது இருக்கிற நிலைமை.

திரு. கே. என். குமாரசாமி : ஓட்டல்களின் விநியோகிக்கின்ற பொருள்கள் மிகவும் தரக் குறைவாகவும், சுகாதாரத்திற்குக் கெடுதலானதாகவும் இருக்கின்றன. சுகாதாரமற்ற இந்த நிலை மையைப் போக்க சுகாதார அதிகாரிகளைப் போட்டு ஆராய்ந்து தரமான பொருட்களாக இல்லாமல் இருந்தாலும், சுகாதாரமற்ற நிலைமை இருந்தாலும் அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தக் கேள்வி சுகாதார அமைச்சருக்குப் போடவேண்டியது.

திரு. எம் சுரேந்திரன் : தற்போது விலையைக் குறைப்பதற்கு ஓட்டல் முதலாளிகளை அழைத்துப் பேசுகிற ஒரு முறை இருக் கிறது. விலையைக் குறைக்க வேண்டுமென்று கூறினால் உடனே அதனுடைய அளவு குறைகிறது. மக்களுடைய தேவைகளுக் கேற்ப இப்போது ஓட்டல்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக் கிறது. ஆகவே, அளவையும் விலையையும் ஒருமுகப்படுத்தி சீர் செய்து கொடுக்கும் வகையில் அதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. பெரிய ஓட்டல்களில் காப்பி விற்கிற விலைக்கே கீழ் தட்டில் இருக்கும் ஓட்டல்களிலும் விற்க வேண்டுமென்று சொல்லு வது சரியல்ல. அதே போல் சாதாரண ஓட்டலில் காப்பி விற்கப் படுகிற விலைக்கேதான் பெரிய ஓட்டல்களிலும் விற்க வேண்டு மென்று சொல்லுவதும் சரியல்ல. இது சம்பந்தமாக ஓட்டல் அதிபர் களோடு கலந்து பேசிக் கொண்டிருக்கிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தீபாவளி சமயங்களில் சர்க்கரை, கடலைப் பருப்பு, நெய் போன்றவற்றின் விலை எந்த அளவுக்கு உயர்ந்தாலும் இரண்டு ரூபாய்க்கு ஒரு பெட்டி மிட்டாய் விற்பது வழக்கம். அதே போல் இரண்டு இட்டிலி, ஒரு வடை, ஒரு காப்பிக்கு நியாயமான விலையைக் கொடுத்து மக்கள் வாங்கிச் சாப்பிட ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதிலே விலையை மட்டும் நிர்ணயித்தால் போதாது, எடையையும் நிர்ணயிக்க வேண்டும். அதோடு தரத்தையும் நிர்ணயிக்க வேண்டும். ஒவ்வொரு ஓட்டல் களிலும் ஒவ்வொரு இட்டிலி, வடையாக எடை போட்டுக் கொடுத்து பிறகு சாப்பிடுவது என்பது இயலாத காரியம்

திரு. எம். ஏ. லத்தீப் : ஓட்டல்களில் உணவின் விலையையும், அளவையும் அரசாங்கம் கண்காணித்து வருகிறது என்ற எண்ணத்தை ஓட்டல் முதலாளிகளுக்கு ஏற்படுத்தும் முகத்தான் அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் திடீரென்று ஓட்டல் களுக்கு விஜயம் செய்யத் தயாராக இருப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அது கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதற்கு இந்தச் சட்டமன்றத்திலே இப்போது நடைபெற்ற கேள்வி பதிலே போதுமானது என்று கருதுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the difficulties expressed in this House, will the Government think of running fair price hotels?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sorry, Sir, there is

[1971 டிசம்பர் 15

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்த வழக்குகள் என்ற விவரம் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது போல் ராஜமன்னர் குழுவின் அறிக்கையில் இதைப் பற்றி வாதிக்கப் பட்டு அந்தச் சட்டங்களின்படி பிரச்சினை வரும்போது தனி முக்கியத்துவம் கொடுத்து உடனடியாகத் தீர்வு காண்பது நல்லது என்ற யோசனையை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

மதுரை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு அறைகள்

* 422 வினு—**திரு. பி. எஸ். மணியன்** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நீதிமன்றத்தில், வழக்கறிஞர்களுக்குத் தனி அறைகள் (chambers) கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம். மதுரை நீதி மன்றத்தில் ரூபாய் 9.30 லட்சம் மதிப்பீடுச் செலவில், 50 வழக்கறிஞர் அறைகள் கட்டுவதற்கான செயற்குறிப்பை சென்னை உயர்நீதி மன்றம் அனுப்பியுள்ளது. அந்தச் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. பி. எஸ். மணியன் . மதுரையில் உயர்நீதி மன்றத்தின் ஒரு பகுதியைத் துவக்குவதாக அரசு உத்தேசித்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்போது துவங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசாங்கத்தின் சம்மதத்தைப் பெற்ற பிறகுதான் அதைப் பற்றி முடிவு எடுக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையில் வழக்கறிஞர்களுக்காக கட்டப்படக்கூடிய சேம்பர்கள் எத்தனை கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கட்டப்படுவதாக முடிவு எடுக்கவில்லை. அப்படிப்பட்ட ஆலோசனையை உயர்நீதிமன்றம் வைத்திருக்கிறது. 50 வழக்கறிஞர்களுக்கான அறைகளைக் கட்டலாம் என்று யோசனை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : When advocates are put up in those chambers, will the Government think of giving them at concessional rates?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது போன்ற அறைகளை நிறைய சம்பாதிக்கிற வழக்கறிஞர்கள்தான் எடுக்கிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்களைப் பொறுத்தவரை ஏராளமாக சம்பாதிப்பது எனக்குத் தெரியும்.

1971 டிசம்பர் 15]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, is the Hon. Minister giving any information to the Income-tax Department, I would like to know?

திரு. ஜே. ஜேம்ஸ் : மதுரையில் வழக்கறிஞர்களுக்கு அறைகள் அமைத்துக் கொடுப்பது போல் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற நீதிமன்றங்களில் பணியாற்றுகின்ற வழக்கறிஞர்களுக்கு அறைகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தந்த மாவட்ட நீதி மன்றங்களுக்குப் புதிதாக நீதிமன்ற கட்டடங்கள் கட்டும் போது அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

வாணியம்பாடிக்கு மாவட்ட முன்சீப் கோர்ட்

* 423 வினு—**திரு. எம். ஏ. லத்தீப்** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடியில் ஒரு மாவட்ட முன்சீப் கோர்ட் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

காஞ்சிபுரத்திலுள்ள சரிகைத் தொழிற்சாலை

* 424 வினு.—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்திலுள்ள சரிகைத் தொழிற்சாலை எப்போது தனது உற்பத்திப் பணியைத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காஞ்சிபுரத்திலுள்ள சரிகைத் தொழிற்சாலை தனது உற்பத்திப் பணியை 1972 பிற்பகுதியில் தொடங்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. அ. தியாகராசன் : தலைவரவர்களே, இந்த சரிகைத் தொழிற்சாலை அரசுத் துறையிலா அல்லது தனியார் துறையிலா, எப்படி அமைக்கப்படும், அதற்கு மூலதனம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சுமார் ரூ. 25 லட்சம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போதைக்கு இதை அரசுத் துறையில் ஆரம்பிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சரிகைத் தொழிற்சாலையில் நெசவுக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேலை அளிக்க முன் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கருத்து பரிசீலிக்கப்படலாம்.

[1971 டிசம்பர் 15

ஜவ்வாது மலைப்பகுதியில் கந்தகம்

* 425 வினா.—திரு. தொ. ப. சீனிவாசன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் ஜவ்வாது மலைப்பகுதியில் கந்தகம் கிடைப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதை ஆராய்ச்சி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம். போளூர் தாலுகாவில் தனியார் காட்டில் ஜவ்வாது மலைக்குக் கிழக்கேயுள்ள பெரியமலையில் கந்தகம் பூப்புகளும் கந்தகம் அடங்கிய தாதுவும் காணப்படுகின்றன.

(இ) இந்திய புவியியல் பிரிவு இப்பகுதியில் தற்பொழுது கந்தக கனிவளத்தை அறிய விரிவான ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளது. இவ்வேலை தொடர்ந்து நடந்து வருகிறது.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவரவர்களே, அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆராய்ச்சி தற்போது முடிவு அடைந்து விட்டதாகத் தெரிகிறது. பக்கத்தில் இருக்கும் கேளூர் பகுதியில் அதே போன்று கந்தகம் இருப்பதாக அங்கே உள்ள மக்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த இடத்தையும் ஆராய்ச்சி நடத்த அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பரிசீலனையில் 24,000 டன் சல்பைடும், 25 சத விகிதம் சல்பரும் இருப்பதாகத் தெரிகிறது. அது பற்றி தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

காவிரி டெல்டாப் பகுதியில் எண்ணெய் வளம்

426 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி டெல்டாப் பகுதியில் எண்ணெய் வள ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறதா?

(இ) அதன் மூலம் இதுவரை கிடைத்த பலன்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம். இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

(இ) வணிக முறையில் எடுக்கக்கூடிய அளவிற்கு எண்ணெயோ அல்லது இயற்கை வாயுவோ மண்டியிருப்பதாக இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

1971 டிசம்பர் 15]

Jute cultivation in Tamil Nadu

* 427 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether jute cultivation has been tried in this State;

(b) if so, the details thereof; and

(c) the steps taken to promote this cultivation?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) ஆம். நமது மாநிலத்தில் 1971-72-ல் செங்கை, திருச்சிராப்பள்ளி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் சில தெரிந்தெடுக்கப்பட்ட தனி உடைமை நிலங்களில் சணல் பயிரிடுவது சோதனைமுறையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. 10 முதல் 50 சென்டுகள் வரைபரப்பளவுள்ள செயல்விளக்கப் பாத்திகளில் சோதனைக்காக மூன்று ரக சணல் பயிர் செய்யப்பட்டது. உழவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்கட்கு விதைகள், பூச்சி கொல்லி மருந்துகள், எரு முதலியன இலவசமாக கொடுக்கப்பட்டன.

(உ) இவ்வளவு குறுகிய காலத்தில் நமது மாநிலத்தில் சணல் பயிரிடுவது இயலுமா என்று வரையறுத்துக் கூட இயலவில்லை. நிச்சயமான முடிவு எடுக்க சோதனைகள் மேலும் நடத்தப்பட வேண்டும்.

கோடைக்கானல் பகுதியில் பழம் பதனிடும் பிரிவு

428 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோடைக்கானல் பகுதியில் ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

தொட்டப்பட்டா பகுதியில் ஆப்பிள் மரங்கள் பயிரிடுதல்

* 428 வினா.—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தொட்டப்பட்டா பகுதியில் ஆப்பிள் மரங்கள் வைத்துப் பயிர் செய்யும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1971 டிசம்பர் 15

Tobacco Research Sub-Unit for Hosur Taluk

* 430. *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a Central Tobacco Research Sub-Unit has been recommended for Hosur taluk; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) ஓசூர் பகுதி நில தட்ப வெப்பநிலைகள் மற்ற புகையிலை சாகுபடி செய்யும் இடங்களிலிருந்து மாறுபடுகிறது. இந்த பகுதி நிலத்திற்கேற்ற புகையிலை ரகத்தை தேர்ந்தெடுக்கவும், பயிரிடப்படும் குணப்படுத்தப்பட்ட வர்ஜீனியா புகையிலையின் தரத்தையும் அதிகரிக்க ஒரு சோதனை நிலையம் ஆரம்பிக்குமாறு புகையிலை அபிவிருத்தி இயக்குநர் ஐ.சி.ஏ.ஆர். நிறுவனத்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

வேளாண்மையில் பட்டம் பெற்ற பெண்கள்

* 431 வினா—**பி. எஸ். மணியன்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது விவசாயக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற பெண்கள் எவரேனும் உள்ளாரா?

(இ) ஆம் எனில், அவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) 16.

திரு. பி. எஸ். மணியன்: தலைவரவர்களே, எல்லாத் துறைகளிலும் பட்டம் பெற்ற பெண்கள் ஏராளமாக இருக்கும்போது. விவசாயப் பட்டம் பெற்ற பெண்கள் மட்டும் 16 பேர் இருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இது சமத்துவத்திற்கு விரோதமாக இருக்கிற காரணத்தால் அதிகமான பெண்கள் விவசாயப் பட்டம் பெறுவதற்கு அரசு வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பெண்கள் பட்டம் பெறுவது என்பது வேறு. விவசாயப் பட்டம் பெற்றவர்கள் வேலைக்கு மாத்திரம் செல்ல வேண்டுமென்பது அல்ல நோக்கம். அவர்கள் மற்ற பல துறைகளிலும் ஈடுபட வேண்டியிருப்பதால், பெண்கள் இதற்கு அதிகமாக வருவதில்லை. ஆகவே, இதற்கு இந்த அளவு வைக்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த விவசாய பட்டம் பெற்ற 16 பெண்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டுள்ளதா? அப்படி பட்டம் பெற்ற பெண்களுக்கு வேலை வாய்ப்புக்கு என்ன வழி செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அந்த 16 பெண்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

1971 டிசம்பர் 15]

குங்குமப்பூ பயிரிடுதல்

* 432 வினா.—**திரு. கே. என். குமாராமி: மாண்புமிகு** வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் குங்குமப்பூ பயிரிடும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: குங்குமப்பூ பயிரிட இயலுமா என்பது பற்றி சில சோதனைகளே தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இந்த சோதனைகள் எப்போது முடிவடையும்? எப்போது அதனுடைய விளைவுகள் தெரியும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம்தான் காஷ்மீரிலிருந்து குங்குமப்பூ குருத்துக்கள் தருவிக்கப்பட்டன. அது கோடைக்கானலில் பயிரிடப்பட்டு வருகிறது. அங்கே சோதனைகள் முடிவடைந்த பிறகு, முடிவு தெரிவிக்கப்படும்.

பின்தங்கிய வகுப்பினர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்

* 433 வினா.—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசன மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவது போல் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் அரிசன நலத்துறையிலிருந்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சிறப்பாக பின்தங்கிய வகுப்பினர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை. எனினும், கிராமப் பகுதிகளில் உள்ள பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் உட்பட, வீடற்ற ஏழை மக்களுக்கு இயன்ற அளவு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். இதைக் கருத்திற் கொண்டு 1969-ல் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அது இன்னும் செயலிலுள்ளது.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, இதற்கு முன்பாக இல்லாவிட்டாலும், இனிமேலாகிலும் அதைப் பரிசீலித்து, பெரும்பாலும் பின்தங்கிய வகுப்பினராக உள்ளவர்களுக்கு, கிராமப் புறத்தில் இருக்கும் புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த நிலப் பட்டா வழங்கு விஷயத்தில். போர் முனையில் பணியில் இருக்கும் அல்லது ராணுவத்தில் உயிர் இழந்தோர் குடும்பங்களுக்கு, நிலம் இல்லாத அரிசனங்களுக்கு, நிலம் இல்லாத ஏழைமக்களுக்கு, முன்னாள் ராணுவ வீரர்களுக்கு, பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு, தங்ககட்டுப்பாடு சட்டத்தின் காரணமாக வேலையிழந்தோருக்கு, நிலப்பட்டா வழங்கப்படும் என்று அரசாங்கக் கொள்கை ,வழக்கத்தில் இருக்கிறது. இதில் நிலம் இல்லாத ஏழை மக்களுக்கு என்று வருகிற பட்டியலில் இந்த பின் தங்கிய வகுப்பினர்களுக்கு நிலப் பட்டா வழங்கி வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, பட்டா வழங்குவதில் ஏதேனும் கஷ்டம் இருந்தால், இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்படுகிற வீடுகளில் பிற்பட்டவகுப்பினர்களுக்கு ஏதாவது சலுகை காட்ட முடியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்படும் வீடுகளில் தனிப்பட்ட சலுகை பிற்பட்ட வகுப்பினருக்கு என்று காட்ட முடியாது. பணம் கொடுப்பவர்கள் அத்தனை பேருக்கும் வீடுகள் கட்டித்தரப் படுகிறது.

வந்தவாசியிலுள்ள கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்.

* 434 வினா.—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகரில் உள்ள கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் 1969-70-ம் ஆண்டு வரை எத்தனை வீடுகள் கட்ட கடன் வழங்கி இருக்கின்றது ?

(இ) அதை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஒன்று.

(இ) அதிக எண்ணிக்கையில் கடன் மனுக்களைப் பெற்று சங்கத்தின் பணிகளை ஊக்குவிக்குமாறு திருவண்ணாமலை கூட்டுறவு துணைப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இந்த வந்தவாசியில் உள்ள கூட்டுறவு வீடு கட்டித்தரும் சங்கம் சுமார் 30 ஆண்டுகாலமாகச் செயல்படாமல் இருக்கிறது. இந்த 30 ஆண்டுக் காலத்தில் 3 வீடுகள்தான் கட்டித்தரப்பட்டு இருப்பதால். உடனடியாக அரசு வேறு போர்டை நியமிக்க முடிவு எடுத்து ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தற்போது அங்கே வந்துள்ள விண்ணப்பங்களின் மூலம் மொத்தம் ரூ. 28,00-க்கு கடன் மனுக்கள் வந்திருக்கின்றன. அவைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு, நிதி நிலைக்கேற்ப ஒப்புதல் அளிக்கப்படும்.

வட்டிக்கடைகள்.

* 435 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மார்வாடி கடைகள், மற்றும் வட்டிக்கடைகளில் சட்ட பூர்வமான வட்டி விகிதங்களை பெரிய எழுத்துக்களில் விளம்பரப் பலகையில் எழுதி வைக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த மாதிரிக் கடன் கொடுப்பவர்கள் 12 சதவிகிதத்திற்கு மேல் வாங்கக் கூடாது என்று இருந்தாலும், அதிகமாகவே வட்டி வாங்குகிறார்கள். தாங்கள் கொடுக்கும் ஹூண்டியையும் எழுதாமல் இருக்கிறார்கள். அதைத் தடுக்க, அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ? அம்மாதிரி சம்பவங்கள் வரும்போது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இந்தமாதிரி புகார்கள் வருகின்றன. ஆனால் சட்டப்படி அதை அனுகும்போது, நாம் செய்வதற்கு ஒன்றும் இல்லை. வாங்கிறவர்களும், கொடுக்கிறவர்களும், வட்டி குறைவாக எழுதினாலும், அதிகமாகவே கொடுத்து விடுகிறார்கள். சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வட்டிக்குத் தருகிறவர்கள், பல இடங்களில் கொடுப்பது ரூ. 500 ஆக இருந்தாலும், ரூ. 1000 என்று எழுதிக் கொள்கிறார்கள். அதிகப்படியான வட்டியையும் முதலிலேயே எடுத்துக் கொள்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இதைத் தடுக்க வாங்குகிறவர்கள் தான் நிதானமாக நிறுத்தும் வகையில் நடக்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, வாங்குகிறவர்களே தடுத்திருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி அநியாயமாக, மாண்புமிகு செழியன் சொன்னது போல், முதலிலேயே வட்டியையும் எடுத்துக் கொள்கிறார்கள். இதைக் கட்டாயம் தடுக்க வேண்டும். அப்படியில்லை என்றால். வட்டிக் கடைகள் நடப்பதையே தடுக்க வேண்டும். இதற்கு ஆவன செய்ய சர்க்கார் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் சட்டப்படி, "ப்ரோ நோட்" எழுவதில், 'பரிசம்ஷன் ஆப் ப்ரூப்', எழுதிக் கொடுத்ததில் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறது. எழுதிக் கொடுத்தவர்கள், "நான் அதிகத்தொகை வாங்கவில்லை" என்று நிரூபிக்க வேண்டும், "ப்ரிசம்ஷன்" ஐ எடுத்துவிடலாமா என்பதை சட்ட இலாகா பரிசீலித்து வருகிறது.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே, இந்த வட்டித் தொழில் மிகக் கொடுமையானது. அநதக் கொடுமையான தொழிலுக்கு இரையாகிறவர்கள் பெரும் பகுதி ஏழைகள்தான். ஏழைகளுக்கு அவசியமாகத் தேவைப்படும்போழுது, "ப்ரோ நோட்" கொடுக்கிறார்கள், அவர்கள் கேட்கிறார்கள். பிறகு இதனால் அவர்கள் ஆயுளுக்கும் மாட்டிக் கொள்ளுகிறார்கள். இந்தக் கொடுமையிலிருந்து ஏழை மக்களைக் காப்பாற்ற, இந்தக் கொடும் காரியத்தைச் செய்யும் வட்டிக் கடைகளை இல்லாமல் செய்ய சர்க்கார் முடிவுக்கு வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நல்ல யோசனைகள் இருந்தால் சொல்லலாம்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : கனம் அமைச்சர் யோசனை கேட்டார்கள். வட்டிக் கடைகளை மூடிவிட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசாங்கமே கடன்களை வழங்க, கடன் கேட்பவர்களின் "பர்சனல் செக்யூரிடி" யின் மேல் சொந்த ஜாமீன் பேரில் கொடுக்க, 500, 1,000 என்பதை சரியான வட்டியில் கொடுக்க வழி வகை செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எல்லா யோசனைகளையும் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

THIRU K. M. SUBRAMANIAM : Are the Government aware that the high cost of commodities today is due to this huge interest charges made by pawn-brokers and hundi merchants and will they seriously think in this progressive society that this should be banned and some other alternative system of credit at cheaper rate of interest must be made available to those who need it?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது "மணி லெண்டர்ஸ் ஆக்ட்" என்கிற சட்டத்தில் கொடுக்கப் பட்டிருக்கும் வட்டியைவிட அதிகமாக வங்கிகளில் வாங்குகிறார்கள் என்பதுதான் புகார். இதைப் பரிசீலித்து மணிலெண்டர்ஸ் ஆக்டில் பாது காப்புக் கொடுக்க ஸ்பெஷல் தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கடைகளைப் பரிசோதனை செய்து, தவறு செய்கிறவர்களை பிராசிக்யூட் செய்யவும் அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. விலையேற்றத்திற்கும் இதற்கும் சம்பந்தப்படுத்த முடியாது.

காடுகளிலுள்ள மேய்ச்சல் நிலங்கள்.

*436 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வனத் துறையில் உள்ள மேய்ச்சல் காடுகளின் உள்ளே மாடுகள் (கால்நடைகள்) மேய்வதற்கான அனுமதி சீட்டுக்கான ஆண்டுக் கட்டணத்தை உயர்த்த செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

Overloading of sheep in lorries

*437 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether a number of cases of overloading of sheep in lorries have been detected in Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம் ;

(இ) லாரிகளில் அதிகப்படியான ஆடுகளை ஏற்றிச் சென்றதாக 8 நேர்வுகள் 1971 ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் வரை சென்னை நகரில் கண்டுபிடிக்கப்பட்டு வழக்குகள் தொடரப்பட்டன.

Taxis with defective meters.

*438 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the total number of cases of taxis with defective meters detected during 1970–71 in Madras City; and

(b) the action taken thereon?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1970-இல் குறைபாடுள்ள மீட்டர்களுடன் கண்டுபிடிக்கப்பட்ட வாடகைக் கார்களின் எண்ணிக்கை 231 ஆகும். 1971-இல் 16—10—1971 வரை அத்தகைய 227 வாடகைக்கார்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

(இ) இந்த எல்லா நேர்வுகளிலும் அனுமதி நிபந்தனைகளை மீறிய குற்றத்திற்காகக் குற்றவாளிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1971-இல் கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு மன்றத்தில் முடிவடையாமல் உள்ள ஐந்து நேர்வுகள் நீங்கலாக, பிற குற்றவாளிகள், தண்டிக்கப்பட்டு ரூ. 5 முதல் ரூ. 200 வரை அபராதம் விதிக்கப்பட்டனர். இந்த நேர்வுகளில் வண்டிகளின் அனுமதியும் ஒரு நாள் தொடங்கி ஏழு நாட்கள் வரை தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது, வாகனங்களைப்பற்றிச் சொன்னார்கள். சென்னையிலிருந்து, திருநெல்வேலிக்குப் போகும் "ஆம்னிபஸ்" டிக்கட் போட்டு, இரவு நேரங்களில் ஓட்டுகிறார்கள். அதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த டிபெக்டிவ் மீட்டர்ஸ் உற்பத்தி இடத்திலேயே டிபெக்டிவாக இருக்கிறதா அல்லது இங்கே பொருத்தப்பட்ட பிறகு, அவர்கள் கோளாறு செய்து டிபெக்டிவாக ஆகிவிட்டதா? அதைப்பற்றி அரசு ஏதாவது ஆராய்ச்சி நடத்தியதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த மீட்டர்களைப் பயன்படுத்தும்போது அதிலே கோளாறுகள் இருந்தால் பாதிக்கப்படுபவர்கள் பயணிகள்தாம். பயணிகளின் நலனை உத்தேசித்து ஓடும்போது, கண்டுபிடிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கிறார்கள். மான்யுபாக்சரர்ஸ் டிபெக்ட் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்து இறங்கியதும், எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு விடு என்றால், எந்த டாக்சிக்காரரும் உடன்படுவதில்லை. இதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சட்டமன்ற உறுப்பினர்களின் வசதியை முன்னிட்டு, அரசாங்கப் போக்குவரத்து ஒரு தனி பஸ் விட ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், அமைச்சரவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்து தனி பஸ் விடுவதாகச் சொன்னார்கள். எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களும் ஒரே நேரத்தில் வராததால், டாக்சிகள் தேவையாக இருக்கின்றன. அதைப்போன்று வராமல் இருக்கும் டாக்சிகளுக்கு போலீசார் அங்கேயிருந்துகொண்டு வரிசைப்படுத்தி வருகிறார்கள் என்றாலும், போலீசாருடைய கண்ட்ரோலுக்கு உட்படாமல், வேறு மாதிரி நடந்து கொள்கிறார்கள். இரவு சினிமா பார்த்து விட்டு வருகிறவர்களுக்கும் டாக்சிகாரர்கள் மீட்டர் இல்லாமல் அதிக வாடகை கேட்கும் நிலைமை இருக்கிறது. அப்படியிருக்கும் காரணத்தால், மீட்டரே இல்லாமல் இருக்கும் நிலையை போலீசார் கண்காணித்து முறைப்படி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும் கருத்தின் அடிப்படையில் ஏற்கனவே காவல் துறையினருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. மீட்டர் இல்லாமல் இருந்தாலோ, வரமாட்டேன் என்று சொன்னாலோ அதை உடனடியாக காவல் துறையினருக்குத் தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே. டாக்சிகாரர்கள் அவ்வாறு செய்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் நமக்கு, எம்.எல்.ஏ. பாஸ் இருக்கிறது. தனிச் சலுகையாக அதைக் காட்டி டாக்சி வரும் வகையில் உத்தரவு போட சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்கள் பாஸைக் காட்டித்தான் டாக்சிக்காரரிடம் நன்மதிப்பைப் பெறவேண்டும் என்பதில்லை. சமுதாயத்தில் ஏற்கனவே நன்மதிப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : நன்மதிப்பைப் பெற்றிருக்கிறார்கள். பிரயாணத்திற்கு சலுகை இல்லாமல் இருக்கிறதே. அதைக் காட்டி அனுமதி பெறலாமா என்பதைத்தான் சர்க்கார் கவனிக்குமா என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பிரயாணத்திற்குத் தனிச் சலுகை இல்லை.

Triplicane-Nanganallur Bus route.

* 439 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Transport be pleased to state whether there are proposals with the Government to introduce more buses on the routes (1) T. Nagar–Nanganallur and (2) Mylapore–Nanganallur; and introduce a new route (3) Triplicane—Nanganallur?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே. நங்கநல்லூர் பகுதி மிகவும் முன்னேற்றமடைந்து வரும் பகுதி. முக்கியமான சபர்பன் ஏரியா என்று சொல்லலாம். முக்கியமான புறநகர்ப் பகுதியாக இருப்பதால், அங்கே இருந்து பல மக்கள் சென்னைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு போதிய பஸ் வசதி இல்லை. அதை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நங்கநல்லூரிலிருந்து ஏற்கனவே, சென்னையின் பல பகுதிகளுக்கும் போக்குவரத்து வசதிகள் இருக்கின்றன. திருவல்லிக்கேணி, மைலாப்பூர், ஹைகோர்ட் ஆகிய பல்வேறு பகுதிகளுக்கும் வர வசதிகள் இருக்கின்றன. அதிகப்படுத்த தேவையொன்றும் இல்லை.

கோவில் திருப்பணிகள்.

* 440 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971—72 ம் ஆண்டில் கோவில்கள் புதுப்பிக்க அரசு வழங்கிய மொத்த மானியத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ரூபாய் நான்கு இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

[1971 டிசம்பர் 15

*441 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether this Government has any proposal to renovate the Rameswaram temple; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) இராமேஸ்வரம் கோவில் நிர்வாகிகள் கோயில் நிதி நன்கொடை முதலியவற்றிலிருந்து சுமார் ரூ. 8 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கோயிலைப் புதுப்பிக்கும் வேலையை தொடங்கியுள்ளார்கள். இரண்டாவது பிராகாரத்தின் பகுதிகளை செப்பனிடவும், கோயிலில் கல் மண்டபம் ஒன்று கட்டுவதற்கும் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. சுமார் 5.30 இலட்சம் பெறுமானமுள்ள வேலைகள் முடிவடைந்துள்ளன. எஞ்சிய வேலைகள் நடைபெற்று வருகின்றன. "யுனெஸ்கோ" வல்லுநர் இத்தொழிலை பார்வையிட்டு தன்னுடைய அறிக்கையைக் கொடுத்துள்ளார். பழுது பார்த்தல், புதுப்பித்தல் வேலைக்காக "யுனெஸ்கோ" உதவியானது தொழில் நுட்ப அறிவுரைகள். இந்தியாவில் கிடைக்கப் பெறாத சில பொருட்கள் முதலியவற்றின் வடிவில் இருக்கும்.

Dr. H. V. HANDE : Sir, may I know from the Hon. Minister whether it is possible to get in touch with the Central Minister for Tourism and see that the works in the Rameswaram Temple—it is a very important temple especially from the point of view of not only North Indian tourists but also foreign tourists—are completed quickly if necessary by getting extra amount from them?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மிகவும் முக்கியமான இடம் என்று கருதப்பட்ட காரணத்தால்தான் யூனெஸ்கோவினர் கூட தேவையான உதவிகளைச் செய்திருக்கிறார்கள். சுமார் ரூ. 9,000 பெருமான அளவுக்கு கருவிகளை வழங்கியிருக்கிறார்கள். கோயில் நிதியிலிருந்தும், அரசாங்கத்தின் உதவியோடும், சுமார் ரூ. 8 லட்சம் செலவில் கோயிலின் திருப்பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மேற்கொண்டு தேவைப்படுமானால், அதற்கான செலவுகளைச் செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே. கடல் அலைகளால் இராமேஸ்வரம் கோயில் பாதிக்கப்படா வண்ணம், பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இராமேஸ்வரம் கோயில் கடல் அலைகளால் பாதிக்கப்படுவதில்லை.

1971 டிசம்பர் 15]

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, தமிழகத்தில் பல பாடல் பெற்ற ஸ்தலங்கள் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. அப்படி எத்தனை கோயில்கள் பாழடைந்த நிலையில் இருக்கின்றன, எவ்வளவு செம்மைப்படுத்தப்பட வேண்டும் என்று கணக்கு எடுப்பதற்கு இலாக்காவால் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பாடல் பெற்ற ஸ்தலங்கள் மட்டுமல்ல, தமிழ் நாட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்கள் எல்லாம் சீர்திருத்தப்பட வேண்டுமென்ற வகையில் திருப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. வருகின்ற ஐந்தாண்டுகளில் இதற்காக ரூ. 4 கோடியை செலவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. எந்தெந்தக் கோயில்கள் சீரமைக்கப்பட வேண்டுமோ அவையெல்லாம் சீரமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, திருச்செந்தூரில் இருக்கிற சுப்ரமணியஸ்வாமி கோயில் கடலலைகளால் பாதிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. அதைத் தடுக்க, கடலலையினால் பாதிப்பைத் தடுக்க, சுவர் எழுப்ப, அதற்காக பணம் ஒதுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கடலலைகளால் பாதிக்கப்படாமலிருப்பதற்காக, சுமார் ரூ. 3½ லட்சம் செலவில் தடுப்புச் சுவர் கட்டுவதற்காக வகை செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

Dr. H. V. HANDE : Sir, may I know when the whole work is likely to be completed and what are the major items of work still left over?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை, சுமார் ரூ. 5,29,420 செலவழிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் சுமார் ரூ. 10,62,000 செலவழிக்கப்படவிருக்கிறது. இதுவரையில் செய்யப்பட்ட திருப்பணிகள் :—இரண்டாவது பிராகாரம் அமைத்தல் ; முடிக்கப்படாத மேற்குப் பகுதியை தென்மேற்கு மூலையில் வடக்கே 3½ அடி தள்ளி 140 அடி கட்டி முடித்தல் . தொடர்ச்சியாக இரண்டாவது பிராகாரம் அமைத்தல் . 13–16 தூண்களுக்கிடையில் மேற்குப் பகுதி ; முடிக்கப்படாத தெற்குப் பகுதியை தென்மேற்கு மூலையிலிருந்து கிழக்கே 8½ அடி தள்ளி 80 அடி நீளத்திற்கு கட்டி முடித்தல் ; இரண்டாவது பிராகாரத்தின் தென்மேற்கு மூலையிலிருந்து 16-வது தூண், அதன் துணைப் பகுதிகள் ஆகியவற்றை நிறைவேற்றுதல் ஆகிய வேலைகள் நடந்திருக்கின்றன.

இரண்டாவது பிராகாரம் 16-வது தூணிலிருந்து 32-வது தூண் வரை அணிவொட்டி மண்டபம் கட்டுதல், வெட்டுக்கல் மண்டபம் கட்டுதல், 2-வது பிராகாரத்தைப் புதுப்பித்தல், 2-வது பிராகாரம் திருப்பணி செய்யப்பட்ட பகுதிகளை சொரசொரப்பாக்குதல், 2-வது தாழ்வாரம் தெற்கு திருமதில் கட்டுதல் ஆகிய வேலைகள் நடந்து வருகின்றன.

[1971 டிசம்பர் 15

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்களுக்கும் பாடல்பெற்ற கோயில்களுக்கும் மட்டும் தான் திருப்பணிகள் செய்யப்படுகின்றனவா ? எத்தனையோ ஏழைக் கோயில்கள், சக்தி படைத்த கோயில்கள் இருக்கின்றன. கோயில்களில், ஏழைக் கோயில், பணக்காரக் கோயில் என்று பாகு பாடு காட்டுவது வேதனையைத் தருகிறது. பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில் போன்ற சக்தி படைத்த கோயில்கள் எல்லாம் இருக்கின்றன. இவைகளுக்கும் திருப்பணிகள் செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏழைக் கோயில், பணக்காரக் கோயில் என்ற பாகுபாடு ஏதும் இல்லை. எந்த எந்தக் கோயில்களுக்குத் திருப்பணி அவசியமோ, அவற்றிற்குச் செய்யப்படுகிறது.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, திருப்பணிகள், தேசியச் சின்னங்கள் என்று மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கோயில்களுக்குச் செய்யப்படுகிறதா ? அல்லது மத்திய அரசால் அப்படி அங்கீகரிக்கப்படாத கோயில்களுக்கு மட்டும் செய்யப்படு கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருப்பணிகள் செய்யும் போது, மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட கோயில்கள், அல்லது அல்லாதவை என்று பார்ப்பதில்லை. தமிழ் நாட்டில், வரலாற்றுச் சிறப்புப் படைத்த, பழமையின் சிறப்பினை உணர்த்துகின்ற, கலை நுணுக்கங்கள் படைத்த கோயில்கள் பழுது பட்டிருந்தால் அவை களுக்கு திருப்பணிகள் செய்யப்படுகின்றன.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, கோயில்களைப் புதுப் பிக்க, ரூ. 4 கோடி செலவழிக்கப்படுவதாக அமைச்சர் கூறினார். இந்தப் பணம் தர்மகர்த்தாக்களிடம் தரப்பட்டு அவர்கள் செலவு செய்கிறார்கள். அப்படி இல்லாமல், ஒரு சிவில் என்ஜினியரிங் டிவிஷன் ஒன்று துவக்கி, அவர்கள் அந்த வேலையை கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அறங் காவலர்கள் கோயிலைப் பழுது பார்க்க வேண்டுமென்று தீர்மானம் போடுகிறார்கள். எனவே, அவர்களிடம் இது ஒப்படைக்கப்படு கிறது. ஆனாலும், மேற்பார்வையிடுவதற்காக ஒரு பொறியாளரும், உதவிப் பொறியாளரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அதைக் கண்காணித்து வருகிறார்கள்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, வேலூர் கோட்டையில் இருக்கிற ஜலகண்டேஸ்வரர் கோயில் பழுதடைந்திருக்கிறது. அதனை மத்திய சர்க்கார் உதவியுடன்தான் புதுப்பிக்க வேண்டுமா ? அப்படியானால், இதைப் புதுப்பிப்பதற்கு மத்திய அரசுக்கு பரிந் துரைகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே தனிக் கேள்வி போடலாம்.

1971 டிசம்பர் 15]

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட கோயில்கள் பல தமிழ் நாட்டில் இருக்கின்றன. அவற்றைப் பார்ப் பதற்கு பல இடங்களிலிருந்தும் பில்கிரிம்கள் வருகிறார்கள். அப் படிப்பட்ட இடங்களை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு, டிரை னேஜ் போன்ற வசதிகள் செய்து கொடுப்பதற்கு—ஃப்ரம் தி ஹெல்த் பாயிண்ட் ஆப் வியூ—அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோயில் திருப்பணிப் பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கப்பட்டு வருகிறது. இது சுகாதார இலாகா சம்பந்தப்பட்டது. தனிக் கேள்வி போட வேண்டும்.

யுனெஸ்கோ நிறுவனத்தால் கோவில்களுக்கு நிதியுதவி

* 442 வினா—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

யுனெஸ்கோ நிறுவனத்தின் சார்பில் 1970-71-ல் தமிழகத்தில் எத்தனை கோவில்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான பண்பாட்டு நிறுவனத்தின் சார்பில் நிதி உதவி அளிக்கப் படுவதில்லை. ஆனால் இந்தியாவில் தயாரிக்கப்படாத பொருள் களின் வடிவில் அவ்வுதவி அளிக்கப்படுகிறது. மேற்படி நிறுவனம் திருவரங்கத்திலுள்ள அரங்கநாதஸ்வாமி கோயிலுக்கு மட்டும் ரூ. 21,818 மதிப்புள்ள "பென்கேப்சுலா" ஐ (ஒருவகைத் தெளிக்கும் எண்ணை) 1970-71-ல் வழங்கியுள்ளது.

மதுரை நகருக்குத் தங்கும் விடுதி.

* 443 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

அறநிலையத்துறையின் சார்பில் மதுரை நகரில் தங்கும் விடுதி கள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்.

(அ) சட்ட மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1971) டிசம்பர் 11-ம் நாள் தமிழ் நாடு சட்டமன்ற மேலவையினால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, திருத்தமேதுமின்றி நிறைவேறியது என்று சட்ட மன்ற மேலவைத் தலைமையிடமிருந்து அறிவிப்பு வந்துள்ளது.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முவைடிவு எண் 40/1972) -ன் மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

(3) அரசினர் சட்டமுன் வடிவுகள்.

(அ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/71)—தொடர்ச்சி.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, when I was speaking yesterday I had the honour of being advised on Parliamentary practice and as to how to speak after so many years of my parliamentary experience by the Hon. Minister, Mr. Shanmugham. I thank him for that but I refuse to acknowledge him as my 'Guru' on parliamentary traditions. I can learn lessons elsewhere. Apart from that, I recognise only one Speaker who can control the speeches of members and not two speakers . . .

THE HON. THIRU P. U. SHANMUGAM : I am not prepared to be his 'Guru', Sir.

THIRU K. M. SUBRAMANIAM : Ideas can be given, if I am wrong, but the authority to direct that I am trespassing that limit is left only to the Speaker who controls the House and its members, and not to any other Member. That is what I want to point out to you, Mr. Speaker, Sir, I recognise only one Speaker and that is yourself Sir. Now that chapter is finished and let me come to the subject.

I may mention that the Central Union is not at all necessary as the department can very well handle it. The ultimate object of a co-operative society or co-operative business is to have voluntary Co-operation. This is greatly being impaired in our State because of nominations at every stage. I hope such nominations will stop and the Hon. Minister for Co-operation will withdraw this Bill and bring in a comprehensive legislation which he said was under preparation. A draft legislation can take 3 to 4 months for preparation. A comprehensive legislation could be

brought forward before this House at the earliest. After all in a modern progressive society, co-operation is important and in spite of what Mr. Latheef had said, no doubt it has to be improved. If there are mistakes they can be rectified.

(திரு. நா. வீராசாமி தலைமை)

திரு. ஆ. பரந்தாமன் : மாற்றுத் தலைவரவர்களே, இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கூட்டுறவுத் துறையின் இரண்டாவது சட்டத் திருத்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்ததற்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருத்தச் சட்டம் தமிழகத்திற்கு மிக மிகத் தேவைப்படுகின்ற சட்டமாக இருக்கிற காரணத்தினால் இந்தத் திருத்தச் சட்டத்தை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அரசு இந்தத் துறையை ஏற்றுக்கொண்டு எடுக்கிற நடவடிக்கைகள் எதுவாக இருந்தாலும் அந்த நடவடிக்கைகளைப் பயன்படுத்திக்கொள்கின்ற அளவுக்கு ஏழை எளியவர்கள்—பாமர மக்களுக்கு விளக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் விளம்பரத்துறை நல்ல முறையில் செயல்படவேண்டும். அப்போதுதான் கூட்டுறவு நல்ல முறையிலே பயன்படக்கூடியதாக அமையும். அதை மனதிலே வைத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்தச் சட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் எவ்வளவுதான் இந்த மன்றத்திலே பேசினாலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்தத் திருத்தச் சட்டம் தேவையில்லை என்று சொன்னாலும், உட்கார்ந்துகொண்டு பரிசீலித்து சட்டங்களை இந்தத் துறைக்கு இயற்றவேண்டுமென்ற கருத்தை அவர்கள் சொன்னாலும் ஒரே நேரத்தில் எவ்வளவுதான் நிபுணர்கள் இந்தத் திருத்தத்தை உட்கார்ந்து பரிசீலித்து, சட்டங்களை இயற்றினாலும் அந்தச் சட்டங்கள் எல்லா நேரத்திற்கும் ஏற்புடையதாக இருக்கும் என்ற கொள்கையை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

மக்கள் நலனுக்கு ஏற்றதாக பல்வேறு திருத்தங்களைக் கூட்டுறவுத் துறையிலே கொண்டுவந்து, அவை மக்களுக்கு நல்ல முறையில் பயன்பட வேண்டுமென்ற கருத்தை மனதிலே வைத்து, அந்தந்த நேரத்திற்கு ஏற்றாற்போல் சட்டத்தில் திருத்தம் செய்வதுதான் ஜனநாயக மரபு என்று போற்றப்படும். அதன் அடிப்படையில் டாக்டர் கலைஞர் அவர்கள் நிர்மாணித்த அரசு கூட்டுறவுத் துறையில் பல்வேறு கோணங்களில் வெற்றி நடை போடவேண்டுமென்ற காரணத்தால், இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து மக்களுக்கு பயன்படக்கூடிய அளவுக்குத் திட்டங்களை வகுக்கின்ற காரணத்தால், அதைப் புரிந்துகொள்ளும் நிலையில் இல்லாத சில உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நான் கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம் நாம் மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே, கூட்டுறவுத் துறையிலே பல

சங்கங்களை ஏற்படுத்தி இருக்கிறோம். எந்தெந்த நேரம் எந்தெந்த துறையினால் விவசாயிகளுக்குப் பயன் ஏற்படுகிறது என்பதை என்னைப் பொறுத்தவரையில் கூட அறிய முடியவில்லை. இந்த நிலையில் பட்டி தொட்டிகளிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் எந்தெந்த நேரத்திலே எந்தெந்தத் துறையினரைப் பயன்படுத்திக் கொள்வது என்று எப்படித் தெரிந்திருப்பார்கள் ? இதைப் போக்கி, அவர்களுக்கு இந்தத் துறையைப் பயன்படுத்திக்கொள்ள இப்படிப் பட்ட திருத்தச் சட்டம் மிக மிக அவசியமானது என்பதை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் ஒரு காலத்திலே இந்தக் கூட்டுறவுத் துறையிலே 'ஸ்மோக் ஸ்கிரீன்' கூட இருந்ததுண்டு. அதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்கள் பரிவு காட்டுகின்ற நேரத்தில் அந்த எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திருத்தச் சட்டத்தின் உணர்வினை உணர்ந்து, இதை வரவேற்று, இப்படிப்பட்ட திருத்தச் சட்டங்கள் மிகமிகத் தேவையானது என்று கூறி, எவ்வளவுதான் நாம் சட்டத்தை ஒரே நேரத்தில் இயற்றினாலும் அந்தச் சட்டங்கள் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தாது என்று சொல்லி, இந்தத் திருத்தச் சட்டத்தை ஆதரித்து அமர்கின்றேன். வணக்கம்.

திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்க இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவினை ஆதரித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். இந்தக் கூட்டுறவுத் துறையைப்பற்றி இங்கே இரண்டு நாளாகப் பல உறுப்பினர்கள் பேசினார்கள். இங்கே பேசியவர்கள் எல்லாம் கூட்டுறவின் தன்மைகளை விளக்கிப் பேசினார்கள். இன்றைக்கு நாடு முழுவதிலும் கூட்டுறவுத் துறை செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே செயல்படுகின்றன என்பதை நாங்கள் நன்கறிவோம். நானே ஒரு கூட்டுறவாளன் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கூட்டுறவுத் துறையின் நலன் கருதி இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்த தமிழகத்தைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இங்கே கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டத் திருத்தத்தை, அதனுடைய முக்கிய அம்சங்களை நாம் பார்ப்போமேயானால், ஏழை எளிய மக்கள் குறிப்பாக விவசாய மக்களுக்குப் பெரிதும் பயன்படத்தக்க வகையிலே அமைந்திருக்கிறது. எனவே, இந்தச் சட்டம் உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

கூட்டுறவுத் துறையிலே களங்கம் இருக்கிறது, களங்கம் இருக்கிறது என்று பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நிலவிலே கூடத்தான் களங்கம் இருக்கிறது. எனவே கூட்டுறவுத் துறையிலே களங்கம் இருப்பதாகச் சொன்னால், அதை ஒழிப்பதற்கு வேண்டிய முயற்சிகளில் ஈடுபட வேண்டுமேயன்றி, ஆங்காங்கே காணப்படு

கின்ற சிறு சிறு தவறுகளைப் பெரிதுப்படுத்துவது நல்லதல்ல என்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விளம்பரம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தந்த வட்டாரங்களிலே, தாலுக்கா வாரியாகவும், மாவட்ட வாரியாகவும், அமைந்திருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக கூட்டுறவின் வளர்ச்சி பற்றியும், கூட்டுறவின் பயன்களைப் பற்றியும் விளம்பரம் செய்ய வேண்டுமென்று வகை செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் வரவேற்கத்தக்கதுதான். ஏனென்றால் கூட்டுறவுத் துறையைப்பற்றி மக்கள் இன்னும் பூரணமாக உணர்ந்து கொள்ளாத நிலையில்தான் இருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒரு நிகழ்ச்சியை குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்குவதற்கு மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்களே தவிர, அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் அதிக அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்கினால் ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தி விடுகிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கினால், அது அரசாங்கத்தின் பணம் ; அது அரசாங்கத் துறை ; அது நம்முடைய துறை. எனவே பணத்தை எப்போது வேண்டுமானாலும் கட்டலாம் ; அவர்கள் கேட்கும்போது கட்டலாம் ; கேட்கும்போது பணம் இல்லாவிட்டாலும் நீதிமன்றத்திற்குச் சென்று பின் கட்டிக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். இந்நிலையைப் போக்க, கூட்டுறவுத்துறை பற்றி பயிற்சி ஏற்படுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பயிற்சி நிச்சயம் வேண்டுமென்றுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கருதி, இந்தச் சட்டத்தை மனதார வரவேற்கிறேன்.

இங்கு பேசிய உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள், எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. லத்தீப் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே ஊழல்கள் இருக்கின்றன, கூட்டுறவுத் துறை மோசமாகச் செயல்படுகிறது என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். அவருக்குக் கூட்டுறவுத் துறையைப் பற்றிச் சரியாகத் தெரியவில்லை என்று கூடச் சொன்னார்கள். திரு. லத்தீப் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே பல சீர்கேடுகள் உள்ளன என்று சொன்னார். ஆனால் அந்தச் சீர்கேடுகள் இப்போதுள்ளவை அல்ல ; ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள சீர்கேடுகளைச் சொன்னார் என்பதை திரு. கே. எம். எஸ். அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்குக் கூட்டுறவைப் பற்றித் தெரியுமா தெரியாதா என்பது இந்த மன்றத்திலே உள்ளவர்களுக்குத் தெரியும் ; இந்த உலகத்திலே உள்ளவர்களுக்குத் தெரியும். முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் திரு. காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்கள் இந்த கூட்டுறவுத் துறைக்கு 20, 30 ஆண்டுகளுக்கு முன்பே சில சட்டங்களைப் போட்டு, அப்போது இருந்த அரசாங்கத்திற்குத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த உண்மையை உணர்ந்தவர்கள் முஸ்லீம் லீக் கட்சிக்குக்

கூட்டுறவுத் துறை பற்றித் தெரியாது என்று சொல்லமாட்டார்கள். ஆகவே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கே. எம். எஸ். அவர்கள் தன்னுடைய கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே உள்ள நன்மைகளை, அதன் நற்பயன்களை மக்களின் அடிமட்டத்திலே உள்ளவர்கள் கூடத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையிலே கூட்டுறவுத் துறைக்கு விளம்பரம் தேவைப்படுவதால் இதை நாங்கள் மனதார வரவேற்கிறோம். அதற்காக தமிழக அரசைப் பாராட்டுகிறோம். கூட்டுறவில் குறைகள் இருக்கலாம். பயிருக்குக் களை எடுக்கப்படவேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் குறைகள் களையப்படுவதாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்திய உப கண்டத்தில் நமது தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்பதாக. இந்தக் குறைகள் எல்லாம் களையப்பட்டால் நாம் முதலாவது இடத்தையே வகிப்போம். (மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நாம் இப்போது முதலாவது இடத்தைத்தான் வகிக்கிறோம்). இது மிகமிகப் பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும். அதைப் பாராட்டாவிட்டாலும் குறை கூறாமல் இருப்பது நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் கூட்டுறவைப்பற்றிச் சரியான முறையில் தெரிந்து கொள்ளாத உறுப்பினர்கள் கூட இருக்கிறார்கள் என்பதற்கு திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேச்சு உதாரணமாக இருக்கிறது. சாதாரண மக்களிடத்தில் அக்கறை கொண்ட அத்தனை பேர்களுமே கூட்டுறவுத் துறையில் அக்கறை உடையவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொண்டு இந்திய முஸ்லீம் லீக் கட்சியும் கூட்டுறவுத் துறையில் அதிக அக்கறை கொண்டதாகவே இருந்து வந்திருக்கிறது, இன்னமும் இருந்துவரும் என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட இரண்டாவது திருத்தச் சட்டத்தை நான் மனப்பூர்வமாக ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற கூட்டுறவுத்துறையிலே வந்திருக்கிற இரண்டாவது திருத்த மசோதாவை ஒருவகையில் நான் ஆதரிக்க விரும்பவில்லை. காரணம், கூட்டுறவுத் துறை என்பது ஒருவகையில் சோஷலிச சமுதாய அமைப்பைப் போன்றது என்று கூறலாம். நாட்டிலே இருக்கிற அவ்வளவு பேரும் ஒரே உரிமைகளைப் பெற்று, ஒரே கடமைகளைச் செய்து பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு பழகிக்கொள்வதில் வேற்றுமை இல்லாத சூழ்நிலையை உண்டாக்குகின்ற காலகட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிற நிலையில் அந்தச் சமுதாயத்தை எல்லோரும் விரும்பினால்தான் ஏற்படுத்த முடியும். சிலபேர் விரும்புவார்கள். விரும்பாத

வர்களும் சிலபேர் இருப்பார்கள். பல நிர்ப்பந்தங்களைச் செய்ய வேண்டும். பல்வேறு காரியங்களைச் செய்யவேண்டிவரும் அதனை அடைவதற்காக.

கூட்டுறவுத் துறையில் யார் யார் அங்கத்தினர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேர்களும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வதற்கான வாய்ப்பு இருக்குமானால் சோஷலிசமே இந்தக் கூட்டுறவு மூலம் வந்துவிடும். இந்த அடிப்படையில் கூட்டுறவுத் துறையில் படிப்படியாக வளர்ந்து விரிவுபட்டு—சோஷலிச கொள்கையின் பலனை அனுபவிக்கிற சில நாடுகளே உலகத்தில் இருக்கின்றன. அத்தகைய கூட்டுறவை நாம் விரும்புகிறோம். கூட்டுறவு என்று சொல்கிற வார்த்தை இருக்கிறதே அது எளிதில் புரிகின்றதாக இருக்கிறது. ஆனால் அதிலே உள்ளடங்கியிருக்கிற கருத்தின்படி கூட்டுறவுகள் நடக்கிறதா என்றால் நடக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. மற்ற தனிப்பட்ட வியாபார ஸ்தாபனங்கள் போன்ற இதுவும் அரசாங்கத்தினுடைய ஸ்தாபனத்தைப் போல இயங்குகின்றதைப் போலத்தான் இருக்கிறது. அதில் இருக்கிற உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவிக்கொள்கிற ஒரு அமைப்பாக இருக்கிறதா என்றால் இல்லை. ஒவ்வொரு நாளும் வேற்றுமைகள், பிளவுகள் அதிகப்பட்டு வருகிறதே தவிர குறைந்து வருவதாகச் சொல்ல முடியாது. இன்றையதினம் மக்களுடைய ஆதரவோடு—கூட்டுறவுத்துறை ஸ்தாபனம் மற்ற தனியார் ஸ்தாபனத்தோடு போட்டி போட்டு நிற்க முடியவில்லை. அது உயிர்கொண்டு நிற்க அரசாங்கத்தின் பல சலுகைகளைப் பெறவேண்டியிருக்கிறது. ஏதாவது பொருளுக்கு கண்டிரோல் என்று வந்தால் உடனே அந்தப் பொருள் கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலம் கொடுக்கப்படும் என்கிறபோதுதான் அதற்கு ஒரு அந்தஸ்து வருகிறது. தகுதி ஏற்படுகிறது. சாதாரணப் பொருள்களை வியாபாரம் செய்கிற நிலையில் தனிப்பட்டவர்களோடு போட்டியிட முடியவில்லை. மற்றவர்கள் வாங்குகிற இடத்தில்தான் இவர்களும் வாங்குகிறார்கள். ஆனால் தனிப்பட்டவர்கள் கொடுக்கிற விலைக்கு இவர்களால் கொடுக்க முடியவில்லை. தனிப்பட்டவர்கள் நிர்வாகத்திற்கும், இந்த ஸ்தாபனங்களுடைய நிர்வாகத்திற்கும் உள்ள அடிப்படை வித்தியாசம்தான் அதற்குக் காரணம். ஆகவே, எல்லா நேரங்களிலும் அரசு இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு உதவி செய்தால்தான், எல்லா நேரங்களிலும் அரசு கடன் அளித்தால்தான் உயிருடன் வாழ முடியும் என்ற நிலை இவற்றுக்கு இருக்கிறது.

நிலவள வங்கிகளை எடுத்துக்கொண்டாலும், அடமான வங்கிகளை எடுத்துக்கொண்டாலும் எதை எடுத்துக்கொண்டாலும் அதிலே உள்ள உறுப்பினர்கள் கடன் வாங்குவது என்றால், வேறு சலுகைகளைப் பெறுவது என்றால் தனிப்பட்டவர் ஸ்தாபனங்களில் எவ்வளவு செலவு செய்து வாங்கவேண்டுமோ அதைவிட அதிகமாக செலவு செய்துதான் வாங்கவேண்டியதாக இருக்கிறது. இது

பிரத்யட்சமான உண்மை. சட்டத்தின்படி செலவு செய்யவேண்டியதில்லை என்றாலும் நடைமுறையில் செலவு செய்ய வேண்டியதாகவே இருக்கிறது. இந்தக் குறையைப் போக்க முடியாது என்பதில்லை. போக்குவதற்கேற்ற முழு ஆற்றல் பெற்றவர் நமது அமைச்சர் அவர்கள். அவர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனேயே இந்தக் கூட்டுறவு ஸ்தாபன ஆடிட் முறைகளை எல்லாம் மற்ற தனியார் ஸ்தாபன ஆடிட் முறைகளைப் போல லகுவாக மாற்றி அமைக்க உத்தேசித்திருப்பதாக அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்த ஸ்தாபனங்கள் எப்படி மாறிக்கொண்டிருக்கின்றன? அரசாங்கத்தில் உள்ளவர்களின் செல்வாக்குள்ள ஸ்தாபனங்களாக மாறிக்கொண்டிருக்கின்றனவே தவிர, சுதந்திரமாக இயங்கும் ஸ்தாபனமாக எங்கே இருக்கின்றன ? இந்த வேதனை தரும் உண்மையை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள வேண்டியதாகத்தான் இருக்கிறது. அமைச்சருடைய திறமைக்கு, ஆற்றலுக்கு—அப்படி நடைபெறாது செய்யலாம்—கூட்டுறவு ஸ்தாபனங்கள் தனியாக—சுதந்திரமாக இயங்கக்கூடிய வகையில் செய்யலாம். ஆயினும் இன்றைய அரசாங்க சூழ்நிலை காரணமாக அப்படிச் செய்ய முடியவில்லை. அதைத் தவிர வேறு காரணம் இருப்பதற்கு நியாயம் இல்லை. இதை அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டாக வேண்டும். அப்படியின்றி அமைச்சர் அவர்கள் அவைகளை மாற்றி அது ஒரு சுதந்திர ஸ்தாபனமாக, பரஸ்பரம் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்கிற ஸ்தாபனமாக இயங்கக்கூடிய வகையில் அமைத்தாகவேண்டும்.

அந்த ஸ்தாபனங்கள் தன்னிச்சையாகச் செயல்பட வழிமுறைகள் கண்டாக வேண்டும். அப்படியின்றி இதுபோன்ற சிறுசிறு சட்டங்களைக் கொண்டு வருவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வருங்காலத்திலாவது விரிவான சட்டத்தை இதற்குக் கொண்டு வருவார்கள் என்று நம்பி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள கூட்டுறவுத் துறை மசோதாவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னதாகப் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தினர்களும் அரசியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, இந்த மசோதாவானது எந்த அளவிற்குத் தேவையற்றது என்பதை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். நானும் அவர்களோடு சேர்ந்து இந்த மசோதா, தேவையற்றது, அவசியமற்றது. கூட்டுறவு நோக்கம் நிறைவேறுவதற்காக இந்த மசோதா கொண்டுவரப்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முதன்முதலில் இந்த மசோதாவில் 'ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸ்' என்று கூறப்பட்டிருக்கிறது. இதன் நோக்கத்தைக் கூறும்போது, பயிற்சி அளிப்பதற்காகவும், விளம்பரங்கள் செய்து கொள்வதற்காகவும் இந்த நோக்கங்களை நிறைவேற்றுகின்ற வகையில் பல அமைப்புகளை, கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

இப்போதே பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, யூனியன் என்ற பெயராலும்கூட ஓர் அமைப்பு இருக்கிறது. எனக்குத் தெரிந்த அளவில் இப்போதிருக்கின்ற யூனியன்கள் செயல்பட வகையில்லாமல் இருக்கின்றன. எந்த அளவிற்கு கூட்டுறவு நோக்கங்களை நிறைவேற்ற வேண்டுமோ அந்த அளவிற்கு அவை செயல்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்பார்க்கின்ற நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று இருந்தாலும்கூட, அந்த நோக்கங்களையும்கூட இருக்கின்ற அமைப்புகளை வைத்தே நிறைவேற்றலாம். ஒருவேளை உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறுவதுபோல், கூறப்பட்டிருக்கின்ற நோக்கங்கள் ஒன்றாக இருந்து, அமைச்சர் அவர்களுடைய நோக்கம் வேறாக இருந்தால் நாம் கூறுகின்ற கருத்தை அமைச்சர் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியலை வளர்ப்பதற்கு கூட்டுறவை உபயோகிக்கிறார்கள் என்கிற கருத்தை அவர் ஏற்றுக்கொள்ள முடியாது. பயிற்சி அளிப்பதற்காக ஓர் அமைப்பு தேவையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு சிந்தித்து உணர வேண்டும்.

ஏற்கெனவே பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அரசாங்கமோ, கூட்டுறவுத் துறையோ சக்தி படைத்ததாக இல்லை. கூட்டுறவு முறையில் பயிற்சி அளித்து, மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்குவது தேவையா ? இப்போது நாம் கல்வித் துறையில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கிறோம். பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கின்ற நிலைமை அரசாங்கத்திற்கு இல்லை. மேலும், மேலும் பயிற்சி கொடுத்ததனால், ஆசிரியர்களுக்கு போதிய வேலைவாய்ப்பின்றி தவிக்கிறார்கள். பயிற்சி பெற்றுவிட்டு, வேலை கிடைக்காதா என்று திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் மேலும் பயிற்சி அளிக்க வேண்டுமா ? இது தேவையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, தமிழ்நாடு கூட்டுறவு யூனியன், மாவட்டக் கூட்டுறவு யூனியன், தாலுகா கூட்டுறவு யூனியன்—ஒவ்வொரு பகுதிக்கும் சங்கங்கள் தேவைக்கேற்றாற்போல்—அமைக்க வாய்ப்பும் வசதியும் இந்த மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. லிஃப்ட் இரிகேஷன் சொசைடி, எண்ணெய் உற்பத்தி செய்பவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. பல்வேறு சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் பெயரளவில் போர்டு மட்டும் போட்டுக்கொண்டு இருக்கின்றனவா அல்லது மக்களுக்குச் சேவை செய்யும் முறையில் செயல்படுகின்றனவா என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். நாம் எதிர்பார்த்த அளவிற்கு இந்தச் சங்கங்கள் செயல்படவில்லை. இந்தச் சங்கங்கள் பயன்படவில்லை. ஆனால் இன்னொரு நோக்கம் இந்தச் சங்கங்களினால் நிறைவேறுகிறது. இந்தச் சங்கங்களிலிருந்து டெலிகேட்டுகளை மேல் சங்கங்களுக்கு அனுப்புவதற்கும்,

அதிகாரத்தில் இருப்பவர்களை மாற்றி, தங்களுக்கு வேண்டியவர்களை அதிகார பீடத்தில் அமர்த்துவதற்கும் இந்தச் சங்கங்கள் பயன்படுகின்றன. கூட்டுறவுத் துறையின் நோக்கம் நிறைவேற இந்தச் சங்கங்கள் பயன்படவில்லை.

அடுத்தபடியாக, பல்வேறு சங்கங்கள் மூடப்பட்டு வருகின்றன. ஊழல்கள் காரணமாக தவறு செய்யப்படுகின்ற சங்கங்களை மூடுகிறோம் என்று சொல்வார்கள். இப்போது இருக்கின்ற சங்கங்கள் ஊழல்கள் நிறைந்தன என்று சொன்னால். அதைத் திருத்துவதற்கு வாய்ப்பு இல்லையா, அப்படி இல்லையென்றால், நடக்க இருக்கின்ற சங்கங்களும் ஊழல் மயமாகும். உற்பத்தியிலேயே ஊழல் மயமாகும். எதிர்பார்க்கின்ற சேவையை அவை செய்ய இயலாது. கூட்டுறவுத் துறையைப்பற்றி நல்ல நோக்கம் இருந்தால், இப்போது இருக்கின்ற சங்கங்களைத் திருத்தி நல்ல முறையில் செயல்பட வைக்கலாம்.

கடைசியாக இந்த மசோதாவில் ரிஜிஸ்ட்ராருக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்களுக்கு டைரக்ஷன் கொடுக்கலாம், அதை 'ஏற்று நடக்க வேண்டுமென்று நிபந்தனை இருக்கிறது. தற்போது ஒரு அதிகாரி தன்னிச்சையாக செயல்பட முடியவில்லை என்கிற கருத்து பரவலாக இருக்கிறது. அதிகாரம் எல்லாம் ஆளும் கட்சி அரசியல்வாதிகளுக்குக் கொடுக்கப்படுகிறதே தவிர, அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இந்த மசோதாவானது எதிர்பார்க்கின்ற நோக்கங்களை நிறைவேற்றுகின்ற முறையில் இல்லை. இது தேவையற்ற மசோதா. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை 'வித்ட்ரா' செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு. என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். இராஜாங்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையில் இரண்டாவது திருத்த மசோதாவை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கூட்டுறவுத்துறை நான்கைந்து ஆண்டுகளாக பொதுமக்களுக்கும், சாதாரண மக்களுக்கும், எல்லா மக்களுக்கும் தெரிந்த அளவில் நல்ல முறையில் செயல்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. 1920-ல் ஏற்பட்ட கூட்டுறவுச் சட்டம் இன்றைக்கு எத்தனை ஆண்டுக் காலமாக அப்படியே இருந்து வருகிறது. அன்னியராட்சி போய்விட்ட பிறகும், கடந்த இருபது ஆண்டுகளில் அந்த கூட்டுறவு இயக்கம் எப்படி இருந்தது, எப்படிச் செயல்பட்டது என்பதை நாடு மறந்துவிடவில்லை, நாட்டு மக்களும் மறந்துவிடவில்லை. நான் கடந்த பத்தாண்டுக் காலமாக, கடந்த ஆட்சியிலும் மன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். கடந்த காலத்தில் இந்தக் கூட்டுறவு இயக்கம் எப்படி இருந்தது. இதனால் மக்கள் என்ன பலன் அடைந்தார்கள் என்பதை அறிய முடியவில்லை. பொதுமக்கள் புரிந்துகொள்ள முடியாத நிலைமையில் செயல்பட்டு வந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றையதினம் நாட்டுமக்கள் கூட்டுறவு இயக்கத்தின் தன்மை, அது செயல்படுகிறவிதம், அதனால் மக்கள் அடைகின்ற பலன் எல்லாவற்றையும் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்போதுதான் கூட்டுறவுச் சங்கங்கள் சரியான முறையில் செயல்படுகின்றன. நாட்டுமக்கள் இதை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அரசியல் காரணமாக குறைகள் கூறினால் அதை ஏற்றுக்கொள்ள முடியுமா ? குறை சொல்பவர்கள் யார் சொல்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். யார் யார் எந்தக் குறைகளை வேண்டுமானாலும் சொல்லட்டும். நான் கண்ட வரையில் கூட்டுறவுத் துறை சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் ஒரு தேர்தல் நடந்தது. அதாவது தர்மபுரியில் நடந்தது. அது இடைத் தேர்தல். மதிப்பிற்குரிய சுப்ரமணிய கவுண்டர் அவர்கள் தலைவராக இருந்தார். பொது மக்களுக்கு மட்டுமல்ல, எல்லா அரசியல் கட்சிகளுக்கும் தெரிந்தவர். அவரே தலைவராக இருந்து தேர்தலை நடத்தினார். அந்தக் காலத்தில் அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இருந்தார்கள். கூட்டுறவுத் துறையிலே யாராவது தவறு செய்துவிட்டால் விடுவதாக இல்லை. கூட்டுறவுத் துறையில் திராவிட முன்னேற்றக் கழகம் செல்வாக்குப் பெற்றுவிடும் என்று பயப்படுகிறார்கள். உள்ளபடியே செயல்திட்டங்கள் பல தயாரிக்கப்பட்டு கூட்டுறவுத் துறை எந்த எந்த முறைகளிலே செயல்படவேண்டுமென்ற எண்ணத்துடன், அமைச்சர் அவர்கள் ஆழ்ந்த சிந்தனையுடையவர், படித்தவர், சட்ட நிபுணர் என்ற முறையிலேதான் இதைக் கொண்டுவந்திருக்கிறார்களே தவிர, வேறு யாருடைய லாபத்திற்காகவோ யாருடைய நஷ்டத்திற்காகவோ கொண்டுவந்திருக்கிறார்கள் என்று கருதினால் அது மிக மிக வருந்தத் தக்கதாகும். இப்பொழுது மாவட்ட அளவிலே இருக்கின்ற சங்கங்கள் தாலூகா அளவிலே அமைக்கப்படுகின்ற நிலைமை மிகப் பொருத்தமுடைய ஒன்றாகும். முன்பு மாநில அளவிலே இருந்தது. மாவட்ட அளவிலே அமைக்கப்பட்ட பிறகுதான் எல்லோருக்கும் தெரிகிறது, மக்கள் அவற்றை நெருங்குகிறார்கள், அணுகிக் கேட்கின்றார்கள். சங்கத்தினுடைய தலைவர்களைப் பொறுத்தவரையிலும் நியாயத்திற்குப் பயந்து உண்மைக்கு மாறாகப் போகாமல் இருப்பவர்களைத்தான் மக்கள் தெரிந்தெடுக்கின்றார்கள். மற்றவர்களும் தேர்ந்தெடுக்கின்றார்கள். ஆகவே எந்தக் குறையும் சொல்லமுடியாத அளவிற்கு இந்த மசோதா அமைந்திருப்பதோடு பல நாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த நல்ல நோக்கங்களையும் நிறைவேற்றுகின்ற வகையிலே இந்த மசோதா உதவி செய்கின்ற நிலைமையிலே நான் அதனை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவாதத்திற்குரிய இந்த திருத்த மசோதா

கூட்டுறவுத் துறையிலே உள்ள முக்கியமான அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கும், அப்படிப் பரவலாக்கப்பட்ட கூட்டுறவுத் துறையின் வாயிலாக கூட்டுறவுத் துறையின் தத்துவங்கள் கிராம மக்களுக்குக் குறிப்பாக விவசாயிகளுக்கு நல்ல முறையிலே புரியும் முறையிலே இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது, என்று அதனுடைய நோக்கம் அதிலே குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. அதை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய நாடு விவசாய நாடு, சுமார் 80 சதவீத மக்கள் விவசாயத் துறையிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். கூட்டுறவுத் துறையின் முழுமையான வெற்றியைக் காணவேண்டுமென்றால், இந்தத் துறை பரவலாக்கப்பட்டிருக்கின்றது என்பது உண்மையாக வேண்டுமென்றால் இதனுடைய தத்துவங்கள், குறிக்கோள்கள் கிராம மக்களுக்கு, குறிப்பாக விவசாய மக்களுக்குப் புரிந்தாகவேண்டும். அந்த முறையிலே இந்தச் சட்டம் வழிவகை செய்கிற முறையிலே அமைந்திருக்கின்றது என்பதால் மெத்த மகிழ்ச்சியுடன் இதனை வரவேற்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப்பற்றி நான் இங்கே குறிப்பிட்ட சில வாக்கியங்களை வைத்துக்கொண்டு என்னுடைய மதிப்பிற்குரியவரும், மரியாதைக்குரியவருமான கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சில வார்த்தைகளை இங்கே சொன்னார்கள். நான் நேற்று கூட அதைப்பற்றி விளக்கம் தந்திருக்கிறேன். இங்குள்ள கூட்டுறவுத் துறையைப்பற்றியோ தமிழ்நாட்டைப்பற்றியோ இந்திய நாட்டைப்பற்றியோ வேறு எந்த நாட்டைப் பற்றியோ நான் குறிப்பிடவில்லை; பொதுவாக இத்தகைய கருத்து இருக்கிறது, இதைப் போக்குவதற்கு வழிசெய்ய வேண்டுமென்று சொன்னேன். அமைச்சர் அவர்களுடைய நிதானத்திலேயும், அறிவிலேயும், அனுபவத்திலேயும் எங்களுக்கு நிறைய மதிப்பு உண்டு, நம்பிக்கை உண்டு. நாங்கள் சொல்கிற கருத்துக்களை ஏற்றுக் கொண்டு நாங்கள் எந்த வகையிலே, எந்த எண்ணத்திலே சொல்கிறோமோ அந்த எண்ணத்திலே அவற்றை ஏற்றுக்கொண்டு செயல்படுவார்கள். செயல்படுகிறார்கள் என்பதிலே எங்களுக்கு கிஞ்சித்தும் ஐயமில்லை. திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் வேறு விதமாகச் சொல்கிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. நான் சொன்னேன், ஒழுங்கீனங்கள் அகற்றப்பட்டு நிர்வாகத்திலே சீர்பட வேண்டுமென்று சொன்னேன்; இது கூட்டுறவு அல்ல, கூட்டுறவின் அடிப்படைத் தத்துவம் அல்ல என்று திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொல்கிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : There cannot be reference to me, speech after speech. . . . .

திரு. எம். ஏ. லத்தீப் : ஒழுங்கீனங்கள்தான் கூட்டுறவுத் துறையிலே இருக்கவேண்டும், நிர்வாகச் சீர்கேடுகள்தான் இருக்க வேண்டுமென்ற முறையிலே அவர்கள் காலத்திலே இருந்த கூட்டுறவுத் துறை இருந்தது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். கூட்டுறவின் தத்துவத்தை அவர்கள் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது வேறு வகையிலே நிர்வாகச் சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டும், ஒழுங்கீனங்கள் அகற்றப்பட வேண்டுமென்று சொன்னால்—அந்த அளவிலே காங்கிரஸ்காரர்களுக்கு—புதிய முறையிலே சொன்னால் அவர்களுக்குப் புரியாதது தான். நான் எம்.ஏ. படித்த காலத்திலே கூட்டுறவு எக்கானமி என்ற பாடத்தை எடுத்துப் படித்திருக்கிறேன். ஆனால் அவர்கள் எனக்கு கூட்டுறவுபற்றித் தெரியாது என்று சொல்கிறார்கள். நாங்கள் தெரிந்திருக்கிற கூட்டுறவு வேறு, காங்கிரஸ்காரர்கள் தெரிந்து இருக்கிற கூட்டுறவு வேறு என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நான் 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே 1960–62-லே என்று நினைக்கிறேன், நான் எம்.ஏ படித்த நேரத்திலேகூட பாடப் புத்தகங்களிலே கூட்டுறவு சொஸைடிகளைப்பற்றியும் கூட்டுறவு மூவ்மெண்ட்களைப்பற்றியும் பேராசிரியர்கள் பொருளாதார நிபுணர்கள் எழுதியிருந்ததைத்தான் நான் சட்ட மன்றத்திலே சொன்னேன். 1962-ஆம் ஆண்டிலே அருமை நண்பர் சார்ந்திருக்கின்ற கட்சிதான் ஆட்சியிலே இருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அருமைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை நம்முடைய நாட்டுக்கு நல்லது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதை அருமை நண்பர் திரு. வகாப் அவர்கள் நன்றாக எடுத்துச் சொன்னார்கள். நான் நேற்றுப் பேசும்பொழுதுகூடச் சொன்னேன், சிறிய முதலீடுகள், சுமால் கேப்பிடல், சிதறிப்போன அனுபவங்கள் இருக்கின்றன, இவற்றை எல்லாம் ஒன்று சேர்ப்பதற்கு பிக் கேப்பிடலிஸ்ட்ஸ் இல்லை, முதலாளிகள் இல்லை, தொழில் துறையிலே அனுபவம் மிக்கவர்கள் இல்லையென்பதை உணர்ந்து நம்முடைய நாட்டுக்குக் கூட்டுறவுத் துறை அவசியமென்று கருதப்பட்டு சுதந்திரம் அடைந்த காலத்திலே கொண்டுவரப்பட்டது. கொண்டு வரப்பட்டு இருபது ஆண்டுகளாக இந்தத் துறை நன்றாக வளர்ச்சி அடைவதற்கு எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளாமல் விடப்பட்டு அறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சியிலே புரையோடிப்போன துறையை நாம் ஏற்றுக்கொண்டு எந்த வகையிலே சீர்திருத்தங்களைக் கொண்டுவரமுடியும் என்று நாம் பாடுபட்டுக்கொண்டு வருகிறோம். கூட்டுறவுத் துறையின் அமைச்சராக இருக்கக்கூடியவர்கள் தொழில் துறையிலே நல்ல அனுபவம் பெற்றவர்கள், இருக்கின்ற என்ட்ரப்ரனர்ஸிலே மிகச் சிறந்து விளங்கக்கூடியவர் தமிழ் நாட்டிலே. அப்படிப்பட்டவர்

காலத்திலே நடந்துவிட்ட ஒழுங்கீனங்களை அகற்றி இன்று அந்தத் துறையை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்றும் மக்களுக்கு பரப்பவேண்டுமென்று முயற்சியெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சென்ற காலத்திலே நடந்த ஒழுங்கீனங்களை அகற்றவேண்டுமென்று சொன்னால் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுக்குக் கோபம் வருகிறது, அவர்களுடைய கோபத்திலே எனக்கு மகிழ்ச்சியுண்டு. காரணம் வெளிப்படையாகவே அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள் நாங்கள் நினைத்துக்கொண்டிருந்த கூட்டுறவு வேறு, இப்பொழுது இருக்கிற கூட்டுறவு வேறு, கொள்ளையடிப்பது என்பதுதான் எங்களுக்குத் தெரிந்தது, இன்றைக்கு வேறு என்று சொல்கிறார்களே என்று அவர்கள் நினைப்பதினாலேதான் அவர்களுக்குக் கோபம் வருகிறது. அவர்கள் வெளிப்படையாக உண்மையை ஒத்துக்கொள்வதால் நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் சொன்னார்கள், நாங்கள் இந்தத் தலைமையின்கீழ்தான் நடக்கிறோம், வேறு யார் கீழும் நடக்கவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். மற்றவர்கள் எல்லாம் பேரவைத் தலைவரை விட்டு விட்டு வேறு தலைவரின்கீழ் நடப்பதைப்போன்று அவர்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் மாசு கற்பிக்கும் வகையிலே பேசினார்கள் . . .

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். நண்பர் அவர்கள் மாண்புமிகு அங்கத்தினர் திரு. கே. எம். எஸ். அவர்கள் கூறாதவற்றையெல்லாம் கூறுகிறார்கள். திரு. கே. எம். எஸ். அவர்கள் இதுபோன்ற கருத்துக்களை இங்கே தெரிவிக்கவில்லை. தெரிவிக்காத கருத்துக்களை, தெரிவித்ததாகக் கற்பனை செய்துகொண்டு கூறுவது சரியா ?

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இங்கே பதிவு செய்யப் பட்டிருக்கிறது. அதைத்தான் கூறுகிறேன். தலைவரைக் குறிப்பிட்டு உங்கள் ஒருவரைத்தான் நாங்கள் தலைவராக ஏற்றுக்கொள்கிறோம், வேறு யாரும் இல்லை என்று . . .

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தலைவரைப் பார்த்து உங்களைத் தலைவராக ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்வதால் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதாகப் பொருளை உண்டாக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : இதை என்னைப்போன்ற இந்த அவையில் உள்ளவர்கள் புரிந்து கொள்கிறோம், ஆனால் புரிந்து கொள்ளாதவர்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. ஆகவே, அருமைத் தலைவரவர்களே, இந்த அவையிலே நாங்கள் ஒரு மாண்பைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது, எனவே, அவர்கள் சொன்ன கருத்தை நான் தங்களுக்குத் தெரிவிப்பதற்காகச் சொன்னேன், தங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அவையிலேயிருக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் அந்த நாற்காலிக்கு, தாங்கள் அமர்ந்

திருக்கின்ற கண்ணியம் மிக்க, மாண்புமிக்க அந்த நாற்காலிக்கு எவ்வளவு பெரியவர்களாகயிருந்தாலும் தலைவணங்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்று உறுப்பினருக்குக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். அமைச்சரவர்களைச் சாட வேண்டுமென்பதற்காக . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கூடியவரைக்கும் உறுப்பினர்கள் பேசும்பொழுது அவைத்தலைவரை விவாதத்திற்கு இழுக்கவே கூடாது. அவைத் தலைவருக்கு நாங்கள் எல்லோரும் விசுவாசமாக இருக்கிறோம் என்பதையெல்லாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அது உறுப்பினர்களின் கடமை. இப்பொழுது நடப்பதோ கூட்டுறவுபற்றிய விவாதம். அதில் இவ்வளவு வேறுபாடுகள் இருக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆகவே, அருமைத் தலைவரவர்களே, தங்கள் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவைத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக இதைச் சொன்னேன். அதற்காகத் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். இந்தக் கூட்டுறவு இலாக்கா கூட்டு உறவுக்குத்தான் இருக்க வேண்டும், அவர்கள் காலத்தில் இருந்ததுபோல் கூட்டு விரோதத்திற்குப் பயன்படுத்தக்கூடாது, அதைத் தகர்த்தெறிய வேண்டுமென்பதற்காக இந்தக் கருத்துக்களை அமைச்சரவர்களுக்குச் சொன்னேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சுருளிவேல் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய கூட்டுறவு அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இரண்டாவது சட்ட திருத்த மசோதாவின்மீது பேசுகின்ற வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் பெரிதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய இருபதாண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில் புறக்கணிக்கப் பட்டிருந்த ஒரு கிராமத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் இந்த மசோதாவின்மீது பேசுவது மட்டுமல்லாமல், பேசுகின்ற நேரத்தில் தமிழக அரசுக்கும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரவர்களுக்கும் கிராமமக்களின் சார்பாக, நலிந்து கிடந்த கிராம மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதை என்னுடைய கடமையாகக் கருதுகின்றேன்.

1967-க்குப் பிறகு தமிழினத்தைத் தட்டியெழுப்பிய தானைத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகுதான் இந்தக் கூட்டுறவுத் துறை நாட்டு மக்களுக்காக இருக்கிறது, நாட்டிலே நலிந்துகிடக்கும், நம்பிக்கையற்றிருக்கக் கூடிய கோடானுகோடி ஏழைமக்களுக்காக இருக்கிறது என்ற நம்பிக்கை, ஒரு எண்ணம் இந்த நாட்டிலே பரவியது என்று சொன்னால் அது மிகையாகாது. * * தங்களுடைய ஆட்சிக்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

காலத்தில் கூட்டுறவுத் துறையை நிறுவியபொழுது கூட்டுறவே நாட்டுயர்வு என்ற கோஷத்தை எழுப்பியது. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கூட்டுறவால் நாடு உயர்வு அடையவில்லை காங்கிரஸ் தனவான்களின் வீட்டு உயர்வு ஏற்பட்டது என்பதை எல்லோரும் நன்ருக அறிவார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, It amounts to an insinuation against a party as such. It is irrelevant to the debate.

ஆகையால் அவர்களை, காங்கிரஸ் தனவான்களின் வீட்டு உயர்வு ஏற்பட்டது என்று சொன்னல், சாமியப்ப முதலியார் காங்கிரஸ் கிடையாது, தளவாய் முதலியார் காங்கிரஸ் கிடையாது. இப்படி பி. டி. ராஜன் பிரதர் காங்கிரஸ் கிடையாது. எனவே வீட்டுயர்வு என்று சொன்னல் அது புறம்பானது.

It is irrelevant to the debate and also he cannot substantiate it.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவாக இந்த மசோதாவிலே பேசும்பொழுது கனம் உறுப்பினர்கள் ஓரளவு மசோதாவைத் தாண்டி வெளியே பேசும்பொழுதுதான் இந்த விவகாரங்கள் வருகின்றன. ஆகவே, கூடியவரையில் மசோதாவின் மீது பேசுங்கள்.

திரு. மு. சுருளிவேல் : மசோதாவின் எல்லைக்கோட்டைத் தாண்டி நான் செல்லவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தலைவர் தீர்ப்பின்மீது அபிப்பிராயம் சொல்லக்கூடாது.

The hon. Member is not entitled to say that.

திரு. மு. சுருளிவேல் : இன்றைய மசோதாவின்மீது பேசும் பொழுது இந்த அமைச்சரவை, அதனுடைய அமைச்சர் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவின்மீது பேசும்பொழுது இந்த மசோதாவினல் விளையக்கூடிய நன்மைகளையும், கடந்த காலத்தில் இந்தத் துறை ஆற்றியிருக்கும் பணிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் இந்த மசோதாவினல் ஏழைகளுக்கு வாய்ப்புகளை உண்டாக்க முடியும். இருபதாண்டுக்கால வரலாற்றில் இருந்ததை விட என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென் பதற்காகச் சொன்னேனே தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு பகுதியிலேயும் இருக்கும் பெரிய மனிதர்கள், கிராமங்களில் இருக்கும் நிலப்பிரபுக்கள் தங்களுடைய வசதிகளுக் காகவும், தங்களுடைய உறவினர்களின் வசதிகளுக்காகவும் எந்தெந்த வகையில் எல்லாம் தவருன வழிகளில் எல்லாம் யார் யார் பெயரையோ போட்டு கடனை வாங்கி, தங்களுடைய குடும்பங்களை, தங்களுடைய வாழ்க்கை வசதிகளை, தங்களுடைய பொருளாதார நிலைகளை இருபதாண்டுக்காலமாக பிரம்மாண்டமான முறையில் வளர்த்திருக்கிருர்கள் என்பது நாடறிந்த ஒன்ருகும், நாமும்

நன்கறிவோம். அதைத்தான் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் இரண்டு திங்களுக்கு முன்பு மதுரையில் நடை பெற்ற முகவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பொன் விழாவில் மிகவும் சிறப்பாகவும், மிகவும் பொருத்தமாகவும் குறிப்பிட்டார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்களில் இருப்பவர்கள், அதை நிர்வகிக்கின்றவர்கள், அதனுடைய தலைவர்கள் காகங்களைப் போல வாழவேண்டாம், மேகங்களைப் போல வாழுங்கள் என்று சுட்டிக் காட்டினர்கள். மேகங்கள் ஒன்று கூடுகின்றன, மேகங்கள் ஒன்றுகூடி மழையைப் பொழிந்து நாட்டிலே இருக்கும் வறட்சியைப் போக்கி, வாழ்வற்ற மக்களுக்கு ஒரு வளமான வாழ்வைத் தருகின்றது. ஆனல் காகங்கள் ஒன்றுகூடி தங்களுக்குக் கிடைத்த உணவைத் தங்களுக்குள்ளேயே பகிர்ந்து கொள்கின்றன. அதைப்போல், கூட்டுறவு ஸ்தாபனங்களில் இருப்பவர்கள் மேகங்களைப்போல ஒன்றுகூடி நாட்டுமக்களுக்கு நன்மைகள் செய்யும் முறையில், ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்கும் முறையில், நலிந்து கிடக்கும், நம்பிக்கையற்றிருக்கும் மக்களுக்கு வாழ்வளிக்கும் முறையில் அந்த மேகங்களைப்போல வாழுங்கள், அப்படியில்லாமல் கூட்டுறவுத் துறையில் உள்ள பணத்தைத் தங்களுக்குள்ளேயே பகிர்ந்துகொள்ளும் நிலைமையை ஏற்படுத்தா தீர்கள் என்று நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மதுரையிலே பொருத்தமாகக் குறிப்பிட்டார்கள்.

இந்தத் துறை ஏற்பட்ட பிறகு, 1967-க்குப் பிறகு அமைந்த அரசியல் முன்னேற்றத்தின் காரணமாக இந்த அமைச்சரவை வந்ததற்குப் பிறகு, அதிலும் குறிப்பாக மாண்புமிகு நம்முடைய அமைச்சரவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்ற பிறகு இன்றையதினம் கிராமங்களில் ஒரு புதிய எழுச்சி, புதிய உணர்ச்சி ஏற்பட் டிருப்பதைக் காண்கிறேம். கூட்டுறவு ஸ்தாபனம் என்பது ஏதோ சில ஏகபோகவாதிகளுக்கும், முதலாளித்துவ வர்க்கத்திற்கும், கிராமங்களில் ஆதிக்கம் செலுத்தும் நிலப்பிரபுக்களுக்கும் மட்டும் சொந்தம் அல்ல, இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் சொந்தம் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலுள்ள குடும்பங்கள் அதிலிருந்து உதவியைப்பெற்று தங்கள் வாழ்க்கையை வளமாக்கி, இருளை அகற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை 1967-க்குப் பிறகுதான் ஏற்பட்டது. இதை காங்கிரஸ் நண்பர்கள் வேண்டுமானல் மறுக்கலாம். ஏனென்றல் இதை அவர்கள் ஒப்புக் கொண்டால் 20 ஆண்டுக்காலமாக தவறு செய்தோம் என்பதை ஒப்புக்கொண்டதாகிவிடுமே என்பதால் மறுக்கலாம். ஆனல் இந்த நாட்டிலேயுள்ள மக்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒவ்வொரு தொண்டனும் அதை இன்றைக்கு மறுக்க மாட்டார்கள். இன்றைய தினமும் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. இதற்கு முன்பு கூட்டுறவு ஸ்தாபனத்தை நிர்வகித்து வந்தவர்கள் இன்றைக்கு அந்த ஸ்தாபனங்களுக்குத் தாங்களே தலைவராக யில்லாமல், பின்னலிருந்து கொண்டு தங்களுக்கு வேண்டிய ஒருவரைப் பதவியிலே வைத்து, பொம்மையாக வைத்துக்கொண்டு

கொள்ளையடிக்கும் நிலைமை இன்னும் நாட்டில் சில பகுதிகளில், குறிப்பாக என்னுடைய போடிநாயக்கனூரில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு ஸ்தாபனங்களிலே தங்களுக்கு வேண்டிய ஒருவரை, தங்கள் சொற்படி கேட்கக்கூடிய ஒருவரை, தங்களுடைய பொம்மையாக இருக்கக்கூடிய ஒருவரை போட்டு பல தவறுகளைச் செய்து கொண்டிருந்த நிலையைத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும், அந்தத் தவறுகள் களையப்பட வேண்டுமென்ற முறையில் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதற்காக அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். அந்த முறையில் சிறப்பாக காரியமாற்றி வரும் கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்கு கிராமங்களின் சார்பாக நான் நன்றி சொல்லாவிட்டால் அது தமிழ் கலாசாரத்திற்கு, தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொறுத்தமானதாக இருக்காது. இருபது ஆண்டுக் காலமாக ஏழை மக்கள் வாழ்க்கை வசதிகளைப் பெற முடியாத நிலையில், கடவுளால் கொடுக்கப்பட்ட மனிதனின் மூன்று அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு—ஏழை கிராம மக்கள் மாட மாளிகைகள் வேண்டுமென்றோ, பன்னீரில் குளிக்க வேண்டுமென்றோ, பழரசம் அருந்த வேண்டுமென்றோ கேட்கவில்லை—ஏற்ற வகையில் திட்டங்களைத் தமிழ் நாட்டில் நிறைவேற்றுவதற்காகக் கூட்டுறவு அமைச்சர் கொண்டு வந்திருப்பதற்காக கிராம மக்கள் சார்பாக அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து—இந்த அமைச்சரவையும் பல்லாண்டு காலம் இருக்கப் போகிறது—இது போன்ற அரிய திட்டங்களைத் தீட்டி நாட்டு மக்களுக்கு வாரி வழங்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது உபயோகித்த * * என்ற வார்த்தையை எடுத்துவிடுமாறு கட்டளையிடுகிறேன். இதைப் பத்திரிகையிலும் வெளியிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சட்ட முன்வடிவின் மீது நடந்த விவாதத்தில் பரந்த கருத்துக்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதற்காக நான் மிகவும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். எல்லாவற்றுக்கும் பதில் சொல்லுவதாக இருந்தால் அவர்கள் எல்லோரும் எடுத்துக் கொண்ட நேரத்திற்கும் அதிகமாக ஆகும். ஆகையால் குறிப்பாக இரண்டொன்றை மட்டும் பதில் சொல்ல எடுத்துக் கொள்ளுகிறேன்.

நண்பர் அழகர்சாமி அவர்கள் நேற்றுப் பேசினார்கள். அவர்கள் இப்போது இங்கு இல்லை. அவர்கள் எல்லாம் அமைச்சர் என்ன பதில் சொல்லுகிறார் என்று கேட்டால் நல்லது. இப்போது கோவாப்பரேட்டிவ் யூனியன்—தமிழில் கூட்டுறவாளர்கள் கழகம் என்று ஏற்படுத்தியிருப்பதன் காரணமாக கடன் பெறுவதிலே

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

அதிகக் காலதாமதமாகும் என்று சொன்னார்கள். மேலும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிற வாய்ப்பு அதிகரிக்கும் என்று சொன்னார்கள். இப்படி எல்லாம் சொல்லும்போது நான் கூட்டுறவாளர் கழகத்தைப் பற்றி இப்படிப்பட்ட அபாண்டங்களைச் சொல்லுகிறார்களே என்று திகைத்துக் கொண்டு இருந்தேன். எதைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வேறு எதையோ நினைத்துக் கொண்டுதான் இந்த இடத்திலே இடிக்கிறார்கள் என்று திகைத்துக் கொண்டிருந்தேனே, தவிர குறுக்கிட விரும்பவில்லை. அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் பேசத் துவங்கிய பிறகுதான் இந்தக் குழப்பம் எங்கே இருக்கிறது என்பது எனக்குத் தெரிந்தது.

அவர்கள்

'There are also Supervisory Unions and co-operative business will be done by the Union'

என்று சொன்னார்கள். அதற்குப் பிறகுதான் எனக்கு நண்பர் கே. எம். சுப்பிரமணியம் அவர்களும், அவர்களுக்கு முன்னால் பேசிய நண்பர் அழகர்சாமி அவர்களும் ஒரு தவறான கருத்தின் அடிப்படையில் பேசுகிறார்கள் என்பது தெரிந்தது. ஏற்கனவே சூப்பர்வைசரி யூனியன் என்று இருந்து கொண்டிருக்கிறது. அந்த சூப்பர்வைசரி யூனியன்கள் இனி நடைபெறமாட்டா. அவைகளை எல்லாம் லிக்விடேட் பண்ண நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மசோதாவில் இருக்கக்கூடிய கோவாப்பரேட்டிவ் யூனியன்—கூட்டுறவாளர்கள் கழகம் என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பரந்தாமன் அவர்கள் விளக்கினார்கள்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் ஏற்கனவே ஒரு யூனியன் இருக்கிறதே, அப்படியானால் இன்னொரு யூனியன் எதற்கு என்ற முறையில் அவர்கள் எல்லாம் ரொம்ப காரசாரமாகக் கேட்டபோது குறுக்கிடுவதற்கு எனக்கு அச்சமாக இருந்தது. முன் கூட்டியே மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களைப் பார்த்து, 'நான் பேசும்போது யாரும் குறுக்கிடக் கூடாது; குறுக்கிடுவதாக இருந்தால் ஸ்பீக்கர் மட்டுந்தான் குறுக்கிடலாமே தவிர, எந்த அமைச்சரும் குறுக்கிடக்கூடாது' என்று சொன்னார்கள். நானும் சற்று அச்சத்தோடு கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையில் கேட்டுக் கொண்டிருந்தேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, on a point of clarification. I have never stated that any Hon. Minister cannot interfere. I have stated that he can interfere but he cannot control me. Whether I am within the law has to be decided by the Hon. Speaker only. I always welcome interference. I always welcome correction. I always welcome education.

MR. DEPUTY SPEAKER : Ministers have got a right to intervene.

THIRUMATHI JOTHI VENKATACHELLUM : Sir, on a point of clarification. Hon. Ministers have got a right to interfere. We agree, but when hon. Members from the Opposition are speaking, many Hon. Ministers give a ruling on what they could speak and how they should confine their speeches and, that is the power of the Hon. Speaker to say and give a ruling, and not the Hon. Ministers to say. That is what the Hon. Member means.

MR. DEPUTY SPEAKER : No Minister can give a judgment and no Minister can order a Member.

* *மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :* தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதைத் தவருகச் சொல்லிவிடக் கூடாது என்று எண்ணி இங்கே எழுதி வைத்திருக்கிறேன். 'No Member should interfere' என்று சொன்னர்கள். அமைச்சர்களும் உறுப்பினர்களாக இருக்கும் காரணத்தால் சொன்னர்கள். அதனல் அவர்கள் தவருகச் சொல்லிக் கொண்டு போனபோதும், சரி, கேட்டுக் கொள்ளலாம். சகித்துக் கொள்ளலாம் என்று சகித்துக் கொண்டிருந்தேனே தவிர வேறல்ல. அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த நேரத்திலாவது அவர் மகிழ்ச்சியோடு இருக்கும்போது நாம் ஏன் குறுக்கிட வேண்டும் என்பதற்காகத்தான் குறுக்கிட வில்லையே தவிர வேறில்லை. சூப்பர்வைசரி யூனியன் என்பது வேறு, இன்றைக்கு மசோதா வந்திருப்பது வேறு. இப்போது வந்திருப்பது கூட்டுறவாளர் யூனியன்—கோஆப்பரேட்டிவ் யூனியன் என்று போட்டிருப்பதற்குக் காரணம் அகில இந்தியாவிலும் அப்படி உபயோகித்திருப்பதுதான். கூட்டுறவாளர் கழகம் அமைத்திருப் பதற்கு என்ன காரணம் என்பதை நண்பர் பரந்தாமன் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறர்கள்.

கூட்டுறவின் நன்மைகளைப் பற்றி, கூட்டுறவு இயக்கம் விவசாயி களுக்குச் செய்யக்கூடிய பல முன்னேற்றமான காரியங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல ஏற்பட்ட சங்கம் இது. மதுராந்தகத்தில் 1968-ம் ஆண்டு தாலுகா வட்டாரக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதைப் பார்த்தவர்களுக்கு நன்ருக நினைவு இருக்கலாம். அதற்கு அமைச்சர்கள் வந்திருந்தார்கள். ஏழு நாட்கள் நடந்தது. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பரந்தாமன் அவர்கள் கூட வந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அப்போது அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்து ஒரு கருத்தை நன்ருக எடுத்துச் சொன்னர்கள்.

கூட்டுறவுத் துறையில் பிரசாரம் செய்வது என்பது மாவட்ட அளவில் மட்டும் இருந்தால் போதாது, மாவட்டத் தலைநகரங்களிலே பிரசாரம் செய்தால் மட்டும் போதாது, வட்டத்தின் அளவிலே பிரசாரம் செய்ய வேண்டும் ; இதனல் கிடைக்கக்கூடிய நன்மைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று சொன்னதற்கு இணங்கத்தான் கூட்டுறவாளர் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

நண்பர் வகாப் அவர்கள் நல்ல முறையில் இதைப் பற்றி எடுத்துச் சொன்னர்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு கருத்துக்களைச் சொன்னர்கள். மக்கள் கடன் வாங்குவதற்குத் தெரிந்து கொண்டிருக்கிறர்களே தவிர, கடனைத் திருப்பிக் கொடுக்கத் தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னர்கள்.

என்னுடைய குறை மக்கள் கடன் வாங்குவதற்குத் தெரிந்து கொள்ளவில்லையே என்பதுதான். அதுதான் நான் வருத்தப்பட்டுக் கொள்வது. ரிசர்வ் பாங்குக்கு, சென்று போன ஆண்டு, மக்களுக்கு கடனுகக் கொடுக்கப் பெற்றுவந்த தொகையை மக்கள் பெற்றுக் கொள்ளாததால், அந்தப் பணத்தைக் கொடுக்காத காரணத்தால், அபராதம் செலுத்த நேரிட்டது என்பது உங்களுக்கு ஒருவேளை தெரியாமல் இருக்கலாம்.

2—11—71-ல் இருந்து ஒரு புதுமுறை வந்திருக்கிறது. உலக வங்கியோடு நம் மாநில அரசும் மத்திய அரசும் இங்குள்ள நிலவள வங்கியும் கையெழுத்திட்டு இன்ன வகையில், இன்ன வழிவகையில் தான் இந்தக் கடனைக் கொடுக்கவேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. World Bank agreement has come into force from 2nd November. அந்த வகையில்தான் வாங்கவேண்டு மென்று இருப்பதால் என்ன ஒப்பந்தம், என்ன வழிவகை என்று கண்டுகொண்டால்தான் அரசு விவசாயிகளுக்கு ஒதுக்கிவைக்கிற அல்லது பெற்றுத் தருகிற பணத்தைப்பெற நல்ல வாய்ப்பாக இருக்கும்.

திரு. சுரேந்திரன் அவர்கள் நல்ல கருத்தை எடுத்துக் கூறினர்கள். பங்குதாரர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டுமே தவிர வெளியார் தலையீடு இருக்கக்கூடாது என்று சொன்னர்கள். அதை வரவேற்கிறேன். பங்குதாரர்கள் ஒருவருக் கொருவர் இந்தக் கூட்டுறவுத்துறையில், உதவி செய்து கொள்ள வேண்டும், வெளியார் தலையீடு இருக்கக்கூடாது, என்பதை முழுக்க முழுக்க நான் ஏற்றுக்கொள்கிறேன். இதில் என்ன வருகிறது என்ருல், பெரும்பான்மை பங்குதாரராக அரசு இருப்பதால்தான், பங்குதாரர்கள ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டுமென்ற முறையில், ஏனைய பங்குதாரர்களுக்கு உதவ முன்வருகிறது. அது தவிர வெளியார் தலையீடு கிடையாது என்று நான் விளக்கமாகச் சொன்னேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக் கிருர்கள். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர் என்று கூறி அதை முடிக்காமல்விட்டுவிட்டார்கள். அதை நான் முடிக்க விரும்புகிறேன். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும். கூட்டுறவில், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதற்கு இடமேயில்லை என்பதற்கு அவர்கள் எடுத்துச்சொன்னதே சான்ருகும். அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிருர்கள். அவர்கள் ஒரு வக்கீல்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். திருத்தம் அவை முன் இப்போது இல்லை. இப்போது ஜெனரல் டிஸ்கஷன்தான் நடக்கிறது. ஆகவே, திருத்தம் வரும்போது அமைச்சர் அவர்கள் அதைப் பற்றிக் கூறினால் நன்றாகயிருக்கும்.

MR. DEPUTY SPEAKER : He is only referring to it. He is not going into details.

THIRU J. JAMES : Sir, I did not refer to my amendment.

MR. DEPUTY SPEAKER : He is just referring to it. He is not going into details.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அவர்கள் கொடுத்துள்ள திருத்தம், பதிவாளர் ஏதாவது அறிவுரை சொல்லலாம், ஆனால் அந்த அறிவுரைப்படி சங்கங்கள் நடக்கவேண்டியதில்லை என்பதாகக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பற்றிப் பிறகு பேசலாம் என்று சொல்கிறார்கள். அதையும் இப்போதே பேசி விட்டால் சீக்கிரமாக முடித்துக்கொள்ளலாம், வேறு மசோதாக்கள் இருக்கின்றன. ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். இந்தக் கிளாஸ் மஹாராஷ்ட்ரா ஆக்டில் இருக்கிறது.

The clause has been taken from the Maharashtra Act. Delete the words " shall be bound to comply with such directions " உறுப்பினர் சொல்கிறார்.

இதை எடுத்தால் என்ன ஆகும் ? அறிவுரை சொல்லி என்ன பயன் ? அறிவுரைப்படி நடக்கமேண்டுமென்று இல்லாமல், வெறும் அறிவுரை சொல்லலாம் என்று சொல்வதை விட, அறிவுரை சொல்லாமலேயே இருப்பது நல்லது. திரு. லத்தீப் அவர்கள் இன்று மிக நன்றாகப் பேசினார்கள். (சிரிப்பு). அவர்கள் பேசியதைக் குறித்து பாராட்டுவதைவிட பேசாமல் விட்டுவிட்டதைக் குறித்து நான் அதிகமாகப் பாராட்டுகிறேன். கூட்டுறவுத் துறை என்றால் ராபரி, ராபரி என்று, திருட்டு, திருட்டு என்று விடாமல் சொல்லிக் கொண்டு வருகிறவர்கள் இந்த அளவோடு விட்டுவிட்டு முன்னால் ஏதாவது நடந்திருந்தால் நடந்திருக்கலாம், இதைக் குறித்துக் சொல்லவில்லை என்று நன்றாகச் சொன்னார்கள். அதற்காக நான் அவர்களுக்கு மிக்கக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன். அந்த எண்ணம் இன்னும். . .

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். முன்னாடி வேண்டுமானால் நடந்திருக்கலாம் என்பது It is an insinuation against our Government. அவர் ரொம்ப க்ளெவராக முன்னாடி வேண்டுமானால் ராபரி நடந்திருக்கலாம், இப்போது இல்லை என்று சொன்னால் என்ன அர்த்தம் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அர்த்தம் என்னவென்று கேட்டார்கள். அந்த அர்த்தத்தைச் சொல்கிறேன். முன்னால் கூட்டுறவுத் துறையில் மிஸ்அப்ரோப்ரியேஷன், கையாடல்கள் நூற்றுக்கணக்காக நடந்தது அதற்கென்று போலீஸில் ஒரு தனிப்

பிரிவு ஒன்றை ஏற்படுத்தினோம், 1967-ல். அதற்குப் பிறகு இன்று எவ்வளவோ கையாடல்களை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மன்னித்து விட்டிருக்கிறார்கள். மன்னித்துவிட்ட பிறகும் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் எடுத்துக்கொண்டால் க்ரிமினல் வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன 106 பேர்கள் மீது. இவையெல்லாம் முன்னால் நடந்தவை என்று சொல்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : 67-க்குப் பின்னரும் அடிக்கடி மிஸ்அப்ரோப்ரியேஷன் நடப்பதை பத்திரிகைகளில் இருந்து பார்க்கிறோம். காங்கிரஸ் ஆட்சியில் நடந்தது என்றால், அதற்குப் பிறகு எவ்வளவோ பண்டகசாலைகளை மூடியிருக்கிறார்கள், எவ்வளவோ குற்றங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். முன்பு இருந்ததை இவர்கள் ஏதோ திருத்திவிட்டமாதிரியாகப் பேசுகிறார்கள். திருடியிருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது தானே ? இல்லையென்றால், திருடர்களுக்கு துணை போகிறீர்களா நீங்கள் ? அவர்கள் சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தத் தேர்தலுக்கு முன்னால் அம்மையார் அவர்கள் இந்த மன்றத்தில் இல்லாத நேரத்தில் இதுபற்றிக் கேள்வி வந்தது. ஏன் மன்னித்துவிடவேண்டும் என்று ? அப்போது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னார் இன்னாரையெல்லாம் மன்னித்து விட்டிருக்கிறோம், சட்ட மன்ற உறுப்பினராக இருந்தவரைக்கூட, அண்ணா அவர்களிடம் வந்து மன்னிப்பு எழுதிக் கொடுத்ததால் மன்னித்திருக்கிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். ஏன் மன்னிக்கவேண்டும், மன்னிக்காமல் இருந்துவிடலாமே, என்று சொன்னால் தண்டிக்கக் கடமைப்பட்டவர்கள், அரசு நடத்துபவர்கள் அதே சமயத்தில் justice should be reasoned with mercy என்ற வகையில் அதோடு கருணையும் வேண்டும் என்ற அளவிற்கு கருணை காட்டிய பிறகு ஒரு மாவட்டத்தில் மட்டும் இவ்வளவு இருக்கிறது என்றால் நீங்களே கணக்குப் பார்த்துக் கொள்ளலாம்.

இப்போது ஏதாவது தவறுகள் நடக்குமானால், நான் நண்பர் லத்தீப் அவர்களைக் கேட்பேன். அவர்கள் ஒளிவுமறைவு இல்லாமல் இன்ன இன்ன இடத்தில் இன்னின்ன தவறுகள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்வார்களேயானால், அவர்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டவர்களாவோம். அப்படி ஏதாவது இருந்தால், பாகுபாடின்றி கட்சி மாச்சரியம் இல்லாது, யார் என்று பாராது, பரிவில்லாமல், தவறு செய்தவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்பதை நான் உறுதியாகச் சொல்ல முடியும்.

திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு இன்னொன்று சொல்லிக்கொள்கிறேன். எவ்வளவோ முறை சொல்லிச் சொல்லிப் பார்க்கிறேன். இப்போதே யூனியன் என்று ஒரு அமைப்பு இருக்கிறது—சூப்பர்வைஸரி யூனியன். சென்ட்ரல் பாங்க் கடன்களுக்கு பரிந்துரை செய்ய உரிமை இருக்கிறது அவர்களுக்கு. ஆனால் கூட்டுறவு யூனியன் என்பது கூட்டுறவாளர்கள் சங்கம். அவர்கள் அந்தக்

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1971 டிசம்பர் 15

கடன்களுக்கு பரிந்துரை செய்யமுடியாது. கடன் கொடுங்கள் என்று சொல்ல முடியாது. வட்டியைக் கூட்டுங்கள் அல்லது குறை யுங்கள் என்று சொல்ல முடியாது. கூட்டுறவாளர்கள் சங்கம் வேறு, சூப்பர்வைஸரி யூனியன் என்பது வேறு.

திரு. அழகர்சாமி அவர்கள் வந்திருந்து தலையை ஆட்டுவது மெத்த மகிழ்ச்சியாகயிருக்கிறது. முன்னரே அவர்களுக்குப் பதில் சொல்லிவிட்டேன். அதை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். சுருளிவேல் அவர்களும் சொன்னார்கள். புள்ளிவிவரங்களோடு காட்டமுடியும் என்று ஏற்கனவே நான் சொல்லிவிட்டேன்.

இன்ன கட்சி என்று நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கடந்த காலம் என்றால் முப்பது ஆண்டுகளுக்கு முன்னதாக நடந்தவை களும் கடந்த காலம்தான். கடந்த காலம் என்று குறிப்பிட்டது, வெள்ளைக்காரன் காலத்தில்கூட நடந்திருக்க முடியும். இன்ன கட்சி என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல—பாவம், இப்போதே காங். (ஓ) என்ற கட்சி மிகவும் நொந்து போயிருக்கக்கூடிய சம யத்தில்—வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்ச வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : கருணை காட்ட வேண்டிய அவ சியமில்லை. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குறிப்பிட்ட எந்த அர சையும் பற்றிச் சொல்லவில்லை. கடந்த காலத்தில் நடந்தது, இப் போது நடக்கவில்லை என்று சொல்கிறோம். அதற்குத் தகுந்த அமைப்புகளை முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

இப்போது நாம் அகில இந்தியாவில் இரண்டாவது என்று சற்று வாய் தவறுதலாக திரு. வகாப் அவர்கள் சொன்னார்கள். இன் றைக்கு எல்லா மாநிலங்களிலும் உள்ள மத்திய வங்கிகளின் நிலைமை களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, தமிழ்நாடு முதல்தரமாக இருக் கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக பல சான்றுகளை ரிசர்வ் வங்கி சொல்லியிருக்கிறது. நம்முடைய தமிழகத்தில் 16 கோவாபரேடிவ் வங்கிகள் இருக்கின்றன. அதில் ஒன்றுகூட வீக்கர் பாங்கு கிடை யாது. ரிசர்வ் பாங்கியிடமிருந்து 'வீக்கர் பாங்கு' என்று சொல்லி, அதற்கு வேண்டிய உதவிகூட நாம் பெற முடியாமல் இருக்கிறோம். அந்த மாதிரி நல்ல முறையில் இந்த 16 வங்கிகளும் இயங்கி வருகின்றன. இது ரிசர்வ் வங்கியாலேயே, அவர்கள் வைத்து இருக்கும் உரைகல்லாலேயே, சொல்லப்பட்டிருக்கிறது.

கோவாபரேடிவ் வங்கிகள் மட்டுமல்ல, ஸ்டோர்களும் அப்படித் தான். இந்தியாவிலுள்ள 16 முக்கியமான மாநிலங்களில் நமது தமிழகமானது முதலிடம் பெற்றுக்கொண்டு இருக்கிறது. மேலும் சிறப்புற பணியாற்ற உறுப்பினர்களின் பெருத்த ஆதரவு தேவை.

இப்போது புதிதாக உலக பாங்கிடம் நாம் செய்து கொண்டி ருக்கும் அக்ரிமெண்ட் காரணமாக, கிராமத்திலுள்ள மக்களுக்கு அதை எப்படி எப்படி உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டுமென்று

1971 டிசம்பர் 15] [திரு. சி. பா. ஆதித்தனார்]

விளக்கம் செய்யவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும் இதற்காக பிரசாரம் செய்யவேண்டியிருக் கிறது. அப்படி விளக்கம் செய்வதற்காக இந்த கூட்டுறவு யூனியன் கள் பயன்படும் என்று கருதுகிறேன். ஆகையால், நண்பர் அவர்கள் அவர்களுடைய திருத்தத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு இந்தச் சட்டமானது நிறைவேறுவதற்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(THIRU K. M. Subramaniam rose)

MR. DEPUTY SPEAKER : Under what rule is the hon. Member rising?

THIRU K. M. SUBRAMANIAM : After the Hon. Minister has given his reply, am I not entitled to ask a simple clarification?

MR. DEPUTY SPEAKER : All right.

THIRU K. M. SUBRAMANIAM : I would like to know why the Hon. Minister should use the words "பாவம்" and "நொந்துபோன" 24 lakhs of people have not done any பாவம் நொந்து போன 24 lakhs of people have voted for our party.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்லும் போது இன்னும் கொஞ்சம் 'ஸ்டிரைட்டாக' சொல்லியிருக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, ஏற்கெனவே ஒரு அமைப்பு இருக்கிறது. இந்த அமைப்பு எதற்காகத் தேவை என்று நான் கேட்டதாகக் கூறி னார்கள். நான் கூறியது என்னவென்றால், இப்போது இருக்கின்ற அமைப்புகளே போதாதா?
co-operative union means a society which has as its principal object the undertaking of co-operative educational propaganda and training. அதாவது, இந்த பிரின்சிபல் ஆப்ஜெக்ட்டை நிறை வேற்றுவதற்கு இப்போது இருக்கின்ற அமைப்புகளே போதாதா, என்பதுதான். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விளக்குவதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் விளக்கம் சொன்னாலும், அதைப் புரிந்து கொண்டாலும், புரியாதது மாதிரி திரும்பத் திரும்பக் கேட் டால் நான் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. நான் மீண்டும் சொல்கிறேன். புதியதோர் யூனியன் ஆரம்பிப்பது பிராபகேண்டா செய்வதற்காக, உலக வங்கியிடம் அரசு செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை எப்படி உபயோகப்படுத்திக்கொள்வது என்பதை எடுத்துச் சொல்வதற்காக. அதைத் தவிர அந்த கூட் டுறவு யூனியன்களுக்கு வேறு ஒன்றும் வேலையில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்போது இருக்கிற யூனியன்களே பிராபகேண்டா வேலையைச் செய்யக்கூடாதா, அதற் கென்று தனியாக ஒரு யூனியன் தேவையா? மாவட்ட, வட்ட

[திரு. சோ. அழகர்சாமி] [1971 டிசம்பர் 15

யூனியன்களுக்கு அவசியம் இல்லை என்று சொன்னேன். அவைகள் இப்போது பணவசூல்கூட செய்கின்றது. பிராபகேண்டாவைப் பொறுத்தவரையில் இப்போதுள்ள யூனியன்களையே அதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அப்படிச் செய்ய அரசு முன்வர வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : *தலைவரவர்களே, இப்போது இருக்கிற யூனியன்கள் வேலை செய்துகொண்டிருக்கின்றன. அது உண்மையே. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சென்டிரல் பாங்கு இருக்கிறது. அதற்கு ஒரு கிளை இருக்கிறது. அப்படி இல்லாத காலத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் பிராந்திய யூனியன்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம் வசூல் செய்யப்பட்டு வந்தது. இப்போது ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு கிளை இருக்கிறது. மதுரையில் 30-க்கு மேற்பட்ட கிளைகள் இருக்கின்றன. அந்தக் கிளைகள் மூலமாக இப்போது கடன் வசூல் செய்யப்படுகிறது. இப்போது அப்படிப்பட்ட கிளைகள் ஏற்பட்டு விட்ட காரணத்தினால் அந்த யூனியன்கள் இயங்கவில்லை. அரசு ஒவ்வொரு கிளைக்கும் ரூ. 10,000 வரையில் மானியம் கொடுத்து இருக்கிறது. அதை வைத்து மத்திய வங்கிகள் நேரடியாக இயங்குகின்றன. ஆகவே, இந்தப் பிரசாரம் செய்வதற்காக ஒரு யூனியன் தேவைப்படுகிறது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : *பேரவை முன்னுள்ள கேள்வி :—*

"தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியான ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது.

Clause 2.

MR. DEPUTY SPEAKER: The question is:—

"That Clause 2 do stand part of the Bill".

There are no amendments.

Clause 2 was put and carried.

Clause 3.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That Clause 3 do stand part of the Bill".

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I move the following amendment:—

"In clause 3 of the Bill, in new section 73-O (a) for the words "and training;" substitute the words "or training; or mobilisation of savings;"

1971 டிசம்பர் 15] [Thiru Sri Pa. Aditanar]

It adds only the mobilisation of deposits. That function is also intended to be given to the Union because at the time of Emergency, it is desirable that rural savings and rural deposits are collected to the maximum. This Co-operative Union being more or less an organisation in close touch with the public is the best suited instrument to mobilise the deposits.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: One small explanation. There is the Small Savings Department to mobilise rural savings. Why should the Co-operative Department step in?

MR. DEPUTY SPEAKER: We have an amendment by the hon. Member Thiru J. James. Let him move it.

THIRU J. JAMES: Sir, I move the following amendment:—

"In sub-section (2) of section 73 (Q) of the proposed new Chapter IX-C for the words "at such rate as may be provided in the by-laws of such Union", *substitute* the words "of not more than Rs. 10".

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I second the amendment.

திரு. ஜே. ஜேம்ஸ் : *தலைவரவர்களே, என்னுடைய திருத்தமானது யூனியனால் நிர்ணயிக்கப்படும் தொகை என்பதை நீக்கி விட்டு, அதற்குப் பதிலாக ரூ. 10 என்று திட்டவட்டமாக குறிப்பிட வேண்டுமென்பதாகும். எவ்வளவு தொகை கொடுக்கவேண்டுமென் பதை திட்டவட்டமாக குறிக்காமல் இருந்தால் வசூல் முறையில் சிக்கல் ஏற்படும். அதற்கு இடம் அளிக்காத வகையில் ரூ. 10 என்று நிர்ணயித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள் கிறேன்.*

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : *தலைவரவர்களே, ஒவ்வொரு சங்கத்திற்கும் நிரந்தரமாக பத்து ரூபாய் இருந்தால் போதும் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே அப்படி பை-லாவில் இருக்கிறது. எதற்காக இப்படி ஒரு குறிப்பிட்ட தொகை நிர்ணயிக்கப்படவில்லை என்றால், ரூ. 25,000 மூலதனம் போட்டு நடை பெறும் சங்கங்களும் இருக்கின்றன. ரூ. 80,000 மூலதனம் போட்டு நடைபெறும் சங்கங்களும் இருக்கின்றன. இரண்டு சங்கங்களுக்கும் ரூ. 10 தான் என்று வைத்தால் அது சட்டத்திற்கும் பொருந்தாது, உண்மைக்கு புறம்பானது, அரசியல் சட்டத்தில் கூட ஏற்றுக்கொள்ள முடியாதது, சமத்துவத்திற்கு கொஞ்சமும் ஒவ்வாதது. ஆகவே, நடைமுறை சிக்கல்களை ஒட்டி இந்தத் தொகையை நிர்ணயம் செய்யாமல் இருக்கிறோம். அந்தந்த யூனியன் இந்தத் தொகையை நிர்ணயித்துக்கொள்ள பை-லாவில் இடம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

THIRU J. JAMES : I am not pressing my amendment, Sir.

The amendment was by leave withdrawn.

MR. DEPUTY SPEAKER : I shall now put the Government amendment to vote.

The question is—

" In Clause 3 of the Bill, in new section 73-0 (a) for the words " and training; ", *substitute* the words " or training; or mobilisation of savings."

The amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

Clauses 4, 5 and 6 were put and carried.

Clause 7.

MR. DEPUTY SPEAKER : The question is—

" That Clause 7 do stand part of the Bill ".

THIRU J. JAMES : Sir, I move the following amendment :—

" In sub-section (1) of the proposed new section 119-A of the new Chapter IX-C, delete the words " shall be bound to comply with such directions ", occurring at the end.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I second the amendment.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ஏற்கெனவே, அமைச்சர் அவர்கள் அந்த மசோதாவிற்கு விளக்கம் கூறுகின்றபோது இந்தத் தீர்மானத்திற்கும் சேர்ந்து விளக்கம் கூறினார்கள். எனவே, தீர்மானத்தின் நோக்கம் என்னவென்றால், ஜனநாயக அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற கோவாபரேடிவ் துறையில் ஒரு ஏகாதிபத்திய முறை வரக்கூடாது. ரெஜிஸ்ட்ராருக்கு இந்த க்ளாஸ்படி கொடுத்திருக்கிற அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட ஒரு வாய்ப்பு அளிக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் தான் இந்தத் திருத்தத்தை கொடுத்திருக்கிறேன்.

அமைச்சருக்கு அனுபவத்திலிருந்து நன்கு தெரியும். பல்வேறு இடங்களில் அதிகாரங்களை எந்த முறையில் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதை நான் இங்கே அதிகம் எடுத்துக்கூற வேண்டிய அவசியம் இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், கன்யாகுமரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு பேங்கில் எந்த முறையில் இப்போது அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைப்பற்றிச் சொல்லலாம்.

ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்களில் செயலாற்றிக்கொண்டிருக்கின்ற முழு நேரக் காரியதரிசிகள், இதற்கு முன் இருந்த கூட்டுறவு வங்கியானது அங்கீகரித்த போதும் கூட இப்போது, புதிய தலைவர்கள் வந்து ஏற்கெனவே செயலாற்றிக்கொண்டிருக்கிற முழு நேர

நிரந்தர காரியதரிசிகள் மாற்ற வேண்டும், தான் நியமிக்கின்ற காரியதரிசியை ஏற்றுக்கொண்டாலொழிய நாங்கள் சங்கத்திற்குக் கடன் தரமாட்டோம் என்று கட்டுப்பாட்டை விதித்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் இம்மாதிரி அதிகாரத்தை வைத்துக்கொண்டு துஷ்பிரயோகம் செயவதால் கூட்டுறவுச் சங்கங்களின் சுதந்திரம் பாதிக்கப்படுகிறது. சுதந்திரமாக இயங்க வாய்ப்பில்லாமல் இருப்பதால், அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட வழியில்லாமல் மக்களுக்கு நன்மைகள் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் சுதந்திரமாகச் செயல்பட வழிவகை செய்கிறவகையில் மசோதா இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவர்கள் சொல்கிறார், ஒரு சங்கம் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறது என்று. அதாவது, அதற்குச் சுதந்திரமாக செயல்பட வாய்ப்பும் வசதியும் இல்லை, என்று. இதற்கு என்ன பொருள் ? துஷ்பிரயோகம் என்றால், அதிகாரத்தை தவறாக உபயோகப்படுத்துவது என்று நினைக்கிறேன்.. அப்படியானால், ஒரு சங்கம், எவ்வளவு தூரம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தாலும் அதற்கு அப்படிச் செய்ய வாய்ப்பும் வசதியும் கொடுக்க வேண்டும் என்று வாதிடுகிறார்களா ? நான் கூறுவது தவறு என்றால், பிறகு சொல்லுங்கள். ஒருவேளை, சங்கம் என்று சொல்லவில்லை, வங்கி என்று சொன்னேன் என்று சொல்லலாம். வங்கி என்று சொன்னாலும், சங்கம் என்று சொன்னாலும் ஒன்றுதான். அப்படி இல்லையா ? இல்லையென்றால் வேறு யார் ? சொல்லட்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவரவர்களே, நான் கூறியதெல்லாம், அதிகாரங்களை சிலருக்கு அதிகமாகக் கொடுத்தால், அவர்கள் துஷ்பிரயோகம் செய்ய வாய்ப்பு இருக்கிறது. அதன் காரணமாக சங்கங்கள் சுதந்திரமாகச் செயல்பட வாய்ப்பு இல்லாமற்போகிறது என்றுதான் கூறினேன். அதற்கு எடுத்துக்காட்டாக, கன்யாகுமரி ஜில்லாவில் இருக்கிற மாவட்ட மத்ய வங்கித் தலைவர் இந்த முறையில் செய்தார், அதனால், அதன் கீழ் செயல்படுகிற சங்கங்கள் சுதந்திரமாகச் செயல்பட வாய்ப்பில்லை என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதைத்தான் நானும் சொல்கிறேன். ஒரு சங்கத் தலைவர் துஷ்பிரயோகம் செய்கிறார் என்று சொல்கிறார். அப்படியானால் அவரை அப்படி சுதந்திரமாகச் செயல்படவிட வேண்டும் என்று சொல்கிறார்களா ? சொல்லுங்கள். அந்த மாதிரியான நிலைமை இருக்கக்கூடாது, துஷ்பிரயோகம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான், அதை நிரந்தரமாகப் போக்குவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. இந்த மசோதாவை நன்றாக வாசித்துப் பார்த்தால் தெரியும்.

ரெஜிஸ்டராருக்கு அதிகாரம் கொடுக்கப்படும்போது, அது பப்ளிக் இண்டரஸ்டில் தான் கொடுக்கப்படுகிறது. ஷேர்ஹோல்டரின் இன்டரஸ்டும் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, பல சங்கங்

1971 டிசம்பர் 15]

வதைத் தடை செய்ய அரசு முடிவு செய்துள்ளது. 1966-ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச வேளாண்மை விளைபொருள், கால்நடை அங்காடிகள் சட்டத்திலும் இத்தகைய விதித்துறை உள்ளது.

தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : There are two identical amendments and I allow Thirumathi T. N. Anandanayaki to move her amendment.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Mr. Deputy Speaker, Sir, I move the amendment standing in my name, namely—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both Houses consisting of . . members (. . . members from the Legislative Assembly and . . . members from the Legislative Council) to consider the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 and that the following members of the House be selected to serve on such a Joint Select Committee. (Names and number of members to be furnished later)."

THIRU J. JAMES : Sir, I second the amendment.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த வேளாண்மை விளைபொருள் விற்பனைத் திருத்த சட்டத்தை முழுமனதாக ஆதரித்து, இதில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டமானது இதற்கு முன்னாலேயே கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். இப்பொழுதாவது கொண்டுவந்திருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

விவசாயிகளுடைய உற்பத்திப் பொருள்களை, அவர்கள் விற்பனைக்காகக் கொண்டுச் செல்கின்ற நேரத்தில், அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்காமல் ஏமாற்றுக்காரர்கள், மோசடிக்காரர்களிடம் சிக்கிக்கொண்டு தத்தளிப்பதை நாம் ஒவ்வொருவரும் நன்றாக அறிவோம். அதற்கு முக்கியக் காரணம் இடையிலே இருக்கின்ற இடைத்தரகர்கள் தான். விவசாயிகளுக்கு உண்மையிலே கிடைக்கவேண்டிய லாபம் இந்த இடைத்தரகர்களால் பறித்துக் கொள்ளப்படுகிறது. பெரிய பெரிய கமிஷன் வியாபாரிகள் ஒரு விற்பனைக் கடையை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் அவர்களுடைய விளை பொருள்களை அந்தக் கடையிலே விற்பனைக்காகக் கொடுக்கிறார்கள். அன்று விற்பனை செய்ய முடியாவிட்டால், என்ன விலைக்கு விற்பனை செய்ய வேண்டுமென்று கேட்டு வைத்துவிட்டு, இரண்டு மூன்று நாட்கள் கழித்து வரச் சொல்கிறார்கள். இடையிலே அவர்கள் சொன்ன விலையை விட அதிகமாகிவிடுகிறது. கமிஷன் கடைக்

1971 டிசம்பர் 15] [திரு சோ. அழகர்சாமி]

காரர்கள் அந்தப் பொருள்களை ஏறிய விலைக்கே விற்றுவிட்டு, ஏழை விவசாயிகளுக்கு அவர்கள் சொன்ன விலையையே கொடுத்துவிடுகிறார்கள். அதில் கிடைக்கக்கூடிய லாபத்தைக் கடைக்காரர்கள் எடுத்துக்கொள்கிறார்கள்.

இப்போது அந்த விளைபொருள்களை ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அங்குதான் விற்பனை செய்யவேண்டுமென்று இருக்கிறது. விற்பனைக் கடைக்குப் பொருள்களை எடுத்துச் சென்றவுடன் அவர்கள் அதன் எடையைக் குறித்துக்கொண்டு அதற்கு ஒரு கமிஷனைப் போட்டு விடுகிறார்கள். பின் இரண்டு, மூன்று நாள் அந்தப் பொருள்கள் விற்கப்படாமல் தங்கிவிடுவதன் காரணமாக எடையில் சிறிது குறைந்துவிடுமானால் அதற்குள்ள விலையையும் குறைத்துத்தான் விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் அந்தப் பொருளை யார் வாங்குகிறார்களோ, அவர்களிடம் குறைந்த எடைக்கும் சேர்த்தே விலையைப் பெற்றுக் கொள்கிறார்கள். அதனால் பொருளை விற்பனைக்குக் கொடுப்பவர்களுக்கும் சரியான விலை கிடைப்பதில்லை. அந்தப் பொருளை வாங்குபவர்களுக்கும் சரியான விலைக்குக் கிடைப்பதில்லை. இந்தக் குறைகளைப் போக்க இந்த மசோதா நிச்சயமாக உதவும்.

அடுத்தாற்போல் இந்த மசோதாவை ஏற்றுக்கொள்கின்ற நேரத்தில் சில குறைபாடுகளைச் சொல்லக்கூடும். சிறு சிறு விவசாயிகளுக்கு இதிலே சில சங்கடங்கள் ஏற்படும். ஏனென்றால் பத்து மைல், பதினைந்து மைலுக்கு ஒரு மார்க்கெட்டிங் கூடம் என்று அமைப்பதனால் சிறு சிறு விவசாயிகளுக்குத் தங்களுடைய சொற்ப விளைபொருள்களை அவ்வளவு தூரம் கொண்டுபோய் கொடுப்பதில் காலதாமதமும், மற்றும் பல சிரமங்களும் ஏற்படும். பெரிய பெரிய பணக்காரர்கள் என்றால், ஏராளமானப் பொருள்களை வண்டிகளிலும், லாரிகளிலும் ஏற்றிச் சென்று சுலபமாகச் சேர்த்து விடுவார்கள். இந்தக் குறையினைப் போக்க மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். அதாவது ஆங்காங்கே குறைந்தது ஐந்து அல்லது ஆறு மைல் தூரத்திற்குள் ஒரு மார்க்கெட்டிங் கமிட்டி விற்பனைக் கூடத்தை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் சிறு சிறு விவசாயிகளுக்கும் விளை பொருள்களை சுலபமாகக் கொண்டு சேர்க்க வசதியாக இருக்கும். இப்போது ஒரு தாலுக்காவுக்கு ஒரு விற்பனைக் கூடம் என்ற அளவிலே அதாவது 20 மைல், 30 மைல் தூரத்தில் விற்பனைக் கூடம் இருக்கிறது.

இந்த மசோதாவின் நோக்கம் நல்ல நோக்கம். அதன் பயனை சிறு சிறு விவசாயிகளும், அனைத்துப் பிரிவினரும் அடையவேண்டுமென்றால் பத்து மைலுக்கு மேற்படாமல், 5 அல்லது 6 மைல் தூரத்திற்குள் ஒரு விற்பனைக் கூடம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை முழு மனதோடு ஆதரித்து, வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், வேளாண்மை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த விளைபொருள் விற்பனை திருத்த மசோதாவிலே உள்ள சில குறைகளைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் திரு. அழகர்சாமி அவர்கள் இந்த மசோதாவை முழு மனதாக ஆதரிப்பதாகச் சொன்னார்கள். கம்யூனிச கொள்கையை ஒட்டி இருப்பதால், அவர் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்ற முறையிலே இந்த மசோதாவை ஆதரித்திருக்கிறார்கள்.

நமது நாடு ஒரு ஜனநாயக நாடு, இந்த ஜனநாயக நாட்டிலே any state trading they invite என்றுதான் இருக்க வேண்டும். அது இல்லையென்றால் இது ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொள்வதிலே என்ன அர்த்தம் இருக்கிறது? உற்பத்திப் பொருள்களை இங்குதான் கொடுக்கவேண்டும். இங்குதான் விற்பனைச் செய்யவேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தம் இருக்கக்கூடாது. மக்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது. இதனால் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள். அவர்களும் இந்த நாட்டின் பிரஜைதான். வியாபாரிகள் எங்களிடம்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை.

Element of compulsion இல்லை. கட்டாயப்படுத்தாமல் மக்கள் விருப்பப்படியே விட்டுவிடுங்கள் என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் ஆந்திராவிலே கம்பல்ஷன் இருக்கிறது கம்பல்ஷன் இருந்தால்தான் வெற்றிபெற முடியும் என்று சொல்வார்கள்.

இந்த மசோதாவிலே உள்ள இப்படிப்பட்டக் குறைகளைப் போக்கி, நல்ல முறையிலே கொண்டுவர வேண்டுமானால் ஒரு பொறுக்குக் கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டிக்கு இந்த மசோதாவை அனுப்பிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி மார்க்கெட்டிங் கமிட்டி அமைக்கப்படுவதனால் என்ன நன்மை கிடைக்கப் போகிறது என்பது புரியவில்லை.

இன்றைக்கு நாட்டிலே ஏராளமான கமிஷன் கடைகள் இருக்கின்றன. ஈரோட்டிலே மஞ்சள் மண்டி; திருச்சி, வேலூரிலே வெல்லம் மண்டி, இராமநாதபுரத்திலே வத்தல் மண்டி இப்படிப் பல கடைகளை வைத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் என்ன கொள்ளை லாபமா அடித்துக்கொண்டிருக்கிறார்கள்? இல்லையென்றால் அங்கே விளைபொருட்களைக் கொண்டுபோய் கொடுக்கின்ற விவசாயிகள் ஏமாளிகளா? இல்லையே. ஆனால் சில இடங்களிலே கள்ள மார்க்கெட்காரர்கள் இருக்கிறார்கள். புரோக்கர்களை அதாவது இடைத்தரகர்களை நியமித்து, பொருள்களை குறைந்த விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்கிறார்கள். அவர்களை அரசாங்கம் கண்டு பிடித்து, ஒழிக்க வேண்டும். The middle man must be abolished.

அந்தக் காலத்திலே உள்ள விவசாயிகள் வேண்டுமானால் ஏமாளிகளாக இருந்திருப்பார்கள். ஆனால் இந்தக் காலத்து விவசாயிகள் ஏமாளிகள் அல்ல. காலையில் எழுந்தவுடனே ரேடியோ வைத்துக் கேட்டுக்கொள்கிறார்கள், அல்லது 'ஹிந்து' பத்திரிகையைப் புரட்டிப் பார்த்து விலை விபரங்களைத் தெரிந்துகொள்கிறார்கள். அதுவும் இல்லையென்றால் அடுத்த வீட்டுக்காரரைக் கேட்டுத் தெரிந்துகொள்கிறார்கள். இந்தக் காலத்து விவசாயிகள் அவ்வளவு விழிப்போடு இருக்கிறார்கள். மேலும் விழிப்போடு இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

இந்த நாட்டிலே உள்ள அத்தனை பேரும் பெரிய கமிஷன் கடைக்காரர்கள் அல்ல ; டாட்டா, பிர்லாவைப் போன்றவர்கள் அல்ல. சிறு சிறு வியாபாரிகள் இரண்டு லட்சம் பேர், மூன்று லட்சம் பேர் இருக்கிறார்கள். இந்தச் சிறு வியாபாரிகள் விவசாயிகளுக்கு அவர்கள் விளைவிக்கின்ற பொருள்களின்மேல் முன்னாலேயே கடன் கொடுத்து உதவி செய்து, பின்னால் கொடுத்தக் கடனுக்குத் தகுந்த விளை பொருள்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்த மசோதாவினால் அந்த வியாபாரிகள் ஒழிக்கப்படுகிறார்கள். அந்த வியாபாரிகள் இல்லையானால், சிறு விவசாயிகளுக்கு அவ்வாறு யார் கடன் கொடுப்பது, அதற்கு ஏதாவது மாற்றுப் பரிகாரம் கண்டிருக்கிறீர்களா?

கூட்டுறவுத் துறையிலே விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்வீர்கள். அங்கே போய் பணம் கேட்டால் 200 ரூபாய் 300 ரூபாய் கொடுப்பார்கள். அதிகமாகப் போனால் 500, 1000 ரூபாய் கொடுப்பார்கள். மழையில்லாமல் பயிர் காய்ந்து போனால் மறுமுறை கடன் கொடுக்கமாட்டார்கள். இதை வைத்துக்கொண்டு விவசாயிகள் எப்படி விவசாயம் செய்து வாழ்க்கை நடத்த முடியும்?

இடையில் தரகர்கள் கூடாது என்று சொல்வதை நான் வரவேற்கிறேன். ஆனால் உடனடியாக விவசாயிகளுக்கு மார்க்கெட்டிங் கமிட்டிகள் மூலம் கடன் கொடுக்க வழிவகை செய்திருக்கிறார்களா? கடன் கொடுத்து, பொருள்கள் வரும்போது அதை இதற்கு ஈடு கட்டிக்கொண்டு பாக்கித் தொகையை விவசாயிகளுக்கு அளிக்க விதிமுறைகள் ஏற்படுத்தியிருக்கிறார்களா? இதை எல்லாம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். மார்க்கெட்டிங் கமிட்டிகள் மூலம்தான் வியாபாரம் செய்யவேண்டும் என்கிறபோது இந்தத் துறையில் பெரிய பெரிய திமிங்கலங்களாக இருக்கக்கூடியவர்கள்தான் பயன் அடைவார்களே தவிர, சிறு சிறு விவசாயிகள், அல்ல. வியாபாரத்தில் மொனொபொலி என்பதே தவறானது. இன்றைக்கு சிறு சிறு விவசாயிகளுக்கு மண்டிக்காரர்கள் முன் பணம் கொடுத்து, பின்னே அட்ஜஸ் செய்து கொள்கிறார்களே அதற்கு இனி இடமிருக்காது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தரகு மண்டி என்கிற போது அதைப்பற்றி நன்கு தெரிந்துகொண்டு பேசவேண்டும். இன்றைக்கு இவர்கள் யாரும் முன்பணம் விவசாயிகளுக்குக் கொடுத்து அட்ஜஸ்ட் செய்வதில்லை. விவசாயிகள் மூட்டைகளைக் கொண்டு வந்தால் மூட்டைக்குப் பத்து பைசா விவசாயிகளிடம் இருந்து வாங்கிக் கொள்கிறார்கள். அதேபோல அதை வாங்கிப் போகிறவர்களிடம் இருந்து மூட்டைக்குப் பத்து பைசா என்று கமிஷன் வாங்கிக் கொள்கிறார்கள். இதுதான் தரகுமண்டியில் நடப்பது. ஒரு நாளைக்கு நூறு மூட்டைகள் வந்தது என்றால், சேல்ஸ்டாக்ஸ்காரர்களுக்கு பத்து மூட்டைகள்தான் கணக்கும் காட்டுகிறார்கள். இப்படி விற்பனை வரி ஏமாற்றமும் நடைபெறு வதற்குத்தான் இது பயனுடையதாக இருக்கிறது அதைத்தவிர சிறு விவசாயிகளுக்கு எவ்விதப் பயனும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தரகு மண்டியில் சரியான முறையில் விற்பனை வரி வசூலாவதில்லை. ஏய்த்துவிடுகிறார்கள். அதைத் தடுப்பதற்காகத்தான் இதுபோலக் கொண்டு வருகிறோம் என்று சொல்லுங்கள், ஏற்றுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு முன் பணம் கொடுத்து உதவி செய்வதில்லை என்று சொல்வது சரி யல்ல. நீங்கள்தான் பலமுனை விற்பனை வரி போட்டிருக்கிறீர்களே, மண்டியில் விற்பனை வரி போட முடியவில்லை என்றால். அடுத்த கட்டத்தில் போட்டுக்கொண்டு விடுகிறீர்கள்.

பொதுவாக இதில் கட்டாயம் என்று வந்தால் தவறு வந்துவிடும். கமிஷன் மண்டிக்காரர்கள் போய், மார்க்கெட்டிங் கமிட்டி தலைவர் கள், ஆபீசர்கள் என்பதாக இவர்களது கட்டாயத்திற்கு விவசாயி கள் உள்படவேண்டியதாக வந்துவிடும். ஆகவேதான், தென்னாற் காடு மார்க்கெட்டிங் சொசைடியைப்போல கம்பல்ஷன் இல்லாமல் விரும்புகிறவர்கள் இங்கே கொண்டுவந்து போடலாம் என்பதாகத் தான் சட்டம் செய்யவேண்டும். விவசாயிகளுக்கு லாபம் மார்க் கெட்டிங் சொசைடியில் வருகிறது என்றால் இங்கே கொண்டு வருகி றார்கள். 'Why should you introduce an element of compulsion' இதில்தான் விவசாயிகளுக்கு அதிக லாபம் வரும் என்று சொல்லுங் கள். லாபம் வரும்படியாகச் செய்யுங்கள். எதற்காகக் கட்டாயப் படுத்த வேண்டும்? கம்பல்ஷன் என்று போடுவதனால்தான் தவறு ஏற்படுகிறது சந்தேகம் பிறக்கிறது. Monopoly in trade is bad. There must be a healthy competition மொனோபலி என்று வைத்துவிட்டால் தவறு வந்துவிடும். ஒழுங்கீனங்கள் ஏற்பட்டு விடும். அதுவும் இதுபோன்ற மசோதாவைத் திடீரென்று கொண்டுவருவதன் மூலம் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். மண்டி வியாபாரிகள் டாட்டாக்கள் இல்லை, பிர்லாக்கள் இல்லை இவர்கள் எல்லாம் பாதிக்கப்படுவார்கள். ஆகவேதான் கம்பல்ஷன் தேவையில்லை. நீங்களும் மார்க்கெட்டிங் கமிட்டிகளை அமையுங்கள். வேண்டுமென்றால் ஐந்து மைலில்

ஒன்று, பத்து மைலில் ஒன்று என்று திறவுங்கள். போட்டி இருக்கட்டும். தரகன் ஒழுங்காக விவசாயிகளிடம் பொருள்களை வாங்குவான்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. நா. வீராசாமி) தரகன் என்று சொல்ல வேண்டாம். தரகர் என்று சொல்லலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : 'அன்' என்பது சிறப்பு விகுதி தான். காந்திமகான் என்றே சொல்கிறோம். அன்பின் காரண மாக, உரிமையின் காரணமாக அப்படிச் சொல்லலாம். பாக்வர்ட் க்ளாஸ் லிஸ்டில் இன்னமும் கள்ளன் என்று இருக்கிறதே தவிர கள்ளர் என்று இல்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. நா. வீராசாமி) அந்த லிஸ்டில் திருத்தப்படவில்லை என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் அப்படிச் சொல்லவேண்டும் என்பதில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்படி இருக்கிறது என்பதைத் தான் சுட்டிக் காட்டினேன்.

நான் குறிப்பிட்டது அரசு ஏகபோகத்தை ஏற்படுத்த வேண்டாம் என்பதுதான். கம்பல்ஷன் கூடாது. மார்க்கெட்டிங் கமிட்டிகளையும் ஏற்படுத்துங்கள். விவசாயிகள் விரும்பினால் இங்கேயே கொண்டுவந்து விற்கட்டும். அதை விட்டு இங்கேதான் கொண்டு வரவேண்டும் என்பது சரியல்ல என்று ஆலோசனை கூற விரும்புகிறேன். "நாங்கள்183 பேர்கள் இருக்கிறோம், நீங்கள் சொல்கிற ஆலோசனையை ஏற்றுக்கொள்வதா?" என்றால், நாங்கள் சொல்வது உங்கள் காதில் விழுந்தால் நல்லது. விழவில்லை என்றால் நீங்களே சமாளித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தை நான் ஆதரிக்கிறேன்.

1939 ஆண்டிலேயே இந்தச் சட்டம் இருந்தது. மண்டிக்காரர் கள் கமிஷன், மகிமை என்று அதிகமான அளவில் விவசாயிகளைச் சுரண்டிவந்தார்கள், அதைத் தடுக்க வேண்டும் என்கிற காரணத்தி னால் அப்போதே கொண்டு வந்தார்கள். ஆனால் அதன்கீழ் கமர் ஷியல் க்ராப்ஸ் மட்டும்தான் வந்தது. எல்லாவற்றுக்கும் அதை விஸ்தரிக்க வேண்டும் என்பதாக 1959-ல் அக்ரிகல்சுரல் ப்ராட்யூஸ் மார்க்கெட்டிங் ஆக்ட் என்று கொண்டு வந்தார்கள்.

இந்தச் சட்டத்தில் 6-வது விதியில் யாராக இருந்தாலும் நோட்டிபைடு ஏரியாவில்—லைசென்சு பெற்று குறிப்பிட்ட இடத் தில்தான் வியாபாரம் செய்யவேண்டும். செல் கட்ட வேண்டிய தாகத்தான் இருக்கிறது.

தென்னாற்காடு மாவட்ட சொசைடியை எடுத்துக்கொண்டால்—விழுப்புரம் என்று வைத்துக்கொள்ளுங்கள். விழுப்புரம் நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். விழுப்புரத்திற்கு கடலைக்காய் வரும். நான்கைந்து மில்காரர்கள்தான் இருக்கிறார்கள். அவர்கள் வைத்ததுதான் விலை. மார்க்கெட்டுக்கு அதிகமாகச் சரக்கு வந்துவிட்டால் இன்ன விலைக்குத்தான் எடுத்துக்கொள்வோம் என்பார்கள். அந்த நான்கு பேர்களுமே ஒரு முடிவுக்கு வந்துவிடுவதால் விவசாயிகளுக்கு வேறு வழியே இல்லாது போய்விடும். அதன் பயனாக விழுப்புரத்தில் இன்றைய தினம் பெரிய மில்காரர்கள் ஏற்பட்டு விட்டார்களே தவிர, சிறிய வியாபாரிகள் நசுக்கப்பட்டார்கள், அழுத்தப்பட்டார்கள். இம் மாதிரியான குறைகள் இல்லாதபடி சட்டத்தில் வழிவகைகள் செய்யவேண்டும். இந்தக் குறை இருக்கக்கூடாது, இருக்காமல் தடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, செஸ் வசூலிப்பதுபற்றி ஒன்று சொன்னார்கள் அதை இப்பொழுது ஃபீஸ் என்று மாற்றிவிட்டார்கள். செஸ் வசூலிப்பது குறித்து சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே ஒன்று சொல்லியிருக்கிறார்கள். செஸ் எந்த அளவிற்கு வசூலிக்க வேண்டும், எந்த அளவிற்கு நன்மை செய்வதாக இருக்க வேண்டுமோ, அந்த அளவிற்கு வசூலிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

மார்க்கெட்டிங் கமிட்டி விவசாயிகளுக்குச் சரியாக நன்மைகளைச் செய்யவில்லை. பெரிய வியாபாரிகள் எப்படிச் சுரண்டினார்களோ, அப்படியேதான் இவர்களும் செய்கிறார்கள். சாம்பிள் என்று எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. மேலும் வருகின்ற சரக்குகளை இருப்பில் வைத்துக்கொள்வதற்கும் இடம் இல்லை. ஆரணியிலே மணிலாப் பயிர் 2,500 மூட்டை வருகிறதென்றால், அதை வைப்பதற்குக்கூட அங்கே இடம் இல்லை. ஒரு நாளைக்கு 5 ஆயிரம் மூட்டைகள், அடுத்த நாளைக்கு 5 ஆயிரம் என்று சரக்கு வந்தால் வைக்க இடம் இல்லாமல், சரக்குகளை குறைந்த விலைக்கு விற்று விடுகிறார்கள். அப்படி குறைந்த விலைக்கு விற்பதை விவசாயிக்கும் தெரிவிக்காமல் விற்றுவிட்டு, பிறகு சொல்கிறார்கள். விவசாயிகளின் அனுமதியைப் பெறாமல் சரக்குகளை விற்பனை செய்வது சரியல்ல. இம்மாதிரியான குறைகள் எல்லாம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குச் சரியான நேரத்தில் கடன்கள் கிடைக்க வழி செய்யவேண்டும். சிறிய வியாபாரியாக இருந்தாலும், பெரிய வியாபாரியாக இருந்தாலும் கடன் கொடுக்க வேண்டும். எந்த நேரத்தில் தேவைப்படுகிறதோ அந்தச் சமயத்தில் மார்க்கெட்டிங் கமிட்டி மூலமாக கடன்கள் கொடுக்க வழி செய்ய வேண்டும். மேலும், விற்காமல் இருக்கும் சரக்குகள் மூன்று நாட்களுக்குள் விற்காவிட்டால், அதற்கு வாடகை கட்ட வேண்டும். அதற்குண்டான வாடகைக் கட்டணம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, வாடகைக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும்.

மேலும், இருப்பில் வைத்திருக்கிற சரக்குகள்மீது கடன் கொடுக்கவேண்டும். இப்பொழுது மணிலா—நிலக்கடலை—இருக்கிறதென்றால் அது விளைபொருள; அதையே எண்ணெய் ஆக மாற்றி விட்டால் அது விளைபொருள் அல்ல ; கரும்பு விளைபொருள் அதை வெல்லமாக மாற்றிவிட்டால் விளைபொருள் அல்ல ; நெல் விளைபொருள். அரிசியாக மாற்றி விட்டால் அது விளைபொருள் அல்ல. இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் நீக்கவேண்டும்.

சிறிய வியாபாரியாக இருந்தாலும், பெரிய வியாபாரியாக இருந்தாலும் மார்க்கெட்டிங் கமிட்டியிலே இருந்து வாங்கிவிட்ட சரக்குகளை கடைகளில் விற்க முடியும். அதற்கு வழி செய்திருக்கிறார்கள். அவர்கள் விலைகளைக் கூட்டவோ, குறைக்கவோ முடியாது. வியாபாரிகள் மார்க்கெட்டிங் கமிட்டி உத்தரவுக்குக் கட்டுப்பட்டு வியாபாரம் செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்கள் கட்ட வேண்டிய சேல்ஸ் டாக்ஸ் சரியாகக் கட்ட முடியும். ‘ நோட்டிஃபைடு மார்க்கெட் ’ என்று இருப்பதை ‘ நோட்டிஃபைடு ஏரியா ’ என்று மாற்றினால் பொருத்தமாக இருக்கும். இந்தக் கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்வார் என்று கூறி, இதை ஆதரித்து, என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

DR. H. V. HANDE : Mr. Chairman, from the speech I have heard from my predecessor, it is not clear to me whether the hon. Member is supporting the Bill or opposing the Bill. Of course, he has no alternative but to support the Bill. But he has put forward very valid and relevant point with regard to the dangers or lacunae that are involved in the Bill. I shall briefly try to explain them also though my attempt to do so would not succeed. Still I will try to explain how it is very important to refer this Bill to a Select Committee.

Even if it is felt necessary to improve the image of the ruling party by giving a leftist stance, this Bill should be referred to a Select Committee and the views of agriculturists and the persons who are involved in the trade should be invited and heard. So, this Bill should not be rushed through without understanding the serious consequences involved in putting it on the Statute Book.

Now the most important point is that this Bill is likely to throw out many persons from employment. Let us find out how many persons are employed and let us make a survey of it. Have the Government got statistics with regard to the number of porters employed and the load. I would like to know whether the Department has made a survey. Even the Legal Department has failed in its duty. Even the concerned Department has failed in its duty to consider this aspect of the matter.

Sir, the most important point is there is already a very good marketing system in Tamil Nadu. In this connection I would request the Hon. Minister to find out from the Government of Andhra Pradesh, what is happening in certain parts of their State. When Andhra was part of the composite Madras State, the

original Act was extended to a place called 'Adoni' and then the whole Act was defunct as far as Adoni was concerned. What is the position now there? In fact some M.L.As. representing Adoni stated that certain persons in Adoni had become monopolists in the trade and I would request the Hon. Minister to consider that aspect of the matter.

Now what is the position in Rajapalayam, Virudhunagar and Tiruchirappalli? Have the Government made a survey of that? A number of persons have overnight become rich. If my information is correct, more people will become more rich and the number of poor persons would be increased. On the paper it looks very excellent and theoretically also it looks very excellent if money is taken from the rich persons and distributed to the whole community. I would welcome wholeheartedly any measure which can distribute surplus wealth to persons who do not have wealth and I would be the first person to jump at it. But that is not going to happen. Only certain top class people will become more rich and will be benefited by this Bill.

Another important point is that about 3 lakhs of persons are involved in this trade all over the State. It is not a small number. One person has to feed a family. At the Government level, it may be said it is only 'half'. But how many are involved in that? My submission is a number of persons may be thrown out of employment. What are the alternative measures that Government contemplates to rehabilitate the persons who would be thrown out of employment? I hope the Hon. Minister will answer this point.

I had a feeling that the Hon. Minister was well-versed with methods of agriculture and marketing. I have been telling this to my friends, in spite of the fact that both of us belong to different parties. I have been saying "here is a man who knows about agriculture and how the products are brought to the market, here is one who knows the difficulties of merchants and the consumer". That is why I say to the Hon. Minister, let us not disturb the thing that is going on at present. Let us not open the Pandora's box and give rise to lot of complications. I want to sound a note of warning. We are doing something which we will not be able to control later on. That is why I say, let us not hurry.

Let the Bill go to a Select Committee and let us discuss the pros and cons there and arrive at some conclusion. Let not the Hon. Minister sit in a pedestal and brush this suggestion aside since it comes from the Opposition. Previously when the Town Planning Bill with 400 clauses came up before the House, I made a suggestion for referring the Bill to a Select Committee and the Hon. Minister said suddenly there is some sense in what Mr. Hande says and the Bill was then referred to a Select Committee. The present Hon. Minister for Health became the Chairman of the Select Committee and we sat for six to seven

days, three hours each day, discussed the whole thing and contributed what we can to the Bill. We made useful changes and that is why I say let not the Hon. Minister stand on prestige. Let him refer the Bill to a Select Committee.

MR. CHAIRMAN THIRU N. VEERASAMI: Try to finish as early as possible. There are four resolutions to be passed.

DR. H. V. HANDE: Are you going to fix time restrictions? May I say that there are only two Bills on the subject of co-operation and we were allowed to speak on the same without time-limit. As far as this Bill is concerned, it is a very important Bill and that is why I want to speak on the salient points which I have noted. I always come to the House prepared and that is why I want to offer my suggestions. I know that the time of the House is precious and I will not waste it. My time is also precious and equally well I know that the time of the House is also precious and I will speak only with a sense of importance.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): It is only an appeal.

DR. H. V. HANDE: I will not waste the time of the House. They are now going to have a Committee comprising of four merchants, nine farmers and four nominated. The Director of Agriculture is ex-officio Member. In this context I would like to tell the House that this will lead to a monopoly, of the ruling party. The hon. Lady Member Thirumathi Anandanayaki was vigorously explaining the point. There is a grave risk of monopoly by Government, by the ruling party, because the construction of the committee is in such a way that there is a very easy method of filling in by ruling party members and they will then spread their tentacles outside. I would like the Hon. Minister to give a categorical assurance that the ruling party will not be allowed to meddle with it. I say this because the whole picture will be affected.

There is another argument that it is going to affect the agriculturists. The present relationship between agriculturists and traders and merchants is something unique. It is now possible for an agriculturist, merely on his word alone, to get loan from the merchant. No pro-note is necessary. If the merchant had the confidence of repayment by the agriculturist, he will lend him twice or thrice. But if Government came in, and when it is put on paper at Government level, the agriculturist cannot take a second loan. So, it will restrict the agriculturist.

There is also another point. They cannot sell from anywhere. They are asked to sell in a particular place. We know what happened to the wayside vendors opposite to Park station. Their income is now reduced from the previous Rs. 2/ to Re. 1/. Even the meagre earnings of these poor people had been reduced since restriction of seat has been imposed. They do not have the

previous freedom of movement. That is why I say let us not restrict the agriculturists' movement and reduce their income and put them under the cog-wheel of red-tape.

The Hon. Minister was saying about sales tax. I do not know whether Government have made any assessment regarding the quantum of sales tax they will lose.

I will now come to the legal aspect. Let us take the original Act, the Madras Agricultural Produce Markets Act, 1959. We are now putting another sub-section, viz (2-A)—

"(2-A) Notwithstanding anything contained in sub-section (1) no person shall, after the date to be notified by the Government in this behalf in the *Tamil Nadu Government Gazette*, purchase or sell any notified agricultural produce in a notified agricultural produce in a notified market area outside the market in that area".

There is also an Explanation. What I say is, when you are introducing a new sub-section (2) A, what is going to happen to sub-section (3). Sub-section (3) says as follows :—

" A licence under sub-section (1) may be refused to a person :—

(i) whose licence was cancelled and three years have not elapsed since the date of cancellation, etc., etc '

So, this sub-section is also affected by the new introduction. But it has not been amended. This is only to demonstrate how haphazardly the drafting has been done by the Law Department or whatever it is. I am glad the Hon. Minister for Law is now coming and I hope he will clarify the position. I do not know how the farmers of this Bill have forgotten that sub-section (3) also requires consequential amendment in view of the introduction of new sub-section (2) A. Let me come to sub-section (4); It says :—

" (4) If a market committee is satisfied, either on a reference made to it in this behalf, or otherwise, that—

(a) a licence granted under sub-section (1) has obtained by misrepresentation or fraud, etc., etc."

So, this also has reference to sub-section (1). When we change that sub-section (1), sub-section (4) also has to be amended in consequence thereof. But that has not been done. Similarly sub-sections (5), (6) and (7) which has reference to sub-section (1) have to be amended. I am really amazed as to how this has happened and this has been overlooked. The whole thing has been done in a hurry. With all the emphasis at my command I request the Government to see that it is send to a Select Committee.

The constitution of a market committee as contemplated under Section 8 will become well-nigh impossible, since there will be no licence holder to constitute the Committee under Section 8 (2) (b).

This is a very important point. Therefore, Section 8 also needs amendment. In other words, there is a big enactment where we have actually introduced sub-section (2-A) to Section 6 without even properly going through or perusing and discussing the whole matter. I am very glad when I was talking, the Hon. Minister for Law has also come and I am sure he will try to clarify the position. I am making an impassioned plea.. I have absolutely nothing to gain. I am not in the least interested in it or bothered about it personally. But I strongly feel that a very good system should not be unnecessarily disturbed. Thank you, Sir.

* திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இந்த விவசாய விளைபொருள்கள் அங்காடி சட்டத்தின் மீது ஒரு சில கருத்துக்களை நான் கூற ஆசைப்படுகிறேன்.

இந்த விவசாயிகளுக்கும் வணிகர்களுக்கும் உள்ள உறவு இன்று நேற்று ஏற்பட்ட உறவு அல்ல. நீண்ட நெடுங்காலமாக இவ்விருவரும் சமுதாயத்தின் முதுகெலும்பாக இருந்து வரக்கூடியவர்கள் ஆவார்கள். ஆனால் இந்தச் சட்டம் என்ன செய்யப் போகிறது என்றால் இவ்வளவு நீண்ட காலமாக நெருங்கிய உறவு கொண்ட அவர்களுக்கிடையே ஒரு பிளவை, ஒரு வேற்றுமையை ஏற்படுத்தி விடும். வணிகர்கள் என்றாலே அவர்கள் கொள்ளையடிப்பவர்கள், ஏமாற்றுபவர்கள் என்ற எண்ணம் எப்படியோ இந்தச் சமுதாயத்தில் மக்களிடத்திலே ஒரு சிலரிடத்திலேயும், அதிலும் குறிப்பாக அரசியல் வாதிகளிடத்திலே ஊன்றிவிட்டது மிகவும் வருந்தத்தக்கது என்பதை இந்தச் சபையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தரகு வியாபாரிகள் இலட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் தங்கள் கருத்தில் கொள்ள வேண்டுகிறேன். வணிகர்களும் இந்த நாட்டில் வாழும் உரிமை பெற்றவர்கள்தான். திடீரென்று இந்தச் சட்டத்தின் மூலம் அவர்களுடைய வாணிகத்தை நீங்கள் பிடுங்கிக் கொண்டால் அவர்கள் வாழ்க்கையை நடத்துவது எப்படி ? அவர்கள் குடும்பங்களுக்கு வேறு என்ன மாற்றுத் தொழில் இருக்கிறது. இதற்கு இந்தச் சட்டத்தில் வழிவகை உண்டா ? ஒரு தொழிலை பாரம்பரையாக நடத்தக்கூடிய தொழிலைப் பிடுங்கிக்கொள்வது உள்ளபடியே நாட்டு மக்களிடத்திலே ஒரு சாரார் பாதிக்கப்படுவதால் அது இந்த நாட்டுக்கு நலன் தராது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த வணிகர்கள் விவசாயிகளின் உண்மையான நண்பர்களாகவும், பாதுகாப்பாளர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்களே தவிர, அவர்களைக் கொள்ளையடிக்கின்ற முறையில் இருந்திருக்கிறார்கள் என்று நினைப்பது தவறு என்பது நடைமுறையிலே ஊன்றிக் கவனித்தால் தெரியும். இன்றைக்கு ஒரு விவசாயியின் வீட்டில் கல்யாணம் என்றால் ஆயிரமோ, இரண்டாயிரமோ

கடன் கொடுக்க யார் இருக்கிறார்கள்? வணிகர்கள்தான் நம்பிக்கையின்பேரில், புரோ நோட் கூட இல்லாமல், யார், இன்னார் என்று பார்த்து கொடுக்கிறார்கள். அதைக்கொண்டு விவசாயிகள் நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள். அந்த வீட்டில் ஒரு இழவு, ஒரு மரணம் ஏற்பட்டு விட்டது என்றால் அப்படிப்பட்ட நேரத்தில் 500 அல்லது 1,000 யார் கடன் கொடுக்க இருக்கிறார்கள் ? அரசாங்கத்திடம் வந்தால் உடனடியாக ஒரு மணி நேரத்தில் கொடுக்க வழிவகை உண்டா ? அப்படியெல்லாம் உதவிகரமாக இருக்கின்ற அந்த வணிகர்களை ஏமாற்றுக்காரர்கள், பித்தலாட்டக்காரர்கள் என்று கூறுவது உண்மையிலேயே வேதனைதாத்தக்கது என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த விவசாயிகள் கொண்டுவரும் பண்டங்கள் எப்பொழுதுமே உலர்ந்து, காய்ந்து நல்ல பக்குவமான நிலையில் இருப்பது இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னைவிட நன்கறிவார்கள். அம்மாதிரி நிலையிலே வெயிலில் உலர வைத்து பாதுகாப்பாக கோடவுனில் வைத்திருந்து தக்க நேரத்தில் நக்க விலை கிடைக்கும்படி வணிகர்கள் செய்கிறார்கள். ஆனால் இம்மாதிரியெல்லாம் மார்க்கெட் சொசைட்டிகள் அக்கறை எடுத்துக் கொள்ளுமா என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ? யாருக்கோ வந்த விதி என்ற முறையில், இன்றைக்கு இதுதான் நிலவரம், இஷ்டமா இல்லையா என்று விற்கக்கூடிய ஒரு துர்ப்பாக்கியமான, ஒருவருக்கொருவர் அனுசரணையாக இருக்க முடியாத நிலைதான் மார்க்கெட்டிங் சொசைடியில் இருக்கும். நாளைக்கு அந்த விவசாயி நமக்கு வேண்டுமே என்ற முறையில் அனுசரணையாக அந்தச் சரக்குகளைப் பாதுகாப்போடு வைத்திருந்து, எப்பொழுது உயர்ந்த விலை வருகிறதோ, அப்பொழுது விற்கும் நிலையை ஏற்படுத்த முடியாது, இதை நடைமுறையில் பார்த்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இந்தத் தரகு மண்டியை நம்பி வாழக்கூடியவர்களையும் கனம் அமைச்சரவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எத்தனை வண்டிக்காரர்கள், எத்தனை களம் கூட்டுபவர்கள், எத்தனை மூட்டை தூக்குபவர்கள், இவர்களெல்லாம் வியாபாரிகளை நம்பி வாழ்பவர்கள். இவர்களது பிழைப்புக்கு என்ன செய்வது என்பது எனக்கு விளங்கவில்லை.

நான் கூறுவதெல்லாம், இம்மாதிரி மார்க்கெட்டிங் கமிட்டிகளை அமைத்து உண்மையிலே வியாபாரம் செய்ய அரசு நினைத்தால் அப்படிச் செய்வதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதே நேரத்தில் தங்கள் வர்த்தகத்தைத் தொடர்ந்து நடத்த வணிகர்களுக்கும் வழிவகை செய்யவேண்டும். இல்லாவிட்டால் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பேர்கள் இந்தத் தொழிலை இழந்து விடுவார்கள். அவர்களை நம்பி வாழும் 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்கள் வாழ்க்கையை இழந்து விடுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இம்மாதிரி வியாபாரிகள், தரகுக்காரர்களுக்கிடையே போட்டியிருப்பதால் விவசாயிகளுக்கு அதிக விலை கிடைப்பதற்கு வசதியிருக்கிறது. ஆனால் இந்த விற்பனை முறை மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கு மட்டும் இருந்தால் அங்கே போட்டியிருக்காது. அதனால் அந்த விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்காது, உயர்ந்த விலை கிடைக்காது. எனவே போட்டியிருக்க வேண்டும். நான் 100 ரூபாய் தருகிறேன் என்று ஒருவர் சொன்னால் நான் 110 ரூபாய் தரத் தயாராகயிருக்கிறேன் என்று சொல்வதற்கு மற்றொரு வியாபாரி இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் அந்த வியாபாரம் விவசாயிகளுக்கு இலாபம் தரும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அத்துடன் விவசாயிகளுக்கு இன்னும் பல வசதிகளும் அதில் உண்டு. இரவு 12 மணிக்குத் தங்கள் கிராமத்திலிருந்து வண்டியைக் கட்டிக்கொண்டு வியாபாரிகள் கோடவுனுக்கு முன் வருவார்கள். இரவு 12 மணியாகயிருந்தாலும்கூட சரக்குகளை இறக்கி வைத்துவிட்டு உடனடியாக செலவுக்கு 10 ரூபாய், 20 ரூபாய் தேவை என்றால் கொடுப்பார்கள். ஆனால் இந்த மார்க்கெட்டிங் சொசைட்டியிலே, கரெக்டாக 9 மணி முதல் 12 மணிவரை அல்லது 4 மணியிலிருந்து 8 மணி வரை என்று வைத்துக்கொண்டு அதற்கு மேல் 5 நிமிஷங்கள் கழித்துச் சென்றாலும் இப்பொழுது எங்களால் பார்க்க முடியாது, நாளைக் காலை வாருங்கள் என்று சொல்லக்கூடிய நிலைதானே இருக்கும், இது விவசாயிகளுக்கு உண்மையிலேயே ஒத்து வருமா ? நேரம், காலம் பார்த்து விவசாயிகளின் தன்மை அமையுமா என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இந்தச் சட்டம் உண்மையிலேயே விவசாயிகளைப் பெரிதும் பாதித்துவிடும் என்பதோடு வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் நீண்டநெடுங்காலமாக இருந்துவரும் உறவுமுறைகளுக்கும் பாதகம் ஏற்படுத்தி சமுதாயத்திலே ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கிவிடும் என்பதாலும், இதன்மூலம் அரசு இந்த வணிகத்தை கைப்பற்றிக்கொள்ளும் என்னும் சூழ்நிலை ஏற்படும் என்பதாலும் வணிகத்தை அரசே கைக்கொள்வது நாட்டு மக்களுக்கு நல்லது அல்ல என்ற கொள்கையில் அழுத்தமுடையவன் என்பதாலும் இந்தச் சட்ட முன்வடிவை செலக்ட் கமிட்டிக்கு விட்டு அங்கு நல்ல நிபுணத்துவம் பெற்றவர்களோடு நன்கு ஆலோசனை பெற்று இந்தச் சட்டத்தில் தேவையான மாறுதல்களைச் செய்து பிறகு சட்டமாக அமைச்சரவர்கள் கொண்டுவரலாம். அவசரத்திலே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதால் இலட்சக்கணக்கான மக்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாமென்று என் உள்ளத்திலே உள்ள சக்தி அனைத்தையும் உபயோகப்படுத்தி பணிவன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயி என்ற நிலையிலும், கமிஷன் வியாபாரிகள் பக்கத்திலிருக்கும் ஒரு விவசாயி என்ற நிலையிலேயும் அனுபவத்தைச் சொல்ல விரும்புகிறேன். கிட்டத்தட்ட 500 கோடிக்கு விற்பனைக்கு வருகிறது என்றால் 3% கமிஷன் மூலம் கிடைக்கிறது. கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய் வரை இன்றைக்குக் கணக்கு இல்லாமல் தனிப்பட்டவர்களிடத்தில் போய்க்கொண்டிருக்கிறது. எனக்கு முன் பேசிய நண்பர்களெல்லாம் கமிஷன் வியாபாரிகள் கெட்டு விடுவார்கள். அவர்களைச் சேர்ந்தவர்களெல்லாம் கெட்டுவிடுவார்கள் என்று சொல்கிறார்கள், அது எப்படி என்று தெரியவில்லை. அவர்கள் எப்படி கெட்டு விடுகிறார்கள் என்று தெரியவில்லை. கமிஷன் கடை வைத்திருப்பவர்கள் வியாபாரிகளாக வந்து விடலாம், அவர்களுக்கு ஒருவிதமான பாதகமும் ஏற்படவில்லை. அத்துடன் அவர்களிடம் வேலை செய்யும் சாக்கு தைப்பவர்கள், வண்டி இழுப்பவர்களெல்லாம் மார்க்கெட்டில் வந்து வேலை செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே வேலை வாய்ப்பு குறைந்துவிடும் என்று சொல்லுவதில் ஒரு விதத்திலும் பொருத்தம் இல்லை.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

இன்று தனிப்பட்டவர்களிடம் போய் விவசாயி கஷ்டப்படுகிறார். முன்பணம் வாங்குகிறான். அதனால் விவசாயிகளுக்கு
பி.ப. எதிர்பார்க்கக்கூடிய விலை கிடைப்பதில்லை. ரெகுலேடெட் மார்க்
1-00 கெட்டுக்கு எல்லா உற்பத்திப் பொருள்களும் வந்து விட்டால் பல இடங்களிலிருந்து, திசைகளில் இருந்து வியாபாரிகள் வருவதன் காரணமாகப் போட்டி அதிகம் ஏற்படும். டெண்டர் சிஸ்டத்தில் விற்பனை செய்ய முடியும். பத்து மணியில் இருந்து பன்னிரண்டு மணி வரை ரகசிய போட்டி மூலமாக டெண்டர் போடப்பட்டு 12 மணிக்கு மேல் அதை உடைத்து அதிலே உயர்ந்த டெண்டருக்குக் கொடுக்கலாம். இதனால் நல்ல சரக்குக்கு நல்ல விலை கிடைக்கலாம். இப்போது கமிஷன் கடையிலே எப்படி நடக்கிறது ? விவசாயிக்கு முன்கடன் இருப்பதால் அவன் சொல்லக்கூடிய விலைக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. பிறகு கலப்படம் நடக்கிறது. இந்தக் கலப்படத்தை நிவர்த்தி செய்ய ரெகுலேடெட் மார்க்கெட் தேவை. இதைச் சர்க்கார் பொறுப்பிலே செய்தால்கூட நல்லது. அட்வைசரி பாடியாகக் கொண்டு ஸ்டேட் டிரேடிங்காக ஓரளவு ஆரம்பித்தால் நல்ல சரக்காகக் கிடைக்கும் நிலை ஏற்படும். ஸ்டேட் டிரேடிங்கை இதை ஒரு படியாக வைத்துக்கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வியாபாரிகள் கெட்டுவிடுவார்கள் என்பதெல்லாம் பொருத்தம் இல்லாத வாதம். கமிஷன் வியாபாரிகளையே கேட்டேன். இதனால் பாதகம் ஏற்படுமா என்று கேட்டேன். அவர்கள் இதனால் போட்டி ஏற்படும். நல்ல சரக்காக விற்கலாம். கலப்படத்தை நிவர்த்தி செய்யலாம் என்று சொன்னார்கள். இப்போது 15 கோடி ரூபாய்

தனிப்பட்டவர்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. ஒரு கணக்குக்குச் சொல்கிறேன். அது உற்பத்தி செய்பவர்களுக்குப் போகவேண்டுமென்பதற்காகத்தான் இது செய்யப்பட்டிருக்கிறது. பத்து வருஷ காலத்திற்கு முன்பாகவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே இதைக் கொண்டு வரவேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட் கொடுத்தது. ஆனால் அந்த அரசு செயல்படுத்தவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லுகிறேன். இப்போது இதைக் கொண்டு வந்திருப்பதை விவசாயி என்ற நிலைமையில் வரவேற்கிறேன்.

இப்போது இதிலே அட்வான்ஸ் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. செக்ஷன் 21-ன் படி—

"Purpose for which the fund may be expended: Acquisition of site, maintenance and improvement of market, construction and repair of buildings"
the provision and maintenance of standard weights, schemes of grading of Agricultured produce.

என்று பலவகைக்கு மார்க்கெட் கமிட்டி பண்டிலிருந்து செலவழிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே அட்வான்ஸ் கொடுக்கக்கூடிய முறையைக் கொண்டு வந்துவிட்டால் எல்லோரும் வரவேற்பார்கள். இதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிறைய சர்வீஸ் கொடுக்கப்பட வேண்டும். சர்வீஸ் மூலமாக எல்லோரும் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் கமிஷன் மண்டியைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படவில்லை என்பதைக் கூறி, சர்க்காருக்கு மட்டுமல்ல, உற்பத்தி செய்கிறவர்களுக்கும் நல்ல விலை, உண்மையான விலை கிடைக்குமென்று சொல்லி இதை வரவேற்கிறேன்.

* **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலத்திற்குப் பிறகு விவசாயிகளுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட இந்தத் திருத்தச் சட்டத்தின் விவாதத்தில் கலந்து கொண்ட எல்லாத் தரப்பினருக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பல்வேறு கருத்துக்களைப் பல்வேறு கோணங்களில் இருந்து சொன்னார்கள். இதிலே மற்றவர்களை எல்லாம்விட என்னுடைய மதிப்பிற்குரிய அனந்தநாயகி அம்மையார் அவர்கள் விவசாயக் குடும்பத்தில் பிறந்த காரணத்தால் விவசாயிகளுக்காக வாதாடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். என்னதான் விவசாயக் குடும்பத்தினராக இருந்தாலும் தான் மேற்கொண்டிருக்கின்ற தொழில் வழக்கறிஞர் தொழிலாக இருக்கும் காரணத்தால் வாதிக்கும் வக்காலத்து வாங்கலாம், பிரதிவாதிக்கும் வக்காலத்து வாங்கலாம் என்ற கொள்கைக்கேற்ப அவர்கள் வியாபாரிக்கு வக்காலத்து வாங்குகிறார்கள்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1971 டிசம்பர் 15

வருகிறது. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நல்ல முறையில் கொண்டு வந்து விற்க சாலை வசதிகள் அமைக்க இன்றைய தினம் ஒன்றரைக் கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு பலயிடங்களில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் கட்டுவதற்கும் அனுமதிக்கபட்டு வருகிறது. ஏன் கட்டாயப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். விவசாயிகளைக் கட்டாயப்படுத்தி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் கொடுக்கிறோம்

சிறு விவசாயிகளுக்கு, நிலமற்ற ஏழைகளுக்குக் கடன்கள் கொடுக்கிறோம் என்று சொன்னாலும் அவர்கள் அதைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்று காலையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேநேரத்தில் மக்களிடத்தில் விளம்பரப்படுத்தவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பதால் என்னென்ன வசதிகள் விவசாயிகளுக்கு இருக்கின்றன, என்னென்ன விதத்தில் லாபம் இருக்கிறது, ஏன் கொண்டு வந்து விற்கவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சினிமா துறை மூலம் படம் எடுக்கக்கூட முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

உறுப்பினர்கள் சிலர் சொன்னார்கள், நாங்கள் கடன் கொடுக்கிறோம் என்று. நீங்கள் கொடுப்பதோடு அவர்கள் நின்று விடுகிறார்களா? தங்கள் வீட்டிலுள்ள நகைகளையெல்லாம் வைத்து கடன் வாங்கும் விவசாயிகள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அப்படி நீங்கள் கொடுக்கிற பணம் வேளாண்மைச் செலவிற்காகவா போய் சேருகிறது? வேறு பல செலவுகளுக்குப் போகிறதே தவிர, விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் போவதில்லை என்பது எனக்குத் தெரியும்.

இந்தச் சட்டத்தை யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை, ஒருசிலரைத் தவிர. இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை இந்தச் சட்டமன்றத்தில் குறிப்பிட்டது நினைவிற்கு வருகிறது. கமிட்டிக்கு விடுவது என்றால் கடப்பில் போடுவது என்று குறிப்பிட்டார்கள். ஒரு விஷயத்தை ஒரு கமிட்டிக்கு விடு என்றால் கடப்பில் போடு மூன்று நான்கு ஆண்டுகளுக்கு என்று அர்த்தம்.

இந்தச் சட்டம் 1933-ல் முதன் முதலாகக் கொண்டுவரப்பட்டது. அப்போது மூன்று இடங்களில் கொண்டுவரப்பட்டது. கோவையில், திருப்பூரில் பஞ்சுக்கும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நிலக்கடலைக்கும். அதேபோல் ஆந்திராவில் புகையிலைக்கும் கொண்டுவரப்பட்டது. அதற்குப் பிறகு 1957-ல் நம் மாநிலத்தில் உயர்திரு டபிள்யூ. எஸ். கிருஷ்ணசுவாமி நாயுடு, ரிட்டயர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ், மதராஸ். அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து அது பரிசீலிக்கப்பட்டது. அதைப் பரிசீலனை செய்து அப்போதே இதைக் கட்டாயமாக ஆக்கவேண்டும் என்று அவர்கள் கருத்து தெரிவித்திருந்தார்கள்.

1971 டிசம்பர் 15] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

அதற்குப் பிறகு 1959-ல் இது சட்டமாகக் கொண்டு வரப்பட்டது. அப்படி சட்டமாகக் கொண்டுவரப்பட்ட நிலையில் என்ன நடந்தது என்பது என்னைவிட காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும். ஏனெனில் 1962 தேர்தலுக்கு முன்னால் அது கொண்டுவரப்பட்டது. வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு மட்டும் அது கொண்டுவரப்பட்டது. வட ஆர்க்காடு மாவட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட நேரத்தில் அப்போது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்தான் மார்க்கெட்டிங் கமிட்டித் தலைவராக இருந்தார்கள். வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர் அன்று இல்லை. திரு. இராமச்சந்திரன் என்பவர் அதன் தலைவராக இருந்திருக்கிறார். அவர்கள் அப்போது முதல் அமைச்சராக இருந்த கனம் காமராஜ் அவர்களிடத்தில் வந்து இதிலுள்ள குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உடனே திரு. காமராஜ் அவர்கள் இதே வேலையாகப் போய்விட்டது, எப்போது வந்தாலும் இதற்கு ஏதாவது சொல்லிக்கொண்டேயிருக்கிறீர்கள், அதெல்லாம் முடியாது, போய் விடுங்கள் என்று தெரிவித்தார்கள்.

1962 தேர்தல் நெருங்கிக்கொண்டிருந்தபோது வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பெருவாரியான வியாபாரிகள் காமராஜ் அவர்களை அணுகி இந்தத் தடவை நீங்கள் உதவி செய்யவில்லை என்றால் நாங்கள் உங்களை எதிர்ப்போம் என்று தீர்மானம் போடப் போகிறோம் என்று சொன்னதற்குப் பிறகு அது தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. அப்போது அவர்கள் சொன்னது, நீங்கள் கொண்டுவருவது வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு மட்டும் கொண்டு வருவது சரியல்ல, மாகாணம் பூராவிற்கும் கொண்டுவருவதாகயிருந்தால் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். பிறகு நின்றுவிட்டது. அதைத்தான் தொடர்ந்து கொண்டு வருகிறோமே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் வியாபாரிகளிடம் கோபித்துக்கொண்டு கொண்டு வருவதாக நினைப்பது சரியல்ல.

1933-ல் ஆரம்பிக்கப்பட்டது, 1971-லாவது வருகிறதே என்று அனைவரும் பாராட்டுவார்கள் என்றுதான் நான் எதிர்பார்த்தேன். பல உறுப்பினர்கள், வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கூட வந்து நாங்கள் ஐந்து லட்சம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிறோம், எங்களுக்கு வர வேண்டியது 4 லட்சம் பாக்கியிருக்கிறது. கட்டாயப்படுத்தினீர்களானால். மாக்கெட்டில் கொண்டு வந்து விற்பார்களானால், எங்கள் பணத்திற்கு நஷ்டம் வந்துவிடுமே என்று சொன்னார்கள். இரண்டு முறை அமைச்சர் அவர்களிடம் அணுகியும்கூட அவர்களுக்கு டைம் கொடுக்கப்பட்டது, விரைவில் வசூல் செய்து கொள்ளுங்கள் என்று. அவர்கள் கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். அவர்கள் கொடுக்கக்கூடிய பணம் அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறதே தவிர, குறைந்தபாடில்லை. ஐயாயிரம் கடன் வாங்கினால் மூவாயிரத்திற்கு சரக்கை கொடுத்து விட்டு மேலும் மூவாயிரம் வாங்கிக்கொண்டு அதையும் சேர்த்து ஐயாயிரத்திற்கு எழுதி வாங்கிக்கொள்வது என்பது வழக்கமாகயிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1971 டிசம்பர் 15

வகை செய்யப்பட்டிருக்கிறது. 1.000 மூட்டை வாங்கினால், 1,000 மூட்டை என்று கணக்கு எழுதித்தான் ஆகவேண்டும். அப்படிச் செய்வதற்கு இந்தச் சட்டம் வழி வகை செய்கிறது.

இங்கே விலையைப்பற்றிப் பேசினார்கள். ஏதோ அதனாலே நஷ்டம் ஏற்படுகிறது என்று இங்கே பேசிய ஒவ்வொருவரும் குறைப்பட்டுக் கொண்டார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், ஒரு மூட்டை நெல் ரூ. 60 என்று சொன்னால்--. 60 விற்கவேண்டு மென்பது என் ஆசை—10 மூட்டையை ஒருவன் கொண்டுபோய் ஒரு மண்டியில் கொடுத்தால், ரூ. 600 ஆகிறது. அதற்கு அந்த மண்டியில் இருப்பவர்கள் எடுத்துக்கொள்வது—நான் விசாரித்த வரையில் என்ன வென்றால், கனம் அங்கத்தினர்களும் விசாரிக்க வேண்டுமென்று சொன்னார்கள்--அன்லோடிங் சார்ஜாக எடுத்துக் கொள்வது ரூ. 2, அதற்குப் பிறகு கமிஷன் ரூபாய்க்கு 2 பைசா என்ற அடிப்படையில் ரூ. 600-க்கு ரூ. 12, ஆக மொத்தம் ரூ. 14 எடுத்துக்கொள்கிறார்கள். ரூ. 600-ல் ரூ. 14 போனால் மீதமுள்ள ரூ. 586 தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் ரூ. 600 வாங்கிய அந்த சரக்குக்கு அந்த மண்டிக்காரருக்குக் கிடைப்பது, கமிஷன் ரூபாய் 12-ம், வெயிங் சார்ஜஸ் 50 பைசாவும், ஆக மொத்தம் ரூ. 12.50 சேர்த்து ரூ. 612.50 ஆகிறது. அவர்கள் ரூ. 586 வாங்கி, அதை ரூ. 612.50-க்கு விற்கிறார்கள். மற்றமற்ற பொருள்களுக்கும் இப்படி இருக்கிறது. அதைப்பற்றி நான் சொல்ல முடியும். ஒவ்வொரு மாவட்டத்திலும் இதைப்பற்றி சட்டம் வருவதற்கு முன்னாலே விசாரித்து வந்தேன். குடியரசுத் தலைவர் இதைச் சட்டமாகக் கொண்டு வருவதற்கு ஒப்புதல் அளித்ததற்குப் பின்னாலே, இப்படிப் பட்ட சட்டம் கொண்டுவருவது நாட்டுக்கு நல்ல பலன் அளிக்குமா என்று பலவகையில் விசாரித்துப் பார்த்துவிட்டுத்தான் வந்திருக் கிறேன். வேலூர் நகரத்தில் எனக்கு வியாபாரிகள் வந்து வரவேற்பு கொடுத்துவிட்டு இதைச் சொன்னார்கள். நாங்கள் இப்படி வாங்கு கிறோம் விற்கிறோம் என்று அவர்களே சொன்னார்கள். நம்முடைய அரசாங்க ஒழுங்குமுறை மார்க்கெட்டைவிட மிக நல்ல முறையில் அவர்கள் வைத்து இருக்கிறார்கள். பக்கத்திலேதான் ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் இருக்கிறது, அங்கே சரிவர செய்ய முடிய வில்லை. இந்த இரண்டு கிடங்குகளில் இருப்பவர்களும் எந்த அள வுக்கு வியாபாரம் செய்கிறார்கள் என்பதைப் பார்த்தேன் சேலத்தில் இருக்கும் வியாபாரிகளும் என்னை வந்து சந்தித்து சொன்னார்கள். விவசாயிகள் எங்கே போயும் அலைய வேண்டிய தில்லை. கஷ்டப்படவேண்டியது இல்லை. எங்கே போக சௌகர்யமோ அங்கே போய் வாங்கலாம் என்று சொன்னார்கள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலைக்குச் சென் றிருந்தேன். அங்கே இராமநாதபுரம் மாவட்டம், கடலூர் போன்ற இடங்களில் இருந்து எல்லாம் வந்து கடலைக்காய் வாங்கிக்கொண்டு போகிறார்கள். யாருடைய வியாபாரத்தையும் பாதிப்பதாகத் தெரியவில்லை.

1971 டிசம்பர் 15] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று வற்புறுத்தி னார்கள். நான் எல்லோரையும் சந்தித்துப் பேசினேன். வியாபாரி களைச் சந்தித்துப் பேசினேன். அவர்களிடத்தில் சொன்னேன். சட்டம் கொண்டு வந்தால் என்னென்ன பலன்கள் ஏற்படும் என்ப தைச் சொன்னேன். யாருக்கும் கஷ்டம் வராது. உங்களுக்கு இருக்கும் பிரிவுகள் இருக்கும் என்று சொன்னேன். எல்லா மாநிலத்திலும் இப்படிப்பட்ட சட்டம் இருக்கிறதா என்று கேட் டார்கள். இந்தச் சட்டம் எல்லா மாநிலத்திலும் இருக்கிறது. இந்தச் சட்டம் அமுல் நடத்துவதற்கு காலதாமதம் ஆகிறது, அங்கேயெல்லாம் செயல்படுத்தப்படவில்லை, அவ்வளவுதான்.

உங்களுக்கு எல்லாம் தெரியும், 1933-ல் ஆரம்பிக்கப்பட்டது இது. என்றாவது ஒரு நாள் இது முடிவடையத்தான் வேண்டும். கால தாமதம் செய்வது சரியல்ல. சோசலிஷ தத்துவத்திற்கு மதிப் பளிக்க வேண்டுமானால், இதற்கு நிச்சயம் ஒரு நாள் தீர்வு கண்டாக வேண்டும். ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு சட்டம் செய்யப்படு கிறது. இது விவசாயிகளுடைய பிரச்னை. உங்களுக்கு அவர் களிடத்தில் அக்கறை இருக்கும். அவர்கள் வாழ்ந்தால் தான் நாடு வாழும். அவர்களுக்கு நல்லது செய்கிற இந்தச் சட்டத்தை அமல் செய்வதற்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். இதற்கு ஒரு செலக்ட் கமிட்டி போட்டு, அதனுடைய ரிப்போர்ட் எப்போது வருகிறது என்று பார்த்துக்கொண்டு இருப்பதைவிட, இதற்கு இப்போது ஒத்துழைப்பு கொடுத்தால் நன்றாக இருக்கும். செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினால் அது கிடப்பில் போனதுபோல் ஆகிவிடும். ஆகவே, இந்தச் சட்டம் விவசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய சட்டம், அவர்களுக்கு ஒரு நல்ல காலம், விடிவு காலம் ஏற்படுத்தி வைக்கிற சட்டம், இதை மாண்புமிகு உறுப்பி னர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக் கிறது, இதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டு, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்ற திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : அமைச்சரவர்கள் இந்தச் சட் டத்தைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டால் காலதாமதமாகும் என்று சொன்னார்கள். விற்பனை வரி மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது கிடப்பிலே போடப் பட்டிருக்கிறதா? ஹோமியோபதி சட்ட மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது கிடப்பில் போடப்பட்டிருக்கிறதா? ஆகவே இதிலே நான் கொடுத்திருக்கிற திருத்தத்தை கிடப்பில் போட்டு விடுவார்கள் என்று காரணம் காட்டி, ஏற்காமல் இருப்பது சரியல்ல. இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினால், இன்னும் சில புரட்சி கரமானத் திட்டங்களைச் சேர்க்கலாமா என்று யோசித்துப் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே இன்னும் புரட்சிகரமான சட்டங்களை இதிலே சேர்த்துக்கொள்ளலாம் என்பது ஏற்கக்கூடியதாக இல்லை. இப்போதைக்கு இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். இன்னும் தீவிரமாகச் சட்டங்களை பிறகு கொண்டு வரலாம்.

MR. DEPUTY SPEAKER : Are you pressing your amendment?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : What is the use of pressing when we are only 14? I am not pressing it.

The amendment of Thirumathi T. N. Anandanayaki was, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is :

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1971, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration, clause by clause.

MR. DEPUTY SPEAKER : There are no amendments to the Clauses.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU A. P. DHARMALINGAM :

"தமிழ் நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

The motion was put and carried and the Bill was passed into law.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

115. Notification issued with G.O. Ms. No. 2007, Rural Development and Local Administration, dated the 1st September 1971, in regard to resignation of Director of Rural Development as a member of the Tamil Nadu Khadi and Village Industries Board. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

116. Notification issued with G.O. Ms. No. 2858, Public (Service-A), dated the 17th September 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations 1954, for exclusion of the posts of Secretary, Official Language Committee, Special Officer (Translation) and Special Officer (Inspection) in the Office of the Official Language Committee from the Commission's purview [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

117. Notification issued with G.O. Rt. No. 1891, Revenue, dated the 21st October 1971, in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the Convenor, Kasthuribai Children's School, Vellore. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu X of 1939).]

B. *Reports, Notifications and Other Papers.*

@ 69. The Tamil Nadu Industrial employees Payment of Gratuity Bill, 1971 (L.A. Bill No. 42 of 1971).

@ 70. The Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 (L.A. Bill No. 43 of 1971).

@ 71. The Madras University (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 44 of 1971).

@ 72. The Employment Exchange (Payment of Allowances) Bill, 1971 (L. A. Bill No. 45 of 1971).

@ 73. The Christian Succession (Repeal) Bill, 1971 (L. A. Bill No. 46 of 1971).

@ Despatched to Members on 13—12—1971.

இணைப்பு.

[18-ம் பக்கத்தில் 411ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

STATEMENT SHOWING THE NUMBER OF RADIO SETS AWARDED TO MOST-NEATLY MAINTAINED HARIJAN COLONIES AND THE AMOUNT SPENT ON THIS

DISTRICTS.	1967–68.		1968–69.		1969–70.		1970–71.		Remarks.
	No. of radio sets awarded.	Amount spent.	No. of radio sets awarded.	Amount spent.	No. of radio sets awarded.	Amount spent.	No. of radio sets awarded.	Amount spent.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
		RS.		RS.		RS.		RS.	
1. Chingleput ..	8	2,400·00	12	3,600·00	8	2,400·00	12	3,600·00	
2. North Arcot ..	12	3,600·00	12	3,392·40	11	3,275·00	13	3,900·00	
3. South Arcot ..	8	2,400·00	8	2,400·00	8	2,400·00	8	2,400·00	
4. Thanjavur ..	12	3,587·00	12	3,332·70	12	3,327·00	12	3,520·00	
5. Tiruchirappalli ..	13	3,902·08	12	4,243·70	12	4,400·50	13	4,521·00	
6. Madurai ..	12	3,600·00	12	3,600·00	12	3,600·00	12	3,600·00	
7. Ramanathapuram ..	9	2,700·00	9	2,700·00	9	2,700·00	9	2,700·00	
8. Tirunelveli ..	9	2,700·00	10	3,000·00	10	3,000·00	11	3,200·00	
9. Kanyakumari ..	4	1,150·00	4	1,200·00	4	1,030·00	4	1,200·00	
10. Salem ..	8	2,400·00	8	2,400·00	9	2,152·00	8	2,236·25	
11. Dharmapuri ..	2	800·00	4	1,200·00	4	1,200·00	6	1,713·00	
12. Coimbatore ..	9	2,684·57	9	2,692·15	9	2,700·00	9	2,700·00	
13. The Nilgiris ..	1	300·00	3	900·00	1	300·00	1	295·00	
Total ..	107	32,224·25	115	34,660·96	109	32,484·50	118	35,687·25	

தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1971 டிசம்பர் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Drainage schemes, Corporation of Madras

* 444. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) whether this Government has received any request from the Corporation of Madras for loan for implementing drainage scheme for 1969-70; and

(*b*) the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 1969-70-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 26 இலட்சம் தொகைக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும்.	23-11-1969 நாளிட்ட 2,242 ஆணையில் ஒப்பளிப்பு வழங்கப் பட்டு 3-12-1969 நாளன்று வாங்கிய தொகை. (ரூபாய் லட்சத்தில்.)
(1)	(2)
1 கழிவுநீர் அகற்று அடங்கல் திட்டம்—மண்டலம், (1).	5·00
2 செம்பியம் கழிவுநீர் அகற்று திட்டம்	0·50
3 கழிவுநீர் அகற்று அடங்கல் திட்டம்—மண்டலம், (2).	5·00
4 கோடம்பாக்கம் கழிவுநீர் அகற்று திட்டம் ..	2·00
5 சைதாப்பேட்டை கழிவுநீர் அகற்று திட்டம் ..	1·00
6 கழிவுநீர் அகற்று அடங்கல் திட்டம்—மண்டலம், (5)	12·00
7 பாகம் II புதிய திட்டங்கள்—	
(அ) நீட்டிக்கப்பட்ட பகுதியில் சாக்கடை அமைத்தல். (இ) தற்போதுள்ள குறுக்கிடும் சாக்கடைகளின் சீரமைப்புப் பணி.	0·50
மொத்தம் ..	26·00

DR. H. V. HANDE: From the answer of the Hon. Chief Minister it is seen that the amount has been given in 1969-70. May I know whether the State Government has seen to it that the money is fully spent by the Corporation, whether it is not a fact that the Corporation is not able to cope up with the extraordinary load of drainage, especially in view of the fact that the whole City was built during the Thirties for a population of seven lakhs for an area of 18 square miles? May I know from the Hon. Chief Minister whether any further provision is made on behalf of the Government and may I know whether the whole thing will be taken over by the Government itself and the whole City is properly looked after?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றி நிலைமைக் கேற்ப பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, the Kodambakkam scheme was started in 1959 and they are not able to complete it and many stumbling blocks are there. Particularly the place for emptying the drainage water is not yet settled. There are certain objections and for the last ten years the pipes are lying underground. Will the Government see that immediate efforts are taken to see that this scheme is completed because 90 per cent of the distribution scheme is already completed? It is only waiting for a place to empty the water. Will the Government see to it?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கோடம்பாக்கம் பம்பிங் ஸ்கீமில் சில வேலைகளைத்தவிர மற்ற வேலைகள் அனைத்தும் முடிந்து விட்டன. அவையும் விரைவாக முடிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. கா. காளிமுத்து: இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சென்னை மாநகராட்சிக்கு அரசு கடன் வழங்கியிருப்பதைப் போல மதுரை மாநகராட்சிக்கும் மற்ற நகராட்சிகளுக்கும் கூட அரசு கடன் வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சென்னை மாநகராட்சியைப்பற்றிக் கவலைப்பட்டு ஒரு கேள்வி கேட்கும்போது, மதுரை மாநகராட்சியைப் பற்றிக் கேள்வி கேட்பதற்கு அதில் இடையிலே புகுந்துக்கொள்ளக் கூடாது. தனி அக்கறை இருந்தால் தனிக் கேள்வி போடவும்.

L. I. C. loan for water-supply and drainage schemes

*445. *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government has applied for a loan with L.I.C. for water-supply and drainage for Municipal towns and City Corporation; and

(*b*) whether the L.I.C. has sanctioned the loan?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ஆம். கிராமப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் குடிநீர் வழங்கு, கழிவு நீரகற்று திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், 1969-70-ஆம் ஆண்டுக்கு ரூ. 192.33 இலட்சமும் 1970-71-க்கு ரூ. 270.78 இலட்சமும் கடன் ஒப்பளிப்பு செய்தது. 1971-72-ஆம் ஆண்டுக்கு 83 குடிநீர் வழங்கு, கழிவு நீரகற்று திட்டங்களுக்காக ரூ. 616.82 இலட்சம் கடனாக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் கேட்கப்பட்டுள்ளது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மாநகரில் குடிநீர் வழங்கு, கழிவுநீர் அகற்று திட்டங்களுக்காக இதுவரை ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் கடன் உதவி ஏதும் பெறவில்லை.

DR. H. V. HANDE: May I know the amount spent so far and what is the general progress of the work? May I know whether any progress has been made and whether the Government has started utilising the amount, especially to major towns like Madurai and Coimbatore where Siruvani water-supply is also a problem and whether this money will be diverted for that also?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது இந்தக் கடனைப் பெற்று எல்லா இடங்களிலுமே நல்ல முறையில் இந்தக் குடி நீர் வழங்கு திட்டமும் கழிவு நீரை அகற்றுகின்ற திட்டங்களும் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட எண்பதுக்கு மேற்பட்ட இடங்களில் இந்தத் திட்டம் இப்பொழுது செயல்பட்டு வருகின்றது. இவைகளில் பல திட்டங்கள் விரைவில் முடிவு அடையும் தறுவாயில் இருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Is it not a fact that the Government is asking the Corporation to apply for a loan to the L.I.C. instead of Government applying for a loan and what is the reason for this? For other municipalities the Government directly applies.

மாண்புகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழக அரசின் சார்பில் சென்னை மாநகராட்சிக்கு இந்தத் திட்டங்களுக்காகப் பண உதவி —கடனாகவும் மானியமாகவும்—அளிக்கப்பட்டிருக்கிறது. எல்.ஐ.சி. இடம் அது கேட்கவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: எல்.ஐ.சி. அதிகாரிகள், இந்தப் பகுதியில் நாங்கள் அதிகமாகக் கடன் கொடுக்கிறோம் என்று அறிக்கை விட்டுக்கொண்டே இருக்கிறார்கள். 1971-72-ம் ஆண்டுக்கு இரண்டே முக்கால் கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்களே, அதில் மாநகராட்சிக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்க முடியும்.

[1971 டிசம்பர் 16

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தற்போது செயல்பட்டு வருகின்ற கன்னியாகுமரி மாவட்ட நீர் வழங்குதிட்ட விவரம் வருமாறு :—

1. நாகர்கோயில் நீர்வழங்கு மேம்பாட்டுத் திட்டம்.
2. குழித்துறை நீர் வழங்கு திட்டம்.
3. முட்டம் நீர்வழங்கு மேம்பாட்டுத்திட்டம்;
4. கரிங்கால் நீர் வழங்கு மேம்பாட்டுத்திட்டம்.

திரு. என். டென்னிஸ் : பட்டணங்கால் திட்டம் அமலாக்கப் படுவதில் குழித்துறை திட்டத்தை குடிநீர் திட்டமாக மாற்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி உடனடியாகச் சொல்வதற்கில்லை. இந்தக் கேள்வியை வைத்து ஆராய வேண்டும்.

மத்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன்கள்

*448 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய அரசுக்குச் சேர வேண்டிய நடப்பு ஆண்டு கடனை திருப்பிச் செலுத்துவதற்கு கால அளவினை மாற்ற 1969, 1970ம் ஆண்டுகளில் மாநில அரசு கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கு இந்திய அரசு தந்துள்ள பதில் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இந்திய அரசு இரண்டு ஆண்டுகளிலும் கடன் தவணைக்கான கால அளவை நீட்டிக்க அதாவது அக்டோபர் திங்கள் முதல்நாள் செலுத்த வேண்டிய கடன் தவணையை, அந்நிதியாண்டின் முடிவுக்குள் செலுத்தலாமென்று ஒப்புக்கொண்டது. அந்த ஆண்டினைக் கடந்து கால அளவினை நீட்டிக்க ஒப்புக் கொள்ளவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிற்கு வருமானம் குறைவாக இருப்பதன் காரணமாக, ஆக்க பூர்வமாக, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய கால மாகையால் கொடுத்த கடனின் காலத் தவணையை இந்திய அரசு நீட்டித்தர வேண்டுமென்று வற்புறுத்த ஏதாவது முயற்சிக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிதி விஷயத்தில் நாம் அடிக்கடி மத்திய அரசினிடத்தில் வற்புறுத்திக் கொண்டிருக் கிறோம். மேலும் பேசுவோம். தொடர்ந்து பேசுவோம்.

1971 டிசம்பர் 16]

Thiru K. M. SUBRAMANIAM : Sir, in view of the financial difficulties of municipalities and the Corporation of Madras, will the Government consider the grant of loans to these bodies?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்.

திரு. நா. வீராசாமி : மத்திய அரசாங்கத்திற்கு நாம் ஆந்திர மாநிலம் நம்மோடு சேர்ந்திருந்தபோது வாங்கிய கடனைக் கூட கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. கடன் தவணையைக் கூட்டிக் கொடுக்கக்கூட மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட கடன்களையாவது ரத்து செய்யவேண்டுமென்று நமது அரசாங்கம் மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒத்திப்போடுவதற்கே தயங்குகிறார்கள். ரத்து செய்யச் சொன்னால் என்ன பதில் அளிப்பார்கள் என்று தெரியும்.

திரு. எம். தேவராசன் : நாம் கொடுக்க வேண்டிய வட்டியையாவது தள்ளிவிட வற்புறுத்துவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நம்முடைய மாநிலத்திற்கு அதிகச் சலுகை கிடைக்கவேண்டும் என்பதில் மத்திய அரசுக்கு நம்முடைய நியாயங்களை எடுத்துச்சொல்லி இந்த அரசு வற்புறுத்தி வாதாடி வரும்.

Grants for political sufferers

*449 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government of India have called for proposals for increasing pensions for Political sufferers;

(b) whether the Government have proposals to increase the quantum of pensions; and

(c) if so, the amount by which it will be increased?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : அரசியல் தியாகிகள் மனுச் செய்வது செப்டம்பர் 15 வரை என்பதாக காலத்தை நீட்டித்துக் கொடுத்த ஏற்பாடு சிறந்தது. அதேமாதிரி இப்போது கொடுக்கும் மானியத்தொகை ரூ. 50 என்றிருப்பதை ரூ. 75 என்றோ, ரூபாய் 100 என்றோ உயர்த்திக்கொடுக்க நமது அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா? மத்திய அரசு ஏற்காவிட்டால் நமது அரசே முயற்சி செய்து இதுபோன்று கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் திட்டம் 1—10—1966-இல் ஆரம்பிக்கப்பட்டது. 31-12-1966 வரை அரசியல் தியாகிகள் ஐந்து பேர்களுக்கே அப்போது பணம் கொடுக்கப்

பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் 1967-ல் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தவுடன்—1967-இல் 1,254 பேர்களுக்கும், 1968-இல் 1,817 பேர்களுக்கும், 1969-இல் 1,742 பேர்களுக்கும், 1970-இல் 1,914 பேர்களுக்கும், இப்போது 1—1—1971 இல் இருந்து 5—11—1971 வரை அரசியல் தியாகிகள் 450 பேர்களுக்கும் ஆக 7,182 பேர்களுக்கு இந்த உதவித்தொகையை அளித்து வருகிறது. இதற்காக 1967-இல் இருந்து 1971 வரை ஆகியிருக்கிற செலவு ஒரு கோடியே பதினான்கு லட்சத்து பத்தாயிரத்து எழுநூற்று நாற்பத்தொன்பது ரூபாய். மேலும் ரூ. 50 என்பதை ரூ. 75 ஆகவோ, 100 ஆகவோ மாற்றினால் எவ்வளவு செலவு ஆகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். நாம் முன்பே பலபேர்கள் பயன் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் பல தடவை விண்ணப்பித்துக் கொள்வதற்கு காலகெடுவை நீட்டிக்கொடுத்தோம். இறுதியாக 15—9—1971 என்று அண்ணா பிறந்த நாளைக் குறித்தோம். இவ்வளவு சலுகை அளிக்கப்பட்ட பிறகு தொகையை அதிகப்படுத்திக்கொடுப்பதற்கு இப்போது பண வசதியில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சுருளிவேல் : தலைவர் அவர்களே, அரசியல் தியாகிகளின் பட்டியலில் நமது நாட்டு சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களின்பெயர்கள் சேர்க்கப்படுவதோடு, தமிழ்மொழியின் உரிமைக்காக, தமிழர்களின் வாழ்வுக்காக தங்களையே மாய்த்துக் கொண்டவர்களின் பெயர்கள் சேர்க்கப்படுமென முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அத்துடன் 1965 மொழிப்புரட்சியில் * பலியான 500-க்கும் மேற்பட்ட வீர மறவர்களும் அரசியல் தியாகிகளின் பட்டியலில் சேர்க்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : * என்ற வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * என்ற சொற்கள் அவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன. பத்திரிகைகளும் அதைப் பிரசுரிக்கவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மொழிப் போராட்டத்தில் உயிர் துறந்தவர்கள், மொழிப் போராட்டத்தில் பலியானவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு எண்ணப்பட வேண்டியவர்கள் என்றாலும் இப்போதுள்ள நிதிநிலையில் அரசு அவசரப்பட்டு அவர்களைச் சேர்க்க இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தியாகிகளுக்கு பென்ஷன் அளிக்க ஒரு வருமான வரம்பு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதே, அதை நீக்கி எல்லோருக்கும் கொடுக்க முன் வருவார்களா ?

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கனவே ஒரு வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. சுற்றத்தார் வருமானம் கூட அப்போது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்போது சுற்றத்தார் வருமானத்தை நீக்கிச் சலுகை அளிக்கிற வகையில் திருத்தப்பட்டு இருக்கிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டமும் மற்றும் தமிழ் பகுதிகளும் தாய்த் தமிழகத்தோடு இணைவதற்காக ஏற்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றவர்களையும், பலவிதத் துன்பங்களை அனுபவித்தவர்களையும் தியாகிகள் பட்டியலில் சேர்த்து மானியம் வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே. தியாகிகள் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஆனால் கஜானாவில்தான் பணம் இல்லை.

திரு. காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, தியாகிகள் மானியம் பெறுவதற்கு என்னென்ன தஸ்தாவேஜுகள் தாக்கல் செய்ய வேண்டும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1966-ம் ஆண்டில் காங்கிரஸ் அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது. தியாகிகள் என்று சொல்லப்படுபவர்கள் குறைந்தது மூன்று மாத காலம் சிறையில் இருந்திருக்க வேண்டுமென்றும், அப்படிச் சிறையில் இருந்ததற்கான சரியான அத்தாட்சியைச் சிறை அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் இருந்தது. ஆனால் நாம் ஆட்சிக்கு வந்ததும், சில முறைகளை மாற்றினோம். சிறையில் இருந்தது பல ஆண்டுக் காலமாக ஆகிவிட்டதால், அவர்கள் சிறை அதிகாரிகளிடமிருந்து அத்தாட்சி பெறுவதில் சிரமம் இருக்குமென்ற காரணத்தினால், மிகுந்த பொறுப்பு வாய்ந்தவர்கள் யாரிடமிருந்தாவது அவர்கள் சிறையில் இருந்தார்கள் என்கிற நற்சாட்சி பெற்றுவந்தால் போதும் என்று பெருந்தன்மையோடு இந்த அரசு உத்திரவிட்டுள்ளது.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரசியல் தியாகிகள் மானியம் பெறுவதில் எத்தனை பெண்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த விவரம் இல்லை. தியாகிகளில் ஆண் பெண் வித்தியாசம் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, அரசியல் தியாகிகள் சான்றிதழ்கள் அளிக்கின்றபொழுது, மாஜி அமைச்சர்கள் சான்றிதழ் அளித்தால் பென்ஷன் அளிக்கப்படும் என்று விதி வகுக்கப்பட்டிருக்கிறது. தங்களோடு கூட இருந்த தியாகிகள் சான்றுகள் அளித்தால், அவர்களுடைய விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ள அரசு முன்வருமா?

அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்றாக இணைத்து வெளியிடுமாறு இக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கான வழிவகைகளை இந்தக் குழுவினர் முயன்று ஆக்கவேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

திரு. மு. சுருளிவேல் : தலைவர் அவர்களே, 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்த குடி' யின் மாண்டப் பெருமையை, புகழினை மீண்டும் நிலைநாட்டிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர், பேராசிரியர் ஆகியோருடைய வரலாறுகளையும் தமிழில் தொகுக்கப்படுமா ? தமிழினத்தின் பெருமையை நிலைநாட்டி, மேன்மைப்படுத்தியவர்களாக அவர்கள் பணிபுரிந்திருக்கிற காரணத்தால், அவர்களைப்பற்றி, தனிச்சிறப்பாக—ஸ்பெசிஃபிக் இன்ஸ்ட்ரக்ஷன்—குறிப்புகள் அந்தக் குழுவினருக்குக் கொடுத்து, வரலாற்றினைத் தொகுக்க தக்க ஏற்பாடுகளை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தொன்மைமிக்க சிறப்புக்களை எடுத்துக்கூறுவதற்காக தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தினர் இந்தக் குழுவை ஏற்படுத்தி, தமிழ்நாட்டின் வரலாறுபற்றி ஆய்வு செய்து வருகின்றனர். மற்றவர்களுடைய வரலாறுகளை அவ்வப்பொழுது பலர் வெளியிட்டு வருகிறார்கள்.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தமிழகத்தின்பால் பேரன்பும் பெருமதிப்பும் நல்ல அக்கறையும் கொண்டிருக்கிறவரும் தமிழ் காக்கச் சிறைசென்றவருமான பேராசிரியர் இலக்குவனார், தேவநேயப் பாவாணர் போன்றவர்கள் இந்தக் குழுவில் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழக வரலாற்றுப் பணிக்கு அவர்களுடைய அறிவாற்றலைப் பயன்படுத்திக்கொள்ள இக் குழுவினர் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம், தமிழ்நாட்டு வரலாற்றினை ஆராய்ந்து எழுதுவதற்கு டாக்டர் மு. வரதராசனார் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றினை அமைத்துள்ளனர். இந்தக் குழுவில் 9 பேர்களை உறுப்பினர்களாக நியமித்திருக்கிறார்கள். டாக்டர் மு. வரதராசனார், துணைவேந்தர், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை—தலைவர். திரு. முத்து இராசாக்கண்ணனார், திரு. மயிலை சீனி வெங்கடசாமி, திரு. இரா. நாகசாமி, எம்.ஏ., தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர், சென்னை-28., திரு. அ. இராகவன், பாளையங்கோட்டை, திரு. கா. அப்பாத்துரை, திரு சி. இ. இராமச்சந்திரன், ரீடர், வரலாற்றுத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம், திரு. க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ., திருக்குறள் ஆராய்ச்சித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம், திரு. கே. ஆர். அனுமந்தன், எம்.ஏ., வரலாற்றுப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை, ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். மேலும் பேராசிரியர்களுடைய சிறந்த கருத்துக்களையும் குழுவினர் கேட்டறிந்து பயன்படுத்திக்கொள்வார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு முழுமையான பணியை தமிழக அரசு மேற்கொண்டிருக்கும் வேளையில், இந்தக் குழுவினுடைய முழுமையான 'தமிழக வரலாற்றினை' முதலில் தமிழில் தொகுத்து, பின்னர் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அளித்து மேலைநாடுகளிலும், கீழைநாடுகளிலும் தமிழகத்தின் வரலாற்றைத் திரித்துச் சொல்லப்படும் நிலைமையும்--என்சைக்ளோஃபீடியாக்களிலும் மாற்றி எழுதப்படும் நிலையையும் விரைவில் போக்க முற்படுவார்களா ? இந்த வரலாறு எழுதுவதற்கு காலவரையறை ஏதாவது வரையறுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் குழுவிற்கு இரண்டாண்டுக் காலம் என்று காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலில் தமிழில் உருவாக்கி வெளிவந்தபிறகு, ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது பற்றி பின்னர் யோசிக்கலாம்.

உள்ளூர் நூலக ஆணைக்குழு.

*** 451 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உள்ளூர் நூலக அதிகாரக்குழு இணை மானியம் எதுவும் பெறுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1948-ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின் 13 (3)-வது பிரிவிற்கிணங்க, சென்னை உள்ளூர் நூலக அதிகாரக் குழு இணை மான்யம் பெறத் தகுதி வாய்ந்ததல்ல.

குண்டாக்கல்பட்டி-மேலடைமாணிக்கபுரம் சாலை

*** 452 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்டகளுக்கு விடையளிப்பாரா—

(அ) குண்டாக்கல்பட்டியிலிருந்து மேலடைமாணிக்கபுரம் செல்லும் சாலைபோக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் இல்லை என்பது உண்மையா ?

(இ) இதை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இச்சாலையை செப்பனிடும் செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் இல்லை

[1971 டிசம்பர் 16

கோவை நகராட்சி பணியாளர்களின் மிகைவூதிய நிதி

* 453 வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை முனிசிபல் தொழிலாளர் போனஸ் பண்டை பிராவிடன்ட் பண்டாக மாற்ற அரசுக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நகராட்சிப் பணியாளர்கள் மேல் பிரிவுப் பணியாளர் தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்படாமல் கீழ்ப்பிரிவு அல்லது குற்றேவலர் பணித் தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு உள்ளாட்சி மன்றங்கள் கீழ்ப்பிரிவுப் பணியாளர் குற்றேவலர் வருங்கால வைப்பு நிதி விதிகள் பொருந்தும். மேல் பிரிவுப் பணியாளர்களுக்குப் பொருந்தக்கூடிய பயன்களை கீழ்ப்பிரிவு—குற்றேவல் பணியாளர்களுக்கும் நீட்டிக்கும் நோக்கத்துடன் இவ்விதிகளுக்கான வரைவுத் திருத்தங்களை வெளியிடுமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, நகராட்சித் தொழிலாளர்கள் கண்டின்ஜென்ட் தொழிலாளர்களாக இருப்பதால் பிராவிடன்ட் பண்ட் பிடிப்பது இல்லை. அவர்களைச் சர்க்கார் சிப்பந்திகளாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ? அப்படியானால் அது எப்பொழுது செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களைச் சர்க்கார் சிப்பந்திகளாக ஏற்றுக்கொள்ளும் செயற்குறிப்பு இல்லை. திங்களொன்றுக்கு 12 முதல் 14 ரூபாய் வரை சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு 2 ரூபாய், 14 முதல் 20 வரை பெறும் ஊழியர்களுக்கு 3 ரூபாய், 20க்குமேல் பெறும் ஊழியர்களுக்கு 4 ரூபாய் என்ற விதத்திலே நகரமன்றத்திடம் கொடுத்துவிட்டால் அந்த விகிதத்திற்கு சமமாக நகரமன்றமும் அளிக்கும். அந்த முறையிலேதான் 22—7—1971-ஆம் நாளிட்ட வரைவுத் திருத்தங்கள் வெளியிடப்பட்டன. நகராட்சிப் பணியாளர்கள் கீழ்ப்பிரிவு அல்லது குற்றேவலர் பணித்தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு வைப்பு நிதி விதிகள் பொருந்தும். இவ்விதிகளுக்கான வரைவுத் திருத்தங்கள் 22—7—1971-ஆம் நாளிட்டு வெளியிடப்பட்டு இருக்கின்றன. அதிலிருந்து மூன்று வாரத்திற்கு உள்ளாக அவைற்றிற்கு எந்த விதமான திருத்தங்களோ அல்லது மறுப்புரைகளோ வருமானால் அவை பரிசீலிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

1971 டிசம்பர் 16]

Wages of electricity workers in Municipalities

* 454. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of Government to enhance the wages of Electricity workers under Municipalities on a par with the wages of Electricity Board workers and

(*b*) if so, from which date?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) மதுரை மாநகராட்சியிலும், தஞ்சை, பொள்ளாச்சி, கரூர், கோயம்புத்தூர் நகராட்சிகளிலும் உள்ள மின்சார நிறுவன ஊழியர்களுக்கு மின்வாரிய ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சம்பள விகிதங்களின் அடிப்படையில் 2—10—1970 முதல் ஊதிய உயர்வு அளிக்கப்பெற்றது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மதுரை, கோவை போன்ற இந்த 5 நகராட்சிகளில் இருக்கக்கூடிய மின்சார ஊழியர்களுக்கு மற்ற வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போன்று கொடுக்கவேண்டுமென்று ஏற்கனவே நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அந்தச் சமயத்தில் இதிலே இருக்கக்கூடிய சிப்பந்திகளுக்கு அனுமலிஸ் இருக்கின்றன என்றும் அந்த அனுமலிஸ் பற்றிக் கவனிக்கலாம் என்றும் சொன்னார்கள், அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதை ஆராய்ந்து துறையினருக்கு அனுப்பியிருக்கிறார்கள். துறையினர் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

திரு. என். மருதாசலம் : நகரங்களில் வேலைசெய்யக்கூடிய மின்சார ஊழியர்களுக்கு மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டும் இன்னும் அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறதே, கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 2—10—1971 அன்று சம்பள உயர்வு வாரியத்திலே கிடைக்கக்கூடிய அளவுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். விரைவில் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

Death due to tetanus in Thanjavur Medical College Hospital

* 455. Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that a patient died in the Thanjavur Medical College Hospital due to tetanus, during November, 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம். 55 வயதுள்ள சுப்பிரமணியம் என்ற ஒரே ஒரு நபர் மட்டும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 25—11—70 அன்று இறந்தார்.

(இ) டாக்டர் எஸ். சுந்தரவெங்கிடகிருஷ்ணன் பிரிவைச் சேர்ந்த சுப்பிரமணியம் 13—11—1970 அன்று சேர்க்கப்பட்டார். மூலச்சுட்டிக்காக, அவர் 'A' அறுவைச் சிகிச்சைக் கூடத்தில் 17—11—1970 அன்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டார். அவருக்கு 23—11—1970 அன்று இசிவு நோய் கண்டது. 'A' அறுவைச் சிகிச்சைக்கூடம் 23—11—1970 முதல் 31-12-1970 வரை ஏறத்தாழ 40 நாட்கள் மூடப்பட்டிருந்தது. நோயாளி 25-11-1970 அன்று இறக்க நேரிட்டது.

Dr. H. V. HANDE: Sir, now and then we hear about the reports that occasionally, casually in certain surgical theatres this tetanus enters the theatre and when it enters and after the patient dies the theatre is completely cleaned and disinfected and the tenanus is prevented. May I know whether it is possible for the Government to issue instructions, if necessary, to take preventive measurers likke tetanus toxide even before the operation starts and may I know whethre a general blanket order of that type will be issued under the guidance of the Hon. Minister for Public Health?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, டெட்டனஸ் அல்லது இசிவு நோய் பொதுவாக நம்முடைய மருத்துவ மனைகளில் ஏற்படுவதில்லை. தஞ்சாவூரில் மருத்துவமனையில் இரண்டு நிகழ்ச்சிகள் ஏற்பட்டதன் காரணமாக அந்த ஆப்ரேஷன் தியேட்டர் 15, 20 நாட்களுக்கு மூடிவைக்கப்பட்டது. பிறகு கிருமி நாசினி மருந்து மூலமாக சுத்தப்படுத்தப்பட்டது. வாஷிங் சோடா மூலமாகவும் சுத்தப்படுத்தப்பட்டது. கார்போலிட் மிக்சர் மூலமாகவும் சுத்தப்படுத்தப்பட்டது. முதலிலே ஒரு இளைஞர் ஜான் என்பவருக்கு இசிவு நோய் கண்டது. அறுவைச் சிகிச்சை நடந்து 20 நாட்களுக்குப் பின்னர். அவருக்குச் சிகிச்சை தரப்பட்டு நலம் பெற்றுவிட்டார். ஆனால் இன்னொருவருக்கு இசிவு நோய் கண்டது. அவர் இறக்க நேரிட்டது. இதைப்பற்றி விசாரணை செய்யப்பட்டது.

Reader in Operative Surgery Dr. Sundaravenkatakrishnan, Honorary Surgeon, Dr. Sivaraman, Chief Anaesthesis, Dr. (Thyagesan)

ஆகியவர்கள் எல்லாம் பரிசீலனை செய்திருக்கிறார்கள்.

Dr. Sundaraventakrishnan had reported that the patient had a thorn prick in the foot three days prior to admission in the hospital, namely, on 12th August 1970.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இசிவு நோய் கண்டது சிகிச்சையிலே ஏற்பட்ட குறைபாடா என்பது கண்டுபிடிக்க முடியவில்லை, அல்லது ஆப்பரேஷன் தியேட்டரிலே ஏற்பட்ட குறைபாடா என்று சொல்லமுடியவில்லை. குறிப்பிட்ட நோயாளியைப் பொறுத்தவரையில் வேறு காரணங்கள் இருந்திருக்கலாம். இனிமேல் அப்படி ஏற்படாமல் பிரிகாஷனரி மெஷர்ஸ் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Local Fund Dispensary at Denkanikota

* 456. Q.—Thiru K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to upgrade the local fund hospital at Denkanikota; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) தேன்கனிக் கோட்டையிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு ஏற்று நடத்த என் 2176 சுகாதாரம் 19—8—1971-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, may I know whether the orders for upgrading the Denkanikottah hospital is sent to the authorities there and action taken?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த ஆணையின்படி நடவடிக்கைகளும் எடுக்கத் தொடங்கியுள்ளார்கள்.

சேத்தூர் நகர பஞ்சாயத்துக்கு அரசு மருத்துவமனை

*457 வினா—திரு. த. சுப்பு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் உள் வட்டம், சேத்தூர் நகரப் பஞ்சாயத்தில் நிறைந்த வசதிகளோடு கூடிய அரசாங்க மருத்துவ மனை ஒன்றை அமைக்கக் கோரி இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிக்குழு நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தீர்மானம் வரவில்லை.

[1971 டிசம்பர் 16

Hospital at Theni-Alingar

* 458 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether it is a fact that there is only one Doctor in the Hospital at Theni-Alinagar; and

(*b*) if so, the steps taken by the Government to increase the number of Doctors to meet the increasing need?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. கே. டி. கே தங்கமணி : தலைவர் அவர்களே, சமீபத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களே தேனிக்குச் சென்றிருந்தார்கள். அந்த ஆஸ்பத்திரி நல்லமுறையிலே செயல்பட்டுக்கொண்டு வருகிறது. ஒரே ஒரு டாக்டர் மட்டும்தான் இருக்கிறார், அது போதாது, ஆகவே இரண்டு அல்லது 3 டாக்டர்களாவது இருந்தால் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலிலே ஒரு டாக்டராவது அங்கே இருக்கவேண்டுமென்ற முறையிலே சொல்லப்பட்டு 7—5—1971 அன்று இருந்து டாக்டர் பாரதி என்பவர் நியமிக்கப்பட்டு செம்மைபெற்றுவிட்டது. இரண்டாவது டாக்டரும் வேண்டுமென்ற கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது நடைமுறைக்கு வரும்பொழுது ஒரு பெண் மருத்துவர் நியமிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அதற்கு உரிய நேரத்திலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செவிலியர் பயிற்சிக்கு ஆண்கள்.

*** 459 வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மருத்துவத்துறையில் நர்ஸ் பயிற்சிக்கு ஆண்கள் தேர்ந்தெடுக்கப்படுவது எந்த ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவத் துறையில் நர்ஸ் பயிற்சிக்கு ஆண்கள் தேர்ந்தெடுக்கப்படுவது தற்காலிகமாக 1958-ம் ஆண்டு முதல் நிறுத்திவைக்கப்பட்டது. தற்காலிகமாக தொடர்ந்து வருகிறது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மருத்துவமனைகளில் ஆண் நர்ஸ்களுடைய சேவை மிக இன்றியமையாததாக இருக்கிறது. ஆண்டு தோறும் குறைந்தபட்ச எண்ணிக்கையிலாவது ஆண் நர்ஸ்களைத் தெரிந்தெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நர்ஸ் என்பதற்குத் தமிழிலே 'செவிலி' என்ற சொல்தான் பொருத்தமான சொல். அது குறிப்பாக பெண்களுக்குரிய சிறப்புச் சொல்லாகும். இந்த பணிக்கு பெண்கள் வராத காலம் ஒன்றிருந்தது. அப்பொழுது இதிலே ஆண்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். இப்பொழுது ஏராளமாகப் பெண்கள் வருகிறார்கள். இந்த பணிக்கு என்பதால் ஆண்கள் இதிலே போட்டியிட மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், மருத்துவமனைகளிலே இவ்வளவு படுக்கைக்கு ஒரு நர்ஸ் என்று விகிதாச்சாரம் இருக்கிறது. தற்போது இருக்கும் விகிதாச்சாரத்தை இன்னும் மாறுபடுத்த வேண்டுமென்று இது சம்பந்தமாக . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆண் நர்ஸ்களைப் பற்றிய கேள்வி. ரெலவெண்டாக இல்லையே, எப்படிப் பதில் சொல்வது ?

திரு. எம். சுரேந்திரன் : அந்த வகையிலே ஆண் நர்சுகளைப் பயிற்றுவித்து இன்னும் நர்ஸ்கள் அதிகமாகத் தேவைப்படுவதால், நர்சுகளுக்கு பங்கிடப்படும் இந்த படுக்கை விகிதாச்சாரத்தை மாற்றும் முறையில் அதிகப்படுத்தி, பெண் நர்சுகளோடு ஆண் நர்சுகளுக்கும் சேர்த்து பயிற்சியளிப்பது நல்லதா அல்லவா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பெண்கள் இப்பொழுது பயிற்சி பெற்றவர்கள் கிட்டத்தட்ட 500 பேருக்கு மேல் 650 வரையில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நர்ஸ் பயிற்சி பெற்றுவிட்டு, எ.என்.எம். ஆக, அதைவிடக் குறைந்த ஊதியத்தில் வேலை செய்கிறார்கள். அப்படிப் பயிற்சி பெற்றவர்களுக்கு முதலிடம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, ஆண்களுக்கு இப்பொழுது இந்த வேலை கிடைக்காது.

தமிழ்நாடு அரசிதழைத் தமிழில் வெளியிடல்

*** 460 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசாங்க கெஜட்டைத் தமிழில் வெளியிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தமிழ்நாடு அரசின், அரசிதழின் அனைத்து பாகங்களையும் தமிழிலேயே வெளியிட வேண்டும் என்றும், இதனை பல கட்டங்களில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், முதல் கட்டமாக அரசிதழ் பாகம் ஒன்றின் தமிழாக்கத்தினை வெளியிட எடுத்துக் கொள்ளலாம் என்றும் அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எல்லாத் துறைகளிலும் தமிழ் மணம் கமழச் செய்யும் நம்முடைய அரசு, மத்திய அரசு இந்தியிலும், ஆங்கிலத்திலும் கெஜட் அச்சிடுவதைப்போல் நமது அரசு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் அச்சிடுவதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் ஏற்கனவே அறிவித்ததைப்போல், முதல் பாகத்தை முதலில் தமிழில் வெளியிட அரசு ஆணை பிறப்பித்து, அதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மற்றைய மாநிலங்கள் வெளியிடும் அரசிதழ்கள் அந்தந்த மாநில மொழியிலே வெளியிடப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தமிழக அரசாங்கம் தமிழிலே வெளியிடும் குறிப்புகள் ஏராளமாக இருக்கும்பொழுது, அதை ஆங்கிலத்திலே மட்டும் வெளியிடுவது தமிழை அமலாக்கும் கொள்கையில் அரசாங்கம் தாமதப்படுத்துகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, தமிழில் வெளியிட வேண்டுமென்ற கொள்கையில் அரசு தீவிரமாக இருப்பதால்தான் முதல் பாகத்தைத் தமிழில் வெளியிடுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தமிழக அரசு வெளியிடும் இந்த கெஜட் இருக்கிறதே, அதன் கடைசியான வெளியீடு எப்பொழுது வந்தது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிக்கேள்வி போடவும்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் மருத்துவமனைகள்.

*** 461 வினு.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டு, ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் மருத்துவமனை கட்ட இருந்து கைவிடப்பட்ட திட்டங்கள் எவை ?

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : (அ) & (இ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் நிதிப் பற்றுக்குறையின் காரணமாக கீழ்க்காணும் இடங்களில் மருத்துவமனை கட்டுவதற்கான திட்டங்கள் கைவிடப்பட்டுவிட்டன.

திருச்சிராப்பள்ளி ;
திருப்பூர்;
விக்கிரமசிங்கபுரம் ;
தூத்துக்குடி ;
திருநெல்வேலி .
ராஜபாளையம் ;
சேலம்;
மேட்டூர் ;
உருக்குநோய் மருத்துவமனை, மதுரை ;
உருக்குநோய் மருததுவமனை, கோயம்புத்தூர ;
உருக்குநோய் மருத்துவமனை, சென்னை (2).

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, இப்படி தொழிலாளர் மருத்துவமனைகளை அமைக்கும் காரியம் கடந்த நான்கைந்து ஆண்டுக்காலமாக நிறுத்தப்பட்டு விட்டது. நம்முடைய அரசாங்கம் ஈ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷனை வற்புறுத்தி, தொழிலாளர்கள் மிகுந்திருக்கும் திருப்பூரில், 100 படுக்கைகள் கொண்ட திட்டம் ஒன்று கைவிடப்பட்டிருக்கிறது, அதைக் கட்டுவதற்கு முயற்சியெடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, இதைப் பற்றி ஈட்டுறுதிக் கார்ப்பொரேஷனிடத்திலே நமது அரசாங்கம் கடிதப்போக்குவரத்திலேயும், நேரிடையே சந்தித்தும் வற்புறுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறுகிய கால வினு

கீழ் வெண்மணியில் அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்.

*** குறுகிய கால வினு எண் 2—திரு. மணலி சி. கந்தசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ் வெண்மணி கிராமத்தில் ஹரிஜனங்களுக்குக் காலனி அமைத்துக் கொடுக்கும் திட்டத்தில் தாமதம் ஏற்படக் காரணம் என்ன ?

(இ) ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது பேய் மழையின் காரணமாக விடிழந்து நிற்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) மேற்படி திட்டத்தில் தாமதம் ஏற்பட முக்கியமான காரணம் பின்வருமாறு, தீவிபத்தால் பாதிக்கப்பட்ட அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக உத்தேசிக்கப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்கள் 9—11—1969 அன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் அரசின் நில ஆர்ஜித உத்தரவின் மீது ரிட் மனு தாக்கல் செய்ததால், நில ஆர்ஜிதம் செய்வதற்குத் தாமதம் ஏற்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் 23—6—1971 அன்று அரசுக்கு அனுப்பிய

கடிதத்தில் சென்னை உயர்நீதி மன்றம், மேற்படி திட்ட மனுவை 10—2—1971 அன்று தள்ளுபடி செய்துவிட்டதெனவும், அந்நிலத்தில் அரிசனங்களுக்கு வீடுகட்டுவதற்கான உத்திரவை பிறப்பிக்குமாறும் அரசிடம் கோரியதின் பேரில் அரசு தனது ஆணை 1334 (நிலை) தேதி 18—11—1971-ல் ரூ. 51,200 செலவில் 32 வீடுகள் கட்டுவதற்கான உத்திரவு பிறப்பித்துள்ளது.

திரு. மணலி. சி. கந்தசாமி : தலைவரவர்களே, கீழ்வெண்மணி சம்பவத்தின் தன்மையை வைத்துப் பார்க்கும்பொழுது, ஏற்பட்டிருக்கும் காலதாமதம் பெரிய அளவிற்கு சமுதாயத்திற்கு ஒரு வருத்தத்தை ஏற்படுத்தி விடுவதால், சீக்கிரமாக அதைக் கட்டுவதற்கு விசேஷ நடவடிக்கைகளை எடுக்க சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : முதலில் இந்த இடம் வேண்டாம், வேறு இடத்திற்குச் செல்கிறோம் என்று பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். எனவே, வேறு இடம் பார்த்துக் கொண்டிருந்தோம். பிறகு இதே இடத்திலே வீடு கட்டிக்கொடுங்கள், இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்காக இந்த இடத்தை எடுக்க முடிவு செய்த பிறகு, நிலத்தின் சொந்தக்காரர்கள் கொடுக்க மறுத்து உயர்நீதிமன்றத்திற்கு வழக்குக்குச் சென்றார்கள். வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. அதற்குப்பிறகு கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசு எடுத்திருக்கிறது.

அரிசன மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை

* 462 **வினா.—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின் தங்கிய மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் ரூ. 15-ம் ஹரிஜன மாணவர்களுக்கு ரூ. 5-ம் அரசாங்கம் உயர்த்தியுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனின், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) அரிசன மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உண்டுறை உதவித்தொகை 1960-ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. பின்தங்கிய மாணவர்களுக்கு 1960-ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த தொகையே தொடர்ந்து அளிக்கப்பட்டு வந்தது. உண்டுறை உதவித்தொகையை உயர்த்த செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்தபொழுது, பின்தங்கிய மாணவர்களுக்கும், அரிசனங்களுக்கும் உள்ள வித்தியாசம் தேவையில்லை என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால் பின்தங்கிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்களைவிட பொருளாதார நிலையில் சற்று மேம்பட்டிருப்பதால் இருவருக்குமிடையே வித்தியாசம் இருப்பது தவறில்லை என்று அரசு கருதியது.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக, உண்டுறை உதவித்தொகைகளை திருத்தி அமைக்காத காரணத்தால் இவ்வாண்டு முதல் கூடுதலாக கொடுக்க அரசு ஆணைபிறப்பித்துள்ளது. அதன் விவரம் பின் வருமாறு :

படிப்பு.	சென்னை. அரிசன பழங்குடி, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர்.	சென்னை. பின் தங்கிய வகுப்பினர்.	மற்ற இடங்கள். அரிசன பழங்குடி, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர்.	மற்ற இடங்கள். பின் தங்கிய வகுப்பினர்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ஒரு மாதத்திற்கு அளிக்கப்படும் தொகை-ரூபாயில்)			
1 கலை, விஞ்ஞானம், சட்டம்.	70(60)	60(40)	55(50)	50(35)
2 தொழில் நுட்ப படிப்புகள் பொறியியல், விவசாயம், கால் நடை வைத்தியம் முதலியன.	75(70)	60(40)	70(70)	55(35)
3 தொழில் சம்பந்தப்பட்ட குறுக்குப் படிப்புகள் (எல். சி. இ.), எல்.எம். இ.) போன்றவை.	60(50)	50(40)	50(45)	45(35)

(அடைப்புக் குறிகளுக்குள் உள்ளவை, பழைய உதவித்தொகை விகிதம்)

ஆக கிட்டத்தட்ட 20 ரூபாய், 25 ரூபாய் வரை, முன் இருந்ததைவிட ஒவ்வொரு இனத்திலும் உயர்த்தித் தரப்படுகிறது.

உதகை அரிசன மாணவ விடுதிக்குக் கட்டடம்

* 463 **வினா.—திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில், உதகை நகரத்தில் அரிசன மாணவர்கள் உணவு விடுதி கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 1971-72 ஆண்டில் விடுதிகளுக்கு கட்டடம் கட்டுவதற்காக ரூ. 2.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஐந்து இடங்களில் (உதகை உட்பட) கட்டுவதற்கு அரிசன நல இயக்குநர் பரிந்துரை செய்தார். அரசு கவனமாய்ப் பரிசீலனை செய்து உதகையில் இவ்வாண்டு கட்டிடம் கட்ட மேற்கொள்ளப்பட வேண்டாமென முடிவு செய்துள்ளது.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, தற்போதுள்ள உணவு விடுதியில் மாணவர்களுக்கு வசிப்பதற்குப் போதிய சௌகரியம் இல்லாதிருந்தாலும் அதற்கு ஏறிய வாடகை கொடுப்பதாலே, இதைத் தவிர்க்க அரசு உடனடியாக இதைத் துவங்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த ஆண்டே அதை எடுத்துக்கொள்ளலாம் என்று முதலில் இயக்குநர் முடிவு செய்தார், உதகையிலே மாணவர் விடுதி கட்ட வேண்டுமென்று. ஆனால் நிதிநிலை நெருக்கடி இருப்பதால் விடப்பட்டிருக்கின்றது. நிதிநிலை நெருக்கடி தீர்ந்த பிறகு வேண்டுமென்றால் பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

Badaga Association at Madras

* 464. *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the delegation of the Badaga Association, Madras met him on or about 3rd May 1971 ; and

(*b*) if so, the details thereof;

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) படகர் சங்கம் கொடுத்த விண்ணப்பத்தில், படகர்களின் பழக்க வழக்கங்கள் சம்பந்தப்பட்ட சில தவறான, ஆட்சேபகரமான விவரங்கள் 1908-ம் ஆண்டில் அரசால் பிரசுரிக்கப்பட்ட நீலகிரி மாவட்ட விவரச் சுவடியில் இருப்பதாகவும் அவைகளை நீலகிரி மாவட்ட விவரச் சுவடியிலிருந்து நீக்கும்படியும் கேட்கப் பட்டிருந்தது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

கூடலூரிலிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்கள்

* 465 வினா—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூரிலிருந்து இதுவரை எத்தனைக் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன ?

(இ) வெளியேற்றப்பட்டவர்களுக்கு வேறு உறைவிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கூடலூர் தாலுக்காவைச் சேர்ந்த பந்தலூர் பிர்க்காவிலுள்ள சர்க்கார் நிலங்களிலிருந்து இதுவரை 154 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

(இ) அரசின் 1—9—1971 தேதியிட்ட வருவாய்த்துறை ஆணை எண் 2405-ன்படி மேற்படி 154 குடும்பங்களுக்கு வேறு நிலங்கள் கொடுக்க முடியுமா என்பதுபற்றி மாவட்ட ஆட்சியாளர் பரிசீலித்து வருகிறார்.

தமிழ்நாட்டில் ரொட்டித் தொழிற்சாலை

* 466 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசுத் துறையில் ரொட்டி செய்யும் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது லாபகரமாக இயங்குகின்றதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மாடர்ன் பேக்கரிஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தால் ரொட்டித் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இது பொதுத்துறையில் இந்திய அரசு ஏற்படுத்தியுள்ள நிறுவனமாகும்.

(இ) இத்தொழிற்சாலை மாநில அரசு அதிகார வரம்பின் கீழ் இல்லாத காரணத்தால் இத்தகவல் கொடுக்கப்படவில்லை.

Thiru K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware that the starting of such mass bread-producing factories have resulted in the closure of small bread-producing factories and the consequent unemployment?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது மத்திய அரசால் துவக்கப்பட்ட ஒரு தொழிற்சாலை. சிறிய ரொட்டித் தொழிற்சாலை இதனால் பாதிக்கப்படுகிறது என்று சொல்வது பொருந்தமானதல்ல. இந்தத் தொழிற்சாலையே முழு அளவில் வேலை செய்யவில்லை. இந்தத் தொழிற்சாலை கூட நஷ்டத்தில்தான் வேலை செய்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

தமிழ்நாட்டில் நில உச்சவரம்பு

* 467 வினா—திரு. என் சிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நில உச்சவரம்பை மேலும் குறைக்க வேண்டும் என்று டில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டுத் துணைக்குழு தமிழ்நாடு அரசிடம் வற்புறுத்தியதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நிலச்சீர்திருத்தம் குறித்து 1970 செப்டம்பரில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், நிலவுடைமை மேல் வரம்புச் சட்டம் தொடர்பான பிரச்சினைகள் அனைத்தும் மத்திய நிலச்சீர்திருத்தக் குழுவின் ஆலோசனைக்கு விட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. குழுவின் கூட்டம் 16-4-1971, 3-8-1971 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இக்குழு, பிற பரிவுரைகளுடன் பின் வரும் பரிவுரைகளை அளித்துள்ளது. அவையாவன : ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு நிலவுடைமை மேல் வரம்பு, ஆண்டு முழுவதும் பாசன வசதிபெற்ற நிலமெனில், அல்லது ஆண்டுக்கு இருபோகம் விளையக்கூடிய பாசன வசதிபெற்ற நிலமெனில் 10 முதல் 18 எக்கர்களுக்குள் வரையறுக்கப்படலாம்; புன்செய் நிலங்களைப் பொறுத்த வரையில்

கூட ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வரையறுக்கப்படும் முழு நிலவுடைமைமேல் வரம்பு 54 ஏக்கருக்கு மேற்படக் கூடாது. இக்கருத்து இவ்வரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டில் நில உச்சவரம்பு 15 ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலாவது இதை விடக் குறைவாக உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மற்ற மாநிலங்களைப் பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. தமிழ் நாட்டில் 15 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று நிர்ணயித்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எவ்வளவோ தடவை சொல்லியிருக்கிறார்கள். அடுத்த மாநிலங்கள் பற்றிய கேள்விகளுக்கு தகவல் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, திரும்பத் திரும்ப அதைப் பற்றிக் கேட்பது என்பதில் அர்த்தம் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : குடும்பத்தை யூனிட்டாக வைத்துக் கொண்டு உச்சவரம்பு நிர்ணயம் செய்யவேண்டுமென்று முதல் அமைச்சர்கள் மாநாட்டில் முடிவு எடுத்திருக்கிறார்கள். அதையொட்டி நம் மாநிலத்திலும் 15 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதை குடும்பம் ஒன்றுக்கு 15 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று அரசாங்கம் நிர்ணயம் செய்து அச்சட்டத்தைத் திருத்துவதற்கு யோசிக்குமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : சிறிய அளவில்தான் முதல் அமைச்சர்கள் மாநாடு போடப்பட்டது. முதலமைச்சர்களின் முழு அளவு மாநாட்டில் எடுத்து விவாதிக்கப்பட்ட பிறகுதான் அதுபற்றி எடுத்துரைக்கப்படும்.

திரு. சீ. க. வடிவேலு : தமிழ்நாடு அரசு 15 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று வரம்பு கட்டியபிறகு எவ்வளவு லட்சம் ஏக்கர் மிச்சம் ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நில உச்சவரம்புச் சட்டம் செல்லுபடியாகும் என்று சமீபத்தில்தான் டெல்லியில் உள்ள உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. இப்போது 15 ஸ்டான்டேர்ட் ஏக்காராகக் குறைந்திருக்கிறோம். விவரங்கள் அதன் மீது கிடைக்கவில்லை.

திரு. நா. வீராசாமி : டெல்லியில் கூடிய அந்த மாநாட்டில் ரிசர்வ் பாங்க் ரெப்ரஸென்டேட்டிவ் யாராவது அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்களா ? 15 ஸ்டான்டேர்ட் ஏக்கருக்குக் கீழே நிலம் என்று செய்தால் டிராக்டர்கள் போன்ற கருவிகள் வழங்க கடன் கொடுத்தால் சரியாக இருக்காது என்ற கருத்து சொல்லப்பட்டதா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : டெல்லியில் கூடிய மாநாடு முழு அளவிலான முதல் அமைச்சர்கள் மாநாடு அல்ல. இந்தியாவிலுள்ள முதல் அமைச்சர்களில் ஐந்து முதல் அமைச்சர்களைக் கொண்ட குழுவை நியமித்து நிலச் சீர்திருத்தச் சட்டம் பற்றி விவாதிக்கக்கூடினார்கள். வேறு முதல் அமைச்சர்கள் யாரும் அழைக்கப்படவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : டெல்லியில் கூடிய மாநாட்டில் நகர சொத்துக்கு உச்சவரம்பு விதிப்பது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டதா? நகர சொத்து உச்சவரம்பு சம்பந்தமாக இந்த அரசின் கொள்கை என்ன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மூலக் கேள்வி நில உச்சவரம்பு பற்றியது.

High Power Committee on Land Reforms

* 468. Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) whether the High Power Committee set up to advise the Government on Land Reforms has concluded its deliberations; and

(b) if not, the approximate time that will be taken for the purpose?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) அந்தக் காரியத்திற்காக கால வரையரையொன்றும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆலோசனை கூறும் ஒரு குழுவாக நிலச் சீர்திருத்த உயர் அதிகாரக் குழு இயங்கி வருகிறது. அரசுக்குத் தொடர்ந்து அக்குழு நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக ஆலோசனைக் கூறும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நிலச்சீர்திருத்தத்திற்கான இந்த உயர்மட்டக் குழு இருக்கிறதே அது எப்போது கூடும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தச் சனிக்கிழமை கூடுவதாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தக் கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் யார் யார் என்பதைத் தெரிவிப்பார்களா ? எக்ஸெம்ஷன்ஸ் சில இருக்கின்றன நம் லான்ட் ஸீலிங் ஆக்டில். அவற்றையெல்லாம் எடுப்பதற்கு நடவடிக்கைகள் அல்லது சிபார்சுகள் ஏதாவது இந்தக் கமிட்டி செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே இந்தக் கமிட்டி செய்த சிபார்சின் பேரில் கரும்புத் தோட்டங்களுக்கு விலக்கு அளித்தோம். அதேபோல் கிரேஸிங் லான்ட்ஸ் ஐம்பது ஏக்கர் வரை வைத்திருந்தால் விலக்கு அளிக்கவேண்டும் என்று இருந்ததை, அந்த விலக்கை ரத்து செய்துவிட்டோம்.

இதில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிக்கிறார்கள்:—

தலைவர் : உணவு-வருவாய்த் துறை அமைச்சர்.

உறுப்பினர்கள் : திருவாளர்கள் எஸ். அழகர்சாமி, திரு. துரை கோவிந்தராசன், திரு. கா. காளிமுத்து, திரு. எம். எ. லத்தீப், திரு. பி. எஸ். மணியன், திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. வி. பழனிவேலு, திரு. ஆ. பார்த்தாமன், திரு. எ. ஆர். பெருமாள், திரு. பி. பொன் சொக்கலிங்கம், திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. அ. ப. சண்முகசுந்தரம், திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம், திரு. பெ. சௌந்தரபாண்டியன், திரு. இ. எஸ். தியாகராசன், திரு. அ. வெள்ளைத்துரை, திரு. எம். ஆறுமுகசாமி, எம். எல். ஸி., திரு. எஸ். ஜெயராம செட்டியார், திரு. மன்னை பி. நாராயணசுவாமி, திரு. டி. கே. பொன்னுவேலு, திரு. கே. ராஜாராம், திரு. எம். சங்கரலிங்கம், திரு. சா. கணேசன், திரு. என். சுந்தரேச தேவர், எம். எல். ஸி.

THIRU K. T. K. THANGAMANI : We are grateful to the Hon. Minister for the valuable information. My question is directed to the High Power Committee on Land Reforms. It is constituted under the leadership of the Hon. Chief Minister. I am also a member of the committee and I wanted to know when this particular committee is going to meet. At the same time we are grateful to the Hon. Minister for Food for giving the information about the Exemption Committee which is going to meet on 18th instant.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிற கமிட்டி பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

சிறைகளில் உற்பத்தியாகும் பொருள்கள்

* 469 **வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது தமிழகத்தில் உள்ள சிறைக் கைதிகளைக் கொண்டு அரசு என்னென்ன பொருட்களை உற்பத்தி செய்கின்றது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சபைமுன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

Life term prisoners

* 470. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that a considerable number of life term prisoners who have completed 15 years are still in jail; and

(b) if so, the steps taken for getting them released?

@ 212-216-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) பதினைந்தாண்டு சிறை முடித்த பின்னரும் சிறைத் தண்டனையை தொடர்ந்து அனுபவித்து வரும் கைதிகளின் எண்ணிக்கை மூன்று மட்டுமே.

(இ) ஆயுள் சிறைவாசம் என்பது கால நிர்ணயமில்லாத தண்டனையாகும். ஒவ்வொரு கைதியும் தான் ஈட்டிய தண்டனைக் குறைப்புக் காலத்தையும் சேர்த்து இருபதாண்டு தண்டனைக் காலத்தின் மூன்றில் இரண்டு பகுதிக்கு ஈடான தண்டனைக் காலத்தை கழித்த பின்னர், அறிவுரைக் கழகத்தின் பரிந்துரையினை கருத்தில் கொண்டு அந்தக் கைதியை முன் கூட்டி விடுதலை செய்வதா வேண்டாமா என்பது பற்றி அரசு மறுபரிசீலனை செய்கின்றது. மேலே குறிப்பிட்டுள்ள மூன்று கைதிகளின் கோப்புகளை கடந்த ஏப்ரல் மாதத்தில் அரசு மறு பரிசீலனை செய்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் அதனை மறு பரிசீலனை செய்யலாம் என்று தீர்மானித்தது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : We are not able to hear the Hon. Minister at all. We are not able to hear what he reads.

MR. DEPUTY SPEAKER : That will be taken note of.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக பத்தாண்டுகளுக்கு மேல் சிறையில் இருப்பவர்கள் குறித்து பரிசீலனை செய்யப்படும் என்று சென்ற தொடரில் சொன்னார்கள். இப்போது பதினைந்து ஆண்டுகளுக்கு மேலே இன்னும் மூன்று பேர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதில் காலதாமதம் இல்லாத முறையில் அதைப் பரிசீலனை செய்து, ஒத்திப்போடாமல் அவர்களைச் சீக்கிரமாக விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்று பொதுவாக ஒரு கருத்தை நாம் பின்பற்றிவருகிறோம். இந்த மூன்று கைதிகள் பற்றி நாம் அறிக்கை கேட்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பரிந்துரை வந்தபின் முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். தேவராசன் : ஆயுள்தண்டனை அடைந்த கைதிகள் விடுதலையாகி வெளியே வந்த பிறகு அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தக் கைதிகளுக்கு ஒரு சங்கம் அமைத்து அந்தச் சங்கம் மூலமாக அந்தக் கைதிகளுக்கு என்ன புனர்வாழ்வு அளிக்கமுடியும் என்பதைப் பற்றி டிஸ்சார்ஜ்ட் பிரிஸனர்ஸ் சொஸைட்டி மூலம் கவனிக்கப்படுகிறது.

திரு. நா. வீராசாமி: சமுதாயத்தில் கொலை போன்ற குற்றங்கள் செய்தவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னால் ஆயுள் தண்டனை என்றால் 14 ஆண்டுகள் தான்

[1971 டிசம்பர் 16

திரு. ஏ. சுப்பிரமணியம்: மத்திய அரசு பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க 25 கோடி ரூபாய்த் திட்டம் அறிவித்ததே அந்தப் பணத்தில் தமிழக அரசுக்குப் பங்கு கிடைத்ததா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நமக்குப் பங்கு என்பது இல்லை. அவர்களே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு என்ற விவரம் இல்லை.

திரு. கா. காளிமுத்து: பொறி இயல் பட்டதாரிகளுக்கு வழங்கப்படுகின்ற இடைக்கால வேலை வாய்ப்புத் திட்டத்தைப் போல் ஏனைய பட்டதாரிகளுக்கும் வழங்க அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது போன்ற ஐ.டி.ஐ-ல் படித்தவர்கள், பாலிடெக்னிக்கில் படித்தவர்களுக்குத் தனியாகக் கடன் கொடுத்து எந்த அளவுக்குப் புதிய தொழில்களை ஏற்படுத்தலாம் என்ற திட்டமும பரிசீலிக்கப்பட்டு ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

வாலிநோக்கத்தில் உப்புத் தொழிற்சாலை

* 472 வினா—**திரு. எஸ். காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுள்ளத்தூர் வட்டம், வாலிநோக்கம் என்னுமிடத்தில் புதிய உப்பு தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், அத்திட்டம் எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) வாலிநோக்கம் உட்படும் மாரியூர் தரிசை ஒரு புதிய உப்புத் தொழிற்சாலையாக விருத்தி செய்யும் திட்டமென்று உள்ளது. அங்குள்ள உப்பு நீரின் தகுதியையும், நிலத்தின் தன்மையையும் பற்றி பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் முடிவு தெரிந்தவுடன் அங்கு உப்பு உற்பத்தி தொழிற்சாலை அமைப்பது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: முதுகுளத்தூர் வட்டத்தில் எந்தவிதத் தொழில்களும் இல்லையென்பதை அரசு அறிந்திருக்கிறது. இந்த உப்புத் தொழிலைத் துரிதமாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் திட்டம் அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்பைத் தரும். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டரை லட்சம் டன் வரை உப்பு உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்குச் சுமார் 55 லட்சம் ரூபாய் வரை ஆகலாம் என்று கருதப்படுகிறது.

1971 டிசம்பர் 16]

செயங்கொண்டத்தில் முந்திரிப்பருப்புத் தொழிற்சாலை.

* 473 வினா—**திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயங்கொண்டத்தில் முந்திரிப்பருப்பு தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: நம்முடைய மாவட்டத்தில் முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டதிலும் பல இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி ஜெயங்கொண்டத்தைப் பற்றியது. உறுப்பினர் கன்னியாகுமரிக்குப் போகிறார். எப்போது திரும்பி வரப் போகிறார்கள்?

திரு. ஜே. ஜேம்ஸ்: அந்தத் தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான முந்திரிக் கொட்டை கிடைப்பதில்லை என்று அதை நடத்துகிறவர்கள் கூறுகிறார்கள். இந்த அரசு மத்திய அரசாங்கத்தை அணுகி தேவையான முந்திரிக் கொட்டையை இறக்குமதி செய்து கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முந்திரித் தொழிற்சாலைக்குத் தேவையான முந்திரிக் கொட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று கேட்டால் போதும். இதற்கு ஏன் கன்னியாகுமரியைப்பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. செ. சதாசிவம்: உடையார்பாளையம், ஜெயங்கொண்டம் பகுதிகளில் தனியார் உடையது அரசாங்கத்தின் உடையதுமான முந்திரிச் சாகுபடி நிலங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. அங்குள்ள மக்களுக்குத் தொழில் வசதி இல்லாத காரணத்தாலும் அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டியும் முந்திரிப் பருப்பு தொழிற்சாலை ஒன்றை அந்தப் பகுதியில் நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முந்திரியைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் ஏராளமாக உற்பத்தியாகிறது. அந்தப் பகுதியில் தனியார் முன்வருவார்களேயானால் சிறு தொழில் வாரியத்தின் மூலமாகக் கடன் கொடுக்கப்படும். ஏற்கனவே, இந்தத் தொழிலுக்கு அரசாங்கம் கடன் கொடுத்து வருகிறது.

[1971 டிசம்பர் 16

Fruit Farm in Cape Comorin

* 479. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether the Cape Comorin Fruit Farm in Kanyakumari district is to be developed into a Research Centre; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) ஆம், கன்னியாகுமரியிலுள்ள பழப்பண்ணையை ஒரு ஆராய்ச்சி நிலையமாக ஆக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான முழு விவரங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ்: எப்போது அது தனி ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: விரைவில் அதுபற்றி முடிவு செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒட்டப்பிடாரத்தில் தீவிர வாழை சாகுபடித்திட்டம்

* 480 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த கிராமங்களில் வாழை பயிரிடுவதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தூத்துக்குடியிலும், அதன் சுற்றுப்புறத்திலும், தீவிர வாழை சாகுபடித்திட்டம் ஒன்று செயல் பட்டுவருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த கிராமங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் நீண்டகாலக், குறுகிய காலக் கடன்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமும், வணிக வங்கிகள் மூலமும், ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000 வீதம் வாழை பயிரிடுவதற்காக அளிக்கப்படுகின்றன. தீவிர வாழை சாகுபடி திட்டத்தை கவனிக்கவும், விவசாயிகளுக்கு தீவிர வாழை சாகுபடி முறைகளைப்பற்றி அறிவுறுத்தவும் ஒட்டப்பிடாரத்தில் ஒரு விவசாய உதவியாளர் பணிபுரிந்து வருகிறார்.

திரு. எம். முத்தையா: ஒட்டப்பிடாரத்தில் எத்தனை கிராமங்கள் இந்த அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்போது விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: அந்தத் திட்டம் திருநெல்வேலி ஜில்லாவில் எந்த இடங்களில் எல்லாம் விரிவுபடுத்தப்பட்டு இருக்கிறது?

1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்த தீவிர வாழைச் சாகுபடித் திட்டம் தற்போது கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பகுதியிலும் நடத்தப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இந்த ஒட்டப்பிடாரத்திற்கு அருகே இருக்கும் வாழை சாகுபடி திட்டத்தால் லாபம் ஏதாவது ஏற்பட்டு இருக்கிறதா, அது ஒழுங்காக நடைபெறுகிறதா, வெட்ப தட்ப நிலை சரியாக இருக்கிறதா என்று விவசாய இலாகாவினால் ஆராய்ச்சி செய்யப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், அந்த முழு விவரங்களையும் தெரிவிக்கிறேன்.

முந்திரி பயிரிடுவோருக்குக் கடன்

* 481 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முந்திரி பயிரிடுபவர்களுக்கு தமிழ்நாடு அரசு கடன் தொகை ஏதேனும் வழங்கி வருகிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த முந்திரித் தொழிலை வளர்ப்பதற்காக எந்தெந்த மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு கடன் அளிக்கப்பட்டு வருகிறது? ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு தொகை அளிக்கப்பட்டு வருகிறது என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இப்போது முந்திரி அபிவிருத்தித் திட்டம் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 150 வீதம் கடன் உதவி முந்திரி சாகுபடிக்கு என்று வழங்கப்பட்டு வருகிறது. முதல் தவணையாக ரூ. 100-ம், இரண்டாம் தவணையாக ரூ. 50-ம் வழங்கப்படுகிறது. தனிப்பட்ட நபர்களுக்கு அதிக பட்சமாக ரூ. 3,000 வழங்கப் படுகிறது. கடன் கொடுத்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் தவணை தொடங்கப்பட்டு, ஐந்தாண்டு சம தவணை முறையில் கடன் தொகை வசூலிக்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, தென் ஆற்காடு ஜில்லாவிலிருந்து முந்திரி பயிர் செய்வதற்கு கடன் கோரி அரசுக்கு மனு செய்து இருப்பதாகத் தெரிய வருகிறது. அதிலே எத்தனை பேருக்கு கடன் கொடுக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தென் ஆற்காடு மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. எத்தனை பேர்களுக்கு என்பதற்கு தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கிறேன்.

திரு. சோ. கருணாநாதன் : தலைவரவர்களே, முந்திரி உற்பத்தியைப் பெருக்க அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது வரையில் சொன்னதெல்லாம் முந்திரி உற்பத்தியைப் பெருக்க என்னென்ன செய்யப்படுகிறது என்பதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத்தில் தொழில் நுட்பப்பள்ளிகள்

* 482 **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மையை பெருக்குவதற்கு தொழில் நுட்பப் பள்ளிகளைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) விவசாயத்தில் தொழில் நுட்பப் பள்ளிகளை ஆரம்பிக்கும் செயற்குறிப்புகள் ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

விற்கப்படாமல் தேங்கியுள்ள உரம்

* 483 **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971 ஜனவரி முதல் ஜூலை முடிய தமிழ்நாடு அரசிடம் விற்காமல் தேங்கி இருந்த உர வகைகளின் மதிப்பு எவ்வளவு ரூபாய் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1971 ஜூலை முடிவில் தமிழக அரசிடம் விற்காமல் தேங்கி இருந்த உரங்களின் மதிப்பு ரூபாய் 7,87,09,836.

திரு. கே. ஏ. வகாப் தலைவரவர்களே, இவ்வளவு அதிகமான உரம் தேங்கி இருந்ததே, அவைகள் எல்லாம் தற்போது விற்பனை ஆகி விட்டதா ? அப்படி தேங்கியிருந்த டை-அம்மோனியம் பாஸ்பேட் என்ற உரம் மிகவும் சீர்கேடான நிலையில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டதால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளானார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதிலே எடை குறைவு ஏற்பட்டு இருந்தது என்பது அரசுக்குத் தெரியுமா ? அவற்றைப்போக்க அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அந்த உரங்கள் பெரும்பாலும் கையிலே இல்லை. டை-அம்மோனியம் பாஸ்பேட் என்ற உரம் தேங்கியிருந்தது உண்மைதான். ஆனால் தமிழக அரசு அவைகளை எல்லாம் சரிக் கட்டி, எடைகளைச் சரி செய்து பார்த்து, அவைகளை புது சாக்குகளில் போட்டு விற்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. இன்றையதினம் அந்த டை-அம்மோனியம் பாஸ்பேட் உரம் கையிருப்பு இல்லை. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் கொஞ்சம் கையிருப்பு இருக்கிறது.

கொடைக்கானல்—சுற்றுலா இடம்

* 484 **வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலையை சுற்றுலா நகரம் ஆக்க அரசு திட்டமிட்டு உள்ளதா ?

(இ) ஆம் எனில், இது சம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) கொடைக்கானல் ஏற்கனவே சுற்றுலா இடமாக விளங்கிவருகிறது.

(இ) கொடைக்கானலை விரிவுபடுத்த ஓர் பெருந்திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. கொடைக்கானல் நகரியத்தை விரிவுபடுத்தவும். பெருந்திட்டத்தினை ஆராயவும், அக்டோபர் 4, 5 தேதிகளில் கல்வி அமைச்சர் அவர்களால் ஓர் மாநாடு கொடைக்கானலில் கூட்டப்பட்டது. அம் மாநாட்டின் முடிவுகளை அரசு ஆராய்ந்து வருகிறது.

வீடுகள் கட்ட மத்திய அரசிடமிருந்து நிதி உதவி

* 485 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ல் மத்திய அரசிடமிருந்து, நமது அரசுக்கு வீடுகள் கட்ட கூட்டுறவு இலாக்காவுக்கு தரப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இரவு நேரங்களில் இப்போது விடப்படும் பேருந்துகள் அனைத்தும் நல்ல முறையில் இருக்கின்றன. எங்கேயும் வழியில் நின்றதாகத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரவு நேரங்களில் எந்த இடத்தில், எந்த பஸ்ஸை பார்த்தார் என்று தகவல் தெரிவிப்பார்களேயானால் அதைப்பற்றி அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒன் எக்ஸ்பிளநேஷன், சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது அதற்கெல்லாம் இடம் இல்லை. உட்காருங்கள்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, இரவு நேரங்களில் தூங்குவதற்கு வசதியாக, லக்சுரி பஸ் விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டீரிஸ்ட் லக்சுரி கோச் என்ற முறையிலே அகில இந்திய போக்குவரத்து கவுன்சிலில் எப்படியெல்லாம் அந்த பாடி கட்டவேண்டும் என்று முறை வகுத்து இருக்கிறார்கள். அந்த முறைக்கு ஏற்ப குறைந்த அளவுக்கு 50 பஸ்களாவது கட்டி, இரவு நேரங்களில் எல்லா வசதிகளோடும் பயணிகள் செல்ல அதைப்பயன்படுத்துவது என்று அரசு திட்டமிட்டு இருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, இரவு நேரங்களில் அனுமதி இல்லாமல் தனியார் பஸ்கள், திருச்சி, மதுரை போன்ற நகரங்களுக்குச் செல்கின்றன. அதைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அனுமதி இல்லாமல் தனியார் பஸ்கள் அப்படிச் செல்கின்றன என்று கூறி அரசாங்கத்திற்கு புகார்கள் வந்திருக்கின்றன. போக்குவரத்துத் துறை அதைத் தடுக்க, அவர்களின் மீது நடவடிக்கை எடுத்து வருகிறது. இன்னும் சொல்லப்போனால், 75 மைல்களுக்கு மேல் உள்ள வழித்தடங்களை தேசியமயமாக்கவேண்டுமென்ற நோக்கத்திற்கு எதிராக இந்த ஆம்னி பஸ்கள் இயங்கிக்கொண்டு வருகின்றன. அவர்கள் பயணிப் பேருந்துகள் போல் அவற்றை ஓட்டிக்கொண்டு வருகிறார்கள். காவல் துறையும், போக்குவரத்துத் துறையும் அதைத் தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Is there any proposal to open night bus service from Madras to Bangalore?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்தும், திருச்சியிலிருந்தும், மதுரையிலிருந்தும், பங்களூருக்கு இரவு நேரங்களில் பேருந்துகளைவிட அரசு ஆவலாக இருக்கிறது. ஆனால், மைசூர் மாநிலத்தோடு இன்னமும் பேச்சு வார்த்தை நடந்துகொண்டே இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் பழுதுபட்ட பேருந்துகளின் விவரம் கேட்டார்கள். கடந்த 13-ம் தேதி நாகர்கோவிலிலிருந்து, சென்னைக்கு வந்த பேருந்து, லைட் இல்லாததால் மூன்று மணி நேரம் காலதாமதமாகியிருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எனக்குத் தெரியாது ; இப்பொழுதுதான் தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நெடுந்தூர பேருந்துகளில் இரவு நேரத்தில் இரண்டு ட்ரைவர்களை அமைக்க ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரவு நேர பேருந்துகளில், இரண்டு ட்ரைவர்கள் தான் நியமிக்கப்படுவார்கள்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, ட்ரைவர்களே இல்லாமல் வண்டிகள் ஓட்டப்போகிறோம் என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைக் கேள்விக்கு ஒரு கேள்வியா ? அது அனுமதிக்கப்படவில்லை.

மதுரை-இராசசிங்கமங்கலம் விரைவுப் பேருந்துப்பணி

* 489 வினா—**திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து, சிவகங்கை, இளையான்குடி வழியாக, இராசசிங்கமங்கலம் வரை தமிழ்நாடு அரசு பேருந்து (விரைவு வண்டி) போய் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இராசசிங்கமங்கலத்திலிருந்து மதுரைக்கு செல்லும் பேருந்து வழித்தடப்பகுதிகளில் போதிய பேருந்துகள் விடப்பட்டிருப்பதால் இவ்விரு இடங்களுக்குமிடையே நேரடிப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்வது அவசியமில்லை எனக் கருதப்பட்டது.

போக்குவரத்துத் துறையினரால் வாடகைக்காரர்கள் விடப்படுதல்

* 490 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் போக்குவரத்து இலாகாவின் நிர்வாகத்தின் கீழ் வாடகைக்கார்கள் ((taxis)) விடுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

1971 டிசம்பர் 16]

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, போக்குவரத்து வசதியில்லாத, பேருந்துகள் செல்லாத பகுதியில், பொது மக்களுக்கு வசதிசெய்வதை முன்னிட்டு, அரசாங்கமே அங்கு வாடகை டாக்சிகள் விட முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அத்தகைய உத்தேசம் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆகையினால் இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வீரராகவசாமி கோவில் நிதி

* 491 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து 23—6—1967, 8—5—1968 தேதிகளுள்ள திருப்பூர் வீரராகவ பெருமாள், விஸ்வேஸ்வரசாமி கோயில்களின் பணத்தை பயன் படுத்திக் கொண்டார்கள் என்பது பற்றிய விண்ணப்பங்கள் அமைச்சர் அவர்கட்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவை மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இம்மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேலும் உதவி ஆணையர் செய்துள்ள பரிந்துரைக்கிணங்க இக்கோவிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு கோயில் நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்டிருக்கிற ஏராளமான குறைபாடுகள் இன்னும் களையப் படவில்லை. குறைபாடுகளை போக்கவும், பொதுமக்களுடைய பணம் விரயமாகாமல் இருக்கவும், தவறுகளைக் கண்டுபிடிக்கவும் தனியாக அதிகாரியை நியமிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த தகவல் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. வாடகைப் பணத்தை கையாண்டதற்காக நிர்வாகி ஐயர் மீது குற்றம் சாட்டப்பட்டு பதவி விலக்கம் செய்து வேறுதகுதியுள்ள உறுப்பினரை நியமித்து, வாடகையை அதிகப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சட்டப்படி அதிகம் செய்ய நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றாலும், சமாதானமான முறையில் சந்தித்துப்பேசி ரூ. 11,800 என்று இருந்த வாடகையை மாற்றி, ரூ. 18,300 என்று செய்யப் பட்டிருக்கிறது. குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. ஆலயத்தின் உண்டியல்

1971 டிசம்பர் 16]

வரவு செலவுக்கு ஒப்புதல் அளிப்பது போன்றவற்றில் நடவடிக்கை எடுக்கிறோம். தனி அதிகாரி வேண்டுமென்றால் நடவடிக்கை எடுக்கலாம்.

திருக்கண்மாலீஸ்வரர் ஆலயம்

* 492 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரத்திலுள்ள திருக்கண்மாலீஸ்வரர் தேவஸ்தானத்தின் மூலமாக ஒரு பயணியர் விடுதியும் கல்யாண மண்டபமும் கட்ட அரசு எப்போது உத்தரவிட்டது ?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது ? காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) கிருஷ்ணராயபுரம் திருக்கண்மாலீஸ்வரர் ஆலயத்திற்கு சொந்தமான எஸ்.எப். நெ. 114/4-ல் ஏக்கர் 0.16 நிலத்தில் ஆலயப் பொறுப்பில் கல்யாண மண்டபமும் பயணியர் விடுதியும் கட்ட, கோயம்புத்தூர் துணை ஆணையர், தனது 31—5—70 தேதிய உத்தரவில் பணித்துள்ளார். கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி மன்றம் அந்த இடத்தில் கல்யாண மண்டபம் அமைப்பதை பள்ளி நலனையும் பொது நலனையும் முன்னிட்டு, ஆட்சேபித்ததால் கல்யாண மண்டபத்தையும், பயணியர் விடுதியையும் கோவிலுக்கு முன்புறத்தில் கட்ட அறங்காவலர் முடிவெடுத்து திட்டம் நடவடிக்கையில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட்டிலும் ஏழை மக்களுடைய வசதிக்காக, கல்யாண மண்டபம் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தற்போது அப்படிப்பட்ட காரியங்களைத்தான் செய்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, திருச்செந்தூரில் ஒரு கல்யாண மண்டபத்தை தனியார் முயற்சியில் அமைக்க முன்வருகிறார்கள். அப்படி யாராவது அமைக்க முன் வந்தால் கோவிலை ஒட்டிக் கட்ட உத்தரவு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; தலைவர் அவர்களே, அப்படித் தனிபட்டவர்கள் கோவில் சார்பில் கட்ட முன்வந்தால் அதை வரவேற்கிறோம்.

Bifurcation of Devasthanams.

* 493 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether there are proposals to bifurcate Devasthanams involving administration of more than one temple;

(b) if so, the details thereof; and

(c) whether it is a fact that Tirupparankundram temple will come under separate administration?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) 1. மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலிருந்து திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமி ஆலயத்தைப் பிரித்தல்.

2. ஸ்ரீரங்கம், ஸ்ரீரங்கநாதஸ்வாமி ஆலயத்திலிருந்து சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தைப் பிரித்தல்.

(உ) இவ்விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த திருப்பரங்குன்றம் ஆலயத்தை எப்பொழுதிருந்து தனியாகப் பிரித்து இயங்கும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சி அம்மன் கோவில் நிர்வாகத்தோடு, திருப்பரங் குன்றம் கோவிலோடு, இன்னும் 10, 12 கோவில்கள் இணைக்கப் பட்டிருக்கின்றன. அந்தக் காரணத்தால் வருமானம் இல்லாத ஆலயங்களைப் பராமரித்து வருகிறோம். வருமானம் தற்போது அதிகம் உள்ளவற்றைப் பிரித்து வைக்க பரிசீலனை செய்கிறோம். பரிசீலனை முடிந்த பிறகு இது செயல்படும்.

திருமதி த. ந. அளந்தநாயகி : இப்படி இணைந்திருந்த கோவில்களைப் பிரிக்கும்போது எந்த அடிப்படையில் பிரிக்கிறார்கள் ? மூன்று மைல், ஐந்து மைல் சுற்றளவில் உள்ளவை என்றோ அல்லது வருமானம் இவ்வளவு என்றோ வைத்துப் பிரிக்கிறார்களா ? டிபார்ட்மெண்டுக்கு என்ன 'கைட்-லைன்ஸ்' கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வருமானத்தின் அடிப்படையில் பிரிக்கின்றோம். அந்த அந்த கோவில் வருமானம் அதை நடத்திச் செல்வதற்கு போதுமானதாக இருந்தால், தனியாகப் பிரிக்கிறோம்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, பெரிய கோயில்களில் இரண்டு மூன்றாக, தனித் தனியாகப் பிரிக்கப் போகிறோம் என்றார்கள். எவ்வளவு பாடுபட்டாலும் போதுமான தாக இல்லாத இந்த நிலையில் இரண்டு மூன்றை சமாளிக்க முடியாமல், சாமிகளுக்கு சலுகைகள் குறைந்துவிடுமே. ஆகவே, இவற்றை ஒன்றோடு ஒன்று இணைத்துச் செயல்பட அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இதெல்லாம் வருமானத்தின் அடிப்படையில் செய்யப்படுகிறது.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலைப் பிரிக்கப் போகிறோம் என்று பல முறைகள் சொல்லப் பட்டிருக்கிறது. பரிசீலனையில் இருந்துகொண்டே இருக்கிறது. ஆனாலும், அப்படிப் பிரிவினை ஆகும் வரையில், கோவில் நிர்வாகத்தைச் செய்ய தனி நிர்வாகியை அமைக்கவும், அதே போல், ட்ரஸ்ட் போர்டில் ட்யூ ரெப்ரசண்டேஷன் கொடுக்கவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது மீனாட்சி ஆலயத்தில் இருக்கும் நிர்வாக அதிகாரியே அதையும் செய்கிறார்கள். தனியாக ஒருவர் அங்கே தேவையில்லை யென்றாலும், பொதுமக்களுக்கு வசதி செய்யவும், ஏதாவது குறைபாடுகள் இருந்தால், தெரிவித்தால் நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அமைச்சர் அறிக்கை.

மாநில இந்திய தேசியப் பாதுகாப்புக் கிளைக்குழுவிற்குக் கூடுதல் உறுப்பினர்களை இணைப்பது குறித்து முதலமைச்சர் அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாநில இந்திய தேசியப் பாதுகாப்புக் கிளைக் குழுவில் ஏற்கனவே உறுப்பினர்களும் தலைவர்களும் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் மேலும் உறுப்பினர்களாக, ஃபார்வேர்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு. மூக்கையா தேவர் அவர்களையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாண சுந்தரம் அவர்களையும், தமிழ்நாடு சோஷலிஸ்ட் பார்ட்டியின் தலைவர் திரு. பி. வேலுசாமி அவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) திரு. இராஜாஜி மீதும், 'ஸ்வராஜ்யா' வார ஏட்டின் மீதும் அரசு எடுக்க உத்தேசித்திருக்கும் நடவடிக்கை குறித்து.

(ஆ) 'ஸ்வராஜ்யா' வார ஏட்டில் யாஹ்யாகானை ஆதரித்து திரு. ராஜாஜியால் எழுதப்பட்ட கட்டுரையும், அது கல்கி வார ஏட்டில் வெளியிடப்பட்டது குறித்தும், இவற்றை அரசு தடுக்கத் தவறியது குறித்தும்.

MR. SPEAKER : Dr. Hande has given notice of an adjournment motion under Rule 42, namely, that this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the move on the part of the State Government to take action against Rajaji and the weekly 'Swarajya on account of the writings of Rajaji in the 'Swarajya', dated 11th December 1971 and the need for restraint in the use of the Defence of India Rules. Thiru M. A. Latheef and Thiru K. T. K. Thangamani have also given notice of similar adjournment motions. Now I call upon Dr. H. V. Hande to explain briefly how it comes under the purview of an adjournment motion.

Dr. H. V. HANDE : Sir, I have given notice of the following adjournment motion :—

I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the move on the part of the State Government to take action against Rajaji and the weekly 'Swarajya' on account of the writings of Rajaji in the 'Swarajya' dated 11th December 1971 and the need for restraint in the use of the Defence of India Rules.

I shall briefly state a few points in this connection. The voice of Rajaji has always struck a different note from that of the main-stream of public opinion during the past 50 years of Indian history. Take for instance the Tashkent meeting six years ago. Even there Rajaji suggested......

The Hon. Thiru K. ANBAZHGAN : Mr. Speaker, Sir, on a point of order. An adjournment motion must be on a definite issue that is raised that the Government has given any undertaking or taken any action and not on an assumption that the Government may move in such and such a direction. The hon. Member has said that there is a move on the part of the Government and therefore, I take objection on a point of order, so that the Hon. Speaker may decide the issue. The hon. Member refers only to a move on the part of the Government and there is nothing definite about it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுகாதார அமைச்சர் எழுப்பியிருப்பது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. அட்ஜர்ன்மெண்ட் மோஷனில் வருகிறதா என்பதைக் கேட்பதற்காகத்தான் உறுப்பினரைப் பேசும்படிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். சட்டமன்ற விதிகளில் இப்படிப்பட்ட லாக்சிடி உண்டு. அதை அதிகமாக உபயோகப்படுத்திக்கொள்ளக் கூடாது என்பதுதான் மரபே தவிர, அதைக் கொடுக்கவே கூடாது என்று சொல்லக் கூடாது. இது வேண்டவே வேண்டாம் என்று சொல்லி என் அறையிலேயே கூட இதைத் தள்ளியிருக்கலாம். ஆனால், வாதிப்பதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே கொண்டு வந்தது. மாண்புமிகு உறுப்பினரும் அனுபவம் வாய்ந்தவர். எனவே, அட்ஜர்ன்மெண்ட் மோஷனில் வருகிறதா ? இதில் அரசாங்கத்தின் பொறுப்பு எப்படி இருக்கிறது, எந்த விஷயத்தில் அரசாங்கம் தவறி விட்டது என்பதைக் குறித்து மட்டும் நியாயத்தைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் வேண்டுவதெல்லாம் அவர் அதைப்பற்றி விளக்கம் சொல்வதற்கு தாங்கள் அனுமதிப்பதில் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால், சாதாரணமாக, ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டு வருகிற போது. எந்தெந்த விதிகளுக்கு உட்பட்டு கொண்டுவர முடியுமோ, அப்படித்தான் கொண்டு வர முடியும். இங்கே, அதைக் கடந்து ஒரு சலுகையாக இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இது

அனுமதிக்கப்பட்டால், அடுத்தபடி இதேமாதிரிப் பிரச்னைகள் வரும்போதெல்லாம் "அரசாங்கம் எண்ணிக்கொண்டிருக்கிறது" என்று சொல்லி ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டு வர வாய்ப்பு ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால் ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : I will explain. The subject-matter was raised and discussed in the Legislative Council and certain statements were made in connection with that.

Mr. SPEAKER : The hon. Member may confine himself to explaining how the matter comes under an adjournment motion.

Dr. H. V. HANDE : As far as Rajaji is concerned, even when the Indo-Pakistan condiet was there in 1965 he suggested that the late revered Lal Bahadur Sastri and Mr. Ayub Khan should meet and discuss. At that time members belonging to some other party also went and told him that they opposed him and they expressed a different view. But then after some time, after a few days he found exactly that his suggestions were carried out. Revered Rajaji's suggestions were put into practice and action. Lal Bahadur Sastri himself wrote a letter which was unfinished saying 'I hope that this satisfies Mr. Rajiaji. . .' I am only trying to show that Rajaji's opinion mostly are away from the mainstream of . . . .

Mr. SPEAKER : Everybody knows about the political acumen and statesmanship of Rajaji. That is well-known. The hon. Member need not labour to explain it on the floor of the House Everybody is aware of Rajaji's statesmanship and that he is a veteran leader. Now the point is how the move on the part of the State Government to take action against Rajaji and the weekly 'Swarajya' comes within the purview of an adjournment motion.

The Hon. Si. Pa. ADITANAR : The hon. Member is saying that public opinion is always on one side and Rajaji's opinion has always been on the opposite side. Such words are derogatory to a leader of the status of Rajaji.

Dr. H. V. HANDE : Sir, I was just trying to explain...... Because of interruption I am not able to complete my point......

Thiru K. M. SUBRAMANIAM : I am on a point of order, Mr. Speaker, Sir. We are in the midst of a war and the Assembly has passed a resolution and on the basis of that we have to forbid discussions in this Assembly that vitally affect the conduct of the war. I seek the help of the Hon. Speaker in having this done in this Assembly so that we do not discuss about academic matters at this juncture. Whether what Rajaji has done or written is right or wrong, is not before this House.

Unless somebody says that what Rajaji has done is wrong, there cannot be a discussion. Unless there is a resolution on the negative side, there cannot be a discussion. You cannot have a positive side and discuss it.

Mr. SPEAKER : There is no point of order. There is nothing which will jeopardise the security of the nation by a discussion.

DR. H. V. HANDE : I was only trying to explain how Rajaji's opinion is away from the mainstream. . ..

MR. SPEAKER : There is not two opinion about the statement ship of Rajaji and his political acumen or foresight. The point is how the move of the Government will come under an adjournment motion, how the responsibility of the Government is involved, what is the failure, what is the omission or commission on the part of the Government, that you have got to explain.

DR. H. V. HANDE : But later on it is invariably proved that Rajaji is right. Now, Sir, coming to the Article in 'Swarajya', in the same article itself later on Rajai goes on to say. . .

THE HON. THIRU K. ANBAZHGAN : The Hon. Member proceeds with the writings of one leader and he wants to comment over the same. If the present adjournment motion, at all is to be accepted by the House the hon. Member has to explain how the Government's responsibility is involved in such an issue and why the adjournment motion is pressed and nothing more than that may be allowed in this forum.

DR. H. V. HANDE : I will be very happy if the Hon. Minister for Public Health listens to me. If he listens to me, he will be satisfied.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Speaker, Sir, that is not the issue before the House. The adjournment motion is based upon the assumption that the Government have taken some move to implement certain orders or certain action which the hon. Member wishes to bring before the House. He should refer first to the move of the Government and then only he can go to other matters if the adjournment motion is permitted here. Such things may lead to some other interpretation which is not advisable at this moment.

DR. H. V. HANDE : I am only trying to explain that as far as Rajaji is concerned, it is very clear.........

THIRU Kuppal K. S. RAMAKRISHNAN : On a point of order, Sir. The hon. Member is going on discussing. We cannot go on discussing Under Rule 47, unless 20 members stand up, no discussion can be allowed.

MR. SPEAKER : We are now discussing whether it comes under an adjournment motion or not.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள், மேல் சபையில் கொடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்தை ஒட்டி நான் அளித்துள்ள பதிலை அடிப்படையாக வைத்துக்கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்போகிறது அல்லது எடுக்க முனைகிறது என்ற ஒரு கற்பனையின் மீது இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார் என்றாலும் நாட்டின் பாதுகாப்பு மிக முக்கியமாகக் கருதப்படுகிற நேரத்தில்,

நாட்டின் தலைசிறந்த பெரியோர்களில் ஒருவரான இராஜாஜி அவர்கள் நாட்டுக்கு விரோதமாக எழுதி இருக்கிறார் என்கிற நிலையில், நாட்டுக்கு நல்லதாகவும் எழுதி இருக்கிறார் என்று சொல்ல முனைகிறார் என்று கருதுகிறேன். ஆகவே, திரு. கே. எம். சுப்பிரமணியம் போன்றவர்கள் இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் நாட்டுக்கு விரோதமாகக் கருத்துக்களை எழுதலாமா என்று பேசினாலும், நாட்டுக்கு இந்த நேரத்திலே பயன்படக்கூடிய வகையிலே இராஜாஜி அவர்களும் நல்ல கருத்துக்களைச் சொல்கிறார் என்று சாதகமாக விளக்க முயல்வதால், எவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும் "ஆஸ் எ ஸ்பெஷல் கேஸ்" மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் இதை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சபையோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 'ஆஸ் எ ஸ்பெஷல் கேஸ்' என்றால் ரொம்பவும் ஸ்பெஷல் கேஸாக எடுத்துக்கொள்ளாமல் டாக்டர் ஹாண்டே அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். இராஜாஜி அவர்களின் அரசியல் நிபுணத்துவத்தைப் பற்றியோ, புத்திக் கூர்மையைப் பற்றியோ யாருக்கும் ஐயமில்லை. பாகிஸ்தான் வரும் என்று முதலில் சொன்னவரே அவர்தான். அதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. இப்போது இருப்பதெல்லாம் எப்படி இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குள்ளே வரும் என்பதுதான்.

DR. H. V. HANDE : In the last paragraph of the article he has started as follows—

"As Swarajya is going to the press, News Agencies report that India has recognised Bangla Desh. Yahya Khan's obduracy has pulled down what Jinnah built with his obduracy. In reality, however, Jinnah built on sand. If only he had listened to Gandhiji and wisely accepted his proposal for an Indo-Pakistan confederation, with defence and foreign affairs as the joint concern of the two countries, the Asian Sub-continent would have stood on rock and been a powerful, peaceful democratic confederation today."

Finally he goes on to say—

"Yahya's obduracy could only have been successfully met by the U.S. putting real and adequate pressure on Yahya Khan to settle politically with Bangla Desh, which the U.S. for reasons which are not commendable, failed to do..."

This is what he has written. But there is a lot of misconception about Rajaji. Even the Hon. Speaker has stated that it was because of Rajaji Pakistan had come into being. If he goes through the history of our country he would find that when the Independence of our country was at state, was Rajaji who had

saved West Bengal and East Punjab by dividing Bengal and the Punjab. Sir, if Pakistan violates our borders, we should retaliate to the fullest extent.

MR. SPEAKER : When the adjournment motion is admitted, the hon. Member can refer to such matters.

DR. H. V. HANDE : Sir, I will finish my speech in two minutes. The important point is that with regard to certain things we may differ from the views of Rajaji. For instance, with regard to Rajaji's approach to the ID Message of Yahya Khan we differed. So also with regard to the Indo-Soviet Treaty the Swatantra Party objected to it. But he supported it. That shows that he is above party politics. If he feels convinced about a certain thing, he saya it openly without party considreation. I hope the Hon. Members will appreciate this aspect of the matter. It was Rajaji who supported Gandhiji when he wanted to give Rs. 50 crores to Pakistan.

MR. SPEAKER : How does the matter come under an adjournment motion?

DR. H. V. HANDE : I am only trying to explain it. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படி ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்குள் வரும் என்பதை மட்டும் குறிப்பிடுங்கள். இல்லாவிட்டால் நான் அடுத்தவரைக் கூப்பிட வேண்டிவரும். இராஜாஜி அவர்களின் அரசியல் நிபுணத்துவத்தைப் பற்றியோ அவருடைய புத்திகூர்மையைப் பற்றியோ யாருக்கும் ஆட்சேபணை இல்லை. There are no two opinions. அதையெல்லாம் நீங்கள் ஏன் சிரமப்பட்டு சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்? இங்கு இருப்பதெல்லாம் அரசாங்கத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்பதுபற்றித்தான்.

DR. H. V. HANDE : I will finish my speech in two minutes.

Now the main point is that Rajaji still speaks the voice of Gandhism. When Mahatma Gandhi wanted that Rs. 50 crores should be given to Pakistan, Rajaji also supported it. But Pandit Jawaharlal Nehru opposed it. Later on Pandit Nehru had to give it to Pakistan. It is unfortunate that doubts have been raised in certain quarters about Rajaji's nationalism. If at all to-day we are an independent country, it is all due to the part played by Rajaji and you will find it if you refer to the history of India.

When the matter was raised in the Legislative Council, the Hon. Minister has stated that the Government are watching the situation. Even yesterday one ex-Chief Minister was criticising him openly. I know in his days he had arrested a Member of the present Cabinet under the Defence of India Rules and we all had felt hurt at that time. Sir, in this hour of crisis, we should contribute our mite to the defence of the country and it is unfortunate that one should put any construction on the article of a particular

person. In fact, the article was mentioned in detail in the Legislative Council. Rajaji wanted to give the devil its due. With regard to the adjournment motion raised in the Legislative Council, the Hon. Chief Minister made the statement I have referred to earlier. I strongly feel that no doubts need be raised about Rajaji's nationalism or anything like that. As I have explained before, Rajaji derives inspiration from Gandhiji's life and he is the only person who is still alive and who is practising Gandhism. In fact, he is the person practically responsible for the independence of the country itself. He is also partly responsible for the saving of West Bengal and East Punjab. So it would be unfair to doubt his nationalism. As far as we are concerned, we can assure this House that we will give full support to the war effort.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, on a point of order......

MR. SPEAKER : Point of order should not be used as a pretext for the hon. Member to speak. Let the hon. Member resume his seat.

Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, the hon. Member, Thiru K. T. K. Thangamani has given notice of an adjournment motion to discuss the following matter of urgent public importance, namely—

"Article in English weekly 'Swarajya' dated 11th December 1971 and reproduced in Tamil Weekly 'Kalki' dated 12th December 1971 alleged to have been written by Rajaji supporting Yahya Khan's role and failure of the Government to precent such upblications".

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்போது நான் குறிப்பிடுவது, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது பற்றிய விஷயமாகும். என்னுடையக் குற்றச்சாட்டுகள் எல்லாம் படித்தவர்கள் யாருமே இராஜாஜி அவர்கள் இம்மாதிரியாக எழுதிய அந்தக் கட்டுரையை நமது நாட்டுக்கு இப்போது உதவக்கூடியது என்று சொல்லவே மாட்டார்கள். அன்றைக்கு காஷ்மீரத்திலே ஓட்டெடுப்பு நடந்திருந்தால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நட்பு நீடித்திருக்கும் என்றும், யாகியாகான் அவர்கள் இந்திய அரசாங்கத்திற்கு விடுத்த வேண்டுகோளை இந்திரா காந்தி அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் யுத்தம் வந்திருக்காது என்றும் இராஜாஜி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு யுத்தம் வந்து நூற்றுக்கணக்காக நம்முடைய ஜவான்கள் எல்லாம் உயிரைக் கொடுத்துக்கொண்டிருக்கும்போது ஒருவர் இப்படி எழுதுகிறார் என்றால் அரசு அவரைப் பற்றி என்ன நினைக்கிறது? இம்மாதிரி நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு விரோதமான கட்டுரைகளை இந்த கல்கி போன்ற பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என்று கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அம்மாதிரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

]திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 டிசம்பர் 16

1965-ஆம் வருஷத்தில் அம்மாதிரியான கட்டுரை வெளியே வந்த அன்றைக்கே அப்போது முதலமைச்சராக இருந்தவர் திரு. இராஜாஜி அவர்களைக் கூப்பிட்டு நான் கல்கி பேரில் நடவடிக்கை எடுக்கப்போகிறேன் என்று சொன்னவுடன், 'கல்கியும் நானும் ஒன்றுதானே, நடவடிக்கை எடுக்கவேண்டாம்' என்று சொன்ன இராஜாஜி அம்மாதிரி இனி எழுதுவதில்லை என்கிற உறுதிமொழி அளித்து கடிதம் எழுதித் தந்தார். அம்மாதிரி கடிதத்தையாவது திரு. இராஜாஜி அவர்களிடம் இருந்து நமது அரசு இப்போது பெற்றுக்கொள்ள வேண்டும்.

அடுத்து, இன்று டிபன்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸ்படி சாதாரண பத்திரிகை ஆசிரியர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று ஒரு பிரச்சினை எழுப்பி இருந்தேன். அன்றிருந்த அந்தப் பிரச்சினை வேறு. அன்று கைது செய்யப்பட்ட நவசக்தி ஆசிரியர் தனுஷ்கோடியை சீக்கிரம் விடுதலை செய்தால் அவரைப் போன்ற தேசபக்தி உள்ளவர்கள் இன்றுள்ள நிலைமையைப் புரிந்து கொண்டு நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் பல கட்டுரைகளை எழுதுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, அப்பட்டமாக பாகிஸ்தான் சொலவதுதான் சரி என்பதாக கேரளத்தில்கூட ஒரு மாப்பிளாஸ்தான் வேண்டும் என்று சொல்கிற பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. அமெரிக்காதான் சரி என்கிற கரண்டு பத்திரிகை ஆசிரியர் கைது செய்யப்பட்டிருக்கிறார். திரு. இராஜாஜி பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் கல்கி போன்ற, ஸ்வராஜ்யா போன்ற தமிழகத்தில் இருந்து வெளி யிடப்படுகிற பத்திரிகைகள்மீது இம் மாதிரி தேசத்துரோகமான கட்டுரைகள் எழுதியதற்காக அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டாகவேண்டும். அப்படிச் செய்யாமல் இருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

நேற்றுகூட பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் திரு. காமராஜர் அவர்கள் இந்த நெருக்கடியான நேரத்தில் இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியாரை ஆதரிக்கவேண்டும் என்றும், இங்கு இருக்கக்கூடிய முதல் அமைச்சர் அவர்கள் தலைமையை ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார். முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் இதைப் பாராட்டிவிட்டு, அதே நேரத்தில் இன்னொரு பக்கத்தில் இருந்து அபஸ்வரம் வருகிறது என்பதாக தம்முடைய பாஷையில் சொன்னார். அம்மாதிரி அபஸ்வரம் பெரிய தலைவர்களிடம் இருந்து வராமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி எடுக்காமல் இருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். இதற்கு அனுமதி கொடுத்து இங்கே விவாதித்தால்—திரு. ஹாண்டே அவர்களுடைய கருத்து அவர் ஒருவருடையதுதான், மற்றவர்கள் யாரும் அவரை ஆதரிக்க

1971 டிசம்பர் 16]

வில்லை என்பதை அவரும் புரிந்து கொள்ள உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லி இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Thiru M. A. Latheef also has given notice of a similar adjournment motion viz., "that the business of the House be adjourned to discuss a definite matter of urgent public importance namely the serious adverse national and international implications of the writings of Thiru Rajaji in a recent issue of the weekly 'Swarajya' which are capable of seriously affecting the rising morale of the people in these days of national emergency".

THIRU M. A. LATHEEF : Sir, I have given notice of the following motion :—

"I beg to move that the business of the House do stand adjourned to discuss the implications of certain parts of the writings in recent issue of weekly 'Swarajya' by our respected leader Rajaji." Sir, we are a free nation and we are deeply committed to the cause of democracy and fundamental principle upon which the Constitution of India is based. It is freedom of expression and fair comment. Our Constitution guarantees fair comment and free expression. Everybody in India has got the right, unrestricted right to indulge in fair comment and to express himself freely. Now this right of free expression and fair comment, I observe, is unrestricted, other things being equal. In the circumstances of today other things are seldom equal. Everything so far as our national calamity is concerned seems to be unequal.

MR. SPEAKER : Mr. Latheef, I have to tell you what I told Dr. Hande. Please come to the point.

THIRU M. A. LATHEEF : Yes, my lord. (laughter) I am sorry, Mr. Speaker Sir. Other things being equal, we are entitled to make free comment. Our respected Rajaji has made certain comments.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : When the Defence of India Rules are implemented, there may not be fundamental right of free comment and freedom of expression. The hon. Member must know that we cannot have fundamental right once that Defence of India rules come into operation.

THIRU M. A. LATHEEF : My sister in the profession might not have observed the implications of my observation 'other things being equal'.

MR. SPEAKER : Other things being equal, how it comes under an adjournment motion?

THIRU M. A. LATHEEF : Other things are seldom equal today. We are in an emergency. During emergency, the right that has been guaranteed by the Constitution, of free comment and free expression are restricted. That is my humble submission.

I know Rajaji is unusually frank. He has been unusually frank; that everybody knows. I am here not to question his loyalty to this country. I do not characterise him as an unpatriotic person. Now the question is whether Rajaji's writing in the recent edition of 'Swarajya' is helpful to further the cause of defence commitments of this country and people feel they are detirmental to the national interest. Under the circumstances, so far as this writing is concerned, I have brought this motion because I feel that as soon as it was published in Swarajya, Government ought to nave proscribed copies of Swarajya, because in our country certain people make certain things which are otherwise not in conformity with the present situation. Take the statement of the Hon. Chief Minister made on the floor of the House, immediately after his return from the United States wherein he opined that the people of America in toto have got the greatest sympathy with the cause for which India stands. Day before yesterday 'The Mail' has written that our sympathies are with the people of America. 'It is too bad that they should be ruled by a juvenile'—that is the editorial comment by 'The Mail'. Now that is the spirit. We do not have illwill towards the people of any country.

MR. SPEAKER: The hon. Member does not explain how it comes under an adjournment motion.

THIRU M. A. LATHEEF: Therefore, in their country......

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The hon. Member is not talking about national affair, but he deals with international affair. Whether an M.L.A. can speak about an international affair here on the floor of this House, Mr. Speaker must decide.

MR. SPEAKER: The hon. Member seems to be making an unrestricted speech. There must be restriction in everything. The hon. Member may wind up. Let him explain what is the failure of the Government.

THIRU M. A. LATHEEF: I have submitted in my motion "the serious and adverse national and international implications of the writings". So, I am within my rights in making certain observations. There are attempts by certain people in this emergency to have misconceived notions even against our reputed and respected Chief Minister of Tamil Nadu. If that is so, the writings of Rajaji may be misconceived, may be wrongly interpreted. If there is that possibility, it will create doubts among the people and it will be against national interest. The Government should have proscribed the issues of the Weekly 'Swarajya'. Actually the Government have failed to proscribe the same and so, the responsibility of the Government is involved in this. In order to discuss the same I seek that the business of the House stands adjourned to have a free and frank discussion by all the members of the House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நெருக்கடி நிலையை முன்னிட்டு தேவைப்படும்பொழுது நாட்டுப் பாதுகாப்பு கருதி அமல்படுத்தப்பட வேண்டிய பாதுகாப்புச்

சட்டத்தை எண்ணிக்கை அளவில் மற்ற மாநிலங்கள் அளவுக்குக்
கூடத் தமிழ்நாடு பயன்படுத்தவில்லை என்பதை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். இந்தியாவில் பல மாநிலங்களில் சில
அரசியல் கட்சிக்காரர்கள் மட்டுமல்லாமல், பத்திரிகை ஆசிரியர்
களும் பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டிருக்கி
றார்கள். விசாரணையில்லாமல் பாதுகாப்பில் வைப்பது என்ற
முறை ஒன்று, கைது செய்யப்பட்டவர்கள் தங்கள் நிலையை
எடுத்துக் கூற அந்த முறையில் சந்தர்ப்பம் அளிக்கப்பட
மாட்டாது. ஆனால், தமிழ் நாட்டில் இப்போது கைது செய்யப்
பட்டுள்ள பத்திரிகாசிரியர்களை விசாரணையின்றிக் காவலில் வைக்க
வில்லை. பாதுகாப்புச் சட்டப் பிரிவில் அவர்களைக் கைது செய்து
வழக்குத் தொடரப்பட்டுள்ளதால், விசாரணைக்கு இடமுண்டு.
குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் நிலையை விளக்க வாய்ப்பு
உண்டு. ஏற்கெனவே உள்ள சட்டப் பிரிவில் வழக்குப் போடக்
கூடாதா என்று கேட்கலாம். போர்க் காலத்தில் பாதுகாப்புக்கு
விரோதமாக, எதிரிக்கு இடம் அளிக்கும் வகையில்
அரசாங்கத்தையும் முதல்வரையும் சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு
நடந்து கொள்கிறவர்கள்மீது பாதுகாப்புச் சட்டப் பிரிவைப்
பயன்படுத்தி வழக்குப் போடுவது தவறல்ல. பாதுகாப்புச் சட்டம்
பிரயோகிக்கலாமா என்று கேட்பவர்கள், நெருக்கடி நேரத்தில்
அரசாங்கத்தையும் முதல்வரையும் நாட்டுக்குத் துரோகம்
செய்கிறவர்கள் என்ற கருத்துப்பட எழுதியவர்களின் போக்கைப்
பற்றி ஒரு வார்த்தை கூடக் கண்டிக்காதது வருந்தத்தக்கது.

இராஜாஜி அவர்கள் 'ஸ்வராஜ்யா', 'கல்கி' ஏடுகளில் எழுதி யிருப்பது குறித்து டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. லத்தீப் அவர்களும் அளித்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்களில் அவர்கள் விளக்க மளித்தபோது, ஹாண்டே அவர்கள், இராஜாஜி வேறொரு இடத்தில் இந்தியாவுக்கு அனுசரணையான கருத்து வெளியிட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். பொறுப்பும், மதிப்பும் வாய்ந்த ஒரு பெரியவர் இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் இரண்டு கருத்துக்களை வெளியிட்டு, மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டாம். பழம்பெரும் தேசபக்தர்கள் என்பதற்காகவே தேச விரோதமான கருத்துக்களை வெளியிட உரிமை பெற்றுவிட மாட்டார்கள். அதைப்போலத் தேசபக்தர் என்ற முத்திரை பெற்றவர்கள், மற்றவர்களின் தேசபக்தியைச் சந்தேகத்திற்கு உட்படுத்துவதற்கோ, இந்தியாவைப் பாதுகாக்க முனைந்து நிற்கும் ஒரு மாநில அரசின்மீது பழி போடுவதற்கோ உரிமை யுள்ளவர்களாக இருக்க முடியாது. விமர்சனங்களை யார் செய்தாலும், அது நாட்டின் பாதுகாப்புக்கு விரோதமாக இருந்திடக் கூடாது. சாதாரண காலத்தில் எந்த ஒரு கருத்தைச் சொல்லவும், விமரிசனம் செய்யவும் அனைவருக்கும் உரிமையுண்டு. அதே உரிமையைப் பாதுகாப்பு நேரத்திலும் பயன்படுத்தி, எதிரிக்குச் சாதகமான கருத்துக்களை இங்குள்ள அரசுக்கு விரோதமாக வெளியிடுவது பாதுகாப்புச் சட்டப்படி குற்றமாகும்.

சாதாரண நேரங்களில் அரசைப்பற்றி, அமைச்சர்களைப்பற்றி எவ்வளவோ அவதூறுகள் வெளியிடப்படுகின்றன. அதுகுறித்து அவ்வப்போது வழக்குகள் தொடரப்பட்டும் இருக்கின்றன. ஆனால் இது அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள நேரம். இந்திய அரசும், மாநில அரசும் போருக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கும்போது அந்த அரசுகளைப்பற்றி மக்கள் உள்ளத்தில் தவறான கருத்துக்களைப் பரப்பிப் போருக்கு மக்கள் தரும் ஆதரவு மத்திய, மாநில அரசுகளுக்குக் கிடைக்க முடியாமல் திசை திருப்புவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இந்த சட்டப் பிரச்சினையெல்லாம் இராஜாஜி போன்ற தலைசிறந்த நிர்வாகிகளுக்குத் தெரியாத விஷயமல்ல. எழுத்திலோ, பேச்சிலோ எப்படியோ சிக்கிவிட்டார்கள் என்ற நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, யாரையும் காவலில் வைக்க வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கமல்ல. முந்தைய அரசுகளின் நிலையோடு இந்த அரசை ஒப்பிட்டுப் பார்த்தால் எத்தனை வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன, எத்தனை பேர் எச்சரித்து விடப்பட்டுள்ளார்கள்; எத்தனை போராட்டங்களில் கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவித்திருக்கிறோம் என்ற விவரங்களை எல்லாம் இந்தப் பேரவையும் அறியும், நாடும் அறியும்.

ஆகவே, தவறு விளைந்துவிட்ட பிறகு அந்தத் தவறைத் திருத்திக் கொள்கிற பெருந்தன்மை தவறு செய்தவர்களுக்குத் தேவை. அப்படிப்பட்டவர்கள்மீது இந்த அரசு, கடுமையாக நடந்து கொள்ளாது. அதற்கு இந்த அரசைப் பொறுத்தவரையில் பல எடுத்துக்காட்டுகள் உண்டு.

இந்தப் பிரச்சினையில் நாட்டின் பாதுகாப்பை, எல்லா வகையிலும் அரசாங்கம் கவனத்தில்கொண்டு நடந்து கொள்ளும் என்று கூறிக்கொண்டு, இந்த விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று தலைவர் அவர்களே, தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு டாக்டர் ஹாண்டே, திரு. சே. டி. கே. தங்கமணி, திரு. எம். ஏ. ஜெத்தீப் ஆகியோர் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்த மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

(இ) மதுரையில் கல்லூரி மாணவர்களும் (ஆண்கள்) சென்னையில் பல கல்லூரி மாணவர்களும் செய்த படிப்பு நிறுத்தமும், கல்லூரிகள் மூடப்பட்டதும் குறித்து.

MR. SPEAKER: Thiru K. Kandaswamy has given notice of an adjournment motion under Rule 42 for the adjournment of the business of the House to discuss the following matter of urgent public importance, namely, the strike of the college students (men) and the consequent closure of colleges, in Madurai City likely to affect the peace in and around Madurai especially during the time of emergency.

Thiru K. M. Subramaniam has also given notice of a similar adjournment motion, namely, the strikes and closure of various colleges, particularly Vivekananda College, Loyola College, etc., affecting the study of thousands of students.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தேச நெருக்கடியின்போது தேச சக்திகள் அனைத்தும் தேசப் பாதுகாப்புக்காக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற இந்த நேரத்தில் மதுரையில் இருக்கின்ற கல்லூரிகளில், கல்லூரி மாணவர்கள் படிப்பு நிறுத்தம் செய்ததால் கல்லூரிகள் மூடப்பட்டுவிட்டன. தேச பாதுகாப்புக் காரியங்களில் ஈடுபட வேண்டியவர்கள் வேறு கோஷங்களைப் போட்டுக்கொண்டு வீதிகளில் சுற்றி வருகிறார்கள். இந்த நிலை வேண்டாதது, அவசியமற்றது. மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோருடைய சக்தி தேசப் பாதுகாப்புக்குத் தேவைப்படுகின்ற காரணத்தால் அரசு உடனடியாகத் தலையிட்டு அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டு ஆவன செய்ய வேண்டும். பொதுமக்களும் தேசப் பாதுகாப்புக்காக அத்தனையும் செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இதை ஒரு அவசரப் பிரச்சினையாகக் கொண்டு வந்திருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் இதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: As the Government is aware there have been strikes and closures of colleges in Madras City. Students have been demanding certain privileges. These privileges are well-known to the Government. This sort of thing cannot be allowed to continue, especially in the present emergency in the national interest. It is creating a gap between the educated and post-graduates. Those who are now having education will be very badly hit. Their parents are much affected. The demands of the students are so simple that the Government, if only it gives up the prestige issue and takes up to the solution of the same very seriously, can definitely deal with them and re-open the colleges. The demands are such as convocation, matters relating to rules and regulations, students' societies, etc. These are small matters. If only the Government is not self-complacent, it can definitely solve these problems. I think it is a very emergent matter and I have therefore given notice of this adjournment motion to discuss about that matter.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்களும், கே. எம். சுப்பிரமணியம் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானத்திலே மாணவர்களுடைய கிளர்ச்சிகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசாங்கம் பாராமுகம் பார்க்கிறது என்று அவர்கள் கூறினார்கள். அரசாங்கம் எந்தத் தன்மையையும் பார்க்காமல் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படாமல் இருக்க என்ன என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து வருகிறது. இந்த நெருக்கடி நேரத்திலே கிளர்ச்சிகளில் ஈடுபட்டு அதன் காரணமாகக் கல்லூரிகள் மூடப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 டிசம்பர் 16

படுவதும் அதன் காரணமாகப் பல்வேறு திங்கு நிலைகள் ஏற்படுவதும் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். ஆங்காங்கு பிரச்னைகள் கிளம்பிவிடுகின்றன. ஒவ்வொரு இடத்திலும் மாணவர்கள் கிளர்ச்சி நடத்துவதற்கு ஒரு காரணம் அமைந்துவிடுகிறது. பிரச்சினைகளை எளிதாகத் தீர்த்துவிடலாம் என்று அவர்கள் சொன்னார்கள். எளிதாகத் தீர்த்துவிடலாம் என்றால் யாரும் வேண்டாமென்று சொல்ல மாட்டார்கள்.

கல்வித் துறையைப் பொறுத்தமட்டிலும் பலவகைகளிலும் அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்த எந்த எந்த முயற்சிகளை எடுக்க வேண்டுமோ அவற்றை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு நிலையைக் காக்கும் விதத்தில் மற்ற அதிகாரிகள் முயல்கிறார்கள். சில இடங்களிலே மாணவர்கள் யூனியன் அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். யூனியன் அமைப்பதா வேண்டாமா என்பது அந்த அந்த நிர்வாகத்தினுடைய தன்மையைப் பொறுத்ததாக இருக்கிறது. யூனியன் அமைவதின் காரணமாகப் போட்டாப் போட்டிகள், வேறுபாடுகள், மாச்சரியங்கள் இவைகள் ஏற்படுகின்றன. இதன் காரணத்தினால் சில கல்லூரிகளிலே கல்லூரி முதல்வரே தேர்தல் இல்லை என்று சொல்லி தாங்களே அவர்களைத் தேர்ந்தெடுத்துவிடுகிறார்கள். சில இடங்களிலே யூனியனே வேண்டாமென்று சொல்லிவிடுகிறார்கள். யூனியன் வைக்கவேண்டுமென்றோ அல்லது எப்படி வைக்கவேண்டுமென்றோ அரசாங்கம் சொல்கிற நிலையில் இல்லை. அதற்குப் பிறகு மாணவர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்துகிறார்கள். அதிலே திருப்தியில்லாத நிலைமையில் படிப்பு நிறுத்தம் செய்கிறார்கள். வன்முறைச் செயல்களிலே ஈடுபடுகிறார்கள்.

பாளையங்கோட்டையில் அப்படித்தான் யூனியன் வேண்டுமென்று கேட்டார்கள். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள், அதன் காரணமாக வன்முறைச் செயல்களிலே ஈடுபட்டார்கள். மற்ற மாணவர்களும், அவர்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் அவர்களும் கலந்துகொண்டார்கள். ஆய்வு நிலையத்தில் இருக்கின்ற சாமான்களுக்குச் சேதம் ஏற்பட்டது. நூல் நிலையத்தில் இருக்கின்ற கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. உள்ளுக்குள்ளே காவல் துறையினரும் செல்லமுடியாது. கல்லூரிக்குள்ளே காவல் துறையினர் சென்றால் எப்படி அவர்கள் வந்தார்கள் என்று வினா எழுப்புகிறார்கள். எனவே அவர்கள் அமைதியை நிலைநாட்ட வேண்டிய சூழ்நிலையில் சிலருக்குக் காயம் ஏற்பட்டது.

கான்வொக்கேஷனைப்பற்றிய பிரச்னை வந்தது. பட்டமளிப்பு விழா நடத்துவதுபற்றி செனட் அவையினர் அகில இந்தியத் துணை வேந்தர்கள் மாநாட்டில் முடிவு செய்ததற்கிணங்கப் பல்வேறு பட்டமளிப்பு விழாக்களால் பெருஞ்செலவுகள் ஏற்படுகின்றன என்பதுபோன்ற இத்தகைய தன்மைகளை எல்லாம் கண்டறிந்து அவ்வளவு விரிவாக அது தேவையில்லை என்று அவர்கள்

1971 டிசம்பர் 16] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மாநாட்டிலே முடிவுசெய்ததற்கிணங்க கொச்சியிலே நிறுத்திவிட்டார்கள், திருவனந்தபுரத்திலே நிறுத்திவிட்டார்கள், காசிப் பல்கலைக் கழகத்திலே நிறுத்திவிட்டார்கள். இங்கேயும் ஒவ்வொரு வருடமும் 14 ஆயிரம் பேர் பட்டம் வாங்குகிறார்கள். பட்டமளிப்பு விழா மூன்று நான்கு நாட்கள் நடைபெறுகின்றன, பெரும் செலவுகள் ஏற்படுகின்றன. பட்டம் வழங்குவது ஒரு காலத்திலே துணைவேந்தர் என்று இருந்தது, இப்பொழுது பட்டம் பணியாளர்கள்தான் வழங்குகிறார்கள். எனவே முக்கியமான பட்டங்கள், டாக்டர் பட்டங்கள், பரிசு பெறத்தக்க பட்டங்களை மட்டும் இங்கே வழங்கிவிட்டு மற்றவற்றை அந்தந்தக் கல்லூரிகளிலேயே அந்தந்தக் கல்லூரிகளின் முதல்வர் மூலமாகப் பெறக் கூடிய முறையிலே செனட் அவையினர் முடிவுசெய்தார்கள். மாணவர்கள், இல்லை, இல்லை அது வேண்டாம் என்று சொன்னார்கள். அதைப்பற்றிச் சொல்லவந்தவர்கள் 10 அல்லது 15 பேர்கள் வந்து விண்ணப்பம் என்ற அளவிலே கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் பத்தாயிரம் பேர்கள் என்ற அளவிலே ஊர்வலமாக வந்தார்கள், வந்து வன்முறைச் செயல்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். பிறகு துணைவேந்தரிடம் கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி செனட் அவையிலே மீண்டும் முடிவுசெய்யலாம், இதிலே ஒன்றும் கடினம் இருக்காது, மறுபடியும் அந்த முறையைக் கொண்டு வருவதில் பிரச்னை இருக்காது என்று சொல்லி இருக்கிறார்கள்.

சில கல்லூரிகளிலே நூற்றுக்கு 4 அல்லது 5 மாணவர்கள் செய்கின்ற நிலைமைக்கு மற்ற 90 பேர்களும் பாதிக்கப்படுகின்றார்கள். அந்த 4 அல்லது 5 மாணவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்பொழுது அதற்காக மறுபடியும் வேலைநிறுத்தம் அவர்கள் செய்கின்றார்கள். விவேகானந்தா கல்லூரியிலே ஒரு தகராறு ஏற்பட்டு அது முற்றிப் பெரும் நிலைக்குபோய் அதன் காரணமாக 'இன்டெபனிட்' ஆக்க கல்லூரியை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகவே, சிலபல கல்லூரிகள் கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக விடுகின்ற விடுமுறையைச் சில நாட்கள் முன்கூட்டியே வைத்து விட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஜனவரித் திங்கள் கல்லூரி திறக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நெருக்கடி நிலையை உணர்ந்து மாணவர்களும் கிளர்ச்சிகளிலே ஈடுபடமாட்டோம் என்று உறுதி தந்திருக்கிறார்கள். நாட்டிலே உள்ள சூழ்நிலையை ஒட்டி மூடப்பட்ட கல்லூரிகள் ஜனவரித் திங்களில் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படலாம் என்று எதிர்பார்க்கிறோம். அதற்கான முயற்சிகளை எல்லாம் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு கல்லூரியிலும் பேராசிரியர்கள், மாணவர்களுடைய பிரதிநிதிகள் பெற்றோர்கள் இவர்களைக் கொண்ட ஒரு குழு இருக்கட்டும், அந்தக் குழு எந்தப் பிரச்னையாக இருந்தாலும் தக்க

முடிவு எடுக்கும் அந்தக் குழுவிலே பிரச்னையை விட்டுவிட்டு மாணவர்கள் படிப்பிலே கவனம் செலுத்தலாம் என்ற முறையிலே சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படி அனுப்பப் பட்டிருந்தும் மீண்டும் இத்தகைய விளைவுகள் ஏற்படுவது வருந்தத்தக்கதாகும்.

ஒரு மாணவர் வெளியூரிலே இறந்துவிட்டார் என்பதற்காக இங்கே கல்லூரி மூடவேண்டுமென்று சொன்னார்கள். இங்கே மூட வேண்டாம். மாலையிலே ஒரு இரங்கல் தீர்மானம் போட்டுக் கொள்ளலாம் என்று முதல்வர் சொன்னார்கள். அதனால் கல்லூரி முதல்வரைக் கண்டபடி திட்டினார்கள். திட்டியவர்கள்மீது அபராதம் அந்தக் கல்லூரி முதல்வர் விதித்தார்கள். அந்த அபராதத்தை எதிர்த்து மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். கல்லூரி முதல்வருக்குப் பெரிய அறை ஏன்? மாணவர்களுக்கு எந்த வசதியும் இல்லாத நிலைமையிலே முதல்வருக்கு அவ்வளவு பெரிய அறை தேவைதானா என்று கேட்டு இதுவரை அந்த அறையை அனுபவித்து வந்ததற்கு முதல்வர் கட்டணம் செலுத்தவேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருந் தார்கள்.

இப்படிப்பட்ட பிரச்னைகள் வரும்பொழுது ஒரு குழுவினர் அதை ஆராய்ந்து ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தலாம் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். எல்லாத் தரப்பினரும், பொது மக்களும், மாணவர்களும், பெற்றோர்களும் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் நம்முடைய மாநிலம் பாழாகாமல் இருக்கும். படிப்பு இழப்பு ஏற்படுவதால் பாதிக்கப்படுகின்றவர்கள், பெற்றோர் கள் அல்ல, முதல்வர் அல்ல, பேராசிரியர்கள் அல்ல, மாணவர்கள் தான். படிப்பை முடித்துவிட்டால் எந்தக் கிளர்ச்சிகளிலும் ஈடு படலாம் என்றுகூட அவர்களுக்கு அறிவுரை தரப்படுகிறது. சில பல கல்லூரிகளில் இப்பொழுது நடைபெறுகின்றன. சில பல கல்லூரிகளில் பரீட்சை வேண்டாம் என்று சொல்லிவிட்டதன் காரணமாக 'இன்டெபனிட்' ஆகக் கல்லூரியை மூடவேண்டிய சிறக்கப்பட்டு அமைதியான சூழ்நிலை ஏற்படும் என்று எதிர்பார்க் கிறோம். அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்ட முயற்சிகளையெல் லாம் அரசாங்கம் செய்துகொண்டு இருக்கிறது என்று நான் உறுதி கூறுகிற காரணத்தினால் இதற்காக அவையின்பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டிய அவசியமில்லை என்று கூறி உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர் கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மா னத்திற்கு அவசியமில்லை என்ற காரணத்தினால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு

(அ) அரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் சேலம் கிளையினருடைய உண்ணாநோன்பு குறித்து.

MR. SPEAKER: Now the Hon. Member, Dr. Hande will call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance.

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the hunger-strike by Salem Branch of the Elementary School Teachers' Association on 4th December 1971 and 5th December 1971 in Salem District protesting against the hardships to which the Teachers were subjected to in connection with the family planning campaign.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குடும்பநலத் திட்டம் ஒரு தேசிய திட்டமாகும். இந்தத் திட்டத்தினுடைய வெற்றி, மக்கள் பெருக்கத்தால் தோன்றிய கடுமையான நிலைமையை நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் திட்டத்தின் கருத்துக்களை பரப்புவதில் சார்ந்திருக்கிறது. மக்கள் பெருக்கத்தின் பிரச்னையை நோக்கும்போது பெரும்பாலான மக்கள் குடும்பநலத் திட்டத்தில் ஆர்வம் கொள்ளுமாறு செய்தல் வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் குடும்பநலத் திட்டத்தின் நோக்கம் நிறைவேற தன் பங்கினை ஆற்றிட வேண்டும். இந்த நோக்கம் ஈடேற தாமாகவே பணியாற்ற முன்வரும் ஆர்வமுள்ள அனைவரின் பணியையும் பயன்படுத்த வேண்டும். அறிவைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியப் பெருமக்கள் போன்றோர் களின் பணியை இத்திட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டியது இன்றியமையாத தேவையாகும். பொதுமக்களிடத்தில் அவர் களுக்குள்ள செல்வாக்கை அரசு பெரிதும் கவனத்தில் கொண்டுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டுதான் அரசு ஊழியர்களையும், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் ஊழியர்களையும், அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களையும் அறுவை சிகிச்சை முறை பரப்புவதற்கு பிரச்சாரம் செய்யவும் ஒவ்வொரு அறுவை சிகிச்சைக்கும் ரூபாய் 10 மதிப்பூதியம் பெறவும் அரசு அனுமதி வழங்கி உள்ளது. அறுவை சிகிச்சைக்காக நபர்களைக் கொண்டுவருவதில் அரசு ஊழியர்கள் அல்லது மற்றவர்கள்மீது வற்புறுத்தலோ, வலுக்கட்டாயமோ கூடாதென்று அரசினால் தெளி வாக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் ஊழியர்களையோ மற்றவர் களையோ அறுவை சிகிச்சைக்காக நபர்களைக் கொண்டுவரும்படி வற் புறுத்தக்கூடாது என்றும் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் களுக்கும் மேற்கண்ட ஆணை பொருந்தும்.

திருநெல்வேலி, வடாற்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம் மாவட் டங்களிலிருந்து அறுவை சிகிச்சைக்கு நபர்களைக் கொண்டு வர வேண்டுமென்று ஆசிரியர்களை வற்புறுத்துவதாகவும், அவ்வாறு கொண்டுவராத் தவறினால் ஊதியம் கொடாமை, ஆண்டு ஊதிய

உயர்வு கொடாமை, தற்காலிக வேலை நீக்கம் போன்ற தண்டனைகளுக்கு அவர்கள் உள்ளாக்கப்படுவதாகவும் சில புகார்கள் வந்துள்ளன. இந்தப் புகார்கள்பற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்கள் அறிக்கை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். பனமரத்துப்பட்டி, நங்கவல்லி வட்டாரங்களில் மூன்று ஆசிரியர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டதாக சேலம் மாவட்ட ஆட்சியாளர் ஒரு சிறப்பு அறிக்கை அனுப்பியுள்ளார். ஆனால் அவ்வாசிரியர்கள் குடும்பநலத் திட்டத்திற்குச் சற்றும் தொடர்பில்லாத வேறு பல காரணங்களுக்காகத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கிறார்கள். தற காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் சேலம் மாவட்ட ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவராகவும், செயலாளராகவும் இருந்த காரணத்தால் அவர்கள் தங்களுடைய பதவியைப் பயன்படுத்தி சங்கத்தின் கூட்டத்தைக் கூட்டி ஆசிரியர்களுக்கு உண்மையைத் திரித்துக் கூறி ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உண்ணாவிரத அறிக்கையும் வெளியிட்டார்கள். மேலவை அங்கத்தினர் மாண்புமிகு திரு. முத்துசாமி இதுபற்றி மாவட்ட ஆட்சியாளரிடம் எடுத்துரைத்த பிறகு மாவட்ட ஆட்சியாளர் அனைத்து ஊராட்சி ஆணையாளர்களுக்கும் தற்காலிக வேலை நீக்க ஆணைகள் இருப்பின் அவற்றைக் கைவிடும்படி ஆணையிட்டுள்ளார். மேலும் ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து பணியாற்றுமாறு அவர்கள் ஒத்துழைப்பை கோரிப் பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இப்பொருள்பற்றி ஆசிரியர்களின் பிரதிநிதிகளோடும் விவாதிக்கப்பட்டது. இதன் பலனாக தவறான கருத்துக்கள் நீக்கப்பட்டன. ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து குடும்பநலத் திட்டப் பணிக்கு ஒத்துழைப்பைத் தர ஒப்புக் கொண்டுள்ளனர். மாவட்டம் முழுவதும் உள்ள ஆசிரியர்கள், இப்பொழுது குடும்பநலத் திட்டம் வெற்றி பெற தாமாகவே முன் வந்து முழு ஒத்துழைப்பையும் தருவதாக மாவட்ட ஆட்சியாளர் கூறுகிறார்.

சேலம் மாவட்ட ஆசிரியர்கள் தற்போது நடந்துகொள்ளும் முற்போக்கான முறை நம் மாநிலத்தின் பிற மாவட்டங்களும் பின்பற்றத் தக்க வகையில் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. மேலும் ஒவ்வொரு குடிமகனும் குடும்பநலத் திட்டம் வெற்றிபெற தன் பங்கினைச் செய்ய தீவிர ஆர்வம் கொள்ள வேண்டும் என்று அரசு கருதுகிறது. அதே நேரத்தில் அதிகாரிகள் வற்புறுத்தல் முறைகளைக் கையாளாமல் மக்கள் தாங்களாகவே முன்வந்து குடும்பநலத் திட்ட முறைகளை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

அமைச்சர் என்ற முறையில் நான் கலந்துகொள்ளும் எல்லா நிகழ்ச்சிகளிலும் இப்படிப்பட்ட வற்புறுத்தலுக்கு அவசியமில்லை, மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்கு ஆசிரியர்களாகயிருந்தாலும் சரி, பிறராக இருந்தாலும் சரி, தாங்களாகவே ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் போதும் என்று நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகையால் இடையிலே ஏற்பட்ட

சில மன மாறுபாடுகள், வேறுபாடுகள் விரைவில் நீக்கப் பட்டுள்ளன என்று இந்தக் குறிப்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Dr. H. V. HANDE: Sir, I am very glad that the Hon. Minister has given clarification. But may I know from the Hon. Minister whether it is possible for the Government to issue clear-cut instructions to all the departmental heads not to victimise the teachers. In certain places orders have been passed for stopping the payment of their salaries. In fact I have got three copies of these orders which I do not want to read just now but I will privately hand them over to the Hon. Minister. They are all photostat copies and in some orders instructions have been given that if they do not reach the quota allotted to them, action will be taken against them. Sir, I am a believer in family planning but the Government should not victimise them. So, may I know from the Hon. Minister whether it is possible for him to give a categorical assurance that they would not be victimised.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதுபற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்து முன்னாலே அரசாங்கத்தால் உணரப்பட்ட ஒன்றாகும். பொதுவாகவே இப்படிப்பட்ட ஒரு இயக்கத்தை செல்வாக்கோடு நடத்த வேண்டுமென்பதற்காக மாவட்ட ஆட்சியாளர்கள், அவர்களுக்குத் துணையாயிருக்கும் அதிகாரிகள் ஆகியோர் இதிலே அக்கறைகொண்டு இந்த வேண்டுகோளைத் தெரிவிக்கின்ற நேரத்தில் ஒரு கட்டத்திலேயிருந்து இன்னொரு கட்டத்திற்குத் தெரிவிக்கும் கட்டத்தில் அவரவர்கள் தங்கள் தங்கள் ஆர்வத்தின் காரணமாகவோ அல்லது எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்ற முடிவின் காரணமாகவோ அவர்கள் சொல்லும் வார்த்தைகள் சில இடங்களில் மாறி விடுகின்றன. 'ஃபோட்டோஸ்டேட் காப்பீஸ்' என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். படம் எடுக்கப்பட்டிருக்கிறது. நடைமுறையிலே உள்ள சிக்கலுக்குப் படம் எடுத்துக் காட்டினால் மட்டும் போதாது. ஏனென்றால் எந்த ஒரு மேல் அதிகாரியும் எப்படியாவது ஒரு குறிப்பிட்ட அளவு நிறைவேறிவிட வேண்டுமென்று விரும்பும்பொழுது நீங்கள் எப்படியாவது நிறைவேற்றித் தாருங்கள் என்று கூறுகின்ற மரபு இருக்கிறது. இப்படிப் பட்ட மரபுகளை மாற்ற முடியாது. ஆனால் அதற்காக யாருக்கும் எந்தவிதமான தண்டனையும் தரக்கூடாது. ஒருவர் தனக்குக் கீழே பணியாற்றுபவரை எப்படியாவது 4 பேருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் முறையைத் தடுக்க விரும்பவில்லை, ஆனால் அதற்காகக் கட்டாயப்படுத்துவது தவறு. கட்டாயப்படுத்தக்கூடாது என்பது ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல, நர்சாக இருந்தாலும் சரி, வேறு துறையிலே பணியாற்றுகின்ற வேறு எந்தவகை அரசாங்க ஊழியர்களாகயிருந்தாலும் சரி அதை நிறைவேற்றவில்லை என்பதற்காகக் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று அரசாங்கம் விளக்கிச் சொல்லியிருக்கிறது. நானும், இந்தக் குடும்பநலத் திட்டத்தை

இந்த நேரத்திலேயும் நிறைவேற்றவில்லை என்றால் எதிர்காலத்திலே என்ன ஆகுமோ என்ற அச்சத்தைத் தெரிவிக்கிறேன். நான் செல்லும் மாவட்டங்களில், நான் சந்திக்கும் ஆசிரியர்கள் இதை பெருங்குறையாகச் சொல்லவில்லை. ஆனால் சிலயிடங்களில் தவறு, வருந்தத்தக்க நிகழ்ச்சி இருந்தாலும்கூட அதைப் போக்குகின்ற நிலையில், யாருக்கும் எந்த இடத்திலும் கட்டாயப்படுத்தக்கூடாது என்பதைத் தெளிவாக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : For instance, in one copy of those orders it is clearly stated, 'this month's pay will be stopped'.
இம்மாத சம்பளம் நிறுத்தப்படும்.
That is a serious order. Sir, for the last six or seven years I have been advocating family planning and I want public opinion to be properly mobilised. But I want that the Government should withdraw such an order.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நிறுத்தப்படும் என்பது அச்சுறுத்தல். நிறுத்தப்படமாட்டாது என்பது உறுதிமொழி.

(ஆ) படியரிசித் திட்டத்தின்கீழ் ஏழை மக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த அரிசியின் அளவு பெருமளவுக்குக் குறைக்கப்பட்டது குறித்து.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the drastic reduction in quantity of rice issued to the poor people under ' Rupee-a-measure Scheme '.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, till 16th May 1971, the distribution of rice under the subsidised scheme was made at the rate of 1,000 grams per adult per week and half of that quantity per child below 12 in Madras City as well as Coimbatore and adjoining areas. In the belt areas around Madras City, the rate was 700 grams per adult per week and half of that quantity per child. From 16th May 1971 the scale of supply was reduced to 1,600 grams per adult bimonthly and half the above quantity per child below 12. The change in the periodicity of supply was done primarily for administrative convenience as reduction in the number of issues saves considerable administrative work.

The benefit per individual is roughly Rs. 11 per year, but the subsidy involves a great burden on the administration to check abuses by way of bogus cards, false indents by dealers and bogus sales by dealers with the intention of appropriating the benefit of the subsidy to themselves. Continuance of the distribution, but only at economic rates would eliminate the abuses in a large measure while at the same time the vulnerable sections would continue to have benefit of supply of rice at the economic rates and thus be protected from market fluctuations. The Government could carry sufficient buffer stocks for similar distribution in other urban areas or even rural areas in times of high prices. The experience following the relaxation of controls in 1970, has been that the prices

tend to rise beyond the economic rate at which Government can issue its stocks, only during a period of 3 to 4 months between July and October. Public distribution from Government stocks during this period would benefit the people to a large extent and could have a substantial impact on the general price level.

The subsidised scheme was intended to be only a measure of assistance to the poorer sections and was not intended to meet their full requirements. Considering the need to mobilise resources in the context of the emergency, the subsidised scheme is being given up with effect from 1st January 1972. A scheme for distribution of rice at economic rates will be implemented thereafter and cards will be issued to the poorer sections in Madras and in Coimbatore.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுகிறேன் என்று ஆட்சிக்கு வந்தவர்கள் இப்போது ஒரு ரூபாய்க்கு ஒருபடி அரிசிகூட பாட்டாளி மக்களுக்காகப் போடுவது நிறுத்தப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. 30,000 டன் அளவுக்கு இருப்பு இருக்கும்போது பாட்டாளி மக்களுக்கு அத்தியாவசியமான அரிசியை ஒரு ரூபாய்க்கு ஒருபடி ஏன் போடக் கூடாது. நியாய விலைக் கடைகளில் ஒருபடி அரிசிவிலை 2.16 காசு ஆகிறது. நியாய விலைக் கடைகளிலும், பால் டிப்போக்களிலும் கால்கடுக்க நின்று படி அரிசி 2.16 கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நெருக்கடி நிலைமை காரணமாக அரசு ஒரு படி அரிசித் திட்டத்தை நிறுத்தியதாகக் கூறுகிறது. நெருக்கடி நேரத்தில்தான் ஏழை மக்களுக்கு இந்தத் திட்டம் தேவை. மேலும், இப்போது கொடுக்காவிட்டாலும் தேச நெருக்கடி முடிந்தவுடனாவது மீண்டும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, " பட்டணவாசிகளுக்குப் படியரிசியா? பட்டிக்காட்டுக்குக் கிடையாதா ?" என்று கேட்ட காலம் மாறி, படியரிசி ஏன் போட வேண்டுமென்று அரசைக் கேலி புரிந்த நிலையும் மாறி, படியரிசிக்காக வக்காலத்து வாங்கியதற்கு மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நெருக்கடியான நேரத்தில்தான் படியரிசி போட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் நெருக்கடியான நேரத்தில் அரசாங்கம் பொருளாதாரத் துறையில் எத்தனையோ சிக்கன முறைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. அரசாங்கம் தந்த இப்படிப்பட்ட சலுகைகளின் மூலம் ஏற்படுகின்ற பெரிய இழப்பை இந்த நெருக்கடி நேரத்தில் அரசு சமாளிக்க முடியாது என்ற காரணத்தால் படியரிசித் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

படியரிசித் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தால் ஏழை மக்கள் படியரிசி இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது என்று அம்மையார் அவர்கள் கூறியது முற்றிலும் தவறாகும். அதனால்தான் நியாய விலையில் அரிசி வழங்கப்படும் என்று அன்றைக்கே அறிவித்திருக்

கிறேன். நியாய விலையில்—எகனமிக் ரேட்டில்—ஏழை எளிய மக்களுக்கு, மாத வருமானம் 300 ரூபாய்க்குக் குறைவாக உடையவர்களுக்கு, நிச்சயமாக அரசு குறைந்த விலையில் வழங்கும்.

நெருக்கடி நிலைமை தீர்ந்த பிறகு படியரிசித் திட்டம் மீண்டும் வருமா என்றும் கேட்டார்கள். நெருக்கடி நிலை தீர்ந்த பிறகு, உணவு நிலைமையில் திருப்திகரமாக ஆகி, பொருளாதாரத் துறையில் நல்ல வகையில் முன்னேறி இருந்தால் தமிழ்நாடு முழுவதும் கூடப் படியரிசி போடலாம். ஆனால் அரிசியே கிடைக்காமல் இருந்த காலத்திலிருந்து அரிசி கிடைக்கிற காலத்தை உருவாக்கிய இந்த அரசுக்கு அவர்கள் இப்போது நன்றி சொல்லா விட்டாலும் தாமதமாகவாவது நன்றி தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அம்மையார் அவர்கள் நியாய விலைக் கடைகளில் படியரிசி ரூ. 2.16 காசுக்கு விற்கப் படுகிறது என்ற தவறான தகவலைக் கொடுத்தார்கள். ஒரு கிலோ ரூ. 1.08 காசுக்கு விற்கப்படுகிறது. கனம் அங்கத்தினர் வாங்கிப் பார்த்தால் தெரியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒரு படி அரிசியின் விலை என்ன என்று அமைச்சர் அவர்கள் கணக்கிடவில்லை . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒரு ரூபாயுடன் 54 காசுகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள், நன்றி. நெருக்கடி தீர்ந்து, வேளாண்மை பெருகி, பொருளாதாரம் சரியாக இருந்து என்று இத்தனை 'இஃப்'கள் போடுவதைப் பார்த்தால் உண்மையில் ஒரு படி அரிசி பாட்டாளி மக்களுக்குக் கிடைக்காது என்று தோன்றுகிறது. நியாய விலைக் கடைகளில்கூட சரியாகக் கணக்குப் பார்த்தால் படி அரிசி ரூ. 1,72 ஆகும். நெருக்கடி நேரத்தில் ரூபாய்க்கு படி அரிசி போடமுடியவில்லை என்பது நியாயம். நெருக்கடி தீர்ந்தபிறகு ரூபாய்க்குப் படியரிசி போட்டு ஏழை பாட்டாளி மக்களுக்கு உதவ முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(5) தனியார் அலுவல்கள்

(அ) சட்ட முன்வடிவுகள்

(i) **1971-ம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு-நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1971).**

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு-நகராட்சியை விரிவுபடுத்துதல்)

சட்டமுன்வடிவை * (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நான் அதை வழிமொழிகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எம். சுரேந்திரன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைச் சட்டமாக்கித் தரவேண்டுமென்று கோருகின்ற நேரத்திலே இது என்னுடைய விருப்பத்தை மட்டும் கொண்டதல்ல என்று முதலிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மேட்டூரில் இருக்கின்ற சுமார் 40,000 ஜனத் தொகை கொண்ட மக்கள்—எனக்கு ஓட்டுப் போட்டவர்களும் சரி, ஓட்டுப்போடாதவர்களும் சரி—இந்த மசோதாவைச் சட்டமாக்க வேண்டுமென்று முழு மனத்துடன் விரும்புகிறார்கள் என்பதை முதலில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி விரும்புகிறார்கள் என்பதற்கு ஆதாரமாக அந்த நகரத்தில் இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும் பல சந்தர்ப்பங்களில் இந்த டவுன்ஷிப் கமிட்டியை கலைக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கிறார்கள். அதோடு அந்தப் பகுதியில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒரு குழு அமைத்து, இதை நகரசபை ஆக்குவதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த முடிவின்படி அங்கே பல கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. பல தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் முறையில் மகஜர்களைத் தயாரித்து 1970-ம் வருஷத்தில் எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றாகச் சேர்ந்து வந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அந்த மகஜரை வழங்கி. அவர்களுடைய வேண்டுகோளையும் கூறி இருக்கிறார்கள். ஆகவே. இந்த மசோதா இங்கே கொண்டு வரப்படுவதற்கு முன்னாலேயே அங்குள்ள அவ்வளவு மக்களுக்கும் இது தேவையானது என்ற உணர்வு கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாக விளங்கும்.

மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டி என்று சொல்லும்போது அது ஆங்காங்கே இப்போது ஏற்படுத்துகின்ற டவுன்ஷிப் கமிட்டியைப் போன்றது அல்ல என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்போது ஏற்படுத்தப்பட்டு வருகின்ற டவுன்ஷிப் கமிட்டிகள் ஒரு பஞ்சாயத்திற்குத் தேவையான ஜனத் தொகையோ, வருமானமோ இல்லாத பகுதிகளிலும் அதை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கிற காரணத்தால் அந்த விதிமுறைகளின்படி விரிவுபடுத்த வழி இல்லாத நிலைமையில் பல இடங்களில் டவுன்ஷிப் கமிட்டி அமைக்கப்படுகிறது. இரண்டொரு நாட்களுக்கு முன்னால்

*9—12—1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எம். சுரேந்திரன்] [1971 டிசம்பர் 16

மாண்புமிகு ஸ்தல ஸ்தாபன அமைச்சரவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது இதுபற்றி கூறினார்கள். ஆனால் இந்த டவுன்ஷிப் கமிட்டியானது 35 வருஷங்களுக்கு முன்னால் அமைக்கப் பட்டது என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். மேட்டூரில் காவேரியில் அணை கட்டும்போது அங்கே அணைகட்டும் சிப்பந்திகளுக்கும், அதிகாரிகளுக்கும் குடி தண்ணீர் வசதி, மின்சார வசதி, பாதை வசதி போன்ற வசதிகளைச் செய்வதற்காக இந்த அட்ஹாக் கமிட்டி அமைக்கப்பட்டது. மின்சார இலாகாவைச் சேர்ந்த சூப்பரின்டென்டிங் எஞ்சினியர் அதனுடைய தலைவராக அமர்த்தப் பட்டார்கள்.

நான்கு அதிகாரிகளைக் கொண்டதொரு கமிட்டியாக அது இயங்கி வந்தது. 1940-ல் தான் அது நிரந்தரமானதொரு கமிட்டியாகி அதற்கென்று ஒரு சட்டம் இயற்றப்பட்டு, அந்தக் கமிட்டி நிரந்தரமாக்கப்பட்டது. அப்படி நிரந்தரமாக்கப்பட்ட அக்கமிட்டியில் ஆறு பேர்கள் உறுப்பினர்களாக இருக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டு, இரண்டு வெளி ஆட்களையும் அதில் சேர்த்துக் கொண்டார்கள். அப்படி வெளியாட்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களில் ஒருவர் தொழிற்சாலை பிரதிநிதியாக இருக்க வேண்டுமென்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னர் நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் 1947, 1948-ம் ஆண்டுகளில் அங்கு பெரும் கிளர்ச்சிகள் நடந்து, அது நகரசபையாக்கப்பட வேண்டும் என்று அன்றிருந்த அரசாங்கத்தினிடம் கோரப்பட்டது. அப்படி கோரப்பட்டபோது அன்று அந்தத் துறைக்கு மாண்புமிகு திரு பக்தவத்சலம் அவர்கள் பொறுப்பு வகித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அங்குள்ள என்னையும் மற்றவர்களையும் அழைத்து தாற்காலிகமாக ஒரு ஏற்பாடு செய்து கொள்வோம் என்றும், அதற்குப் பிறகு டவுன்ஷிப் கமிட்டியைக் கலைப்போம் என்றும் சொன்னார்கள். அப்படி ஓர் ஏற்பாடு செய்யப்பட்டு, ஆறுபேர்களை ஒன்பது பேர்களாக ஆக்கி, அதில் நான்கு பேர்கள் உத்தியோகப் பற்றற்றவர்களாகவும், அமைத்துக் கொண்டு அதில் இரண்டு பேர்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளாக இருக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

அந்த ஏற்பாட்டின்படி பதிவுபெற்ற தொழிற்சங்கங்களிலிருந்து மூன்று மூன்று பேர்களை சிபார்சு செய்வதாகவும் அதிலிருந்து அரசு தேர்ந்தெடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த ஏற்பாடு 1966 வரையில் முறையாக நடந்து வந்தது. ஆனால் 1966-க்குப் பின்னால் பதிவு பெற்ற தொழிற்சங்கங்களைக் கேட்பதோ அல்லது அவர்களின் பிரிதிநிதிகளை எடுத்துக்கொள்வதோ இல்லாமல் அரசாங்கம் தன் இஷ்டப்படி, தான் விரும்பியவர்களை எடுத்துக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டு. இப்போதும் அது தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது. 1948-க்குப் பின்னாலும் கிளர்ச்சிகள் மீண்டும் வெகுவாகப் செய்யப்பட்டிருக்கின்றன.

1971 டிசம்பர் 16] [திரு. எம். சுரேந்திரன்]

அரசாங்கம் கூட ஒப்புக் கொண்டுள்ளது என்று கூடச் சொல்லலாம். மாண்புமிகு முதல் அமைச்சர் அன்று அவர்கள் மேட்டூருக்கு வந்திருந்தபோது, அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது அவர்களிடம் நான் கூறினேன். இங்கிருக்கிற அவ்வளவு பேர்களும் இந்த டவுன்ஷிப் கமிட்டியைக் கலைத்து விட்டு இதை நகரசபையாக ஆக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே, நீங்கள் கூட்டத்தில் பேசுகிறபோது இந்த டவுன்ஷிப் கலைக்கப்படும் என்று அறிவிக்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் கூறினார்கள், இப்போது நான் அறிவிப்பதற்கில்லை, அடுத்த பட்ஜட் கூட்டத்தில் ஸ்தல ஸ்தாபன மானியத்தின்மீது பேசும்போது நீங்கள் அந்தக் கருத்தைக் கூறுங்கள், நான் அதை ஏற்றுக் கொள்கிறேன் சபையில் ஒத்துக்கொள்கிறேன் என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். அதற்குப் பின்னால் அந்தக் காரியமும் நடைபெறவில்லை.

மீண்டும் இந்த மசோதாவை 1970-ல் நான் தாக்கல் செய்திருந்தேன். அப்படி தாக்கல் செய்யப்பட்டதற்குப் பின்னால் ஸ்தல ஸ்தாபன பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு திரு. சண்முகம் அவர்களிடம் இந்தக் கோரிக்கையைப் பற்றிக் கூறினேன். இந்த மசோதாவை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள், இதை ஏற்றுக்கொள்ள வேண்டும், இதை ஏற்றுக்கொள்வதுதான் ஜனநாயகத்திற்குப் பொருத்தமானது என்று கூறினேன். அவர்கள் கூறினார்கள், நீங்கள் இதை விரும்பினால் ஏற்றுக் கொள்கிறேன். எனக்கு எந்தவித ஆட்சேபணையுமில்லை என்று கூறினார்கள். அதற்குள்ளாக சட்டசபை கலைக்கப்பட்டு விட்டது.

ஆகவே இந்த மசோதா மீண்டும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக அமைச்சர் அவர்களிடத்தில் நான் ஏற்கனவே பேசியிருக்கிறேன். அவர்களும் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் முழு மனதோடு நம்புகிறேன். ஏனெனில். 1958-ல் ஏற்பட்ட பஞ்சாயத்து சட்டத்தைப் பார்க்கிறபோது ஒரு பகுதி பஞ்சாயத்தாக இருப்பதற்கு 500 பேர்கள் இருந்தால் போதும். அதற்கு மேற்கொண்டு நகரப் பஞ்சாயத்தாக மாறுவதற்கும், பின்னர் நகரசபையாக மாறுவதற்கும் எவ்வளவு மக்கள் தொகை இருக்க வேண்டும், எவ்வளவு வருமானம் இருக்க வேண்டும் என்றெல்லாம் கணக்கு கூறியிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிற போது மேட்டூர் நகரத்தில் அந்தக் கணக்குகளுக்கு எல்லாம் மேலாக சுமார் 40,000-க்கு மேல் இன்று மக்கள் தொகை இருக்கிறது. 1940-ம் ஆண்டு சட்டத்தை நிறைவேற்றும்போது, அதன் நோக்கத்தைப்பற்றிக் கூறும்போது 15% கூட வருமானம் இல்லாத காரணத்தினால் இது தற்போது டவுன்ஷிப் கமிட்டியாக இருக்கட்டும், என்று நாங்கள் முடிவு செய்கிறோம், இதை நகரசபையாக்க வருமானம் போதிய அளவிற்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்று அதன் வருமானம் சுமார் பத்து லட்சம் ரூபாய் ஆக உயர்ந்திருக்கிறது.

ஆகவே, வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்த்தாலும் சரி அல்லது அதை டவுன்ஷிப் கமிட்டியாக அமைக்கிறபோது எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை வைத்துப் பார்த்தாலும் சரி, இன்று அதை நகரசபையாக ஆக்க வேண்டிய அவசியம் பல வகைகளில் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அதும்மட்டுமல்ல, ஜனநாயக ரீதியில் அந்தப் பகுதி மக்கள் வரி கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கிற வரி எப்படி செலவு செய்யப்படுகிறது. எந்தெந்தக் காரியங்களுக்கு முதல் இடம் அளிக்கப்படுகிறது என்று கூறுவதற்கும் அதில் பங்கு எடுத்துக் கொள்வதற்கும் அந்த நகர மக்களுக்கு உரிமை இருக்க வேண்டுமென்பதை ஜனநாயக கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட உரிமைகளை வழங்குவதற்கு வாய்ப்பில்லாமல் அரசாங்க நியமன மெம்பர்களால் அந்த டவுன்ஷிப் கமிட்டி நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஜனநாயகத்தில் படிப்படியாக பஞ்சாயத்துக்கள், நகரசபைகள் போன்ற ஸ்தாபனங்களில் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பயிற்சி பெறுவதன் மூலம்தான் நாட்டு மக்கள் ஜனநாயக கோட்பாடுகளைப் புரிந்து கொண்டு அதற்கு தகுதியானவர்களாக வருவார்கள் என்பது எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ள உண்மையாகும்.

எனவேதான் கிராமப் பஞ்சாயத்து சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்படியிருக்க பெரிய நகரில் எல்லாவிதமான முன்னேற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும் அந்த முன்னேற்றங்களை முறைப்படுத்தி, சரியாக, நல்லமுறையில் அதை நிர்வகிக்க வேண்டுமென்று சொன்னால், நல்லதொரு நகரமாக்க வேண்டுமென்றால், அந்தந்தப் பகுதிகளிலுள்ள பிரதிநிதிகள் அதன் நிர்வாகத்தில் பங்கேற்றுக்கொள்ளவேண்டும். அப்படியில்லாமல் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களால், அதோடு அந்த மாவட்ட கலெக்டரால் நிர்வாகிக்கப்படுகிற ஒரு ஸ்தாபனம் ஜனங்களின் விருப்பங்களை உடனடியாகச் செயல்படுத்த முடியாது என்பதற்கு சமீபத்தில் ஒரு சம்பவம் அதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இன்று காலையில் கூட ஒரு கேள்வி எழுகிறபோது குடிநீர் வசதியை விரிவுபடுத்துவதற்கு எல்.ஐ.ஸி. யிடமிருந்து அந்த நகரமைப்பு கடன் கேட்டு வாங்கியிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அப்படிக் கடன் வாங்கும்போது அங்கு ஏற்கனவே உள்ள குடிநீர் கட்டணத்தை ஐந்து மடங்காக உயர்த்தியிருக்கிறது. ஒரு ரூபாய் என்பது ஐந்து ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. எவ்வித கட்டணமும் செலுத்தாமலிருந்தவர்களுக்கும் குறைந்தபட்சம் வரியாக ஐந்து ரூபாய் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இப்படி எவ்வித சம்பந்தமும், இல்லாமல் ஒரேடியாக மக்களின் மீது அந்த டவுன்ஷிப் கமிட்டி ஒரு பெரிய பளுவைச் சுமத்தியிருக்கிறது. அதை எதிர்த்து பல்வேறு விண்ணப்பங்களும், முறை

யீடுகளும் அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. மக்களுக்கு வசதிகள் செய்வது, மக்களின் வரிப்பணத்தைச் செலவு செய்வது போன்ற காரியங்களை மக்கள் பிரதிநிதிகளால் செய்யப்பட வேண்டுமே தவிர, வேறு முறைகளில் இருந்தால் அது காலத்திற்குப் பொருந்தியதாக இருக்காது என்பதன் காரணமாகத்தான் கூறுகிறேன்.

ஆகவே, அங்குள்ள அந்த டவுன்ஷிப் கமிட்டியைக் கலைத்து விட்டு அதை ஒரு நகரசபையாக ஆக்க வேண்டும் என்பதை அரசாங்கமும், ஏற்கனவே இதன் பொறுப்பேற்று அமைச்சர்களாக இருந்தவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மசோதாவிற்கு எந்தவித ஆட்சேபணைக்குரிய காரணங்களும் இல்லை என்ற காரணத்தினால் இந்த மசோதாவை சட்டமாக ஆக்கித்தர வேண்டும் என்று இச்சபையையும், அமைச்சர் அவர்களையும் சபாநாயகர் அவர்கள் மூலம் நான் பணிவுடன் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, தனியார் மசோதாவான மசோதா நம்பர் 43/1971-ஐ நான் முழு மனதுடன் ஆதரிப்பதற்கு எழுந்து நிற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு சுரேந்திரன் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாதான் சமீபத்தில் நடந்த தேர்தலுக்குப் பின் நடக்கும் தொடர்களில் வரக்கூடிய முதல் தனியார் மசோதாவாகும். ஆகவே அது ஒரு சிறப்பு பெற்றதாக இருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டியை ஒரு நகரசபையாக ஆக்கவேண்டுமென்பதில் நான் சார்ந்திருக்கக்கூடிய கட்சிக்கு முழு ஒருமைப்பாடு உண்டு. அதையொட்டித்தான் தொடர்ந்து ஒவ்வொரு இயக்கங்களிலும் ஒவ்வொரு ஆதுகோஷ்டி வந்தபோதும் கட்சிப் பாகுபாடு இல்லாத முறையில் மேட்டூரில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் சார்பில் வந்திருக்கிறார்கள். மேட்டூரில் மிக முக்கியமான ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அதில் பணியாற்றக்கூடிய மில் தொழிலாளர்கள்தான் அதிகமாக அந்த டவுன்ஷிப்பில் இருக்கிறார்கள். இப்போது புதிதாக அலுமினியம் பாக்டரி, கெமிக்கல் பாக்டரி என்பவை போன்ற பாக்டரிகள் எல்லாம் வந்திருக்கின்றன. இந்த டவுன்ஷிப்பின் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு ஓரளவு தூரம் செல்லவேண்டியிருக்கிறது. ஊருக்கு அப்பால் ஒரு பெரிய தொழிற்சாலை கட்டுகிறபோது அதை ஒரு டவுன்ஷிப்பாக அமைக்கிற ஒரு முறை இருக்கிறது. சில காலம் வரையிலும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் அரசே ஏற்று செய்து கொடுப்பதற்கும், அதற்குப் பின்னால் படிப்படியாக அங்கே உள்ள மக்கள் பிரதிநிதிகள் சேர்ந்து அந்த நகர அலுவல்களை கவனிப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்ற நிலைமையில்தான் அப்படி செய்யப்பட்டது.

ஆனால், மேட்டூரைப் பொறுத்தவரையில், அந்த அணை துவங்கப்பட்ட காலத்திலிருந்து, குடி நீர் மின்சார உற்பத்தி முதலியன அமைக்கப்பட்டதற்குப் பிறகு 1956-ல் டவுன்ஷிப் கமிட்டியாக

மாற்றப்பட்டது. அப்போது அந்தத் திட்டத்தின் அடிப்படையில் பணம் ஒதுக்கப்பட்டது என்பது உண்மை. சென்னை ஸ்தாபனச் சட்டம் அதாவது 14/1920, 1920-ம் ஆண்டிலிருந்து செயல்பட ஆரம்பித்தது. மேட்டூர் மின்சார போர்டு சூப்பிரன்டெண்டிங் இன்ஜினியர், மேட்டூர் மெடிகல் ஆபீசர், பொதுப்பணித்துறை சப்-டிவிஷனல் ஆபீசர், ஓமலூர் தாலுக்கா தாசில்தார் ஆகியோர் கொண்ட ஒரு அட்ஹாக் கமிட்டி ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைவராக சூப்பிரன்டெண்டிங் இன்ஜினியர் இருந்தார். அந்த நிர்வாக மேற்பார்வை அதிகாரம் எல்லாம், சேலம் ஜில்லா போர்டிடத்திலே இருந்தது. 1940-ம் வருஷம் வரையில் அட்ஹாக் கமிட்டி செயல்பட்டது. 1940-ம் வருஷ சட்டம் நெம்பர் 11/1940-ல் மேட்டூர் டவுன்ஷிப் சட்டம் இயற்றப்பட்டது. நகரசபை நடவடிக்கைகள் அனைத்தும் இந்த டவுன்ஷிப் கமிட்டியிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. 6 பேர் கொண்ட அந்தக் கமிட்டியில் இருவர் தொழிலாளர் தரப்பில் இருக்க வேண்டுமென்று அந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அதன் உறுப்பினர்களை அரசாங்கம் நியமிக்க வேண்டும்.. உறுப்பினர்களோ, அல்லது உறுப்பினர் அல்லாதாரோ அதன் தலைவராக இருக்கலாம் என்று இருக்கிறது. எக்சிகியூடிவ் அபேட்சர்களையும் நியமிக்கலாம் என்றும் அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 15 சத விதம் கூட வெளி வருமானம் இல்லாத காரணத்தால், அது டவுன் ஷிப்பாக இருக்கிறது என்று அந்த சட்டத்தின் நோக்கத்தில் கூறியிருக்கிறார்கள். ஆனால் சுதந்திரம் கிடைத்த பிறகு, பஞ்சாயத்து ராஜ் என்று சொன்னார்கள். பஞ்சாயத்து இல்லாத கிராமங்களில் பஞ்சாயத்து அமைப்புகளை ஏற்படுத்தினார்கள். அந்த பஞ்சாயத்துக்களை எல்லாம் இணைத்து, பஞ்சாயத்து ஒன்றியங்கள் ஆக்கினார்கள். அதிகமாக மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் இவையெல்லாம் செய்யப்பட்டன.

அதைப்போலவே நேற்று வந்த ஒரு கேள்வியில் கூட, மாவட்ட அபிவிருத்தி கழகத்தின் தலைவர் பொதுமக்களின் பிரதிநிதியாக இருக்க வேண்டுமென்று கூறப்பட்டது. அந்த அடிப்படையில் டவுன்ஷிப்பையும் மாற்ற வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அப்படி வற்புறுத்தியதன் பேரில் 6 பேர் உறுப்பினர் என்று இருந்ததை, 9 பேர் என்று மாற்றினார்கள். அதிலே நான்கு பேர் அதிகாரம் பெற்றவர்களாகவும், இருவர் தொழிலாளியாகவும் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அந்த நோக்கில்தான் முன்னாள் முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்கள் இந்த இலாகாவின் அமைச்சராக இருந்தார். அந்தத் தொழிலாளர் பிரதிநிதிகள் நியமனம் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்கங்களினால் சிபார்சு செய்யப்படும் மூன்றில் இரண்டு அங்கத்தினர்களை நியமனம் செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. இன்னும் சிறிது காலத்தில் டவுன்ஷிப் கலைக்கப்பட்டு, நகராட்சியாக மாற்றப்படும் என்று அரசாங்கத்தின் சார்பில் வாக்குறுதி கொடுத்தார்கள்.

பொதுவாக, அரசு வாக்குறுதி கொடுக்கிறது என்று சொன்னால், எந்தக்கட்சி ஆட்சியில் இருந்தபோது கொடுத்தது என்பது அல்ல, அது அன்றைக்கு காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் கொடுத்தார் என்பதல்ல, அது அரசின் சார்பாக கொடுக்கப்பட்ட வாக்குறுதி, அந்த வாக்குறுதி எந்த அரசையும் கட்டுப்படுத்தும், என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். அந்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றவில்லை. 1966-க்குப் பிறகு அந்த வாக்குறுதியைப் பற்றிய பேச்சே இல்லாமல் போய்விட்டது. அந்த டவுன்ஷிப்பை நகராட்சியாக மாற்ற போதுமான காரணங்கள் இருக்கின்றன.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன் சொன்ன மாதிரி இப்போது மேட்டூர் டவுன்ஷிப்பில் 40 பேர் இருக்கிறார்கள். மேட்டூர் அன்று இருந்ததற்கும், இன்று இருப்பதற்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. பலதரப்பட்ட தொழிற்சாலைகள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன. பஞ்சாலைத் தொழில் ஒரு டவுன் ஷிப்பில் இருக்கிற தொழிலா ? அப்படி யாரும் சொல்ல முடியாது. பஞ்சாலைத் தொழிலாளர்களைத் . தவிர, இதர தொழிற்சாலைத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஏறத்தாழ 40,000-க்கு அதிகமான மக்கள் இருக்கிறார்கள். அங்கே சுற்றியிருக்கும் கிராமங்களில் உள்ள மக்களின் எண்ணிக்கையும் சேர்த்துக் கொண்டால் இன்னும் அதிகமாக வரும். ஆகவே, இந்த மசோதா கொண்டு வந்திருப்பது சரியே. இந்த மசோதா தெளிவாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதாவது,

As soon as may be, after the passing of this Act, the State Government shall, by a notification, abolish the Mettur Township Committee constituted under sub-section (1) of section 2 of the Mettur Township Act, 1940 (Tamil Nadu Act XI of 1940) from such date as may be specified therein.

The notification mentioned in sub-section (1) of this section, shall declare that the Mettur Township Act, 1940 (Tamil Nadu Act XI of 1940) and all notifications, rules, bylaws, regulations, orders, directions and powers issued, made or conferred by it shall cease to apply in the area previously comprised in the Mettur Township; the rights and obligations, assets and liabilities of the Township Committee srall stand transferred to the State Government on to such officer or other person or to such local or other authority as they may, by order, direct.

Subject to the provisions of Section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) and in so far as it is necessary in their opinion, the State Government may, by notification, constitute a municipality the area previously comprised by the Mettur Township with or without such other local area or village in its neighbourhood.

ஆகவே, அந்தப் பகுதிகளையும் சேர்த்து ஒரு பெரிய நகரசபையாக ஆக்குவதற்கு உரிய போதுமான வசதிகள் இருக்கிறது. ஆகவே, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 டிசம்பர் 16

1967-ம் ஆண்டு முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்களிடத்தில் கூட அந்த மக்களின் சார்பாக ஒரு மகஜர் கொடுக்கப்பட்டது. அந்த மக்களை கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டுமென்று தைரியம் சொல்லி, அது நகரசபையாக மாற்றப்படும் என்று அன்று இருந்த முதலமைச்சர் கூட வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்கள்.

இந்த மசோதா தனியார் கொண்டு வரவேண்டிய அவசியமே இல்லை. அரசே இதைக்கொண்டு வந்திருக்கலாம். கொண்டு வந்திருக்கவேண்டும். அரசு கொடுத்த வாக்குறுதிகள் ஏதேனும் நிறைவேற்றப்படாமல் இருந்தால், அவற்றை நினைவு கூறுவதற்காகத்தான், தூண்டுவதற்காகத்தான், இப்படிப்பட்ட மசோதாக்களைக்கொண்டு வருகிறோம். பெரு முயற்சி எடுத்துக்கொண்டு இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் கூட, இந்த மசோதாவின் மேல் கூறப் பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, அந்த அடிப்படையிலே அரசு சீக்கிரத்தில் ஒரு மசோதா கொண்டு வரும், அப்படிக்கொண்டு வந்து, அந்தப் பிராந்தியத்தில் இருக்கும் மக்களின் அபிலாட்சைகளை பூர்த்தி செய்யும், அதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை எடுப்போம் என்ற வாக்குறுதி அரசின் சார்பில் கொடுக்கப்படும் என்று நினைக்கிறேன்.

இந்த மாதிரி தனியார் மசோதா கொண்டு வருவது மிகவும் சிரமம். அப்படிக் கொண்டு வருவதில் எனக்கு நாடாளுமன்றத்தில் உள்ள அனுபவத்தைச் சொல்கிறேன். இந்த மாதிரியான தனியார் மசோதாக்களை அப்படியே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அந்த மசோதாவின் கருத்தை ஆழ்ந்து பரிசீலித்து அதற்கு ஏற்ப மசோதாவுக்கு திருத்தம் கொண்டு வருகிறோம். இப்போது இல்லாமல் போனாலும் அடுத்த ஆண்டு அதைப் பரிசீலித்து கொண்டு வருகிறோம் என்று வாக்குறுதி கொடுக்கப்படும். அந்த வகையில் இந்த மசோதாவையும் கருதவேண்டும். இந்த மசோதா மக்களின் அபிலாட்சைகளை பிரதிபலிக்கிறது.

இந்த மசோதாவின் கருத்து தனிப்பட்ட ஒரு கட்சியின் கருத்து அல்ல. ஏதோ ஒரு சங்கத்தின், தொழிலாளர்களின் கருத்து அல்ல. அந்தப் பிராந்தியத்தில் உள்ள எல்லாக் கட்சியினரின் கருத்து ஆகும். அந்தப்பகுதி மக்களின் மொத்த கருத்தாகும். அங்கே அதிகமாக வாழும் இயந்திரத் தொழிலாளர்களின் கருத்து ஆகும். ஏற்கெனவே 1970-ல் கூட இம்மாதிரி ஒரு மகஜர் மக்கள் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றைச் சொல்லி, இந்த மசோதாவை ஆதரிப்பதோடு மாத்திரம் அல்லாமல், இந்த மசோதாவின் உட்பொருளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள

1971 டிசம்பர் 16] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வேண்டுமென்றும், அதற்கு அவன செய்யவேண்டுமென்றும், அப்படிப்பட்ட ஒரு நெஸஸிடி இருக்கிறது என்றும் கூறி, இந்த மசோதாவை ஆதரித்து நான் அமர்கிறேன்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்**: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மேட்டூர் நகரித்தைக் கலைந்து அங்கே நகரமன்றம் அமைத்திட வேண்டுமென்பதற்கு ஒரு தனி நபர் மசோதா. இந்த ஜனநாயக யுகத்திலே. சோலிசத்திலே நம்பிக்கை கொண்ட ஒரு அரசு வந்ததற்குப்பிறகும் கொண்டு வரவேண்டிய அவசியம் நேர்ந்தது குறித்து உண்மையிலேயே நான் வருத்தம் அடைகிறேன். இது ஜனநாயக யுகம் என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். மக்களுடைய வாழ்வினை அவர்களே அமைத்துக்கொள்ளவேண்டும், அதற்கு அவர்கள் தயாராகி விட்டார்கள் என்று கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஒரு காலத்திலே, வெள்ளையர்கள் ஆண்டு வந்த போது, வெள்ளையர் ஆட்சியினர் சொல்லி வந்தார்கள், இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுக்க முடியாது என்பதற்குக் காரணம் இந்திய நாட்டு மக்களால் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள முடியாது, அந்தத் திறன் அவர்களுக்கு இல்லை என்று. ஆகவே சுதந்திரம் தர முடியாது என்றார்கள். அப்படி அவர்கள் சொல்லியும் நாம் சுதந்திரம் பெற்றோம். சுதந்திரம் பெற்றது மட்டுமல்லாமல், அதற்குப் பின்னாலும், இந்த நாட்டிலே படித்தவர்களால் மட்டுமே ஆட்சி நடத்த முடியும், பல்வேறு மன்றங்களையும், அமைப்புக்களையும் நிர்வகிக்க முடியும் என்கிற கருத்தினை ஒழித்து, படிக்காத மக்களும், நிர்வாகம் செய்யமுடியும், நிலைமைகளைச்சீர்படுத்த முடியும், நிர்வாகச் சுமைகளைத் தாங்கி நுட்பமான காரியங்களையும் செய்து முடிக்க முடியும் என்பதனையும் பல்வேறு வகைகளில் நிரூபித்திருக்கிறோம்.

மக்கள் தொகை 500 என்றிருக்கும் சிற்றூர்களையும் ஊராட்சி மன்றங்களாக அமைக்கும் காலம் வந்துவிட்டது. நிர்வாகத்தையும் நடத்திவருகின்றோம். அந்த அளவுக்கு ஜனநாயகம் வளர்ந்துவிட்ட பிறகு 40,000 மக்கள் தொகை இருக்கும் இடத்திற்கு அவர்களுக்கென்று தனிநகரசபை மறுக்கப்படுவதற்கு எந்தவிதக்காரணமும் கிடையாது.

1936-ம் ஆண்டில் நகரியம் நல்ல நோக்கத்தோடு அமைக்கப் பட்டிருந்தாலும், அதன் பிறகு அணை கட்டப் பட்டிருக்கிறது. தொழிற்சாலைகள் பரவியிருக்கின்றன, தொழிலாளர்கள் பெரும் பாலாகப் பெருகியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அப்பொழுது ஒரு ஒழுங்கான அமைப்பு வரும்வரையில், விசேஷ அமைப்பு வேண்டும் அப்பொழுதுதான் பணம் போட்டு ஒழுங்குற அபிவிருத்தி செய்ய முடியும் என்கின்ற கருத்தோடு அதைச்

(திரு. ஏ. சுப்பிரமணியம்) [1971 டிசம்பர் 16

செய்திருக்கமுடியும். இன்றைக்குக் காலம் மாறிவிட்டது. 35 ஆண்டுகள் ஆகிவிட்டன. அணைக்கட்டு கட்டியாகிவிட்டது; குடியிருப்புக்கள் வந்து விட்டன. தொழிற்சாலைகள் ஏராளமாக இருக்கின்றன.

அது மட்டுமல்ல, அணை கட்டும் காலத்தில், அங்கே உள்ள நிலங்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகும் பொதுப்பணித் துறைக்கே சொந்தமாக இருந்தது. 1954-ம் ஆண்டில், அந்த நிலமெல்லாம் ரெவின்யூ இலாகாவிற்கு மாற்றப்பட்டு, உடைமையாளர்களுக்கு பட்டா செய்யப்பட்டு, அரசாங்கத்தினால் கட்டப்பட்ட குடியிருப்புக்களும், வீடுகளும் குடியிருக்கும் மக்கள் பேரில் ஜாரிசெய்யப்பட்டு, அந்த அமைப்பின் தன்மையே மாற்றியமைக்கும் நிலைமை ஏற்பட்டது.

இரண்டாவதாக, நகரியத்தின் வருமானம் கிட்டத்தட்ட ஆண்டொன்றுக்கு ஏழு லட்சம் ரூபாய் என்ற அளவில், ஒரு முதல்தர நகராட்சி மன்றத்தின் வருவாய் அளவில் இருக்கிறது. ஆகவே, வருவாயைப் பொறுத்து, நகராட்சி மன்றம் ஆக்க முடியாது. என்று சொல்லி விட முடியாது. அதுமட்டுமல்ல, அங்கே பல தொழிற்சாலைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஏற்கனவே ஒரு நூற்பாலை, மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் மட்டுமே இருந்தது. அதற்குப் பின்னால், கெமிகல்ஸ் ஆலை வந்தது அதன் பின்னால், இன்னொரு நூற்பாலை வந்தது. பிறகு ஒரு தகடு ஆலையும், சந்தனத்தைல ஆலையும் வந்திருக்கின்றன. அதன் மேல், 'கெம்ப்ளாஸ்ட்' ஆலையும், இன்னும் பல்வேறு தொழிற்சாலைகளும் வந்தவண்ணம் இருக்கின்றன. நகரம் அந்த வகையில் அபிவிருத்தி அடைந்திருக்கின்றது. இன்னும் அதிகமான வருவாய்க்குத் தோது இருக்கிறது. ஆகவே, வருவாய் குறைவு என்று சொல்லி மறுக்கவேண்டிய அவசியம் இல்லை.

பிறகு, அங்கே இருக்கின்ற மக்களுக்கு தங்களுடைய காரியங்களை தாங்களாகவே நிர்வகித்துக் கொள்ளும் திறன் இல்லை என்று சொல்லிவிட முடியாது. எவ்வளவோ இடங்களில் படிக்காத மக்களால்கூட நிர்வாகத்தை நடத்த முடிகிறது. மேட்டூரைப் போன்ற கல்வியிலும், அரசியலிலும், வளர்ந்திருக்கிற பகுதியில், தொழிற்சாலைள் நிரம்புயிருக்கின்ற பகுதியில், பகுதியில், தொழிற்சாலைகள் நிரம்பியிருக்கின்ற பகுதியில், மக்களால் தங்கள் காரியங்களைச் செய்து கொள்ள முடியாது என்கிற வாதம் எடுபடாது.

மூன்றாவதாக, எல்லோருக்கும் ஒரு நியதி இருக்கிறது. மற்றவர்களெல்லாம் ஜனநாயக அமைப்புக்களை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லும்போது, மேட்டூர் மக்கள், 40,000 பேர்கள் மட்டும் என்ன பாவம் செய்துவிட்டார்கள், ஏன் தொடர்ந்து ஜனநாயாக முறை அவர்களுக்கு மறுக்கப் படவேண்டும்? இதற்கான காரணத்தை யாரும் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள்

1971 டிசம்பர் 16] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

இங்கே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் போதுகூட, இன்னும் காலம் வரவில்லை, சிக்கல் இருக்கிறது என்றார்கள். என்ன சிக்கல்? ஒரு வேளை இருக்கலாம், அங்கே உள்ள அதிகாரிகள் அதிக காலம் அதிகாரம் செலுத்திவிட்டார்கள், அதனால் அதிகாரிகளுக்கு அந்த மாறுதல் சிக்கலாக இருக்கலாம். அல்லது அங்கேயிருக்கின்ற ஆலை முதலாளிகளுக்கு எங்கே வரி கூடுதலாகிவிடுமோ என்று சிக்கலாக இருக்கலாம். ஆனால், ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்ற அரசாங்கத்திற்கு சிக்கலுக்கு நியாயம் இல்லை, என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் உள்ள காரியக்குழு 9 பேர்களைக் கொண்டதாக இருககிறது. இவர்களில் 5 பேர் அதிகாரிகள்,கலெக்டர் தலைவர், பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் உதவித்தலைவர். ஐந்தாமவர் ஒரு முதலாளி. மற்ற மூன்றுபேர்களை அரசாங்கம் நியமிக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதனை மாற்றி தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிதிநிதிகள் நிர்வாகம் செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையை மேட்டூர் மக்கள் வெகுகாலமாக வலியுறுத்தி வருகிறார்கள். இந்த அடிப்படை ஜனநாயக உரிமையை மறுக்க நியாயம் இல்லை. ஆகவே, அரசாங்க அதிகாரிகள் என்னதான் சொன்னாலும், என்ன வாதம் சொன்னாலும், அமைச்சரவர்களும், அரசாங்கமும், அந்த வாதங்களை இந்தக்காலத்தில் சொல்லக் கூடாது. அதை ஒதுக்கிவைத்துவிட்டு, நகராட்சி மன்ற அமைப்பை உடனடியாக அமைத்திட வேண்டும் என்பதை பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறன். அப்படிச் செய்யமால் இருந்தால், அரசாங்கத்தின் ஜனநாயகப் பற்றுக்கு களங்கம் ஏற்படும், மாசு ஏற்படும். அதற்கு இடம் கொடுப்பது உங்களுக்கும், எங்களுக்கும் வருத்தம் உண்டு பண்ணக்கூடியதாக இருக்கும் என்கிற கருத்தினை தெரிவித்து, இந்த மசோதாவினை ஏற்பதில், கவுரவப் பிரச்னையாகக் கருதத் தேவையில்லை என்பதையும் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தனி நபர் தீர்மானம், மசோதாவை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்கிற நியதி ஒன்றும் கிடையாது. ஆகவே, இதனை ஏற்றுக் கொள்ளலாம். ஒரு வேளை ஏற்கனவே இருக்கின்ற மரபுகளை மாற்றவேண்டுமே என்று நினைத்தாலும், பல மரபுகளை மாற்றிவந்திருக்கிறது இந்த அரசு. ஆனால் அப்படி மாற்றவேண்டாம் என்று நினைத்தாலும், இந்த மசோதாவை ஏற்றுக்கொள்வதற்கு தயங்கினாலும், இந்த மசோதாவின் கருத்தினை ஏற்றுக்கொண்டு, உடனடியாக, 1972-ம் ஆண்டு பிறக்கும்போதே மேட்டூருக்கு நகராட்சி மன்றம் வந்துவிட்டது என்கிற நிலையை உண்டுபண்ணவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்தரன் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை கொள்கை பூர்வமாக ஆதரிக்கிறேன்.

(திரு. எம். ஏ. லத்தீப்) [1971 டிசம்பர் 16

1936-ல் அணைக்கட்டு கட்டப் பட்ட நேரத்தில், அங்கே சிவிக் அமெனிடிஸ் என்று சொல்லப்படுகிற, மக்கள் வாழ அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, 4 பேர்கள் கொண்ட அமைப்பை ஏற்படுத்தி, டவுன்ஷிப் ஏற்படுத்தினார்கள். பிராஜக்ட் சூப்பரெண்டெண்டிங் எஞ்சினியர் அவர்களையும், மற்ற மெடிகல் ஆபீசர் அவர்களையும், ஓமலூர் தாசில்தார் அவர்களையும், மற்றும் ஒரு அதிகாரியையும் அமைத்து, டவுன்ஷிப் என்கிற அமைப்பை ஏற்படுத்தினார்கள். அதை மறுபடியும் விரிவு படுத்தி, 1940-ல் 4 பேர்கொண்டு இருக்கும் அமைப்பையும், 6 பேர்கள் கொண்ட ஒரு அமைப்பாக உயர்த்தியிருக்கிறார்கள்.

இன்று அங்கே 40,000 மக்கள் வாழ்கிறார்கள், என்கிற கணக்கை இந்த மசோதாவை கொண்டு வந்த உறுப்பினர் அவர்கள் இங்கே தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். மேட்டூரிலே இன்று டவுன்ஷிப்புக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் ஏறக்குறைய 10 லட்சம் ரூபாயாக இருக்கிறது என்கிற புள்ளிவிவரத்தையும் அவர்கள் தந்திருக்கிறார்கள். மேட்டூர் இன்று வளர்ந்து, ஒரு பெரிய நகரமாக இருப்பதை யாரும் மறுக்கமுடியாது. அங்கே பல தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. நாட்டிற்குத் தேவையான தொழிற்சாலைகள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்டு வந்திருக்கின்றன. உற்பத்தியும் பெருகி வருகிறது. ஆகையினால் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையும் அங்கே நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே வருகிறது. இவர்களெல்லாம் நகரியத்திலே பதிவு செய்யப்பட்ட மக்களாக இருக்கிறார்கள். பதிவு செய்யப் பட்டவர்களுடைய எண்ணிக்கையே 40 ஆயிரம் என்று சொன்னால், பதிவு செய்யப்படாத, வெளியூர்களிலிருந்து அன்றாடம் வந்து செல்லக்கூடியவர்கள், மற்றும் வெளியூர்களிலிருந்து அங்கே வந்திருந்து வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுடைய எண்ணிக்கை கணிசமான அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ஆகையினால், அதை வைத்துப் பார்க்கும்போது, சுமார் 60 ஆயிரம் 70 ஆயிரம் என்ற அளவில் அங்கே வாழ்கிறார்கள், என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆகையினால், அந்த அமைப்பை மாற்ற வேண்டும் என்று இங்கே முன்பு பேசிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல், மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிற வரிப் பணம் எப்படியெப்படியெல்லாம் செலவழிக்கப்படுகிறது, எவை எவைகளுக்காகச் செலவழிக்கப்படுகிறது. செலவழிக்கப்பட வேண்டும் என்பதை எல்லாம் மக்கள் அறிந்திருக்க வேண்டும் அவர்களுடைய வளர்ச்சிக்காகப் அந்தப் பணம் செலவிடப்பட வேண்டும். அது தான் ஜனநாயக மரபு. அந்த ஜனநாயக மரபு மேலும் காக்கப்பட வேண்டும் என்ற முறையிலேதான் நண்பர் சுரேந்திரன் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த நோக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்

(திரு. எம். ஏ. லத்தீப்) [1971 டிசம்பர்16

அமைச்சர் அவர்களுக்கு இந்த வாய்ப்பு இப்போது கிடைத் திருக்கிறது மேட்டூர் மக்கள் தங்களுடைய பிரதிநிதித்துவம் பெற்ற சபையின் வாயிலாக அந்த நகரசபை நடைபெற வேண்டு மென்று விரும்புகிறார்கள். அது சம்பந்தமாக, 1947-48-இல் கூட மதிப்புக்குரிய பக்தவத்சலம் அவர்கள் இந்தத் துறையின் அமைச்சராக இருந்தபோது, மக்கள் அவர்களிடத்திலே முறையீடு ஒன்றினைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரம் இங்கே நமக்கு தரப்பட்டிருக்கிறது. திரு. பக்தவத்சலம் அவர்கள் கூட அன்றிருந்த நிலையில் நகர சபையாக மாற்றிட வேண்டுமென்ற உறுதியைத் தந்திருக்கிறார்கள் என்பதைக் கூட நாம் அறிகிறோம். 1947-48-லேயே இந்த உறுதி தரப்பட்டிருக்கிறது. இன்று வரையில் அது நிறைவேற்றப்படவில்லை என்ற குறைபாடு அம்மக்களுக்கு இருக்கிறது.

அது மட்டுமல்ல, பல நிறுவனங்கள், சங்கங்கள், எல்லாம் ஒன்று கூடி மேட்டூர் டவுன்ஷிப் நகரசபையாக மாற்றப்பட வேண்டு மென்ற தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள். அண்மையில், 1970-இல் என்று கருதுகிறேன், அங்கே சென்றிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கூட அங்கே உள்ள மக்கள் பிரதிநிதிகள் ஒரு முறையீட்டினைக் கொடுத்திருக்கிறார்கள், என்று அறிகிறேன். ஆகையினால், மக்களின் அபிலாஷைகள் நிறை வேற்றப்பட வேண்டும், ஜனநாயக மரபுகள் மேட்டூரில் வாழ்கின்ற மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற ஒரு நோக்கத்தைக் கொண்டு இந்த மசோதாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த மசோதாவை இப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூட நான் சொல்லவில்லை. அங்கே உள்ள நிலைமையை அவையின் முன் வைப்பதற்கு, ஒரு விவாதத்தை ஏற்படுத்துவதற்கு, அமைச்சரின் கவனத்தை ஈர்ப் பதற்கு ஒரு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது என்ற முறையிலே இந்த மசோதாவை அப்படியே ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அரசு சார்பாகவே ஒரு தனி மசோதாவை இங்கே கொண்டு வந்து மேட்டூர் டவுன்ஷிப்பை நகராட்சியாக மாற்ற வேண்டும் என்று கூறி மசோதாவைக் கொள்கை பூர்வமாக ஆதரித்து அமர்கிறேன்.

* திரு. செ. கந்தப்பன் : துணைச் சபாநாயகர் அவர்களே, இங்கே பேசிய உறுப்பினர்களில், இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கின்ற திரு. சுரேந்திரன் அவர்களும், இப்போது பேசு கின்ற நானும் அந்த வட்டாரத்தை மிக நன்றாகத் தெரிந்தவர்கள். அந்த வட்டாரத்தைப்பற்றி என் அளவுக்குத் தெரிந்திருக்கிற நண்பர் சுரேந்திரன் அவர்கள் ஏன் இந்த மசோதாவைக் கொண்டு வந்தார்கள் என்று எனக்கு உண்மையிலேயே புரியவில்லை. அந்தப் பகுதியிலே தன்னுடைய அரசியல் வாழ்வைத் தொடங்கி அந்த வட்டார மக்களோடு தன்னைப் பின்னிப் பிணைத்துக்

1971 டிசம்பர் 16] *(திரு. செ. கந்தப்பன்)*

கொண்டு அரசியலில் காரியங்கள் ஆற்றிக்கொண்டிருக்கிற நண்பர் சுரேந்திரன் அவர்கள் அங்கு ஜனநாயகம் பறிக்கப்படுகிறது, ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்று சொன்னால், அதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஜனநாயக மரபுகள் அங்கே மறுக்கப்பட்டிருக்குமானால் நண்பர் சுரேந்திரன் அவர்கள் இங்கே சட்டமன்றத்திற்கு வந்திருக்கவே முடியாது.

பெரும் பெரும் முதலாளிகள் மிகுந்த அந்த இடத்தில் பெரும் நிலச்சுவான்தார்கள் அந்தத் தொகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த சூழ்நிலையில் அந்தப் பகுதி மக்கள் அவர்களுக்குள்ள ஜனநாயக விழிப்பின், ஜனநாயக தெளிவின் காரணமாக என் நண்பரை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும். இதில் என் வருத்தம் என்னவென்றால், இன்றைய தினம் அங்கு நடைபெறுகின்ற நகரியத்தைப் பற்றி இங்கே குறை சொன்னார்கள். ஆனால், அங்கே நகரியத்தினால் அந்தப் பகுதி பெற்ற வளர்ச்சிகளைப் பற்றி உண்மையிலேயே தெளிவாகப் பார்க்க வேண்டும். தமிழகத்திலுள்ள பல நகராட்சிகளை விட மேட்டூர் நகரியம் மிகச் சிறப்பான முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறது. மிகக் குறுகிய கால அளவில் அது பெரும் வசதிகளைப் பெற்றிருக்கிறது. மேட்டூரிலே பெற்றிருக்கின்ற வசதிப்பெருக்கம், வேறு பல இடங்களிலும் காணக்கிடைக்காத ஒரு பெருக்கம் என்பதைக் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்திலேயே, எந்த நகராட்சியிலும் இல்லாத வகையில் மேட்டூர் நகரியத்திலே தான் 24 மணி நேரமும் குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. சுகாதார வசதிகளை எடுத்துக்கொண்டாலும் கூட கழிவு நீர் நீக்கம் மிகச் சிறப்பான முறையில் செய்யப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்திலுள்ள பல நகரசபைகளை ஒப்புநோக்கின், மேட்டூர் நகரியத்தின் வரி விகிதமானது மிகக் குறைவு. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, 27 சத விகிதம் வரி என்ற அளவிலே தான் அங்கே காணப்படுகிறது. அதே அளவு மக்கள் தொகையைக் கொண்ட, மக்கள் பிரதிநிதிகளால் ஆளப்படுகிற வேறொரு நகரசபை—உதாரணத்திற்குச் சொல்கிறேன்—ராசிபுரம் நகரசபை—அங்கே வரியின் அளவு 30 சத விகிதமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சேலம் மாவட்டத்திலுள்ள இன்னொரு நகரசபை—திருச்செங்கோட்டில் வரியின் அளவு 28 சதவிகிதத்திற்கு மேல் காணப்படுகிறது. அதேநேரத்தில், மக்களுக்கு தரப்பட்டிருக்கிற வசதிகளைப் பார்க்கும்போது, மேட்டூரில் தரப்பட்டிருக்கிற வசதி மற்றெல்லாவற்றையும் விட அதிகமானது என்பதை மறுக்க முடியாது.

பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நடத்தப்படுகிற மற்ற நகரசபைகளின் நிர்வாகத்தைவிட மேட்டூர் நகரியத்தின் நிர்வாகம் ஆயிரம் மடங்கு அதிகம் என்பதை ஒத்துக்

1971 டிசம்பர் 16] *[திரு. செ. கந்தப்பன்]*

கொண்டுதான் ஆகவேண்டும். இப்படி நான் சொல்வதால், நான் ஜனநாயகத்தை புறக்கணிக்கிறேன். ஜனநாயகவாதி அல்ல நான் என்று பொருளல்ல. பொதுவாக, அங்கே உள்ள தொழில் வளர்ச்சியைப் பயன்படுத்தி. நகரியம் நல்ல பணிகளைச் செய்ய முடிகிறது—அந்த அளவு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட நகரசபையால் நிச்சயம் செய்ய முடியாது. உதாரணத்திற்குப் பலவற்றைச் சொல்லலாம்.

மேட்டூர் நகரம் தொழிலாளர்களால் வளர்க்கப்படுகிறது என்று சொல்வார்கள். அது முழுக்க முழுக்க உண்மை. அது மென்மேலும் வளர்க்கப்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. தொழில் வளர வேண்டும் என்ற நோக்கத்தோடு அங்கே ஒரு இண்டஸ்ரியல் எஸ்டேட் உருவாக வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. மேட்டூர் நகரம், பெருமளவுக்கு அரசின் துணையோடும் ஒத்துழைப்போடும் நல்ல திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், பல இடங்களில், தேவையற்ற ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. அரசியல் கட்சிகளின் உதவியோடு இத்தகைய ஆக்கிரமிப்புகள் செய்யப்படுகின்றன. மனை நிலங்கள் ஒதுக்கீடு வாங்கிக்கொண்டவர்கள் கூட அரசியல் கட்சிகளின் தூண்டுதலினால் ஆக்கிரமிப்புகளில் இறங்கியிருக்கிறார்கள்.

எனக்கு தெரிந்து 4, 5 ஆண்டுகளில் இரண்டு மூன்று முறை குடியிருப்பு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் அங்கு வந்திருந்த போது கூட மனைப்பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதற்கு முன்னால் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது மனைப்பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. சில சந்தர்ப்பங்களில் சில அரசியல் வாதிகளால் பலவித ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன. அப்படி பலவந்தமாக ஆக்கிரமிப்பு ஏற்படுகிறபோதுதான் ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றப் படுகிறார்கள். ஆனால் சில இடங்களில் நியாயமான அடிப்படையில் நில ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களை அப்புறப் படுத்துவதற்கு முன்னால் அவர்களுக்கு வேறு மனைப்பட்டாக்கள் வழங்கிவிட்டு மாற்றுகிற ஏற்பாட்டைச் செய்தால் நல்லது. அதை அரசு கவனித்து, ஆவன செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் நகரியம் இப்போது நல்ல வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. இந்த நோக்கில் நகரியத்தை ஒழித்து, நகராட்சியாகக் கொண்டுவருவோமானால் அந்த வளர்ச்சிகள் பாதிக்கப்படக் கூடும். இப்போது திட்டமிடப்பட்டிருக்கிற முறையிலே நல்ல ரோடுகள் கூடப் போட முடியாது. வளர்ச்சியடைந்து வரும் ஒரு பகுதிக்கு சரியான ரோடு வசதி இல்லையென்றால், அந்தப் பகுதியின் தொழில் வளர்ச்சி எந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்பதை நாம் நன்கறிவோம். தொழில் துறையிலே வளர்ச்சியடையாத பகுதி, மற்றத் துறைகளிலும் எதிர்பார்க்கும்

[திரு. செ. கந்தப்பன்] [1971 டிசம்பர் 16

வளர்ச்சியடைந்து கொண்டு வரும் ஒரு பகுதி, நகராட்சியாக மாற்றப்படுவதினால் பாதிக்கப்படுமானால், அப்பகுதி மக்கள் ஜனநாயக அடிப்படையில் கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பெற முடியாதவர்களாவார்கள். ஜனநாயகத்தில் நம்பிக்கையுடைய நம்மால் அப்படி ஆக்கப்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாக இருக்காது என்றே நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்ல. மேட்டூர் நகரியத்திற்கு அரசாங்கத்தினிட மிருந்து பெருமளவிற்கு மானியங்கள் கிடைத்து வருகின்றன. அது நகராட்சியாக மாற்றப்படுமானால் அரசாங்கத்தினிடமிருந்து கிடைத்துவரும் இவ்வளவு மானியங்களைப் பெறமுடியாது. இந்த ஆண்டு கூட நான் சேகரித்திருக்கிற புள்ளிவிபரத்தின்படி ஏறத் தாழ 69 ஆயிரம் ரூபாய் மானியம் மேட்டூர் நகரியம் பெற்றிருக் கிறது. எனவே, இந்த நகரியத்தை நகராட்சியாக மாற்றி, இந்த நன்மைகளை அடையச்செய்யாமல், மேலும் கிடைக்கின்ற சலுகை களை எல்லாம் மேட்டூர் மக்களுக்குக் கிடைக்கச் செய்யாமல், செல வுகளை ஈடுசெய்ய மேலும் வரி போட்டு, பணம் வசூல் செய்வதில் என்ன லாபம் என்று தான் தோழர் சுரேந்திரன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏதாவது ஒரு மாற்றம் செய்வதானால், அதனால் மக்களுக்கு நன்மை ஏற்படுமானால், நற்பயன் விளையுமானால், லாபகரமாக இருக்குமானால் அதை மக்கள் வரவேற்பார்கள். இந்தத் திட்டத் தினால் பொது மக்களுக்கு நன்மை விளையப்போவதில்லை. மாறாக பாதகம் ஏற்படும். வரிகள் போடாமல், அல்லது இருக்கிற வரியை ஏற்றாமல் நகராட்சியால் திட்டங்களை நிறைவேற்ற முடியாது. நன்மைகள் செய்ய முடியாது. இப்பொழுதே கஷ்டப்படுவதாகச் சொல்கிற மக்கள் அப்படிச் செய்வதனால் மேலும் கஷ்டப்படுவார் கள். வரி போடவில்லையானால் திட்டங்களை நிறைவேற்ற முடி யாது. நகரசபை நிர்வாகத்தைச் செம்மையாக நடத்த முடியாது. நிர்வாகத்தையே செம்மையாக நடத்த முடியாத ஒரு நகரசபை யால் என்ன பயன் ஏற்பட முடியும்? அதன் காரணமாக ஏற்படும் கஷ்டங்களை அனுபவிப்பவர் யார்? மக்கள் தானே?

இன்றைக்குத் தொழில் துறையில் மேம்பட்ட மாவட்டமாக சேலம் மாவட்டம் வளர்ந்து வருகிறது. சேலம் மாவட்டத்திலி ருந்து தமிழகத்தையும், கர்நாடக மாநிலத்தையும் மேட்டூர், குளத்தூர் வழியாக இணைக்க தேசிய நெடுஞ்சாலை ஒன்று போடப் படுகிறது. இந்த நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு முடித்துவிட்டால், போக்குவரத்து அதிகரிக்கும். நல்ல போக்குவரத்து வசதி ஏற் பட்டால் தொழில்வளர்ச்சி முன்னேற்றமடையும். ஆகவே எதிர் காலத்தில் அங்கே தொழில் மையக்கூடம் ஒன்று உருவாகக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த முயற்சிகளுக்குக் குந்தகம் ஏற் படாமல் இருக்கவேண்டுமென்றால் மேட்டூர் நகரியத்தை நகராட் சியாக மாற்றுவது சாத்தியமல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1971 டிசம்பர் 16] [திரு. செ. கந்தப்பன்]

நண்பர் சுரேந்திரன் அவர்கள் பேசியதை அடிப்படையாக வைத்துக்கொண்டு தான் நான் பேசுகிறேன். இந்த அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களைப் பிரதிநிதிகளாகப் போட்டிருக்கிறார்கள். வேறு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இந்த வாய்ப்பு தரப்படவில்லை என்பது அவருடைய எண்ணமாக இருந் தால அதை நான் ஆதரிக்கிறேன். அந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினர் நிரந்தரமாக நகரியத்தில் பிரதிநிதியாகஇருக்கலாம் என்று விதி இருந்தது. அதன்படி 1967-ம் ஆண்டு வரையில் அங்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. அர்த்தநாரீஸ்வர கவுண்டர் பிரதிநிதியாக இருந்தார். அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். 1962-ல் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந் தேன். எனக்கு பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்டேன். ஆனால் அப்போது 'சட்ட மன்ற உறுப்பினருக்குத் தொடர்ந்து கொடுத்து வருகிறோம். அடுத்தமுறை பாராளுமன்ற உறுப்பினருக் குக் கொடுக்க ஆவன செய்கிறோம்' என்று சொன்னார்கள். 1967-ல் கழக அரசு ஏற்பட்டது. சட்ட மன்ற உறுப்பினர் பிரதி நிதித்துவத்தை நீக்கிவிட்டு, பாராளுமன்ற உறுப்பினருக்கு பிரதி நிதித்துவத்தைக் கொடுத்தார்கள். ஆனால் இன்றைய தினம் நான் பாராளுமன்ற உறுப்பினராக இல்லை. மீண்டும் சட்ட மன்ற உறுப்பினருக்கு பிரதிநிதித்துவத்தைக் கொடுக்க வகைசெய்தால் நண்பர் சுரேந்திரன் அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும். அவருக்காக நான் அரசுக்கு சிபாரிசு செய்கிறேன். அதற்கு வகை செய்ய வேண்டுமென்று அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள் கிறேன். இப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் திரு. பூவராகன் கூட இதை ஒத்துக்கொள்வார் என்று கருது கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The hon. Member has been saying that only an M.L.A. must have a place in the township. Why not both M.L.A. and M.P.? Why not you recommend for both?

திரு. செ. கந்தப்பன்: அதற்கு நீங்களே இப்போது சிபாரிசு செய்திருக்கிறீர்கள். அதை அரசாங்கம் பரிசீலிக்கும் என்று நினைக்கிறேன். தொழில் துறையிலிருந்து நியமனம் செய்யப்படும் உறுப்பினரை, தொழிலாளர்கள் சார்பில் அரசு எல்லோரையும் கலந்து ஆலோசிக்காமல் நேரடியாக நியமனம் செய்கிறது என்று சொன்னார்கள். இன்று அங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் இருவரில் ஒருவர் பொதுத்தொண்டில் ஈடுபட்டு, மக்களிடத்தில் நற் பெயர் பெற்றவர். அவர் தன்னுடையத் சொந்தச் செலவிலேயே ஒரு பெரிய நகர மண்டபம் கட்டி, நகரியத்திற்கு இனாமாகக் கொடுத்திருக்கிறார். இன்னொருவர் தொழிலதிபர்கள் மட்டத்தில் உள்ளவர். ஏற்கெனவே இருந்து வரும் அவரைத் தொடர்ந்து போட்டு வருகிறார்கள். தொழில் பரப்பி என்று சொல்லக்கூடிய அளவில், தொழிற் சங்கங்களில் நீண்டநாள் அனுபவம் உள்ள

திரு. பானு என்பவரைப் போட்டிருக்கிறார்கள். தொழிற்சங்கங்கள் எல்லாம் அவரைப் போட்டிருப்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

(திரு. நா. வீராசமி தலைமை)

ஆனால் இப்பொது இருக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொஞ்சம் அதிகரிக்கலாம் என்று கருதுகிறேன். அப்படிச் செய்தால் இன்னும் சில பொறுப்புள்ள, முக்கியஸ்தர்களுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு ஏராளமான சலுகைகளைச் செய்து வருகிறது. பல மன்றங்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. எனவே தாழ்த்தப்பட்டவர்களின் நலம் கருதி, அவர்கள் சார்பில் இந்த நகரியத்தில் ஒருவரை நியமனம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டாலும், நகரியத்தின் பெரும்பான்மை அதிகாரம் கலெக்டரிடம் தான் இருக்க வேண்டும். பெரும்பான்மை பிரதிநிதிகள் கைக்குப் போகக்கூடாது. பெரும்பான்மையை பிரதிநிதிகள் கையில் கொடுப்பதை விட, தேர்தலை நடத்தி, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, நகராட்சியாக மாற்றிவிடலாம். ஆனால் அந்தக் கட்டம் இப்போது விரும்பத் தக்கதல்ல. மேட்டூரில் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிற தொழில் வளர்ச்சி, மற்றுள்ள வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் முற்றுப்பெற்ற பின்னால் அது பற்றி முயற்சி செய்யலாம். அதற்கு முன்னால் அந்த முயற்சியில் ஈடுபட்டால், இந்த வளர்ச்சித் திட்டங்களை ஒருநாளும் நிறைவேற்ற முடியாது என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில் கொண்டு, அரசு இந்த மசோதாவை அங்கீகரிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நகரியம் அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பில் இருப்பதால் அவர்கள் விருப்பப்படி, தான்தோன்றித்தனமாக நடந்து கொள்கிறார்கள் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. இப்பொழுது விதிக்கப்பட்டிருக்கிற வரி அதிகமானது; அதைக் குறைக்கவேண்டுமென்று பொதுமக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை அனுப்பியிருப்பதாகவும், அதுபற்றி ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். அது இன்றைக்கு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே நியாயமான முடிவினை அரசு எடுக்கும் என்றும் கருதுகிறேன். ஆனால் மற்ற நகரியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மேட்டூர் நகரியத்தில் போடப்பட்டிருக்கும் வரி குறைவானதுதான் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

மக்கள் கருத்துக்களை மதிக்காமல் அதிகாரிகள் தான்தோன்றித்தனமாக இருக்கிறார்கள்; உதாசீனப்படுத்துகிறார்கள் என்ற குறை சொல்லக்கூடிய அளவில் எந்த அதிகாரியும் நடந்துகொண்டதாக

எனக்குத் தெரியவில்லை. இரண்டொரு தனிப்பட்ட கேஸ்களைச் சொல்லலாம். ஆனால் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு இயங்குகிற இடத்தில் காணப்படுகிற குளறுபடிகளோடு ஒப்பிடுகிறபோது இவை ஒன்றும் இல்லை. ஆகவே இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிற உறுப்பினர் அவர்களையும், மற்றவர்களையும் நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், இதை வலியுறுத்த வேண்டாம். இப்போதுள்ள முறையே நன்றாகச் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பே இன்னும் சில காலத்திற்கு நீடிக்கட்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார் பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன், நகரசபைகளை எல்லாம் விட நகரியம் நன்றாகச் செயல்படுகிறது என்றால் மற்றவற்றையும் நகரியமாக மாற்றிவிடலாம் என்று கருதுகிறாரா என அறியவிரும்புகிறேன்.

திரு. செ. கந்தப்பன் : மேட்டூர் ஏற்கனவே நகரசபையாக இல்லாது நகரியமாகச் செயல்பட்டு வருகிறது. இதே அளவு ஜனத்தொகை, பரப்புள்ள இடங்களில் அமைந்திருக்கும் நகர சபைகளின் நிர்வாகத்தோடு ஒப்பிடுகிறபோது மேட்டூர் நகரியம் நல்முறையில் இருந்து வருகிறது. ஆகவே, என்னுடைய சொந்தக் கருத்து—இப்போது இருந்து வருகிற முறையை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை, மாற்றுவதற்கான காலமும் இன்னமும் வரவில்லை என்பதுதான். நாம் என்ன என்ன நோக்கத்திற்காக மேட்டூர் நகரியத்தை ஏற்படுத்தினோமோ அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது என்கிறார்கள் அவர்கள். நான் இன்னும் அந்த நோக்கம் ஈடேறவில்லை என்று கருதுகிறேன். நல்முறையில் பாதுகாப்போடு அதை வளர்ச்சியடையச் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது, அந்த நோக்கத்தை அடைய நல்முறையில் செயல்பட்டு வருகின்ற அந்த நகரியத்தை இப்போது மாற்றக்கூடாது என்பதுதான் என்னுடைய வாதம்.

DR. H. V. HANDE : Hon. Mr. Chairman, Sir, I have been very closely following the speech of the hon. Member, Thiru Kandappan. Before I offer my remarks on certain aspects of his speech, I wish to say that I, on behalf of my Party, support this Bill brought forward by the hon. Member, Thiru Surendran.

My hon. Friend Opposite has stated that this particular township would be allowed local self-government only after fulfilling certain things that the original Township Committee had set for itself. My submission is that it has been clearly stated in the Bill that it proposes to extend to a particular area local self-government. If somebody is to argue that all those years things have been going on extremely well through a governmental committee without local self-government, it is rather curious. It means basically that we want to prevent any democratic and voting rights being given to the people. A very fundamental question is involved.

As Thiru Surendran has put it through his intervention, it is for consideration whether we must have faith in local self-government or in the committees appointed by the Government. The argument of the hon. Member, Thiru Kandappan cuts into the very root of local self-government. Why should he be afraid of local self-government and why should he think that things will not be better if there is local self-government? Take for instance, Tambaram which has become a municipality. There the Government have tried local self-government and members elected by the people are looking after it. Of course, it may be that Thiru Surendran would be elected to that municipality if it is converted from a township as he represents labour. According to me, the township committee is an anachronism and the persons who are in the Opposition would appreciate it.

In this connection, I wish to refer to Section 2 (2) of the Mettur Township Act, 1940 (Madras Act XI of 1940), which states as follows :—

'The Township Committee shall be a body corporate, having a *perpetual succession* and a common seal, and subject to any restriction or qualifications imposed by or under this or any other enactment, ...

I want to point out how we could support 'perpetual succession'. Why not we have voting system and why should we be afraid? Why should we lose faith in the capacity of the public to vote right persons? Let us give local self-government. I am sure Thiru Surendran in his reply would state that no personalities are involved and it is not a question of accommodating some persons.

Another argument advanced by a Member of the Ruling Party is that the official majority should be there and that is exactly what we want to break. We want the official domination to go. If an organisation becomes officially dominated, it becomes just a limb of the Government. We want that the majority of the Members should be elected by the people. What is the point in thrusting a member and making him accept the decision of the government official. That is a valid point which the Hon. Minister should look into. If I remember right, when the late Anna was the Chief Minister and Thiru Kandappan was a Member of the Parliament, Thiru Surendran and other Members belonging to different parties met him and he appreciated their feelings that the whole Mettur Township Committee should be abolished and local self-government should take its place very quickly. But I do not know why, for the last two or three years, there has been bottleneck and delay.

Another point is about taps. During the last few years, the tax on the same had gone up very much. For a tap, it has gone up from Rs. 1.25 to Rs 5. The increase in quantum is nearly four times. For other types of taps, the tax has gone up from Rs. 1.50 to Rs. 6 and from Rs. 2.00 to Rs. 8.00. The effect of the increase is there That has to be borne in mind.

Another question may be raised that the tax has been raised to improve facilities. My submission is, if there is local self-government, members can be vigilant and they can object and they could express the feelings of the public. Now nothing can be done, unless it is brought to the notice of a Member of Parliament or M.L.A. who could bring it to notice of Government. What I say is, if there is the local body, that thing may not be necessary.

THIRU S. KANDAPPAN : It is not as if 'nothing can be done and the public there cannot protest or that they are helpless. Such a statement is misleading. Even in the case of this taxation, they were able to bring it to notice of Government. What I say is, the Township Committee is not so very powerful; its hands are not unfettered and they cannot do anything they like. They are bound by so many Government rules and regulations and they have to work within those limitations. As a township, they have to observe some rules and regulations and work within that ambit.

With regard to the particular matter referred to by Mr. Hande, the matter has already been represented to the Committee and it is to the credit of the Committee, that they had taken cognisance of the feelings of the people and they have forwarded the matter to Government with their recommendation and it is receiving consideration at the hands of Government. So it cannot be said 'nothing can be done' by the Township Committee.

DR. H. V. HANDE : The matter will receive consideration of Government when any legislator or prominent persons bring it to the notice of Government. What I say is, the matter must be finished as is done in a Municipal Council or Corporation. Of course one gentleman, I do not want to name him (Thiru K. M. Subramniam is a vigilant man), said 'why should we have this Corporation, why not we do away with it and why not Government itself look after these things'. I have told him "look here, my friend, we have gone far ahead of those days. We are now having local self-government. What you say may be all right during British regime. Now what we are concerned with is that local self-government should function properly". But when a certain area is not having local self-government, that is rather dangerous, especially when all other areas are having local self-government.

THIRU S. KANDAPPAN : May I sound one clarification? It is not as if I am opposing local self-government. Here is a Township Committee, which is of course not an elected body. There may be some reasons which prompted Government in those days to constitute it as a Township Committee instead of permiting it to function as an elected body. Those reasons may still hold good. Can you deny then, that the Committee never exists?

DR. H. V. HANDE: I think the hon. Member must take my point correctly. It is asked when all other areas are having local self-government and this area is denied that facility, why is it so? I do not think that the member is arguing against local self-government. If suppose all other areas also demand local self-government, where are we heading for?

Another point is this. Suppose a member has got to do something. He will always be in a position to say "இன்னும் கொஞ்சம் செய்யவேண்டிய வேலைகள் பாக்கி இருக்கின்றன"

It is just like 'Ganapathi Kalyanam', saying 'tomorrow it will be done'. But that 'tomorrow' actually never comes. And Ganapathy is not married. What I say is, let the Government give something. After all, this is a non-official resolution. Firstly I thought the Hon. Minister would be accepting the Bill but after hearing the member of the ruling party (Mr. Kandappani, I do not think the Bill will be accepted by the Government. I have my own misgivings. I will make a compromise. At least 50 per cent liberalisation could be given as a first step. I want that this area, must get local self-government, as the rest of Tamil Nadu.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Acting President, temporary President (I am sorry) temporary Speaker, Sir, I support the non-official Bill brought forward by Mr. Surendran. Till now I never knew that in 1971 there was a township in Tamil Nadu. I thought we were developing democracy in such an accelerated way, that all townships would have been abolished and there would have been panchayats or municipalities functioning, according to the financial resources of each place. But now I am astonished to find there is a Mettur Township. Of course I plead ignorance for not knowing that. After hearing the several speeches here, I think we must think of the possibility of extending democratic method of administration to this area. After all when we got freedom and when some people were arguing whether we should have adult franchise for the country, whether it will be good or not, Pandit Jawaharlal Nehru said after all, freedom was won for the benefit of the people and on that principle adult franchise also must be given. I hope the Government will accept the Bill moved by Mr. Surendran. There are of course difficulties in the democratic method of working. There are more difficulties for autocratic bodies because there is no place for anybody there to make proper representation. Democratic form of Government should not be denied for any area and the local people should know the local conditions of the people and have self-government. It was to associate local people with democratic form of Government, that local self-government came into being even during British times. After Dr. Hande has explained in detail. I do not have many points to say. The hon. Member Mr. Kandappan was saying that if some wrong has been done, a municipality cannot rectify it at all.

Take for example, pulling down unauthorised construction. Like that he mentioned in the course of his speeches. There are many things that democratic bodies are not able to do including this Government because when M.L.As. are approaching and asking them, they have to do something. The M.L.As. also have to make some representation. But this is an evolution period and during the period of evolution you cannot take it as a standard. Because democracy takes a lot of time to settle itself. It may be that today we are not able to do things. Once people realise that it is in the interest of administration they are doing it, they will definitely agree. In that process there may be some difficulties.

Dr. Hande was saying this morning about the drainage conditions in the City. He was asking if the Corporation cannot handle it, why not Government do something? I am telling him the reason why the Corporation is not able to do it. It is the joint responsibility of both the Corporation and the Government. In such matters Grant-in-Aid schemes are coming. But so far as local self-government is concerned, it is high time that no place in this State should be allowed to have autocratic bodies. We had St. Thomas Mount Township and it is now a municipality. Similarly townships are becoming municipalities. I am very very thankful to the hon. Member Thiru Surendran for having brought this Bill, even though it is late. I think that it will have the unanimous support of this House because the ruling party believes more in democracy than anybody else. Thank you Sir

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் மேட்டூர் நகரியத்தை நகராட்சியாக மாற்றவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இதைப்பற்றிய கருத்துரைகளை உறுப்பினர்கள் வழங்கினார்கள், இங்கே கருத்துரைகள் வழங்கிய எதிர்க்கட்சியில் உட்கார்ந்திருக்கின்ற நண்பர் பேசும்பொழுது ஜனநாயகத்திற்கு இந்த அரசு மாறுபட்டு இருக்கிறது, ஜனநாயக உணர்ச்சிக்கு மதிப்பளிக்க இந்த அரசு மறுக்கிறது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஜனநாயகத்தை மறுக்கின்ற சூழ்நிலை இதிலே எதுவும் இல்லை. ஜனநாயகத்தை மறுக்கின்ற நிலைமை இருந்தால் இன்றைக்கு 12,500 ஊராட்சி மன்றங்கள் இயங்கா, 89 நகராட்சி மன்றங்கள் இயங்கா. 8 நகரியங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன, 14 ஊரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது பஞ்சாயத்து டவுன்ஷிப் என்ற அளவுக்கு 14-ம், முனிசிபல் டவுன்ஷிப் என்ற அளவுக்கு 8-ம் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆக, 89 நகராட்சி மன்றங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. தங்களுடைய பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொண்டு தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளலாம் என்ற கருத்துக்கு மதிப்பளிக்கின்ற முறையிலே தான் அவை எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வாய்ப்புகளையும் பெற முடியாது. நீர்ப்பாசன வசதிகளுக்காக பவானிசாகர் அவ்வாறு ஆக்கப்பட்டிருக்கிறது. அம்பத்தூர், ஆவடி, கத்திவாக்கம், மாதவரம், மேட்டூர் போன்றவைகள் தொழில் வளர்ச்சியின் அடிப்படையில் நகரியங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுரேந்திரன் அவர்கள் கூறியதைப் போன்று 1940-லே நகரியமாக ஆக்குகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அதற்கு முன் தனிக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதில் அதிகாரிகள் மட்டும்தான் இடம் பெற்றிருந்தார்கள். பிறகு அதிகாரிகளல்லாதவர்களும் இடம் பெற வேண்டுமென்று 9 உறுப்பினர்களும் இடம் பெற்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும் 4 அதிகாரப்பற்றற்றவர்களும், 4 அதிகாரப்பற்றுள்ளவர்களும் இடம் பெறுவார்கள் என்ற வகையில் சட்டம் வகுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் கூறியது போல் ‘perpetual succession’ என்பதுமாதிரி அந்தச் சட்டத்தில் இயற்றி வைத்திருக்கிறார்கள். அதை நகராட்சியாக மாற்றுவதில் அரசாங்கத்திற்கு எந்தச் சங்கடமும் இல்லை. வார்டுகளாகப் பிரித்து எலக்ஷன் நடத்துங்கள் பக்கத்திலுள்ள நகராட்சிமன்றங்களைப்போல் என்று சொல்லிவிடலாம். எங்களுக்குப் பொறுப்பும் அதில் இல்லை. திருச்செங்கோடு, ராசிபுரம் பெறுகின்ற அந்த வசதிகளை மேட்டூரும் பெறட்டும் என்று விட்டுவிடலாம். அரசாங்கத்திற்குள்ள அதிகப்படியான பொறுப்பைக் குறைப்பதாகக்கூட ஆகும் அது. ஆனால் இருக்கின்ற சூழ்நிலைகளைப் பார்க்கும்போது மேலும் பல வாய்ப்புகளை அந்த இடங்களில் பெறவேண்டியிருப்பதாலும், அங்கே ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி அடிப்படையில் பார்த்தால், நகரியம் என்ற முறையில் வைத்து தொடர்ந்து பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்ற நடவடிக்கைகளை எடுக்கும் வகைளிலேயும், இன்னும் வேறு பலவகைகளிலேயும் பணியாற்ற வேண்டியிருப்பதால் அது நகரியமாக வைக்கப்பட்ட நிலையில், குறிப்பிட்ட கட்டுப்பாட்டிற்குள் வளர்ச்சிக்கான இடத்தை அளிக்க வேண்டியிருப்பதாலும் அப்படியிருக்கிறது. அங்கே 7 பெரிய தொழிற்சாலைகளும், மற்றவைகளும் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது.

1. Mettur Chemicals and Industrial Corporation.
2. Mettur Beardsell and Company.
3. Mico Farm Industries.
4. Indian Metal and Metallurgical Corporation.
5. Mettur Sandalwood Factory.
6. Government Galvanising Plant.
7. Electricity Board Workshops.

இவைகள் அங்கே இருக்கின்றன. அதனுடைய எல்லையில்

Madras Aluminium Company.
The Chemicals and Plastics Company of India Limited.
The R. C. Plant of Mettur Chemicals Industrial Corporation.

என்று இருக்கிறது. இப்பொழுது நாம் போட்டிருக்கும் திட்டப்படி கெமிகல் ஆன்சிலரி பேக்டரி ஏற்படுத்தவும், பல்வேறு தொழிற்சாலைகளும் ஏற்படுத்தும் முயற்சிகளும் உள்ளன. கெமிகல் தொழிற்சாலைப்பற்றி அதிக வாய்ப்புக்கூறுகள் அங்கேயிருப்பதால் அதற்கான விரிவான திட்டங்களுக்கான முயற்சிகளையும் மற்றவைகளையுமெல்லாம் தொழில்துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலான இடங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகயிருந்து, இப்போது பலருக்கு லீசுக்கு வாடகைக்குத் தரப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 400 பேருக்கு மேலாக பட்டாக்கள் வழங்கும் சூழ்நிலை இருக்கிறது. மக்களிடமிருந்து கிடைக்கும் வருமானத்தின் அளவைவிட, வரி செலுத்துபவர்கள்,வாடகைக்கு எடுத்தவர்கள் தருவதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தைவிட அரசாங்கத்தின் சார்பாக உள்ள கட்டடங்கள் குவாசி கவர்ன்மெண்டைச் சேர்ந்த கட்டடங்கள், தனிப்பட்ட தொழிற்சாலைகள் ஆகியவைகளின்மூலம் வருகின்ற வருமானத்தின் அளவுதான் இப்பொழுதுள்ள நிலையிலும் அதிகமாகயிருக்கும் சூழ்நிலையிலிருக்கிற நிலையில் அமைந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல் அந்த நகரியத்திற்கான வருமானத்தின் அளவை நாம் கணக்கிடும்பொழுது இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூறியதைப்போல் 7,63,770 ரூபாய் வருமானமாகவும். 9,93,600 ரூபாய் செலவாகவும் இருக்கிறது. இதை ஈடுகட்டும் பொறுப்பு நகரியமாக இருப்பதால் முடிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பல்வேறு வகைகளிலும் 69,126 ரூபாய் மானியமாக அரசு வழங்குகின்ற நிலையை அந்த நகரியம் பெற்றிருக்கிறது.

எல்லோரும் குறிப்பிட்டார்கள், வரி உயர்வு ஏற்பட்டிருக்கிறது, நகராட்சியாக மாறினால் வரி உயர்வு குறையும் என்று சொன்னார்கள். நண்பர் கந்தப்பன் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள். செகண்ட் கிரேட் டவுன்ஷிப்பாக மேட்டூர் வைக்கப்பட்டிருக்கிறது. 27 சதவிகிதம் போட்டிருக்கிறது. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றைச் சுட்டிக்காட்டினால் ராசிபுரம் செகண்ட் கிரேட் 29.11/16 சதவிகிதம் அளவிற்கும், திருச்செங்கோடு தேர்ட் கிரேட், 28 சதவிகிதம் அளவிற்கும், இடப்பாடி, தேர்ட் கிரேட், 26.1/2 என்ற அளவிற்கும் போடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஏன் இதைக்குறிப்பிடுகிறேன் என்றால், நகராட்சியாக மாறிவிடுவதால்மட்டும் இந்த சதவிகிதம் மேலே யிறங்கிவிடும் என்று சொல்லமுடியாது, மேலும் ஏறத்தான் வழியேற்படும். இறங்குவதற்கு வழியேற்படாது.

களில் பெறச் செய்வதற்கு முயற்சிகளை செய்யலாம். இந்த விளக்கங்களின் அடிப்படையில் இந்த மசோதாவை வற்புறுத்த வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினர் சுரேந்திரன் அவர்களைக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய மசோதாவை ஆதரித்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் தங்கமணி, ஏ. சுப்பிரமணியம், எம்.ஏ. லத்தீப், டாக்டர் ஹாண்டே, கே. எம். சுப்ரமணியம் போன்றவர்களுக்கு முதலிலே நன்றி கூறிக் கொள்ளுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது என்னுடைய மசோதாவுக்கு விரோதமான, அல்லது ஏற்றுக் கொள்ள முடியாது என்பதற்கான சரியான காரணங்களைச் சொல்லாமல் விட்டதற்காக அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பகுதி அபிவிருத்தி அடைய வேண்டிய பகுதி என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். எல்லா இடங்களும் அபிவிருத்தி அடைவதற்கு, தொழிற்சாலை வருவதற்கு அந்தப் பகுதியில் கிடைக்கும் மூலப் பொருள்கள், நிலம், தண்ணீர் வசதி, மின்சார வசதி, தொழிலாளர்கள் இவைதான் பிரதானமானவை. டவுன் ஷிப் கமிட்டி மூலமாகத் தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வது என்பது நடக்கக்கூடிய காரியமாகப் படவில்லை. இந்த வசதிகள் எல்லாம் சவுகரியமாக இருக்கும் காரணத்தால் இன்று தொழிற் சாலைகள் மேலும் மேலும் வந்து கொண்டே இருக்கின்றன. அந்தப் பகுதியில் இருக்கும் அவ்வளவு பேரும் ஒத்துழைக்கிறார்கள் என்பதுதான் பொருளே தவிர வேறு பொருள் அல்ல. அந்த டவுன்ஷிப் கமிட்டியை நகரசபை ஆக்காமல் இருப்பதற்கு இப்போது சொல்லப்பட்ட காரணங்கள் போதுமானவை அல்ல.

அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டு 35 வருஷங்கள் ஆகிவிட்டன. 1936-ம் ஆண்டில் தோன்றிய கமிட்டி அது. அந்நிய ஆதிக்கம் இருந்தபோது தோன்றிய கமிட்டி அது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லும்போது அதற்கான காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்தக் காரணங்கள் நியாயமில்லை என்று வாதாடுவதற்கு நியாயம் இருக்கிறதா? அதிகாரிகள் இப்படியே இருக்கட்டும் என்றுதான் சொல்லிக் கொண்டிருப் பார்கள். அவர்கள் இருக்கின்ற நிலையில் அப்படிச் சொல்லு கிறார்கள். இங்கே ஆட்சி செய்கிறவர்கள் ஜனநாயகத்தை மதிக்கிறவர்கள். பழைய காலத்தில் இருந்த நிலைமை மாதிரி இல்லாமல் கிளர்ச்சி செய்தால்தான் காரியம் நடக்கும் என்ற நிலையில்லாமல் ஜனங்களுடைய கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து காரியங்களைச் செய்கிறவர்கள் என்ற முறையில் அந்த நரத்தில் இருக்கின்ற அவ்வளவு பேரும் ஒன்றாகச் சேர்ந்து இந்தக் கருத்தைக் சொல்லியிருக்கிறார்கள் என்ற . காரணமே போதும் அதை மாற்றியமைக்க.

இதற்குமாறாக உயர்திரு கந்தப்பன் அவர்கள் கூறினார்கள். அங்கிருக்கின்ற மக்களை வழி தவறி நடத்துகிறார்கள். அவர்கள் இப்படி வேண்டுமென்றாலும் கையெழுத்துப் போடுவார்கள். அப்படி வேண்டுமென்றாலும் கையெழுத்துப் போடுவார்கள் என்று கூறினார்கள். இது சரித்திரத்தையே மறந்து பேசுகிற வாதமாகப் படுகிறது. வெள்ளையர் இருந்த காலத்தில் இருந்து இப்படி இப்படிச் செய்தவர்கள் இப்போது இந்த ஆட்சியில் இருக்கிறார்கள். அன்று அன்று மாறி மாறிச் செய்கிற அளவுக்கு அவ்வளவு அறிவற்றவர்கள் என்று அங்கு இருக்கின்றவர்களை பற்றிச் சொல்வது வேதனைக்குரியது. பல இயக்கங்கள் நடந்திருக்கின்றன. போராட்டங்கள் நடந்திருக்கின்றன. அவற்றிலே ஈடுபட்ட பெரும் இயக்கவாதிகள் இருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எல் லாம் இருந்த பகுதி மக்களைப் பார்த்து இப்படி வேண்டுமானாலும் கையெழுத்துப் போடுவார்கள், அப்படி வேண்டுமானாலும் கையெழுத்துப் போடுவார்கள் என்று சொல்வது வருந்தத்தக்கது.

திரு. செ. கந்தப்பன்: கனம் உறுப்பினர் அவர்கள் என்னுடைய கருத்தைத் திரித்துக் கூறுகிறார்கள். நான் சொல்லாததை என் வாயில் ஏற்றுச் சொல்லுகிறார்கள். நான் குறிப்பிட்டது அங்கிருக்கின்ற மக்கள் எல்லோரும் ஒருமித்து நிற்கிறார்கள் என்ற கருத்துத் தோன்ற திரு. சுரேந்திரன் அவர்கள் பேசினார்கள். அதை நான் வன்மையாக மறுக்கிற முறையிலேதான் வாதங்களை வைத்தேன்.

திரு. எம். சுரேந்திரன்: இதிலே எல்லோரும் சேர்ந்து நிற்கிறார்கள் என்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைத்துக் கட்சி கமிட்டிகளிலே இருக் கிறார்கள் என்பதே போதுமானது. வேறு எந்தக் கட்சியும் மாற்றமான கருத்துக் கொண்டவர்கள் இல்லை என்பதற்காகத் தான் குறிப்பிட்டேன்.

திரு. செ. கந்தப்பன்: திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆலோசனைக் கமிட்டி கூட்டத்திற்கு அழைக்கப் பட்டார்கள். அந்தக் கூட்டத்திலே உடன்பாடு இல்லாமல் விலகிக் கொண்டார்கள். தொடர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபட வில்லை.

திரு. எம். சுரேந்திரன்: இந்தக் கருத்து சரியானது அல்ல. முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்களைச் சந்தித்தபோது நண்பர் கன்னியப்பன் அவர்களும் கூடவே வந்து அவர்களைச் சந்தித்து இந்தக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே இல்லை என்று சொல்வது உண்மை அல்ல. இன்னொன்றும் அவர்கள் சொன்னார்கள். 'அங்கிருக்கும் உறுப்பினர்களிலே சட்டசபை உறுப்பினர்கள் சேர்க்கப்படவில்லை. நான் வேண்டுமானால் சிபாரிசு செய்கிறேன், அவர்களைச் சேர்க்கும்படி அரசாங்கத்திற்குச்.

சொல்லுகிறேன்' என்று சொன்னார்கள். மதிப்புமிக்க உறுப்பினர்கள் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். 1952-ம் ஆண்டில் இருந்து நான் தேர்தலில் நிற்கிறேன். யாருடைய உதவியையும் தயவையும் எதிர்பார்த்து தேர்தலில் நிற்கிறவர் அல்ல. ஏதோ எனக்குச் சலுகை செய்வதாக நினைத்துக் கொண்டு அந்த நகரத்தைப் பற்றிக் குறைவாக மதிப்புப் போட வேண்டாம்; அந்த மக்களைப் பற்றிக் குறைவாக மதிப்புப் போட வேண்டாம். உறுப்பினர் அவர்கள் ஒரு வாரியத்திற்குத் தலைவராக இருக்கிறார். டவுன்ஷிப் கமிட்டி உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். இப்படி மனிதர்களை மனிதர்களே குறைத்து மதிப்பிட்டு ஒரு சபையில் குறிப்பிடுவது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொரு விஷயத்தையும் கூறினார்கள். குடிதண்ணீர்க் கட்டணத்தை அதிகப்படுத்தும்போதும் நல்ல விதமாக நடக்கிறது என்று கூறினார்கள். கட்டணத்தை அதிகப்படுத்தும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே அங்கத்தினர்களாக இருந்தார்கள். அங்கத்தினராக இருந்த எல்லோருமே அந்தத் தீர்மானம் வந்தபோது யாரும் மறுத்துப் பேசவில்லை. கலெக்டர் சொன்னதை எல்லோரும் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்கள் தவிர, யாரும் மறுக்கவில்லை, ஜனங்களுடைய பிரதிநிதிகளாக இருக்கவில்லை, ஜனங்களுடைய குரலை எழுப்பவில்லை, ஜனங்களுடைய காரியமாகக் கவனிக்கப்படவில்லை, என்பதற்கு இது ஒன்றே ஆதாரமாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதியில் எப்போதும் நில ஆக்கிரமிப்பு நடந்து கொண்டே இருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சம்பந்தம் இல்லாத ஒன்றைக் கூறி திசைதிருப்புவது போன்று கூறினார்கள். அங்கு மராமத்து இலாகா நிலம் இருக்கிறது. மராமத்து வீடுகள் பூராவும் விலைக்கு விற்கப்பட்டுவிட்டன. அங்கிருக்கும் 100, 200 லைன்கள் கூலி லைன்களாகத்தான் இருக்கின்றன. அந்தப் பகுதியை நகரத்திற்கு தகுதியான முறையில் மாற்றியமைக்க வேண்டும்.

மேட்டூர் அணை பேர்பெற்ற இடம். பல பேர் வருகின்ற இடம். இன்னும் பழைய நிலையிலேயே எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் நகரத்திலே பல அபிவிருத்திகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் அங்குள்ள பொது கக்கூஸ்களில் சரியான முறையில் பைப்புகள் கூடக் கிடையாது என்ற உண்மையை உறுப்பினர் அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். 24 மணி நேரம் தண்ணீர் வருகிறது என்று சொன்னார்கள். காலை 9 மணி வரை வருகிறது, மத்தியானம் சிறிது நேரம் வருகிறது, பிறகு மாலையில்

சிறிது நேரம் வருகிறது. அங்கு 24 மணி நேரமும் தண்ணீர் வருகின்ற நிலை இல்லை. மேட்டூர் அணையிலிருந்துதான் தண்ணீர் எடுக்கப்படுகிறது. ஆனால் அந்தப் பகுதி மக்களுக்குக் கூட 24 மணி நேரமும் தண்ணீர் கிடைக்காத நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 24 மணி நேரமும் தண்ணீர் வருகிறது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்குள்ள தண்ணீரை எடுத்து குடிநீராக மாற்றி வழங்குவதற்கு ஒரேடியாக திடீரென்று தாவுகிற முறையில் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த அரசுக்கு இன்றல்ல மூன்றாவது மாதத்திலேயே அமைச்சர் அவர்களிடத்தில், மற்றவர்களிடத்தில் புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புகார் பற்றிய கடிதத்தை இந்தச் சபையிலேயே நான் வழங்கினேன். ஆனால் இதுவரை அது கவனிக்கப்படவில்லை. மறுபடியும் செயலாளருக்கு கடிதம் எழுதினேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் சந்தித்துப் பேசினேன். அங்குள்ள எல்லாக் கட்சியினரும் சேர்ந்து எதிர்த்து போராட்டம் நடத்தி கலெக்டரிடம் மகஜர் ஒன்று கொடுக்கப்பட்டது. ஆனால் அதுபற்றி அவரிடமிருந்தோ அல்லது அந்த இலாகாவிலிருந்தோ எந்தவிதப் பதிலும் வரவில்லை.

மக்களுக்கு சேவை செய்வதற்காக அந்த நகரியம் அமைந்திருக்கிறது என்று சொல்வது சரியல்ல. அந்த நகரியம் பொது மக்களுக்கு பல சேவைகள் புரிந்திருக்கின்றன என்பதும் சரியல்ல. அங்கு தக்க அபிவிருத்திகளை ஏற்படுத்த சட்டத்தைத் திருத்துவது பற்றிச்சொன்னார்கள். சட்டத்தைத் திருத்துவதன் மூலம் அந்தக் காரியம் சரியாக ஆகிவிடாது.

வரவு ஏழு லட்சத்துச் சொச்சம், செலவு எட்டு லட்சத்துச் சொச்சம் என்று சொன்னார்கள். அங்கு நகரியச் சட்டத்தின் அடிப்படையில் அதிகாரிகளை நியமிக்கிறார்கள். அவர்கள் அப்கிரேட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே சம்பளத்தைக் கணக்கிட்டுப்பார்த்தால் அபிவிருத்தி வேலைகளுக்கு பணம் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. மக்களின் பிரதிநிதிகள் அங்கு இருப்பார்களேயானால் அந்த மக்களிடம் அபிவிருத்தி வேலைகளுக்காக பணம் திரட்டி செயல்படுத்த முடியும்.

எல்லை போதாது என்றால் எல்லையை விரிவுபடுத்த வாய்ப்பிருக்கிறது. இவ்வளவு தொழிற்சாலைகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்கள் கொடுத்தார்கள். இவ்வளவு தொழிற்சாலைகளிலிருந்து வரி வர வாய்ப்பிருக்கிறது. மற்ற இடங்களில் உள்ள நகரசபைகளைப் போன்று மக்களிடமிருந்து மட்டும்தான் வாங்கவேண்டும் என்பதல்ல. அங்குள்ள தொழிற்சாலைகளிலிருந்து வரி வர வாய்ப்பிருக்கிறது. ஆகவே, மக்களுடைய பிரதிநிதிகள் இருந்து கொண்டு அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கு அங்கு வாய்ப்பு இருக்கிறது. அது அவர்களது விருப்பமும் கூட.

[திரு. எம். சுரேந்திரன்] [1971 டிசம்பர் 16

மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதுதான் அரசாங்கத்தின் கடமை, அதுதான் ஜனநாயகத்தின் கோட்பாடு என்ற கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று நம்புகிறேன். டவுன்ஷிப் இருந்தால்தான் நல்லவிதமாக நடக்கும் என்று சொன்னால் மற்றஇடங்களில் நகரசபைகளை வைத்துக்கொண்டு இருப்பதில் பொருள் இல்லை. ஜனங்களின் பிரதிநிதிகளே இல்லாமல் அதிகாரிகள் நன்ருக ஆட்சி செய்வார்கள் என்ருல் சட்டசபைக்குக் கூட தேர்தல் நடத்துவதில் பொருள் இல்லை. நாம் ஒரு கொள்கையை வகுத்துத்தான் அதைச் செயல்படுத்த அதிகாரிகள் இருக்கிருர்களே தவிர அவர்களே எல்லாம் செய்து கொண்டு விடுவார்கள் என்று சொல்வது சரியல்ல. அது இன்றைய காலகட்டத்திற்குப் பொருந்தியதல்ல.

கேரளாவில் சமீபத்தில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது. அதன் நோக்கம் என்னவென்ருல் டெவலப்மென்ட் கவுன்ஸில்ஸ் இருக்கின்றன. அதற்கு கலெக்டர்தான் தலைவராக இருக்கிருர். அப்படி கலெக்டரை தலைவராக வைத்துக் கொள்ளக்கூடாது, கலெக்டருக்கு அந்த அதிகாரத்தை அளிக்கக்கூடாது, பிரதிநிதிகளிலிருந்து ஒருவரைத்தான் தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். கலெக்டரை காரியதரிசியாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிருர்கள்.

ஒவ்வொரு அம்சத்தையும் பொது மக்கள் பிரதிநிதிகள்தான் கவனிக்கவேண்டும். அவர்கள்தான் மக்களுக்கு திருப்தி அளிக்க முடியும். அவர்கள்தான் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு அவற்றை நிறைவேற்றி வைக்கமுடியும் என்ற நிலை ஒவ்வொரு நாளும் வளர்ந்துகொண்டே வருகிறது. அந்த உணர்வு வளர்ந்து வருகிறதே தவிர குறைந்த பாடில்லை. வங்காளம் போன்ற மாநிலங்கள் உள்ளன. அவ்விடங்களில் மக்கள் பிரதிநிதிகள் நன்கு நடத்தமாட்டார்கள். அதிகாரிகள்தான் நன்கு நடத்துவார்கள் என்ருல் சரி. ஆனல் டவுன் ஷிப்பாக இருப்பதினல்தான் காரியங்கள் நன்கு நடைபெறுகின்றன என்ற வாதம் பொருளற்றது. அமைச்சர் அவர்கள் அந்த வாதத்தைக் கூறவில்லை. இன்னும் சிறிது காலம் போகட்டும் என்று கூறி இருக்கிருர்கள். சரியானது என்று ஒன்றை ஒப்புக்கொண்டுவிட்டால் அதை விரைவில் செய்து முடிக்கவேண்டும். காலதாமதப்படுத்தக் கூடாது. ஜனநாயக ரீதியில், பொருளாதார ரீதியில், மக்களின் உணர்வுகளின் அடிப்படையில் சரி என்று படுகிறதை யார் சொன்னலும்சரி அதை நிறுத்திவைக்காமல் உடனடியாக அரசாங்கத் தரப்பிலிருந்து ஒரு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றி அதை விரைவில் நகரசபையாக ஆக்கவேண்டும் என்று அந்த நகர மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவேண்டுமென்கிற ஒரு காரியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்பி இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் முதலில் எடுத்து வைத்த வாதங்களை மறுபடியும் வலியுறுத்தி எடுத்துச்சொல்லியிருக்கிருர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கியிருக்கிற அவை நல்லதா அல்லது நியமிக்கப்படுகிறவர்கள் இருக்கிற அவை நல்லதா என்ற பொதுக் கேள்வியை எழுப்பினல் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கிற அவைதான் நல்லது. பொதுவாக நகராட்சி அமைவது நல்லதா அல்லது நகரியம் அமைவது நல்லதா என்ருல் நகரசபை அமைவது நல்லதுதான். மேட்டூர் நகராட்சியாக இருப்பது நல்லதா அல்லது நகரியமாக இருப்பது நல்லதா என்ருல் நகரியமாக இருப்பதுதான் நல்லது. நகரசபையாக வைப்பதற்கு சிலபல சூழ்நிலைகள் தேவைப்படுகின்றன. அதையொட்டி திட்டங்கள் வகுக்கவேண்டியிருக்கின்றது.

THIRU K. T. K. THANGAMANI : Sir, on a point of order. The Bill was brought forward by the hon. Member, Thiru Surendran and the Hon. Minister has got a right to intervene. Having intervened, the final right of reply is only to the mover of the Bill. I would like to know whether there is provision in the rules for the reply of the Hon. Minister.

MR. DEPUTY SPEAKER : Rule 75 (1) says—

"...... the Minister to whose department the matter relates shall after the mover has replied, have the right of speaking whether he has previously spoken in the debate or not."

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் நான் வலியுறுத்திச் சொல்கிறேன். 89 நகராட்சிமன்றங்கள் அமைந்திருப்பதுபோன்று இதையும் ஆக்குவது கடினமானதல்ல ஆனல் சிலபல சூழ்நிலைகளையொட்டித்தான் ஆக்கவேண்டுமென்று சொன்னேன். பல்வேறு திட்டங்கள் அங்கு எடுத்துக்கொண்டதற்குக் காரணம் அது நகரியமாக அமைக்கப்பட்டதுதான். ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை பின்வாங்கிக் கொண்டால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமுன்வடிவு, பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

(ii) 1971-ம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு 44/1971.)

திரு. க. சுப்பு: பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு 44/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: I second it.

*9—12—71-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[1971 டிசம்பர், 16

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு பல்கலைக் கழக நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் இந்தத் திருத்த சட்டமுன்வடிவை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

ஏற்கனவே இந்தக் கருத்து பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கஜேந்திரகட்கர் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிஷன் கூட மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று கூறியிருக்கிறது. பாராளுமன்றத்தில் கூட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஜே. எம். கௌடர் இந்தக் கருத்தினை ஏற்றுக் கொண்டிருக்கிறார். பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்கிற கருத்தினை, இன்று பலரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, சென்னையில் உள்ள மாணவர்கள் ஊர்வலம் ஒன்றினை நடத்தி பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களைச் சந்தித்து மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழகத்தின் பல பகுதிகளிலுள்ள மாணவர்கள் அதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாணவர்களுக்கு அதில் பிரதிநிதித்தும் கொடுக்கப்பட வேண்டும். நிர்வாகத்தில் தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்லவும். நிர்வாகத்தில் தாங்களும் ஒரு அங்கம் என்பதை உணர்ந்து வேறு போராட்டங்கள், கிளர்ச்சிகள் இவைகளில் ஈடுபடாத அளவில், ஜனநாயக அடிப்படையில் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூற மாணவர்களுக்கு பல்கலைக் கழக நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்றும், இது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற ஒரு கருத்தாக இருக்கிற காரணத்தினாலும் இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் முன் கொண்டுவந்துள்ளேன். மாணவர்களுக்கு அப்படிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்பதல்லாமல் மாணவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வேறு வழி இல்லை என்ற காரணத்தினால்
பி ப. 1-30 கிளர்ச்சிகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை எல்லோரும் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள்: குறிப்பாக சென்னைப் பல்கலைக் கழக நகரக் கல்லூரி மாணவர்கள் மன்றம் என்ற ஒரு மன்றம் இருக்கிறது. அதற்கு பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் இல்லை. அப்படி அங்கீகாரம் இல்லாததால் அதை அங்கீகரிக்க வேண்டுமென்றுகோரி மாணவர்கள் ஊர்வலமாக வந்தார்கள். அந்த ஊர்வலம் பின்னர் கிளர்ச்சியாக மாறி அதிலே போலீஸ் தடியடி, கண்ணீர்ப் புகை என்று நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன; கல்லூரியில் இருக்கும் மாணவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையே தொடர்பு இல்லை. அரசாங்கமும் அது ஒரு 'அடானமஸ் பாடி என்று சொல்லி, அதில் தலையிடுவது கிடையாது. இப்படிப்பட்ட நிலைமைகளால் பல சந்தர்ப்பங்களில் கிளர்ச்சி ஏற்படுகிறது.

1971 டிசம்பர் 16] [திரு. க. சுப்பு]

அதோடு, கல்லூரி விடுதிகள் கட்டுதல், கட்டணம், மற்ற அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல, பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டியது உடனடியாக அவசியமாகும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

'Nil'.

B. *Reports, Notifications and other Papers.*

@ 74. Copy of G.O. No. 1414, Social Welfare Department, dated the 10th December 1971, in regard to constitution of State Defence Personnel's Amenities Committees.

75. Further list of names of Members of the Assembly who have given contribution to Beggar Rehabilitation Fund.

Laid on the Table of the House on 15th December 1971.

இணைப்பு I.

[134-ம் பக்கத்தில் 469-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

The details of various articles manufactured in the various Jails of this State with prison labour are as follows :—

Name of Jail. (1)	*Articles manufactured.* (2)
1. Central Jail, Madras ..	Furniture, covers, book-binding flat.file boards, handspun yarn, sealing wax, tags, phenyle, stitching of uniforms for jail. Police, Telephone, Medical and Postal departments.
2. Central Jail, Vellore ..	Furniture, boots black leather chappals convict warder sandals, warders' belts leather tapal bags, canvas tapal bags bandage cloth, gauze cloth cotton tape stitching of garments for Postal Police and Forest Departments, binding of old book,h andmade paper covers.
3. Central Jail, Salem ..	Furniture, bandage cloth, gauze cloth, carpet (cotton) shoulder and waist belts for last grade Government servants. binding of books and journals, blacksmithy, making of iron articles such as cooking undah, latrine pans, bedside lockers, spring cot, labour cot, buckets, mumutties, pickaxes, crowbars, basket, chairs, iron folding chairs, G.I. buckets, G.I. pots, urine drums, etc. In respect of aluminium industry, making of milk cans, sauce pans, dekshas in different sizes, kettle, rice strainer, bucket, plate, mug, sputum cup, case sheet board, aluminium jug, frying pan milk pails, tumbler, basin, handmade paper, flat-file cases and wrappers and oil pressing (gingelly oil).
4. Central Jail, Coimbatore..	Yarn of cocunts from 10s to 26s yarn of counts from 2/10s to 4/10s different colours of yarn of the above count, 38" Dungry cloth 36", 24" dungry cloth, 34" dungry cloth blue, 38" salampore cloth (grey), 34" salampore blue, 36" longcloth, 32" longcloth (bleached). 34" bleached 34" dungry bleached, 45" turban cloth blue, 28" turban cloth (green) 31" drill, 29" special drill (green), 29" blue drill 29" red drill, 40" bed ticking dyed 36", 29", 27' twill, 32" twill bleached, 32" twill khaki, female warder sarees, female convict sarees, special stanley gauze cloth, 29" dungry toweling, 36" cellular cloth khaki, 36 " cellular cloth (grey) T. 33 towels, T. 11 towels cotton fringes of colours, cotton fringes of blue cotton tape of ½" to 4" with different colours. all sorts of convict clothing for jail, all sorts of hospital garments stitched out of khaki cloth. stitching of garments of Police, Postal and Fire Service Departments, all sizes of belts (both shoulder and waist), all standard size articles of furniture, binding of old books and registers, repairs and making of new tents (different sizes), brown cover of sizes card boards, white paper, cover paper, 'huck-a-back, towels.
5. Central Jail, Cuddalore ..	Furniture, gauze, bandage cloth, gauze cloth carpets, convict cloth tape making, stitching of Police and Postal garments, book binding.
6. Central Jail, Madurai ..	Furniture, gauze and bandage cloth, stitching of Police and Postal garments, book binding, handmade paper, cover making.
7. Central Jail, Tiruchirappalli.	Furniture, gauze, bandage cloth convit cloth cumblies, aloe ropes, kore mats, book binding, soap making, stitching of Postal and Police garments.
8. Borstal School, Pudukottai.	Furniture, book binding, stitching of Postal and Police garments, making of iron articles.
9, Central Jail, Palayamkottai.	Furniture, gauze and bandage cloth, laundry (washing of uniforms of warders, convicts and hospitals cloth and kitchen cloth), making of handmade paper and flat file cases.
10. After Care Home, Madras.	Furniture, making of iron and steel materials like trays, undahs, latrine pans, night-soil drums, etc., stitching of Police garments and convict clothing.
11. State Jail for Women, Vellore.	Paper making, twisted thread making. button making, gauze and bandage cloth weaving and cover-making.

இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பல்வேறு பொருள்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

சிறைச்சாலையின் பெயர். (1)	உற்பத்தி செய்யப்படும் பொருள்கள். (2)
1. மத்திய சிறைச் சாலை, சென்னை.	மேசை நாற்காலிகள் முதலியன காகித உறைகள், புத்தகம் கட்டுதல், கோப்பு அட்டைகள், கையால் நூற்ற நூல், முத்திரை மெழுகு, கூர்நாடா பினைல், சிறைச்சாலை, காவல் நிலையம், தொலைபேசி, மருத்துவ, அஞ்சல் துறைகளுக்கு வேண்டிய சீருடைகள் தைத்தல்.
2. மத்திய சிறைச் சாலை, வேலூர்.	மேசை, நாற்காலிகள் முதலியன பூட்ஸுகள், கறுப்புத்தோல் செருப்புகள், குற்றவாளி வார்டர்களின் செருப்புகள், வார்டர்களின் இடுப்புக் கச்சைகள், தோலினால் செய்யப்பட்ட தபால் பைகள், கித்தானினால் ஆன தபால் பைகள், காயக் கட்டுத்துணிகள், மருந்து வலைத்துணி, நூல் நாடா, தபால், காவல்துறை, வனத்துறைகளின் பணியாளர்களுக்கு ஆடைகள் தைத்தல், பழைய புத்தகங்களைக் கட்டுதல், கையால் காகித உறைகள் தயாரித்தல்.
3. மத்திய சிறைச் சாலை, சேலம்.	மேசை நாற்காலி முதலியன, காயக்கட்டுத் துணி, மருந்து வலைத்துணி, விரிப்பு (பருத்தி), அரசு கடைநிலை ஊழியர்களுக்கு தோள்பட்டைகள், இடுப்புப் பட்டைகள், புத்தகங்கள், பத்திரிகைகளைக் கட்டுதல், கருமார் வேலை, சமையல் செய்யும் அண்டாக்கள், கழிப்பிட உலோகத் தட்டு, இவற்றைத் தவிர, நிலைப்பெட்டிகள், கம்பி சுருள் பொருத்திய கட்டில்கள், மகப்பேறு கட்டில், வாளிகள், மண்வெட்டிகள், குந்தாலிகள், கடப்பாறைகள், கூடைகள், நாற்காலிகள், இரும்பு மடக்கு நாற்காலிகள், துத்தநாகம் பூசப்பட்ட வாளிகள், துத்தநாகம் பூசப்பட்ட இரும்பு பானைகள், சிறுநீர் கழிப்பு தகர டிரம்கள் முதலியன. அலுமினியம் தொழிலைப் பொறுத்த வரையில், பால் குவளைகள், பல்வேறு அளவுகளில் உலோகத் தட்டுகள், கிண்ணங்கள். கொதிகெண்டி, சோறு வடிதட்டு, வாளிகள், தட்டு, மூக்குச்சொம்பு, எச்சிற்படிக்கம், குற்றப் பதிவு அட்டை, அலுமினியக்கூஜா, வாணலி, பால்வாளிகள் டம்ளர்கள், குழிவுத்தட்டு, கையால் தயாரிக்கப்பட்ட காகிதம், கோப்பு அட்டைகள், அட்டைத்தாள்கள், எண்ணெய் ஆடுதல் (நல்லெண்ணெய்).
4. மத்தியச் சிறைச் சாலை, கோயம்புத்தூர்.	10 லிருந்து 26 எண் வரையிலுள்ள நூல், 2/10 லிருந்து 4/10 எண் வரையிலுள்ள நூல்கள் பல்வேறு வண்ணங்களில் மேற்கூறிய எண்ணுக்கு மேற்பட்ட நூல், 38 அங்குல முரட்டுத் துணி, 36 அங்குல, 24 அங்குல, முரட்டுத் துணி, 34 அங்குல முரட்டு நீல துணி, 38அங்குல சாலம் போர் துணி (பழுப்பு); 34 அங்குல சாலம் போர் துணி நீலம், 36 அங்குல லாங்கிளாத். 32 அங்குல லாங்கிளாத், (சலவை செய்யப்பட்டது.) 34 அங்குல சலவை செய்யப்பட்டது. 34 அங்குல முரட்டுத் துணி சலவை செய்யப்பட்டது. 45 அங்குல தலைப் பாகைத் துணி (நீலம்), 28 அங்குல தலைப் பாகைத் துணி (பச்சை), 31 அங்குல முரட்டு கெட்டித் துணி, 29 அங்குல சிறப்பு வகை முரட்டு கெட்டித் துணி, (பச்சை), 29 அங்குல முரட்டு கெட்டித் துணி (நீலம்), 29 அங்குல முரட்டு கெட்டித் துணி (சிகப்பு), 40 அங்குல முரட்டு மெத்தை உறைத் துணி, 36 அங்குலம், 29 அங்குலம், 27 அங்குலம், ட்வில் துணி, 32 அங்குல ட்வில் துணி, (சலவை செய்யப்பட்டது). 32 அங்குல காக்கி டவில் துணி, பெண் வார்டர் புடவைகள், பெண் குற்றவாளிகளின் புடவைகள், சிறப்பு ஸ்டான்லி வலைத்துணி, 29 அங்குல முரட்டு கெட்டி துவாலைகள், 36 அங்குல இழைகள் செறிவாயிராத காக்கித் துணிகள், 36 அங்குல இழைகள் செறிவாயிராத துணிகள், (பழுப்பு) டி. 33, துவாலைகள், டி. 11, துவாலைகள், நீல ஓரக்கரை அமைப்புள்ள பருத்தித் துணிகள், $\frac{1}{2}$ அங்குலம் முதல் 4 அங்குலம் வரை பருத்தி நாடா பல வண்ணங்களில், கைதிகளுக்குத் தேவைப்படும் துணிகள், மருத்துவ மனைக்குத் தேவைப்படும் காக்கியில் தைக்கப்பட்ட எல்லா வகைத் துணிகளும் காவல் அஞ்சல் துறை தீயணைப்புத் துறைக்குத் தேவைப்படும் துணிகள் தைத்தல் (தோள்பட்டை, இடுப்புப்பட்டை உட்பட) எல்லா அளவுள்ள பட்டைகள், மேசை நாற்காலி முதலியன போன்ற தர அளவுப் பொருள்கள், பழைய புத்தகங்கள் பதிவேடுகள் ஆகியவற்றைக் கட்டுதல், கூடாரங்களைப் பழுதுபார்த்தல், புதிய கூடாரங்கள் அமைத்தல் (பல்வேறு அளவுகளில்), பழுப்பு நிற காகித உறைகள் பல் அளவுகளில். அட்டைகள், வெள்ளைத்தாள், உறைக் காகிதம், மேல் துண்டுகளுக்குப் பயன்படுத்தப்படும் துவாலைகள்.
5. மத்திய சிறைச் சாலை, கடலூர்.	மேஜை, நாற்காலி முதலியன, மருந்து வலை துணி, காயக் கட்டுத் துணி, வலைத் துணிகள், விரிப்புகள், கைதிகளின் துணிகள், நாடா தயாரிப்பு, காவல்துறை, அஞ்சல் துறையின், உடைகளைத் தைத்தல், புத்தகம் கட்டுதல்.
6. மத்திய சிறைச் சாலை, மதுரை.	மேசை, நாற்காலி முதலியன, மருந்து வலைத் துணி, காயக் கட்டுத் துணி, காவல்துறை, அஞ்சல் துறையின் உடைகளைத் தைத்தல், புத்தகம் கட்டுதல், கையால் தயாரிக்கப்பட்ட காகிதம், காகித உறை தயாரித்தல்.
7. மத்திய சிறைச் சாலை. திருச்சிராப்பள்ளி.	மேசை, நாற்காலி முதலியன, மருந்து வலைத் துணி, காயக் கட்டுத் துணி, கைதிகளின் துணிகள், கம்பளிகள், கற்றுழைக் கயிறுகள், கோரைப் பாய்கள், புத்தகம் கட்டுதல், சோப்பு தயாரித்தல், அஞ்சல் துறை, காவல் துறையின் உடைகளைத் தைத்தல்.

சிறைச்சாலையின் பெயர்.	உற்பத்தி செய்யப்படும் பொருள்கள்.
(1)	(2)
8. சீர்திருத்தப் பள்ளி, புதுக் கோட்டை.	மேசை, நாற்காலி முதலியன, புத்தகம் கட்டுதல், அஞ்சல் துறை, காவல்துறை ஆகியவற்றின் உடைகளைத் தைத்தல், இரும்புப் பொருள்கள் தயாரித்தல்.
9. மத்திய சிறைச் சாலை, பாளையங் கோட்டை.	மேசை, நாற்காலி முதலியன, மருந்து வலைத் துணி, காயக் கட்டுத் துணிகள், சலவை நிலையம், (வார்டர்கள், கைதிகள், மருத்துவமனைத் துணிகள், சமையலறைத் துணிகள் ஆகியவற்றைச் சலவை செய்தல்), கையால் காகிதம் தயாரித்தல், அட்டை கோப்புகள் தயாரித்தல்.
10. பிற்காப்பு இல்லம், சென்னை.	மேசை, நாற்காலி முதலியன, தட்டுகள், அண்டாக்கள், கழிப்பிடத் தட்டுகள், கழிவுப் பொருள் டிரம்கள், முதலிய இரும்பு-1 உருக்கு பொருள்கள் தயாரித்தல், காவல் துறை, கைதிகளின் உடைகளைத் தயாரித்தல்.
11. மகளிருக்கான அரசு சிறைச் சாலை, வேலூர்.	காகிதம் தயாரித்தல், முறுக்கு நூல் தயாரித்தல், பொத்தான் தயாரித்தல், மருத்துவ வலைத்துணி, காயக் கட்டுத் துணி, நெய்தல், காகித உறை தயாரித்தல்.

இணைப்பு-2.

[140-ம் பக்கத்தில் 475-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

The Outer Harbour is having a water-shed area of approximately 200 acres and is formed by the construction of two break-waters on the northern side and eastern side totalling 3.700 feet. The break-water on the northern side is connected to the shore by a northern bund starting from a point very near the Naval Coastal Battery. The southern side of the new dock will be the north groyne of the existing main harbour and on the western side a reclamation wall has been provided. The basin so enclosed is dredged to the required depths and with the dredged materials, an area of approximately 100 acres is reclaimed to serve for erecting the facilities for the Ore Handing Scheme and for storage space for the other berths to be constructed in this dock at a later date. The Oil Jetty catering to large sized Oil Tankers is being provided parallel to the eastern break-waters and is approachable from shore by a jetty provided from shore to the Oil Berth. This approach jetty will carry the pipe lines also.

2. The Outer Harbour Basin will initially have a depth of 44 feet below Port's datum at the basin, 46 feet at the Turning Circle, 52 feet at the Approach Channel to cater to 77,000 tonne Tankers. This will further be deepened 52.5 feet at the Berth, 55 feet at the Turning Circle, 57 feet in the Approach Channel, to accommodate 100,000 tonne Oil tanker, ultimately.

விவர அறிக்கை

சென்னைத் துறைமுகம் கீழ்க்கண்டவற்றுக்கு இடமளிப்பதற்காக வெளிப்புறத் துறைமுகம் ஒன்றைத் தற்பொழுது கட்டிக் கொண்டிருக்கிறது.—

(1) எண்ணெய்க் கப்பல் நிற்குமிடம்.

(2) கனிப்பொருள்களை ஏற்றிவரும் கப்பல் நிற்குமிடம்; இதன்கண் இயந்திரங்கள் மூலமாக கனிப் பொருள்களை இறக்கும் வசதிகள் இருக்கும். இது தற்போதுள்ள துறைமுகத்தின் வடக்குப் பகுதியில் அமையும்.

இந்த வெளித்துறைமுகத்தின் நீர்நிலைப் பகுதி தோராயமாக 200 ஏக்கர்களாகும். இப்பகுதியில் வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் இரு அலைத் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டதன் மூலம் இந் நீர்நிலைப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரு அலைத் தடுப்புச் சுவர்களின் மொத்த நீளம் 3,700 அடி ஆகும். வடக்கிலிருந்து கட்டப்பட்டுள்ள அலைத் தடுப்புச் சுவர், அதற்கு வடக்கில் கட்டப்பட்டுள்ள அணைக் கரையின் (Bund) மூலம் கடற்கரையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த வடக்கு அணைக் கரை (Northern Bund) கடலோரக் கடற்படைக்கொத்தளத்திற்கு (North groyne) (Naval Coastal Battery) மிக அருகிலுள்ள ஓரிடத்திலிருந்து தொடங்கிக் கட்டப்பட்டுள்ளது. புதிய துறைமுகத்தின் தென் பகுதி தற்போதுள்ள தலைமைத் துறைமுகத்தின் வடபுறக் கடலரிப்புத் தடுப்புச் சுவர் (Noval Coastal Battery) ஆகும். இந்த நீர்நிலையின் மேற்குப் பக்கத்தில் மீட்புச் சுவர் (reclamation wall) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முப்புறமும் சூழப்பட்ட நீர் நிலை வேண்டுமளவு ஆழத்திற்குத் தூர் எடுக்கப்படுகிறது. தூர் எடுக்கும் கருவிகளின் உதவியுடன் தோராயமாக 100 ஏக்கர் பரப்பு மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட பரப்பு துறைமுகத்தில் கனிப் பொருள்களைக் கையாளும் திட்டத்திற்குரிய வசதிகளை நிறுவுவதற்கும், பிறிதோர் நாளில் இந்தத் துறைமுகத்தில் கட்டப்படவிருக்கும் ஏனைய கப்பல் நிற்குமிடங்களுக்கு சேமிப்பு இடவசதிக்கும் பயன்படும். பெரிய அளவினதான எண்ணெய் கப்பல்களின் தேவையை நிறைவு செய்வதற்குரிய எண்ணெய் இறக்கும் துறை (Oil Jetty) கிழக்கிலிருந்து கட்டப்பட்டுள்ள அலைத் தடுப்புச் சுவருக்கு இணையாக அமைக்கப்பட்டு வருகிறது. கடற்கரையிலிருந்து எண்ணெய்க் கப்பல் நிற்குமிடத்துக்கு அமைக்கப்பட்டுள்ள தளப்பாதையொன்றின் மூலம் இதனை அணுகமுடியும். இந்த அணுகு துறையில் (Approach Jetty) குழாய் பாதைகளும் செல்லும்.

2. துறைமுகத்தின் தரை மட்டத்துக்கும் (Port's) (Datum) கீழே இந்த வெளித் துறைமுக நீர்நிலை 77,000 டன் கொள்ளளவுடைய எண்ணெய்க் கப்பல்களின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் தொடக்கத்தில் 44 அடி ஆழமுடையதாயிருக்கும். திரும்பு வட்டத்தில் (Turning Circle) 46 அடி ஆழமுடையதாயிருக்கும். அணுகு கால்வாயில் 52 அடி

ஆழமுடையதாயிருக்கும். இது இறுதியில் 100,000 டன் கொள்ளளவுடைய எண்ணெய்க் கப்பல்களுக்கும் இடவசதியளிக்கும் வகையில் மேலும் ஆழப்படுத்தப்படும். அப்பொழுது கப்பல் நிற்குமிடம் 52.5 அடி ஆழமும், திரும்பு வட்டம் 55 அடி ஆழமும் அணுகு கால்வாய் 57 அடி ஆழமும் கொண்டிருக்கும்.

இணைப்பு-3.

146ம் பக்கத்தில் 486-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.

(a) Number of Engineering personnel of Public Works Department on deputation to the Tamil Nadu Electricity Board are as follows :—

1969-70	...	...	60
1970-71	...	...	60

(b) The terms and conditions of deputation are as follows :—

1. Grade pay in the Public Works Department as admissible to him from time to time.

2. Dearness allowance and other allowances as per rules in force from time to time.

3. Medical concessions for which he is eligible under the Government of Tamil Nadu.

4. He will be subject to all other service conditions applicable to members on foreign service under the Fundamental Rules.

5. The Tamil Nadu Electricity Board, Madras will pay the travelling allowance of the officer, if any, for joining the appointment and also on his reversion together with the transit pay for the period of joining on both the occasions. The officer will be eligible for joining time and pay during joining time according to rules.

6. Leave salary and pension contribution payable by the Tamil Nadu Electricity Board, Madras, will be at the following rates, provisionally :—

(i) Leave salary contribution at 11 per cent of the pay that would have been drawn by the Officer from time to time, if he had remained in Government service : and

(ii) Pension contribution at 11-2/15 per cent of the maximum of the scale of pay.

7. The entire expenditure in respect of compensatory allowances for periods of leave in or at the end of the officer's service under the Tamil Nadu Electricity Board will be borne by it. The Electricity Board Madras, will also accept liability for leave salary in respect of disability that may be incurred in and through service under the Tamil Nadu Electricity Board though a disability might manifest itself after the termination of his service under the Tamil Nadu Electricity Board.

(c) No Engineer of the Public Works Department has so far been absorbed in the regular service of the Tamil Nadu Electricity Board. The matter is under the active consideration of the Government in consultation with the Board.

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் முகமையில் அனுப்பப்பட்டு பணியாற்றி வருகிற பொதுப்பணித்துறை பொறியியல் பணியாளர்களின் எண்ணிக்கை வருமாறு:—

1969-70	60
1970-71	60

(ஆ) முகமைப் பணிக்கான விதித் துறைகளும் நிபந்தனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) பொதுப்பணிதுறைக்கு முகமையிலனுப்பிய ஒருவருக்கு அவ்வப்போது அனுமதிக்கப்படத்தக்க பதவித்தரத்துக்குரிய சம்பளம்.

(2) அவ்வப்போது செயலில் உள்ள விதிகளுக்கு இணங்க அகவிலைப்படிகளும் ஏனைய படிகளும்.

(3) தமிழ்நாடு அரசின்கீழ் அவர் பெருதற்குத் தகுதி உடைய மருத்துவச் சலுகைகள்.

(4) அடிப்படை விதிகளின் கீழும், அயற்பணி விதிகளின் கீழும் உள்ளவர்க்கு பொருந்தத்தக்க பணி நிபந்தனைகள் எல்லாவற்றிற்கும் அவர் உட்பட்டவர் ஆவார்.

(5) ஓர் அதிகாரி வேலையில் சேருவதற்குப் பயணம் மேற்கொண்டிருப்பின் . அந்த பயணப்படியும் அவர் பதவி தாய்த்துறைக்கு மாற்றப்பட்டபோது தாய்த்துறையில் வேலையில் சேரும் காலம் ஆகிய இவ்விரு சந்தர்ப்பங்களிலும், இடமாற்றுச் சம்பளமும் தமிழ்நாடு மின்வாரியம் கொடுக்கும் விதிகளுக்கு இணங்க வேலையில் சேருவதற்கு அவகாசமும் வேலையில் சேரும் காலத்திற்கான சம்பளமும் இவ்வதிகாரி பெறுவதற்குரியவராவார்.

(6) சென்னையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் கொடுக்கத்தக்க விடுப்புச் சம்பளமும், ஓய்வு ஊதிய உதவித் தொகையும் தற்காலிகமாக கீழ்காணும் விதங்களில் இருக்கும் :—

1. அரசு பணியிலேயே இருந்திருந்தால் அவ்வதிகாரி அவ்வப்போது பெறக்கூடிய சம்பளத்தில் 11 சதவீதம் விடுப்புச் சம்பளத்தொகை.

2. பேரளவு சம்பள விதத்தில் 11 2-15 சதவீதம் ஓய்வூதியத் தொகை.

(7) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அதிகாரிகள் பணியில் அல்லது பணி முடிவில் விடுப்புக்காலங்களுக்காக ஈட்டுப் படிகள் குறித்த செலவு முழுவதும் வாரியத்தாலே ஏற்றுக்கொள்ளப்படும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றுகையில் ஏற்படக் கூடிய உடல் ஊனம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அவரது பணி முடிந்த பிறகும் வெளிப்படையாகத் தெரிந்தால் அது குறித்து விடுப்புச் சம்பளம் அளிக்கும் பொறுப்பை ஒப்புக் கொள்ளவேண்டும்.

(இ) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலையான பணியில் இதுவரை பொதுப்பணித்துறை பொறியாளர் எவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இப்பொருள் குறித்து மின்சார வாரியத்துடன் தொடர்பு கொண்டு அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971 டிசம்பர் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. **பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Malaria Eradication Programme.

* 501 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Corporation of Madras has requested the Union Government for grants to implement the Malaria Eradication Programme; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகராட்சி 12.33 இலட்சம் ரூபாய் செலவில் மலேரியா ஒழிப்புத் தீவிரத் திட்டம் ஒன்றை அண்மையில் தீட்டியுள்ளது. அத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(i) நகரில் உள்ள மொத்தம் சுமார் 50,000 கிணறுகளில் மலேரியாவைத் தோற்றுவிக்கின்ற புழு ஒழிப்பு பணியை மேம்படுத்துதல் ;

(ii) நோய்க்கு இலக்கான இடங்களைக் கண்காணித்தல் ;

(iii) சென்னை மாநகராட்சி முழுவதிலுமுள்ள மருத்துவ மனைகளிலும், மருத்துவ இல்லங்களிலும், மாநகராட்சி மருந்தகங்களிலும் இரத்தத் தடவல்களை (Samples) சேகரிக்க பணியாளர்களை நியமிப்பதன் மூலம் முன் கண்காணிப்பு வேலையை மேற்கொள்ளுதல் ;

(iv) நோய் தொற்றிய இடங்களில், டி.டி.டி. மருந்து தெளித்தலும், எல்லா வகை மலேரியா நேர்வுகளுக்கும் அடிப்படை மருத்துவம் செய்தலும்.

இத்திட்டத்தை செயல்படுத்த ஆண்டுக்கு ரூ. 12 இலட்சங்கள் மானியம் கொடுக்கவேண்டுமெனக் கோரி, மைய மக்கள் நல்வாழ்வு குடும்பநல அமைச்சரிடம் மாநகராட்சி ஒரு மனு அளித்துள்ளது.

Thiru K. M. SUBRAMANIAM : In spite of the good measures taken, are the Government aware that the mosquitoes are terribly increasing in Madras City, and particularly in the extended areas?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கொசுவினுடைய தொல்லை சென்னை மாநகரில் மிக அதிகமாக இருக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததாகும். ஏனென்றால், கொசுக் கடி என்பது எல்லோருக்கும் பொது. அதை ஒழிப்ப

தீவிரத் திட்டத்திற்காக அவர்களுடைய வரவு செலவுத் திட்டத்தில் அவர்களால் போதுமான அளவு நிதி ஒதுக்க முடியவில்லை. ஏற்கெனவே எந்த அளவு சுகாதாரப் பணிகள் நடைபெற்று வந்தனவோ அந்த அளவு தொடர்ந்து 'மெயின்டனென்ஸ்' செய்துவருவதற்காகத்தான் அவர்களுக்கு நிதி வசதி இருக்கிறது. அதனால், மலேரியாவுக்குக் காரணமாக இருக்கிற கொசுக்களை ஒழிக்கும் பணிகளில் தீவிர முயற்சி நடைபெறவில்லை. 'பீஸ்மீல்' ஆக, சில்லறை முறையில் நடைபெறுவதென்பது மிக்க வெற்றியை அளிக்காது. ஆகவே, அந்தத் தீவிரத் திட்டத்திற்கு 12 இலட்ச ரூபாய்க்கு மேல் தேவைப்படும்போது மாநகராட்சி மன்றம் அந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டது. பொதுவாக, மலேரியா ஒழிப்புத் திட்டச் செலவில் ஒரு பெரும் பங்கை மத்திய அரசு செலுத்துவது வழக்கம் என்ற அடிப்படையில், மாநகராட்சி அதிலே சேர்க்கப்படாத காரணத்தால், மாநகராட்சியும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று திரும்பத் திரும்ப மத்திய அரசு வற்புறுத்தப் பட்டு வருகிறது.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : கொசு ஒழிப்பு மருந்து முன்பைப் போல் கொசுவைக் கொல்லக்கூடிய சக்தியுடையதாக இல்லை, அதனால் கொசுவைக் கொல்லவில்லை என்கிற புகார் வருகிறது. மருந்துகள் ஏதாவது மாற்றப் பட்டிருக்கின்றனவா? முன்போல் சாரமுள்ள மருந்துதான் தரப்படுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கொசுக்கள் கொல்லப்படாமலிருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று—திரும்பத் திரும்ப சில மருந்துகள் தெளிக்கப்படும்போது, அந்தக் கொசுக்களுடைய தாங்கும் சக்தி (ரெஸிஸ்டன்ஸ் கெபாஸிடி) அதிகமாகலாம். மற்றொன்று—திரும்பத் திரும்பத் தெளிக்கும் இடத்தில் மருந்து தரம் குறைந்தும் போய்விடலாம்.

Mental hospital at Kilpauk

* 502 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) Whether any post graduate diploma course in psychiatry is to be started at the Kilpauk Government Mental Hospital soon; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னை அரசு மனநோய் மருத்துவ மனையில் டி.பி.எம். (D.P.M.) வகுப்பு துவக்கும் செயற்குறிப்பு உள்ளது. இந்திய மருத்துவக் கழகத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு சென்னை மருத்துவக் கல்லூரியையும், அரசு மனநோய் மருத்துவ மனையையும் அங்கு இந்த வகுப்பு ஏற்படுத்துவதற்குள்ள வசதிவாய்ப்புகளை ஆராய்ந்துள்ளது. அதன் அறிக்கை எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : சென்னை அரசு மனநோய் மருத்துவ மனையில் அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும்? அது எவ்வளவு மதிப்பீட்டில் தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட ஒரு படிப்பைத் தொடங்குவது என்றால், அதற்குரிய முறையில் எல்லாவிதமான முன் ஏற்பாடுகளும் செய்யக்கூடிய நிலை இருக்கிறதா என்பதை அகில இந்திய மருத்துவக் கவுன்சில்

(மெடிகல் கவுன்சில்) தீர்மானிக்கவேண்டும். அவர்கள் அதை ஆராய்ந்து இன்னும் அறிக்கை அனுப்பவில்லை. அந்த அறிக்கை வந்த பிறகுதான் மற்ற விவரங்கள் அறியவரும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும் மன நோய் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மன நோய் மருத்துவம் செய்வதற்கான சிறப்புத் தகுதி உடையவர்கள் வேண்டும். மன நோய் மருத்துவப் பிரிவுகளை எல்லா இடங்களிலும் அமைப்பதென்பது எளிதல்ல. அந்தச் சிறப்புத் தகுதி உடையவர்களைக் கொண்டு இயன்ற வரையில் மாவட்ட மருத்துவ மனைகளில் மன நோய் மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்த அரசு முயற்சிக்கும்.

திரு. பெ. மலைச்சாமி : மன நோய் என்னென்ன காரணங்களால் ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்து அறிவதற்கு சர்க்கார் ஏதாவது சிறப்பான குழுவை அமைக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பல்வேறு காரணங்களில், உள்ளத்தில் ஏற்படுகிற தகாத எண்ணங்கள் முதல் காரணம்.

திரு. கா. காளிமுத்து : மற்றத் துறைகளில் இருப்பதைப்போல் இன்று மன நோய் மருத்துவத் துறையில் போதுமான அளவு மருத்துவர்கள் இல்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். போதுமான அளவு மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது, மருத்துவர்களை நியமித்தாலும் தீர்ந்துவிடுகிற பிரச்சினை அல்ல. மருத்துவர்களுக்கு ஒவ்வொரு குறிப்பிட்ட துறையில் ஆர்வம் ஏற்பட்டு அந்தத் துறையில் தனிப் பயிற்சி பெறுகிறார்கள். மன நோய் மருத்துவத் துறையை எடுத்துக்கொள்பவர்களுக்கு சமூகத்திற்குத் தொண்டு ஆற்றவேண்டும் என்கிற உணர்வு ஏற்படவேண்டும். அதுவும் வாழ்விலே அதிகமாக வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சி மிகுந்துள்ள காலத்தில், சமூகத்திற்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளவர்கள்தான் அந்தத் துறைக்குச் செல்லக்கூடும். எனவே, அந்த எண்ணிக்கை அவ்வளவாக இல்லை என்பது உண்மை.

திரு. எம். சுரேந்திரன் : மன நோய் சம்பந்தமாக பட்டப் படிப்பு வகுப்பு ஆரம்பிப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்படி ஆரம்பிப்பதை வைத்துக்கொண்டு மன நோயாளிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களா? அல்லது, மன நோய் சம்பந்தமான நோயாளிகளின் எண்ணிக்கை வளருகிறதா என்பதை ஆராய்வதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த மன நோய் என்பது சிலருக்கு சில கட்டங்களில் ஏற்படுகிறது. நோய் ஒரு அளவு வளர்ந்ததற்குப் பின்னால் தான் 'நோயாளி' என்கிற பட்டியலில் சேர்க்கப்பட முடியும். வளருகிற கட்டம் என்பது சிலருக்கு சில நிலைகளில் முற்றுகிறது. அது முற்றியதற்குப் பின்னர் சில நேரத்தில் குறைகிறது. ஆகவே, மனநோய் என்பது அளவிட்டு வரையறுத்துக் கூறப்படக்கூடிய ஒன்றல்ல. ஆனால், நோய் கண்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படவேண்டும். அதற்குத் தனிச் சிறப்புத் தேர்ச்சி தேவை.

படுகிறது. அந்த சிறப்புத் தேர்ச்சியும் பயிற்சியும் கிடைக்கத்தான் டி.பி.எம். (டிப்ளமா இன் சைக்யாட்டிக் மெடிசின்) என்கிற சிறப்புப் பாடம் நடத்தப்பட வேண்டும் என்று விரும்பப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, இந்த மன நோய் மருத்துவ மனைகள் மாவட்ட ரீதியாக எந்த எந்த மாவட்டங்களில் இருக்கின்றன? அவை எங்கெங்கே இருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மனநோய் மருத்துவ மனை சென்னை நகரத்தில் பெரிய அளவில் இருக்கிறது. மாநிலம் முழுதுக்கும் அது பொருந்தும். தனி மருத்துவ மனைகள் இருக்கவேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்படவில்லை. பெரிய மருத்துவ மனைகளில் மன நோய்க் கூறுகளை அறிந்த டாக்டர்கள் இருப்பதால், அவர்களை அகநோயாளிகளாக ஏற்றுக் கொள்ளாமல், புற நோயாளிகளாக வைத்து சிகிச்சை கொடுப்பதில் மாபெரும் வெற்றி கிடைத்திருக்கிறது என்பதை உலகம் ஒப்புக்கொள்கிறது. புற நோயாளிகளுக்கு மாவட்டத் தலைமை மருத்துவ மனை அளவில் சிகிச்சை அளிக்கப்படும்.

Jaundice cases in Government Hospitals in Madras

* 503 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the total number of Jaundice cases treated both as in-patients and as out-patients in each of the Government hospitals in the City of Madras, between January to April this year, month-war; and

(*b*) the number of fatalities in Jaundice cases in each of the Government hospitals in the City of Madras, month-war from January to April 1971?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மன்றத்தின் முன் விவர அறிக்கை* யொன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது இந்தக் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டவர்களில், நான்கு மாதகாலத்தில் 1,487 பேர்கள் சிகிச்சை பெற்றவர்கள் என்றும், 35 பேர்கள் காலமானவர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நான்கு மாத காலத்தில் இவ்வளவு அதிகமாக நோய் பரவியதற்குக் காரணம் என்ன என்று அரசு ஆராய்ச்சி செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மஞ்சள் காமாலை காண்கிற தொடக்க நிலையிலேயே சிகிச்சைக்கு வந்து, சிகிச்சை பெற்றிருந்தால், பூரண குணம் அடைந்திருக்கலாம். ஆனால், நோய் முற்றிய பின்னால் சிகிச்சைக்கு வந்தால், தாங்கும் சக்தி மிகுதியாக இராததால், நோயைத்தாங்கும் 'ப்ரோடீன்' சத்துக்கள் அடியோடு குறைந்து, இதற்குப் பின்னால் மருந்துகளை ஏற்றுக்

* 312-316-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கொண்டு உடல் நலத்தைக் காக்கும் சக்தி பெறுவதில்லை. ஆனாலும், இந்த அளவுக்கு காமாலை நோயைக் கட்டுப்படுத்தியிருப்பதற்கு நாம் இந்தத் துறையில் பணியாற்றியவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த மஞ்சள் காமாலை வியாதியை ஸ்வஸ்தப் படுத்த அலோபதி முறையில் நல்ல மருந்துகள் இல்லை என்றும், ஆயுர்வேத முறையில் தழைகளைக் கொண்டு அதன்மூலம் சிகிச்சை செய்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்களே. ஆகவே, ஆயுர்வேத முறையில் ஸ்வஸ்தமாக்க ஊக்கம் அளிக்கப்படுமா, அந்த யோசனையை அமைச்சர் செயல்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி ஆயுர்வேதம், சித்த முறைகளில் உபயோகிப்பதில், கரிசலாங்கண்ணி என்கிற மூலிகை மூலம் மருத்துவம் செய்யப்படுகிறது. அலபதி முறையிலும், இந்தக் கரிசலாங்கண்ணி மூலிகையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகளையோ, சாரையோ மருந்துக்காக வழங்கப்படுகிறது என்பது கடந்த 5, 6 ஆண்டுக்காலமாகச் செல்வாக்கு பெற்றிருக்கிறது. ஆனாலும், குறிப்பிட்ட கட்டங்களில் வேறு சில மருந்துகளும் தேவைப்படுகின்றன. அந்த மருந்துகளைக் கொடுத்து, தாங்கும் சக்தியை உண்டாக்கி, அதன்மூலம் சிகிச்சை செய்யப்படுகிறது.

பழைய ஜெயங்கொண்டானுக்கு மருந்தகம்

* 504 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், பழைய ஜெயங்கொண்டத்தில் ஒன்றியத்தின் மூலம் மருந்தகம் துவக்க எப்போது தீர்மானிக்கப்பட்டது?

(இ) இதுவரை மருந்தகம் துவக்கப்படாததற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் உத்திரவிடப்பட்டது.

(இ) ஒன்றியத்தின் நிதி நிலைப் பற்றுக்குறையின் காரணமாக மருந்தகம் துவக்கப்படவில்லை.

Poultry Development

* 505 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any new scheme for Poultry Development has been introduced in Chingleput District; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள படப்பை, சித்தலப்பாக்கம், பஞ்சாயத்து ஒன்றியங்களில், கோழி வளர்ப்போர் சங்கம் அமைத்து வர்த்தக வங்கிகள்மூலம் அவர்களுக்கு உதவியளிக்கும் திட்டம் ஒன்றினை அரசு இவ்வருடம் செயல்படுத்த ஒப்பளிப்பு வழங்கியுள்ளது படப்பையில் கிராம வளர்ச்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டு, அங்கு கோழி வளர்ப்போருக்கு மானிய உதவியோடு கோழிகள் விற்கப்பட்டுள்ளது.

[1971 டிசம்பர் 17

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தை எடுத்துக் கொண்டால், தேவைக்கு ஏற்ற அளவில் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தேவைக்கு ஏற்ற அளவில் முட்டை உற்பத்தி இல்லாமல் குறைந்திருக்கிறது. தேவைக்கு ஏற்ற அளவில் உற்பத்தி செய்யத் திட்டம் வகுத்து, கோழிகளை வளர்க்க அரசாங்கம் முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அரசாங்கம் அண்மையில் தீவிரக் கவனம் செலுத்திவருகிறது இந்தத் துறையில், என்பது உண்மை. அதன் காரணமாக, பல்வேறு மாவட்டங்களில் கிராமப் பகுதிகளிலும் கோழி வளர்ப்புத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும், 50 கோழிகள் வளர்க்கும் ஐந்து பேர்களுக்கு, எட்டிலிருந்து, 12 வாரம் வரை உள்ள பெட்டைக் குஞ்சுகளும், சேவலும், ஒவ்வொருவருக்கும் ரூ. 2 அளவில் ஆதரவுத் தொகையாக வழங்கப்படுகிறது. பஞ்சாயத்து ஒன்றிப்பு மானியத்திலிருந்து 50 கோழி வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும், அதே முறையில் ரூ. 10-க்கு விற்கப்படுகிறது. அதற்கும் மேல் 300 கோழி வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் 5 நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 100 என்றும், பஞ்சாயத்து ஒன்றிப்பு மானியத்திலிருந்து வழங்கப்படுகிறது. இப்படிச் சில திட்டங்கள் 'பாக்யார்ட் பௌல்ட்ரி' என்ற அளவில் கோழி வளர்ப்பைப் பெருக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பொது மக்கள் இவற்றிற்கு ஆர்வம் காட்டினால் ஓரளவு வளர்ச்சி காணமுடியும்.

* 506 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether it is a fact that the poultry market in this State is being monopolised by supply from Kerala State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இம்மாநிலத்தில் உற்பத்தியாகும் முட்டைகள் இம்மாநிலத்தின் தேவைக்கும் மிகக் குறைவாகவே உள்ளது. இத்தேவையை நிறைவேற்ற வெளிமாநிலங்களிலிருந்து வரும் முட்டைகளில், 97.3% கேரள மாநிலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திலிருந்து வரும் முட்டைகள் தரமின்றி, கெட்டுவிட்ட முட்டைகளையும் ஏற்றுமதி செய்கிறார்கள் என்கிற புகார் வருகிறதே. அதைப்பற்றிச் சர்க்கார் நடவடிக்கை எடுத்து ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இதைப்பற்றிப் புகார் எனக்கு இதுவரையில் கிடைக்கவில்லை. கூடுமான வரையில் அந்த அந்தத் துறையில் உள்ளவர்கள் முறையாக நடக்கிறது என்றுதான் தெரிவித்திருக்கிறார்கள். சில நேரங்களில் கிராமப் பகுதிகளிலிருந்து முட்டைகளை வாங்கி அனுப்பும்போது, வழியில் அவை கெட்டிருக்கலாம். திட்டவட்டமாகப் புகார் ஏதாவது இருந்து, தெரிவித்தால், அதைப்பற்றி அரசு ஆராய்ந்து ஆவன செய்யும்.

1971 டிசம்பர் 17]

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய நாட்டில் உள்ள 'ஹைப்ரிட்' கோழிகள் ஆண்டு ஒன்றுக்கு 220 முட்டைகள்தான் கொடுக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் இப்பொழுது அமெரிக்காவில் புதிய கோழி ரகத்தைக் கண்டுபிடித்து, அது ஆண்டொன்றுக்கு 300 முட்டைகள் வரை கொடுக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட புதிய ரகக் கோழிகளைத் தமிழ்நாட்டில் அரசாங்கமே வாங்கிப் பொது மக்களுக்குக் கொடுக்கத் திட்டமிடுவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தக் கோழி தரம் உயர்ந்த கோழி என்பதெல்லாம் அந்த அந்த அரசாங்கத்தின் ரகஸ்யமாக வைக்கப்பட்டு, ரகஸ்யத் திட்டத்தில் சேர்ந்ததாக இருக்கிறது. இப்பொழுது நம் நாட்டில் இருக்கும் 'ஹை லைன்ஸ்' கூட எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இல்லை. இறக்குமதி செய்ய வேண்டியதாக இருக்கிறது. உயர்ந்த ரகமான முட்டைகளை இடும் கோழிகளை ஒரு சில கம்பெனிகள் வைத்துக் கொண்டு, குஞ்சுகளைத் தயாரித்து, விற்கிறார்கள். இந்தக் குஞ்சுகள் ஒரு முறை வளர்ந்துவிட்டால், பிறகு வருபவைகளுக்கு அதே தகுதி இருப்பதில்லை. அவைகளில் 'வெஜிடேரியன் எக்ஸ' என்றும், 'டேபிள் எக்ஸ்' என்றும் அந்த முட்டைகள் விற்கப்படுகின்றன. இவை மறுபடியும் இனவிருத்திக்குப் பயன்படுவதில்லை.

திரு. கே. ஆர். கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரையில் ஒரு லட்ச ரூபாயில் கோழி வளர்ப்புக்கு என்று கட்டடம் கட்டி, இப்பொழுது மூடப்பட்டிருக்கிறது. அதை மறுபடியும் திறக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்படிப் பல மூடப்பட்டிருக்கின்றன. திறக்கப்பட வாய்ப்பும் வசதியும் வேண்டும்.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, வெஜிடேரியன் முட்டைக்கும், நான்-வெஜிடேரியன் முட்டைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, வெஜிடேரியன் முட்டை என்பது, குஞ்சாக இருந்து வளர்ந்து, சேவலோடு சேராமல் பெட்டையிலிருந்து கிடைப்பது. சேவலோடு சேராமல் முட்டையிடுவது. மற்றொன்று சேவலோடு சேர்ந்து, கோழி இடும் முட்டை. குஞ்சு பிறக்க கோழி இருக்க வேண்டும், அல்லது விஞ்ஞான சக்தி இருக்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நம்முடைய நாட்டில் தேவையான முட்டைகள் இல்லாத காரணத்தால் கேரளத்திலிருந்து முட்டைகள் வரவழைக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். சேலம் போன்ற மாவட்டங்களிலிருந்து நிறைய முட்டைகள் உற்பத்தியாகி, மார்க்கெட்டில் விற்பனை செய்ய முடியாமல் இருக்கிறது. இதை ஊக்குவிக்கும் வகையில் இனிமேலாவது மற்ற மாநிலங்களிலிருந்து முட்டை இறக்குமதி செய்யப்படுவதை அரசாங்கம் தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, சேலம் மாவட்டத்திலிருந்து அதிகமாக முட்டைகள் வருவதாகக் குறிப்பிட்டார்கள். அங்கிருந்து நாள் ஒன்றுக்கு 1,500 அல்லது 2,000 முட்டைகள் வந்துகொண்டிருக்கின்றன.

அதேபோல் நாமக்கல், ஈரோடு போன்ற இடங்களிலிருந்தும் வந்துகொண்டிருக்கின்றன. ஒரு வருடத்திற்கு என்று கணக்குப் பார்க்கும்போது தொகைப் பெரிதாகத்தான் இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு கேரளத்திலிருந்து வரும் முட்டைகளைத் தடை செய்ய முடியாது. ஆனால் இங்கு கிடைக்கக்கூடிய முட்டைகளுக்கு நல்ல மார்க்கெட்டிங் ஃபெசிலிட்டி ஏற்படுத்த ஆவன செய்யலாம்.

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது பல கோழிப்பண்ணைகளை மூடிவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். அப்படி மூடுவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் கோழிப்பண்ணைகளையும் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்க வேண்டும் என்பது இயலாது. தொடர்ந்து நடத்தி வந்தால், மேலும் அது நஷ்டத்தைத்தான் சம்பாதித்துக்கொண்டிருக்கும். இவையெல்லாம் கருத்தில் கொள்ளப்பட்டுத்தான், அப்போது இருந்த அமைச்சரவர்கள் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருந்தக் கோழிப் பண்ணைகளை மூடிவிட உத்திரவிட்டார்கள். அந்த முடிவுதான் நல்லது என்றும் தீர்மானித்தார்கள். மீண்டும் வருமானக் கணக்கைக் காட்டுவார்களானால், மூடப்பட்டக் கோழிப் பண்ணைகளைத் திறப்பது பற்றி யோசிக்கலாம்.

(பல உறுப்பினர்கள் துணைக் கேள்வி போட கை தூக்கினார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பின்ன, கோழி முட்டைக்குள் இவ்வளவு கேள்விகளா ?

நன்கொடைகள் பெறும் கல்லூரிகள்

*494 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகள் நன்கொடைகள் வாங்குவதைத் தடைசெய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியார் கல்லூரிகளில் முறைகேடாகவும் கட்டாயமாகவும் நன்கொடை பெறுவதைத் தடுப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சில தனியார் கல்லூரிகளில் கட்டாயமாக நன்கொடைகள் என்ற பெயரால் மாணவர்களிடம் பணம் வசூலிக்கப்படுகிறதே. அதைத் தடுக்க அரசாங்கம் அந்தக் கல்லூரிகள்மீது நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கட்டாயமாக நன்கொடைகள் வாங்குகிறார்கள் என்று அரசாங்கத்திற்கு ஏராளமான புகார்கள் வந்திருக்கின்றன. ஆனால் சம்பந்தப்பட்ட கல்லூரிகளைக் கேட்டால், 'நாங்கள் கட்டாயமாக நன்கொடை வசூலிக்கவில்லை ; அவர்களாகவே கொடுக்கிறார்கள் ; நாங்கள் பெற்றுக்கொள்கிறோம்' என்று சொல்கிறார்கள். எனவே இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதில் சிலபல சங்கடங்கள் இருக்கின்றன. அதை எப்படித் தடை செய்வது என்பதுபற்றிப் பல்கலைக்கழகத்தோடு சேர்ந்து,

ஆராய்ந்து முடிவு செய்யவேண்டும். வற்புறுத்திப் பணம் வாங்கப்படுவது கட்டாயமாகத் தடை செய்யப்பட வேண்டும். அதற்கு எந்த முறையைக் கையாளலாம் என்பதில் அரசு தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, இதுபோன்ற கல்லூரிகள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்கப்படுகின்ற நேரங்களில் எல்லாம் அந்த கல்லூரிகள் உட்பட்ட பல்கலைக்கழகம் தன் இச்சையாக இயங்கக்கூடிய அமைப்பு என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் பல்கலைக் கழகத்திற்கு நாம் கொடுக்கின்ற மானியத்தை நிறுத்திவிட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதையெல்லாம் ஒரு சரியான வரைமுறையினை வகுத்துக்கொண்டுதான் தடை செய்ய முடியும். எனவே தான் பல்கலைக்கழகத்தோடு கலந்து, சட்ட திட்டங்களை எந்த அளவுக்கு மாற்றினால் கட்டாய நன்கொடையைத் தடுக்கமுடியும் என்று அரசு யோசனை செய்து வருகிறது. இப்போது திடீரென்று நாம் மானியத்தை நிறுத்தி விட்டால் அவர்கள் கோர்ட்டிலே வழக்குப் போடுவார்கள். இப்போது இருக்கின்ற அமைப்புப்படி கோர்ட்டுக்குப் போனால் அவர்கள் பக்கம்தான் வெற்றி இருக்கும். அதற்காகத்தான் தக்க வகையிலே சட்டதிட்டங்களை மாற்றி அமைத்து, அதன்பின் பல்கலைக் கழகத்தோடு சேர்ந்து, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், அடுத்த ஆண்டிலாவது கல்லூரிகள் திறக்கப்படும்போது இவ்வாறு நன்கொடைகள் வாங்கக்கூடாதென்று அரசாங்கம் பல்கலைக் கழகத்திற்குச் சுற்றுக்குறிப்பு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வற்புறுத்தி பணம் வாங்கக்கூடாதென்று ஏற்கெனவே அரசு சுற்றறிக்கை எல்லாம் அனுப்பி இருக்கிறது. கல்லூரியை நடத்துகிறவர்கள், 'நாங்கள் வற்புறுத்திப் பணம் வாங்கவில்லை ; அவர்களே வந்து கொடுக்கிறார்கள் ; நன்கொடைக்கான ரசீதும் வைத்திருக்கிறோம்' என்று அந்த ரசீதையும் காட்டுகிறார்கள். அதனால்தான் இதிலே அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

திரு. எம். கந்தசாமி : தலைவரவர்களே, கல்லூரிக்கு நன்கொடைகள் கொடுப்பதைத் தடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். பல கல்லூரிகளில் பல நல்ல காரியங்களுக்காக—கல்லூரி விடுதிப் பராமரிப்பு, மாணவர்களுக்குச் சில வசதிகள், அறப்பணிகள், தர்மகாரியங்கள்—நிதி திரட்டுகிறார்கள். அதற்கு மாணவர்களும், பெரியோர்களும் தாங்களாகவே நன்கொடைகள் கொடுக்கிறார்கள். அதை ஏன் தடுக்கவேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொதுப்பணிகளுக்காக, தர்மகாரியங்களுக்காக, மற்றும் பல நற்பணிகளுக்காக நிதி வசூலிப்பதைப்பற்றியோ, நன்கொடைகள் கொடுப்பதைப்பற்றியோ தடை செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை மாணவர்களைச் சேர்க்கும்போது அல்லது மாணவர்கள் கிடைத்த இடத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்குக் கட்டாயமாக நன்கொடை என்ற பெயரால் பணம் வசூலிக்கிறார்கள். அப்படி வசூலிப்பதாகப் புகார்கள் வருகின்றன. அதைத் தடுப்பதற்கு என்ன வழி என்றுதான் யோசனை செய்துகொண்டிருக்கிறோம். நற்பணிகளுக்கு நன்கொடைகள் வசூலிப்பதுபற்றி முடிவு செய்ய,

வசூலிக்க சிலபல கமிட்டிகள் இருக்கின்றன. அவை, மக்கள் மனமுவந்து கொடுக்கும் பொருள்களை—பணத்தைப் பெற்று நல்ல காரியங்களுக்குச் செலவு செய்கின்றன. உதாரணமாகப் பள்ளிச் சீரமைப்பு குழு ஒன்று இயங்கி வருகிறது. அது அவ்வப்போது மாநாடுகளைக் கூட்டி நிதி வசூலிக்கிறது. பத்து ஆண்டுகளில் கிட்டத்தட்ட 14 கோடி ரூபாய் சேர்த்திருப்பதாகத் தெரிகிறது. அதைப்பற்றி யாரும் குறை சொல்லவில்லை. கட்டாயமாகப் பணம் கொடுத்தால்தான் இடம் கொடுப்போம் என்று மாணவர்கள் சேருகின்றபோது சொல்வதாகப் புகார்கள் வருகின்றன. இப்படிப்பட்ட புகார்களை எப்படித் தடுப்பது என்றுதான் அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. பல்கலைக்கழகத்தோடு சேர்ந்து இதற்கு முடிவு கட்டவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த விரிவான பதிலுக்குப் பின்னால் துணைக் கேள்விகளுக்கு இனி இடமில்லை. அப்படித் துணைக் கேள்விகள் கேட்டாலும் இந்தப் பதிலுக்குள்தான் அடங்கும். இந்தப் பதிலுக்குள் வராத கேள்வியாக இருந்தால், மூலக்கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் இருக்காது.

தனியார் கல்லூரிகள்.

* 495 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் நடத்தும் கல்லூரிகளை அரசு ஏற்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியார் கல்லூரிகளை ஏற்று நடத்தும் உத்தேசம் அரசுக்கு இல்லை

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தனியார் சிலர் கல்லூரிகளை வியாபார நோக்கோடு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மாணவர்களிடமிருந்து கட்டாயமாகப் பணம் வசூல் செய்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுப்பது கிடையாது . ஆகவே கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தையாவது யூனிவர்சிட்டியிலிருந்து நேரடியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் வகைசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்லூரிகள் எப்படி இயங்கவேண்டும் என்று விதிமுறைகளை ஏற்படுத்துவதோ ஒழுங்குபடுத்துவதோ பல்கலைக் கழகத்தைச் சார்ந்தது. அதில் அரசாங்கம் தலையிட முடியாது. அரசாங்கம் வேண்டுமானால் அம்மாதிரிக் கல்லூரிகளுக்கு அங்கீகாரத்தை மறுக்கலாம்; மானியத்தை நிறுத்தலாம். அப்படிச் செய்வதனால் மாணவர்களும், அந்தக் கல்லூரியிலே பணியாற்றுபவர்களும் கஷ்டப்படுவார்கள். கல்லூரிகளை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்குச் சட்டத்தில் இடமில்லை. அதற்குச் சட்டத்தில் வகை ஏற்பட்டால் அப்போது இதுபற்றி யோசிக்கலாம். எல்லாக் கல்லூரிகளுமே மோசமாக நடைபெறுகின்றன என்று சொல்லமுடியாது. சிலபல தனியார் கல்லூரிகள் நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றன எல்லாக் கல்லூரிகளையும் அரசாங்கம் ஏற்பது என்பதும் இயலாது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, சில தனியார் கல்லூரிகளில் ஒரு மாணவரிடமிருந்து 500 ரூபாய் ஆயிரம் ரூபாய் என்று கட்டாயமாக வசூலிக்

காட்டிலும் அமைச்சரவர்களுக்கு நல்ல அனுபவம் உண்டு என்பது எனக்குத் தெரியும். எனவே அமைச்சரவர்கள் இதுபற்றித் தெரியாது என்று சொல்ல முடியாது. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் குறிப்பாகக் கேள்வி மட்டும் தான் கேட்கலாம். கேள்வி நேரத்தில் பதில் சொல்வது அமைச்சர்களுடைய வேலை. கேள்விக்குப் பதில் சொல்வதுபோல் உறுப்பினரின் கேள்வி இருக்கிறது. அதனால் இக் கேள்வி மறுக்கப்படுகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சென்னை நகரிலுள்ள ஒரு மகளிர் கல்லூரியில், மாணவிகளிடமிருந்து கட்டாயமாகப் பணம் வசூல் செய்ததாகப் புகார் வந்ததாகவும், அரசு அதன் மீது விசாரணை நடத்தி, மாணவிகளிடம் வசூலித்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கச் சொன்னதாகவும், அவ்வாறு கொடுக்காததால் அந்தக் கல்லூரிக்குக் கொடுக்கக்கூடிய மானியத்தை நிறுத்தியிருப்பதாகவும் செய்தித் தாள்களில் செய்தி வந்தது. இப்போது அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் கல்லூரியிலிருந்து கட்டாயமாகப் பணம் வசூல் செய்யப்பட்ட மாணவிகளின் பட்டியல் கேட்கப்பட்டது. அவர்கள் மாணவிகளின் பட்டியலை அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கம் அந்தக் கல்லூரிக்குக் கொடுக்கும் மானியத்திலிருந்து மாணவிகளுக்கு நேரடியாகப் பணத்தைக் கொடுப்பது பற்றி முடிவு செய்கிறது. மேற்கொண்டு பணம் வசூலிக்கக் கூடாதென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் செய்தித் தாள்களில் வந்த செய்திகளை வைத்துக் கொண்டு, கேள்வி கேட்கக் கூடாது. அதற்குப் பதில் சொல்வதும், சொல்லாததும் அமைச்சர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, சில தனியார் கல்லூரிகள் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன. அப்படிப்பட்டக் கல்லூரிகளை, மேலும் ஊக்குவிக்கும் வகையில் அதிகமாக மானியம் வழங்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இம்மாதிரியான காரியங்களைப் பற்றி எல்லாம் பல்கலைக் கழகத்தோடு கலந்து தான் முடிவு செய்ய முடியும்.

திரு. சொ. காவேரிமணியம் : தனியார் நடத்துகிற கல்லூரியில் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் மாணவர்கள் சேர்த்துக்கொள்ள மறுக்கப்படுகிறார்கள். பொது மக்களுடைய பிரதிநிதிகள் சென்றாலும் சரியான முறையில் நடத்துவதில்லை. அவைகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ள முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு ஆண்டுகளாக கிறிஸ்தவ அற நிலையங்கள், இஸ்லாமிய அறநிலையங்கள், இந்து அறநிலையங்கள் ஆகியவை சிறப்பாக கல்லூரிகளை நடத்தி வருகின்றன. ஆனால் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளாது புறக்கணிக்கப்படுகிறார்கள் என்கிற திட்டவட்டமான புகார் இருந்தால் நடவடிக்கை எடுத்துக்

களிடத்தில் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதாக கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அதுபோன்று நடக்காமல் இருக்க முயற்சி எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : இப்படி தனியார் கல்லூரிகள், ஆசிரியர்கள் முழுமையாக பாதிக்கப்படாதிருக்க காம்ப்ரிஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவர அரசாங்கம் முன்வர இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தனியார் கல்லூரிகளை ஒழுங்குபடுத்த சில விதிகளை அமைக்க உத்தேசித்திருப்பதாகச் சொன்னார்கள். தனியார் கல்லூரி ஹாஸ்டல்களில் கட்டண பீஸ் மாதம் 20 ரூபாய் என்று இருக்கிறதே, அதேமாதிரி உணவுக் கட்டணமும் அதிகமாக இருக்கிறதே, இதை எல்லாம் ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கல்வி மானியத்தின் மீது இவற்றை எல்லாம் பேசலாம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிக்குக் கல்லூரி இந்தக் கட்டணம் வேறுபட்டிருக்கிறது. இதில் நியாயமான முறையில் அரசாங்கம் எப்படித் தலையிட முடியும்? பொதுவாக சிலபல கட்டுப்பாடுகளை, வரையறைகளை ஏற்படுத்தத்தான் அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டுவருகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the fact that 90 per cent of the expenses are really met by the Government and also in view of the fact that there is a lot of mismanagement in these private institutions, will the Government seriously think of bringing in legislation to take over all the private colleges and run them?

MR. DEPUTY SPEAKER : That is the main question. The hon. Member is repeating the main question.

THIRU K. M. SUBRAMANIAM : Because of this..............

MR. DEPUTY SPAKER : Because of what?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மொத்தமுள்ள கல்லூரிகளில் 124 கல்லூரிகள் தனியார் கல்லூரிகளாக இருக்கின்றன. அந்த அந்தக் கல்லூரிகள் எவ்வளவு நிதி வசூல் செய்து போடுகிறதோ அந்த அளவுக்கு நாம் மாச்சிங் கிராண்டு என்று 85% கொடுக்கிறோம். எதிராஜ் கல்லூரியை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 35 லட்சம் பொறுமான சொத்துக்களை அதற்கு விட்டிருக்கிறார்கள். தனியார் கல்லூரிகள் ஒழுங்காக நடைபெறுகின்றன என்றால் நமக்கு ஆட்சேபணை இல்லை. தவறு நடக்கிற இடங்களில் தான் கண்காணிப்பாக இருந்து தவறுகளுக்கு இடமளிக்காது செய்ய வேண்டியிருக்கிறது.

புதுசட்டக் கல்லூரி

* 496 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரைப் பல்கலைக் கழகத்தோடு இணையும் சட்டக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கணபதி : சட்டக் கல்லூரி ஒன்றை மதுரைப் பகுதியில் ஏற்படுத்திவிட்டால் அங்குள்ளவர்கள் இங்கே வந்து படிக்கிற இடையூறு அகற்றப்படும் என்பதைக் கருதியாவது மீண்டும் அரசு இதனைப் பரிசீலனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரையில் சட்டக் கல்லூரி ஏற்படுத்துவது பற்றி இரண்டு மூன்று முறை பரிசீலிக்கப்பட்டது. 1970-71-இல் பரிசீலிக்கப்பட்டு நிதி காரணமாக கைவிடப்பட்டது. பிறகும் அதுபற்றி பரிசீலனை வந்து கைவிடப்பட்டது. இடையே சட்டக் கல்லூரி மாணவர்கள் 200 பேர்கள் தூதுக் குழுவாக வந்து இந்த ஒரு கல்லூரியில் படித்து வெளிவருகிறவர்களுக்கே வேலை கிடைக்காமல் இருப்பதனால் மற்றொன்றை ஏற்படுத்த வேண்டாம் என்று கோரினார்கள். அப்படியே மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்பட்டிருப்பதால் அங்கே ஒரு சட்டக் கல்லூரி ஏற்பட்டாக வேண்டும் என்கிற நிலை வந்தாலும் கூட சென்னை சட்டக் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அங்கே ஏற்படுத்த வேண்டும் என்பதும் பரிசீலிக்கப்பட்டது. இந்த ஆண்டு அங்கே சட்டக் கல்லூரி ஏற்படுத்துவதுபற்றிய செயற்குறிப்பு இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த ஆண்டு சட்டக்கல்லூரி அட்மிஷனுக்குத் தேர்வுகுழு ஒன்று வைக்கப்பட்டதே, நெருக்கடி காரணமாகவா அல்லது எந்த அடிப்படையில் தேர்வுக்குழு அமைக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதிகமான அளவுக்கு விண்ணப்பங்கள் வந்த காரணத்தினால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டது.

திரு. க. சுப்பு : சட்டக்கல்லூரி மாணவர்கள் தங்களுக்கு ஒரு புதிய விடுதி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்களே, அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த விடுதிக்கான நிலம் கையகப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நிலம் எடுத்தவுடன் விடுதி கட்ட முயற்சி மேற்கொள்ளப்படும்.

மாவட்டத் தலைநகரங்களில் நூலகங்கள்

* 497 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் பெரிய நூலகம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1971 டிசம்பர் 17

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நூலக ஆணைக்குழுக்கள் செயல்பட்டு வரும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மைய நூலகம் ஒன்று ஏற்கனவே இயங்கி வருகிறது. இதுவே அம்மாவட்டத்திலுள்ள பெரிய நூலகமாகும். எனவே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் பெரிய நூலகம் வேறொன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. இ. எஸ். தியாகராசன் : தற்போதுள்ள மாவட்ட நூலகக் குழுக்களுக்கு மானியத்தை ஓரளவு அதிகப்படுத்திக் கொடுக்க அரசு ஏதேனும் செய்ததா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது 3 பைசா செஸ் என்று இருப்பதை 5 பைசாவாக உயர்த்த வேண்டுமென்று அண்மையில் ஆலோசனைக் குழுவில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த அளவுக்கு அரசாங்கமும் தன்னுடைய ஈட்டுத் தொகையை உயர்த்திக் கொடுக்கும்.

திரு. கா. வேழவேந்தன் : நம்முடைய இந்தியத் துணைக்கண்டத்தில் கல்கத்தாவில்தான் மிகப்பெரிய நூலகம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதுபோன்ற பெரிய நூலகம் ஒன்று சென்னையில் ஏற்பட அரசு அடிப்படை வேலைகளையாவது மேற்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தியாவில் உள்ள 3 முக்கியமான நூலகங்களில் கன்னிமரா நூலகம் ஒன்றாக இருக்கிறது. இந்தியாவின் எந்தப் பகுதியில் நூல் வெளியிட்டாலும் இங்கே ஒரு காப்பி அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று இருக்கிறது. ஆகவே விரிவுபடுத்துவதானால் கன்னிமரா நூலகத்தைத்தான் விரிவுபடுத்த வேண்டும். தனி நூலகம் அமைக்க அவசியம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : மூன்று காசு செஸ்ஸை 5 காசாக உயர்த்த வேண்டிய அவசியம் என்ன ? மூன்று காசாக வசூலிக்கிற நிதியே செலவழிக்கப்படாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அவர்களுக்குக் கொடுக்கிற தொகை போதுமானதாக இல்லை. செஸ் நிதி பலகாலமாக அப்படியே இருக்கிறது. கிளை நூலகங்கள் அதிகமாக வளர்ந்துவிட்டன. நிர்வாகச் செலவுக்கே போதவில்லை. ஆகவே 5 காசாக செஸ் நிதியை உயர்த்தினால் அரசாங்கத்தின் ஈட்டு மானியமும் அதிகமாகும்.

திரு. க. சுப்பு : நூலகங்களில் பத்திரிகை வாங்கிப் போடுவதில் கட்சிப் பாகுபாடு காட்டப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, எல்லாப் பத்திரிகைகளும் வாங்கிப்போட ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபோன்று கட்சிவேறுபாடு காட்டப்படுவதில்லை. சில நூலகங்களில் நூல்களைக் காட்டிலும் அதிகமாக பத்திரிகைகள்தான் வாங்கிப் போடப்படுகின்றன. நிதி அதிகம் இல்லாத இடங்களில் கூட 2, 3 பத்திரிகைகள் வாங்கிப்போடப்படுகின்றன.

1971 டிசம்பர் 17]

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கிற கன்னிமாரா லைப்ரரி அகில இந்திய லைப்ரரிகளில் மூன்றாவதாக இடம் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். கன்னிமரா லைப்ரரியை அதிகப்படியாக விரிவு படுத்தி புத்தகங்கள் எண்ணிக்கையையும், தரத்தையும் உயர்த்தி, உட்கார்ந்து படிப்பவர்களுக்கு வசதி செய்து கொடுக்க அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவ்வப்பொழுது நூலகத்தை வளர்ப்பதற்கு முறைப்படியாக என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமோ, அவற்றைச் செய்து வருகிறோம்.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மிகப் பெரிய மாவட்டமான இராமநாதபுர மாவட்டத்தின் ஒரு பகுதியான சிவகெங்கையில் ஒரு பெரிய நூலகம் இருக்கிறது. மற்றொரு பகுதியான சிவகாசியில் அப்படிப்பட்ட மற்றொரு நூலகத்தை அமைத்தால் பொதுமக்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்கிற காரணத்தினால் இதை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தில்தான் அதிகமான கிளை நூலகங்கள் இருக்கின்றன. மைய நூலகம் ஒரு மாவட்டத்தின் ஒரு இடத்தில்தான் அமையக் கூடும். மற்ற இடங்களில் கிளை நூலகங்களை அப் பகுதிகளில் தேவைக்கேற்ப விரிவு படுத்தலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் நூலகங்களுக்குக் கொடுக்கக் கூடிய மானியத்தை உயர்த்தவேண்டுமென்று சொன்னார்கள். இவ்வளவு நாளாகியும் ஏன் உயர்த்தப்படவில்லை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி அதிகப்படியான முயற்சிகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. மூன்று காசாக இருந்த செஸ்ஸை 5 காசுகளாக உயர்த்தியிருக்கிறோம். அரசாங்கம் கொடுக்கும் மானியமும் 3 காசுலிருந்து 5 காசுகளாக உயர்த்திக் கொடுக்க இருக்கிறோம்.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழுவிற்கு நகர மன்றங்கள் கொடுக்க வேண்டிய பணத்தைக் காலாகாலத்தில் கொடுக்கவில்லை. அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்த நூலகத்திற்காவது அப்படிக் கொடுக்கப்படாமல் இருக்குமானால், அது குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாற்பது நிமிடங்களில் பத்து கேள்விகள்தான் முடிவடைந்திருக்கின்றன. இன்னும் பாக்கி 40 கேள்விகள் இருக்கின்றன. ஆகவே, இனி, துணைக் கேள்விகள் குறைந்த அளவில்தான் அனுமதிக்கப்படும்.

எட்டையபுரத்திலுள்ள பாரதியாரின் வீடு

* 498 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் வாழ்ந்த அவருடைய எட்டையபுரம் வீடு தேசிய நினைவுச் சின்னமாக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பாரதியார் வாழ்ந்த வீட்டைத் தமிழ்நாடு நிலவுடைமைச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மூன்று, நான்கு ஆண்டுகளாக முயற்சி நடந்து வருகிறது. எந்த அளவில் அந்த நடவடிக்கை இருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பாரதியார் வாழ்ந்த வீட்டையே வாங்கலாமா என்று பார்த்தோம். அதில் பல தகராறுகள் ஏற்பட்டன. விலை மிக அதிகமாகச் சொன்னார்கள். பல சங்கடங்கள் உள்ளன. அக்விசிஷன் செய்யலாம் என்று 29—5—1971-ல் 4(1) நோட்டிஃபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் விரிவாக எடுக்கப்படும்.

திரைப்பட அரங்குகள் நடத்த உள்ளாட்சி மன்றங்களுக்கு உரிமங்கள்

* 499 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சி மன்றங்கள் (முனிசிபாலிட்டி) சினிமாக் கொட்டகைகள் நடத்த அனுமதி வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

கல்லூரிகளில் காலி இடங்கள்

* 500 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் இடம் காலியாக இருப்பது குறித்து வானொலி மூலம் விளம்பரம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஒவ்வொரு கல்வியாண்டு தொடக்கத்திலும் அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள இடங்கள் பற்றி மாணவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. அனைத்து இந்திய வானொலி மூலம் இத் தகவலைத் தெரிவிக்க முடியுமா என்பது குறித்து வானொலி நிலைய அதிகாரிகளுடன் கலந்து பரிசீலிக்கப்படும்.

E.S.I. Dispensaries in Madras City

* 507 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state the total number of E.S.I. dispensaries in Madras City as on this date?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: சென்னை நகரிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் 1—11—1971-ல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ஒரு சுற்றியங்கும் மருந்தகம் உட்பட 29 மருந்தகங்கள் இயங்கி வருகின்றன.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, சராசரியாக எத்தனை தொழிலாளர்கள் இதன்மூலம் பயன் அடைகிறார்கள்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

உதவிப் பதிவாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற அலுவலர்கள்

* 508 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இவ்வாண்டு பத்திரப் பதிவுத் துறையில் உதவிப் பதிவாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற அலுவலர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இவ்வாண்டில் 30—10—1971 வரையில் 18 உதவியாளர்கள், இரண்டாம் தர உதவிப் பதிவாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

சிங்காநல்லூருக்கு உதவிப் பதிவாளர் அலுவலகம்

* 509 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூரில் உதவிப் பத்திரத் துறை அலுவலகம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஆம்.

Fishing Boats

*510 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that a large number of motor-launches are to be distributed to the fishermen this year on loan basis; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம். எனினும், தவணைக் கொள்முதல் அடிப்படையில் மீனவர்களுக்கு மீன்பிடி விசைப்படகுகள் வழங்கப்படுகின்றன.

(இ) மீனவர் தொகுதிகளுக்கு மொத்தம் 162 படகுகள் (30 அடி படகுகள் 116; 32 அடி படகுகள் 46) ஒதுக்கப்படும். பர்மா, இலங்கை அகதிகளுக்கும் வேலையிழந்த பொற்கொல்லர்களுக்கும் 5 சதவீதம் ஒதுக்கப்பட்ட பிறகு, சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய ஏழு கடலோர மாவட்டங்களுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் முடிவெடுக்கப்படாத மனுக்களின் எண்ணிக்கையின் விகிதாச்சாரப்படி ஒதுக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட படகுகள், படகு ஒதுக்கப்பட்ட கிராமங்களுக்கும், படகு ஒதுக்கப்படாத கிராமங்களுக்கும், பயிற்சி பெறும் தொகுதியினருக்கும், பொதுத் தொகுதிகளுக்கும் சரிசம விகிதாச்சாரங்களில் மேலும் ஒதுக்கப்படும். வெவ்வேறு தொகுதியினரிடையே படகுகளை ஒதுக்குவது சீட்டுக்குலுக்கிப் போடுவதன் மூலம் முடிவு செய்யப்படும். இந்த ஆண்டு ஒதுக்கப்படும் படகுகளின் மீது 15 சதவீத உதவித் தொகை அனுமதிக்கப்படும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, விசைப் படகுகள் கிடைக்காத பல கடலோர கிராமங்கள் இருக்கின்றன. விசைப்படகுகளைப் பகிர்ந்தளிக்கும் போது, கிடைக்காத கிராமங்களுக்கு—ப்ரையாரிடி—முதலிடம் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அப்படித்தான் தருகிறோம். விசைப்படகுகள் கிடைத்த கிராமங்கள், கிடைக்காத கிராமங்கள், பயிற்சி பெற்ற மீனவர்கள், பயிற்சி பெறாத மீனவர்கள் என்று பிரித்து, கிடைக்காத கிராமங்களுக்கு 25 சதவீதம் என்று ஒதுக்கிவிட்டு, பிறகு சீட்டுக் குலுக்கிப் போட்டு, யாருக்கு விழுகிறதோ அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : As regards these mechanised boats, fishermen say that except Yanmar engine, any other engine gives a lot of trouble to them. Has the Department gone into this matter and arrived at any solution?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, 'யான்மார்' தருவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, விசைப்படகுகள் கோரி வருகின்ற விண்ணப்பங்களை வரிசைப்படியாக வைத்து, வரிசையாகக் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, வரிசைப்படி கொடுக்கப்படவில்லை. சீட்டுக் குலுக்கல் மூலமாகத்தான் தரப்படுகிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, சீட்டுக் குலுக்கலினால் தேவையுள்ளவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடக்கூடிய நிலைமை இருக்கிறது. விசைப்படகு கோரி கோவையம்பாளையத்திலிருந்து சிலர் வந்திருந்தார்கள். ஆகவே, வரிசைப்படியாக வைத்து, விசைப்படகுகளைக் கொடுத்தால் முறையாக இருக்கும், புகார் இல்லாமல் இருக்கும். வரிசைப்படியாகக் கொடுப்பது பற்றி அரசு யோசனை செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அப்போதும் அப்படித்தான் பல புகார்கள் வந்தன. எனவே, அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்குக் கிடைக்கட்டுமே என்பதற்காகத்தான் சீட்டுக் குலுக்கிப் போட்டு, விசைப்படகுகளை வழங்குகிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, 'யான்மார்' படகுகளைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். யான்மார் கொடுக்கப்படுவது நிறுத்தப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி நிறுத்தி வைக்கப்பட்டதற்கான காரணம் என்ன ? மக்கள் எதை விரும்பி வாங்குகிறார்களோ அதைக் கொடுப்பதுதானே நியாயம். மீண்டும் யான்மார் படகு கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, 'யான்மார் இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. 'யான் மார்' படகு ஜப்பான் கொலாபரேஷனுடன் எண்ணூரில் கட்டலாமா என்கிற யோசனை நீண்டகாலத்திற்கு முன்னால் இருந்து மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் கிடைக்காததால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் நம்முடைய அரசு அதுபற்றி முயற்சி எடுத்து வருகிறது. தற்போது யான்மார் படகு இறக்குமதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

* 511 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், நாகையில் உள்ள மீன்பிடி விசைப்படகுக் கட்டும் நிலையத்தை விரிவுபடுத்தும் சொற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

தருமபுரி மாவட்ட அரிசன கூட்டுறவு பேருந்து போக்குவரத்து நிறுவனம்

* 512 வினா—**டாக்டர் ச. அ. சின்னராசு :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்ட அரிசன கூட்டுறவு பஸ் போக்குவரத்து நிறுவனத்திடமிருந்து, கடன் கோரி அரசுக்கு மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) இல்லை. ஆனால் தருமபுரி மாவட்ட அரிசன கூட்டுறவு பஸ் போக்குவரத்து நிறுவனத்திற்காக கீழ்க்கண்ட உதவிகள் கோரி ஒரு கோரிக்கை மாநில கூட்டுறவு பதிவாளரிடமிருந்து, 7—3—1971-ல் அரசுக்கு அந்தது :

(1) மூன்று பேருந்துகள் வாங்குவதற்காக நீண்டகால வட்டியுடன் கூடிய கடன் ரூ. 2,00,000.

(2) கருவிகள் வாங்குவதற்காகவும், தொழிற்கூடம் கட்டுவதற்காகவும் அரசின் பங்குத் தொகை ரூ. 50,000.

(3) நிறுவனத்தின் செயலாளராகப் பணிபுரிய ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளரின் சேவை (அரசின் செலவில்).

(4) பங்குத் தொகைக்காகவும் நெருக்கடி நிதிக்காகவும் ரூ. 20,000,

இந்த கோரிக்கையைப் பரிசீலனை செய்தபிறகு அரசு கீழ்க்கண்ட நிதி உதவிகளை மட்டும் அளிக்க அண்மையில் ஆணையிட்டுள்ளது :—

(1) மூன்று பேருந்துகள் வாங்குவதற்காக வட்டியுடன் நீண்டகால கடன் ரூ. 1,90,000.

(2) அரசின் பங்குத்தொகை ரூ. 10,000.

(3) நிறுவனத்தின் செயலாளராகப் பணி புரிய அரசுப் பொறுப்பில் ஒரு கூட்டுறவு துணைப் பதிவாளரின் சேவை (ஓராண்டு காலத்திற்கு).

பள்ளிப்பட்டு துணை வட்டத்தில் அரிசனக் குடியிருப்பு

* 513 வினு—திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு துணை வட்டத்தில் உள்ள வெளி அகரம் அரிசனக் குடியிருப்பைச் சேர்ந்த அரிசனங்களுக்கு 20 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு 1962–63-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், கட்டுமான வேலை முடிந்து விட்டதா ? கட்டட வேலை செய்தவர்களுக்குத் தொகை முழுவதும் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு துணை வட்டத்திலே உள்ள வெளி அகரத்திலே கட்டப்பட்ட அரிசனக் காலனிகள் குட்டிச்சுவராக இருந்துகொண்டிருக்கின்றன, அதன் காரணம் என்ன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே 1964-ஆம் ஆண்டிலே இந்தக் கிராமத்தில் 12 வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று தனியார் ஒருவருக்குக் கட்டுவதற்கு ஒப்பந்தங்கள் தரப்பட்டு இருந்தன, ஆனல் அவர் பாதியளவில் கட்டடங்கள் கட்டிவிட்டு பாதியில் நிறுத்தி விட்டுவிட்டார். ஆயிரம் ரூபாய் ஒரு வீட்டுக்கு நல இலாகா மூலமாகத் தரப்படவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டு இறுதியிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. 1966-ஆம் ஆண்டிலே பெய்த பெருமழை, புயலின் காரணமாக பாதியளவில் கட்டப்பட்டிருந்த வீடுகள் இடிந்துவிட்டன. இன்னும் அவற்றைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் எதுவும் செய்யவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, அரிசனக் காலனிகள் கட்டப்பட்டு இடையிலே பராமரிப்பு எதுவும் இல்லாத நிலைமையில் விடப்பட்டுவிடுகின்ற காரணத்தினுல் பாழடைந்து விடுகின்றன, கட்டப்பட்டுக் கொடுத்தாலும் அவைகளைப் பராமரித்தால்தான் அவைகள் நீண்ட காலத்திற்கு நீடித்திருக்கும். எனவே கட்டப்பட்ட வீடுகள் எவை எவை பராமரிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றன என்பதைக் கண்டறிய அரசு ஒரு குழுவை நியமித்து அப்படிப்பட்ட வீடுகளையெல்லாம் பழுதுபார்த்துக் கொடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கே பணம் போதவில்லை : கட்டிய பிறகு அவற்றைப் பராமரிப்பதற்கு அரசிடம் போதுமான பணம் இல்லை. வீடுகள் இலவசமாகக் கட்டிக்கொடுக்கப்பட்டபிறகு அவற்றை அவர்கள்தான் பராமரித்துக்கொள்ள வேண்டும், அதிலே அவர்களுக்கும் பங்கு உண்டு. பழுதுபார்க்கின்ற வேலை அரசாங்கத்திற்கு இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இந்த அரிசனக் காலனிகளில் வீடுகள் கட்டுவதற்கான மொத்தத் தொகையும் கொடுத்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறதே, அப்படிக் கொடுத்து விட்டிருந்தும் அந்த வேலை முழுமை பெறவில்லையே அரசு அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே. பரிசீலனை செய்யலாம்.

Exemption from stamp duties

* 514 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the Government has agreed to exempt the Mortgage deeds executed in favour of L.I.C. from stamp duties; and

(b) if so, the details thereof?

THE HON. THIRU P. U. SHANMUGAM : (a) Exemption from payment of stamp duty has been granted in respect of the mortgage deeds executed by the policy holders in favour of Life Insurance Corporation of India who obtain loans upto Rs. 50,000 under " Own your Home " Scheme.

(b) Exemption has also been granted from tims to time during 1965-66 to 1971-72 in respect of the mortgage deeds executed by the Tamil Nadu Electricity Board whenever it took mortgage loans from the Life Insurance Corporation.

THIRU N. DENNIS : May I know from the Hon. Minister the extent of revenue loss to Government on account of this exemption?

THE HON. THIRU P. U. SHANMUGAM : I do not have the particulars here.

Drinking water facilities in drought areas

* 515 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state?

(a) whether it is a fact that the Government have allotted additional amount for Drinking Water facilities in the drought hit areas in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிராமங்களிலும், சிற்றூர்களிலும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் இல்லாத இடங்களிலும், புதிதாகக் குடிநீர்க் கிணறுகள் தோண்டுவதற்காகப் பல்வேறு மாவட்டங்களுக்கு வருவாய்த் துறையின் 11—10—1971 நாளிட்ட 2997-ஆம் எண் அரசு ஆணையில் கீழ்க்கண்டவாறு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொடர் எண்.	மாவட்டத்தின் பெயர்.	(ரூபாய் லட்சத்தில.)
1.	திருநெல்வேலி	5
2.	இராமநாதபுரம்	5
3.	கோயம்புத்தூர்	5
4.	தென் ஆற்காடு	3
5.	வட ஆறகாடு	3
6.	மதுரை	5
7.	சேலம்	5
8.	தருமபுரி	5
9.	திருச்சிராப்பள்ளி	2
		3

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எந்த அடிப்படையில் தொகையளவு நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதிகள் எவையென்று மாவட்ட ஆட்சித் தலைவர் வருவாய் வாரியத்திற்குச் சிபாரிசு செய்கிறார். வருவாய் வாரியம் அதை ஆராய்ந்து அதை அரசுக்குச் சிபாரிசு செய்கிறது, அதன்மேல் அரசு ஆணை பிறப்பிக்கின்றது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே வறட்சி மிக்க பகுதிகள் பல இருக்கின்றன என்பதை அரசாங்கம் அறியும். அப்படியிருந்தும் மற்ற மாவட்டங்களுக்கு ஒதுக்கியதைக் காட்டிலும் திருச்சி மாவட்டத்திற்குக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறதே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள், மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி, அதையும் ரொம்ப விரிவாகக் கேட்டுக் கொண்டே போனால் எப்படி?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஆகவே திருச்சி மாவட்டத்திற்குக் கூடுதலாகத் தொகையை ஒதுக்கி அரவக்குறிச்சி போன்ற பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இது கடைசியாக ஒதுக்கிய தொகையாகும். கடைசியாக ஒதுக்கிய தொகை 3 லட்சம் என்று சொன்னேன். ஏற்கனவே திருச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை 8.70 லட்சம் ஆகும்.

திரு. த. சோனையா: திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு 5 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொடர்ந்து வறட்சி மாவட்டம் என்று பெயர் பெற்றுவரும் இராமநாதபுரம்

மாவட்டத்திற்கும் மற்றவளமான மாவட்டங்களுக்கும் ஒரே அளவில் ஒதுக்கி இருக்கிறார்கள். வறட்சி மாவட்டமாக இருக்கின்ற இராமநாதபுர மாவட்டத்திற்கு அதிகமான தொகை ஒதுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இப்பொழுது ஒதுக்கியிருப்பது 5 லட்சம், முன்பு ஒதுக்கியது 8 லட்சம், ஆக இராமநாதபுரத்திற்கு மொத்தம் ஒதுக்கியிருப்பது 13 லட்சம் ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. இரத்தினசபாபதி: தலைவர் அவர்களே, வறட்சி நிவாரண நிதியிலிருந்து கிணறுகள் வெட்டுவதற்குத்தான் அந்தத் தொகை பயன்படுத்தப்படுமா? அல்லது குடிநீர் விநியோகத்திற்கும் பயன்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்த நிதியைப் பொறுத்தவரையில் புதிய கிணறுகள், குடிநீர் கிணறுகள் வெட்டுவதற்காகத்தான் பயன்படுத்தப்படுகிறது. ஏற்கனவே இருக்கின்ற கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMI: May I know from the Hon. Minister whether the allotments made for these districts are sufficient for drinking water wells? If not, what are the alternative steps taken by the Government to provide good water facilities in all drought-affected areas?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அவ்வப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செய்யும் சிபாரிசு மூலம் இவை செய்யப்படுகின்றன. கடைசியாக ஒதுக்கிய தொகைகளைத்தான் நான் சொன்னேன். மேற்கொண்டு வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்தால் அரசு பரிசீலிக்கலாம்.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, வறட்சியைப் போக்குவதற்கு என்று புதிய கிணறுகளை தோண்ட வேண்டுமென்றால் 6 மாதம் 1 வருடம் என்று ஆகிறது. எனவே அவற்றை விட்டுவிட்டு இருக்கின்ற கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு அரசு உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். செல்வராஜ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வட ஆற்காடுக்கு 5 லட்சம் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் தொகை குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அப்படி ஒதுக்கினால் நான் என்னுடைய மாவட்டத்திற்கு அதிகமாக எடுத்துக்கொண்டேன் என்று குற்றச்சாட்டுச் சொல்வார்கள், முதலமைச்சர் அவர்கள்தான் இதை ஒதுக்கியிருக்கிறார்கள்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, இருக்கின்ற கிணறுகளை ஆழப்படுத்துவதைவிட, தூரத்திலிருந்து பைப் லைன்மூலமாகத் தண்ணீர் கொண்டு வருவதற்கு வசதி செய்துகொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பைப் லைன் போடுவது என்பது வேறு. புதிதாக கிணறுகளை வெட்டுவதற்குத்தான் இப்பொழுது பயன்படுத்தி வருகிறோம்.

விவசாயிகள் கூலி நிர்ணயச்சட்டம்

* 516 வினா—திரு. ந. சோமசுந்தரம்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கீழ்த் தஞ்சை மாவட்டத்திற்கு நிர்ணயம் செய்துள்ள விவசாய கூலி சட்டத்தை மேல் தஞ்சைக்கும் விரிவுபடுத்துகிற செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ந. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, ஒரே மாவட்டத்தில் வேலையின்தரம் ஒன்றாக இருக்கும்பொழுது கீழ்த்தஞ்சையிலே ஒரு கூலி நிர்ணயம், மேலத்தஞ்சையிலே வேறுவிதம் என்று இல்லாமல் மேல தஞ்சைக்கும் அந்தக் கூலி நிர்ணயத்தை விரிவுபடுத்தினால் அங்குள்ள மக்கள் பயன் பெறுவார்கள் என்பதால் உடனடியாக அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கனம் அங்கத்தினர் குறிப்பிடுவது சரியல்ல. மேலத்தஞ்சைக்கும், கீழத்தஞ்சைக்கும் கூலியிலும், உழவர்கள் நிலையிலும் வித்தியாசம் இருப்பதாக கணபதியா பிள்ளை குழு தெரிவித்திருக்கிறது, அதன்பேரிலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் சிபாரிசின் பேரிலும் தான் அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது. மற்றைய பகுதிகளுக்கும் இதை விஸ்தரிப்பதுபற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. அ. தேவந்திரன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நடவுக் கூலியைச் செயல்படுத்தும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தற்போது இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, மேலத்தஞ்சை மாவட்டத்லே கீழத்தஞ்சையைவிட குறைவாக கூலியிருப்பதால் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படுகிறது. அதிகாரிகள் சொல்லி சமரசம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதை உத்தேசித்து கீழ்த்தஞ்சையைப் போலவே மேலத் தஞ்சையிலும் கூலி நிர்ணயச் சட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, என்னுடைய குறிப்புப்படி இப்பொழுது அங்கே தகராறு இல்லாமல் இருக்கிறது என்றுதான் தெரிகிறது. மேற்கொண்டும் தகராறுகள் இல்லாமல் அமைதியாக இருக்க மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் உதவ வேண்டும்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, நாட்டினுடைய அடிப்படைத் தொழில் உழவுத்தொழில். அந்தத் தொழிலுக்கு மிகக்குறைந்த கூலியிருக்கிறது. எனவே இந்தக் கூலிச் சட்டத்தையாவது தமிழகம் பூராவிற்கும் விஸ்தரிக்க நம் அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தற்சமயம் இல்லை.

Smuggling of wheat

* 517 *Q*.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there is smuggling of wheat from our State to other neighbouring States; and

(*b*) if so, the action taken by this Government to curb the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) 1969-ஆம் ஆண்டு மண்டலங்களுக்கிடையில் கோதுமை—கோதுமைப் பொருட்கள் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ், தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், மைசூர், கேரள மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியாகிய புதுச்சேரி ஆகியவற்றுக்குள் கோதுமையையும், கோதுமைப் பொருட்களையும் அனுப்புவதில் கட்டுப்பாடு எதுவும் இல்லை. எனவே, அவ்வாறு கோதுமையை அனுப்புவது தொடர்பாக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டியதில்லை.

DR. H. V. HANDE: In general will it be possible for this Government to prevent smuggling of foodstuffs like rice from this State to the neighbouring States? Even recently in Pattabiram one Station Master and one Deputy Station Master were arrested. Will it be possible for the Government to give instructions to the Railways people also to see that whenever wagons are loaded, immediately information is given to the Government, so that the Government can immediately intervene and take necessary action. Even with regard to broken rice this took place and two persons, I understand, are kept under suspension May I know whether it is possible for the Government to keep a vigilance and watch over these things and take immediate action?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதுபோன்ற வழக்கு சம்பந்தமாக 4 மாதங்களுக்கு முன்பு நடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் குறிப்பிட்டிருக்கிறேன். அது தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது வெளிமாநிலங்களுக்கு அரிசி அனுப்பக்கூடாது என்ற தடையிருப்பதால் எல்லா இரயில்வே அதிகாரிகளுக்கும் எந்தக் காரணத்தைக்கொண்டும் ரயில்வே வேகன்களில் அரிசியை ஏற்றக்கூடாது என்று தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஏற்றுவதில்லை என்ற தகவலைத் தெரிவித்திருக்கின்றார்கள். எனவே, அப்படிப்பட்ட தகவல் ஏதேனும் கிடைத்தால் அங்கத்தினர் தெரிவிக்கலாம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சதர்ன் பகுதிகளில் கோதுமைப் பொருட்களை அனுப்புவதில் எந்தவிதமான தடையும் இல்லை என்று கூறினார்கள். பஞ்சம் வந்த நேரத்தில் மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்தில்

கோதுமை குறைவாகக் கிடைத்தது. அப்படிப்பட்ட நேரங்களில் குறைவாகக் கொடுக்கப்பட்ட கோதுமையையாவது மற்ற மாநிலங்களுக்குப் போகாமல் இருக்கும்படி கண்காணிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தற்சமயம் அந்த நிலைமை இல்லை.

Textool company at Coimbatore

* 518 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to take over the Textool company in Coimbatore; and,

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) கோயம்புத்தூர், டெக்ஸ்டூல் கம்பெனியை மீண்டும் இயங்கச் செய்யும் பொருட்டு இயக்குநர்கள் வாரிய இசைவுடன் அந்த நிறுவனத்தின் நிர்வாகத்தை அரசு மேற்கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தின் இயக்குநர்கள் வாரியம் அரசின் முதுநிலை அதிகாரி ஒருவரது தலைமையின்கீழ் அரசால் மாற்றியமைக்கப்பட்டது. தமிழ்நாடு 1969-ம் ஆண்டு துயர் தணிப்பு (தனி விதித்துறைகள்) நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இந்த நிறுவனத்தை 13—8—1972 வரை ஒரு துயர்தணிப்பு நிறுவனமாகவும் அரசு அறிவித்துள்ளது. மேலும், இந்நிறுவனம் வங்கிக்கடன்கள் நீங்கலாக ஒரு தரப்பாக உள்ள ஒப்பந்தங்கள், சொத்தின் மீதான ஈட்டுறுதிகள், உடன்படிக்கைகள் ஏனைய ஆவணங்கள் முதலிய யாவும் அவற்றின்கீழ் சேர்ந்து வரும் அல்லது எழுகிற உரிமைகள், சிறப்புரிமைகள், கடமைகள்,பொறுப்புக்க்ள் முதலிய யாவற்றின் செய்திறனையும் அரசு நிறுத்தி வைத்துள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அரசு இந்த நிறுவனத்துக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. அது இப்போது நன்கு செயல்பட்டு ஆதாயத்தில் இயங்கி வருகின்றது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, இதற்கு நிதி உதவி அளித்ததாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இது லோனாகக் கொடுக்கப்பட்டதா அல்லது சப்சிடியாக வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் பேங்க் கியாரண்டி மூலம் பண உதவி செய்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், டெக்ஸ்டூல் கம்பெனி திறந்த பிறகு ஆதாயத்தில் நடக்கின்றது. ஆகவே, ஏற்கனவே தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட பணத்தை மற்ற மில் தொழிலாளர்களுக்கு கோவையிலே கொடுப்பதைப்போன்று கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் பணம் கொடுத்திருக்கிறது. நாம் கியாரண்டி கொடுக்கிறோம். ஒவ்வொரு ஆண்டிலும் நிறுவனத்தின் கணக்கைப்பார்த்து இதுபோன்று திருப்பிக் கொடுக்க வாய்ப்பிருந்தால் தொழிலாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி முடிவு எடுக்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த டெக்ஸ்டூல் கம்பெனியை எவ்வளவு ஆண்டுக்காலமாக மூடிவிட்டார்கள் ? இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் அதை ஏற்று நடத்துகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீண்ட நாட்களாக அந்த நிறுவனம் சரியாக நடைபெறாமல் கொஞ்சங்கொஞ்சமாக வேலையிலிருந்து தொழிலாளர்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று நல்லெண்ணத்தின் அடிப்படையில் இது திறக்கப்பட்டது.

தஞ்சாவூரிலுள்ள சைக்கிள் தொழிற்சாலை

* 519 விஞ—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் ஏற்படுத்தப்பட்ட சைக்கிள் தொழிற்சாலை இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் உற்பத்தியளவென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட சைக்கிள்களின் எண்ணிக்கை பின்வருமாறு—

1968-69 650.

1969-70 . . . இல்லை.

1970-71 78.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, தஞ்சையிலுள்ள சைக்கிள் தொழிற்சாலை லாபத்தில் இயங்குகிறதா அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா ? அதனுடைய விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சைக்கிள் உற்பத்தி அங்கே செய்யப்படவில்லை. சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸ்களை வாங்கி அதை அசெம்பிள் செய்ய பயன்படுத்தினார்கள். இப்போதைக்கு ஏராளமாக தேக்கமிருப்பதால் சைக்கிள் அசெம்பிளிங் தொழிற்சாலைகளையெல்லாம் 'டைவர்சிஃபிகேஷன்' வேறுமுறை உற்பத்தியில் செல்லும்படி நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த தஞ்சாவூர் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் லாபத்திலே ஓடி வருகிறது.

திரு. அ. தேவந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதைப் போன்ற தொழிற்சாலைகளை தஞ்சை மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதியில் அவர்கள் முயற்சியெடுத்துக்கொண்டால் உதவி செய்யப்படும்.

காப்பூண்டி அருகில் சர்க்கரை ஆலை

*520 விஞ—திரு. தொ. ப. சீனிவாசன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, காப்பூண்டி கிராமம் அருகில் தனியார் துறையில் சர்க்கரை ஆலை ஒன்று துவங்க அனுமதி கேட்டு யாரேனும் மனுச் செய்தார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசின் அனுமதி மறுக்கப்பட்டு விட்டது.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, மத்திய அரசின் அனுமதி மறுக்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்தப் பகுதியிலே வாழ்பவர்களில் ஏறத்தாழ 80 சதவீதம், 85 சதவீதம் விவசாயிகள் வாழ்கிறார்கள். அங்கே பயிரிடப்படும் கரும்புகளை வெல்லமாகச் செய்ய அங்கேயே எந்த ஆலைக்கும் போக முடியவில்லை. பக்கத்திலுள்ள கள்ளக்குறிச்சி, ஆம்பூர் ஆலைகளுக்கோ அல்லது வேலூர் ஆலைக்கோ செல்ல வேண்டியிருக்கிறது. எங்கள் தொகுதியிலே உற்பத்தி செய்ய முடியாமலிருக்கிறது. எனவே எங்கள் தொகுதியிலுள்ள விவசாயிகளே உற்பத்தியாக்க அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிலங்களை இதுபோன்ற சர்க்கரை ஆலைக்கு ஒதுக்க வேளாண்மைத்துறை அமைச்சரிடத்தில் கேட்க வேண்டும்.

தோல், கொம்புகளை பயன்படுத்தும் தொழிற்சாலை

* 521வினா—திரு. பெ. செந்திரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தமிழ்நாட்டில் தோல், கொம்பு முதலிய கச்சாப் பொருட்களைப் பயன் படுத்தி ஓர் தொழிற்சாலை அமைக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே தோல் மற்றும் கச்சாப்பொருட்கள் அதிகமாக ராணிப்பேட்டை போன்ற இடங்களில் இருப்பதாலும், தொழில்பேட்டை அமைக்க இடம் இருப்பதாலும் இங்கேயா வது அந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே நம்முடைய அரசாங்கத் தின் சார்பில் வடார்க்காடு மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை இயங்கிக்கொண் டிருக்கிறது. கூட்டுறவு சங்கங்களின் அடிப்படையில் சென்னையிலே இரண்டு தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதுபோன்ற பெரிய தொழிற் சாலையை அமைக்க வேண்டுமென்ற ஒரு முயற்சியை தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளின் உதவியோடு முயற்சியெடுக்க வேண்டிய ஒரு திட்டமாகும்.

THIRU M A. LATHEEF : The largest number of tanneries are found at Vaniambadi. In view of the Minister's reply, may I know at least the possibility and feasibility of expansion of Governmently-run tanneries at Vinnamangalam? Will the Hon. Minister be pleased to state whether it can be expanded, so that it may be useful for the tanners in and around Vinnamangalam, Vaniambadi and Ambur?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தோல்பதனிடும் தொழிற் சாலையை மீண்டும் அரசாங்கத் தரப்பிலே தொடக்க இடம் இல்லை. நாம் தோலைப்பதனிட்டு பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம்.

அதற்குப்பதில் இங்கேயே உற்பத்தி செய்யலாமா என்பதை அரசாங்கம் பரி சீலித்தது. அண்மையிலே பேச்சுவார்த்தையும் நடத்தப்பட்டது. அவர்கள் சொல்வதெல்லாம், இங்கே உற்பத்தி செய்து அந்த நாட்டில் கப்பலிலே இறங்கும் பொழுது அங்கேயுள்ள டிசைன்ஸ் அண்ட் மார்க்கெட்டிங் நேச்சர் மாறிவிடு கிறது, எனவே தோலாகவே தாருங்கள் என்று சொல்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கம் புனராலோசனை செய்து வருகிறது.

கட்டடக் கற்கள் வெட்டி எடுக்க உரிமம்.

* 522 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடு கட்டுவதற்குத் தோண்டி எடுக்கப்படுகின்ற கருங்கல் (குவாரி) க்கு ரெவின்யூ இலாக்காவின் மூலம் வரி வசூலிக்கப்படுகின்றதா ?

(இ) ஆம் என்றால், எந்த அடிப்படையில் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். கட்டட கற்களையும் பிற சிறு கனிப்பொருள்களையும் வெட்டி எடுப்பதற்கு அனுமதியளிப்பதற்கும் அதற்கான உரிமைத்தொகை வசூலிப்பதற்கும் தமிழ்நாடு சிறுகனிப்பொருள் வழங்கும் விதிமுறைகள் 1959 விதி 3-ன்படி வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமத் தொகை தமிழ்நாடு சிறு கனிப்பொருள் வழங்கும் விதிமுறைகள் 1959-ல் பின் இணைப்பு இரண்டின்படி விதிக்கப்படுகிறது. இவ்வுரிமத் தொகை ஒரு வண்டி ஒழுங்கு படுத்தப்படாத கல்லுக்கு 25 பைசா வீதமும், உளியினால் சீராக்கப்பட்ட ஒரு வண்டி கல்லுக்கு 50 பைசா வீதமும் விதிக்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த குவாரியிங் ஸ்டோன்ஸ் விடுவது ஏலத்தில் விடப்படுகிறதா அல்லது அரசாங்கமே நிர்ணயம் செய்து விடப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது புதிதாக இயற்றி இருக்கும் விதிகளின்படி விளம்பரம் செய்யப்பட்டு, யார் யார் மனுதாரர்கள் என்று பார்த்து ஒரு மனுதாரருக்கு மேல் இருக்குமானால் ஆக்ஷனில் விட வேண்டு மென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

செயற்கைப்பட்டு நூல் விநியோகம்

* 523 வினா—திரு. எஸ். காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நெசவாளர்களுக்கு செயற்கைப்பட்டு நூல்களை விநியோகம் செய் யும் முறை மண்டல தனியார் குழுவில் இருந்து வருவதை மாற்றி அரசாங்கம் நேரடியாக நெசவாளர்களுக்கு வழங்கும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) மேற்படி மண்டல கமிட்டி Regional Committee முறையான விநியோகம் செய்யவில்லை என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) &(இ) ஆம்.

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : இப்போது பட்டு நூல் விநியோகம் செய்கிற குழுவை மாற்றி அரசே பொறுப்பேற்றிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்தக் குழுவில் யார் யார் அங்கம் வகித்து வினியோகம் செய்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது வாலண்டரி ஆர்கனைசேஷன். அவர்களாகவே ரீஜினல் கமிட்டி என்று அமைத்து அதன்மூலம் கொடுத்து வந்தார்கள். அதிலே தவறு நடைபெறுகிறது என்ற புகார் வந்தது. அதன் காரணமாக நம்முடைய டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் அவர்களுக்கே பொறுப்பைத் தரவேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருந்தோம். அந்தக் குழுவுக்கு டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸைத் தலைவராகப் போட்டு நடத்திப் பாருங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். இப்போது டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் இதன் தலைவராக இருக்கிறார்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : செயற்கைப் பட்டு விநியோகம் செய்யும் ரீஜினல் கமிட்டியில் தொழிலாளர் பிரதிநிதிகள் இருக்கிறார்களா ? இல்லையென்றால் அதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர் பிரதிநிதிக்கும் இந்த முறைக்கும் சம்பந்தம் இல்லை. யார் யார் உண்மையாகப் பயன்படுத்துகிறார்களோ அவர்களுடைய பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் அதன் தலைவராக இருக்கிறார்.

திரு. இ. எல். தியாகராசன் : கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்குத் தமிழ் நாடு நெசவாளர் சங்கம் மூலமாக இதை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் அந்த முறையைத்தான் கேட்டிருந்தோம். அவர்கள் அதை ஒத்துக் கொள்ளாத காரணத்தால் இந்தக் குழுவில் நம்முடைய டைரக்டர் இருக்கிறார் என்ற காரணத்தால், அவரே கூட்டுறவுத் துறையின் தலைவராகவும் இருக்கிற காரணத்தால் அந்தப் பயன் இயற்கையாகவே ஏற்பட்டுவிடும்.

ஈரோட்டிலுள்ள நூல் பண்படுத்தும் தொழிற்சாலை

* 524 வினா—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் நடைபெறும் நூல் பண்படுத்தும் தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. மா. சுப்பிரமணியன் : யார்ன் பிராசஸிங் சென்டரில் தினமும் எந்த அளவுக்குத் துணிகளைப் பிராசஸிங் செய்கிறார்கள் ? என்னென்ன வகையில் பிராசஸிங் செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாதம் ஒன்றுக்கு 3 லட்சம் மீட்டர் பிராசஸிங் செய்யப்பட்டு வந்ததை 12 லட்சம் அளவுக்கு உயர்த்தலாம் என்பது

பற்றி இந்தத் துறை பரிசீலித்து வருகிறது. இதிலே புதிய ரகங்கள் இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன. என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கே தெரியும்.

திரு. இ. எல். தியாகராசன் : தற்போது இந்தத் தொழிற்சாலை யார் நிர்வாகத்தில் இருக்கிறது ? கடந்த ஆண்டு இதில் பெற்ற லாபம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லாப நஷ்டக் கணக்கு விவரம் இல்லை. கனம் அங்கத்தினர்களுக்கே தெரிந்த செய்தி—இதை நடத்த வேண்டாம், ஏலத்தில் விட்டு விடலாம் என்ற முடிவை அன்றைய நிர்வாகம் அறிவித்தது. அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசாங்கத்தின் பொறுப்புக்கு வந்தவுடன் ஏற்று நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

ஒண்டிப்புத்தூர் அருகே இரயில்வே மேம்பாலம்

* 525 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவையையடுத்த ஒண்டிப்புதூரில், திருச்சி பாதையில் உள்ள இரயில்வே லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

பாசன வசதிகள்

* 526 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், சிந்தலவாடி வடிகால் வாய்க்காலில் இருந்து குழாய் மூலம் தண்ணீர் எடுத்துச்சென்று ஆயக்கட்டில் சேராத நிலங்களுக்கு பம்புசெட்டு மூலம் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு எந்த ஆண்டு முதல் இவ்வாறு பாய்ச்சப்படுகிறது ?

(உ) இவைகளின் பேரில் தீர்வை ஏதேனும் வசூலிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை. சிந்தலவாடி வடிகாலின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு நிலங்கள் கிடையாது, ஆகவே ஆயக்கட்டில் சேராத நிலங்கள் பாசனம் செய்யப்படுகின்றனவா என்ற கேள்வி எழாது.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

* 527 வினா—திரு. அ. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா—பழூர் ஒன்றியப் பகுதியில் நீர்ப்பாசன வசதியளிக்க மருதையாற்றுத் திட்டம் அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டதா ?

திரு. கோவை. செழியன் : இண்டியில் இருக்கும் ஆராய்ச்சி நிலையத்திற்குத் தண்ணீர் அனுப்பினால் இரண்டு, மூன்று வருஷத்திற்குப் பதிலே அனுப்புவ தில்லை. ஒருமுறை நானே நேரில் சென்று கேட்ட பின்னரும் அனுப்பாமல் இருந்ததற்குச் சொல்லும் காரணம் எம்.எல்.ஏ., வந்து கேட்டதால் அனுப்ப வில்லை என்ற முறையில் அந்த அதிகாரி சொல்லியிருக்கிறார். இதனால் பொது மக்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் இந்த முறையை எடுத்துவிட அர சாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : உரியவர்களிடத்தில் கேட்காத காரணத்தால் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை கனம் அங்கத் தினர் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். இதற்கு பொதுச் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் கிடைக்க வேண்டும். இது விவாசயத் துறையின் வரம்புக்கு அப்பாற்பட்டது என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. கோவை செழியன் : இந்தக் கேள்வியை மாற்றி வேறு ஒரு அமைச் சருக்குப் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்குதான் போட்டிருக்கிறது.

உவர் நிலங்கள்.

* 531 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உவர் நிலங்களைப் பயன்தரும் விளை நிலங்களாக மாற்றுவதற்கு, அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் தீட்டியுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) : சட்டமன்றப் பேரவையின் முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : இந்த விவர அறிக்கையில் கோவை, தருமபுரி மாவட்டங்களில்தான் இந்தத் திட்டம் நடைமுறையில் இருப்பதாகக்கூறப் பட்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தை தமிழகம் முழுமைக்கும் பயன் படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழகத்தில் எல்லா இடங்களிலும் உவர் நிலங்கள் இல்லை என்பதை உறுப்பினர் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். எங்கெங்கு உவர் நிலங்கள் இருக்கின்றனவோ அங்குதான் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

* 532 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a Council to study Salinity in soils; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

@ 317-318-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

கோவை வேளாண்மைக் கல்லூரிப் பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஓய்வு கால நிதி

* 533 வினா—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை விவசாயக் கல்லூரியில் கிடங்கு வாட்ச்மேன், பண்ணைத் தொழிலாளர்கள் இவர்களுடைய வேலை நிரந்தரமாக்கப்பட்டபின் ஓய்வு பெறும் காலத்தில் "பென்ஷன்" தர வேண்டுமெனக்கோரி அரசுக்கு 26—6—1971-ல் பண்ணைத் தொழிலாளர் சங்கம் விண்ணப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) மேற்படி கோரிக்கை விரிவாக பரிசீலனைச் செய்யப்பட்டது. ஆனால் ஓய்வுகால நிதி விதிமுறைகளில் அவர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படு வதற்கு வழியில்லை. எனவே அவர்களின் கோரிக்கை நிராகரிப்பட்டது.

திரு. என். மருதாசலம் : விவசாயக் கல்லூரியில் வேலை செய்யக்கூடிய ஊழியர்கள்ஓய்வு பெற்ற காலங்களில் சும்மா போகவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக ஓய்வுச் சம்பளம் கொடுப்பதற்கு அரசாங் கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழ்நாடு வேளாண்மைத்துறையில் பல்வேறு பிரிவுகளில் பல்லாண்டுகளாக பணிபுரிந்து வரும் கிடங்கு காவலர், பயிற்சிபெற்ற, பயிற்சிபெறாத கூலியாட்கள் முதலானோர் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ஊதியம் பெற்று வருகின்றனர். அவர்களின் முழுநேர பணி யாளர்களின் பணி நிரந்தரம் செய்யப்பட்டு, தமிழ்நாடு கடைநிலை ஊழியர் களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அனைத்தும் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு முதல் ஊதியக்குழு பரிந்துரைத்தது. மேற்படி பரிந்துரை இத்துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் அனைவரையும் ஒரேசமயத்தில் நிரந்தரமாகச் செய்யாமல் படிப்படியாக நிரந்தரம் செய்ய உத்தேசிக்கப்பட்டது. அதன்படி, முதற்படியாக அரசு ஆணை எண் 2204, வேளாண்மை, நாள் 15—7—68-ல் வேளாண்மைத்துறையில் பல்வேறு பிரிவு களில் பணிபுரியும் குற்றேவலர்களில் 25 சதவிகிதத்தினர் அதாவது 164 ஊழி யர்கள் மாநில அரசு ஊழியர்களாக்கப்பட்டனர்.

(திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் கையை உயர்த்தினார்கள்)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : இதில் இன்னுமா துணைக் கேள்விகள் இருக்கின்றன ?

திருமதி த. ந. அனந்தநாயகி : ஐந்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றுகிற வர்களின் பணி தேவைப்படுகிறது என்றால் அவர்களை நிரந்தரமாக்குவதற்கு இந்த அரசு ஒரு ஜீ.ஓ. பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதைத்தான் சொன்னேன். ஜீ.ஓ. 2204 மூலம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும், அவர்கள் நிரந்தரமாக்கப் படுவது குறித்து விதிமுறைகள் இன்னும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

Tourist Bungalows

* 534 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether a number of Tourist Bungalows are proposed to be built in this State during 1971–72; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்:

(அ) ஆம்.

(இ) 'தமிழ் நாடு டூரிஸம் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்', 1971-72-ல் கீழ்க்கண்ட இடங்களில் சுற்றுலா மாளிகைகள் கட்ட உத்தேசித்துள்ளது:—

(1) ஊட்டி. (அடிஷனல் டார்மிட்டரி அக்காமடேஷன் இன்-டூரிஸ்ட் பங்களா.)

(2) ஹொகனெக்கல்.

(3) குற்றாலம்.

(4) மகாபலிபுரம்.

(5) ஏர்க்காடில் ஒரு சுற்றுலா மாளிகை.

திரு. என். டென்னிஸ்: எந்த அடிப்படையில் இவைகளைக் கட்டுவதற்கான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சுற்றுலாவிற்கு மக்களைக் கவரத்தக்க இடங்களை தமிழக அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

திரு. கு. காமாட்சி: இத்திட்டத்தில் கல்லணையில் ஒரு சுற்றுலா மாளிகை கட்ட உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதற்கான திட்டங்கள் இருக்கின்றன. அடுத்த ஆண்டு கவனிக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: குற்றாலத்தில் பஸ் ஸ்டாண்டிற்கு மேலே சில கட்டடங்கள் கட்டப்பட்டு பாத் ரூம் தண்ணீர் ரூமிற்கு வருகிறது. இனிமேல் கட்டும் கட்டடங்களில் இப்படிப்பட்ட குறைகள் ஏற்படுவதை நீக்கி ஒழுங்கானமுறையில் கட்டுவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குற்றாலத்தில் இருக்கிற நகரியம் ஆர்.டி.எல்.ஏ. டிப்பார்ட்மென்டின்கீழ் வருகிறது. என் இலாகாவில் இல்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: வட ஆர்க்காடு மாவட்டத்தில் எதுவும் இதில் குறிப்பிடப்படவில்லை. ஆகவே வட் ஆர்க்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட சுற்றுலா மாளிகை ஏற்படுத்த் திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வட ஆற்காடு மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தக்க இடங்கள் தேடப்பட்டுக் கொண்டுவருகின்றன. தேடப்பட்ட பிறகு பரிசீலிக்கப்படும்.

TThiru B. VENKATASWAMI: May I know from the Hon. Minister when Hogenakal tourist bungalow will be completed and what is the estimate for the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஹொகனக்கல டூரிஸ்ட் பங்களா விற்கு தற்போது ரூ. 2½ லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோனையா: தினம் தினம் பல்லாயிரக்கணக்கான மக்கள் ராமேஸ்வரத்திற்குச் செல்கிறார்கள். அதிலும் இந்தியா முழுமையிலுமிருந்து வந்து செல்கிறார்கள். எனவே அந்த இடத்தில் ஒரு சுற்றுலா மாளிகை அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ராமேஸ்வரத்தில் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. அதற்காக ரூ. ஐந்து லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவுண்டர் வகுப்பினர்

* 535 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டர் சமூகத்தினரை பிற்பட்டோர் பிரிவில் சேர்க்கப்பட வேண்டும் என அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) கொங்கு வேளாளக் கவுண்டர் வகுப்பினரிடமிருந்தும், வேளாளக் கவுண்டர் வகுப்பினரிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளன. நாட்டு வேளாளக் கவுண்டர் வகுப்பு என்று அழைக்கப்படுகிற கொங்கு வேளாளக் கவுண்டர் வகுப்பு வேளாளக் கவுண்டர் வகுப்பின் ஒரு பிரிவே ஆகும்.

(இ) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் 'வேளாளக் கவுண்டர்' வகுப்பினைச் சேர்த்துக்கொள்ளலாமென பின்தங்கிய வகுப்பினர் ஆணைக்குழு பரிவுரை செய்யவில்லை, ஆணைக் குழுவின் பரிவுரைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: நமது அரசாங்கம் ஜாதி மத வேறுபாடு இல்லாத அரசாங்கமாகும். இந்த பிற்பட்டோர் பட்டியலில் பல சமூகத்தினர் சேர்க்கப்பட்டு, பெரிய நிலச் சொந்தக்காரர்கள், தொழில் அதிபர்கள் ஆகியவர்களின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகளும், உத்தியோகச் சலுகைகளும் தரப்படுகின்றன. ஆனால் கவுண்டர் சமூகத்தினர், விவசாயத் தொழிலாளர்களாகவும், தொழிற்சாலைத் தொழிலாளர்களாகவும் அதிகப்படியானபேர்கள் இருக்கக்கூடிய இந்த சமுதாயத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்காத காரணத்தினால் அச்சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு மேற்குறிப்பிட்ட சலுகைகள் கிடைப்பதில்லை. எனவே இதைக் கருத்தில்கொண்டு அரசாங்கம் நிர்ணயித்துள்ள பிற்பட்டோர் பட்டியலில் கவுண்டர் சமுதாயத்தையும் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பிற்பட்டோர் பட்டியலில் வேளாளர் கவுண்டர் சமுதாயத்தையும் சேர்க்கவேண்டுமென்று சில விண்ணப்பங்கள் வந்தன. அவற்றைப் பரிசீலிக்கும்போது இப்போது நியமிக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பினர் ஆணைக் குழுவில் சில பரிந்துரைகள் செய்திருக்கிருர்கள். அந்தப் பரிந்துரைகள்படி வேளாளர் சமுதாயத்தில் 60 சதவிகிதம் நிலச்சொந்தக்காரர்களாகவும், அவர்களின் ஆண்டு வருவாய் ஆயிரம் முதல் மூவாயிரம் ரூபாய் வரை உள்ளது என்றும், 30 சதவிகிதம் பயிரிடும் குத்தகைதாரர்கள் என்றும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 முதல் ரூ. 2,000 வரை உள்ளது என்றும், 10 சதவிகிதம்தான் வேளாண்மைத் தொழிலாளர்களாக இருக்கிருர்கள் என்றும் ஆகவே இப்போது அவர்களை அந்தப் பட்டியலில் வைக்கத் தேவையில்லை என்றும் சொல்லியிருக்கிருர்கள். திரு. துரைசாமி அவர்கள் ஜாதி மத வேறுபாடு இல்லாத அரசாகும் இந்த அரசு என்று கேள்வியில் குறிப்பிட்டிருக்கிருர்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையில் இந்த பின்தங்கியோர் நல இலாகாகூட இன்னும் ஒரு பத்தாண்டுகள் வேலைசெய்து எல்லோரையும் ஒரே சமுதாயமாக்கப் பாடுபடுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Death of Engineer in Ennore Thermal Power Station

* 536 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether an Engineer in Ennore Thermal Power Station, died on 13th September 1969 during working hours; and

(*b*) if so, the reasons therefor and the action taken thereon?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) செக்கோஸ்லாவோகியா நாட்டைச் சேர்ந்த பொறியாளர் திரு. ஜோசப் பிராசக் எண்ணூர் அனல் மின்நிலையத்தில் முதுநிலை மேற்பார்வைப் பொறியாளராகப் பணியாற்றி வந்தார். அவர், குளிருட்டு குழாயை பரிசோதனை செய்து கொண்டிருக்கையில், அருகே தற்காலிகமாக பொருத்தப்பட்டிருந்த 240 வோல்ட் மின்குமிழ் விளக்கின் உலோகத்திருகுவாளைப் (Metal Cap Holder) பிடித்தார். அதன்விளைவாக மின்சார அதிர்ச்சிக்கு உள்ளாகி, அதிர்ச்சியுற்ற வேகத்தில் தரைமீது விழுந்தார். அவர் விழுந்த போது அருகிலிருந்த பற்றவைப்புக்கருவிக்குரிய மின் மாற்றியின் கூரான மூலைப்பகுதியில் அவருடைய தலையின் பின்புறம் அடிப்பட்டது. அதன் விளைவாகத் தலையின் பின்புறத்தில் இரத்தக் காயம் ஏற்பட்டு, அப்பொறியாளர் மயக்கமுற்ருர். அவர், மருத்துவ அதிகாரியிடம் விரைந்து கொண்டு செல்லப்பட்டு, அவருக்குச் செயற்கை முறையில் மூச்சுவிடுவதற்கான சிகிச்சையும், வேறு பிற மருந்துவ சிகிச்சைகளும் அளிக்கப்பட்டது. ஆனுல் அவருக்கு நினைவு திரும்பவில்லை. உடனடியாக அவர் ஸ்டான்லி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனுல் அங்கு அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மின்சார அதிர்ச்சி தலையில் ஏற்பட்ட காயம் இவற்றின் ஒட்டுமொத்த விளைவால் அவர் இறந்தார்.

DR. H. V. HANDE : May I know that one of the main reasons for this particular accident was the manner in which certain equipments in the Ennore Thermal Scheme was kept and whether it was a fact that they were not properly kept in a proper

manner and that there was some short-circuit as a result of which certain important cadgets and items in the Ennore Thermal Station got spoiled? May I know the loss sustained by the Government apart from the human loss?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அங்கே கண்டென்சர் பொருத்தப்பட்டிருக்கிறது, மின்சார இணைப்பு வெளிச்சத்திற்கு. ஆனுல் பெரும்பாலும், பாட்டரி விளக்குகளை வைத்துக்கொண்டே பரிசோதித்து வந்தார்கள். இவர் நிபுணர் என்பதால் இவர்கள் தாளுகவே சோதனை செய்திருக்கிருர்கள். தவறி பக்கத்திலே இருந்த ட்ரான்ஸ்பார்மரின் கூரான பகுதி மண்டையில் அடித்து காயம் ஏற்பட்டு அதனுல் பிற்பாடு இது ஏற்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே,, விசேஷமாக வந்திருந்த செக்கஸ்லோவேகிய நாட்டு எஞ்சினியர் காலமானதற்கு வருத்தம் தெரிவிக்கும் போது, அவருக்கு போதுமான சிகிச்சை அளிக்கப் பட்டதையும் தெரிவித்திருக்கிருர்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, குறைபாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தன மரங்களைக் கொண்டு தொழிற்சாலை

* 537 வினு—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சந்தன மரங்களை அடிப்படையாகக்கொண்டு ஏதேனும் தொழிற்சாலை துவங்குகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) வட ஆற்காடு மாவட்டம் உட்பட நமது மாநிலத்தில் ஒரு ஆண்டில் கிடைக்கும் சுமார் 300 டன் சந்தன மரக்கட்டைகளைக் கொண்டு, பொதுத் துறையில், கோயம்புத்தூர் மாவட்டம், பவானிசாகரில் ஒரு சந்தன எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தலாமா என்பதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் கிடைக்கும் சந்தன மரத்திற்கு கோயம்புத்தூரில் தொழிற்சாலை அமைக்கப் போவதாகச் சொல்கிருர்கள். வடாற்காட்டிலேயே அமைக்க ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ? கோயம்புத்தூரில் அமைக்கவிருக்கும் திட்டத்தின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, முதலிலே எங்காவது ஆரம்பிக்க பரிசீலனை செய்யப்படுகிறது. முடிந்த பிறகு, எந்த இடம் என்பதைப்பற்றி முடிவு செய்யலாம்.

[1971 டிசம்பர் 17

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் கிடைக்கும் சந்தனமரங்களைக் கொண்டு அங்கேயே ஒரு தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்று நீண்டநாளாக கோரிக்கை இருந்து வருவதை அமைச்சரவர்கள் அறிவார்கள். பரிசீலனை செய்யும்போது, வடாற்காட்டில் ஆரம்பிக்கலாமா என்பதையும் யோசிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வடாற்காட்டிலே மட்டுமின்றி, மாநிலத்தில் பல இடங்களில் சந்தன மரம் கிடைக்கிறது. தொழிற்சாலை அமைக்க பவானிசாகரில் வைக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த முடியுமா? அது லாபகரமாக இருக்குமா என்பதையெல்லாம் பரிசீலனை செய்கிறார்கள். பரிசீலனை முடிந்தபிறகு இடத்தை நிச்சயிக்கலாம்.

பேருந்துகளில் அளவுக்கு அதிகமான பயணிகள்

* 538 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு பேருந்துகளிலும், குறிப்பாக தனியார் பேருந்துகளில் ஓவர்-லோடு ஏற்றுவதைத் தடுக்க அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : பேருந்து அனுமதிச் சீட்டுக் கொடுக்கும் முன்பு குறிப்பிட்ட நிபந்தனை விதித்து, அனுமதிக்கப்பெற்ற இருக்கைகளின் அளவுக்கு அதிகமாகப் பயணிகளை பேருந்துகள் ஒவ்வொன்றும் ஏற்றிச் செல்வது தடுக்கப்படுகிறது. அனுமதிச் சீட்டு வைத்திருப்பவர் நிபந்தனைகள் எதையேனும் மீறுவாராயின், 1939-ஆம் மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 60-வது பிரிவின்கீழ், அனுமதிச் சீட்டை ரத்து செய்தோ சிறிது காலம் தள்ளி வைத்தோ வட்டாரப் போக்குவரத்து அதிகாரியால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவ்வாறு அளிக்கப்படும் தண்டனை பேருந்து உரிமையாளர் வரலாற்றுத்தாளில் பதியப்படுகிறது. புதிய அனுமதிச் சீட்டுகள் வழங்கும்போது இதுவும் கருத்தில் கொள்ளப்படும். மேலும், பயணிகளை அதிகமாக ஏற்றிச் செல்லும் பயணித்துணைவர்கள் (கண்டக்டர்கள்) மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நேரிடை பணியாளரால் பெருவாரியான சோதனைகளும் திடீர் சோதனைகளும் செய்யப்படுகின்றன.

திருமதி. த. ந. அனந்தநாயகி : சார், தனியார் துறையில் 'ஓவர் லோடு' இருக்கக் கூடாது என்று சொல்லுகிறோம். ஆனால் அரசாங்கம் விடும் டவுன் பஸ்களில் 'ஓவர் லோடு' எப்பொழுதும் இருக்கிறதே, அதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்டம் எல்லோருக்கும் பொதுவாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், நம்முடைய நாட்டிலே மக்கள் தொகை மிக அதிகமாகி, நகரங்களில் நெரிசல் நிறைந்திருப்பதால், அப்படியிருக்கிறது.

Since every family is now-a-days overloaded, it is very difficult to restrict overloading in buses also.

1971 டிசம்பர் 17]

திரு. எம். சுரேந்திரன் : சார், சட்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்றாலும், அதைத் தளர்த்தப் படவேண்டிய அவசியம் பற்றிச் சொன்னார்கள். அதே போன்று, தமிழ் நாட்டில் பேருந்துகளை தயாரிக்கும் போதும், கோடைகாலத்திற்கு மட்டுமின்றி, மழை காலத்திற்கும் ஏற்றவைகளாகச் செய்ய அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்களின் யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஜீப் பேருந்து பணி

* 539 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மலைப்பகுதிகளுக்கு போக்குவரத்து ஏற்பட தனியார் துறையிலோ அல்லது பொதுத்துறையிலோ "ஜீப் பஸ் சர்வீஸ்" விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களுக்கும், மலைப் பகுதிகளுக்கும் சாதாரண வழித்தடங்கள் இல்லாத காரணத்தால், ஜீப் பஸ் சர்வீஸ் என்கிற சிறிய பஸ்களை விட ஏற்பாடு செய்தால், கிராம மக்களுக்கும், மலைவாசிகளுக்கும் வசதியாக இருக்கும். அந்த வகையில் அரசு அமுல்படுத்த ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சில இடங்களில் அத்தகைய ஜீப் பஸ்கள் விட அனுமதி வழங்கப்பட்டது. அதிலுள்ள கஷ்டம் என்னவென்றால், போதிய ஜீப்கள் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் வருவாயும் கிடைக்காததால், அவ்வளவாக இன்றையதினம் உரிமையாளர்களால் மேற்கொள்ளப்படாத சூழ்நிலை இருக்கிறது.

பழைய பேருந்துகளுக்கு பதில் புது பேருந்துகள்

* 540 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வழித்தட எண். 80, 131, 101 ஆகியவற்றில் ஓடும் மிகப் பழைய வண்டிகளை மாற்றி புது வண்டிகள் ஓட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேருந்து வழித்தட எண்கள் 80, 101, 131 ஆகியவற்றில் ஓடும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் பழைய வண்டிகள் அல்ல. அரசு வரையறுத்துள்ள அடிப்படைக் கோட்பாடுகளை ஒட்டி 1973 மே திங்கள் முதல் 1975 ஏப்ரல் வரை உள்ள கால அளவில்தான் இவை மாற்றப்படவேண்டியவையாகும்.

[1971 டிசம்பர் 17

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்த வழித்தடங்களில் பழைய வண்டிகள் இல்லை என்றாலும், அடிக்கடி வண்டிகள் நின்று போய் விடுவதால், நெசவாளர்கள், விவசாயிகள் முதலியவர்களுக்கு பயன்படாமல், அதிகமாகத் தாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக இந்த 131-வது வழித்தடத்தில் அடிக்கடி வண்டிகள் நின்றுபோகும் சூழ்நிலை இருக்கிறது. அதை அதிகாரி களுக்கும் சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஆகவே, தயவுகூர்ந்து, அடிப்படையில் புதியதாக மாற்ற வழிவகைகளை மேற்கொள்வார்களா என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வண்டிகள் பழையன அல்ல. பராமரிக்க வேண்டியதுதான் முக்கியம். உறுப்பினர்கள் ஒரு தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் பராமரிக்க, நல்ல முறையில் ஊழியர்கள் ஒத்துழைத்தால் இப்படிப் பட்ட சிக்கல்கள் வர அவசியம் ஏற் படாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், எந்த அடிப்படையில் பழைய பஸ்கள் புதுப்பிக்கப்படுகின்றன. இந்த வருஷ மாடல் என்று 5, 6 ஆண்டுக்கு மேற் பட்டது என்றால் அல்லது இத்தனை மைல் மோட்டார் ஓடியிருக்கிறது என்ற அளவிலா என்பதை தெரிவிக்க முடியுமா? பஸ்களை ரீப்ளேஸ் செய்வதற்கான கோட்பாடுகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆம், கோட் பாடுகள் அரசாங்கத்திற்கு இருக்கின்றன. 'லே லண்ட்' வண்டியைப் பொறுத்தவரையில், ஆறு ஆண்டு ஓடியிருக்க வேண்டும், அல்லது 2½ லட்சம் மைல்கள் ஓடியிருக்கவேண்டும். 'பென்ஸ்' வண்டிகளைப் பொறுத்து, 6 ஆண்டுகள் அல்லது 2¼ லட்சம் மைல்கள் ஓடியிருக்கவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, பழைய எஞ்ஜின்களை பழுது பார்க்க தனியார் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்படுகிறதே. அதையெல்லாம் அரசாங்க ஒர்க்ஷாப்பிலேயே செய்யக் கூடாதா? லாபம் வராதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நமக்கு ஒர்க்ஷாப் இல்லாத இடத் தில், வேண்டிய திறன் சக்தி அந்த ஒர்க்ஷாப்பில் இல்லை என்று எங்கு கருது கிறோமோ அத்தகைய இடத்தில், தனியாருக்குக் கொடுக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு வண்டி ஓடவில்லையென்றால், 500 ரூ. நஷ்டம் ஆகிறது. ஒரு வாரம் என்றால், கிட்டத்தட்ட ரூ. 3,500 வரையில் நஷ்டமாகிறது. இதைப் பார்ப் பதா, உடனடியாக ரிபேர் செய்து ஓட்டுவதா என்பதுதான் முக்கிய பிரச்சினை.

மருதமலையில் முருகன் கோயில் அருகே சுற்றுலா மண்டபம்

541 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவை மருதமலையில் உள்ள முருகன் கோயிலை ஒட்டி மக்கள் தங்கு வதற்கு சுற்றுலா மண்டபங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரி சீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசு பரிசீலனையில் இல்லை.

1971 டிசம்பர் 17]

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, மருதமலைக் கோவிலுக்கு கிருத்திகை போன்ற நாட்களில் பக்தர்கள் அதிகமாகப் போகிறார்கள், இரண்டு மூன்று நாட்கள் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் அங்கே தங்க முடியாமல் கோவைக்கு வரவேண்டி இருக்கிறது. கிட்டத்தட்ட 12 மைல்கள் வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த நிலையில் பக்தர்களுக்கு வசதி செய்து கொடுக்க அங்கே விடுதிகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தற்போது கோவிலைச் சுற்றி 13 சத்திரங்கள் இருக்கின்றன. அவற்றில் 6,000 பேர்கள் தங்கலாம். சுமார் ரூ. 60,000 அளவில் திருமண மண்டபம் கட்ட வேலை நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களில் அது முடிவடை யும். மேற்கொண்டு நிலமில்லாததால், பக்கத்தில் உள்ள புறம்போக்கு நிலங் களை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, இந்த மருதமலைக்கோவிலை விரிவாகக் கட்டி நல்ல முறையில் இருக்கும்படி சினிமா புரொட்யூசர் திரு. சின்னப்பா தேவர் அவர்கள் செய்தார்கள் என்று கேள்விப்பட்டேன். அவரிடத்திலே இந்த வேண்டுகோளைவிட்டால், தெய்வ பக்தியின் பெயரால் செய் வார். அதை இந்த அரசாங்கம் செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, செய்யலாம்.

Air cooling plant in Tiruchendur temple

* 542 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether air cooling plant has been fixed at Moolasthanam of the Tiruchendur temple, in Tirunelveli district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(ஆ) குளிர்சாதன அமைப்பு திருச்செந்தூர் கோவிலில் ரூ. 37,700 மதிப்பீட்டில் சுமார் 300 லிருந்து 500 பேர் வரையிலும் நின்று வழிபாடு செய்யக்கூடிய மகாமண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அர்ச்சகர்களுக்கு சம்பள நிர்ணயம்

* 543 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அறநிலையத்துறைக்கு உட்பட்ட கோயில்களில் அர்ச்சகர் பணிபுரிபவர் களுக்கு சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மதுரை ராமேஸ்வரம் போன்ற கோவில்களில் இருக்கின்ற அர்ச்சகர்களுக்கு சென்ற காலத்தில் கொடுக்கப்பட்ட ஊதியங்களே இப்போதும் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த ஊதியத்தை அதிகமாக்கவேண்டும் என்று கோரிக்கைகள் வந்திருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1971 டிசம்பர் 17

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கோவிலில் வருகின்ற வருமானத்தைப் பொருத்துத்தான் அங்கே இருக்கின்ற அர்ச்சகர்களுக்கு ஊதியம் அமைந்திருக்கிறது. குறைந்த வருவாய் உள்ள கோவில்களில் அங்கே வருகின்ற அர்ச்சனைக் கட்டணம், தேங்காய், பழம் ஆகியவற்றில் கூட அர்ச்சகர்கள் பங்கு பெறுகிறார்கள். அதிக வருமானம் உள்ள கோவில்களில் அதிக ஊதியம் தரப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, சில ஏழைக் கோவில்களில் அர்ச்சகர்களாக இருப்பவர்களுக்குக் குறைந்த ஊதியம் தான் வருகின்றது. ஆகையால் அப்படிப்பட்ட கோவில்களில் உள்ள அர்ச்சகர்களுக்கு குறைந்த ஊதியத்தை நிர்ணயிக்க (எகனமிக் வேஜஸ்) அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா? அம்மாதிரியான கோவில்களில் தேங்காய், பழம் கூட குறைவாகத் தான் வரும், அவற்றில் கிடைக்கும் பங்கையும் சேர்த்தாலும் அர்ச்சகர்களுக்கு வருவாய் குறைவாகத் தான் வருகிறது. ஆகவே இந்த தெய்வீகப் பணியில் ஈடுபட்டிருக்கும் அர்ச்சகர்களுக்கு குறைந்த ஊதியத்தை நிர்ணயித்துக் கொடுக்க அறநிலைய போர்டு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏழைக் கோவில்களாக இருக்கின்ற காரணத்தால் தான் குறைந்த ஊதியம் அவர்களுக்குத் தரப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, கோவில்களில் பணிபுரிகின்ற அர்ச்சகர்களுக்கு, அங்கே வருகின்ற வாழைப்பழம், தேங்காய் ஆகியவற்றிலும் பங்கு கிடைக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது நாம் அர்ச்சகர்கள் பயிற்சிக்கு எல்லா வகுப்புகளிலிருந்தும் ஆட்களை எடுத்துக்கொள்ள முடிவு செய்துவிட்டபடியால், இந்த ஊதிய விஷயத்திலும் பழைய முறைகளை மாற்றி, ஊதியத்தை நிர்ணயிக்கின்ற புதிய முறையை கொண்டுவர அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, எல்லா சமூகத்தினரையும் அர்ச்சகர்களாக நியமிப்பதற்கும், ஊதியத்தை நிர்ணயிப்பதற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, அறநிலைய நிர்வாகத் துறையில் இருக்கின்ற இன்ஸ்பெக்டர்களுக்கு அறநிலைய நிர்வாகத்துறை ஊதியம் கொடுக்கிறது. அதில் ஏழைக் கோவில், பணக்காரக் கோவில் என்ற பாகுபாடு கிடையாது. அதேபோல கோவில்களில் வரும் வருமானப் பாகுபாட்டைப் பார்க்காமல், எல்லா கோவில்களிலும் இருக்கின்ற அர்ச்சகர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இன்ஸ்பெக்டர்களை எல்லாம் அரசு பணியாளர்களாக ஏற்றுக்கொண்டிருக்கின்றோம்.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அர்ச்சகர்களாக பணி புரிய அரிசன சமூகத்திற்கு **முதலிடம் கொடுக்கப்படுமா என்று** அறிய **விரும்புகிறேன்.**

1971 டிசம்பர் 17]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நாம் செய்திருக்கிற திருத்தம், எந்தச் சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்களுக்கு அர்ச்சகர் பயிற்சி அளிக்கப்பட்டு, அரச்சகராக வேலை கொடுக்கவேண்டும் என்று சட்டத்தை மாற்றியிருக்கின்றோம். அது நீதிமன்றத்தில் இருப்பதால், அந்த வழக்கு முடிந்த பிறகு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஏ. பாலையா : தலைவரவர்களே, ஏற்கனவே அர்ச்சகர்களுக்கு மான்யமாக நிலங்கள் விடப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்டவர்கள் சம்பளம் இல்லாமல் அர்ச்சனை செய்ய அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படியிருந்தால், அர்ச்சகர்களுடைய மனம் மாறவேண்டும்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, தமிழகத்தில் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றும் நிலை என்ற அடிப்படையில் கோவில்கள் பிரிவு படுத்தப்பட்டிருக்கின்றன. அங்கே கோவில்களில் அர்ச்சகர்களுக்குக் கிடைக்கின்ற சம்பளத்தைவிட, அங்கே ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களாகவும், கணக்குப் பிள்ளைகளாகவும் பணியாற்றுகின்றவர்களுக்கு குறைந்த சம்பளம் கிடைக்கின்றது. இந்தக் குறையைப் போக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அதிகமாக வருமானம் வருகின்ற கோவில்களில், அங்கே வேலை பார்க்கின்ற சிப்பந்திகளுக்கு வருமானத்தைப் பொருத்துத் தான் சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது. அர்ச்சகர்களுக்கு எந்த அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்படுகிறதோ, அதே அடிப்படையில் தான் மற்றவர்களுக்கும் சம்பளம் கொடுக்கின்றோம். குறிப்பாக, ஏதாவது கோவிலில் அதிக வருமானம் வந்து, குறைந்த சம்பளம் கொடுக்கப்பட்டால் அதை உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, கோவிலில் வரக்கூடிய வருமானத்தையொட்டி அரச்சகர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதனுடைய விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வருகிற வருமானத்தையொட்டித் தான் அர்ச்சகர்களுக்குச் சம்பளம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அதிகமான வருமானம் வருகின்ற கோவில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு அதிகப்படியான அளவுக்குச் சம்பளம் கொடுக்கிறோம். சில கோவில்களில் வருமானம் குறைவாக இருக்கிறது. அங்கே குறைந்த அளவுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அர்ச்சகர்கள் என்பவர்கள் மனிதனுக்கும் ஆண்டவனுக்கும் இடையிலே மந்திரத்தைச் சொல்லி வாதாடுகிறார்கள். எல்லோருக்கும் பொதுவானவன் ஆண்டவன். நாமே ஆண்டவனிடத்தில் அம்மையே அப்பா என்று கேட்டுக் கொள்ளலாமே. இடையில் இடைத்தரகர்கள் எதற்கு? இவர்களை எடுத்துவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதே மாதிரிதான் நீதிமன்றத்தில் நீதிபதிகள் இருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் வழக்கறிஞர் . . . (சிரிப்பு).

திரு. கு. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கோவில்களில் பணக்காரக் கோவில்கள், ஏழைக் கோவில்கள் என்று பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. அங்கே சோஷலிசத்தைப் புகுத்தி பணக்காரக் கோவில்களில் வரும் வருவாயில் 10 சதவீதம் அல்லது 7 சதவீதம் ஏழைக் கோவில்களுக்கு பிரித்துக்கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தற்போது வருமானம் குறைவாய் உள்ள கோவில்களில் திருப்பணி செய்ய அதிக வருமானம் உள்ள கோவில்களிலிருந்து எடுத்துக் கொடுக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, கோவில்களில் சிப்பந்திகளுக்கு கொடுக்கின்ற சம்பளம் குறைவாக இருக்கிறது என்ற குறை இருந்து வருகிறது. ஆகவே கோயில் சிப்பந்திகளுக்கு எந்த அளவுக்கு ஊதியம் கொடுக்கலாம் என்று ஆலோசிக்க தயவு செய்து அமைச்சர் அவர்கள் ஒரு கமிட்டி போட்டு இந்தப் பிரச்சினையை ஆராய முன்வருவாரா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஒவ்வொரு கோவிலிலும் வருகிற வருமானத்தை வைத்து, அந்த கோவிலுக்கு இருக்கிற செலவினங்களையும் செய்துகொண்டு, அங்கு பணிபுரிகின்றவர்களுக்கும் சம்பளம் கொடுக்கிறோம். எந்தக் கோவிலிலும் சம்பளம் கொடுக்கப்படாமல் சிப்பந்திகள் வேலை பார்க்கிறவர்கள் கிடையாது.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, கோவில்களில் கூட மாமூல் கொடுத்தால் தான் ஆண்டவனை நன்றாகப் பார்க்க அனுமதிக்கிறார்கள். இந்த நிலைமை ஒழிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட மாமூல் பிரச்னைகள் எங்கே இருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, கோவிலில் வருகிற வருவாய்க்குத் தக்கபடி அர்ச்சகர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்றால், சிறு கோவில்களில், கொஞ்ச வருமானம் வருகின்ற இடங்களில் அர்ச்சகர்களுக்கு குறைந்த ஊதியம்தான் கிடைக்கும். அதைக் கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்தமுடியாத நிலை இருக்கிறது. கோவிலின் வருவாயைக் கணக்கில்கொள்ளாமல், அர்ச்சகர்கள் அவர்களுடைய குடும்பங்களை நடத்துகிற அளவிற்காவது ஊதியம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பெரிய கோவில்களில் வருகிற வருமானத்தில் கோவிலில் செலவை செய்துகொண்டு, அர்ச்சகர்களுக்கும் மற்ற சிப்பந்திகளுக்கும் சம்பளத்தைக் கொடுக்கிறோம். சிறிய கோவில்களில், அங்கே வருகிற அர்ச்சனைக் கட்டணம், மற்ற வருமானங்களை அர்ச்சகர்கள் நேரிடையாகப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு சம்பளம் மட்டும் கொடுக்கப்படுகிறது என்றுகூட சொல்லமுடியாது. எல்லா கோவில்களுக்கும் அர்ச்சகர்களுக்கு ஒரே மாதிரியான சம்பளம் நிர்ணயம் செய்வது என்பது இயலாத காரியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அரசினர் தீர்மானம்

வங்காள தேச விடுதலைப் போராட்ட வெற்றி குறித்துப் பாராட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வங்கநாடு உதய போராட்டம் பற்றிய தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிவார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தைப் படிக்கும்போது, இப்போது சேர்க்கப்பட்டிருக்கும் சில திருத்தங்களையும் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

" வங்க தேசத்தின் உரிமைப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்து சுதந்திர வங்காள தேசம் உதயமானதற்கு இந்தப் பேரவை தனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

வங்காள தேசத்தின் உரிமை போருக்கு மனிதாபிமான உணர்வுடன் ஆதரவு தந்து, பாகிஸ்தானின் போர்வெறிக்குத் தக்க பாடம் கற்பித்த இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு இந்தப் பேரவை பாராட்டுக்களைக் குவிக்கிறது.

இன்னுயிர் தந்தும், இழப்புக்கள் ஏற்றும் இந்தத் தியாகப் போரில் ஈடுபட்ட இந்திய வீரர்கள், வங்க தேச விடுதலை வீரர்கள் அனைவருக்கும் இந்தப் பேரவை தனது மரியாதையைத் தெரிவித்துக்கொள்கிறது.

மலர்ந்துள்ள புதிய வங்காள தேசத்தின் விடுதலை வீரர் முஜ்பூர் ரஹ்மானை உடனடியாக விடுதலை செய்வதற்கு அனைத்து நாடுகளும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

இந்த விடுதலைப் போரில் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியாவுடன் ஒத்துழைக்காததையும் இந்தியாவுக்கு விரோதமாக பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருவதையும் கண்டிப்பதோடு, இந்தியாவுக்குத் துணை நின்ற சோவியத் யூனியன் போன்ற நாடுகளுக்கு இந்தப் பேரவை இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது ".

தலைவரவர்களே, 12 நாட்களாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் மாபெரும் வெற்றியை, மகத்தான வெற்றியை இந்தியா பெற்றுத் தந்திருக்கிறது. பாகிஸ்தானின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்த கிழக்கு வங்கத்தின் மக்கள், ஜனநாயக முறையிலே எழுப்பிய தங்கள் உரிமைக் குரல், பாகிஸ்தானத்திலுடைய சர்வாதிகாரிகளால் அலட்சியப் படுத்தப்பட்டதன் காரணத்தால், அந்த உரிமைக் குரல் விடுதலைக் குரலாக மாறி, பாகிஸ்தானத்தின் சர்வாதிகாரிகளுடைய அட்டூழியங்கள் அளவு மீறி, அந்தப்பகுதி மக்கள் பெரும் கொடுமைக்கு ஆளாகி, அவர்கள் ஆர்த்தெழுந்து விடுதலை முரசை வேகமாகத் தட்ட, மனிதாபிமான உணர்ச்சியோடு அரசியல் தீர்வு காணவேண்டிய ஒரு பிரச்னையை பாகிஸ்தானத்திலுடைய அதிபர் யாஹியாகான் புறக்கணித்துவிட்ட காரணத்தினால், அனைத்துலக நாடுகளுக்கும் அந்தப் பேருண்மையை எடுத்துச் சொல்ல, அனைத்துலக நாடுகளில் நம் பக்கம் இருக்கின்ற நாடுகளின் பேராதரவினை எல்லாம் ஒருங்கே பெற்று, இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தப் போராட்டத்தில் பெரிய வெற்றியினை ஈட்டித் தந்திருக்கிறார்கள்.

பத்து நாளில் யுத்தம் என்று யாகியாகான் முதலிலே முழங்கினார். இதுவே கடைசி யுத்தம் என்று பின்பு சொன்னார். இப்போது ஐ.நா. மன்றத்திற்குச் சென்றிருக்கிற, பாகிஸ்தானத்தின் நியமிக்கப்பட்ட உதவி பிரதமர் பூட்டோ அவர்கள் ஆயிரம் ஆண்டு காலம் இந்த யுத்தம் நடைபெறும் என்று ஆருடம் கணித்திருக்கிறார்கள். ஆனால் அவருடைய பேச்சுக்கள் கேலிக்குரியதாக, கிண்டலுக்கு உரியதாக ஆக்கப்பட்டன என்பதற்கு அடையாளமாகத் தான் இன்று வங்கதேசம் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டு, அதிலே மகத்தான வெற்றியினைப் பெற்றிருக்கிறது. அந்த வெற்றிக்கு தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தந்த பேராதரவும், இந்திய இராணுவ வீரர்கள் காட்டிய ஆர்வமும், தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் போர்க்களத்தில் அவர்கள் புரிந்த சாதனைகளும், முப்படைத் தளபதிகளும், அதிலே அணிவகுத்து நின்ற வீரர்களும் நடத்திய திறமை மிக்க போராட்டங்களும் காரணமாகும்.

இறுதி நேரத்திலே கூடப் போராடி, வங்க தேசத்தினுடைய தலைநகரம் டாக்காவைப் பிடித்துவிடலாம் என்ற உறுதி இருந்தாலும் மனிதாபிமான உணர்ச்சியோடு, எதிரியினுடைய வீரர்கள் அனைவருக்கும், தலைநகரில் இருக்கிற மக்கள் அனைவருக்கும் தொல்லைகள் ஏற்படுவதை விரும்பாத இந்தியா, அவர்களுக்குக் காலக்கெடு அளித்து, இன்னும் சில மணி நேரம் வேண்டும் தாங்கள் யோசிப்பதற்கு—சிந்திப்பதற்கு என்று கேட்டதற்கு அதையும் வழங்கி, அதற்குப் பிறகு பாகிஸ்தானத்தினுடைய தளபதியினுடைய சரணாகதிப் படலத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இன்றைக்கு வங்கதேசம் விடுதலை பெற்று விட்டது; சுதந்திர நாடாக ஆகி விட்டது. அந்த நாட்டினுடைய கொடி பட்டொளி வீசி, முகிலைத் தொட்டு பறக்க இருக்கிறது; பறக்கிறது. இதே நேரத்தில் இந்த மண்ணினுடைய உரிமைக்குக் குரல் கொடுத்த மாவீரன், இந்த மண்ணினுடைய விடுதலைக்கு முழக்கமிட்ட கர்ம வீரன் முஜிபூர் ரஹமான் மேற்குப் பாகிஸ்தான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதை, அந்த மாவீரனுடைய விடுதலைக்கு உலக நாடுகளில் இருக்கின்ற எல்லா மக்களும்—நான் நாடுகளைச் சொல்லவில்லை —எல்லா மக்களும் மனிதாபிமான உணர்ச்சியோடு அவரை விடுதலை செய்ய விருப்பம் கொண்டிருப்பதை அனைவரும் அறிவோம். ஆகவே, விடுதலை பெற்றிருக்கிறது வங்க தேசம், விடுதலை வீரர் முஜிபூர் ரஹமானை உடனடியாக விடுதலை செய்வதற்கு எல்லா நாடுகளும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை இந்த பேரவையிலே நாம் நிறைவேற்ற இருக்கிறோம்.

இந்த மனிதாபிமான உணர்ச்சியுடன் இந்தியா பங்குபெற்று நடத்திய இந்த போராட்டத்தில் ஆதிக்கிய நாடுகள், அமெரிக்கா போன்ற நாடுகள், இன்னும் சொல்லப்போனால் தங்களுக்கு நெருக்கடி வந்தபோதெல்லாம் இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொண்ட எகிப்து போன்ற நாடுகள் எல்லாம், இன்னும் அண்டையிலுள்ள சில நாடுகளெல்லாம் இந்தியாவிற்கு விரோதமாக, பாகிஸ்தானத்திற்கு ஆதரவினைக் காட்டி, இன்றைக்கு சரியான பாடத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே மேலும் அவர்கள் பாடம் பெறுவார்கள்.

நான் ஏற்கெனவே வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தவுடன் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டதுபோல இந்தியாவை சில நாடுகள் புறக்கணிக்கின்றன; அலட்சியப்படுத்துகின்றன; என்றால், நாம் பெற இருக்கின்ற வெற்றிகள் அந்த அலட்சிய மனப்பான்மையைப் போக்கிவிடும்; நாம் பெற்றுக்கொடுக்கிற அந்த

வெற்றி மேலும் அகில உலகில் நமக்கு ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுத் தரும் என்று தெரிவித்ததைப்போல இன்றைக்கு அந்த வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம். வெற்றிக்கு முழுமுதல் காரணமாக இருந்த நம்முடைய படைவீரர்கள் அனைவருக்கும், வங்க தேச விடுதலை வீரர்கள் அனைவருக்கும் தலைவணங்கி வாழ்த்துத் தெரிவித்துக்கொள்வதோடு இந்த வெற்றியின் தலைவி—இந்திய மண்ணின் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் நான் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பல வெற்றிகள் நமக்கு நிச்சயமாகக் குவியும். ஆனால் நமக்கு மண்ணாசை கிடையாது என்பதைத் தெரிவிக்கிற எடுத்துக்காட்டாக மேற்குப் பகுதியில் போர் நிறுத்தத்திற்கு இந்தியா தயாராக இருக்கிறது என்று அறிவித்திருக்கிறோம். போர் நிறுத்தம் செய்யப்படும் என்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் பாகிஸ்தானம் அதை காதில் போட்டுக்கொள்ளாமல், தம் முடிவைப்பற்றி கவலைப்படாமல் போரில் ஈடுபட்டால், அதற்கு அமெரிக்கா, சீனா போன்ற ஆதிபத்திய நாடுகள் விரும்பினால், இந்தியாவில் இருக்கிற அத்தனை பேர்களுடைய கரங்களும் துப்பாக்கிகளாக மாறி, அவர்களை எதிர்த்து வீழ்த்தும் என்கிற உறுதியினை இந்த அவையிலே நாம் எடுத்துக்கொள்கிறோம் என்று கூறி, இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன். வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இன்று நம் முதலமைச்சர் டாக்டர் கருணாநிதி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மாபெரும் தீர்மானத்தை மகிழ்ச்சியோடு வரவேற்று, எங்கள் கட்சியின் சார்பாக எங்கள் மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொண்டு, இங்கே ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு பெண்ணின் தலைமையில், பாரத நாட்டின் சரித்திரம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இந்த மாபெரும் வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம். இதனால் பெண்ணுலகமே பெருமைப்படுகிறது.

பெண்ணுக்குத் திறமை எவ்வளவு இருக்கிறது என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டும் வகையில் இந்த வெற்றியை பெற்றிருக்கிறோம். இந்த வெற்றியால் உலக மக்களிடையே நம் பிரதமர் வீறுநடை போடுகிறார் என்பதை எண்ணும்போது, பாரதத் தாயின் புகழ் பாரெங்கும் ஜொலிக்கிறது என்பதையும் நாம் உணரவேண்டும். அந்த அளவுக்கு நாம் உலக நாடுகளிடையே செல்வாக்குப் பெறக் காரணமாயிருந்த யாகியாகான் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு நம்முடைய முப்படைத் தளபதிகளும், போர் வீரர்களும் செய்திருக்கின்ற வீரச்செயல்களைப் பார்க்கும்போது, அவர்கள் நிச்சயமாக நம் பாராட்டுதல்களுக்கு உரியவர்கள்தான். அவர்களின் வீரத்தை எண்ணிப் பெருமைகொள்வோம். மற்ற நாடுகள் இந்தியா ஒரு சாதாரண நாடு என்று எண்ணியிருந்தார்கள். இந்தியா ஒரு சாதாரண நாடு அல்ல என்பதை இன்று நாம் எடுத்துக்காட்டியுள்ளோம்.

ஜனநாயக உணர்வுகளை மதிக்காது அவற்றை நசுக்கிவிட யாகியாகான் வெறியாட்டத்தை நடத்தினார்கள். அந்த வெறியாட்டத்தில் மிகுதியும் பலியாக்கப்பட்டவர்கள் பெண்கள்தான் என்பதை நினைக்கும்போது வருத்தப்படாமல் இருக்க முடியாது. பலர் கற்பழிக்கப்பட்டார்கள். பலர் கொன்று குவிக்கப்பட்டார்கள். குழந்தைகள்தான் பலியானார்கள். இப்படி ஜன

நேற்று நாங்கள் அங்கே குறிப்பிட்டோம்.
The urge for freedom and democratic aspirations of the people of Bangla Desh.
என்று அவர்களுடைய வீர உணர்ச்சியை தெளிவாக இந்திய மக்கள் சார்பில் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

இரண்டாவதாக, இந்தப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு விஷயத்தை நான்கைந்து தினங்களுக்கு முன் இந்துப் பத்திரிகையில் பங்களா தேசத்தில் நடந்த அசம்பாவிதங்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஐலஊர் விடுதலையின் சமயத்தில் உயிர் தப்பித்து வந்த பாதிரியார் தெரிவித்திருக்கிறார். "என்னோடு இருந்த பாதிரியார்கள் எல்லாம் கொலை செய்யப்பட்டு விட்டார்கள். நாங்கள் மாதா கோயிலில் தொழுதுகொண்டிருந்தபோது பலரைச் சுட்டுக் கொன்றார்கள். நான் ஒருவன் மிச்சப்பட்டேன். விடுதலை வீரர்கள் ஆண்டவனே அனுப்பிய தூதுவர்களாக வந்திருக்கிறார்கள்" என்று சொன்னார்கள்.

1943-ஆம் வருஷம் நான் பெரிதும் மதிக்கக்கூடிய திரு. வி. க. அவர்கள் மதுரையில் சோவியத் நட்புறவுக் கழகத்தில் பேசுகின்றபோது Wherever the allied armies went, battles were created, wherever the Red Army went, brothels were abolished.
என்று சொன்னார்கள். "இன்றைக்கு கடவுளால் அனுப்பப்பட்ட படைகளாக நாங்கள் இந்திய வீரர்களைக் கருதுகிறோம்" என்றால் நமது இந்திய வீரப்படை வீரத்தை மட்டுமல்ல, இந்தியப் பண்பாட்டை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்கிறபோது அவர்களை எவ்வளவு பாராட்டினாலும், போற்றினாலும் அது போதாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்திலே அந்த வீரன் முஜிபூர் ரஹ்மானைக் குறிப்பிட்டிருப்பது மிகமிகப் பொருத்தமாக இருக்கிறது. இன்றைக்கும் கூட முஜிபூர் ரஹ்மானைச் சிறையில் வைத்திருப்பது என்று சொன்னால் உலகம் ஒப்புக்கொள்கிற செயலா? அந்த வீரனுடைய குரல் மக்கள் குரலாக மாறிவிட்டது. அப்படிப்பட்ட வீரத் தலைவன் சிறையில் இருக்கின்றான் என்று சொன்னால் எல்லா தேசங்களும் இன்றைக்குக் கட்டுக்கோப்பாக அந்த வீரனை விடுதலை செய்ய, தக்க ஏற்பாடு செய்யவேண்டும். முஜிபூர் ரஹ்மானை விடுதலை செய்ய வேண்டும் என்று நமது சட்ட மன்ற உறுப்பினர்களும் குரல் எழுப்பினார்கள். அந்த வீரன் விடுதலை பெற வேண்டும், வங்க தேச விடுதலைக்காகப் போராடிய வீரன் விரைவில் விடுதலை பெற எல்லா நாடுகளும் ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக நாம் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமக்கு கஷ்டம் வருகிறபோதுதான், 'யார் நண்பர்' 'யார் எதிரி' என்பது நன்றாகத் தெரியும். நான் முதல் கூட்டத்திலேயே இதைப்பற்றிச் சொன்னேன். அமெரிக்காவைப்பற்றிச் சொல்வது ஒரு பக்கத்தில் இருக்கட்டும். இன்றைக்கு நாம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில், நமக்கு ஆதரவு வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் ஏழாவது கப்பற்படையை வங்க விரிகுடாவில் நிறுத்தியிருப்பது நட்புக்குரிய செயலா? சாதாரண பத்திரிகை விற்கக்கூடிய பையன் கூட அமெரிக்கக் கப்பல் வந்துவிட்டது, மெட்ராஸில்கூட குண்டுபோட்டு விடுவானோ என்று சொல்கிறான். நேற்று காலையில் பேப்பர் போடும் பையன், 'அமெரிக்கா கப்பலைத் தகர்க்க ரஷ்யா கப்பல் வந்துவிட்டது' என்று கூறிக் கொண்டே வந்தான். சாதாரணமாக பத்திரிகை விற்கும் சிறுவர்களுக்குக்கூட

யார் நமக்கு நண்பன், யார் எதிரி என்று தெரிகிறது. யாஹியாகான் செய்த கொடுமைகளையெல்லாம் கடுமையான நிலையிலும், அமெரிக்கா அவ்வப்பொழுது செய்து வந்த தீமைகளை அந்தந்த இடத்திலும் சட்டத்திற்குட்பட்டு, சர்வதேச ஸ்தாபனத்தின் மூலமாக எதிர்த்து நின்று, சோவியத் யூனியன் நமக்கு உதவி செய்தது என்பதை யாவரும் அறிவோம்.

மேலும், சோவியத் யூனியனின் முக்கியமான தலைவர் நேரடியாகவும் கல்கத்தாவுக்கும், டெல்லிக்கும், கொச்சிக்கும் வந்து என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டுமென்று அவ்வப்பொழுது ஆலோசனைகளைக் கூறி நல்ல திட்டம் தீட்டியிருப்பதாகச் சொன்னார்கள். இந்த நேரத்தில் இந்திய மக்கள் எல்லாம் ஒன்றாக இருக்கிறார்கள். நமக்குள் கட்சி வேறுபாடுகள் இருக்கலாம், கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், மொழி வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் நமது நாட்டின் பாரம்பரியம் இந்தியா சுதந்திரம் பெற வேண்டுமென்பதற்காக அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் தலைமையின்கீழ் ஒன்றாகப் பணியாற்றினோம். சீனாவாக இருக்கட்டும் அல்லது பாகிஸ்தானாக இருக்கட்டும்—எந்த நாடாக இருந்தாலும்—இந்திய நாட்டின் சுதந்திரத்தைப் பறிப்பதாக இருந்தால், எல்லோரும் ஒன்று சேர்ந்து போராடிய காட்சியை இரு முறை பார்த்தோம். இந்தியாவிற்கு வெற்றி தேடித் தந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை 'இந்தியாவின் தலைவர்' என்று எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்கின்றன. நேற்றுவரை கடுமையாக எதிர்த்துவந்த காமராஜ் போன்றவர்கள் கூட 'இந்திரா காந்திதான் இந்தியாவின் சரியான தலைவர்' என்பதை ஏற்றுக்கொண்டு, இந்தியப் பிரதமரும், தமிழக அரசும் சொல்வதைக் கேட்க வேண்டும் என்று சொல்லக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. ஆகவேதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டு தெரிவித்ததை நானும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்.

இப்போது பங்களா தேஷ் விடுதலையடைந்துவிட்டது. சில தினங்களுக்கு முன் எங்களுக்கெல்லாம் அந்தத் தேசத்தின் கொடியைக் காட்டி, அதில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்று அவர்கள் கேட்டார்கள். இது வரையிலும் சாதாரணமாக முஸ்லிம்களுக்கு இருக்கக்கூடிய மதச் சின்னத்தைப் போட்டிருந்தார்கள். எங்களிடத்தில் மதச் சின்னம் காண்பிக்கும் கொடி கிடையாது என்று சொன்னார்கள். 'நாங்கள் மக்களுடைய ஜனநாயக உணர்வை மதிக்கிறவர்கள். நாங்கள் சட்டப்படி அகதிகளாக வந்தவர்கள்' என்று அந்தத் தலைவர்கள் எல்லாம் எங்களிடத்தில் சொன்னார்கள். பங்களா தேஷ் விடுதலையடைந்துவிட்டது. இதன்பிறகும் நம்முடன் அவர்கள் விசுவாசமாக இருப்பார்கள். மேற்கு பாகிஸ்தானில் யுத்தம் முடிந்துவிட்டது என்று சொல்ல முடியாது. பாகிஸ்தானின் தலைவர் யாஹியாகானும், அமெரிக்கத் தலைவர் நிக்சன் கொடுக்கும் ஆதரவைக் கொண்டு 'போர் நீடிக்கப் போகிறது' என்கிறார்.

சென்ற கூட்டத்தில் நமது ஆளுநர் அவர்கள் கலந்துகொண்டார். முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள், இந்தப் போராட்டம் நீண்டு நடைபெற வேண்டியிருக்கிறது என்று. இதனுடைய மூன்று அம்சங்கள் பற்றியும் சொன்னார்கள். இந்த மூன்று அம்சங்களில் பங்களா தேஷ் விடுதலை பெற வேண்டுமென்பது ஒன்று. we will preserve the territorial integrity of our Country நம்முடைய தேசத்தின் சிறு மண்ணில்கூட யாரும்

நுழைய முடியாது. இந்தியர்களுடைய ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். The three war aims of the Government of India என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டாவது அம்சமும், மூன்றாவது அம்சமும் பாதுகாக்கப்பட வேண்டியிருக்கிறது. நீண்டநேரம் எடுத்துக்கொண்டதற்கு மன்னிக்கக் கோருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய தீர்மானத்தை மனப்பூர்வமாக முழுமனதுடன் எங்கள் கட்சியின் சார்பிலே ஆதரிக்கிறேன் என்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து மகிழ்ச்சியாக அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

நடந்து முடிந்த போரில் நாம் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறோம். ராணுவத்தினால் கோட்டை கட்டிய பாகிஸ்தான் ராணுவத்தினாலேயே சீர்குலைவை அடைந்தது. நமது ராணுவத்தினர் கையாண்ட தந்திரங்கள், போர்த் திறமைகள் காரணமாக பாகிஸ்தானுடைய முக்கியமான இலக்குகள், விமானக் கூடங்கள், அவர்கள் சேமித்து வைத்த தளவாடக் கிடங்குகள், உணவுத் தானியக் கிடங்குகள் இவற்றையெல்லாம் குறிவைத்துத் தாக்கினார்கள். கிழக்கு வங்கத்திலுள்ள பாகிஸ்தான் தளவாடக் கிடங்குகள், ஆயுதக் கிடங்குகள் அவை அத்தனையையும் இந்திய வீரர்கள் கைப்பற்றி, பாகிஸ்தான் வீரர்களை முறியடித்தார்கள். அதற்குப் பின்னால் இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து ராணுவம் கிழக்கு வங்கத்திற்கு வர முடியாத நிலைமையை ஏற்படுத்தினார்கள். அப்படிப்பட்ட மகத்தான ராணுவத் தந்திரங்களைக் கையாண்டு, பாகிஸ்தான் வீரர்களை வ்யூகம் வைத்துப் போராடி வெற்றி அடைந்தார்கள். இந்திய ராணுவத் தலைவர் திரு. மானெக்ஷா அவர்களுட்பட முப்படைத் தளபதிகளும் உறுதியாகச் செயல்பட்டார்கள். இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் கட்டளைகளை ஏற்று, இந்தியாவின் வெற்றிக்கு வழி வகுத்தார்கள். நியாயம் நம் பக்கம் இருப்பதால் வெற்றியடைந்தோம். நியாயத்திற்காக வாதாடுகின்ற காரணத்தால் வீரம் உதயமாயிற்று.

நாம் மண்ணாசை பிடித்தவர்கள் என்று யாஹியாகான் கூறினார். இந்த யுத்தம் இப்போது நின்றுவிட்டாலும் தொடர்ந்து நடக்கும் என்கிறார் அவர். இந்தியாவைத் தொடர்ந்து அனுமதித்தால் ஆசியாக் கண்டத்தையே பிடித்துக் கொள்ளும் என்கிறார். ஆசியாக் கண்டத்திற்கு இந்தியாவின் கொள்கையினால் ஆபத்து என்கிறார். இந்தியா மண்ணாசை கொண்ட நாடு என்று யாஹியாகான் ஏதோ தோல்வி மனப்பான்மையில் பேசுகிறார். நாம் மண்ணாசை பிடித்தவர்களாக இருந்திருந்தால் காஷ்மீரில் பெரும்பகுதியைப் பிடித்திருப்போம். ராணுவ முக்கிய கேந்திரமான சில்ஜெட் ராணுவ தளத்தைப் பிடித்துக்கொண்டிருப்போம். அங்கிருந்து 1½ மணி நேரத்தில் ரஷ்யாவைத் தாக்க முடியும் . அங்கிருந்து முக்கால் மணி நேரத்தில் சீனாவைத் தாக்க முடியும். காஷ்மீரையே நாம் பிடிக்கவில்லை. எவ்வளவோ போர்களுக்குப் பின்னும் அவரவர்களுக்குரிய இடத்தை விட்டுக்கொடுத்தோம். பாகிஸ்தான் பிடித்த பகுதி அவர்களிடமே இருந்தது. 1948-ம் ஆண்டு பாகிஸ்தான்

காஷ்மீருக்குள் நுழைந்த நேரத்தில் நம்முடைய படைகள் வெற்றி பெற்று வருகின்ற நேரத்தில், ஐ.நா. சபையில் போர் நிறுத்தத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது. உலகத்தில் சமாதானத்தை ஏற்படுத்திக்கொண்டு வந்தோம் நாம். நம்முடைய தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அந்தப் போர் நிறுத்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டார். அதன்விளைவாக, நாம் போரை நிறுத்தியதன் விளைவாகத்தான் அவர்கள் பிடித்த பகுதி அவர்களிடம் இருந்தது. நாம் பிடித்த பகுதி நம் வசமிருந்தது. நல்ல செழிப்பான பகுதிகள் பாகிஸ்தான் வசம் இருக்கின்றன.

இன்றைக்கும் சீனாக்காரன் நம்முடைய பகுதியில் 12 ஆயிரம் சதுர மைல் பரப்பளவு கொண்ட இடத்தைப் பிடித்து வைத்திருக்கிறான். பூகோள ரீதியாக இந்தியாவின் பகுதிகளை சீனாக்காரன் பிடித்து வைத்திருக்கிறான். அவன் தான் சொல்கிறான், நம்மை மண்ணாசை பிடித்தவன் என்று.

அது மாத்திரமல்ல, போர் தொடங்குகிறபோது சொன்னான், தற்காலிகமாக சில வெற்றிகள் ஏற்பட்டாலும் முடிவு இந்தியாவுக்குக் கசப்பானதாக இருக்குமென்று பயமுறுத்தினான், அப்படிச் சொன்னால் நானும் தலையிடுவேன் என்பதுபோலச் சொன்னான்.

அதுமாத்திரமல்ல, அமெரிக்கர்கள் என்ன செய்தார்கள்? நம்முடைய வீரர்கள் வெற்றிக்கு மேல் வெற்றி ஈட்டிக்கொண்டிருந்தபோது பாகிஸ்தான் செயலற்ற, திறனற்ற நிலைமையில் சரணடையக்கூடிய நிலைமையில் போர் நிறுத்தத் தீர்மானம் கொண்டுவந்தார்கள், அதுமாத்திரமல்ல, தளவாடங்களோடு என்டர்பிரைஸ் என்ற கப்பலையும், அதனைத் தொடர்ந்து மற்ற எட்டுக் கப்பல்களையும் அங்கே அனுப்பி பாகிஸ்தானுக்கு அவர்களுடைய படைகளையெல்லாம் எடுத்துச் செல்லவேண்டுமென்று திட்டமிட்டார்கள். அதையும் முறியடித்து நம்முடைய படைகள் மகத்தான வெற்றியைத் தந்திருக்கிறார்கள். இந்தப் போரிலே மாண்டு மடிந்து உயிரைத் தியாகம் செய்த தமிழ்நாட்டுப் போர்வீரர்கள் அத்தனை பேர்களுக்கும், நம்முடைய தமிழ்நாட்டின் சார்பிலே, தமிழக மக்களின் சார்பிலே அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவிகள் நிரந்தரமாக செய்வதற்கான வழிவகைகளை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

நான் பத்திரிக்கையிலே பார்த்தேன், காஷ்மீரத்திலே நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆறுமுகம் என்ற போர்வீரர் பாகிஸ்தான் விமானம் குண்டு வீசுகிறபோது தன்னந்தனியாக அவர் நின்று தன்னுடைய துப்பாக்கியாலே அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்திவிட்டு அந்த இடத்திலேயே மாண்டுவிட்டார். அப்படிப்பட்ட வீரர்களுடைய குடும்பங்களையெல்லாம் பாதுகாப்பதற்கு நாம் உறுதியெடுத்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட மகத்தான வெற்றியை நமக்கெல்லாம் ஈட்டித்தந்த இந்திரா காந்தி அவர்களுக்கும், ஜெனரல் மானக்ஷா அவர்களுக்கும், முப்படைகளின் தளபதிகளுக்கும், போரிலே ஈடுபட்ட அத்தனை வீரர்களுக்கும் நாம் நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம், அவர்களையெல்லாம் வாழ்த்திப்பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் காட்டிய வீரத்தை மறவாது நினைவில்கொண்டு மீண்டும் மீண்டும் இந்த மண்ணின் பெருமையை நிலைநாட்டிக் காப்பாற்றுவோம் என்று விரும்பி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை மனப்பூர்வமாக வழிமொழிகிறேன். வணக்கம்.

திருப்பூர் திரு. ஏ. எம்.மொய்தீன்: சபாநாயகர் அவர்களே, நான் இப்பொழுது இரண்டு மடங்கு மகிழ்ச்சியில் நின்று பேசுகிறேன். நான் இரண்டு மடங்கு மகிழ்ச்சியில் நின்று பேசுகிறேன் என்று சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. முதன்முதலாக யுத்த சம்பந்தமான பிரகடனம் செய்யும் பொழுது என்னுடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய முதலமைச்சர் அவர்கள் இந்தப் போர் இந்து—முஸ்லீம் போரல்ல, இரண்டு லட்சியங்களின் அடிப்படையில் நடக்கும் போர் என்று குறிப்பிட்டார்கள், அவர்கள் குறிப்பிட்டபொழுது அன்று நான் பாராட்டினேன், இன்றும் பாராட்டுகிறேன், அது முதல் மகிழ்ச்சி. அதற்கு நான் பதில் சொல்லும்பொழுது இந்திய மண்ணிலே வாழும் முஸ்லீம் ஒருவனேனும் இதற்கு எதிராக இருக்கமாட்டான் என்று என்னுடைய ஒப்பற்ற தலைவர் காயிதே மில்லத் அவர்கள் பாராளுமன்றத்திலே கொடுத்த உறுதிமொழிக்கிணங்க நடந்து கொள்வார்கள் என்று சொன்னேன், அதன்படி 9 கோடி முஸ்லீம் மக்களும் இன்றைக்கு இந்தியாவின் சார்பிலே நின்று மானத்தைக் காப்பாற்றிக் கொடுத்திருக்கிறார்கள், இது என்னுடைய இரண்டாவது மகிழ்ச்சி.

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தலைவர் அவர்களே, அதே நேரத்திலே என் நெஞ்சின் அடித்தளத்திலே கண்ணீரும் கொட்டுகிறது. காரணம் இருக்கிறது. போர்க்களத்திற்குச் செல்லும்பொழுது தன் அன்பு மக்களை, தோளோடு தூக்கி முத்தமிட்டு வழித் துணைவியினிடத்திலே போர்க்களம் போய்வருகிறேன் என்று சொல்லி விட்டு, பெற்ற தாயினிடத்திலே வணங்கி விடை பெற்றுக்கொண்டு போர்க்களம் சென்று போரிட்டு வீட்டுக்கு உடைகளையும் சாமான்களையும் அனுப்பும்பொழுது அந்த வீரனுடைய உடைகளின் மேல் அவனுடைய குடும்பத்தினர் நெஞ்சத்திலிருந்து சிந்துகின்ற கண்ணீருடன் என்னுடைய கண்ணீரையும் நான் காணிக்கையாகச் செலுத்திக்கொள்கிறேன். நாம் போர் வீரர்களுடைய குடும்பங்களை மறந்துவிடக்கூடாது, ஒவ்வொரு எம்.எல்.ஏ. யும், எம்.பி. யும் அந்தந்தக் குடும்பங்களுக்குச் சென்று அவர்கள் சிந்துகின்ற கண்ணீரை இருகரங்களிலும் ஏந்தி உங்களுடைய வீரர்கள் சிந்திய இரத்தம் நாட்டின் மானத்தைக் காப்பாற்றியது என்று எடுத்துச்சொல்ல வேண்டும். அவர்களுக்கு உதவிகளைச் செய்யவேண்டும்.

மகிழ்ச்சி இருந்தபோதிலும் இன்னும் ஆபத்து இருக்கிறது என்று கருத வேண்டியிருக்கிறது. அமெரிக்கா ஒரு பெரிய வல்லரசு, அதேபோன்று சீனு ஒரு பெரிய வல்லரசு. அவர்கள் நம் பக்கம் இல்லை. அவர்கள் நம் பக்கம் இல்லை என்பதற்காக நான் வருந்தவில்லை, நமக்கு எதிரியாக இருக்கிறார்கள், அவர்களைப்போன்ற ஆயுத பலம் இல்லை நமக்கு. மனோபலம் இருக்கிறது. ஏறத்தாழ 50 கோடி மக்களும் அழிந்தாலும் நாட்டினுடைய மானத்தைக் காப்பாற்றுவோம் என்று நாம் உறுதிப்படுத்த வேண்டும். மனித உடல்கள் முழுமையும் கொன்று குவித்து எந்த வெற்றியும் ஈட்டப்பட்டதாக சரித்திரம் இல்லை. மனித உடல்கள் அத்தனையும் அழிந்துவிட்டு எந்த நாடும் ஒருவனுக்குப் போயிற்று என்று சரித்திரத்தில் இல்லை. நாம் உலக சரித்திரத்தைகூர்ந்து கவனித்தால் ஒரு நாட்டினுடைய ஜனத்தொகையில் பாதி அழிந்தும்கூட அந்த நாட்டினுடைய மானத்தைக் காப்பாற்றியிருக்கிறார்கள். எனக்குத் தெரியும், என்ன நாடு என்பது தெரியவில்லை. ஜப்பான் என்கிறார்கள், அல்ஜீரியா, ஏதோ ஒரு நாடு. நடந்தது உண்மை, நாட்டின் பெயர் எனக்கு நினைவுக்கு வரவில்லை என்பதனுல்தான் ஒரு நாடு என்று குறிப்பிட்டேன். அல்ஜீரியா என்று சொல்கிறார்கள்.

தங்கள் வீரம் குன்றியதாக நினைத்துக்கொண்டு அமெரிக்கா இந்தப் போரிலே சும்மா இருக்கும் என்று தெரியவில்லை, ஏதோ ஒரு வகையிலே தூண்டிவிடத்தான் செய்யும், அதேபோன்று சைனுவும் பின்னல் செய்கிறோம் என்ற முறையில் வேறு கோணத்திலிருந்து போரைத் தொடங்கும். எப்படித் தொடங்கினுலும், எந்த நிலைமை ஏற்பட்டாலும் உறுதியை உள்ளத்திலே கொண்டவர்களாகத்தான் நான் நேற்று சென்றோம் அங்கு. இலட்சக் கணக்கான மக்களின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருந்தாலும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு ஒரே அணியிலே நின்று அமெரிக்கத் தூதுவரிடத்திலே அன்புடனும் அடக்கத்துடனும் சொன்னோம், உன்னுடைய கப்பலை வாபஸ் வாங்கிக்கொள் என்று சொன்னபொழுது நம்முடைய பண்பாட்டையும் அடக்கத்தையும் கண்டு நாம் பெருமைப்படவேண்டும். வாபஸ் வாங்கிக் கொள் என்று நாம் சொல்வதிலே நம்முடைய அடக்கம், நம்முடைய பண்பாடு தெரிகிறது. அங்கே நம்முடைய நண்பர் சொன்னுர், எனக்குப் பெயர் ஞாபகம் இல்லை. கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனுல் என்ன என்று கேட்டார்கள். நான் வேண்டாம், பொறுத்திருப்போம் என்று சொன்னேன், அவர் திரும்பிப் பார்த்தார், நான் சொன்னேன், அப்படியே நின்றுவிட்டார். நம்முடைய உணர்வைக் காட்டுவதற்காக அப்படிச் செய்தார் என்பதற்காக நான் பெருமைப்படுகிறேன். நம்முடைய உறுதி தளராது இருக்கவேண்டும். நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு சிறு பையன் நெஞ்சிலே இந்த எண்ணம் வேரூன்றிவிட்டது என்று குறிப்பிட்டார்கள். இந்திய மக்கள் அனைவரின் நெஞ்சிலேயும் அது பிறந்துவிட்டது. இந்தியப் பாராளுமன்றத்திலே பிரதம மந்திரி அவர்கள் பேசினுர்கள். ஒரு பொதுக் கூட்டத்திலேதான் பேசுகிறார்கள் என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். அவ்வளவு ஆர்வத்தையும், அவ்வளவு உற்சாகத்தையும் காட்டியது எங்கே என்றால், பார்லிமெண்டில். நான் ஆச்சரியப்பட்டுவிட்டேன். அந்தப் பின்னணியில் நம்முடைய முதல்வர் அவர்கள் நம்மிடையேயிருந்து சொல்ல எழுந்த பிற்பாடும் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படுகிறது. அன்புக்குரியவர்களே, (சிரிப்பு) அன்பிற்குரிய தலைவரவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாராளுமன்றமே பொதுக்கூட்டமாக ஆகியிருக்கும் நேரத்தில் இவ்வளவு நாட்டின் முக்கியமான இந்த நேரத்தில் எல்லோருடைய உணர்வையும் கருத்தில்கொண்டு நெடுநேரம் பேசலாம்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: தலைவரவர்களே, போரில் ஈடுபட்ட வீரர்களைப் பாராட்டுகிறேன். அவர்களுடைய நெஞ்சுரத்தைப் பாராட்டுகிறேன். நம்முடைய நாட்டின் எல்லையில் இரத்தத்தைச் சிந்திய ஒவ்வொரு தியாகியையும், இரத்தத்தைச் சிந்திய வீரர்களையும் பாராட்டுகிறேன். நம்முடைய மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவரான இந்திய நாட்டின் பிரதமர், பெண்குலத்தின் தாய், இந்திரா காந்தி அம்மையார் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அதைச் சொல்லும்பொழுது நமது அன்புக்குரிய சகோதரி அனந்தநாயகி அவர்களுக்கு ஏற்பட்ட ஆர்வத்தையும் உற்சாகத்தையும் பார்த்தோம். மெய்யாகவே இந்த உற்சாகத்தை அவர்கள் பிரதிபலித்தார்கள், நேற்று அவர்கள் முன்னல் வந்தார்கள், வயது அதிகமாக ஆகியிருக்கும் ஜோதி வெங்கடாசலம்

அவர்கள் அனந்தநாயகி அவர்கள் வைத்த அந்த அடிக்கு முன்னால் அடி வைத்துக்கொண்டு போனார்கள். அதைப் பார்த்தேன். அவர்கள் இரண்டு பேரும் நடந்த நடையிருக்கிறதே அது வீரநடையாக இருந்தது. அந்தக் கம்பீரமான நடையைப் பார்த்தபிறகு எங்களுக்கும் முழு உற்சாகம் வந்துவிட்டது. நான் ஒரு நொண்டி, குச்சியைப்பிடித்துக்கொண்டு நடந்து பழக்கப்பட்டவன். அவசரத்தில் குச்சியை எடுத்துச் செல்ல மறந்துவிட்டேன். ஆனால் அவர்கள் சென்ற நடையைப் பார்த்தபிறகு என்னுடைய 64 வயது மாறி நானும் கம்பீரமாக நடந்தேன். இம்மாதிரியான உற்சாகத்தை, இம்மாதிரியான பெருமையை, இம்மாதிரியான கவுரவத்தைப் பார்க்கும்பொழுது நாம் இனியும் காப்பாற்றுவோம் என்பதை உறுதிப் படுத்தியது. இனியும் நடக்கும் எந்த நிகழ்ச்சியிலும், எந்தப்போரிலும் முஸ்லிம் லீக்கின் சார்பாக நான் உறுதி கூறிக்கொள்ள விரும்புகிறேன், நிச்சயமாக உங்களுடைய ரத்தத்துடன் எங்களுடைய ரத்தமும் கலந்து பங்கு பெறும் என்று உறுதியைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு எங்கள் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன் என்று கூறிக்கொண்டு அமர்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்களால் முன்மொழியப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பாக மிகுந்த பெருமையோடு, முழுமனதோடு வரவேற்று சிலவார்த்தைகள் கூறலாம் என்று கருதுகிறேன். நம்முடைய இராணுப்படை நேற்றுமாலை கிட்டத்தட்ட நாலரை மணிநேரத்தில் பங்களா தேஷில் இருக்கும் ஜெனரல் நியாஸியிடத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு சரணாகதி பத்திரம் வாங்கியிருக்கிறார்கள் என்றும், இன்றையதினம் பங்களா தேஷ் ஒரு புதிய நாடாக, ஜனநாயகத்தில் ஏற்பட்டிருக்கும் ஒருநாட்டை நாம் நம்முடைய சபையின் மூலமாகப் பாராட்டி இந்தத் தீர்மானத்தை மிக்க நல்ல முறையிலே முன்மொழிகின்ற நிலையிலே நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்த நேரத்தில் ஒரு முக்கியமான கருத்தை நான் ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகிறேன்.

மூன்றாந்தேதி இந்த மாதத்திலே நம்முடைய நாட்டில் இருக்கும் பல்வேறு பகுதிகளில், அமிர்தசரஸ், பதான்கோட், அவந்திப்பூர், அம்பாலா, ஆக்ரா போன்ற பல பகுதிகளில் ஒரேநேரத்தில் 200 ஏரோப்ளேன்கள் கிட்டத்தட்ட ஐந்தரை மணி நேரத்தில் எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாத வகையிலே மதிப்பிற்குரிய பிரதம மந்திரி அவர்களோ மற்ற முக்கியமான நம்முடைய பல்வேறு அமைச்சர்களும் வெவ்வேறு இடங்களில் இருக்கும் நேரத்திலே யாருக்கும் தெரிவிக்காமல் அவர்கள் பாம் போட்டார்கள். அதுதான் முதன்முதலில் நம்முடைய நாட்டில் நடந்த தாக்குதல்.

இந்த நேரத்திலே இன்னொரு விஷயத்தையும் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய சட்டசபையைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டசபை நிகழ்ச்சி சென்ற 10, 11 நாட்களாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. சனிக்கிழமை ஆரம்பித்தோம். அந்த நேரத்திலேயிருந்து இப்பொழுது பார்க்கிற 12 நாட்களும்கூட ஒரு சரித்திர முக்கியத்துவம் நிறைந்த நேரத்தில் சட்டமன்றம் நடந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இந்தச் சட்டமன்றத் தொடர் நடக்கின்ற நேரத்திலேதான்

யாகியாகான் முழுப்போர் என்பதை வெளியிட்டார். அதன் பிறகு இந்தச் சட்டசபைக் கூட்டம் முடிவதற்குள்ளாக இன்று நாம் வெற்றிபெற்று விட்டோம் என்ற பெருமையோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரும் ஒரு வாய்ப்பையும் பெற்றுக்கொண்டிருக்கிறோம்.

இதேநேரத்தில் இத்தனை நாட்கள் முக்கியமான நம் நகரங்கள் தாக்கப்பட்ட நேரத்தில் ஐ.நா. சபையில் துரதிருஷ்டவசமான ஒரு தீர்மானத்தை அவர்கள் கொண்டுவந்தார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. பாராளுமன்ற நடவடிக்கைகளை எடுத்துப் பார்த்தோமேயானால், அதிலே 1950-ஆம் ஆண்டு, மறைந்த பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு முக்கியமான தீர்மானத்தை அந்தப் பாராளுமன்றத்தில் அப்பொழுது வைத்திருந்தார்கள். லியாகத் அலிகான் அவர்கள் பிரதம மந்திரியாக பாகிஸ்தானில் இருந்தார்கள். 'நோ வார் ஃபேக்ட்' என்று 1950-ஆம் ஆண்டிலே மிகத் தெளிவாக பாராளுமன்றத்தில் வைத்தார்கள். அந்த நேரத்தில் நம் இரண்டு பேருக்கும் போர் வேண்டாமென்று மிகத் தெளிவாக, 'நோ வார் ஃபேக்டை' கொடுத்த பொழுது அதை நம்முடைய நாட்டின் சார்பாக முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் லியாகத் அலிகான் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். பல நேரத்திலேயும், இப்படிக் கட்டம் கட்டமாக நம்முடைய நாடு 'நோ வார் ஃபேக்ட்' க்கு நாங்கள் தயார், நீங்கள் தயாரா என்று கேட்டோம். காஷ்மீரில் ஒரு பகுதியை பாகிஸ்தான் எடுத்தபிறகும்கூட 'நோ வார் ஃபேக்ட்' பற்றிக் கேட்டோம். இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால் நாம் நோ வார் ஃபேக்ட் என்று அடிக்கடி, பலதடவை சொன்னபிறகும் ஐ.நா. சபை துரதிருஷ்டவசமாக, ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமென்றால் 'mischievous resolution' அப்படிப்பட்ட நிலைமையில் கொண்டுவந்து, இரண்டு நாடுகளும் போராட்டத்தை நடத்துகிறார்கள், சீஸ் ஃபையர் செய்து விடுங்கள் என்று சொன்னார்கள். நாடகம் நடத்தும் அளவில் தீர்மானத்தைக்கொண்டு வந்து பல்வேறு நாடுகளின் மனத்தை திசைதிருப்ப முயன்றார்கள். இது வேதனைக்குரியது. 'நோ வார்', 'சீஸ் ஃபையர்' என்ற அளவில் நம் நாட்டைவிட உலகத்திலே எந்த நாடும் விட்டுக் கொடுக்கக்கூடிய அளவில் மனப்பான்மை இருக்கவே இருக்காது என்பது 22 வருஷகால வரலாற்றைப் பார்த்தால் தெரியும். நாம் எந்தவிதமான போரிலும் இறங்க பொதுமக்களும், இராணுவப்படையும் சற்றுக்கூட விரும்பவில்லை என்பதற்கு அடையாளம் உலகத்தின் வரலாற்றைப் பார்த்தால் தெரியும். மேனக்ஷா அவர்கள், இராணுவத் தலைவர் அவர்களின் அப்பீலில் இருக்கும் வேண்டுகோளின் சொற்களை உலகம் எடுத்துப் பார்க்க வேண்டும். எந்த நாடாகயிருந்தாலும்கூட, இவ்வளவு அடக்கத்தோடு ராணுவப்படையின் அதிகாரி எழுதியிருக்க மாட்டார்கள். ஆனால் இவர்கள் நல்ல நல்ல அப்பீல்களை விமானம் மூலம் பங்களாதேஷில் போட்டார்கள். உண்மையிலேயே நம்முடைய அடக்கத்தின் காரணமாக, பண்பின் காரணமாக இன்று எப்படி நடந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அங்கேயும் பயங்கரமான சேதம் ஏற்பட்டிருக்க வேண்டியதைத் தவிர்த்து, சிலமணி நேரம் விட்டு வைத்திருக்கும்படி நம்முடைய துருப்புக்களுக்குச் சொன்னார்கள்.

பங்காளாதேஷ் விடுதலையாகியிருக்கிறது. ஏதோ சாக்கை வைத்துக் கொண்டு 7-ஆம் கப்பல் படையை அமெரிக்கா கொண்டுபோகும் நேரத்தில் முக்கிய விஷயத்தைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். அமெரிக்கா 7-ஆம் கப்பல்படையை ஏன் எடுத்துக்கொண்டு போனார்கள்? அதை வெளிப்படை

யாக சொல்லித்தான் ஆகவேண்டும், பொதுமக்களுக்கு மட்டும் அல்ல, உலகமும் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு சாக்கை வைத்திருக்கிறார்கள். நாற்பது சில்லறை அமெரிக்கர்களைக் காப்பாற்றி எடுத்துக்கொண்டு செல்வதற்காக என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையாகச் சொல்லுகிறேன், 40 பேர்களுக்கு அங்கேயிருக்கக்கூடிய இராணுவப்படையினர் பாதுகாப்புக்கு வாக்குறுதி தந்ததற்குப்பிறகும் அதற்குத் தேவையிருக்கிறதா ?

அதுமட்டுமல்ல, இப்பொழுது சரணாகதி ஆகியிருக்கும் அவர்களையும்கூட இன்றைக்கு நல்லவகையிலே காப்பாற்ற, பண்போடு கவனிக்கப்பட்டிருக்கிறார்கள். நாம் நேற்று மாலை நேரத்தில் அமெரிக்க கான்சல் அலுவலகத்திற்குப் போகும் நேரத்தில், திருப்பூர் மொய்தீன் அவர்கள்கூட மிகவும் அழகாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள், அதைப்பற்றி கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு நாட்டுக்கு எதிராக கப்பல் படையைக் கொண்டு வந்திருக்கின்ற நேரத்தில், அந்த வேகம் இருக்கின்ற நேரத்தில், அந்த நாட்டின் கான்சல் ஜெனரல் அலுவலகத்திற்கு இவ்வளவு அமைதியோடு போலிஸ் பாதுகாப்புக் கொடுப்பார்களா என்று பார்க்க வேண்டும். போலீஸ்காரர்களுடைய பணியை நல்ல வகையில் பாராட்டுகிறேன். நாங்கள் வேகமாகப் போகிற நிலையில் கூட உணர்ச்சிகரமான சூழ்நிலையில்கூட இதுவரையில்தான் போகலாம் இதற்கு மேல் போகவேண்டுமென்றால் ஒருவர், இருவர் மட்டும் போவதாக இருந்தால் அனுப்புகிறேன் என்றார்கள். கே. டி. கே. அவர்கள் எல்லோரும் போவதாக இருந்தால் சரி இல்லையென்றால் வாவில்லை என்று ஆணித்தரமாகச் சொல்லிவிட்டார்கள். அந்த அளவுக்கு நாம் இன்னொரு நாட்டுக்கு மதிப்பு தருகிறோம்.

We are prepared to protect the property of a country even though that country is opposing us.

என்று சொல்லக்கூடிய அளவுக்கு நாம் நடந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் எப்போதும் 'கன் போட் டிப்ளமசி' தான் நடத்திக் கொண்டு வருகிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்களும் கண்டித்துச் சொல்லி இருக்கிறார்கள்.

குறிப்பாக, ஒரு விஷயத்தை இந்த இடத்திலே சொல்லலாம் என்று கருதுகிறேன். 25 ஆண்டு காலமாக அமெரிக்க வரலாற்றில் 'கன் போட் டிப்ளமசி' தான் நடந்து வருகிறது. 1939-ல் இருந்து 1945 வரை ஓரளவு டிப்ளமசி நன்றாக இருந்தது என்று சொல்வார்கள். அதற்குக் காரணம் அந்த ஆண்டுகளில்—

They never had any diplomacy and they simply followed the diplomacy of Britain என்பதுதான். பிரிட்டிஷாருடன் கூடிய காரணத்தால் அந்த அளவுக்கு இருந்ததே தவிர வேறல்ல.

இந்தப் போருக்கு முக்கியமாகப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டியவர்கள் அமெரிக்காக்காரர்கள்தான். யாகியாகானிடத்தில் சென்று இந்த மாதிரியான போரில் ஈடுபடவேண்டாம்; இது அக்கிரமமான போர் என்று சொல்லியிருக்கலாம். அதைச் சொல்லத் தவறியது மிக மிக வருந்தத்தக்கது என்று இந்த அவையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு முக்கியமான விஷயத்தை முதலமைச்சர் அவர்கள் மிக நெஞ்சுருக்கம் தரக்கூடிய அளவுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அனைத்துக் கட்சித் தலைவர்களும், மற்றவர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் கூறினார்கள். காலஞ்சென்ற ஆறுமுகம் சார்பாக எழுதிய கடிதத்தைப் படித்தார்கள். அதை

இங்கும் படித்தால் நன்றாக இருக்கும். அது நெஞ்சுருக்கம் தரக்கக்கூடிய அளவுக்கு அமைந்திருந்தது. அந்த அளவுக்கு அவ்வளவு சாமர்த்தியமாக ஆறுமுகம் என்பவர்கள் தன் மீது குண்டு பாய்ந்த பிறகு ஏரோப்பிளேனை வீழ்த்திவிட்டு அந்த ஏரோப்பிளேன் விழுந்த பிறகுதான் உயிர் விட்டிருக்கிறார். He was able to hold on till the plane fell down. அந்த அளவுக்கு தீரமாகநடந்து கொண்ட காட்சியைப் பார்க்கிறோம்.

Our army is one of the best armies.

People from Tamil Nadu are the super-best.

என்று சொல்லுவார்கள். அவ்வளவு ஆணித்தரமாக, ஒரு குண்டு செலவு செய்தாலும் கூட ஒரு ஏரோப்ளேனை அழிக்கக்கூடிய அளவுக்குக் கடமையாற்றுகிறவர்கள் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டுக்கு ராணுவ விஷயமாக டிஃபென்ஸ் கான்ஷியஸ்னஸ் இல்லையென்று முன்பு சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது நல்ல வகையில் தமிழ்நாட்டுக்கு டிஃபென்ஸ் கான்ஷியஸ்னஸ் வந்திருக்கிறது. நாம் உற்பத்தி செய்திருக்கக்கூடிய விஜய் டாங்கைப் பற்றி ஜெனரல் சொன்னார் ('we have the best tanks that I have ever seen' என்று சொல்லக்கூடிய அளவுக்கு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முக்கியமான ஒரு அறிவிப்பைச் சொன்னார்கள். நம்முடைய இராணுவப்படையில் போரில் வீரச் சக்கரங்கள் பெற்றுக் கொண்டவர்களுக்கும், உயிரிழந்தவர்களுக்கும் நல்ல பல பரிசுகளைக் கொடுக்கிறேன் என்று அறிவிப்புக் கொடுத்தார்கள் அதை நம்முடைய ஏரியா கமாண்டர் பாராட்டிச் சொன்னார். நம்முடைய இந்திய நாட்டிலே வேறு எந்த இடத்திலும் அந்த மாதிரி வாக்குறுதி தரவில்லை. அப்படித் தரக்கூடிய அளவுக்கு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கும் நிலைமையில் சொன்னார்கள். அதை இங்கும் பாராட்டி இன்னும் அந்தத் துறையில் முதலமைச்சர் அவர்கள் நல்ல வகையில் கவனம் செலுத்த வேண்டும். இப்போது நம்முடைய தமிழ் நாட்டில் டிஃபென்ஸ் கான்ஷியஸ்னஸ் இருக்கிறது என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அன்புக்குரிய பெருமாள் பேசுகிறபோது இராணுவப் படையை பிறகு நாம் மறந்துவிடுவோம் என்று சொன்னார்கள். பல இடத்தில் கேட்டிருக்கிறேன். 'you forget O.G. (Olive-Green) after the war is over என்று சொல்லுவார்கள். அந்த அளவுக்கு இல்லாத வகையில் அனைத்து நண்பர்களும் உணர்ச்சியை எடுத்துச் சொன்னதன் விளைவாக மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரும்போது இராணுவத்தில் உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களை நல்ல வகையில் காப்பாற்றக்கூடிய அளவுக்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இப்போதே பங்களா தேசப் போரில் நம்முடைய படையினரில் ஆயிரம் பேர் இறந்திருக்கிறார்கள் ; இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கிறார்கள்; 89 பேர்காணப்படவில்லை. இந்தப் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தக்கூடிய அளவுக்கு தமிழகத்தைப் பொறுத்தவரை பல நடவடிக்கைகளை இந்தத் திசையில் எடுத்துக்கொள்ளலாம். அதற்கு அரசாங்கத்தோடு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்புத் தரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் முதலமைச்சர் அவர்கள் இன்னொரு விஷயத்தையும் சொன்னார்கள். பத்து கோடி ரூபாயைத் திரட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அந்த வகையிலே முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை அனைத்து உறுப்பினர்களும், நாலரைக் கோடி மக்களும் கொடுத்த வாக்குறுதி என்ற அளவுக்கு அதிலே உற்சாகம் காட்ட வேண்டுமென்று கூறுகிறேன்.

பங்களா தேசம் நல்ல முறையில் ஆரம்பித்திருக்கிறது. புதிதாக உருவாகியிருக்கிற, சுதந்திரக் கொடி பறக்கக்கூடிய நிலையை அடைந்திருக்கின்ற புனிதமான பங்களா தேசம் செக்குலர் ஸ்டேட்டாக வருகின்ற காட்சியைப் பார்க்கும் போது அனைவரும்—

Let us all wish them all the best of luck.

அந்த நாட்டை வாழ்த்துவோம் என்று கூறிக் கொண்டு இந்தத் தீர்மானத்தை முழு மனத்தோடு, பெருமையோடு வரவேற்று முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: கனம் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தை வழிமொழிகின்ற வகையிலே சில கருத்துக்களை இங்கே பலரும் குறிப்பிட்டார்கள். என்னுடைய கட்சியின் சார்பாகவும் சில கருத்துக்களைக் கூறி இந்தத் தீர்மானத்தை முழு மனத்தோடு ஏற்றுக் கொள்ளுவதற்காக நிற்கிறேன்.

பங்களாதேஷ் இன்றைக்குச் சுதந்திர நாடாகி விட்டது. அது சுதந்திர நாடான காரணத்தால் நாம் பெற்றிருக்கிற மகத்தான வெற்றியை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். பங்களாதேஷ் என்ற அமைப்பானது அங்கே தோன்றுவதற்கு முதன்மையான காரணமாக இருந்தது—அங்கே தேர்தல் நடந்து, தேர்தலில் வெற்றி பெற்ற பிரதிநிதிகளுக்கு அதிகாரத்தை வழங்காமல் அடக்குமுறை நடந்தது என்பதுதான் காரணமாகும். ஆகவே, அதை ஜனநாயக மரபை, ஜனநாயகக் கொள்கையைப் புறக்கணிக்கின்ற ஒரு காரியமாக இந்திய தேசமானது எடுத்துக் கொண்டது என்பதுதான் உண்மையாகும்.

இந்த தேசத்தில் ஐந்து பொதுத் தேர்தல்கள் நடந்துவிட்ட காரணத்தால் இங்கே ஜனநாயகம் வலுப் பெற்றிருக்கிறது . என்று உலகத்தில் அவ்வளவு பேரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். அதிலும் குறிப்பாக, 1967-ம் வருஷத்திலிருந்து நடந்து வருகின்ற தேர்தல்கள் எல்லாம் ஜனநாயகத்தை இன்னும் வலுவாக்கி வேரூன்றி வைத்திருப்பதற்கு எடுத்துக் காட்டாகும் என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். அம்மாதிரி ஜனநாயகம் வலுவோடு வேரூன்றிய நாடாக இருக்கும் காரணத்தால் அண்டை நாட்டில் ஜனநாயகத்திற்கு ஒரு கேடு ஏற்பட்டபோது ஜனநாயகக் கொள்கைக்குத் தீங்கு ஏற்பட்ட போது இந்த நாடு இயல்பாக அந்த ஜனநாயகக் கொள்கையைக் காப்பாற்ற முன்வருவதுதான் சரியானது. அந்த முறையில் ஜனநாயகக் கொள்கையைக் காப்பாற்றுவதற்காக நாம் ஏற்றுக் கொண்ட சுமை, நாம் ஏற்றுக் கொண்ட பொறுப்பு, நாம் இழந்த இழப்பு இவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் சிறிது அதிகம் என்று கூடப் பல பேர்கள் கருதக்கூடும் என்று நான் நினைக்கிறேன்.

உலகத்தில் இரண்டு கொள்கைகளிடையே மோதல் இருந்து கொண்டிருக்கிறது. சர்வாதிகாரமா, ஜனநாயகமா என்ற மோதல் இருந்து கொண்டிருக்கும் நேரத்தில் நம்முடைய நாடு உலகத்தில் இருக்கும் நாடுகளில் சைனா நாட்டுக்கு

அடுத்தபடியாக மக்கள் தொகையைக் கொண்ட நாடாக இருக்கும் காரணத்தாலும், ஆசியாவிலே பல்வேறு விதமான நல்ல பண்புகளை வளர்ந்துக்கொண்டு வந்திருக்கின்ற நாடாக இருக்கும் காரணத்தால் உலகத்தின் முன்னால் தலை நிமிர்ந்து நிற்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இவ்வளவு நாட்களாகத் தத்தளித்துக் கொண்டிருந்த பிரச்சினையில் ஜனநாயகக் கோட்பாடுகளின், ஜனநாயகக் கொள்கைகளின் வழியில் தலைநிமிர்ந்து நிற்கும் நாடு என்ற வகையில் பங்களா தேசத்திற்கு உதவிசெய்ய வேண்டுமென்ற வகையில் உதவி இன்று பங்களாதேஷ் அமைந்திருக்கிறது.

அப்படி நாம் எடுத்துச் செய்கிற காரியத்தின் விளைவாக ஜனநாயகம் வளர்கின்ற நிலையில் சர்வாதிகாரம் தளரும் நிலைமை ஏற்படும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஏற்கனவே சர்வாதிகாரம் தளர்ந்து கொண்டிருக்கிறது. உலக நாடுகளிலே எந்த நாடாக இருந்தாலும் சர்வாதிகாரம் என்று உறுதியாக நின்ற இடங்கள் எங்கும் தளர்ந்து கொண்டு வருகின்ற நிலையில் ஜனநாயகப் பாதையில் வரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள்; ஜனநாயகக் கோட்பாடுகளின் வலுவைக் கண்டு, முன்னேற்றத்தைக் கண்டு தங்களுடைய கொள்கைகளை மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் நம்முடைய ராணுவம் ஏதோ புத்தகத்தில் படித்துப் பயிற்சி மட்டும் செய்துகொண்டிருந்தால் போதாது. அப்படிச் செய்வதன் மூலம் ராணுவ வலுவானது வளராது. ஆகவே, அனுபவம் ஏற்பட வேண்டும், அப்படி அனுபவம் ஏற்படுவது, பெரும் போரில் அனுபவம் ஏற்படுவது என்று சொல்வது அது பெரும் நஷ்டத்தை உண்டாக்கக்கூடும். ஆனால் இந்தச் சிறிய போரில் நாம் அந்த அனுபவத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இனிமேல் நம் ராணுவ வீரர்கள் உலகத்திலே இருக்கிற ராணுவ வீரர்களை விட எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்ல என்ற அனுபவத்தை அவர்கள் பெற்றுவிட்டார்கள் என்று இந்தப் போரிலிருந்து நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த முறையில் நாம் லாபம அடைந்திருக்கிறோம். ஜனநாயக முறையில் லாபம் அடைந்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல. உலகத்திலே இருக்கிற நாடுகள் எல்லாம் இந்தியாவின் வளர்ச்சியை விரும்பவில்லை என்று நான் ஏற்கனவே சொன்னேன் ஒரு சந்தர்ப்பத்தில். இப்போது அந்த வளர்ச்சியை விரும்பாமல் தடையாக நிற்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைந்து வருகின்றன என்பதில் சந்தேகமில்லை. இன்னொரு வகையில் நம் ராணுவத்திற்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நாம் செலவு செய்து கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் பெரும் எல்லையில் நமக்கு எதிரிகள் இருந்து கொண்டு பெருந்தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தினால்தான். அவ்வளவு பெரிய படையை வைத்துப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்போது பங்களா தேஷ் வந்ததற்குப் பின்னால் அதிலேயும் குறைத்துக் கொள்வதற்கான வாய்ப்பிருக்கிறது. அதுவும் நம் நாட்டின் பொருளாதாரம் வளர அந்தப் பணம் பயன்படும் என்ற முறையில் லாபம் அடைந்திருக்கிறோம்.

அதேநேரத்தில் பங்களா தேஷ் ஏற்பட்டுவிட்டது என்பதால் மட்டும் ஆகிவிடாது. அதைப் பாதுகாப்பது, அதன் புனரமைப்பு செய்வது இப்படி பல கடமைகளும் நம்மைச் சார்ந்திருக்கின்றன. அதற்கெல்லாம் இன்னும் வெகுகாலம் ஆகலாம். அதில் ஈடு கொடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

அதேநேரத்தில் சிலர் குறிப்பிட்டார்கள் . அமெரிக்காவும் சினுவும் சும்மா இருக்காது என்று. நான் கருதுகிறேன், அமெரிக்காவும் சினுவும் இனிமேல் சும்மாதான் இருந்தாகும். அமெரிக்காவில் இருக்கிற ஜனாதிபதி நிக்சன் இந்த நடவடிக்கைகள் மூலம் அடுத்த தேர்தலில் தோற்று விடுவார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை, என்று நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். (ஆரவாரம்).

தேசத்திலுள்ள அரசியல் நிலைமைகளில் பெரும் மாற்றங்களை இந்த பங்களா தேஷ் உண்டாக்கியிருக்கிறது. இந்த மாற்றம் ஆசிய கண்டத்தில் இந்தியாவை ஒரு தனிப் பெரும் நாடாக, ஒரு தனிப் பெரும் ஸதானத்தில் கொண்டு போய் நிறுத்துகிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. இவ்வளவு நாட்கள் இருந்த நிலைமை இந்தியாவுக்கு நண்பர்கள் யார், விரோதிகள் யார் என்று உலக நாடுகளுக்கு இருக்கிற எல்லையை வைத்து நாம் தீர்மானிக்க முடியாமல் இருந்தது. ஆனால் இப்போது நமக்கு ஒரு திர்மானம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவினுடைய நட்பை நாடுகிறவர்கள் எந்தெந்த நாடுகளைச் சார்ந்தவர்கள், எந்தெந்த நாடுகள் எல்லாம் நமக்கு விரோதிகளாக இருக்கிறார்கள் என்பதை நாம் இப்போது நிர்ணயம் செய்தாகிவிட்டது. இதுவும் ஒரு பெரிய இலாபமாகும். இருந்தாலும் கூட நம் விரோதிகளாக இருந்த பல நாடுகள் இன்னும் சில நாட்களில் நமக்கு ஆதரவான நண்பர்களாக மாறிவிடுவார்கள் என்பதை இந்த நேரத்தில் மறந்துவிடக் கூடாது. உலக நாடுகளில் உள்ள வல்லரசுகளுக்குப் பின்னால் பல நாடுகள் தொங்கிக் கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன, அவசியங்கள் இருக்கின்றன. அதன் காரணமாக தனக்கு விருப்பமில்லாத காரியத்தைக் கூட, நியாயம் இல்லை என்று உணர்ந்த காரியத்தைக் கூட ஆதரிக்கவேண்டிய அவசியம் பல நாடுகளுக்கு இருக்கின்றது.

ஆனால் இன்று பங்களா தேஷை, இரண்டே நாடுகள் இந்தியாவும், பூட்டானும் மட்டும் அங்கிகரித்து இருக்கின்றன. ஆனால் உலக நாடுகளில் இன்னும் பல நாடுகள் அங்கிகரிக்க வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இன்னும் சில நாட்களில் மற்ற பல நாடுகள் அங்கீகரிப்பதாக அறிவிப்பு வெளியிட்டு விடுவார்கள் என்று நான் நினைக்கிறேன். அப்படி வெளியிட்ட பின்னர்தான் இந்த நிலைமையில் ஏற்பட்டிருக்கிற மாற்றம் எவ்வளவு மகத்தானது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஆகவே இன்றுள்ள நிலைமையில் ஒரு படி முன்னேறியிருக்கிறோம். ஒரு இடத்தில் போய் நின்று கொண்டிருக்கிறோம். இன்னும் பல இடங்களுக்கு நாம் செல்ல வேண்டியிருக்கிறது. இன்னும் வெகு தூரம் நாம் நடக்க வேண்டியிருக்கிறது. அதிகம் நடக்க வேண்டுமென்று சொன்னால் இதில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டவர்கள் நம் ராணுவ வீரர்களும், தளபதிகளுமாகும். அவர்கள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒவ்வொரு சுதந்தர நாட்டிலேயும் இருக்கிற ராணுவ வீரர்களையும் தளபதிகளை

யும் போற்றுவது என்பதில் தேசபக்தி உள்ள மக்கள் எப்போதுமே பின்னடைய மாட்டார்கள். அப்படிப் பின்னடைவது நாட்டின் பாதுகாப்பிற்கு உகந்ததல்ல. அங்கு ராணுவக் களத்தில், போர்க்களத்தில் அவர்கள் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து போராடுவது என்றால், போரை நடத்துவது என்றால் அப்படி போரை நடத்துவதற்கு உற்சாகம் அவர்களுக்கு ஏற்பட வேண்டும். அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட வேண்டும். அவர்கள் இந்த தேசத்திற்காக தங்கள் உயிரை விட்டார்கள் என்று சொன்னால் அந்த உயிருக்குப் பதிலாக அவர்கள் குடும்பங்கள், குழந்தைகள் எல்லாம் நல்லவிதமாகப் பாராட்டப்படுவார்கள். பாதுகாக்கப்படுவார்கள், உயர்த்தப்படுவார்கள் என்ற நிலைமை இருந்தால்தான் அந்தக் காரியங்களை அவர்களால் உற்சாகமாக செய்ய முடியும். ஆகவே இந்த நாட்டு மக்கள் அந்தப் பணியை அடுத்தபடியாகச் செய்வார்கள் என்று நம்புவதில் ஒன்றும் சந்தேகமில்லை.

ஆகவே இந்தத் தீர்மானத்தில் கூறியிருக்கிற படி இந்தத் தேசத்தினுடைய மிகப் பெரிய தளபதியாக தோற்றமளித்துக் கொண்டிருக்கிற இந்திரா காந்தி அவர்கள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்களாக இந்தக் காரியத்தின் மூலம் ஆகியிருக்கிறார்கள். ஆகவே அவர்களை மற்றவர்களுடன் சேர்ந்து என்னுடைய கட்சியும் பாராட்டுகிறது.

அதேநேரத்தில் முஜீபூர் ரகிமானை விடுதலை செய்கிற காரியம் இருக்கிறதே அது இன்னும் சிக்கலில்தான் இருந்து கொண்டிருக்கிறது. உலக நாடுகளில் இருக்கிறவர்கள் இந்தக் காரியத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் நாம் இந்தத் தீர்மானத்தில் சொல்லியிருப்பது மிகவும் பொருத்தமானது.

ஆகவே, இந்தத் தீர்மானத்தில் இருக்கிற கருத்துக்களையும், வாசகங்களையும் முழுதாக என் கட்சி ஆதரிக்கிறது, வருங்காலத்தில் இந்தத் தேசத்தில் செய்ய வேண்டிய பணிகளில் மற்ற எல்லாக் கட்சிகளுடன் ஒன்று சேர்ந்து முன்னணியில் நின்று பணி செய்வதற்கு உறுதி அளிக்கிறது என்று கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. இ. எஸ். தியாகராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள பங்களா தேஷ் வெற்றித் தீர்மானத்தை நான் தமிழரசுக் கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். உலகம் போற்றும் வகையில் இந்த வெற்றிக்கான வழி வகைகளைத் தேடித் தந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களை நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். இந்த வெற்றிக்காகப் பாடுபட்ட அத்தனை பேர்களையும் பாராட்டுவதோடு இந்தப் போரில் உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி அமர்கிறேன். (ஆரவாரம்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இங்கு முன்மொழியப்பட்ட தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களும் வரவேற்றுப் பாராட்டி இந்த மன்றமே ஒருமுகமாக நிறைவேற்றுகிற கட்டத்தில் நான் மேலும் சில வார்த்தைகளைக் கூறுவது பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

சுதந்திரக் கொடியை வங்காள தேசத்து மக்கள் ஏற்றிய நேரத்தில் அதை ஏற்றிவைப்பதற்கென்று தனி ஒரு இடம் கூட இல்லை. வங்காள தேசத்தில் எங்கேயோ ஒரு மூலையில் ஒரு மரத்தடியில் அவர்களுடைய அரசை அவர்கள்

உருவாக்கினார்கள். இவர் ஜனாதிபதி, இவர் பிரதமர், இவர் ராணுவ தளபதி என்றெல்லாம் அவர்கள் பிரகடனம் செய்ததை உலக நாடுகள் கேலிக்கண்களோடு அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்ததையும் இது எங்கே நடக்கப் போகிறது, புது நாடா, இது உருவாகுமா என்றெல்லாம் கேட்ட கேள்விகளையும் யாரும் மறந்திருக்க முடியாது. இன்னமும் பத்திரிகைகளில் வந்த அந்த புகைப்படம் நம் நெஞ்சிலே பசுமையாகப் பதிந்திருக்கிறது. ஒரு மாந்தடியில் ஒரு சாதாரண துணி போட்டுக்கூட மூடப்படாத ஒரு மேஜையும் பழுது பார்க்கப்பட வேண்டிய சில நாற்காலிகளும், அதிலே நான்கைந்து வங்க தேசத்தினுடைய புதிதாக அறிவிக்கப்பட்ட நிர்வாகிகளும், அவர்களுக்கு எதிரே மிகச் சொற்பமான ஒரு கூட்டமும் அதனைச் சுற்றி சில மரம் செடிகளும் இப்படிப்பட்ட ஒரு புகைப்படம் எல்லா ஏடுகளிலும் வெளியாகியிருந்தது.

ஆனால், இன்றைக்கு அந்தப் படம் மாறி அவர்கள் கிட்டத்தட்ட ஆறு கோடிக்கு மேற்பட்ட மக்களின் தள நாயகர்களாக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். எங்கேயோ ஒருயிடத்தில் அவர்களாக சூட்டிக் கொண்ட முஜ்பூர் நகர் என்கிற இடத்தில் பறக்கவிடப்பட்ட அந்தக் கொடி இன்றைக்கு வங்க தேசத்தினுடைய தலைநகரமான, இந்திரா காந்தி அவர்கள் அறிவித்ததைப் போல் சுதந்திர நாட்டின் சுதந்திர தலைநகரமான, டாக்கா நகரத்தில் பறக்க விடப்படுகிறது என்பது புறக்கணிக்கப்படுகிறவர்கள், அலட்சியப்படுத்தப்படுகிறவர்கள், உரிமைகள் நசுக்கப்படுகிறவர்கள், விடுதலை விரும்பிகள் என்றைக்காவது ஒரு நாள் வெற்றியை நிச்சயமாகப் பெற்றுத் தீருவார்கள் என்ற நம்பிக்கையை (பலத்த ஆரவாரம்) அகில உலகிற்கும் ஜனநாயகரீதியில் அறிவித்துக் கொண்டிருக்கிற தெரிந்த சாட்சியமாகும்.

முஜிபீர் நகர் என்று விளையாட்டாகச் சொல்லப்பட்ட பெயர், வேடிக்கையாகக் கணிக்கப்பட்ட ஒரு நகரத்தினுடைய பெயர், ஆனால், இன்றைக்கு டாக்கா நகரத்திற்கே அந்தப் பெயரை வைக்கலாமா என்று அவர்கள் எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். 'டாக்கா' என்றாலே, டாக் என்ற ஒரு வகை மரங்கள் நிறைந்த இடம் என்றும், அந்த அடிப்படையில் தான் அந்த நகரத்திற்கு அந்தப் பெயர் வந்தது என்றும் கூறுகிறார்கள். அதே போல், மரங்கள் அடர்ந்த இடத்தில் துவங்கப்பட்டு, மரங்கள் அடர்ந்து இருப்பதன் காரணத்தால் பெயர் பெற்ற தலைநகரத்தில் அந்த அரசு நிலை பெறுகிறது. அப்படி நிலைபெறுவதற்கான விடுதலைப் போராட்டத்தில் அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, அவர்கள் பக்கம் இருந்து, மனித உணர்வோடு ஜனநாயகக் கடமையினைச் செய்து முடித்த இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நாடும், நாதிலரும் போற்றத் தவறாது.

இங்கே திருமதி அனந்தநாயகி சொன்னார்கள், பெண்மையின் பெருமையை உலகம் உணர்ந்தது என்று. கொஞ்சம் தாமதாக உணர்ந்தாலும் (சிரிப்பு) பெண்ணின் பெருமையை உலகம் உணர்ந்திருக்கிறது. இந்திரா காந்தி அவர்கள் எடுத்த அந்த முயற்சிகளை அனைத்து உலகத்திலுள்ள, சில நாடுகள் ஆரம்பத்தில் அலட்சியப்படுத்தினாலும், அந்த நாடுகளுக்கெல்லாம் பாடம் போதிக்கும் வகையில் இந்திரா காந்தி திறமையையும் ஆற்றலையும், இந்தியாவின் ஒருமித்த சக்தியையும் எடுத்துக் காட்டி, மகத்தான வெற்றியினைப் பெற்றிருக்கிறார்கள்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துக் காட்டியது போல, இந்தப் போர் இந்தியாவிலே ஒரு பக்கத்திலே நடைபெற்றுக் கொண்டு இருந்தாலும், அது தமிழ் நாட்டையும் பாதிக்கக் கூடிய போர் என்பதையும் யாரும் மறந்து விடக் கூடாது. அன்றைக்கே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டில் தமிழ் மக்களும், ஆந்திரா, மைசூர், குஜராத் என்ற பாகுபாடு இல்லாமல், இந்தியா ஒன்று என்கிற ஒரே உத்வேகத்தோடு எதிரியை வீழ்த்துவதற்குப் போர் முனையில் நின்று கொண்டு இருக்கிறார்கள். தமிழ் நாட்டுக்கு போர் வராவிட்டாலும், தமிழ் நாடு போர் முனையில் இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. இன்றைக்கு, தமிழ் நாட்டு வீரர்கள் சிலர், ஏன், பலர் என்று கூடச் சொல்லலாம், இந்தப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அணிந்திருந்த ராணுவ உடைகள் அவர்களுடைய வீட்டுக்குத் திரும்ப அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த ராணுவ உடைகளை, கண்ணீரால் நனைத்து, அவைகளை தன் அருமந்தச் செல்வன் நினைவோடு, வீட்டுச் செல்வன் நினைவோடு, பேழையில் வைத்துப் பூட்டி, மலர் கொண்டு பூஜித்துக் கொண்டு இருக்கிறார்கள், வீட்டுத் தாய்மார்கள், அவர்களுடைய அனுதாபத்திற்கும், ஆதரவுக்கும் போகின்றவர்கள் நாம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

போர் வெற்றியையும் கொடுக்கும். ஆனால் போருக்குப் பின் ஏற்படுகின்ற விளைவுகளை நாடு சமாளித்துத் தீரவேண்டும். அந்த சமாளிக்கின்ற ஆற்றலை நாம் அனைவரும் பெற்று இருக்கின்றோம். நம்முடைய மன்றத்தில் கட்சித் தலைவர்கள் அனைவரும் எடுத்துக் காட்டியது போல, ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினருக்கும் கடமை உண்டு. இந்த நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் பொறுப்பு உண்டு; அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்ததும், மாவட்ட அதிகாரிகள் மூலமாக தகவல் அந்த அந்த இடங்களுக்குத் தரப்படுகிறது. அந்த நேரத்தில், அதிகாரிகள் வீட்டாருக்கு ஆறுதல் கூறுவதற்கு முன்பாக, ஆங்காங்கே, மக்கள் பிரதிநிதிகள் சென்றார்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சென்றார்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் சென்றார்கள், ஒன்றியத் தலைவர்கள் சென்றார்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் சென்றார்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் சென்றார்கள். மேலவை உறுப்பினர்கள் சென்றார்கள் என்று சொல்லுகின்ற அளவுக்கு, சில இடங்களில் கூடுமானால் அமைச்சர்களே கூட இல்லங்களுக்குச் சென்றார்கள். ஆறுதல் சொன்னார்கள் என்று, அதிகாரிகளை முந்திக் கொண்டு நாம் நின்றால்தான், 'நம் மகன் இந்த மாளப் போர்க் களத்தில் மடிந்துவிட்டாலும், அந்த மகனுக்குப் பதிலாக, இதோ, இன்னொரு மகன் இருக்கிறான்' என்று அந்தத் தாய் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைவார்கள், நம் தாய்த்திருநாடு எழுச்சியினைப் பெறமுடியும். நம்முடைய நாடு புறநானூற்றுப் புகழ் கொண்ட நாடு; புறநானூற்றுத் தாய்மார்கள் வாழ்ந்த நாடு நம் தமிழ் நாடு. இங்கே வீரத்திற்குப் பஞ்சம் இல்லை. மானத்தை நிலைநாட்ட, மறவர்கள் போர்க்களத்தில் தங்கள் இன்னுயிரைப் பலி கொடுப்பது நம் நாட்டைப் பொறுத்தவரையில் பேசப்படுகிறது.

'வன்கொடுமைச் சாக்காட்டில், விளையாடும் தோள்
எங்கள் வெற்றித் தோள்கள்;

. . . .

சென்றுபதி தனில் கமழ்ந்து வீரம் செய்கின்ற மூச்சு
எங்கள் மூச்சாம்'

என்று தமிழ் பாட்டில் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பாடியதற்கு ஏற்ப மறவர்கள் நிறைந்த நாடு தமிழ் நாடு, தமிழ் மாநிலம். ஆகவே, அந்தத் தமிழ்ப் பெருமக்கள் இந்தப் போராட்டத்தில் வெற்றியினைத் தேடித்தர தங்கள் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள், அங்கங்களை அறுத்துக் கொடுத்திருக்கிறார்கள், கால் கைகளை வெட்டி பச்சை ரத்தத்தைப் பரிமாறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீர மறவர்களுக்கு இந்தப் பேரவையின் வணக்கம் சொல்வதில் நாம் நம்முடைய மதிப்பை உயர்த்திக் கொள்கிறோம் என்றால் மிகையாகாது. இப்பொழுதும் கூட அப்படிப்பட்ட வீரர்களுக்கு இந்த அரசு சில விருதுகளையும், அந்த விருதுகளுக்கு ஏற்ப பண முடிப்புகளையும் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது போதாது என்றாலும், நம்மால் முடிந்ததைச் செய்கிறோம். நம்முடைய இதயத்தை அந்தக் குடும்பத்தின் பக்கம் ஒப்படைக்கிறோம். நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள் கன்னர் ஆறுமுகம் அவர்கள் பற்றிய கடிதத்தை இந்த அவையில் குறிப்பிடுவது நல்லது என்று. அது உங்களுடைய உள்ளத்தைத் தொடக் கூடியது. இப்படிப்பட்ட இல்லங்களிலே ஆறு என ஓடுகின்ற கண்ணீரைத் துடைப்பதற்குப் பயன்படும் என்று இதை அவையில் படிக்கிறேன். அது நீண்ட கடிதம், ஒரு பகுதியை மாத்திரம் படிக்கிறேன். மேஜர் பால் அவர்கள், ஆபீசர் கமாண்டிங், எழுதியுள்ள கடிதம் :

Unfortunately gunner Arumugam got a bullet hit in his head while fighting this action but he carried on his duties until he fell dead, in the service of our motherland. His bravery and courage has become an example and source of inspiration for the entire unit. Gunner Arumugam was recently married and leaves behind his widow, who is understood to be in the family way. We are all concerned about her and are doing our best in all possible ways. However, I shall be very grateful if you could kindly keep a fatherly and protective hand on her and extend all possible assistance to her.

இப்படிப்பட்ட கடிதங்கள், இதுபோன்று போர்க்காலங்களில் ஏராளமாக வரக்கூடும். ஆறுமுகங்கள் ஆயிரம் ஆயிரம் தோன்றக்கூடும். ஆறுமுகங்களுடைய குடும்பங்களுக்கு ஆறுதல் வழங்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அந்தப் பணியில் நாம் ஈடுபடுவோமேயானால் தான் இந்தியாவில் இருக்கின்ற 55 கோடி மக்களும், தமிழ் நாட்டில் இருக்கின்ற 4½ கோடி மக்களும் போர்க்களத்தில் நிற்கின்றோம் என்கிற உணர்ச்சி எதிரிக்கு உருவாகும் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்பொழுதும், இந்தியா, நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, மண்ணாசை பிடித்து அலையவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக, போர் நிறுத்தம் செய்கிறது என்று அறிவித்திருக்கிறது. ஒன்றை நீங்கள் மறந்து இருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். முதலிலே இந்தியாவின் மீது போர் தொடுத்தது பாகிஸ்தான். ஆக, போர் தொடுத்ததில் முந்திக் கொண்டது பாகிஸ்தான். ஆனால் இன்றைக்குப் போர் நிறுத்தம் செய்கிறோம் என்பதில் முந்திக்கொண்டிருப்பது, இந்தியா என்பதை மனத்தில் வைத்துக் கொண்டு, உலக நாடுகள், சில நாடுகள், தாங்கள் எடுத்த அநியாயமான முடிவுகளிலிருந்து தங்களை மாற்றிக் கொள்ளாவிட்டால், இந்தியா அவர்களுக்குக் கட்டாயம் மேலும் புத்தி தரத் தக்க அளவுக்குப் பாடத்தைப் புகட்டும் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகம்

இல்லை (பலத்த சிரிப்பு). இன்றைக்கு அமெரிக்காவின் கையில் 'புட்டோ' இருக்கலாம். ஆனால் ரஷ்யாவின் கையில் 'விட்டோ' இருக்கிறது. (சிரிப்பு) இன்றைக்கு ஐ.நா. மன்றங்கள், நியூயார்க் நகரத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றது என்னவென்றால், நல்ல நாடுகள், நியாயத்திற்குப் பாடுபடும் நாடுகள் நியாயத்தின் பக்கம் ஆதரவு கோரும் நம் பக்கம் இருக்கின்றன என்று. அந்த நாடுகளுக்கு நாம் மேலும், மேலும், மீண்டும், மீண்டும் இந்தப் பேரவையின் சார்பில், 4½ கோடி தமிழ் மக்களின் சார்பில், நம் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளும் இந்த நேரத்தில், இந்தத் தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். (பலத்த ஆரவாரம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும் இங்கே கூறிய கருத்துக்களோடு இந்த பேரவையின் தலைவன் என்ற முறையில் மட்டுமல்ல, ஒரு சட்டமன்றத் தலைவன் என்ற முறையிலும் என்னுடைய கருத்துக்களையும், என்னுடைய உணர்வுகளையும் நான் இணைக்க விரும்புகின்றேன்.

இன்றைக்கு முடிவுற்றிருக்கின்ற போராட்டம் சட்டமன்றங்களைப் பற்றிய ஒரு பெரிய போராட்டமாகும். மனிதப் போராட்டங்களில் நியாயத்திற்காகவும், உரிமைகளுக்காகவும் போராடுவதைத் தான் வரலாற்றில் நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால், இன்றைக்கு வங்க நாட்டு மக்களுடைய விடுதலைப் போராட்டம், அந்த நாட்டில் ஒரு சட்டமன்றம் தேவையில்லை, அதை சவக்குழிக்கு அனுப்பவேண்டும் என்பதற்காக ராணுவத் தருக்கர்கள் சிலபேர் மேற்கொண்ட ஒரு அறைகூவலை ஒட்டி எழுப்பப்பட்ட போராட்டமாகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல் நியாயங்கள் என்றும் தோற்றதில்லை, அநியாயங்கள் என்றைக்கும் வெற்றிபெற்றதுமில்லை.

உலகத்திலே சில உரிமைகள் இருக்கின்றன. அவைகள் சாதாரண உரிமைகள் அல்ல. அடிப்படை உரிமைகள், பேச்சுரிமை, எழுத்துரிமை என்பதோடு கூட, இன்ஏலியனபிள் ரைட்ஸ் (Inalienable rights), அதாவது மனித உயிரிலிருந்து பிரிக்கமுடியாத உரிமைகள் என்று இருக்கின்றன. எல்லா மனிதர்களுக்கும் அந்த உரிமைகள் இருக்கின்றன. அந்த உரிமைப்படி ஒவ்வொரு உயிரும் புனிதமானது. அந்தப் புனிதமான உயிரை எடுக்க பெற்றெடுத்த தாய்க்குக் கூட உலகத்தில் உரிமையில்லை, சட்டப்படி. இந்த உரிமைக்காகத் தான் அமெரிக்க நாட்டில் பில்கிரிம் ஃபாதர்ஸ் என்பவர்கள் 400 ஆண்டுகளாகப் போராடி மிகப் பெரிய ஜனநாயகத்தை உலகத்தில் நிலைநாட்டினார்கள். கோடிக்கணக்கான ஒரு நாட்டு மக்கள் தங்களுக்கு எப்படிப்பட்ட அரசியல் அமைப்பு வேண்டும், எப்படிப்பட்ட வாழ்க்கை அமைய வேண்டும் என்று தீர்மானித்து விட்டால், அதை வாசிங்டன் ஆகட்டும், பீகிங் ஆகட்டும், இஸ்லாமாபாத் ஆகட்டும், உலகத்திலே எந்த நாட்டுக்காரனானாலும், மக்கள் உறுதியெடுத்து விட்டால் அதைத் தடுக்க முடியாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப் போல தாமதப்படுத்தினார்கள் என்பதற்கு வங்க நாட்டில் பதில் கிடைத்திருக்கிறது.

நம்முடைய நண்பர் திரு. தங்கமணி சொன்னது போல, பெரிய படுகொலை, மனிதப் படுகொலை நடைபெற்றிருக்கிறது. ஜீனோசைடு (Genocide) என்று சொல்லுவார்கள்; உலக வரலாற்றிலே நானும் படித்திருக்கின்றேன்.

ஹிட்லர் யூதர்களை அழித்தான், நீக்ரோக்கள் அழிக்கப்பட்டிருக்கிறார்கள். ரேஷியல் ஜீனோசைடுகள் நடைபெற்றிருக்கின்றன. அதே மாதிரி ரிலிஜியஸ் ஜீனோசைடுகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் 10 லட்சம் மக்கள், 15 லட்சம் மக்கள் மனிதப் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்பதை உலக வரலாற்றிலே, எந்த வரலாற்றிலேயும், எந்தக் காலத்திலேயும் இதுவரையில் உலகம் பார்த்த தில்லை. எந்த நாட்டுச் சரித்திரத்திலும் ஒரு கோடி மக்கள் அகதிகளாக அண்டை நாட்டுக்கு வந்ததாக இதுவரையில் இல்லை. ஒரு கோடி மக்கள் வங்க நாட்டிலிருந்து பக்கத்து நாடாகிய பாரதத்திற்கு அகதிகளாக வந்திருக் கிறார்கள். ஒரு லட்சமல்ல, இரண்டு லட்சமல்ல, ஒரு கோடிமக்கள், தமிழ்நாட்டு மக்கள்தொகையில் கால் மடங்கு, என்ற கணக்கில் வங்க நாட்டிலிருந்து அகதி களாக நம் நாட்டிற்கு வந்தார்கள் என்ற செய்தி உலக வரலாற்றிலேயே புது மையானது.

முஜிபுர் ரஹ்மான் செய்த குற்றம் தான் என்ன? என்ன குற்றத்திற்காக அவர் சிறையில் அடைக்கப்பட்டார்? சட்டமன்றம் கூடவேண்டும் என்று சொன்னார். சட்டமன்றங்கள் கூடாது, பாலட்டுகள் கூடாது, புல்லெட்டுகள் தான் இருக்கவேண்டும் என்பதற்காக இன்றைக்கு நடைபெற்ற ஒரு போராட் டம் இன்று வீழ்த்தப்பட்டிருக்கிறது. அந்தப் பெரிய வெற்றியில், அந்த ஆனந்தக் களிப்பில் உலகத்தின் எல்லா நாட்டு மக்களுக்கும், மனிதகுல உரிமைக் காக இருப்பவர்கள் அனைவருக்கும் பங்குண்டு. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னது போல முஜிபுர் ரஹ்மான் இன்றைக்குச் சிறையில் அடைக்கப்பட்டி ருக்கிறார். முஜிபுர் ரஹ்மான் சிறையில் அடைக்கப்படவில்லை. வங்க தேச பிதா சிறையில் அடைக்கப்படவில்லை, சட்டமன்றங்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்றங்கள் சிறையில் அடைக்கப்பட்டி ருக்கின்றன. அதை விடுதலை செய்யவேண்டும் என்பதற்காக 4½ கோடி மக்க ளின் சார்பில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் அந்த உணர்வுகளை நல்ல வகையில் எதிரொலித்திருக்கிறார்கள்.

இன்றைக்கு உலக நாடுகள், அது எவ்வளவு பெரிய நாடாக இருந்தாலும், நடுநிலைமை என்ற பெயரால், வேறு ராஜதந்திரம் என்ற பெயரால் சூதாட்டம் செய்யாமல், கிழக்கு ஆசிய நாடுகளில் அமைதிக்குப் பங்கம் வாவிடாமல் நல்ல வகையிலே பாடுபட கடமைப்பட்டிருக்கின்றார்கள். உலகத்தில் மிகப் பயங்கர மான இருள்சூழ்ந்த நாட்களில் ஒரு ஜோதி, ஜனநாயக ஜோதி இருண்டு விடுமோ என்று இருந்த நேரத்தில், வீராங்கனையாக, வீரப்புதல்வியாக நமது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மனிதகுல உரிமைக்காகப் போராடிய வீர மங்கை என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார்கள். (கைதட்டல்). 'அவர் ஆப் டிரயம்ப்' என்று நாடாளுமன்றத்தில் சொன்னார்கள். 'அவர் ஆப் டிரயம்ப்' (Hour of triumph) என்று மட்டுமல்ல, மனித குல உரிமைப் போராட்டத் தில் வெற்றி பெற்றிருப்பவர்கள் அமெரிக்காவல்ல, மற்றவர்கள் அல்ல, இந்திய பூபாகத்தில் இருப்பவர்கள் பெற்ற வெற்றி என்ற பேரில், புகழில் நமக்கும் பங்கு உண்டு.

ஆகவே, இந்தப் பேரவைத் தலைவன் என்ற முறையில் இந்திரா காந்தி அம்மையார் அவர்களைப் பாராட்டுகிறோம் என்றால் சாதாரண சம்பிரதாயத் துக்காக அல்ல. மனிதகுல உரிமை எங்கே பட்டுப்போய் விடுமோ, சவக்குழிக் குப்போய்விடுமோ, ஜனநாயகம் புதைகுழிக்குப் போய்விடுமோ என்றிருந்த நேரத்தில் போராடிய அவர்களையும், போராட்டத்திற்காகத் தங்களுடைய

சகலத்தையும் உயிரையும், உடலையும் வேறு பல உடமைகளையும் தியாகம் செய் திருக்கின்ற பேரணியின் அந்த வீரத் தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலையும் என்னுடைய வணக்கத்தையும் உங்களோடு சேர்ந்து நானும் தெரிவித்துக் கொண்டு, நியாயங்கள் என்றைக்கும் தோற்கா. அநியாயக்காரர்கள், அக்கிரமக்காரர்கள், ஆதிக்கக்காரர்கள் உலகத்தில் நீண்ட நாட்கள் நீடித்ததில்லை; அதற்கான தியாகத்தை, உறுதியை பெற்ற மனிதகுலம் உலகத்தில் இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வங்க தேச விடுதலைப் போராட்ட வெற்றியின் கம்பீரத்தில் என்னுடைய உணர்வுகளையும் வைத்து, இந்தத் தீர்மானம் இந்தப் பேரவையில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது என்று அறிவிக்கிறேன்.

[மாண்புமிகு முதலமைச்சரவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் ஒருமன தாக நிறைவேற்றப்பட்டது.]

(3) கவன ஈர்ப்பு

திருச்சி எரிச்சாராயத் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரை உய்யக்கொண்டான் பாசன வாய்க்காலில் விடுவதால் திருவெறும்பூர் பகுதி யில் உள்ள கிராமங்கள், விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியமான விஷயம் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் காமாட்சி அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

(திரு. மொய்தீன் எழுந்தார்).

நண்பர் மொய்தீன் எதற்காக எழுந்திருக்கிறார் என்பதை நானே சொல்லி விடு கிறேன். நாம் இப்போது ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்திற்குப் பிறகும் சட்டமன்றத்தை நடத்தவேண்டாம் என்பதற்காக எழுந்திருக்கிறார்கள். இன்றைக்குத் துணைமான்யக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு இருக்கிறது. 1 மணி வரையில்தான் பேசலாம். 1 மணி ஆனவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய துணையான்யக் கோரிக்கையின் மீது வாக் கெடுப்பு எடுக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சட்ட மன்றத் தலைவர் விரும்பினாலும் சட்டமன்றத்தை இன்றைக்கு இப்பொழுது ஒத்திவைக்கமுடியாது என்பதால் மாண்புமிகு உறுப்பினர்கள் அதுவரையில் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். துணை மானியக் கோரிக்கை மீது விவாதத்தில் கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசவேண்டும் என்பதில்லை. அப்படிப் பேசினாலும் 1 மணி வரையில்தான் பேசவேண்டும். 1 மணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைமான்ய கோரிக்கையின் மீது ஓட்டெடுப்பு ஆரம்பமாகும். அதுவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பேச ஆரம்பிக்காமல் இருந்தாலும், அத்தோடு விவாதம் முடிந்து விடும். ஆகவே கூடுமான வரையில் பேசாமல் இருந்தாலும்கூட நல்லதுதான். 1 மணிக்கு வாக்கெடுப்பு நடந்து, அத்துடன் மன்றம் முடியும்.

திரு. கு. காமாட்சி: பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் "திருச்சி எரிசாராயத் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப் படும் கழிவுநீரை உய்யக்கொண்டான் பாசன வாய்க்காலில் விடுவதால்,

திருவெறும்பூர் பகுதியில் உள்ள 20-க்கு மேற்பட்ட கிராமங்கள், இருபதாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள், பல ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் தரத்தக்க மீன்வளம், அந்நீரைப் பருகுவதால் ஆடுமாடுகளுக்கும் மனிதர்களுக்கும் ஏற்படும் நோய், உழவர்களுக்குக் காலில் ஏற்படும் அரிப்பு, நீரை மக்கள் புழங்குவதற்கு வாய்ப்பில்லா நிலைமை, 10 மைல் சுற்றளவுக்கு ஏற்படும் துர்நாற்றம் ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுத் துன்பப்படுகிறார்கள்" என்பதுபற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பு ஆங்கிலத்திலே இருப்பதால் கருத்துத் தெளிவாக இருக்கின்றது என்ற காரணத்தால் ஆங்கிலத்தில் படிக்கின்றேன். பின்னர் தேவையானால் தமிழில் விளக்கங்கள் தெரிவிக்கப்படும்.

The effluent coming out of the Tiruchirappalli Distilleries is coloured, acidic and organic in nature. The Joint Director of Agriculture who carried out a study of the effluent has stated that the effluent will not be harmful to crops, if it is allowed to flow into the channel after treatment. The Director of Health Services and Family Planning is of the view that if the effluent is properly treated before discharge into the channel or if sufficient dilution is available, the effluent will not be a hazard to public health.

The question of proper treatment of the effluent was considered by an Expert Committee—Tamil Nadu Water and Sewage Purification Committee—and they made certain recommendations for the treatment of the effluent. In accordance with this, the Company has put up a pilot plant for treatment of a part of the effluent.

The matter has been engaging the active consideration of the Government. The Chief Secretary, the Secretary to Government, Health and Family Planning Department, and the officers of the Health Services and Family Planning Department and Public Health Engineering Department such as, Director of Health Services and Family Planning, Additional Director of Health Services and Family Planning, Chief Engineer (Public Health Engineering) Chief Water Analyst, and the Collector of Tiruchirappalli have been holding a series of meetings at Madras and Tiruchirappalli. The Distillery and the effluent disposal have also been inspected by the Chief Secretary twice. It has finally been decided that the Company should treat the effluent by providing a series of lagoons including provision for aeration the last stage so that by the action of micro-organisms the effluent will get purified. The purified effluent will then be discharged in the Uyvakondan channel. With the provision of treatment and subsequent dilution in the channel, the use of the channel

water is not likely to be affected. The Company has agreed to put up the treatment plant as suggested by Government. It is expected that this complete treatment plant for dealing with the entire volume of effluent will be constructed and operated within a year. But for constructing the lagoons for treating the effluent, land under effluent storage has to be vacated. Therefore, the company has been permitted to discharge the stored effluent into the Uvvakondan channal in a strictly controlled manner, so that the waste diluted sufficiently in the channel will not affect the water in the channel. The optimum dilution that should be ensured so that the channel water use will not be affected was considered and it was felt that a dilution of 1 in 600 with the channel water would be sufficient. But by way of abundant caution a dilution of one in 1,000 parts of water, flowing into the channel has been prescribed and is being observed. Even in discharging the effluent in the Uvvakondan channel, the possibility of the railway water supply from Cauvery at Sircarpalayam being affected has been considered. To avoid this, the company has been asked to lay down pipes to a distance of about 1,400 metres lowerdown and pump the effluent at this point. This has also been done. Samples of channel water at different points are also being taken and examined periodically to ensure proper compliance of the safeguard prescribed. To ensure effectively that the factory discharges the effluents in a controlled manner and to ensure that the dilution of 1 : 1,000 is maintained, a Junior Engineer has been appointed at Factory's cost. For the collection and testing of the effluents and Uyyakondan water samples, a Junior Water Analyst has also been appointed at the Factory's cost.

The company was not allowed to discharge effluent into Uyyakondan channel till September 1971. They were therefore holding up the effluent in their own land with a spread of sixteen acres. It has been stated that the foul smell felt by the public in Tiruchirappalli is due to the stagnation of the effluent over a large acreage of land. It is reported that when the stagnated effluent is drained, the present odour nuisance will not be there.

With the adoption of the above measures, the Government expect that the nuisance will be abated soon.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, இந்த உய்யக்கொண்டான் வாய்க்காலில் விழுகின்ற அந்த நீரில் மைக்ரோ ஆர்க்கானிசத்தைப் பல ஆயிரம் மடங்கு கலந்து விட்டால் கூட அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அனைவரையும் அது பாதிக்கக்கூடியதாகத்தான் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும் அந்தக் கால்வாயில் உள்ள மீன்கள் எல்லாம் இறந்து விடுகின்றன. மீன்கள் இறந்துவிடக்கூடிய அளவுக்கு அதிலே விஷம் இருப்பதாக மக்கள் நம்பு

கிறார்கள். ஆடுமாடுகளும், மனிதர்களும் கூட பாதிக்கப்படுகிறார்கள் என்ற பயம் மக்களுக்கு இருக்கிறது. அந்தப் பயத்தைப் போக்க அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை)

மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைப்பற்றி பரிசீலிக்க குழு ஒன்றை அமைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் அந்தக் குழு பாதிக்கப்பட்ட தாகச் சொல்லப்பட்ட இடங்களுக்கு எல்லாம் சென்று விசாரணை செய்ய வில்லை. நீரிலே விஷப் பொருள் இருக்கிறதா, அதைப் பருகும் ஆடுமாடுகளுக்கு தீமை ஏற்படுகிறதா என்பதையெல்லாம் அவர்கள் சரியாகச் சோதனை செய்து பார்க்கவில்லை. ஆகவே, அந்தக் குழு மீண்டும் பாதிக்கப்பட்டக் கிராமங் களுக்குச் சென்று மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் மிகப்பணி வுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இம்மாதிரியான குறைகளை எல்லாம் அமைச்சரவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லிவிட்டார்கள். வேறு ஏதா வது சங்கடங்கள், குறைகள் இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் பல குறைகளைச் சொன்னார்கள். நியமிக்கப்பட்டக் குழு சரியாக பரிசீலனை செய்யவில்லை என்றும் சொன்னார்கள். அவருடைய கோரிக்கைகள் நியாய மானது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. குறைகளைப் போக்க அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. விரைவில் இந்தக் குறை கள் எல்லாம் போக்கப்படும் என்று கருதுகிறேன். அதற்கென்று தனித்தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

உய்யக்கொண்டான் சானலில் அந்த நீர் கலப்பதற்கு முன்னால் நன்றாகச் சுத்தப்படுத்தப்பட வேண்டுமென்று அரசாங்கம் அந்த கம்பெனிக்கு உத்தர விட்டிருக்கிறது. அந்தக் கம்பெனியும் அதை ஏற்றுக்கொண்டு, 'கம்ப்ளீட் ட்ரீட்மென்ட் பிளான்ட்' ஒன்று நிறுவ ஒப்புக்கொண்டுள்ளது. எவ்வளவு துரித நடவடிக்கை எடுத்தாலும் அதைக் கட்டி முடிப்பதற்கு இன்னும் ஓராண்டுக் காலம் பிடிக்கும் என்று தெரிகிறது. அதுவரையிலும் 1 : 1,000 விகிதத்தில் கலந்து, நீரை சுத்தப்படுத்தித்தான் விடவேண்டுமென்று அந்தக் கம்பெனிக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைக் கண்காணிக்க தக்க அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு தலைமைச் செயலாளரும், மற்றும் துறைச் செயலாளர்களும் இரண்டு மூன்று முறை அங்கே சென்று பார்வையிட்டிருக் கிறார்கள். ஆகவே, அதில் அரசு தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது என்ப தையும், விரைவிலே இந்தக் குறை போக்கப்பட்டுவிடும் என்றும் உறுதி கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

(4) 1967-68-ம் ஆண்டில் மிகைச் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

கோரிக்கை எண்-4—முத்திரைத் தாள் நிர்வாகம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 4—'முத்திரைத் தாள் நிர்வாகம்' என்ற தலைப் பின் கீழ் ரூ. 1,94,409-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 6—மாநிலச் சட்ட மன்றம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 6—'மாநிலச் சட்ட மன்றம்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,21,071-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 7—தேர்தல்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 7—'தேர்தல்கள்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,75,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று, கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 8—'மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 25,253-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1971 டிசம்பர் 17

கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பொதுக்கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 10—'நீதி நிர்வாகம்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,39,557-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 12—காவல்துறை

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக்கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல் ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,41,323-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்". மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி கொடுத்த சிபார்சின்பேரில் இது வந்தது என்றாலும் இங்கே அதிகமான தொகை கோரி ஏன் வந்திருக்கிறது என்று பார்க்கிறபோது excess expenditure was due mainly to increased expenditure on telephone charge, electricity charges, etc., என்பதாக இருக்கிறது. இனி வருங்காலத்திலாவது ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பணத்தைவிட முப்பது லட்சம், ஒரு கோடி என்பதாக டெலிபோன் போன்ற இனங்களில் செலவழிக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

(பதில் இல்லை)

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 14—மருத்துவம்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுக்கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக்கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 51,001-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 17—மீனளம்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,33,798-க்கு மேற்பாடத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

1971 டிசம்பர் 17]

கோரிக்கை எண் 18—கால் நடை வளர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதி கோரிக்கை எண். 18—கால்நடை வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,31,593-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண். 28—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதி கோரிக்கை எண். 28—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும் இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,69,812 மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண். 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதி கோரிக்கை எண். 30—சாலை போக்குவரத்து திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,01,886-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண். 33—பல்வகை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக்கோரிக்கை எண். 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,64,214-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண். 34—எழுது பொருள்-அச்சுத்துறை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண். 34—எழுது பொருள்-அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,05,993-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண். 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண். 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,49,928-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண். 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல், ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண். 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 66,70,901-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை. வழங்கப்பட்டது.

(5) 1971-72-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை மீது பொதுவிவாதம்

MR. DEPUTY SPEAKER: Now we shall have general discussion on the Supplementary Demands. The time is short. Mr. K. M. Subramaniam may now speak.

• THIRU K. M. SUBRAMANIAM: I know that the time-limit is there and before 1.00 p.m. we should finish the discussion. That is why I am cutting short all details and I am going to

speak only on some salient points. I thought during emergency the usual practice to bringing in supplementary budget will be stopped because of the heavy commitments that are really to be incurred by Government.

First of all, we had a big deficit even in the original budget. Further, our over-draft with the Reserve Bank seems to be the highest among all the States who have had deficits. The Tamil Nadu Government should have to minimise their expenditure. But, they have brought in supplementary grant of as much as Rs. 14-1/2 crores. And out of this, Rs 7.32 crores is on revenue account. At least capital expenditure may be necessary, since it may bring in return, and it is necessary for our progress. Here, on revenue account, Government have come in with supplementary grant.

After all, during emergency, certain welfare schemes might be pruned. Spending of money on some schemes might be delayed. Even during discussion on the original budget, it has been brought home to the Government that they should reduce expenditure on revenue account. But that has not been done and there is this supplementary grant on revenue account also. What I say is, cut down all unnecessary expenditure on revenue account.

We find that so far as employment is concerned, there is Rs. 100 grant. Instead of giving Rs. 100 per month to any local body, what I say is, it is all done on piece-wage basis. The work does not qualify such a wage They just lay the roads no topping is done and so even when rain comes, it is washed away. The men do not qualify for the wage of Rs. 100 per month.

What I say is, avoid all wastage. If you had done that on revenue account, you need not come forward with this supplementary grant. At the same time, let me say we should not reduce efficiency. Under the present emergency conditions, when we are having new taxes and we have all agreed with that since it is all for a good cause, it is absolutely necessary to reduce expenditure on unnecessary things. There should not be any wastage and we must husband all resources.

I do hope that the Hon. Chief Minister will agree that there is scope for reducing wastage; I don't say retrenchment should be there but unnecessary waste should not be there. We should not have new taxes on one side and increased supplementary grant on revenue account. Avoid all unnecessary wastage.

With these words I oppose this supplementary grant.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1971-72-ம் ஆண்டிற்கான முதல் துணை நிதி அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த அவையில் இன்று நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிக்குப் பிறகு, நீண்ட உரைகளும்,

[திரு. எம். ஏ. லத்தீப்] [1971 டிசம்பர் 17

மதிப்பீடுகளைப்பற்றி நீண்ட விளக்கங்களும், விவாதங்களும் நடத்தத் தேவையில்லையென்ற காரணத்தால் நான் குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிற துணை மதிப்பீடுகளை என்னுடைய கட்சியின் சார்பாக முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

வளர்ந்து வருகிற ஒரு பொருளாதாரத்தில், வளர்ந்து வருகிற ஒரு நாட்டிலே வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டும்போது பலவிதமான டெஃபிசிட் ஏற்படுவது என்பது சாதாரணமாக நாம் கண்டு வருகிற உண்மையாகும். அந்த அடிப்படையிலே பொருளாதாரத்திலே குறை ஏற்படுகிறது, நிதிப் பற்றுக்குறை ஏற்படுகிறது என்றால் அதனுடைய பொருளே வளர்ந்து வருகிற பொருளாதாரம் மேலும் மேலும் வளர்ச்சியை நோக்கி நடைபோடுகிறது என்பதுதான் பொருள். பொருளாதார நிபுணர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற ஓர் உண்மையாகும். அந்த அடிப்படையிலே இன்று இந்தத் துணை மதிப்பீட்டு மானியத்தை முதலமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றால், நாம் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழகத்திலே இன்று மாபெரும் முன்னேற்றத்தை நாம் கண்டு வருகிறோம், முன்னேற்றப் பாதையிலே நடை பயின்று வருகிறோம என்பதை இந்த அறிக்கையின் மூலமாக நாம் அறிந்து கொள்ளலாம்.

கிராமப்புறத்தில் வேலைவாய்ப்பை அதிகமாக்குவதற்கும், கிராம மக்கள்— குறிப்பாக, குழந்தைகள் ஊட்டச் சத்துணவுகளைப் பெறுவதற்கும் அரிசனக் குடியிருப்புகள் நல்ல ஒளிமயமாகத் திகழ்வதற்கும், மாபெரும் விவசாய முன்னேற்றத்திற்கும், இளைஞர்களுடைய வருங்கால வாழ்க்கையிலே ஒளிமயமான முன்னேற்றத்தைக் காண்பதற்கும் இந்தத் திட்டங்களில் நல்ல முறையில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

தூத்துக்குடித் திட்டம் நிறைவேற வேண்டுமென்கிற தமிழ்நாட்டின் கோரிக்கை இந்தத் திட்டத்தின் வாயிலாக நிறைவேற்றப்படப் போகிறது என்பதைப் பார்க்கும்போது உண்மையிலே எங்களுக்கெல்லாம் மெத்த மகிழ்ச்சி. அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலே கைத்தறி நெசவாளர்கள் எவ்வளவோ இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வந்த காலம் ஒன்று உண்டு. இன்றைய தினம் அவர்கள் எல்லாம் முன்னேற்றப் பாதையில் வீர நடைபோட வேண்டும், அவர்கள் வாழ்க்கையிலே காணப்பட்ட குறைகள் எல்லாம் நீக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தமிழக அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டியிருக்கின்றது. அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுதான் இந்தப் பணம் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் நல்ல முறையில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. அதையும் நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். ஆக, இந்த மதிப்பீடு உண்மையிலேயே நம்முடைய மாநிலம் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்து வருகிறது, நல்ல முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம், இன்னும் எவ்வளவு தூரம் அதற்கான கவனத்தைச் செலுத்த இருக்கிறோம் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறதென்று கூறி, இதை முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

ஒரு விஷயத்தை அடிக்கடி கூற வேண்டியிருப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை அடிக்கடி ஈர்க்கவேண்டுமென்பதற்காக முதலமைச்சர் அவர்களுடைய சிரித்த முகத்திலே இந்தப் பிரச்சினையை வைப்பதற்கு முன்வருகிறேன். தமிழ்நாட்டிலே இரண்டு தினங்களுக்கு முன்பு

1971 டிசம்பர் 17] [திரு. எம். ஏ. லத்தீப்]

பத்திரிகையிலே ஒரு குறிப்பு எழுதப்பட்டிருக்கிறது. சாதாரணமானவர்களால் அல்ல. அது எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வந்திருக்கிறது. முஸ்லீம் சமுதாயத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் வக்ஃப் போர்டு தலைவர் டாக்டர் அமீர்தீன் அஹமத் அவர்கள் சொல்லியிருக்கிறார். தமிழ்நாட்டில் சுதந்திரத்திற்கு முன்பாக லப்பைகள், தமிழ் பேசுகிற முஸ்லீம்கள், உருது பேசுகின்ற முஸ்லீம்கள் போன்ற எல்லா முஸ்லீம்களும் அன்றிருந்த கம்யூனல் ஜி.ஓ. பிரகாரம் பின் தங்கியவர்களாகக் கருதப்பட்டு, அவர்கள் சலுகைகள் பெற்று வந்தார்கள். ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு கம்யூனல் ஜி.ஓ. ரத்தாகிய காரணத்தால் சலுகைகள் மறுக்கப்பட்டன. அவர்கள் ஜட்காக்காரர்களாகவும், சாதாரண கூலிகளாகவும் இருந்து வருகின்றனர். சாதாரண உருது முஸ்லீம்கள் பின்தங்கியவர்களாக மட்டுமல்ல, மிகமிகப் பின்தங்கியவர்களாக, சமுதாயத்தால் உதாசீனப்படுத்தப்பட்டவர்களாக அரசின் கனிவுப் பார்வை கிடைக்காதவர்களாக இருக்கிறார்கள். இதைக் கேட்பதற்கு யாரும் இல்லை, இந்திய யூனியன் முஸலீம் லீக் கூட இதில் எந்த விதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை என்று வக்ஃப் போர்டு வாரியத்தின் தலைவராக இருக்கக்கூடியவர், பெரிய பொறுப்பிலே இருக்கக்கூடியவர், முஸ்லீம் சமுதாயத்தின் சொத்துக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய வாரியத்தின் தலைவராக இருக்கக்கூடியவர் இத்தகைய ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நான் இந்த அவையிலே முன்பிலே பேசியபோதுகூட இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் சார்பாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். 'உருது முஸ்லீம்கள்மீது உங்கள் கனிவுப் பார்வை படட்டும்' என்றேன். பார்வை சரியாக, எண்ணம் சரியாக இல்லாத ஒருசிலர் இத்தகைய முறையில் எழுதுகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்த இக்கட்டான நிலையிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள். உருது முஸ்லீம்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவு. அவர்களுக்கும் சாதாரண லப்பைகளுக்குக் கொடுக்கின்ற சலுகைகளை வழங்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நான் உங்களுக்கு வேறு விளக்கங்கள் அளிக்கத் தேவையில்லை, எல்லாம் உணர்ந்தவர் தாங்கள். இந்த வேண்டுகோளை நல்ல முறையில் ஆலோசித்து, உங்கள் கருத்திலே கொண்டு, நல்ல சலுகைகளைத் தர வேண்டுமென்று மிகவும் பணிவோடு மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஒரு கொள்கையை வைத்திருக்கிறது, கண்ணியத்தின் நாயகன் காயிதே மில்லத் அவர்கள் யாருக்கும் எப்போதும் இன்னல் விளைவிக்காதவர். தமிழ் முஸ்லீம் உருது முஸ்லீம் என்னும் பாகுபாடு காட்டாமல் நல்ல முறையில் லீக் இயக்கத்தை நடத்தி வருகிறார். டாக்டர் அமீருதீன் அஹமத் அவர்கள் எழுதியதை மாண்புமிகு முதலமைச்சர், கலைஞர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, எங்களுடைய குறையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். மருதாசலம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதி அறிக்கையின்மீது தனித்தனியாக எடுத்துக் கூறவிட்டாலும்கூட பொதுவாக ஒருசில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். நான் கூற விரும்புவது எல்லாம், தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினையைப் பற்றித்தான். தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கு ஒவ்வொரு இடங்களிலும் குடியேறி இருக்கிறார்கள். ரோடு ஓரமாக குடியேறி இருக்கிறார்கள். வாரி புறம்போக்கு, நத்தம்

புறம்போக்கு, ரோடு புறம்போக்கு என்று இருப்பவைகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியேறியிருந்தால் அவர்கள் காலி செய்ய நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். ரோடு புறம்போக்கில் குடியேறியிருந்தால் அவர்களை அப்புறப்படுத்துவது நியாயம்தான். ஆனால் அதேசமயத்தில் அரிசனங்கள் பல இடங்களிலே வீடுகள் இல்லாமல், நல்ல வசதிகள் இல்லாமல் அங்கங்கே குடிசை போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதைக் குறித்து, எல்லாக் கட்சியினரும் சேர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவருடைய இல்லத்தில் ஒரு நல்ல முடிவு எடுத்திருக்கிறோம். அதாவது இன்றைக்கு ரோடு ஓரங்களில் உள்ள பூமிகளில் உள்ள வீடுகளை எடுத்துவிட்டு மறுபடியும் அவர்களுக்கு மாற்று இடங்கள் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மாற்று இடங்கள் இதுவரையில் கொடுக்கப்படவில்லை, உடனடியாக மாற்று இடங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்குக் கொடுக்கின்ற ஸ்காலர்ஷிப் முறை மிகத் தவறாக நடந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் கோவையிலும்சரி, கிராமப்பகுதிகளிலும்சரி ஸ்காலர்ஷிப் இதுவரையில் கிடைக்கவில்லை. பின்தங்கிய வகுப்பினருக்குக் கிடைத்துவிட்டது. ஆனால் அரிசன மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஸ்காலர்ஷிப் பாரம்கூட அரிசன மாணவர்களுக்குக் கிடைப்பதற்கு முன்னதாகவே பின்தங்கியவர்களுக்குக் கிடைத்துவிடுகிறது, ஏன் இந்த முறை? எல்லோருக்கும் ஒரே மாதிரியாகக் கொண்டுவருவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது, கோவை நகரசபையிலே பழையகாலம் முதற்கொண்டு மின்சார இலாகா அங்கேயிருப்பது இயங்கி லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. இந்த மின்சார இலாகாவை அரசாங்கம் எடுத்துக்கொள்ளப் போகிறது. அப்படி செய்தால் பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கேயுள்ள மின்சார இலாகாவை எடுக்கக் கூடாது என்று சொல்வதற்காக நகரசபை உறுப்பினர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதை எடுத்துக் கொள்ளாமல் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அங்கே பணியாற்றுகின்ற சிப்பந்திகளுக்கு அரசு மின்சார இலாகாவில் பணியாற்றும் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவதைப்போன்று கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சம்பளம் கிடைப்பதற்கு இன்னும் உத்தரவிடப்படவில்லை. அந்த உத்தரவை உடனடியாக இடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இன்னும் சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். இன்னும் பல நல்ல காரியங்கள் செய்யவேண்டி இருக்கிறது. வீடுகள் கட்டிக்கொடுப்பது விரிவாக்கப்படவேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைகொடுப்பதில் அது ரொம்பக் குறைந்துகொண்டு வருகிறது. அரசாங்க உத்திரவு 100-க்கு 18 சதவீதம் என்று இருந்தாலும் கூட பஞ்சாயத்து போர்டுகள், முனிசிபாலிட்டிகளிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை கொடுப்பது கிடையாது. தாழ்த்தப்பட்டவர்கள் அவர்கள் என்ற எண்ணத்தோடு எதையாவது குறைகளைச் சொல்லி தள்ளிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் எப்படியும் ஒரு ஏழு நிமிடமாவது பேசியாகவேண்டும். அதற்குள் முடிந்தால் நானே ஒவ்வொரு மானியத்திற்கும் எழவேண்டியிருக்கும். அந்த நேரம்வரை நான் பேசிமுடித்துவிட்டால் அதற்குப் பிறகு தலைவர் அவர்களே அந்தக் காரியத்தைச் செய்யவேண்டியிருக்கும். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும், திரு. வைத்தீப் அவர்களும், திரு. மருதாசலம் அவர்களும் இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது சில பொதுக் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் நெருக்கடி நிலையிலேகூட 14 கோடி ரூபாய்க்குத் துணைமானியம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். இந்தத் துணை மானியக் கோரிக்கை வருவதற்குக் காரணமாக அமைந்த நிலைமைகள், நெருக்கடி நிலைமைகள் உருவாவதற்கு முன்பே ஏற்பட்டவை என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். நெருக்கடி நிலையிலே துணை மானியக் கோரிக்கை வந்திருந்தாலும், அதிலே 7 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய்க் கணக்கில் இருக்கிறது; இதைத் தவிர்த்திருக்கலாம் என்று தெரிவித்தார்கள். ஆனால் வருவாய்க் கணக்கிலே ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை கிராம வேலைப் பணிகளுக்காக ரூ. 295 லட்சம் என்ற அளவுக்கும், சத்துணவு என்பதன் கீழ் 66 லட்சம் ரூபாயும், இளைஞர் அணி என்பதன்கீழ் 36 லட்சம் ரூபாயும் வேலையின்மையைப் போக்குகிற வகையில் வேலைவாய்ப்புத் திட்டங்கள்மூலம் 30 லட்சம் ரூபாய் என்ற அளவுக்குப் பல பொதுப் பணிகளுக்கும் வளர்ச்சிப் பணிகளுக்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரிசனக் காலனிகளுக்கு மின்விளக்கு வசதிகள் செய்துகொடுப்பதில் காலனிகளிலே உள்ளவர்கள் அந்தச் செலவை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக அரசின் சார்பிலிருந்து மின்சார வாரியத்திற்கு 20 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கின்ற கணக்கும் இதிலே வந்திருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் மின்வாரிய நிதிநிலை அறிக்கையின் விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசுகின்ற நேரத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்திலே 20 ஆயிரம் அரிசனக் காலனிகள் இருக்கின்றன. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு 2 ஆயிரம் அரிசனக் காலனிகளில்தான் மின்விளக்கு வசதிகள் பெற்றிருந்தார்கள். இன்றைய தினம் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரிசனக் காலனிகளில் மின்விளக்கு வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள். இன்னும் ஓராண்டிற்குள்ளாக 6 ஆயிரம் காலனிகளுக்கு மின்விளக்கு வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம்.

கிராமப்புறங்களிலே வேலைவாய்ப்பிற்காக மத்திய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே முதலிலே நமக்கு ஒதுக்கிய தொகை குறைவாக இருந்ததால் நாம் மேலும் பல பிளாக்குகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற முறையிலே அதிகமாகக் கேட்டதற்கு மத்திய அரசிடமிருந்து உடனடியாகப் பதில் கிடைக்காத காரணத்தினாலே, கடந்த நிதிநிலை அறிக்கையிலேயே நான் அறிவித்திருந்தேன், மத்திய அரசு போதுமான பணத்தை அதற்கு ஒதுக்காவிட்டாலும் மேலும் பல பிளாக்குகளை எடுத்துக் கொள்கிற வகையிலே தமிழ்நாடு அரசாங்கம் பணத்தை ஒதுக்கிப் பல பிளாக்குகளை எடுத்துக்கொள்ள இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதற்கிணங்க அதற்கான பணம் ஒதுக்கப்பட்ட பிறகு மத்திய அரசு 205 லட்சம் என்ற அளவுக்கு ஒதுக்காவிட்டாலும் கொஞ்சம் குறைவாகக் கொடுத்தாலும் அந்தப் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். அதன் மூலம் தமிழகத்திலே பல

மாவட்டங்களிலே பல வட்டாரங்களிலே கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள் நல்ல முறையிலே நிறைவேற்றப்பட்டுக் கிராமப்புறத்து வாலிபர்கள் மிகுந்த உற்சாகத்தோடு அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

சத்துணவுத் திட்டம் என்பது வேடிக்கையாகக் கூறிவிடப்படுவது அல்ல என்பதையும், அனைத்துலகத்திலேயும் இந்தத் திட்டம் விரிவாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறது என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. இந்தத் திட்டத்தின்மூலம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டிருக்கிறது, 60 லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலம், ஏழை எளியவர் வீட்டுக்குழந்தைகள் மாத்திரமல்லாமல் நடுத்தர மக்களுடைய குழந்தைகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவாக்கி, சற்று முன்பு இங்கே விவாதிக்கப்பட்டதைப்போன்று வீரர்கள் பெருக வேண்டும், வலிவுள்ள திடகாத்திரர்கள் பெருகவேண்டும் என்பதைப்போன்று வீரமிக்க படையை உருவாக்குவதற்கு சத்துணவுப் பிரச்சாரம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. லத்தீப் அவர்கள் பேசுகின்றபொழுது லெப்பை என்ற பிரிவிலே தமிழ் பேசுகின்ற முஸ்லீம்களைத்தான் சேர்த்துக்கொள்கிறார்கள் உருதுபேசுகின்ற முஸ்லீம்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அமீருதீன் அஹமது அவர்கள் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி இவர் யார் கண்டிப்பதற்கு என்று அமீருதின் அஹமதைக் கண்டிப்பதைப்போல் வெகு சாதுர்யமாகப் பேசியிருக்கிறார். வக்ப் போர்டிலே அவர் இணைக்கப்படும் பொழுது அவர் பயன் பட மாட்டார் என்று கருதியவர்கள் இப்பொழுது அவர் எந்த அளவுக்குப் பயன்படுகிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். மறுபடியும் தகராறு வளர்கிறது என்று நினைக்கவேண்டாம். சாமர்த்தியம் என்பது இரண்டு பக்கத்திலேயும் பரிமாறிக்கொள்ளக்கூடிய ஒன்று என்பதற்காகத்தான் சொன்னேன்.

Thiru M. A. Latheef rose.

MR. SPEAKER : Let the hon. Member resume his seat. There is no time.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உரிய நேரத்தில் திரு. லத்திப் அவர்கள் கோரிக்கை கவனிக்கப்பட வேண்டிய ஒன்றுதான், புறக்கணிக்கப்பட வேண்டியது அல்ல, காலம் வருகின்றபொழுது நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொண்டு, திரு. மருதாசலம் அவர்கள் கூறியவைகளெல்லாம் கருத்தில் கொள்ளப்பட்டு ஆவன செய்யப்படும் என்று கூறி இந்த அளவில் நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதத்திற்கான நேரம் முடிவடைந்து விட்டது. இப்பொழுது நிதிக்கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

(6) 1971-72-ம் ஆண்டிற்கான கூடுதல் செலவு குறித்த முதல் துணைநிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

Demand No. 1—Land Revenue Department

ப. 00 MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 300 under Demand No. 1—Land Revenue Department.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 27,17,500 under Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 8—Head of State, Ministers and Headquarters Staff.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 27,85,500 under Demand No. 8—Head of State, Ministers and Headquarters Staff.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 8-A—Milk Supply Schemes.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,17,200 under Demand No. 8-A—Milk Supply Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 9—District Administration and Miscellaneous.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 16,67,700 under Demand No. 9—District Administration and Miscellaneous.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Chartitable Endowments Act, 1959.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 12—Police.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 40,63,700 under Demand No. 12—Police.'

The Demand was put and carried and the Grant was made

Demand No. 13—Education.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 28,98,800 under Demand No. 13—Education.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 14—Medical.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 5,25,100 under Demand No. 14—Medical.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 15—Public Health.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 7,61,300 under Demand No. 15—Public Health.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 16—Agriculture.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 13,09,300 under Demand No 16—Agriculture.'

The Demand was put and carried and the Grant was made.

Demana No. 17—Fisheries.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,73,000 under Demand No. 17—Fisheries.'

The Demand was put and carried and the Grant was made

Demand No. 18—Animal Husbandry.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand No. 18—Animal Husbandry.

The Demand was put and carried and the Grant was made

Demand No. 19—Co-operation.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 5,39,600 under Demand No. 19—Co-operation.'

The Demand was put and carried and the Grant was made

Demand No. 20—Industries.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 2,28,500 under Demand No. 20—Industries.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 21—Cinchona.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 21—Cinchona.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 23—Community Development Projects, etc.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 3,03,00,000 under Demand No.23—Community Development Projects, etc.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 24—Labour including Factories.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 400 under Demand No. 24—Labour including Factories.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 25—Welfare of the Scheduled Tribes and Castes, etc.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 86,15,200 under Demand No. 25—Welfare of the Scheduled Tribes and Castes, etc.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 25-A—Welfare of Backward Classes, etc.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand No. 25-A—Welfare of Backward Classes, etc.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 26—Irrigation.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 400 under Demand No. 26—Irrigation.

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 27—Public Works—Works.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand No. 27—Public Works—Works.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,700 under Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 29—Public Works—Grants-in-Aid.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 29—Public Works—Grants-in-Aid.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 30—Road Transport Schemes.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,30,300 under Demand No. 30—Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 31—Famine Relief.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,20,82,100 under Demand No. 31—Famine Relief.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 32—Pensions.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 32—Pensions.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 33—Miscellaneous.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 42,80,400 under Demand No. 33—Miscellaneous.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 34—Stationery and Printing.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 400 under Demand No. 34—Stationery and Printing.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 35—Forest Department.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand No. 35—Forest Deparment'.

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 40—Capital Outlay on Industrial Development.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 3,02,41,300 under Demand No. 40—Capital Outlay on Industrial Development.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 41—Capital Outlay on Irrigation.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,100 under Demand No. 41—Capital Outlay on Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 42—Capital Outlay on Public Works.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 8,00,200 under Demand No. 42—Capital Outlay on Public Works.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 43—Capital Outlay on Road Transport Schemes.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 7,48,100 under Demand No. 43—Capital Outlay on Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. 47—Loans and Advances by the State Government.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 3,91,98,500 under Demand No. 47—Loans and Advances by State Government.'

The Demand was put and carried and the Grant was made.

(7) அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை சட்டப் பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I would like to know whether members can speak on the Appropriation Bill now or tomorrow.

MR. SPEAKER: No discussion takes place on introduction.

முதல் நாள் அறிமுகம் செய்வார்கள். அறிமுகம் செய்த உடனே விவாதிப்பதில்லை.

DR. H. V. HANDE: Only introduction today. Tomorrow discussion.

(7) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவை சட்டப் பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி, வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிந்து நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

பி.ப 1-15

A. Statutory Rules and Orders

118. Notification issued with G.O. Ms. No. 1562, Home, dated the 9th June, 1971 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

B. Reports, Notifications and Other Papers.

@ 76. The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 47 of 1971).

@ 77. The Tamil Nadu Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 48 of 1971).

@ Despatched to Members on 14th December 1971

இணைப்பு 1

[224-ம் பக்கத்தில் 503-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

A.—The total number of "Jaundice" cases treated both as in-patients and out-patients in each of the Government Hospitals in the City of Madras from January to April 1971 are as follows:—

Name of the institution.	*Month.*	*In-patients.*	*Out-patients.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
1 Government General Hospital, Madras.	January	25	181	206
	February	23	174	197
	March	29	212	241
	April	25	185	210
	Total	102	752	854
2 Government Stanley Hospital, Madras.	January	17	22	39
	February	17	25	42
	March	13	19	32
	April	18	27	45
	Total	65	93	158
3 Government Kilpauk Medical College Hospital, Madras.	January	12	3	15
	February	9	7	16
	March	11	6	17
	April	4	2	6
	Total	36	18	54
4 Government Royapettah Hospital, Madras.	January	10	11	21
	February	21	24	45
	March	12	25	37
	April	11	13	24
	Total	54	73	127
5 Government R.S.R.M. Lying-in Hospital, Madras.	January	2	..	2
	February	2	..	2
	March	1	..	1
	April	5	..	5
	Total	10	..	10

Name of the institution.	*Month.*	*In-patients.*	*Out-patients.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
6 Institute of Obstetrics and Gynaecology, Government Hospital for Women and Children, Madras.	January	3	..	3
	February	—	..	..
	March	..	..	..
	April	2	..	2
	Total	5	..	5
7 Institute of Child Health and Hospital for Children, Madras-8.	January	9	42	51
	February	24	50	74
	March	11	61	72
	April	10	52	62
	Total	54	205	259

A.—The number of fatalities in Jaundice cases in each of the Government Hospitals in the City of Madras month-war from January to April 1971 are as follows:—

1 Government General Hospital, Madras.	January	1
	February	2
	March	3
	April	1
	Total	7
2 Government Stanley Hospital, Madras.	January	1
	February	5
	March	..
	April	3
	Total	9
3 Government Kilpauk Medical College Hospital, Madras.	January	..
	February	..
	March	..
	April	..
4 Government Royapettah Hospital, Madras.	January	3
	February	1
	March	1
	April	..
	Total	5

5 Government R.S.R.M. Lying-in Hospital, Madras.	January	..
	February	..
	March	1
	April	..
	Total	1
6 Institute of Obstetrics and Gynaecology, Government Hospital for Women and Children, Madras.	January	..
	February	..
	March	..
	April	..
7 Institute of Child Health and Hospital for Children, Madras-8.	January	3
	February	5
	March	1
	April	4
	Total	13

விடை.—1971-ம் ஆண்டில் சனவரி முதல் எப்ரல் வரை சென்னை நகரத்திலுள்ள அரசினர் மருத்துவ மனைகளில் மஞ்சள் காமாலை நோய்க்குச் சிகிச்சையளிக்கப்பட்ட அக நோயாளிகள், புற நோயாளிகள் ஆகியவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

மருத்துவமனையின் பெயர்.	திங்கள்.	அக நோயாளிகள்.	புற நோயாளிகள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1 அரசினர் பொது மருத்துவ மனை, சென்னை.	சனவரி	25	181	206
	பிப்ரவரி	23	174	197
	மார்ச்	29	212	241
	எப்ரல்	25	185	210
	மொத்தம்	102	752	854
2 அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை.	சனவரி	17	22	39
	பிப்ரவரி	17	25	42
	மார்ச்	13	19	32
	எப்ரல்	18	27	45
	மொத்தம்	65	93	158
3 அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, மருத்துவ மனை, சென்னை.	சனவரி	12	3	15
	பிப்ரவரி	9	7	16
	மார்ச்	11	6	17
	எப்ரல்	4	2	6
	மொத்தம்	36	18	54

மருத்துவ மனையின் பெயர்.	திங்கள்.	அக நோயாளிகள்.	புற நோயாளிகள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
4 அரசினர் ராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.	சனவரி	10	11	21
	பிப்ரவரி	21	24	45
	மார்ச்	12	25	37
	எப்ரல்	11	13	24
	மொத்தம்	54	73	127
5 அரசினர் ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனை, சென்னை.	சனவரி	2	..	2
	பிப்ரவரி	2	..	2
	மார்ச்	1	..	1
	எப்ரல்	5	..	5
	மொத்தம்	10	..	10
6 மகப்பேறு, மகளிர் நோயியல் நிறுவனம், அரசினர் மகளிர், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.	சனவரி	3	..	3
	பிப்ரவரி	..	..	..
	மார்ச்	.	..	..
	எப்ரல்	2	..	2
	மொத்தம்	5	..	5
7 குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை.	சனவரி	9	42	51
	பிப்ரவரி	24	50	74
	மார்ச்	11	61	72
	எப்ரல்	10	52	62
	மொத்தம்	54	205	259

1971-ம் ஆண்டில் சனவரி முதல் எப்ரல் வரை சென்னை நகரத்திலுள்ள அரசினர் மருத்துவ மனைகளில் மஞ்சள் காமாலை நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

1 அரசினர் பொது மருத்துவமனை, சென்னை.	சனவரி	1
	பிப்ரவரி	2
	மார்ச்	3
	எப்ரல்	1
	மொத்தம்	7
2 அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை.	சனவரி	1
	பிப்ரவரி	5
	மார்ச்	..
	எப்ரல்	3
	மொத்தம்	9

3 அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, சென்னை.	சனவரி	...
	பிப்ரவரி	...
	மார்ச்	...
	எப்ரல்	...
4 அரசினர் ராயப்பேட்டை மருத்துவ மனை, சென்னை.	சனவரி	3
	பிப்ரவரி	1
	மார்ச்	1
	எப்ரல்	...
	மொத்தம்	5
5 அரசினர் ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனை, சென்னை.	சனவரி	..
	பிப்ரவரி	...
	மார்ச்	1
	எப்ரல்	..
	மொத்தம்	1
6 மகப்பேறு, மகளிர் நோயியல் நிறுவனம், அரசினர் மகளிர், குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை.	சனவரி	...
	பிப்ரவரி	...
	மார்ச்	...
	எப்ரல்	...
7 குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை-8.	சனவரி	3
	பிப்ரவரி	5
	மார்ச்	1
	எப்ரல்	4
	மொத்தம்	13

இணைப்பு-2

254 -ம் பக்கத்தில் 531-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

* * *

(பொருள் : உவர் நிலங்களை பண்படுத்துவதற்கான திட்டம்)

* * *

(அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர், தருமபுரி மாவட்டங்களில் உவர் நிலங்களைப் பண்படுத்துவதற்காகக் கீழ்க்காணும் இரு திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன—

1. கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு வட்டத்தைச் சேர்ந்த ஈஞ்சம்பள்ளி, எழுமாத்தூர் ஆகிய கிராமங்களில் உள்ள உவர் களர், சதுப்பு நிலங்களைப் பண்படுத்துவதற்கான திட்டம்.

மேலே மூடப்படாத திறந்த வடிகால்கள் வெட்டுவதன் மூலம் நிலத்திற்கடியிலுள்ள அதிகப்படியான நீரை வடிகட்டுவதும், அதிக அளவில் களிக்கல்லைப் போடுவதன் மூலமும், இன்னீரை அதிக அளவில் விடுவதன் மூலமும் நிலத்தில் அதிகமாக உள்ள உப்புச்சத்தினை உறிஞ்சி எடுப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், ஈரோடு வட்டத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட கிராமங்களில் 1—9—1969-லிருந்து செயற்படுத்தப்படுகிறது:—

1. ஈஞ்சம்பள்ளி.
2. எழுமாத்தூர்.
3. அவல் பூந்துறை.
4. வடமுகம் வெள்ளோடு.
5. தென் முகம் வெள்ளோடு.
6. பழமங்கலம்.
7. துய்யம்பூந்துறை.
8. காகம்.
9. விளக்கேத்தி, இப்பணி அவசியமாயுள்ள ஏனைய கிராமங்கள்.

இப்பகுதிக்கான நில அளவை, திட்டங்கள், மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி 31—3—1970 வரை மேற்கொள்ளப்பட்டது. 1970-71-ல் 65 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டது. 1971-72-ல் 35 ஏக்கரைப் பண்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், சுண்டைக்குப்பம் கிராமத்திலுள்ள உவர் களர், சதுப்பு நிலங்களைப் பண்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம்.

சதுப்பு, உவர் களர் நிலங்களைப் பண்படுத்துவதால் ஏற்படுகின்ற பயன்களை உழவர்களுக்குச் செய்முறையில் விளக்கிக் காட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், சுண்டைக்குப்பம் கிராமத்தில் உள்ள 100 ஏக்கர் நிலத்தில் 1969 டிசம்பரில் கட்புல விளக்கத் திட்டம் தொடங்கப்பட்டது. வடிகால் வாய்க்கால்கள் வெட்டுதல் களிக்கல்லைப் போடுதல், இன்னீரை அதிக அளவில் சேர்த்தல் ஆகியவற்றின் வாயிலாக கட்புல

விளக்கப் அதிகமாக உள்ள உப்புச் சத்தினை உறிஞ்சுதல் போன்ற முறையான கட்புல விளக்கப்பணி 1970-71-ல் மேற்கொள்ளப்பட்டு, 100 ஏக்கர் நிலத்தில் நிறைவேற்றப்பட்டது. முன்னரே செய்யப்பட்ட பணி 1971-72-ல் பேணப்பட்டு வருகிறது.

(Subject.—Scheme for reclamation of saline lands).

(*a*) Yes sir.

(*b*) The following two schemes are under implementation for the reclamation of saline lands in Coimbatore and Dharmapuri districts.

(i) *Scheme for reclamation of saline, alkali and water logged lands in Enjampalli, Elamathur, etc., villages of Erode taluk in Coimbatore district.*

The object of the scheme is to drain the excess water in the sub-soil profile by excavating open drains and also to leach the harmful salts by liberal application of soil amendments like gypsum and good fresh water. This scheme is under implemention from 1st September 1969 in the following villages of Erode taluk.

1. Enjampalli.
2. Elamathur.
3. Avalpundurai.
4. Vadamugham Vellode.
5. Thenmugham Vellode.
6. Palamangalam.
7. Thuyampundarai.
8. Kagam.
9. Villakethi and other villages where the work is found necessary.

Survey and preparation of plans and estimates for the area was done till 31st March 1970. During 1970–71, an area of 5 acres was reclaimed. During 1971–72, it is proposed to reclaim an area of 35 acres.

(ii) *Pilot scheme for reclamation of Saline, Alkali and water logged lands in Sandakuppam villages in Krishnagiri taluk of Dharmapuri district.*

The object of this scheme is to demonstrate to the ryots the benefits of reclamation of water-logged, saline and alkali lands. The demonstration project was started in December 1969 in an area of 100 acres in Sundakuppam village in Krishnagiri taluk, Dharmapuri district. Regular demonstration work like excavation of drainage channels, application of soil amendments like sypsum and leaching out the deleterious salts by flooding the land with fresh water was taken up during 1970–71 and completed in the 100 acres plot. During 1971-72 maintenance of the work already done is being attended to.

தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1971 டிசம்பர் 18.

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு **பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *கேள்வி நேரம் தொடங்குவதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.*

இரண்டு குறுகிய கால வினாக்களையும் சேர்த்து இன்றைய வினாக்கள் பட்டியலில் மொத்தம் 52 வினாக்கள் உள்ளன. இவை தவிர, பேரவையின் 41-ஆம் விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இரண்டு உள்ளன. மேலும், 4 சட்ட முன்வடிவுகளும் 4 அரசினர் தீர்மானங்களும் உள்ளன. எனவே, கேள்வி நேரத்தை 10 மணிக்கு முடிப்பதில் எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Police Research Centre

* 544 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the nature of the work done by the Police Research Centre in Madras City; and

(*b*) the cost of the maintenance of this Centre?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: *(அ) காவல்துறை ஆராய்ச்சி நிலையத்தின் பணிகளைப் பொதுவாக நான்கு வகையாகப் பிரிக்கலாம் அவையாவன :—*

1. ஆராய்ச்சிப் பொறுப்புகள்.

2. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது குறித்த மாநிலச் செயல்வழி முறைகள் கழகப்பதிவேடுகளை (State *Modus Operandi* Bureau) *பேணுதல்.*

3. புள்ளி விவரங்கள்.

4. கடிதப் போக்குவரத்து.

இந்த நான்கு பிரிவுகளின் மூலம் குற்றங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை நடத்தி, குற்ற புலனாய்வுத் துறைக்கு உதவுகின்றது.

(இ) ஆண்டொன்றுக்கு ரூ. 77,200.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னையிலிருக்கும் இந்த ஃபாரன்ஸிக் லாபரடரிக்குப் புதிதாக அதிகப் பணம் கொடுத்திருக்கிறீர்களே அதனுடைய செயலாற்றும் முறை எம்முறையில் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நன்முறையில் இருக்கிறது.

Posts of Deputy Inspector-General of Police

* 545 *Q.*—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of posts of Deputy Inspector-General of Police have been created in this State during 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உணவுப் பிரிவு-குற்றப் புலனாய்வுத் துறைக்கு காவல் துறை டெப்யுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி ஒன்றும், தமிழ்நாடு காவலர் ஆணைக்குழு (போலீஸ் கமிஷன்) உறுப்பினர்-செயலாளர் பதவிக்கு டெப்யுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி ஒன்றும் 1969-ம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டன.

திரு. எ. சுவாமிதாஸ்: இந்த நியமனங்களுக்காக ஆண்டு தோறும் அரசாங்க நிதியிலிருந்து எவ்வளவு செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாதமொன்றுக்கு டி.ஐ.ஜி.-க்கு ரூ. 1,600 முதல் ரூ. 2,000 வரை சம்பளமாக செலவாகிறது.

காவல் துறை அலுவலர்கள் பயிற்சிக் கல்லூரி

* 546 **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியை சென்னைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தற்போது அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரிக்குப் பயிற்சிக்காகப் போகக் கூடியவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாத நிலை இருப்பதோடு, அவர்களுடைய உணவுக்குக் கூட கஷ்டமாக இருக்கிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அதற்கு அரசு என்ன பரிகாரம் காண முயற்சிக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வேலூரில் நடைபெறும் போலீஸ் பயிற்சிக் கல்லூரிக்கு இன்னும் நவீன வசதிகள் வேண்டும் என்றும், இன்னும் கூடுதலான சுற்றுவளைவு (காம்பவுண்டு) வேண்டுமென்றும், விளையாட்டுத் திடலுக்குப் போதுமான காற்றோட்டமுள்ள வசதி வேண்டும் என்றும் போலீஸ் கமிஷன் தனது அறிக்கையில் கூறியிருந்தது. ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதுபற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

காவலர் தொப்பியிலுள்ள ஆங்கில எழுத்துக்கள்

* 547 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

காவல் துறையினர் தொப்பியில் உள்ள ஆங்கில எழுத்துக்களுக்குப் பதில் தமிழ் எழுத்துக்கள் பொருத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆங்கில எழுத்துக்களுக்குப் பதில், தமிழ் எழுத்துக்கள் பொருத்த அரசினிடம் தற்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால். ஆங்கில எழுத்துக்களிலேயே, தமிழ்நாடு என்ற வார்த்தையைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

திரு. ஏ. சுவாமிதாஸ்: இந்தக் காவல் துறையினருக்கு இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிற தொப்பி மிகப் பழமை வாய்ந்த ஒரு டிசைனைக் கொண்டது. அதை மாற்ற தற்கால ரீதியில் கொஞ்சம் கவனித்து, வீர உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தொப்பியை மாற்ற முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது ஒன்றும் குல்லாய் மாற்றுகின்ற வேலை செய்வதாக இல்லை. (சிரிப்பு)

Supply of motor cycles to Sub-Inspectors

* 548 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to provide motor cycle to Sub-Inspectors and Assistant Sub-Inspectors of Police in Tamil Nadu; and

(*b*) if so, when it will be implemented?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 100 காவல் நிலையங்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதற்கு 14-6-1971 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. 95 மோட்டார் சைக்கிள்கள் வாங்கப்பட்டு 95 காவல் நிலையங்களுக்கு வழங்கப் பட்டு விட்டன. மீதமுள்ள ஐந்து மோட்டார் சைக்கிள்களும் விரைவில் வழங்கப்படும்.

[1971 டிசம்பர் 18

THIRU B. VENKATASWAMY : In certain areas the Police is not in a position to do justice because they cannot run to the trouble spot immediately as there is no vehicle in the Police station. The Hon. Chief Minister told us that he had given about 100 cycle-motors. But it is not at all sufficient. Will this Government come forward sympathetically to sanction cycle-motors to all the police stations in the State immediately?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: *எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் தரவேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில்தான் படிப்படியாக ஆண்டுதோறும் 100 ஸ்டேஷன்களுக்குத் தருவது என்ற முடிவு அறிவிக்கப்பட்டு, இந்த ஆண்டு 100 ஸ்டேஷன்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன.*

Police Station at Anchetty

*549 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Chief Minster be pleased to state—

(a) whether there is any proposal pending with the Government to open a Police Station at Anchetty in Denkanikota Taluk, Dharmapuri District; and

(b) if so, when it will be opened?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *(அ) தற்போது அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.*

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Anchetty is situated in the forest which is away from the police station about 16 miles and afterwards also there are villages for about 16 miles. The total area is about 30 miles to the police station. So, will this Government come forward sympathetically to start a police station in that backward hilly area?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: *மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல், காட்டு நிலம் அதிகம் அடங்கியுள்ள அந்த இடத்திற்கு அண்மையான தேன்கனிக்கோட்டை காவல் நிலையத்தைத் தவிர வேறு காவல் நிலையம் இல்லாத நிலையை அரசு உணர்ந்திருக்கிறது. இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்தது, இந்தச் செயற்குறிப்புக்கு ரூ. 23,625 ஆண்டு தொடர் செலவும், ரூ. 3,060 தொடராச் செலவும் ஏற்படும் என்று மதிப்பிட்டு, தற்போதைய நிதி நிலையில் அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. நிதி நிலை கொஞ்சம் சரியான பிறகு அதுபற்றி கவனிக்கப்படும்.*

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Chief Minister whether it will be opened in the next year?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: *நான் இப்போது அதை உறுதியாகச் சொல்வதற்கில்லை.*

1971 டிசம்பர் 18]

Simpson Group Workers

*3 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Simpson Group workers have reported for duty;

(b) if not, the reasons therefor ; and

(c) whether sufficient protection has been given to the workers?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *சிம்சன் குரூப் தொழிற்சாலையில் செம்பியம், அண்ணாசாலை பிரிவுகளில் முறையே 6,000 தொழிலாளர்களும், 1,000 தொழிலாளர்களும் 16—12—1971 நாளன்று வேலைக்குத் திரும்பினர். செம்பியம் தொழிற்சாலையில் தொழிலாளர்களின் இருதரப்பினர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அதன் விளைவாக 35 தொழிலாளர்கள் காயமடைந்தனர். போலீசார் குறுக்கிட்டு அமைதியை நிலைநிறுத்தினர்.*

செம்பியத்திலே ஏற்பட்ட மோதல் பற்றிய செய்தி அண்ணாசாலை கிளைக்குப் பரவிற்று. அங்கேயும் தொழிலாளர்களின் இருதரப்பினர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அதன் விளைவாக 14 தொழிலாளர்கள் காயமடைந்தனர். செம்பியத்திலும், அண்ணாசாலையிலும் தொழிலாளர் வாழும் பகுதிகளிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இரண்டு மூன்று தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்திய பிறகு கடைசியில் சிம்ஸன் தொழிலாளர்கள் 16-ம் தேதிக்கு வேலைக்குப் போவதாக இருந்தது. அப்படிக் கூறப்பட்டு, அங்கு ஏதாவது விவகாரம் ஏற்படும் என்று சொல்லி போதுமான அளவிற்கு தொழிற்சாலைக்குள்ளே போலீஸார்கள் வைக்கப்படவில்லை என்று அறிகிறேன். அதற்குக் காரணம் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: *தொழிற்சாலையில் போதுமான அளவிற்கு போலீஸார் இல்லை என்று கூறமுடியாது. போதுமான அளவிற்கு போலீஸார் இருந்தார்கள். அங்கே கலவரம் ஏற்பட்டபோதுகூட போலீஸார் உள்ளே போகவேண்டுமென்று கருதிய நேரத்தில், கலவரத்தில் ஈடுபட்ட, கலவரத்தைத் தூண்டியவர்கள் போலீஸார் உள்ளே வரக்கூடாது என்று தடுத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் ஒரு ஷிப்ட் வேலைக்குப் போகவேண்டியவர்கள், மூன்று ஷிப்டுக்கும் போகவேண்டியவர்கள் ஒரே ஷிப்டில் வந்தே தீரவேண்டுமென்று சொல்லி வேலைக்குப் போய்க் கலவரம் செய்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது.*

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்த விவகாரத்தில் ஏற்கனவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், மற்றக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து நல்லதொரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்ட பிறகும், அந்த மாதிரி சரியான வகையில் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்று வாக்குறுதி அரசாங்கச் சார்பில் தந்ததற்குப் பிறகும், இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள் அங்கு நடைபெற்றிருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு, ஒரு தொழிலாளி இன்னொரு தொழிலாளியை அடிப்பதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ? அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற அரசாங்கம் என்ன திட்டங்களை, என்ன நடைமுறைகளை ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைப்பற்றி விளக்கம் அளிக்க முடியுமா ? இனிமேலாவது அப்படிப்பட்ட செயல்கள் நடப்பதைத் தடுப்பதற்கு, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடப்பதைத் தடுப்பதற்கு ஒரு தொழிலாளி இன்னொரு தொழிலாளியைப் அடிப்பதைத் தடுக்க அப்படி அடிக்காமல் இருப்பதற்கு, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காமல் தடுப்பதற்கு முதல் அமைச்சர் அவர்கள் என்ன பாதுகாப்பு தர முடியும், அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள் என்பதைப்பற்றி விளக்க முடியுமா-?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதற்கு சற்று **விவரமான** பதிலை நான் அளிக்க விரும்புகிறேன். அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் இந்தப் பிரச்சினையில் அக்கறை காட்டி, இதைச் சட்டமன்றத்தில் கூட நானும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், தொழிலாளர்களுடைய தலைவர்களையெல்லாம் சந்தித்துப் பேசவேண்டும். இதிலே அக்கறை உள்ள கட்சியின் தலைவர்களையெல்லாம் சந்தித்துப் பேசவேண்டும் என்று கூறியதற்கிணங்க, அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறோம். முதலில் கொடுத்த உறுதிமொழிகளை ஏற்றுக்கொண்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவார்கள் என்று ஒரு கட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டது. பிறகு இறுதியாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடத்தில் பேசியதற்கிணங்க, மறுபடியும். ஏற்கனவே சொல்லப்பட்ட, முதல் அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் மீண்டும் அவர்களுக்கு அளிக்கப் பட்டன.

சட்டப்படி, தேர்தல் குறிப்பிட்ட தேதியில் ஒத்திவைக்காமல் நடத்தப்படும். அதைப் பற்றிய ஐயப்பாடு ஏற்படுமானால் லேபர் கமிஷனர் மூலம் முடிவு செய்து கொள்ளலாம். தேர்தல் நடக்கிற காலத்தில் சிக்கல்கள் ஏற்படுமானால் சட்டபூர்வமான ஆலோசனைகளை லேபர் கமிஷனர் மூலம் கேட்கலாம். பழி வாங்குதல் எதுவும் கிடையாது, வழக்குகள் பரிசிலனை செய்யப்பட்டு வாபஸ் பெறப்படும், எல்லோரும் வேலைக்குத் திரும்பி அமைதியான சூழ்நிலை ஏற்பட்டவுடன் அது பரிசீலிக்கப்படும், எஸ்.ஆர்.வி.எஸ்;

தொழிலாளர்கள் 98 பேர்கள். ஏற்கெனவே முதல் அமைச்சர் அவர்கள் கூறிய உறுதிமொழிப்படி அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சட்டப்படி காட்டூர் கோபால் சங்கம் எடுத்துள்ள முயற்சிகள் பற்றியும், இந்த 98 பேர்கள் விஷயத்தில்—இவ்வளவும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் முன்னிலையில் இந்த உறுதிமொழிகள்—முதலில் கொடுத்த அதே உறுதிமொழிகள் மீண்டும் வலியுறுத்தப்பட்டு சொல்லப்பட்டன. பிறகு அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களோடு கலந்து பேசி வேலைக்குச் செல்வது என்று நிர்மானமாகி அது அறிவிக்கப்பட்டது.

ஆனால், சிலர் இந்த முயற்சி வெற்றி பெறக்கூடாது என்று கருதி இதில் ஏதாவது ஒரு குழப்பம் விளைவிக்கவேண்டுமென்ற நோக்கில் தொழிற்சங்கத்தின் தலைவர்கள் என்ற பெயரால் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அரசியல் காரணங்களுக்காக மறுத்துப் பயன் இல்லை.

ஏனென்றால் இது நாட்டு நலனில் அக்கறையோடும், தொழில் அமைதி இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியதொரு காரியமாகும். சிலர் எப்படியாவது இன்னொரு மூன்று மாதங்களுக்கு, அந்தத் தேர்தல் வருகிற வரையில் இந்தச் சூடு தணியாமல் இருக்கவேண்டுமென்ற எண்ணமும், நெருக்கடியான நேரத்தில் குழப்பத்தை ஏற்படுத்திவிடவேண்டும் என்ற எண்ணம் கருதியும் தொழிலாளர்களிடத்தில் உணர்ச்சிகளை அவர்கள் பரவ விட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் வேலைக்கு குறிப்பிட்ட நேரத்தில் சென்றிருக்கவேண்டியவர்கள் ஒரு ஷிப்ட்டுக்குத் தேவையான தொழிலாளர்கள்தான். ஆனால் மூன்று ஷிஃப்ட்டுக்களுக்குத் தேவையான தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றார்கள். டோக்கன் அவர்களிடத்தில் இருக்கின்றனவா என்று பார்த்து உள்ளே அனுப்பக் கூட முடியாத அளவிற்கு அவர்கள் மளமளவென்று உள்ளே நுழைந்த வேகத்தில் உள்ளேயிருக்கிற தொழிலாளர்களுக்கும் இவர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டு. தொழிலாளர்களிடையே மட்டும் கைகலப்பு ஏற்பட்டது என்றில்லாமல், நான் அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இங்கே கூறவேண்டுமென்றால் ஏற்கனவே இருக்கிற காட்டூர் கோபால் தொழிற்சங்கம், அவர்களுடைய கூற்றுப்படி நிறுவனத்திற்கு மிகவும் வேண்டிய தொழிற்சங்கம் என்கிற ஒரு கற்பனையான அவதூறுக்கு ஆளாகியிருக்கிறது என்றாலும், அவர்கள் நிச்சயமாக அப்படி இருக்க முடியாது என்பது தெரியும், இதோ இங்கே இருக்கிற படங்களை அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் பார்த்திருப்பார்களானால். (மாண்புமிகு முதல்வர் அவர்கள் படங்களைக் காண்பித்தார்கள்) அந்தத் தொழிற்சாலைக்குள்ளே போனால் கண்ணாடிகள், நாற்காலிகள், குளிர் பதனச் சாமான்கள் போன்றவை உடைக்கப்பட்டு கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் ரூபாயிலிருந்து இரண்டு லட்சம்

ரூபாய் வரை சேதம் ஏற்பட்டிருக்கிறது. இது நாற்காலிகள் உடைக்கப்பட்ட படம். (படங்கள் ஒவ்வொன்றாகக் காண்பிக்கப் பட்டன.) இது அங்கேயுள்ள வெளிக் கட்டடத்தில் உள்ள கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருக்கிற படம். இது அந்தக் கட்டடத்தின் நுழைவாயிலில் உள்ள கண்ணாடிக் கதவுகள் உடைக்கப் பட்டிருக்கிற படம். இது கட்டடத்திற்குள்ளே ஒரு அறை சேதப் படுத்தப்பட்டு எப்படி அலங்கோலப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கான படம். இன்னொன்று, நுழைவாயிலில் உள்ள கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருக்கிற படம். அங்கே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிற பல கார்கள், அவையெல்லாம் உடைத்து சேதப் படுத்தப்பட்டிருக்கிற படம். இது, அங்கு ஒரு குளியல் அறை Bath Room இவைகளெல்லாம் பயங்கரமாக சேதப்படுத்தப் பட்டிருக்கிற படம். வேறு எங்கேயோ தூரத்தில் நின்ற இரண்டு கார்கள் உடைக்கப்பட்டிருக்கிற படம். இது அங்கே குளிர் பதனக் கருவி ஒன்றை உடைக்கப்பட்டிருக்கிற படம். இன்னும் ஏராளமான படங்கள்.

இப்படி கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் ரூபாயிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுகிற அளவிற்கு செய்யப்பட்டிருக்கிறது. காலையில் நம் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று அதைப் பார்வையிட்டு வந்தார்கள். அவர்கள் எனக்குத் தந்த தகவல்படி அவற்றைத் திறந்தாலும் கூட இன்னும் பல நாட்கள் அங்கு வேலை செய்ய முடியாதாம். சிதறிக் கிடக்கும் கண்ணாடிகளைப் பொறுக்கி சுத்தப்படுத்துவதற்கே ஒரு வார காலமாகும் என்று நிறுவனத் தார் தெரிவிக்கிறார்கள்.

ஆக்வே, ஸிம்ஸன் பற்றி கவலையில்லை, நாளைக்கே திறக்க அவர்கள் தயாராயிருக்கிறார்கள். செம்பியத்திலுள்ள தொழிற் சாலைகளைத் திறப்பது என்றால் ஒரு வார காலமாகும் வேலை தொடங்குவதற்கு. ஆகவே முதலில் ஒவ்வொரு கம்பெனியாகத் திறந்து அதுவும் சிறு சிறு கம்பெனிகள், எங்கே கண்ணாடித் துண்டுகளை சீக்கிரமாக பொறுக்கிவிட முடியுமோ, குறைவாக கண்ணாடிகள் சிதறிக்கிடப்பதைப் பொறுக்கிவிட்டு கொஞ்சங் கொஞ்சமாக நாள் ஒன்றுக்கு ஒரு கம்பெனி விதமாகத் திறக்க முடியும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு நிலைமைக்குப் பிறகும் நான் ஏற்கனவே அளித்த அந்த உறுதிமொழிகள் அப்படியே இருக்கின்றன. ஆனால் நீங்கள் புரிந்து கொள்ளவேண்டிய ஒன்றை மட்டும் கூறுகிறேன், அதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். யாரோ அமைதி ஏற்படக்கூடாது, சிக்கல்கள் ஏற்படவேண்டும், பிரச்சினை பெரிதாகவேண்டும் என்கிற தவறான கருத்தோடு, சதி நோக்கத்தோடு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களை அடையாளம் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு நடைபெறுகிறது

என்பதற்காக அவர்களைத் தெரிந்து கொண்டும், அடையாளம் கண்டு கொண்டும் வெளியே காட்டாமல் இருக்கிறார்கள். நியாயத்தின் வழி அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் நடந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் நிலைமையை உணர்ந்து கொண்டிருக்கிறீர்கள். உண்மையைத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்று எண்ணுகிறேன். எனவே இப்படிப்பட்ட வன்முறைச் செயல்களுக்கு இங்கிருக்கிற அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் இடம் தராமல் இருக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் மீண்டும் சொல்கிறேன், முதல் அமைச்சர் என்கிற முறையில் நானும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் அளித்த உறுதிமொழிகள், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இருப்பினும், அப்படியே இருக்கின்றன. அமைதியான வழியில் செல்வதற்கு, வேலைக்குத் திரும்புகிறோம் என்று சொல்வது தொழிலாளர்களின் பொறுப்பே தவிர வேறு அல்ல. ஒவ்வொரு கம்பெனியாகத் திறக்கப்படும் என்ற நிலை இருக்கிறது என்ற என் விளக்கத்தை அளிக்க நான் விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் அளித்த உறுதிமொழிகளைத் தொழிலாளர்களும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதற்கு இணங்கித் தான் தொழிலாளர்கள் வேலைக்கும் சென்றார்கள். ஆனால் வேலைக்குச் சென்ற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் கூறியது போல் மெயின் கேட்டில் ஐடெண்டிடி கார்ட் செக் செய்யாமல் விட்ட காரணத்தால் சமூக விரோதிகள், அதிலும் குறிப்பாக ஒரு வேளை முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்தும் கூட, நல்ல எண்ணம் இருந்தும் கூட, ஆளும் கட்சியைச் சார்ந்த சில சமூக விரோதிகளும் உள் சென்றதால் அந்தச் சம்பவம் ஏற்பட்டது . . .

(மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் எழுந்தார்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தொழிலாளர்கள் எப்போதும் வேலைக்குச் செல்லத் தயாராக இருக்கிறார்கள். இம்மாதிரியான சம்பவம் மேலும் நடக்காதிருக்க தக்க நடவடிக்கைகளை முதலமைச்சர் அவர்கள் எடுப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆளும் கட்சி சமூக விரோதிகளை அனுப்பவது இல்லை. கேள்வி கேட்டவருடைய கட்சிதான் சமூக விரோதிகளின் கூடாரமாக இருக்கிறது என்று நாட்டில் பேசப்படுகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, கல்யாணசுந்தரம் அவர்கள் முதலமைச்சரிடம் சில கோரிக்கைகளை வைத்து ஏற்றுக் கொண்ட பிறகு தொழிலாளர்கள் அமைதியாக தொழில் செய்வதற்கு உள்ளே சென்ற நேரத்தில் அங்கே குசேலர் அவர்களும். சிந்தன் அவர்களும் சென்று தொழிலாளர்களைத் தூண்டி விட்ட காரணத்தால் அப்படிப்பட்ட விபரீத சம்பவங்கள் நடைபெற்றன. போலீசார் தக்க நடவடிக்கை எடுத்து, தக்க முறையில் பாதுகாப்பு கொடுக்காமல் இருந்திருந்தால் சிலர் இறந்திருக்கக் கூடும் என்ற உண்மை அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் வீராசாமி சொன்ன தகவல் தான் உண்மையானது. பத்திரிக்கைகளில் இந்தத் தகவல் எழுதவேண்டுமென்று கோருகிறேன்.

State Transport bus stops

* 4 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the system of compulsory bus stops has been introduced in the City Bus Transport Service; and

(*b*) if so, the impact of the same on the efficiency of the bus service?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம். சென்னை மாநகரிலுள்ள நெரிசல் மிகுந்த ஐம்பது பேருந்து நிறுத்துமிடங்களில் கட்டாயமாக பேருந்துகளை நிறுத்துவதற்கான முறையை அரசுப் போக்குவரத்துத் துறை நடைமுறைக்குக் கொணர்ந்துள்ளது.

(இ) இக் கட்டாய நிறுத்துமிடங்களில் பயணிகள் சிரமமின்றிப் பேருந்துகளில் ஒழுங்காக ஏறுவதற்கு உதவி செய்யப்படுவர். பயணிகளும் பேருந்துகளும் விரைவாகச் செல்ல இம்முறை வகை செய்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறுகையில் 50 இடங்களில் இப்படி கட்டாயமாக பஸ் நிறுத்துவதன் மூலம் பயணிகளை விரைவாக ஏற்றிச் செல்லவும், பஸ்கள் வேகமாகச் செல்லவும், இது நல்ல பயனுள்ள முறையாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதே போல் நகரத்தில் இன்னும் ஏறத்தாழ 50 இடங்களில் கட்டாயமாக பஸ்களை நிறுத்தி இது போன்று பயணிகளுக்கு உதவ அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நிதி நிலைமையை அனுசரித்து மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இப்படி இந்த 50 இடங்களில் கட்டாயமாக பஸ்களை நிறுத்துவதற்கு அதிகச் செலவு எவ்வளவு ஆகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது செலவைப் பொறுத்த கேள்வி அல்ல. எனினும் பொதுவாக பேருந்துகள் நின்று சென்றால் பயணிகள் ஒழுங்காக கியூ வரிசையில் நின்று செல்வதற்கு, கூடுமான வரையில் நெரிசல் நேரங்களில், பயன் உள்ளதாக இருக்கும் என்று அரசு கருதிய காரணத்தால், 50 இடங்களில் பரீட்சார்த்தமாக இந்த முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஒரு மாதத்திற்கு அமலில் இருக்கும். அதற்குப் பிறகு இதை மேலும் விஸ்தரிப்பது பற்றி அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும்.

அரசுப் பாடப்புத்தகங்கள் விற்பனை உரிமை

* 550 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசாங்கச் சார்பில் வெளியாகும் பாடப்புத்தகங்களின் விற்பனை உரிமை, எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1970-71-ஆம் ஆண்டில் ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திற்கும், அரசுப் பாடப்புத்தகங்களை விற்பனை செய்யும் உரிமையை வழங்க, பதிவு செய்யப்பட்ட புத்தகப் பதிப்பாளர்களிடமிருந்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் குத்தகை விவரம் கோரிப் பின் ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் ஒருவர் விதம் விற்பனையாளரை நியமித்தது.

1971-72 கல்வியாண்டில் சென்னை மாநகரில் அரசுப் பாடப் புத்தகங்களின் விற்பனையைப் பாடநூல் நிறுவனமே நேரடியாக மேற்கொண்டது. இம்முறைப்படி சில்லறை விற்பனையாளர்கள் மூலமாகவும் உயர்நிலைப்பள்ளிகளுக்குத் தேவைக்கேற்பவும் புத்தகங்கள் விற்கப்பட்டன. சென்னை மாநகரத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் சென்ற ஆண்டு மேற்கொண்ட முறைப்படி மொத்த விற்பனையாளர்கள் மூலமாகவே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்படும் அரசுப் பாடப் புத்தகங்கள் விற்கப்படுகின்றன.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சில சமயங்களில் அரசு புத்தகங்கள் விற்பனைக்கு வருவதற்கு மிகக் காலதாமதம் ஆகி, காலாண்டுத் தேர்வு நடைபெறுகிறபோது கூட அரசு புத்தகங்கள் வருகின்றன என்று புகார் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1970-71-ம் ஆண்டில் காலத்தாழ்வு ஏற்பட்டது. ஆனால் 1971-72-ல் காலத்தாழ்வு ஏற்படாத வகையில், முன்கூட்டியே குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, ஒப்பந்தக்காரர்கள் மூலம் விற்பனைப் பணம் எவ்வளவு வரவேண்டியிருக்கிறது. அதை வசூலிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய முழு விவரம் இல்லை. பல விற்பனையாளர்கள் சரியாகப் பணம் திரட்டி, செலுத்தாவிட்டால் அவர்களுக்கு மறுபடியும் கொடுக்காமல், அவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவற்றை எடுத்திருக்கிறது. பலரிடத்திலிருந்து முன்கூட்டியே டிபாசிட் வாங்கியிருக்கிறோம். டிபாசிட் தொகையை எடுத்துக்கொண்டு, அதற்கு மேலே பணம் வரவேண்டியிருந்தால், அதை வசூலிக்க வழக்குத் தொடருதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பெரும்பாலும் ஒப்பந்தக்காரர்கள் பணம் செலுத்திவிட்டார்கள். ஒரு சிலர்தான் உரிய காலத்தில் பணம் கட்டவில்லை. அவர்களுக்கு மேற்கொண்டு அந்த உரிமை வழங்கப் படவில்லை.

மேயர் தேர்வு

* 551 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வகுப்புவாத பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் ஆண்டுக்கு ஒரு புதிய மேயரைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறைப் பழக்கம் மதுரை மாநகராட்சியிலும் அனுசரிக்கும் உத்தேசம் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எல்லா நகராட்சிகளிலும் இம்மாதிரி ஆண்டுக்கு ஒரு முறை நகராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்க வகை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சென்னை மாநகரத்தில் கூட மேயர் தேர்தலில் வகுப்புவாரி அடிப்படையில் ஆண்டுக்கு ஒரு மேயர் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது சட்டதிட்டத்தில் ஏற்படுத்தப்படவில்லை. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டத்தில் கூட அப்படிப்பட்ட வகையில் சட்டம் ஒன்றும் இல்லை. அது ஒரு கன்வென்ஷன், மரபு என்ற முறையில்தான் நடத்தப் பட்டு வருகிறது. ஆனால் இப்படிப்பட்ட முறை சிலபல நகராட்சி மன்றங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. திண்டுக்கல்லிலும், வாணியம்பாடியிலும் ஒரு தடவை ஒரு மதத்தைச் சார்ந்தவர் நகராட்சித் தலைவராக இருந்தால், அடுத்த தடவை முஸ்லீம் வகுப்பைச் சார்ந்தவர் தலைவராக வரவேண்டுமென்று மரபு இருக்கிறது. சட்டத் திட்டத்தை ஒட்டி அல்ல. மரபை ஒட்டித்தான் அப்படி நடக்கிறது.

* 552 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை மாநகராட்சி மன்ற மேயர் பதவிக்காலத்தை ஓராண்டிலிருந்து மூன்றாண்டாக நீடிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

நகராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள்

* 553 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

நகராட்சிகளுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் தந்திட அரசு முடிவெடுத்துள்ளதா ?

மாண்புகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்

* 554 வினா—திரு. பி. எஸ். மணியன்

திரு. ந. சோமசுந்தரம்

மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்றும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். இந்தப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, எவ்வளவு காலத்திற்குள் அப்படிப்பட்ட உத்தரவை அரசு வழங்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போதுதான் நகராட்சியில் பணியாற்றும் பணியாளர்களைப் பொறுத்து அரசு ஊழியர்களாக ஆக்க நடைமுறைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பிற்றார் வளர்ச்சி இயக்குநர் பரிசீலனை செய்து வருகிறார்கள். பரிசீலனை செய்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்த பிறகு, அரசு ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியக்கூடியவர்களுக்குப் பதவி உயர்வுக்கான எந்த வாய்ப்பும் இல்லை. அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் பெரும் சலுகைகள் அவர்களுக்கு

கொடுப்பது இல்லை. இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அவர்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முறைப்படி இரண்டாவது மாநில ஊதியக் குழுவினர் கூறிய அத்தகைய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று பரிந்துரை செய்து இருக்கிறது. எந்தெந்தப் பதவிகளை எந்த அளவுக்கு ஆக்கலாம் என்பதை சிற்றூர் வளர்ச்சி இயக்குநர் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். அவர் அறிக்கை வந்ததற்குப்பிறகு அதற்கான முடிவுகளை அரசு ஆராய்ந்து செய்யும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 9·30 **திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவரவர்களே, இந்த விஷயமாக திரு. முருகேச முதலியார் குழு பரிசீலனை செய்து சிபாரிசுகள் செய்தார்களே ? அவை எந்த அளவுக்கு எற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையின் தன்மைகள் வேறு. நிதி வளர்ச்சி எந்த அளவுக்கு செய்யப்படலாம் என்பதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். இது தனியாக ஆராய வேண்டிய ஒன்று. இதைப்பற்றிச் சில பிரச்சினைகள் அட்மினிஸ்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷனிடம் விடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கை வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சோழவந்தான் பேரூராட்சி

*** 555 வினு—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

சோழவந்தான் பேரூராட்சியை நகராமன்றமாக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

புராதனக் கலைகளின் வளர்ச்சி

*** 556 வினு—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் தெருக்கூத்து, பொம்மலாட்டம் போன்ற புராதன கலைகளை வளர்க்க அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். அரசு ஆதரவில் இயங்கி வரும் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஆண்டுதோறும் கிராமியக் கலைக் குழுக்களுக்கு உதவிமான்யம் வழங்கி வருவதுடன், இத்துறையில் சிறந்த கலைஞர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்துப் பாராட்டும், விருதும் வழங்கி கௌரவித்து வருகிறது.

Advisory Committee on Leprosy

* 557 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the All India Leprosy Advisory Committee met at Madras on or about the 10th August 1971;

(b) whether the representatives of the State Government attended this meeting ; and

(c) if so, the stand taken by them ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) மாநில அரசிற்கு அதிக மானியங்கள் உரிய காலத்தில் அளிக்கவும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தொழுநோய் சிகிச்சை நிலையங்களைப் பராமரிப்பதற்கு ரொக்க உதவித் தொகையும் மருத்துவ மனைகளில் தொழுநோய்ப் பிரிவு கட்டுவதற்கு உதவி அளிக்குமாறும், மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, will this Government come forward to separate the number of patients who are to have treatment in the hospital and those patients who are to have ambularory treatment, that is, treatment as out-patients and whether it is possible to sit down and find out how many are there in this group and how many in that group, so that the expenditure for the Government can also be reduced by concentrating on patients who can come as out-patients, especially because most of the cases can be cured according to the modern treatment as out-patients ? Will this Government see that eradication of leprosy takes proper footing by concentrating along with the in-patients/out-patients also and if so, may I know the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த நோய் நீக்கப் பணிகள் என்பது பரவலாக வேறு வேறு கட்டங்களில் பல்வேறு மாவட்டங்களிலும் நடைபெறுகின்றன. புற நோயாளிகளாக அவர்கள் தங்கள் இல்லத்திலிருந்துகொண்டே மருத்துவம் செய்யப்படும் வகையிலும், 'சர்வே அண்ட் எஜுகேஷன் ட்ரீட்மெண்ட்' என்று பாரா-மெடிகல் ஓர்க்கர்கள் மூலமாகப் பல பகுதிகளில் ஏராளமாக வேலைகள் நடைபெறுகின்றன. 'லெப்ரஸி கண்ட்ரோல் யூனிட்' என்பது சற்று விரிவானது. அதில்

வேறுவிதமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. 'லெப்ரஸி ட்ரீட்மெண்ட் அண்ட் ஸ்டடி ஸெண்டர்' என்ற அமைப்பும் இருக்கிறது. அதைப்பற்றியும் என்னென்ன செய்யலாம் என்று அரசு யோசிக்கிருர்கள். திருமணியில் லெப்ரஸி ஸானடோரியம் என்பது இன்னும் சற்று பெரிய அளவில் ஆராய்ச்சி செய்து பணியாற்றுகிருர்கள். எல்லா மருத்துவ மனைகளிலும். ஒரு பிரிவில் லெப்ரஸிக்கு அறுவை சிகிச்சை போன்றவை தேவையான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது இன்னும் இன்ஃபெக்ஷஸ், நான்-இன்ஃபெக்ஷஸ் என்ற அடிப்படையிலும் சிகிச்சை செய்யப்படுகிறது. நிதி அதிகம் இருக்குமானல் இவற்றை விரிவுபடுத்தலாம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தத் தொழு நோயானது தமிழ் நாட்டில் வடார்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறதே, அந்த மாவட்டத்தில் மட்டும் அப்படி இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அரசு ஆராய்ந்து பார்த்திருக்கிறதா ? அது மட்டுமல்லாமல், தனிப்பட்டவர்கள் நடத்தும் மருத்துவ நிலையங்களுக்கு வெளிநாட்டவர்கள் நடத்துபவைகளுக்கு அரசு ஏதாவது மானியம் கொடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தொழுநோய் வடார்க்காடு, தென்ஞர்க்காடு, செங்கல்பட்டு, ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பரவலாக இருக்கிறது என்பது ஒரு கருத்து. பரவலாக பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இந்த நோய் வருவதற்கு. குறிப்பிட்ட காரணத்தைத் தெரிவிக்க இயலாது. ஆனல் பிணி தீர்க்கும் பணியை மேற்கொண்டிருக்கிற பல்வேறு அமைப்புகளில், வெளி நாட்டவர்கள் சிறந்த பணியாற்றுகிருர்கள் என்பது உண்மை. நேற்றுக் கூட, அவர்களுடைய ஆலோசனைக் குழுக் கூட்டம் நடந்து. நான் அவர்களைப் பாராட்டி நன்றி தெரிவித்திருக்கிறேன். மிகப் பெரிய அளவில் தொண்டு உணர்ச்சியோடு அவர்கள் ஆற்றும் பணி நிதியால் ஆற்றக் கூடியது அல்ல. இந்த அரசு அவர்களுக்கு மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்போடு, உதவி செய்ய வேண்டிய முயற்சிகள் எடுக்கிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, இந்தத் தொழு நோய் மருத்துவ மனைகளை பல மிஷனரிகள் நடத்துகிருர்கள். அவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து உதவித் தொகை கொடுக்கிறது. ஆனல் இப்பொழுது கொடுக்கும் தொகை குறைவானது, ஒரு நோயாளிக்கு இவ்வளவு என்கிற விகிதத்தில் அதைப் பரிசீலனை செய்து, ஆண்டுதோறும் இவ்வளவு கொடுப்பது என்ற வகையில் கொடுக்க அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்று என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. எம். கந்தசாமி : தலைவர் அவர்களே, தொழுநோயானது மிகக் கொடுமையானது என்று இருப்பதால், தீவிரமாகச் சிகிச்சை செய்து உதவிசெய்ய, மேலும் பரவாமல் தடுத்து நிறுத்த நம்முடைய அரசு 'வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைசேஷன்' உதவியைப் பெற முயற்சித்து, அதிக உதவியைப் பெற்று அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 'வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைஸேஷன்' மூலமாக வேறு பல உதவிகளைப் பெறலாம். ஆனல் இந்தத் துறையில் பொதுமக்களுக்குப் போதுமான தெளிவு ஏற்பட வேண்டும். ஏற்கனவே சிறுவயதிலேயேகூட சிறு புண், காயம் இவற்றிற்கு இடம் கொடுக்காமல் கவனமாக இருக்க வேண்டும். முதலிலே அப்படிக் கண்டிருந்தால், அப்படிப்பட்ட அடையாளங்கள் தெரிந்தால், சூடான எதையும் தொடாமல் இருக்க வேண்டும். அந்த வகையில் 'எஜுகேடிங் தி பப்ளிக்' என்ற முறையில் பொது மக்களுக்குத் தெளிவும், அறிவும் உண்டாக வேண்டும், அதற்குப் பிரசாரம் நடத்த வேண்டும். அந்த முறையில் அரசாங்கம் அக்கறை காட்டி வருகிறது.

சென்னை நகர வளர்ச்சி

***558 வினு—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகர அபிவிருத்திக்கு ரூ. 136 கோடியில் திட்டம் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ரூ. 938 கோடிக்குத் தயாரிக்கப்பட்ட சென்னைப் பெருநகர்ப் பகுதி வளர்ச்சிக்கான இருபதாண்டுக் காலத்திட்டம், 1971 ஜூன் திங்களில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இதன் குறுகிய கால முதலீடு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 185 கோடியாகும். இத்திட்டத்தை நிறைவேற்ற, மத்திய அரசிடமிருந்தும், உலக வங்கி போன்ற ஐக்கியநாடுகள் முகவரமைப்பிடமிருந்தும் நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காருக்கு இந்தத் திட்டத்தை அனுப்பியிருக்கிருேம். அதற்கு ஏதாவது பதில் வந்திருக்கிறதா ? நிதிகொடுக்க அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிருர்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுவரையில் பதில் கிடைக்கவில்லை. அவர்கள் இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில், இன்னும் சில திங்கள்கள் கழித்து பதில் அளிப்பார்கள் என்று கருதுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : In view of certain urgency for improvement of the City just like Calcutta Corporation, has this Government represented to the Government of India to give a block grant of a few crores of rupees under the Metropolitan Improvement Scheme?

THE HON. THIRU K. ANBAZHAGAN: That comes under the Local Boards Ministry and the Hon. Minister for Education should reply to that.

திரு. கா. வேழவேந்தன் : இந்தச் சென்னைப் புறநகர் திட்டத்திலே சென்னை நகரைச் சுற்றியுள்ள செங்கற்பட்டு மாவட்டப் பகுதிகளில் எந்த எந்தப் பகுதிகள் சேர்க்கப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எப்பொழுது சேர்க்கப்படுகிற பகுதி, ஒட்டிய பகுதியாகத்தான் இருக்குமே ஒழிய, எட்டிய பகுதியாக இருக்காது. ஒட்டிய பகுதியைச் சேர்க்கும்போது, 450 சதுர மைலுக்குள் அடங்கிய பகுதிகள் வரும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தத திட்டத்திலே, இப்பொழுது இருக்கிற சென்னை நகர எல்லைப் பகுதியில் தொழிற்சாலைகள் இருப்பதால், சுற்றுப்புறங்களில் அமைக்கும் முறையில், திட்டம் இருக்கிறதா ? அப்படியானால், இனிமேல் வரும் இடைக் காலத்தில், அத்தகைய புதிய தொழிற்சாலைகளை நகரத்திற்குள்ளேயே ஏற்படுத்தாமல் வெளிப் புறங்களிலேயே அமைக்க வழி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு அப்பாற்பட்டது இந்தத் துணைக் கேள்வி. மூலக் கேள்வியின் நோக்கம், சென்னை நகரத்தை ஒருங்கிணைந்ததாகச் செய்ய, சாலைப் போக்குவரத்து, கழிவுநீர், குடிசை மாற்றம் இவற்றையெல்லாம் உள்ளடக்கிய திட்டம் என்ன என்பது பற்றியது; தனியார் அமைக்கும் தொழிற்சாலைகள் பற்றியது அல்ல. பொதுத் துறையின் அடிப்படையில் அமைகிற இந்த அமைப்புகள் பொருத்ததாகும். விரிவுத் திட்டம் வருகிறது. தொழிற்சாலை எந்தப் பகுதியில் இருப்பது நல்லது என்கிற பொருள்பற்றி தனிக் கருத்து அப்பொழுது உருவாகும்.

அரூர் அரசு மருத்துவமனையில் எக்ஸ் கதிர்வீச்சுப்பிரிவு

* 559 **வினா—டாக்டர் ச. அ. சின்னராசு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூர் வட்டத்தலைமை அரசினர் மருத்துவ மனையில் எக்ஸ்-ரே சாதனம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

கும்முடிப்பூண்டியில் வட்டத்தலைமை மருத்துவமனை

* 560 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கும்முடிப்பூண்டியில் வட்ட அளவு தலைமை மருத்துவமனை (Taluk Head-quarters Hospital) கட்ட திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஒரு துணை வட்டத்தில் இருக்கின்ற அளவுக்கு இல்லையென்பதாலும், ஒரு வட்டத்தில் இருக்கின்ற அளவுக்கு இருப்பதாலும், எப்படியாவது நெருக்கடி நிலை தீர்ந்த பிறகாவது ஒரு தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனையை அங்கே அமைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதில் இரண்டு தவறான கருத்துக்கள் இருக்கின்றன. சில தாலுக்கா மருத்து மனைகளைவிட ஆரம்ப சுகாதார நிலையங்கள் அழகாகக் கட்டப்பட்டிருந்தாலும், அங்கும் ஒரே டாக்டர்தான். இங்கும் ஒரே டாக்டர்தான். ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு நல்ல மருத்துவ மனை அல்ல என்று கருதக்கூடாது. இரண்டாவது, கும்முடிப்பூண்டி, ஒரு பிர்க்காத் தலைநகரமே தவிர, தாலுக்கா தலைநகரம் அல்ல. பல்வேறு பிர்க்காத் தலைநகரங்களில் என்ன நிலைமை இருக்கிறதோ அந்த நிலைமைத்தான் அங்கும் இருக்கிறது.

Assistance by Veterinary Department personnel

* 561 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether the Race Course requisitions the services of the personnel of the Department of Veterinary Services of the State Government during the Race season ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) பேரவை முன்னர் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 117-119-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

[1971 டிசம்பர் 18

Bureau of Parliamentary work

* 562 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the Bureau for Parliamentary work has forwarded the Resolutions of the South Indian Cinema Employees Union to the Government about 6th May 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) இல்லை. தென்னிந்திய சினிமா ஊழியர் சங்கத்தின் தீர்மானங்கள் எதுவும் பாராளுமன்ற வேலைக் குழுவிடமிருந்து இவ்வரசு பெறவில்லை.

சீரணி தனி அதிகாரிகள் கடமைகள்

* 563 **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சீரணிப்படை தனி அதிகாரிகள் கடமைகளும், பொறுப்புகளும் என்ன ?

(இ) மாவட்ட அளவில் சீரணிப்படை அதிகாரிகளை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) அவையின் முன் ஒரு அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

(இ) தற்போதைக்கு இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, சீரணிப்படையில் உள்ளவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை தங்கள் அங்கத்தினர் பதிவைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும் என்ற விதிமுறை உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அம்மாதிரியான விதிமுறை ஒன்றுமில்லை.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சீரணிப்படைக்கு இன்னும் அதிகமாக உறுப்பினர்களைச் சேர்க்கின்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

@ 119-120-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1971 டிசம்பர் 18]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தச் சீரணிப் படையினர் நகராட்சிப் பகுதிகளிலும் பணிபுரிகின்ற வாய்ப்பை உருவாக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : தலைவரவர்களே, உறுப்பினரின் யோசனை சந்தர்ப்பம் வரும்போது பரிசீலிக்கப்படும்.

State Social Welfare Board

* 564 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to divert funds to the State Social Welfare Board, for distribution to private agencies ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (ஆ) மாநில சமூகநல வாரியத்தின் வேண்டுகோளின்படி அரசு, 1971-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் தானே முன்வந்து சமூக நலத் தொண்டு செய்யும் ஐந்து நிறுவனங்களுக்கு ரூபாய் 5,000 (ஐயாயிரம்) மானியமாக வழங்குவதற்கு வாரியத்திற்கு ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது.

கோவை மாவட்ட மலைப்பகுதி மக்கள்

* 565 **வினா—திரு. ஈ. எம். நடராசன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாவட்டம், மலைப்பகுதியில் உள்ள மலைஜாதி மக்களுக்கு அரசு இதுவரை என்னென்ன நன்மைகள் செய்துள்ளது ?

(இ) அவர்களில், உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) கேட்கப்பட்டுள்ள விவரங்கள் அடங்கிய அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஈ. எம். நடராசன் : தலைவரவர்களே, பவானி வட்டத்தின் பர்கூர் மலைப்பகுதியில் இருக்கின்ற மலைசாதி மக்களுக்காக இதுவரை கல்வி, வீடு, இணைப்புச் சாலைகள், குடிநீர் வசதி, கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற வசதிகளெல்லாம் அளிக்கப்படவில்லை. ஆகவே, அரசு அதைப் பரிசீலனை செய்து, பர்கூர் மலைப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு வசதி செய்ய முயற்சி செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

@ 120-122-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1971 டிசம்பர் 18

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விவரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இணைப்புச் சாலைகள், கருவிகள், உபகரணங்கள் வழங்குதல், குடிநீர் வசதி, கல்வி, கூட்டுறவு சங்கங்கள், வேளாண்மை, உழவுமாடுகள், வீடுகள் வழங்குதல் ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல் அவைமுன் வைக்கப் பட்டிருக்கின்றது. இவற்றைத் தவிர மேலும் என்ன வசதிகள் செய்யவேண்டும் என்று உறுப்பினர் விரும்புகிறார் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்விகள் கோவை மாவட்டத்தைப்பற்றி இருக்கவேண்டும். வடாற்காடு மாவட்டத்தைப்பற்றிக் கேட்கக்கூடாது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இந்த மலைப் பகுதியில் உள்ள மலைசாதி மாணவர்களுக்குப் போதுமான சத்துணவு கொடுக்கவும், உடைகள் வழங்கவும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, சத்துணவுத் திட்டத்தின்கீழ் மலைவாழ் மாணவர்களுக்கும் சேர்த்து சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் கம்பளிகளும் தரப்படுகின்றன. நலத்துறை மூலம் நடத்தப்படும் பள்ளிகளில் கம்பளியும் தரப்படுகிறது.

இனாம் நிலங்கள்

* 566 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சென்னை சட்டம் 26/63 Tamil Nalu Inam Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1963 மடங்கள், ஆதீனங்கள் இவைகளுக்கு நஞ்சை புஞ்சை நிலங்கள் சம்பந்தமாக நேரடி அனுபோகம் தேவையில்லை என்று தொடர்ந்து விதி விலக்கு அளிப்பதற்குக் காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்து சமய நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட கோட்டத் துணை ஆணையாளரின் இசைவினைப் பெறாமல் பண்ணைச் சாகுபடி செய்யக் கூடாது என்று இந்து சமய அறக்கட்டளைகள் துறை பிறப்பித்த விதிகள் தடைசெய்கின்றன. எனவே, அவர்கள் சொந்தமாகப் பயிர் செய்வதற்கு முற்றிலும் தடை செய்யப்படுகிறது. இது, இந்து சமய நிறுவனங்களுக்கு மிகுந்த இடர்பாடு விளைவித்தது. அவர்கள் செய்துகொண்ட முறையீட்டின் மேல், ரயத்துவாரிப் பட்டாக்களைப் பெறுவதற்காக, சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளபடி அந்த நிறுவனங்கள் சொந்தச் சாகுபடி செய்துள்ளனவாவென்று நிரூபிக்க வேண்டுமென்கிற நிபந்தனையிலிருந்து அவற்றிற்கு விலக்களித்து, அரசு, 1966-ல் திருத்தச் சட்டம் ஒன்றை (தமிழ் நாடு சட்டம் 27/1966) இயற்றியது.

1971 டிசம்பர் 18]

கோடாறம்குளம் பஞ்சாயத்துக்குட்பட்ட ஆதீன நிலங்கள்

* 567 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருநெல்வேலி மாவட்டம், கோடாறம்குளம் பஞ்சாயத்திற்குட்பட்ட ஆதீன நிலங்களில் ஒருபோக நிலங்களை இருபோகமாகப் பயிர் செய்வதற்கு வாட்டர் ரேட் தெண்டத் தீர்வை வசூலிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம். மணிமுத்தாறு நீர்த்தேக்க பாசனத்தின் தண்ணீர்த் தீர்வை விதிகள், 1967-ன்படி ஒருபோக நஞ்சை நிலத்தில் உத்தரவின்றி இருபோகம் பயிர் செய்தால் அது முறையற்ற பாசனமாகக் கருதப்பட்டு மேற்படி விதி எண் 5-ன்படி தண்ணீர் தீர்வை விதிக்கப்படும். ஆனால் மேற்படி நிலத்தில் இருபோகம் பயிர் செய்ய அனுமதி அளிக்கப்பட்டால், பசலி ஜாஸ்தி தீர்வை மட்டும் விதிக்கப்படும். கோடாறம்குளம் கிராமத்தில் உள்ள ஒருபோக நஞ்சை நிலங்களில் இருபோகம் விளைவிக்க ஏதும் அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆகவே அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் ஒருபோக நஞ்சை நிலங்களில் இருபோகம் விளைவித்ததை முறையற்ற பாசனமாகக் கருதி மணிமுத்தாறு நீர்த்தேக்க பாசனத் தண்ணீர் தீர்வை விதிகளின்படி தண்ணீர் தீர்வை விதித்திருப்பது சரியே.

சேலம் உருக்காலை

* 568 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சேலம் உருக்காலை எப்போது உற்பத்தி துவங்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விரைவில் தொடங்க மத்திய அரசு ஏற்பாடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, சேலம் இரும்பு ஆலைத் திட்டம் நாம் நீண்டகாலமாகக் கேட்ட திட்டம். பல ஆண்டுகளாக அது துவக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். ஒரு காலவரை வரையறுக்கப்பட்டு, மத்திய அரசை வற்புறுத்த நமது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இப்போதைக்கு அப்படிப்பட்ட சந்தேகம் ஏற்பட வாய்ப்பில்லை. காரணம், நிலத்தைப் பொறுத்த அளவுக்கு, சுமார் 2,000 ஏக்கர் நிலங்களை நாம் இதற்காக ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று அனுமதி தந்திருக்கிறார்கள். எந்தவிதமான உருக்குப் பொருள் உற்பத்தி செய்வது என்பதைப்பற்றி மட்டும்தான் (பிராடக்ட் மிக்ஸ்) மத்திய அரசு முடிவு எடுக்கவேண்டிய நிலை இருக்கிறது.

[1971 டிசம்பர் 18

*569 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether officials of the Ministry of Steel and Iron visited the steel plant sites in this State about 16th May 1971; and

(b) the places they visited?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம். 1971-ம் ஆண்டு மே திங்கள் 14-ம் நாள்.

(இ) கஞ்சமலைக்கு அருகாமையில் உள்ள சேலம் உருக்காலைக்கான இடம்.

*570 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the department of Geological Survey of India has been asked to prepare a "Tectonic" map of Kanjamalai in Salem district, where the Salem Steel Plant is being located; and

(b) if so, the details thereof?

THE HON. THIRU S. MADHAVAN : (a) Yes, Sir.

(b) A "Tectonic" map of the Salem Kanjamalai area on a scale 1 :253440 has been prepared by the Tamil Nadu Circle of Geological Survey of India.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know whether the Hon. Minister for Industries will be kind enough to consider, whether he will supply a copy of that map to the Legislature Library so that Members can go through it?

THE HON. THIRU S. MADHAVAN : It will be very difficult to supply all kinds of maps prepared by the Geological Survey of our State and the Government of India and by the United Nations Organisation.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த சேலம் உருக்கு ஆலை சம்பந்தமாக ப்ராடக்ட் மிக்ஸ் பற்றிய பரிசீலனை நடந்து வருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதில் நாளாக நாளாகப் பல்வேறு ஐயப்பாடுகள் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே மத்திய அரசாங்கம் இன்ன காலத்திற்குள் இந்தப் பரிசீலனை முடிந்து தொடங்கலாம் என்ற உறுதி ஏதேனும் நமது அரசிற்கு வழங்கியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஐயப்பாடுகள் எங்கே ஏற்பட்டாலும் தமிழ் நாட்டில் ஏற்படக்கூடாது என்பதுதான் கருத்தாகும். தமிழ்நாட்டில் வரும் வராது என்ற பிரச்சினையை எழுப்புவது வடக்கே உள்ளவர்களுக்கு ஒரு

1971 டிசம்பர் 18]

தைரியத்தை ஏற்படுத்திவிடும் என்று கருதுகிறேன். இதைப்பற்றி பாராளுமன்றத்தில் அந்தத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது, கட்டாயம் வரும், விரைவில் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஏற்படுகிற கால தாமதத்தைத் தவிர்க்க முடியாது. காரணம், இன்றைக்கு என்ன முடிவு எடுக்கிறோமோ அதுதான் அந்தத் தொழிற்சாலையின் லாப நஷ்டத்தை எதிர்காலத்தில் நிர்ணயிக்க இருக்கிறது. ஆகவே What types of steel products we are going to produce என்று நிர்ணயிப்பது முக்கியம். அதில் சிறிது காலம் எடுத்தாலும், அதைப்பற்றிக் கவலையில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, உருக்காலை வரும், மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்தாகிவிட்டது, என்று சொல்லுகிறார்கள். ஆனால் இன்னும் வேலை தொடங்கப்படவில்லை. ஆகவே இன்னும் எவ்வளவு நாட்கள் ஆகும், அதற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் அதைப்பற்றி விளக்கினேன்.

மணலியிலுள்ள உர உற்பத்தி ஆலை

* 571. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மணலி உர உற்பத்தி ஆலை பூர்த்தியடைந்து செயல்படத் தொடங்கிவிட்டதா ?

(இ) இல்லை எனில் எப்போது தொடங்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மணலி உர உற்பத்தி ஆலை கடந்த செப்டம்பர் மாதத்தில் வியாபார ரீதியில் உற்பத்தி தொடங்கிவிட்டது. உற்பத்தி தொடங்கிய பன்னிரண்டு மாதத்திற்குள் முழு உற்பத்தித் திறனை எட்டிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த மணலி உர உற்பத்தி ஆலையினுடைய மொத்த மூலதனம் எவ்வளவு? அதிலே தமிழக அரசின் பங்கு எவ்வளவு ? அதன் நிர்வாகத்தில் தமிழக அரசின் பொறுப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மணலி உரத் தொழிற்சாலையில் தமிழக அரசுக்கு மூலதனத்தில் பங்கு இல்லை. அதில் மத்திய அரசு 51 சதவீதமும், வெளிநாடுகள் 49 சதவீதமும் மூலதனம் போட்டிருக்கிறார்கள். மொத்த மூலதனம் சுமார் 69 கோடி.

[1971 டிசம்பர் 18

THIRU K. M. SUBRAMANIAM : May I know whether there is any possibility of production programme being affected here because of the Aid Programme stoppage from foreign countries?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஏற்கெனவே தொடங்கப்பட்டு விட்டது. இதிலே எந்தவிதமான தடையும் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரசாயன நூல்களிலிருந்து கைத்தறித் துணிகள் உற்பத்தி

*** 572 வினா—திரு. மா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

டெரிலின் முதலிய செயற்கை ரசாயன நூல்களிலிருந்து கைத்தறி ஆடைகள் உற்பத்தி செய்ய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

பள்ளிப்பட்டுத்துணை வட்டத்தில் உள்ள சிதாராமபுரம் ஏரி

*** 573 வினா—திரு. இ. எஸ். தியாகராசன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டுத் துணை வட்டம் சிதாராமபுரம் ஏரியை ரிப்பேர் செய்ய எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத் திட்டத்திற்கு மேற்பார்வை பொறியாளர் ஒப்புதல் வழங்கப்பெற்ற பின்னர் வேலை தொடங்கப்படும்.

தளவாய் ஏரி மராமத்து

*** 574 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் கணியம்பாடி தொகுதியைச் சார்ந்த தளவாய் ஏரி பழுது பார்க்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :—

(அ) & (இ) தளவாய் ஏரி 1970-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பழுதுபார்க்கப்பட்டது.

1971 டிசம்பர் 18]

அரூருக்கு வடக்கே மதிகெட்டான் கால்வாய்

*** 575 வினா—டாக்டர் ச. அ. சின்னராசு :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டத்தில். அரூருக்கு வடக்கே தென்பெண்ணையாற்றிலிருந்து "மதிகெட்டான் கால்வாய்" கொண்டு வர திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ச. அ. சின்னராசு : தலைவரவர்களே, அரூருக்கு வடக்கே இருக்கிற பகுதி மிகவும் வறட்சியடைந்திருப்பதால் அந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த மதிகெட்டான் கால்வாய் திட்டத்தைப்பற்றி ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு விட்டது. அதற்கு 11 லட்சம் ரூபாய் ஆகும். அது அன்—எக்கனாமிக்கல்' என்று கருதி கைவிடப்பட்டது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த மதிகெட்டான் கால்வாய் என்ற பெயரை மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இப்போது பெயரை மாற்றுவது என்பது சரியாகாது.

THIRU B. VENKATASWAMI : In certain areas the Government says that there is some yardstick regarding backward areas. If the yardstick is going to be applied, surely backward areas cannot be developed and come forward. Will the Government therefore avoid applying the yardstick in case of backward taluks and areas?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, பின்தங்கிய பகுதிகளுக்கு என்றிருக்கிற விதிமுறைகளின் அடிப்படையிலும் பரிசீலனை செய்யப்பட்டது.

'The proposal for renovation and completion of 'மதிகெட்டான் கால்வாய்' which is reported to be completed for about 50 years and whose estimate was Rs. 11 lakhs was dropped since it was considered uneconomical.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இது மதிகெட்டான் கால்வாயா அல்லது மதிகேட்டான் கால்வாயா என்று தெரியவில்லை. ஏனென்றால், சில, ஆங்கிலச் சொற்களைத் தமிழில்

[1971 டிசம்பர் 18

சொல்லும்போது இதுபோன்ற மாறுபாடுகள் ஏற்படுவதுண்டு. ஆயினும் இந்த இரண்டு பெயரும் பொருத்தமாக இல்லை, நன்றாகவும் இல்லை. ஆகையால் அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும்; மாற்றியமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே இருக்கும் பெயரை மாற்றுவது பொருத்தமுடையதாக இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொருத்தமாக இருக்காது என்று கருதுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பெயரை, 'மதிகெட்டான்' என்று இருப்பதை மாற்றி அமைத்துவிடலாம். அதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

தொப்பையாறு அணைக்கட்டுத் திட்டம்

*576 வினா—**திரு. எம். பரமசிவம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தொப்பையாறு அணைக்கட்டும் திட்டம் எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொப்பையாறு அணைக்கட்டுத் திட்ட அமைப்பும் மதிப்பீடும், திருச்சிராப்பள்ளி ஆய்வு மேற்பார்வைப் பொறியாளரால் மறுஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. திட்டம் முடிவாகப் பரிசீலிக்கப்பட்டதும் முழுக் குறிப்புகள் தெரியவரும்.

பல்லடம் சாலை, ஈஸ்வரன் கோயில் சாலை சந்திப்பு

* 577 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருப்பூர் நகரில் உள்ள பிரதான சாலையான பல்லடம் ரோடும், ஈஸ்வரன் கோயில் சாலையும் சந்திக்கும் இடத்தில் சாலையை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசிலணையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அந்தப் பாதை மிகக் குறுகலாக இருப்பதன் காரணமாகப் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. எனவே, அதை அகலப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற சாலை இப்போது 42 அடி அகலம் இருக்கிறது. சாலைக்கு இருபக்கங்களிலும் கட்டடங்கள் இருப்பதால் மேற்கொண்டு விஸ்தரிப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

1971 டிசம்பர் 18]

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, திருப்பூரில் பல்லடம் ரோட்டில் கலாபத்தூர் கிராமத்தில் ஒரு பள்ளமான பகுதி இருக்கிறது. மழைக் காலத்தில் ஏராளமாகத் தண்ணீர் வருகின்றபோது, அங்கே தண்ணீர் தேங்கி போக்குவரத்துத் தடைப்படுகிறது. எனவே அந்த இடத்தில் ஒரு பாலம் கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் குறிப்பிட்டது மூலக் கேள்வியோடு தொடர்பு இல்லாமல் இருக்கிறது. இருப்பினும் அவரது கோரிக்கை கவனிக்கப்படும்.

(சில உறுப்பினர்கள் அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : யார் கேள்வி கேட்பது, யார் பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஆகவே உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் அவரவர் இடத்தில் இருப்பது நல்லது.

சிங்காநல்லூரில் மனைவள வங்கி

* 578. வினா—**திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூர் நகரத்தில், மனைவள வங்கியொன்று அமைத்திட தொடக்க வேலைகள் முடிக்கப்பட்டு, அத் திட்டம் அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா :—

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

(உ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) முதல் (உ) வரை கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூர் நகரத்தில் மனைவள வங்கி யொன்று அமைக்கும் திட்டத்திற்கு ஆணை எண் 464, கூட்டுறவு, 31—10—1970 தேதியில் அரசு அனுமதி அளிக்கப்பட்டது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, அந்த வங்கியினுடைய தலைவராக யாரையாவது நியமித்திருக்கிறார்களா ? அப்படியானால், யார் தலைவர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே. அந்த வங்கிக்குத் தலைவர் நியமிக்கப்பட்டு, 23—8—1971-லேயே வங்கி செயல்படத் தொடங்கிவிட்டது. தலைவர் பெயர் தெரியவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, அந்த வங்கியின் சீஃப் பிரமோட்டராகப் பொறுப்பு வகித்து வந்தவர் நகர மன்றத்தில் உறுப்பினராக இருக்கிறார். ஆனால் அவரைத் தலைவராகப் போடாமல் வேறு ஒருவரைப் போட்டதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் விபரம் அறிந்து சொல்லலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : ஒருவரைத் தலைவராகப் போட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அவர் யார் என்பது பற்றிய விபரமும் அமைச்சரிடம் இருக்க வேண்டும். அவரைப் போட்டிருப்பதற்கு ஏதாவது தனிக் காரணங்கள் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்குத்தான் தனிக் கேள்வி போடச் சொல்லிவிட்டாரே. தனியாகக் கேளுங்கள். பதில் சொல்லுவதும் சொல்லாததும் அமைச்சருடைய விருப்பம்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, வங்கி 23—8—1971 முதல் செயல்படத் தொடங்கிவிட்டதால் நிச்சயமாக அதற்கு ஒரு தலைவர் இருப்பார். தலைவர் இல்லாமல் வங்கி தொடங்கப்பட்டிருக்க முடியாது. அந்த அடிப்படையில்தான் சொன்னேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, அந்த வங்கி ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தவர்கள், அதற்காகப் பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து, அதற்காகப் பணியாற்றியவர்களை விட்டுவிட்டு, அதற்குச் சம்பந்தமில்லாதவர்கள் வங்கியின் பணியாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, யார் யார் அந்த வங்கிக்காகப் பணியாற்றினார்களோ அவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். யார் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திருச்செந்தூரில் பனங்கற்கண்டு தொழிற்சாலை

* 579. **வினா—திரு கே. என். குமாரசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூரில், கூட்டுறவுத் துறையின் மூலம் பனங்கற்கண்டு தொழிற்சாலை நிறுவும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, பனங்கற்கண்டு தயார் செய்வதற்காகப் பனை மரங்களை அரசாங்கம் தனியாருக்குக் குத்தகைக்கு விடவேண்டுமென்று சில தனியார்கள் கோரி இருக்கிறார்களே, அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே. இந்தக் கற்கண்டு உற்பத்தியை அவர்கள் வீட்டிலே குடிசைத் தொழிலாக வைத்து நடத்துகிறார்கள். பனைமரங்கள் எப்படிக் குத்தகைக்கு விடப்படுகின்றன என்ற விபரத்திற்குத் தனிக் கேள்வி போடவும்.

எத்திலோடு ஊராட்சி கிராமங்களுக்கு கிணறுகள்

* 580. **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள எத்திலோடு ஊராட்சிக்குட்பட்ட A. R.C. கிராமங்களில் திட்டத்தின்கீழ் கிணறுகள் அமைப்பதற்கு ஆய்வு செய்யப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம், மேற்படி பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த 28 கிராமங்களில் விவசாய மறுநிதிக் கழகத்தின் உதவியுடன் கிணறுகள் அமைக்கவும், ஆழப்படுத்தவும் மின் விசையேற்றங்கள் அமைப்பதற்குமான விவசாய அபிவிருத்தி திட்டம் ஒன்று மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து வந்துள்ளது. இதில் எத்திலோடு கிராமம் ஒன்றாகும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கூட்டுறவுத்துறையின் சாதனைகள்

* 581. **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையின் சாதனைகளை விளக்குவதற்கு பிரச்சாரம் செய்வது குறித்து அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம். கூட்டுறவுத் துறையின் சாதனைகளை விளக்குவதற்கும் பிரசாரம் செய்வதற்கும் வேண்டிய திட்டம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மூலமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

கூட்டுறவு மத்திய வங்கிகள் வழங்கிய கடன்கள்

* 582. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1969-70-ல் கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலம் தமிழ் நாட்டில் விவசாய அபிவிருத்திக்கு மட்டும் அளிக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(இ) அதில் வசூலாகாமலிருக்கும் கடன் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ரூபாய் நாற்பத்திரண்டு கோடியே எழுபத்தி ஆறு லட்சத்து எழுபது ஆயிரம்.

(இ) ரூபாய் மூன்று கோடியே ஒரு லட்சத்து இருபத்து ஏழாயிரம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இப்போது வறட்சி நிலைமை ஏற்பட்டு தற்போதுதான் மழை பெய்திருக்கிறது. ஆகவே, தற்போது வசூலிக்கப்பட்டிருக்கிற கடன் தொகையை 6 மாதம் தள்ளிவைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வசூலிக்கப்பட்டிருக்கிற கடன் தொகையைத் தள்ளி வைக்க வேண்டியதில்லை. வசூலிக்கப்படாமல் இருக்கிறகடன் தொகையைத் தள்ளிவைக்க வேண்டுமானால், நான் பல முறை குறிப்பிட்டிருக்கிற வழிமுறையைக் கைப்பற்றினால்போதும்.

திரு. ரா. ரா. முனுசாமி : 1971-72-இல் பருவ மழை பொய்த்து விட்ட காரணத்தினால் செஞ்சி வட்டத்தில் சம்பா மணிலாப் பயிர் வீணாகிவிட்டது, ஆகவே அந்தப் பகுதியில் கடன் வசூலை ஓராண்டு தள்ளி வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதைப்பற்றி பலமுறை மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். ஓராண்டு அல்ல, 3 ஆண்டுகள் தள்ளிவைக்கப்படும். அதற்கு முறைப்படி மனு வரவேண்டும். ரெவின்யூ அதிகாரிகளிடம் இருந்து 6 அணாவுக்குக் குறைவாகத்தான் விளைச்சல் ஏற்பட்டது என்பதாக அணாவாரி சர்டிபிகேட் வாங்கி அனுப்பினால் போதும், கடன் வசூல் தள்ளி வைக்கப்படும்.

Production of grain

* 583 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether there was a record production of grain for the year 1970-71 in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) 1970-71-ம் ஆண்டில் உணவு தானியங்களின் உற்பத்தியின் அளவு 70·30 லட்சம் டன்களாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் விபரம் வருமாறு :

	உற்பத்தி லட்சம் டன்கள்
(1) அரிசி	53.03
(2) சிறுதானியங்கள்	16 03
(3) பயறு வகைகள்	1 24
	70.30

Small Land Owners Association at Thungapuram

* 584 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether the Hon. the Chief Minister has received a petition, dated nil from the சிறு நில விவசாயச் சங்கத் தலைவர் Thungapuram, Perambalur taluk; and

(b) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை, ஐயா. விசாரணை செய்ததில் சிறு நில விவசாயிகள் சங்கம் என்ற பெயரில் துங்கபுரத்தில் ஒரு சங்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

DR. H. V. HANDE: Is it a fact that some request was sent up from the taluk of Perambalur requesting the Government to give some rebate with regard to the various loans that they were having, because the particular areas in Perambalur taluk were declared as drought acected? If so, will this Government consider the request of the persons who met the Government or sent petitions or written to the Government and see that the arrears of payments are all postponed for another one or two years or at least part of it is postponed?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, துங்கபுரம் சிறு நில விவசாய சங்கத் தலைவரிடம் இருந்து இங்கே குறிப்பிட்டது போல மனு ஒன்றும் வேளாண்மைத் துறைக்கு வரவில்லை. வருவாய்த் துறை, மற்றும் கூட்டுறவுத் துறைக்கும் குறிப்பிட்ட மனு வரவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். சிறு நில விவசாயச் சங்கம் என்ற பெயரால் துங்கபுரத்தில் ஒரு சங்கமும் இல்லை என்று பெரம்பலூர் வட்டாட்சியர் அறிவிப்பதாக திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிறார்.

விளக்குகள் போடவில்லை. அதுசம்பந்தமாக அரசாங்கம் என்ன முடிவு செய்ய இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைப்பற்றி நீங்கள் எலெக்ட்ரிசிடி போர்டு பட்ஜெட் மீதான விவாதத்தின்போது பேசியதாக அறிகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, எந்தெந்தத் தேதிகளில் எந்தெந்தக் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்படும் என்பதைப்பற்றி பேரவையில் குறிப்பிட்டேன். அந்தச் சமயத்தில் கனம் உறுப்பினர் அவையில் இல்லை.

Number plates in cars.

* 590 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the car number plates in Tamil Nadu will be changed shortly to both English and Tamil ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தற்போது இல்லை.

(இ) வினாவிற்கிடமில்லை.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கார்களின் இலக்கங்களைத் தமிழில் எழுத வேண்டுமென்ற யோசனையை இந்த அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தியிருக்கிறதா? அகில இந்திய போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில் இது எடுத்துக் கூறப்பட்டதா? அதுபற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அகில இந்திய போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில், கார்களின் இலக்கங்களை வட்டார மொழியிலும் ஆங்கிலத்திலும் இலக்கப் பலகைகளில் எழுத வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் டெல்லி மாநகராட்சியின் பொறுப்பு ஜனசங்கத்தினர் வசம் இருக்கிறது. டெல்லி மாநில அமைச்சர் மட்டும், இந்தி ஆட்சி மொழியாக இருக்கிற காரணத்தால் இலக்கப் பலகை இந்தியில் எழுதினால் போதும் என்று குறிப்பிட்டார். பெரும்பான்மையான மாநில அமைச்சர்கள் வட்டார மொழியிலும் ஆங்கில மொழியிலும் இருந்தால், அது வெளிநாட்டுப் பயணிகளுக்குக்கூட வசதியாக இருக்கும் என்று விவாதித்து முடிவு எடுக்கப்பட்டது. முடிவுகள் இன்னும் எங்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை, அறிவிக்கப் படவும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, அப்படி முடிவு தெரிந்தபின்னர் இரண்டு மொழிகளிலும் பலகை எழுத வேண்டுமென்று இந்த அரசு கட்டாயப்படுத்துமா? அல்லது இப்போது இருக்கிற ஏற்பாடே போதும் என்று இருக்குமா?

இருப்பது கஷ்டமாக இருக்கிற காரணத்தினால் அதைச் சரியாக நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது அங்கே காய்கறிகள் உற்பத்தி செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டேன். வெளியில் இருந்து வருகிற காரணத்தினால் வாடி வதங்கி இருக்கலாம். இனி வாடி வதங்காமல் இருக்கும் காய்கறிகள் சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

Thriu B. VENKATASWAMY: May I know from the Hon. Minister the investment made to raise the garden and the loss occurred to the Government?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்தப் பண்ணைக்கு தொடரும் செலவாக 1968-69-இல் ரூ. 16,170-ம் 1969–70–இல் ரூ. 15,340-ம் 1970-71-இல் ரூ. 3,590–ம் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

தொடராச் செலவாக 1968-69-இல் ரூ. 17,480-ம், 1969-70-இல் 9,560–ம், 1970-71-ல் ரூ. 420-ம் செலவாகியிருக்கிறது.

இந்தப் பண்ணையில் இருந்து கிடைத்த காய்கறிகள் அளவும், வருமானமும் பார்த்தால் 1968-69-இல் 7 டன், 278 கிலோகிராம் உற்பத்தியாகியிருக்கிறது. அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 3,610 ஆகும். 1969-70-இல் 55 டன் 768 கிலோகிராம் உற்பத்தியாகியிருக்கிறது. அதன் மதிப்பு ரூ. 6,280. 1970-71-இல் 400 கிலோகிராம் உற்பத்தியாயிற்று. அதன் மதிப்பு ரூ. 590 ஆகும்.

அரசியல் தியாகிகளுக்கு வீடுகள்

* 587. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரசியல் தியாகிகளில் வீடில்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: உள்ளது.

திரு. எம். செல்வராஜ்: நம்முடைய மாநில அரசு ஊழியர்களுக்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முனைவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாநில அரசு ஊழியர்களுக்கு 18 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Atomic Power Station at Kalpakkam

588 *Q.*—DR. H. V. HANDE,
THIRU S. DORAISAMY,
THIRU N. K. PALANISAMY,
THIRU K. A. WAHAB : Will the Hon.

the Minister for Electricity be pleased to state—

(*a*) the date on which the first unit of the Kalpakkam Power Station is likely to go into production;

(*b*) whether the Government has any proposal to construct a second power station ; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) தற்போது கட்டப்பட்டுவரும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல் பிரிவு 1975 நவம்பரில் மின் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மின்சக்தி நிலையம் 1976 மார்ச் திங்களுக்குள் வணிகமுறையில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) கல்பாக்கத்தில் சென்னை அணுமின்சக்தி திட்டத்தின் இரண்டாவது பிரிவை ஆரம்பிப்பதற்கு இந்திய அரசால் இசைவளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு 1976-க்குள் தயாராகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) இந்த இரண்டு பிரிவுகளின் ஒவ்வொரு பிரிவும் 235 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனையும் 215 மெகாவாட் நிகர உற்பத்தித் திறனையும் கொண்டிருக்கும். முதல் பிரிவிற்கு ரூ. 77.1 கோடியும், இரண்டாவது பிரிவிற்கு ரூ. 70.63 கோடியும் செலவாகும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த அட்டாமிக் பவர் ஸ்டேஷன் தமிழ்நாட்டில் எப்போது வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? அண்மையில் டாக்டர் சாராபாய் அவர்கள் 1974-க்குள் தமிழ்நாட்டில் மின்சாரம் அதன்மூலம் கிடைக்கும் என்ற வாக்குறுதியைத் தந்திருக்கிறார்களே, இப்போது மீண்டும் ஓராண்டு, ஈராண்டுக்குத் தள்ளிப்போடக் காரணம் என்ன? மகாராஷ்டிரா அட்டாமிக் பவர் ஸ்டேஷனில் பல கோளாறுகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. அதுபோன்ற கோளாறுகள் இங்கே ஏற்படாதிருக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இதற்கு என் தாமதம் ஆகவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 1974-இல் உற்பத்தி துவங்கப்படும் என்று முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் அதனை ஓராண்டு தள்ளிப்போட்டிருக்கிறார்கள். ஆயினும், குறிப்

பிட்டப்படி அதைத் துரிதமாக முடிக்க வேண்டும் என்று தமிழ் நாட்டின் சார்பில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. நிதிநிலை காரணமாக ஓராண்டு தள்ளிப்போட்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : கல்பாக்கம் அணுமின்சக்தி நிலையம் வந்து விட்டால் மின்சாரம் மலிவாகக் கிடைக்கும் என்கிறார்களே, அதற்கேற்ப தற்போது மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க அரசு யோசிக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மின்சாரக் கட்டணத்தைப் பற்றி ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களும் நிறைவேறியதற்குப் பின்னால்-கிட்டத்தட்ட 1980-ம் ஆண்டு என்று எடுத்துக்கொண்டால் நமது நாட்டிற்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படும்? அணுமின்சக்தி பிற்காலத்தில் போதிய அளவிற்கு இருக்குமா ? இல்லாவிட்டால் அதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் கூறியிருக்கிறேன். இருபது ஆண்டுக் காலம் அல்ல. பத்தாண்டுகாலத்திற்குள்ளாகவே பற்றாக்குறை ஏற்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின்சக்தி நிலையம் முதல்பிரிவு 1975-ல் வேலையைத் தொடங்கும் என்று குறிப்பிட்டார்கள். ஆனாலும்கூட இப்போது அதிகமான அதிகாரிகளைப் போட்டு, வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு கருதியிருக்கிறது. ஆகவே, 1974-க்கு முன்னாலே முதல் யூனிட் வேலையைத் தொடங்க நம் அரசு மத்திய அரசை வேண்டிக்கொண்டு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இப்போது ஓராண்டுக்குத் தள்ளிப்போட்டதைக்கூட, நாம் விரும்பாமல், வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று நாம் சொல்லி வருகிறோம்.

Rural electrification

* 589 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the rural electrification scheme for all the villages in Tamil Nadu would be completed before the end of 1972 ; and

(*b*) if not, the probable date on which the scheme is likely to be completed?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிக்கப்படும் என்று சொல்லுகின்ற நேரத்தில், ஏற்கெனவே மின் இணைப்பு கொடுக்கப் பட்ட கிராமங்களில் மின்சாரம் சரியான அளவில் கிடைக்க வில்லையென்கிற புகார்கள், குறைகள் நீக்கப்படுமா ? ஏற்கெனவே மின் இணைப்பு கொடுக்கப்பட்ட கிராமங்களிலுள்ள புகார்கள் நீக்கப்படுமா? . . . . .

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member put the question.

DR H. V. HANDE : Sir, I want my point to be clearly understood by the Hon. Minister and so I do not want to be brief . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி இவ்வளவு விரிவாக இருந்தால் என்ன அர்த்தம்? சுருக்கமான கேள்வியாகப் போடுங்கள்.

DR. H. V. HANDE : So, is it possible for the Hon. Minister to see that in villages where electric connection has already been given there is no reduction in the quantum of electricity and also places nearby would get electricity?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, கேள்வி யிலேயே 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படுமா ? என்று கேட்டிருக்கிறீர்கள். 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுத்து மின்வசதி செய்து கொடுக்கப்பட்டுவிடும். ஏற்கெனவே சீரமைப்பு பற்றி 50 கோடி ரூபாயிலே ஒரு திட்டம் நல்ல முறையில் அமைத்திருக்கிறோம். ஆங்காங்கு வேண்டிய டிரான்ஸ்ஃபார்மர்களைப் பொருத்தும் போது இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் நீங்கிவிடும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கும்போது தெருவிளக்குகள் சரியாக அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ? இதில் காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, 1972-க்குள் எல்லாம் சரியாக நடைபெறும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பல்லடம் தாலூகாவில் பல ஊர்களில் மின்சாரப் பூர்த்தி விழா கொண்டாடப் படுகிறது. பல கிராமங்களில் அரிசனச் சேரிகளுக்கு இன்னும் தெரு

துங்கபுரம் சிறுநில விவசாயச் சங்கத் தலைவரிடம் இருந்து ஒரு மனுவும் வரவில்லை என்று வருவாய் வாரியம் (உணவு உற்பத்தி), மற்றும் வேளாண்மை இயக்குநர் சொல்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட மனுவின் நகல் ஒன்றை அனுப்பித்தர ஏற்பாடு செய்தால் அதனை அரசு பரிசீலனை செய்யும்.

பலாப்பழம் ஏற்றுமதி

* 585. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பலாச்சுளையைப் பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

அரசு எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை

* 586. வினா—திரு. கே. ஏ; வகாப் : மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் மவுண்ட் ரோட் அரசாங்க எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது லாபத்தில் செயல்படுகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) சென்னை அண்ணா சாலை (மவுண்ட் ரோட்) அரசாங்க எஸ்டேட்டில் காய் கறிப் பண்ணை ஒன்று 1968-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(இ) விவசாயத்திற்கு ஏற்ற நீர் இவ்விடத்தில் கிடைப்பதில் ஏற்பட்ட கஷ்டங்கள் காரணமாக 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் இக் காய்கறிப் பண்ணை மூடப்பட்டது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, அப்படி அமைக்கப் பட்ட அந்தக் காய்கறிப் பண்ணையில் ஸ்ப்ரிங் மூலம் நீர் பாய்ச்சும் முறை கையாளப்பட்டதே, ஆராய்ச்சி மூலம் அந்த முறையாவது பயனுடையதாகக் கருதப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அந்தப் பண்ணையில் நீர் இறைக்க ஸ்ப்ரிங்கிளிங் முறை கையாளப் பட்டது. ஸ்ப்ரிங்கிங் முறைதான் வெற்றி பெற்றது. பண்ணை வெற்றி பெறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கவர்ன்மெண்டு எஸ்டேட்டுக்குள் ஒரு காய்கறிக்கடை இருக்கிறது. அங்கே வாடி வதங்கிப்போன காய்கறிகள்தான் இருக்கின்றன. இப்படி ஒரு கடை அங்கே

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழில் எழுத வேண்டுமென்கிற நிலை வரும்போது, தமிழர்களே முன்வந்து, எழுதிக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

சென்னை—திருச்சிராப்பள்ளி விரைவுப் பேருந்துகள்

*** 591 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து திருச்சிக்கு, இடையில் நிற்காத விரைவுப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோவில்

*** 592 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நடராஜர் கோவில் இந்து அறநிலையப் போர்டின் கட்டுப்பாட்டில் உள்ளதா ?

(இ) இல்லை என்றால், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) ஆலயத்திற்கு அறங்காவலர்கள் நியமனம் செய்வது நீங்கலாக மற்றவை இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சிற்றூர் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள்

*** 593 வினா—திரு ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள சிற்றூர் கோவில்களில் உள்ள மானிய நிலங்கள் அனைத்தையும் அறநிலைய இலாக்கா மூலம் கண்காணிப்பதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) தனி ரெவின்யூ இலாகா அதிகாரிகளை நியமித்து அறநிலைய இலாகாவின்கீழ் இல்லாத கோயில்களையும் அவற்றின் நிலங்களையும் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் கொடுக்கும் அறிக்கையின் மேல் விசாரணை செய்து கோயில்கள் இலாகாவின்கீழ் எடுக்கப்பட்டு வருகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எம். செல்வராஜ் : தலைவர் அவர்களே, நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள் எவ்வளவு பேர்? எத்தனை ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது? இப்போது அந்த நிலங்களை அறநிலையத் துறையின்கீழ்க் கொண்டுவர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அக்டோபர் திங்கள் முடிய 27,784 கோயில்களுக்குச் சொந்தமான 1,44,936 ஏக்கர் நிலம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நிலங்களை அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வருவதற்கு அறநிலைய அதிகாரிகள் முற்பட்டால் காலதாமதம் ஏற்படும் என்கிற காரணத்தால் 10—8—1971-ம் தேதியன்று தனியாக, வருவாய்த் துறை அதிகாரிகளை வட ஆர்க்காடு, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு, மாவட்டத்திற்கு இரண்டு பேர் வீதம் ஆய்வாளர்களாக அனுமதிக்கப்பட்டு, மேற்படி ஆய்வாளர்கள் ஆய்வு வேலையை ஆரம்பித்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, அறநிலைய இலாகா கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்குக்கூட பட்டியல் சரியாகத் தயாரிக்கப்படவில்லை. அதற்கான வேலை பூர்த்தியாகிவிட்டதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதற்காகத்தான் தனி அதிகாரி நியமிக்கப்பட்டு. அவருக்குக் கீழே துணைக் கலெக்டர், சிறப்பு அதிகாரி போன்றவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். பணி இன்னும் முடியவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, will the Government consider taking over all the temple lands by paying cash compensation so that these lands also can be brought under the Land Reforms Act?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் புரட்சிகரமான யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, is it a fact when the Housing Board acquires lands belonging to temples, proper market value is not paid and if so, what action will be taken to prevent such low price being given to the temple lands ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஹவுசிங் போர்டு நிலங்கள் எடுக்கப்படவில்லை. குடிசை மாற்று வாரியத்திற்கு எடுக்கப்பட்டு, அறங்காவலர்களால் அந்த விலை ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னால்தான் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

[1971 டிசம்பர் 18

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, ஏழை எளியவர்கள் ஆண்டவனுடைய குழந்தைகள் என்கிற காரணத்தால் குடிசை வாரியத்திற்கு இப்போது நிர்ணயிக்கப்பட்டிருப்பதைவிட குறைந்த விலைக்கு நிலம் வழங்க அரசு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்கின்ற நோக்கத்திற்காக குடிசைமாற்று வாரியத்திற்கு, அறங்காவலர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைக்கு நிலம் வழங்க ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவர் அவர்களே, கோயில்களுக்கு மானியமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. குத்தகை மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, அதைப் பரிசீலித்துப் நல்ல முறையிலே அந்தந்தப் பிராந்தியங்களுக்கேற்ப குத்தகை பெற ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எந்தெந்த நிலங்கள் குறைவாக குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதை ஆராய்ந்து நியாயமான குத்தகையை நிர்ணயம் செய்வதற்கு நிர்வாகிகளும் அதிகாரிகளும் தக்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏதாவது தகவல் இருந்து கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, இதுவரையிலும் எந்தவித வருமானமும் வராமல் இருந்த கோயில் நிலங்களுக்கு—குடிசை மாற்று வாரியத்திற்கு நிலங்கள் வழங்கப்பட்ட காரணத்தினால்—நல்ல வருமானம் கிடைத்திருக்கிறது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : உண்மைதான்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆண்டவன் சொத்தாக இருந்தாலும் தனி நபருக்கு எப்படி மார்க்கெட் வேல்யூ போட்டுக் கொடுக்கப்படுகிறதோ அதேபோன்று நிலங்கள் கொடுக்கும்போது ஹெச். ஆர். சி. இ. யும் அந்த அளவுக்கு வாங்குவதற்கு விழிப்போடு இருக்குமா? ஏத்த மாத்திரம் இல்லாமல் வருமானம் இல்லை என்ற காரணத்தினாலேயே, கொடுக்கக்கூடிய நிலத்திற்கு மார்க்கெட் வேல்யூ இல்லாமல் ஆண்டவனுக்குக் குறைத்துக் கொடுப்பது சரிதானா? ஏனென்றால் அந்தச் சொத்துக்களையெல்லாம் கோயில்களுக்குக் கொடுத்த டோனர்ஸ் கோயில் வேலைகளை ஒழுங்காகப் பராமரிப்பதற்காகத்தான் அவற்றைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே தனி நபருக்குக் கொடுக்கக்கூடிய முறையிலே கோயில் நிலங்களுக்கும் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தனி மனிதனைவிட ஆண்டவன் ஏழைகளிடத்திலே அன்பும் கருணையும்கூட காட்டுபவனாக இருக்கவேண்டும். (சிரிப்பு.)

1971 டிசம்பர் 18]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : கோயில் நிலங்களுக்கு எந்த அடிப்படையிலே விலை அமைத்துக் கொடுக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அதிகாரிகள் நிர்ணயம் செய்கின்ற விலைக்குத் தருகிறோம். குடிசை மாற்று வாரியத்திற்குக் கொடுக்கப்பட்ட நிலங்களைப் பொறுத்தவரையில் அறங்காவலர்கள் ஏழை எளிய மக்களுக்கு நன்மைகள் செய்யக்கூடிய வகையில் ஒப்புக்கொண்டதால் கொடுத்திருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, எல்லாம் ஆண்டவன் செயல் என்று நம்புகிற பக்தர்கள் இப்படிப்பட்ட காரியங்கள் செய்யப்படும்பொழுதும் ஆண்டவன் செயல் என்று திருப்தி அடைகிறார்களா என்று கேட்க விரும்புகிறோம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எல்லாம் ஆண்டவன் செயல் என்று திருப்தியடையாத காரணத்தால் தான் ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கக்கூடிய நன்மைகளைப் பற்றித் திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு.)

திருமதி ஜோதி வெங்கடாசலம் : பொதுவோர நிலங்களை எடுக்கும்பொழுது மார்க்கெட் வேல்யூ இல்லாமல் அரசாங்கம் ஒரு விலை வைத்து எடுத்துக்கொண்டால் பொதுமக்கள் ஹையர் காம்பன்ஸேஷன் கேட்கக்கூடிய வசதி இருக்கிறது. அதையொட்டி ஹிந்து ரிலிஜியஸ் எண்டௌமன்ட் போர்டு கேட்கின்ற நிலைமையில் இல்லை. பொதுமக்கள் கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆண்டவன் கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே காம்பன்சேஷன் அதிகமாகக் கிடைக்கக் கூடிய வகையில் ஒரு நியாயமான விலை கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆண்டவன் பேராலும் மடங்களின் பேராலும் சொத்துக்களை வைத்திருப்பதும், நாம் இவைகளையெல்லாம் ஏழை எளிய மக்களுக்குப் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்ற அளவுக்கு உலகம் முன்னேறிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே ஆண்டவன் சொத்துக்களுக்கு தனிப்பட்டவர்களின் சொத்துக்களுக்குக் கொடுப்பதைவிட அதிகமாகப் பணம் தர வேண்டுமென்று ஜனநாயக சோஷலிசம் பேசுகின்ற கட்சியில் இருக்கிற அம்மையார் அவர்கள் சொல்வது எனக்கு விந்தையாக இருக்கிறது. (சிரிப்பு.)

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆண்டவனுடைய சொத்துக்கள் எல்லா ஏழை எளிய மக்களுக்குத்தான் நன்மைகள் போய்ச் சேரக்கூடிய முறையில் பராமரிக்கப்படுகின்றன. கோயில் வழிபாட்டிலே முக்கால் பங்கு ஏழைகளின் மூலம்தான் நடைபெறுகிறது, திருவிழாக்கள். போன்றவற்றில் எல்லாம் ஏழை

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1971 டிசம்பர் 18

மக்கள்தான் அதிகமாகப் பயன்பெறுகிறார்கள். அப்படியில்லாமல் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு நன்மை செய்வதாகச் சொல்லிவிட்டு மற்றவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆலயங்களை அண்டியிருப்பவர்கள் ஏழைகள் என்பது அரசுக்குத் தெரியும், அதே சமயத்திலே ஏழைகள் யார் என்பதும் அரசுக்குத் தெரியும். (சிரிப்பு.)

திரு. என். இராஜாங்கம் : தலைவர் அவர்களே, எழுந்துள்ள கேள்விகளைப் பார்க்கும்பொழுது சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும்தான் கவனம் செலுத்தப்படுகிறது என்று தெரிகிறது. அதேமாதிரி தமிழ்நாடெங்கிலும் நிலங்கள் இருக்கின்றன, தமிழ்நாடெங்கிலும் உள்ள மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிற வகையில் ஏழை எளிய மக்கள் பயன் அடைகிற வகையில் அரசு இதே முறையைக் கையாளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்னையிலே உள்ள அறங்காவலர்களுக்கு ஏழைகள்பால் உள்ள அன்புபோன்று தமிழ்நாடு முழுவதும் உள்ளவர்களுக்கு வரவேண்டும். அதற்கு மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி பயன்படவேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, மயிலாப்பூரில் குடிசை மாற்று வாரியம் வாங்கிய இடத்திற்காக 4 லட்சம் ரூபாய் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதால் அதன்மூலம் மாதா மாதம் 3 ஆயிரம் ரூபாய் கோயிலுக்குக் கிடைத்துவருகிறது என்பதும், இதற்கு முன்பு எதுவும் இல்லாமல் இருந்த கோயிலுக்கு இப்பொழுது மாதம் 3 ஆயிரம் அளவுக்கு வருமானம் வருகிறது என்பதும் உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்கள் இன்று கேள்விகள் மூலம் அவைக்கு நல்ல விளக்கம் அளித்ததற்காக நன்றி. (சிரிப்பு.)

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, ஆண்டவன் எல்லோருக்கும் சொந்தம். ஆகவே கோயில்களை எல்லாம் தேசியமயமாக்கிவிட்டால் இந்தப் பிரச்னையே இருக்காது அல்லவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆண்டவன்களை தேசிய உடைமையாக்கும் உத்தேசம் இல்லை, ஆண்டவன்தான் அனைவரையும் தேசியமயமாக்கி ரட்சிக்கவேண்டும். (சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆண்டவன் உலக உடைமை (சிரிப்பு.)

திருமதி த. ந. அனந்தநாயகி : கோயில் நிலங்களுக்கு நான்கு லட்சம் ரூபாய் குடிசை மாற்று வாரியம் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நியாயமாக வரவேண்டிய தொகை என்ன ? சென்னையில் ஒரு கிரவுண்ட் 20 ஆயிரம் ரூபாய்க்குக் கூட குறையவில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் கோயில் நிலத்திற்கு

1971 டிசம்பர் 18]

ஏன் குறைவாகக் கொடுக்கவேண்டும் ? முதல் அமைச்சர் அவர்கள் ஏழைகளைப் பராமரிப்பதற்குத்தான் செலவழிக்கப்படுகிறதென்று சொல்லுகிறார்கள். ஏழைகளைப் பராமரித்து வருகின்ற கோயில்களுக்கு செலவுக்கு அதிகமாகப் பணம் கொடுத்தால் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்கள் மயிலாப்பூர் குடிசை மாற்று வாரியத் திட்டத்தை வரவேற்பார்கள் என்று கருதியிருந்தேன், இந்தக் கேள்வியின்மூலம் எவ்வளவு அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். (சிரிப்பு.)

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, ஆண்டவன் கோயிலுக்கு திருடுகிறவர்களும், கொள்ளையடிக்கிறவர்களும், நியாயமாக இருக்கின்றவர்களும் போகிறார்கள். ஆண்டவன் இவர்களில் யாருக்கு அதிகமாகப் பாதுகாப்புக் கொடுப்பான் என்று அறியவிரும்புகிறேன். (சிரிப்பு.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திருடுகிறவர்கள், கொள்ளையடிக்கிறவர்களிடமிருந்து கோயிலுக்கு நல்லவர்கள் போகிறார்களே, அவர்கள் ஆண்டவனை பாதுகாக்க வேண்டும். (சிரிப்பு.)

திருமதி த. ந. அனந்தநாயகி : மயிலாப்பூரில் குடிசை மாற்று வாரிய வேலைத் திட்டம்பற்றி பெருமகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அங்கேயே உள்ள கபாலீஸ்வரர் கோயிலும் என்னுடைய தொகுதியிலேதான் இருக்கிறது, அதனுடைய நிலைமைகளையும் பாதுகாக்க வேண்டுமென்பதையும் அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆண்டவனும் பாதுகாக்கப்படுவான். அம்மையாருடைய தொகுதியும் பாதுகாக்கப்படும். (சிரிப்பு.)

திரு. இராம. அரங்கண்ணல் : முன்பு இருந்த ஆட்சியில் அமைச்சராக இருந்தபோது திரு. வெங்கட்டராமன் அவர்கள் கோயில் நிலங்களை 99 ஆண்டுக் குத்தகைக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று பேசப்பட்டதே அது உண்மையா ? அந்த அடிப்படையிலே கோயில் நிலங்களை 99 ஆண்டு குத்தகைக்குக் கொடுத்துவிடுவதற்கு அரசுக்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. வெங்கட்டராமன் காலத்திலே நடந்தது என்ன என்பதை ஆராய்ந்து பரிசீலித்து அதற்குப் பிறகு அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்

(அ) அவையுரிமை மீறல் தீர்மானம்பற்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் ஒரு அவையுரிமை மீறல் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் இதுபற்றி சென்னை சென்ட்ரல் ஜெயில் கண்காணிப்பாளரிடம் விளக்கம் கேட்கப் பட்டிருக்கிறது. பதில் வந்தபிறகு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரையில் வைகை வெள்ளத்தால் ஏற்பட்ட விளைவுகளும், பெரு மழையால் தஞ்சை கடற்கரை பகுதிப் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து.

MR. SPEAKER : Thiru K. T. K. Thangamani has given notice under Rule 42 of the Assembly Rules, of a motion to adjourn the business of the House to discuss the following matter of urgent public importance, viz., death of 20 persons in Madurai, disappearance of a helicopter in Madurai Vaigai floods, destruction of double crops in the coastal areas of Thanjavur district due to heavy rains.

Thiruvalargal A. Subramaniam, K. Kandasami, J. James, M. Surendran, Dr. H. V. Hande and Thirumathi T. N. Anandanayaki have given notices of similar motions . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களைத் தாங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே—ரூல் 82-இன்கீழ் அறிக்கை வைப்பதற்கு நான் தங்களிடத்திலே அனுமதியைப் பெற்று இருக்கிறேன் :—

ஒத்திவைப்புத் தீர்மானங்களைத் தள்ளிவிட்டு அறிக்கை வைக்கப்படுவது நல்லதல்ல என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்ற உறுப்பினர்களின் பெயர்களைத் தாங்கள் அவைக்கு அறிவித்திருக்கிறீர்கள். சபைக்குத் தேவைப்படுகிற நேரத்தைக் கருதி இந்த அறிக்கையை நான் வைத்துவிடலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் அதைத்தான் சொல்லலாம் என்று இருந்தேன். அதையே முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களை மட்டும் அழைத்துப் பேசச் சொல்லலாம் என்று கருதியிருந்தேன். இது பொதுவான விஷயமாக இருப்பதால் இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதற்கு விளக்கம் அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர் முற்பகல் 10-30
களே, வைகை அணைக்கு மேலே பெருமழைக் காரணமாக 16-ஆம் தேதி இரவு 9 மணிக்கு வைகையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுமென்றும் அதன் காரணமாக வைகையில் வெள்ளம் வருமென்றும் வைகைக் கரை ஓரங்களில் இருப்பவர்கள் உடனடியாகக் காலி செய்ய வேண்டுமென்றும் 16-ஆம் தேதி மாலை 6 மணிக்கெல்லாம் எச்சரிக்கை செய்யப்பட்டது. மீண்டும் ஒருமுறை இரவு 9 மணிக்கு மேல் எச்சரிக்கை செய்யப்பட்டது. ஆனால் அங்கே குடிசை போட்டுக்கொண்டிருப்பவர்கள், அந்தக் குடிசைகளைப் பிரிக்க வேண்டுமென்பதற்காக வேண்டுமென்றே இந்த எச்சரிக்கை செய்யப்படுவதாகப் பலர் கருதிக்கொண்டு அதைப் பிரிக்க மறுத்துவிட்டு அங்கேயே குடியிருந்தது வருந்தத் தக்க ஒன்றாகும்.

வைகையிலிருந்து திறந்து விடப்பட்டதின் காரணமாகவும், வைகைக்கும் பேரணைக்கும் நடுவில் மழைக் காரணமாகவும் வைகையில் சுமார் 44,000 கியூசெக்ஸ் தண்ணீர் வந்து 16-ஆம் தேதி இரவு 3 மணிக்கு மேல் பெரு வெள்ளம் வந்தது.

இந்த வெள்ளத்தின் காரணமாக வைகை நதிக்குள் குடிசை போட்டுக் கொண்டிருந்தவர்களுடைய குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டன. வைகையில் இரு கரைகளும் நிரம்பி தாழ்ந்த பல பகுதிகளில் வெள்ளம் புகுந்ததால் பல குடிசைகள் சேதமடைந்தன.

மதுரை நகரைச் சுற்றி தாழ்ந்த பகுதிகளில் சுமார் 200 குடும்பங்கள் வீடுகள் இழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. வீடு இழந்தவர்கள் எண்ணிக்கையை அதிகாரிகள் கணக்கெடுத்துக் கொண்டுள்ளார்கள்.

சோழவந்தான் அருகில் சுமார் 200 வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிகிறது.

மதுரை-சோழவந்தான் சாலை சேதமடைந்துள்ளது.

வெள்ளத்தில் இதுவரை 7 பேர் இறந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

17-ஆம் தேதி அதிகாலை 7 மணிக்கே மதுரை கலெக்டர் போலீஸ் தீயணைப்பு படைகளோடு, மதுரை கமிஷனரோடு எல்லா பாதிக்கப்பட்ட பகுதிகளையும் பார்வையிட்டு--வீடு இழந்தவர்கள் அனைவரும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் தங்குவதற்கும், அவர்களுக்கு உணவு வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

வெள்ளத்தில் சிக்கியவர்களை போலீஸ் தீயணைக்கும் படையினர் மிகுந்த சிரமத்தோடு காப்பாற்றினர்.

[திரு. என். வி. நடராசன்]

நல அதிகாரி தனது சமரசப் பேச்சு முறிந்தது குறித்து அறிக்கையை அனுப்பினார்.

இதற்கிடையே, தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் இராஜபாளையம், அழகப்பா பஞ்சாலை நிர்வாகத்துக்கும், அந்த ஆலைத் தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற மூன்று தொழிற்சங்கங்களில் தேசியப் பஞ்சாலைத் தொழிற்சங்கம், திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் ஆகிய இரு சங்கங்களின் தொழிலாளர்களுக்கும் இடையே 5—10—1971-ல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதற்கேற்ப அந்த ஆலையில் 9—10—1971-லிருந்து வாரத்துக்கு 7 நாள் வேலை முறையைக் கொண்டுவர ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்வரும் காரணங்களை முன்விட்டு அரசு இந்தகராறை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட மறுத்துள்ளது. "தொழிலாளர்கட்குச் சுழல் முறையில் வார விடுமுறை அனுமதிக்கப்படுகின்றவரை, வாரத்தில் 7 நாட்களிலும் ஆலையை நடத்தும் செயற்குறிப்பு தொழிற்சாலைச் சட்டத்தின் விதித்துறைகளை ஒட்டியதாகும், இந்த மாற்றத்தில் தொழிலாளர்களின் நலன்களுக்கு முரணானது எதுவுமில்லை, இந்த மாற்றத்தைக் கொண்டு வருவது உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் உயர்த்தும்".

கூட்டுறவுத் துறையில் உள்ளவையுட்பட இம்மாநிலத்தின் பல பஞ்சாலைகளில் வாரத்தில் 7 நாள் வேலை நடைமுறையில் உள்ளது, தற்போதைய சூழ்நிலையில் உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் பெருக்குவது அவசியமும் விரும்பத்தக்கதும் ஆகும்.

ஷிப்ட் (முறைமாற்றுப்பணி) மாறும்போது தொழிற்சாலைச் சட்டம் மீறப்படுகிறது என்னும் கருத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய மீறுதல் எதுவுமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்கட்கு இருக்கக் கூடிய ஒரேவொரு குறை ஷிப்ட் மாறும்போது அவர்கட்கு ஒரு ஷிப்டுக்கும் அடுத்த ஷிப்டுக்கும் இடையே 7 மணிநேர இடைவெளிதான் உள்ளது என்பதாகும். இதுபற்றி ஆராய்ந்து இந்தக் குறையினைக் களையும் நடவடிக்கை ஏதாவது எடுக்கமுடியுமாவெனக் கூறுமாறு தொழிற்சாலைகள் தலைமை இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொள்ளப்பட்டார். இருப்பினும், கோயம்புத்தூரில் பிற ஆலைகளில் இந்த முறை (வாரத்துக்கு 7 வேலைநாட்கள்) நடைமுறையில் உள்ளது என்பதையும் இதனால் இந்த ஆலைகளில் எவ்வித இடர்ப்பாடும் ஏற்படவில்லை என்பதையும் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, இந்த மூன்றாவது ஷிப்டை நிரந்தரமாக்க அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

(ஆ) கோவை மாவட்டத்தில் திருப்பூர், பல்லடம், சூலூர் முதலிய பகுதிகளில் பருத்திப் பயிருக்கு தேவையான பூச்சி கொல்லி மருந்து கிடைக்காமையும் அதனால் பருத்தி விளைச்சல் பாதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை திரு. சு. துரைசாமி அவர்களும், திரு. கே. என். குமாரசாமி அவர்களும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ்,

கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாக திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திலும் பருத்திப் பயிருக்கு மிகவும் தேவையான பூச்சிக் கொல்லி மருந்தான செவின், மெட்டைஸ்ட் கோம்பை (Sevin, Metycid Combi) போன்ற மருந்துகள் கிடைக்காத காரணத்தால் பருத்தி விளைச்சலுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்ற அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ்,

கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாக பல்லடம், சூலூர் போன்ற இடங்களில் பருத்திப் பயிருக்கு மிகவும் தேவையான பூச்சிக் கொல்லி மருந்தான செவின், மெட்டைஸ்ட் கோம்பை, என்ட்ரின் போன்ற மருந்துகள் கிடைக்காத காரணத்தால் பருத்தி விளைச்சலுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்ற அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரைசாமி அவர்களாலும், திரு. குமாரசாமி அவர்களாலும் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் கவனஈர்ப்புத் தீர்மானத்திற்கு அடியில்கண்ட என்னுடைய பதிலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். செவினைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள்.

1971-72-ஆம் ஆண்டிற்கு மாநிலம் முழுவதற்கும் 101,00 மெட். டன் செவின் 10% தூசி மருந்தும் 50 மெட். டன் செவின் 50% W.P. மருந்தும் தேவை. இந்த ரசாயன மருந்துகளில் இதுவரை செவின் 10% தூசி மருந்து 101.750 மெட். டன்னும். செவின் 50% W.P. 98.900 மெட் டன்னும், யூனியன் கார்பைட் என்ற நிறுவனத்தார் மூலம் மேற்சொன்ன அளவில் கோயம்

புத்தூர் வட்டாரத்திற்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் வட்டாரத்திலேயே கிடைக்கக்கூடிய செவின் 10% தூசி மருந்து, தற்போது 101.75 மெட். டன் கைவசம் உள்ளது. அது தற்போதைக்கு பயன்படுத்திக் கொள்ளப்படும். எனினும் இம் மாத முடிவில் நிலைமை சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேவை ஏற்படவில்லை. எனவே இம் மருந்துகளை வழங்கும் யூனியன் கார்பைட் நிறுவனத்தார் தங்கள் கைவசமிருந்த செவின்

அக்டோபர் வரையிலும் செவின் 10% தூசி மருந்திற்கு அதிக என்ற மூல மருந்து அனைத்தையும் செவின் 50% **W.P** கலப்பு மருந்தை தயாரிக்க பயன்படுத்திவிட்டனர். செவின் என்ற மூல மருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. தற்போது செவின் மூல மருந்திற்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அமெரிக்க துறைமுக வேலை நிறுத்தம் ஏற்பட்டதின் காரணமாக யூனியன் கார்பைட் நிறுவனத்திற்கு வந்து சேர வேண்டிய சரக்குகள் வராமல் நின்றுவிட்டன. எனினும் யூனியன் கார்பைட் நிறுவனத்தார் தற்போது தங்கள் கைவசமுள்ள செவின் மூல மருந்தைக் கொண்டு செவின் 50% **W.P.** கலவை மருந்தை தயாரித்து நவம்பர் மாதம் முதல் வாரத்திலிருந்து வாரத்திற்கு 7 மெட். டன் வீதமும், செவின் 10% தூசி மருந்து சுமார் 100 மெட். டன் அளவிலும் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

எனவே யூனியன் கார்பைட் நிறுவனம் 1971-72-ஆம் ஆண்டிற்குரிய வழங்கல் அளவை ஏற்கனவே நிறைவு செய்துவிட்ட போதிலும், இறக்குமதி இடையூறுகள் காரணத்தால் தேவைக்கு அதிகமான கூடுதல் மருந்தை வழங்க இயலவில்லை. எனினும் கூடுதல் வழங்கலுக்கு கிடைத்த அளவு முழுவதும் பருத்தி விளையும் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) மெட்டாசிட் கோம்பை (**Metyeid Combi**) மெட்டாசிட் கோம்பையைப் பொறுத்தவரை, இந்த இரசாயன மருந்து, மெதைல் பாராத்தியான் டி.டி.டி. ஈ.சி. **Methyl Parathilan D.D T.E.C.** என்பதன் கலவையாகும். மெட்டாசிட் கோம்பை திருவாளர்கள் பேயர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தயாரிப்பாகும். மேற்சொன்ன இரசாயன மருந்திற்குப் பதிலாக, மெட்டாசிட் கோம்பிக்குச் சமமானதும், விலைமலிவானதும், பிற நிறுவனங்களின் தயாரிப்பு ஆனதுமான "பாராகுளோர்" (**Para. chlor**) ஏற்கப்பட்டுள்ளது. இதுவரை, நிறுவானத்திலிடம் கொடுக்கப்பட்ட வழங்கலாணையில் குறிப்பிட்ட அளவான 90,000 லிட்டர் அளவில், கோயம்புத்தூர் மாவட்டத்தில், 30,000 லிட்டர் "பாரக்லர்" வழங்கப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் போதுமான அளவு டி.டி.டி. ரசாயன மருந்து கிடைப்பது இடையூறாக உள்ளது என்று நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இருப்பினும்

பயிர்ப் பாது காப்பு இரசாயன மருந்துகளின் வழங்கல் நிலை குறித்து வேளாண்மைத்துறை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. இது பற்றி நிச்சயமாகக் கவனித்து ஆவன செய்யப்படும்.

திரு. சு. துரைசாமி : கடந்த மாதத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் இந்த மருந்துகள் இல்லாமல் இருந்தன. அவற்றை அனுப்ப அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை உடனுக்குடன் மருந்து வழங்கப்பட்டிருக்கிறது. பல்லடம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் சென்னைக்கே வந்து இங்கே அதற்குரிய ஆணையைப் பெற்றுச் சென்று அதற்குரிய பூச்சி மருந்து வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : பல்லடம், சூலூர் ஏரியாக்களில் பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு 33 சதவிகிதம் மருந்து விநியோகப் பொறுப்பு யூனியன்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அந்த 33 சதவிகிதம் மருந்து கிடைக்காத காரணத்தால் தனியாரிடத்தில் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு காலதாமதமாகிறது. இதனால் பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. 33 சதவிகிதம் மருந்து கிடைத்திருக்குமானால் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு குறைந்திருக்கும். இப்போது விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகமாகி இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்குத் தேவையான மருந்துகளை விநியோகிக்க உடனடியாக ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பொதுவாக, குறிப்பிட்ட அளவு மருந்துகளை ஆங்காங்கு உடனுக்குடன் கொடுத்து வருகிறோம். நாளுக்கு நாள் விவசாயப் பெருமக்களிடத்தில் உடனுக்குடன் பூச்சி மருந்துகளைத் தெளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் வளர்ந்து வருவதன் காரணமாக அதிகமான அளவு மருந்து தேவைப்படுகின்றது. கோவை நிலங்கள் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இன்று அல்லது நாளை முதல் அந்த மாவட்டத்தில் 50,000 ஏக்கர் நிலத்திற்கு உடனடியாக விமான மூலம் பூச்சி மருந்து தெளிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. தீவிர மாவட்டத்தைப் பொறுத்தவரை இந்த ஆண்டு 150,000 ஏக்கர் சாகுபடித் திட்டம் அமலாகி இருக்கும் பகுதியில் ஹெலிகாப்டர் மூலமாக மருந்து தெளிக்கும் செலவு எல்லாவற்றையும் அரசே ஏற்றுக்கொள்ளுகிறது. ஆங்காங்கு உடனுக்குடன் மருந்துகளை அனுப்பி வழங்குவதற்கான ஏற்பாடுகளைத் தமிழக அரசும் வேளாண்மைத் துறையும் செய்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க் காணும் சட்டமுன்வடிவுகள் 1971-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாள் சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு திருத்தமேதுமின்றி நிறைவேறியதாக சட்ட மன்ற மேலவை தலைவரிடமிருந்து அறிக்கை வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 38/1971).

2. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை நீக்கல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 41/1971).

மேலும், தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1971) சட்ட மன்ற மேலவையில் 15—12—1971-ம் நாளன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதும் செய்யவில்லை என்றும் அறிவிப்பு வரப் பெற்றுள்ளது.

(5) அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 21 (3) விதியின்கீழ், "இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள 'அரசினர் தனித் தீர்மானங்கள்' என்ற தலைப்பின்கீழுள்ள இனம் (2) & (3) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தய-கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பட்ட பிறகு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்," என முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(6) அரசினர் சட்டமுன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1971)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: Even on excess Demands I would like to say something.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது 1966-ம் வருஷத்திய டிமாண்ட். நூற்றுக் கணக்கான தடவைகள் இங்கே விவாதிக்கப் பட்டிருக்கிறது. திரு. தங்கமணி அவர்கள் இந்த மன்றத்திற்குப் புதியவர்கள். பொதுவாக எக்சஸ் டிமாண்ட் பற்றி விவாதம் நடை பெறுவதில்லை. தாங்கள் பேசவேண்டுமென்று விரும்பினால் தாராள மாகப் பேசலாம். ஆனால் இன்றைக்கு நிறையத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதாலும், இன்று சட்டமன்றக் கூட்டம் முடிய வேண்டுமென்ற பொதுவான ஒரு கருத்து இருப் பதாலும் புதிய மரபை ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் பேசவேண்டுமென்று விரும்பினால் தடுக்க வில்லை.

THIRU K. T. K. THANGAMANI: Even as regards Excess Demands the matter has to be put to vote here. So, sometimes if there was an excessive expenditure which could have been avoided, I would like to say something. That has been brought to the knowledge of the Ministry by the Public Accounts Committee. The House also takes note of it. So, it is only for a limited purpose. But I submit to your ruling. Generally, even in the Lok Sabha on Excess Demands if there is unnecessary Excess Demand on a particular item, that is spot-lighted.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை எண் 54/1971) ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 and 3, were put and carried.

Clause 1, the Schedule, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move:

"That the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1971 (L.A. Bill No. 54 of 1971) be passed".

The motion was put and carried, and the Bill was passed into law.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1971).

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு* (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1971) ஆய்வுக்கு எடுத்துக்

* தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே தங்கமணி : இந்த 55-வது எண்ணுள்ள மசோதாவானது முதலாவது சப்ளிமென்டரி டிமாண்டாக வந்திருக்கிறது. என் அச்சம் என்னவெனில் அநேகமாக ஜனவரியில் இன்னொரு சப்ளிமென்டரி டிமான்ட் வரக்கூடிய நிலைமை ஏற்படும் என்று கருதுகிறேன். சமீபத்தில்தான் நம் தமிழ்நாட்டில் ஒவ்வொரு இலாகாவிற்கும் எவ்வளவு செலவழிக்கப்பட வேண்டும் என்று நாம் முடிவு செய்ததற்குப் பின்னுல் மூன்று நான்கு மாதங்களுக்கு உள்ளாகவே இன்னொரு 14 கோடி ரூபாய் வரையிலும் செலவழிக்க வேண்டுமென்று இந்தச் சபைக்கு முன்னுல் வருவது முறையானதாக எனக்குத் தோன்றவில்லை. இந்தத் துணை மானியக் கோரிக்கைக்கும் இப்போது நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய அவசர நிலைமைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பது இந்தத் துணை மானியக் கோரிக்கையில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் நாம் பார்த்தால் தெளிவாகப் புரியும்.

நான் அந்த விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. ஆனுல் இந்தத் துணை மானியக் கோரிக்கைகளுக்கும் நாட்டின் நிலைமைக்கும் சம்பந்தம் இல்லாமல் ஏற்கனவே பட்ஜட் சமர்ப்பிக்கப்பட்டு மானியக்கோரிக்கைகள் சபைக்கு முன்னுல் வைக்கப்பட்டபோது எந்த நிலை இருந்ததோ அந்த நிலைதான் இருக்கிறது என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். நான் ஏற்கனவே இந்த துணை மானியக் கோரிக்கைகள் மீது சில வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருந்தேன். அன்று சபையில் அந்த விவாதம் நிறுத்தப்பட்டு கில்லட்டின் ஏற்பட்ட காரணத்தினுல் அவற்றை இந்த சபைமுன் நான் சமர்ப்பிக்க முடியவில்லை. இருந்தாலும் இப்போது அதில் எழுப்பப்பட்டுள்ள ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் இங்கு எடுத்துக் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன்.

இந்த அட்மினிஸ்டரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் சம்பந்தமாக இங்கு பணம் ஒதுக்கியிருக்கிருேம். என் தொழிற்சங்க அனுபவம் என்னவென்றுல் ஒரு விஷயம் பற்றி அரசாங்கத்தைக் கேட்டால் சம்பள போர்டு அமைத்திருக்கிருேம், ஆகவே சம்பள போர்டு தீர்ப்பு வருகிற வரையில் அதை ஒத்திவைக்கவேண்டும் என்று சொல்லிவிடுவார்கள். சம்பள போர்டு தீர்ப்பு வருவதற்கு மூன்று ஆண்டுகளாகும். அதேமாதிரி மத்திய சர்க்கார் ஏற்கனவே ஒரு அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் ஒன்று நியமித்து தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு—வெகு விரிவாக எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் அந்த ரிப்போர்ட்டில் அம்சங்கள் இருக்கின்றன. அப்படி இருந்ததற்கும் பின்னுல் இப்போது நாம் அமைத்திருக்கக் கூடிய அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் இருக்கிறதே அக் கமிஷன் ஒரு பெரிய கேள்வித்தாளை தயாரித்து அனுப்பியிருக்கிருர்கள். எந்தக் கேள்வித்தாள் வந்தாலும் நான்

பதில் எழுதுவதுண்டு. ஆனுல் இந்த கேள்வித்தாளுக்கு நான் பதில் எழுதுவதாக இல்லை. அதை வைத்துத்தான் இவர்கள் இடைக்காலத்தில் ஒரு தீர்ப்பு கொடுக்கவேண்டிய அவசியமில்லை. ஏற்கனவே செயல்படாமல் இருக்கக் கூடிய இந்த ஏ.ஆர்.ஸி.-க்கு இன்னும் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து அவர்கள் செயல்படுவதில் காலதாமதம் ஏற்படும் போக்கு இருக்கிறது. ஆகவே சீக்கிரத்தில் ஒரு இடைக்கால ரிப்போர்ட்டை சமர்பித்து—இன்று பலவித மாறுதல்கள் ஏற்படவேண்டியிருக்கிறது.

உதாரணத்திற்காகச் சொல்கிறேன். ஐந்தாறு காரியதரிசிகளை வைத்திருக்கக் கூடிய ரெவன்யூ போர்ட் சம்பந்தமாக கொள்கை ரீதியில் அரசு முடிவு எடுக்கவேண்டியதற்கு, அதுகுறித்து ஏ.ஆர்.ஸி.-க்கு விடுகிருேம் என்றளவிற்கு ஒத்திபோடப்படுகிறது. ஆகவே, இந்தக் கமிஷன் செயல்கள் குறித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சில மாவட்டங்களில் இன்டென்சிவ் அக்ரிகல்ச்சுரல் ப்ரொடக்ஷன் இருக்கிறது. அத்தகைய மாவட்டங்களில் மதுரை மாவட்டமும் ஒன்று. அங்குள்ள விவசாயிகளுக்கு துரிதத்தில் அவர்களுக்கு தேவையான பொருள்கள் கிடைக்கவேண்டும். பல கூட்டுறவு அமைப்புகளைப் பார்த்தால் தேவையான சாமான்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை என்ற குறைதான் இருந்து வருகிறது. பத்து கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருக்கின்றன என்றுல் இரண்டு ஸ்தாபனங்களில்தான் தேவையான சாமான்கள் இருக்கின்றன என்பதும், சில ஸ்தாபனங்களில் தேவையான உரம் போன்ற சாமான்கள் இல்லை என்ற ஒரு நிலைதான் இருக்கிறது. அவர்களுக்கும் இப்போது நாம் அதிகமாகப் பணம் கொடுக்கிருேம். அப்படிப் பணம் கொடுக்கும்போது அந்தப் பணத்தின் பலன் பூராவும் விவசாயிகளுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, வாலிபப் படை ஒன்று தேர்ந்தெடுப்பதுபற்றி அதற்காக நாம் பணம் ஒதுக்கியிருக்கிருேம். எந்த முறையில் அவர்களைத் தேர்ந்தெடுக்கிருர்கள் என்பதைப் பற்றி நான் குறை கூறவிரும்பவில்லை. பல புகார்கள் வந்துள்ளன. படித்த வாலிபர்கள், பி.ஏ. பட்டம் பெற்றவர்கள் பலர் இந்தப் படையில் இடம் கிடைக்குமென மனு செய்திருக்கிருர்கள். யார் யார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள், எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள் என்பது இன்னும் மர்மமாகவே இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கலெக்டர், சி.ஈ.ஓ., டீன் இவர்கள் சேர்ந்து தேர்ந்தெடுக்கிற முறையிருக்கிறது. அப்படி தேர்ந்தெடுப்பது என்பதில் சர்வீஸ் கமிஷன் முறையிலான அமைப்பு இல்லாதது சந்தேகத்திற்கு இடம் ஏற்பட்டிருக்கிறது. லட்சக்கணக்கான வாலிபர்கள் வேலையில்லாமல் இருக்கும்போது இதில் அரசு சிறிது கவனத்தோடு இருக்கவேண்டும். முன்பு இதை சர்வீஸ் கமிஷனுக்குவிட்டுவிடலாம் என்று சொன்னேன். அதற்கு விடவில்லை. அந்தந்த மாவட்டங்களில் சில கமிட்டிகள் போட்டு

அவற்றையும் அதிகாரமில்லாத கமிட்டிகளாக ஆக்கி ஏதோ ஒரு முறையில் இன்று தேர்ந்தெடுக்கிறார்கள் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் இருக்கிறது. மக்கள் பிரதிநிதி என்ற முறையில் இதை அழுத்தமாக இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமையாகும் என்ற முறையில் இதைக் கொண்டு வந்திருக்கிறேன்.

இன்னும், கைத்தறி நெசவாளர்கள் பற்றியும், கூட்டுறவு செயல்படும் முறை பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கைத்தறி கூட்டுறவு சொசைட்டிஸ் செயல்படுவதற்கும் அவர்களுக்குத் தேவையான நிதியை அந்தந்தக் காலத்தில் கொடுக்கவும் அரசாங்கம் ஆவன செய்யவேண்டும். ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருந்த பல சொசைட்டிகள் இன்று மூடப்பட்டுக்கிடக்கின்றன. அதன் காரண காரியங்களை அறிந்து உடனடியாக அவைகளைத் திறப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

இறுதியாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, மூன்று மாக்னெசைட் கம்பனிகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று டால்மியாவிற்குச் சொந்தமாகவும், இன்னொன்று பிரேன் முக்கர்ஜிக்கு—பேர்ன் அன்ட் கோ—சொந்தமாகவும், இன்னொன்று ஒரு தனியாரிடமும் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த மாக்னெசைட் நமக்கு சில பொருள்களுக்கு வேண்டுமென்று லட்சத்திற்கு மேல் நாம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி இம்மாதிரி தொழில்களை தமிழக அரசு ஏற்று நடத்துவதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும். மாக்னசைட் பொறுத்தவரையில் பாராமுகமாகவே அரசாங்கம் இருக்கிறது என்ற குற்றச் சாட்டைச் சுமத்த நான் விரும்புகிறேன் அந்த மூன்று கம்பெனிகளையும் அரசு ஏற்றெடுத்து நடத்த மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி அவர்கள் முயற்சி செய்யக்கூடிய முறையில் செய்தால் அதன் துணைத் தொழில்கள் நன்கு செயல்பட உதவியாகயிருக்கும்.

மீண்டும் ஒருமுறை சொல்லிக்கொள்கிறேன். 14 கோடி ரூபாய் வரையில் உடனடியாக அதிகமாகச் செலவழிக்கவேண்டும் என்று இச் சட்டசபைக்கு முன்னால் வருவது முறையல்ல என்று மீண்டும் ஒரு முறை சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் குறைவாகயிருப்பதால் இந்த நிதி ஒதுக்கீடு மசோதா குறித்து ஒருசில கருத்துக்களை மட்டும் இங்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்

முதலாவதாக, இந்தக் கிராமப்புற வேலைவாய்ப்பிற்காக ஒரு க்ராஷ் ப்ரோக்ராம் மத்திய அரசின் நிதியைக் கொண்டு 50 கோடி ரூபாய் திட்டத்தின்கீழ் இங்கு செயல்பட்டு வருகிறது. இந்தத்

திட்டம் ஆங்காங்கு சரிவர நிறைவேறாமல் கிராமங்களில் உள்ள முற்பகல் 11-00
வேலைதேடும் வாலிபர்களை ஈர்ப்பதற்கு பயனற்ற வகையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் துவக்கும் போது ஒரு நபருக்கு மாதத்திற்கு நூறு ரூபாய் வருமானம் வருகிற வகையில் அமையும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது அது போய் அவுட்-டர்ன் பார்த்து செய்கிற வேலையை நிர்ணயிக்கிற காரணத்தால் சில இடத்தில் கட்டாந்தரையாக இருந்தால் ரூ. 1, ரூ. 1½ கூலி தான் வருகிறது. இதனால் வேலைசெய்பவர்கள் அதிகக் கூலி பெறமுடியாமல் போகிறது. வேலை செய்வதற்கு ஆட்கள் கிடைக்க மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதனால் திட்டத்திற்கு ஒதுக்குகிற பணம் லாப்ஸ் ஆகி விடுகிறது. வாக்களித்த தொகை செலவாகிற வகையில் இதற்கு வழி வகை செய்யவேண்டுமென்றும், அப்படி செய்வது தான் சிறப்பான திட்டமாக இருக்குமென்றும் சொல்லிக்கொள்கிறேன்.

குடி தண்ணீர் திட்டத்திற்காக ரூ. 2 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில்—தலைவரவர்களே, உங்களுக்குத் தெரியும்—பல்லடம், அவினாசி, போன்ற இடங்களில் குடிதண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது. நெல்லக்குப்பம் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் தந்து இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டம் செயல்படுத்தப் படாமல் இருக்கிறது. உலக வங்கியோடும், ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனோடும் பேச்சுவார்த்தை நடத்துவதாக அரசாங்கத் தரப்பில் சொல்லப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாவது பணம் பெற்று அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவோடு வேண்டுகோள் விடுகிறேன்.

. அடுத்ததாக, இந்தப் பிராந்தியத்தில் நீர்ப்பாசன வசதி சரியாக இல்லாத காரணத்தால், பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றி முடிக்கலாம் என்று சொல்லப்பட்டது. அது சம்பந்தமாக நமது மாநில முதலமைச்சர் கேரள மாநில முதலமைச்சரைச் சந்தித்துப் பேசுவதாகவும், விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் சொன்னார்கள். அப்படிச் சந்தித்துப் பேசியதாகத் தெரியவில்லை. இந்த ஆண்டு கொஞ்சம் மழை கருணை காட்டியிருக்கிறது. ஆனால் கிணறுகளில் தண்ணீர் வரவில்லை. புஞ்சை பயிர்களுக்குத்தான் பயன் அளித்து இருக்கிறது. அடுத்த ஆண்டு மழை பெய்யாவிட்டால் புஞ்சைப்பயிர் போய்விடும். ஆகவே, இந்த பாண்டியாறு-புன்னம்புழா அணைத்திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றித் தரவேண்டும். அது தான் அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு நிரந்தர பரிகாரத்தை அளிக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். கேரளத்தில் இருக்கும் அரசியல் சூழலில் இந்தப் பாண்டியாறு-புன்னம்புழா திட்டமும் சுழன்று கொண்டு இருக்கிறது. மேல் மட்டத்தில் இருக்கும் தலைவர்களுடன் பேசி, அவர்களுக்கு இருக்கும் அச்சத்தைப் போக்கி, அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்

கிறேன். முன்னே ஒரு கனடா இன்ஜினிர் சொன்னமாதிரி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவிட்டால் அங்கே உள்ள மக்கள் வேளாண்மைத் தொழிலை விட்டு விடும் அபாய நிலைமை ஏற்பட்டு விடும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கோவையில் பஞ்சாலைகள் நிறைய இருக்கின்றன. இந்த தேச நெருக்கடி சமயத்தில் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் அங்கே இருக்கும் பல முதலாளிகள் மூன்றாவது ஷிப்டை மூடுகிறார்கள். ஏராளமான பேர்களுக்கு லே-ஆப் கொடுக்கிறார்கள். இப்படி வேலைகளைப் பாதிக்கும் காரியத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள். தேசிய நெருக்கடி சமயத்தில் எதைச் செய்யவேண்டுமோ அதற்கு நேர் எதிராக செய்கிறார்கள். அதனாலே, அரசு அதில் தலையிட்டு, உடனடியாக தலையிட்டு, முழுமையாக 3 ஷிப்ட் நடப்பதற்கு உரிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டசபை நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விழைகிறேன். சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்திற்கான அறிவிப்பு வருகிறது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தக் கூட்டம் எத்தனை நாளைக்கு நடைபெறும் என்று தெரிவது இல்லை. இங்கே வந்ததற்குப் பிறகுதான் தெரிகிறது. என்ன பில் வருகிறது, என்ன மசோதா வருகிறது என்று தெரிவதில்லை. இங்கே வந்ததற்குப் பிறகுதான் அதற்கான நகல்கள் கிடைக்கின்றன. முன்னாலேயே எல்லாம் தெரிந்துகொண்டு வந்தால் சௌகர்யமாக இருக்கும். சிரமமாக இருக்காது. வருவதற்கு முன்னாலே எத்தனை நாட்களுக்கு நடைபெறும் என்ற அறிவிப்பும், அதே போன்று வருகின்ற முக்கியமான மசோதாக்களின் நகல்களும் உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படுமானால் இன்னும் பயன் உள்ள வகையில் அவர்கள் செயலாற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்ததாக, தலைவரவர்களே, இந்தத் தேசிய நெருக்கடி காலம் இன்னும் முடிவடைந்து விடவில்லை. யுத்தம் முடிந்து விட்ட பிறகுதான் அந்த யுத்தத்தின் விளைவுகளை நாம் சரிசெய்ய முடியும். யுத்தத்தால் ஏற்பட்ட சிரமங்கள் இனிமேல் தான் நமக்கு தெரிய இருக்கிறது. யுத்தத்தால் ஏற்பட்ட சேதம் சீர்படுத்தப்பட வேண்டும். அதற்கு என்னென்ன வகையில் வருவாயை அதிகப்படுத்தவேண்டுமென்று ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கும். இங்கே சில வரிப்பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. இன்னும் சில வர இருக்கின்றன. ஆனால் இந்த நேரத்தில் நான் ஓரிரு கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புவேன்.

இந்த வரிபோடுவதிலே அல்லது பணி வருவாய் பெருக்குவதிலே இங்கே ஒரு சில நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்வேன். நகர்புறச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு

போடவேண்டுமென்ற கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைச் செய்ய தக்க தருணம் இது தான். மாநில அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று மத்திய அரசும் சொல்லியிருக்கிறது ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, எப்படி இந்த தேசிய நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு புதிய வரிகளைப் போட்டோமோ. அல்லது வரிகளை உயர்த்தியிருக்கிறோமோ, அதேபோல் நகர்புறச் சொத்துக்களுக்கு வரம்பு கட்டும் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மசோதாவைத் தயாரிக்க கொஞ்சம் நாளாகலாம். அந்த இடைக் காலத்தில் அந்த நகர்ப்புறச் சொத்துக்களுக்கு, அதிகமாக சொத்துக்கள், கார்கள், வைத்து இருக்கிறவர்களுக்கு பொதுமக்களுக்கு தேவைப்படுகிற சாதனங்களை அதிகமாக வைத்து இருப்பவர்களுக்கு, பொதுமக்களுக்கு தேவைப்படுகிற முக்கியமான இடங்களில் நிலத்தை வளைத்து வைத்திருப்பவர்களுக்கு, வரி அதிகமாக போடுவதற்கு உடனடியாக அரசாங்கம் ஏன் முன்வரவில்லை என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. அதைச் செய்ய அரசு உடனடியாக முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

நிர்வாகத்தில் பெருத்த சிக்கனம் வேண்டும். நிர்வாகச் சீர்திருத்தக் குழு அமைத்து இருக்கிறார்கள். நிர்வாகச் சீர்திருத்தக் குழுவில் எதிர்தரப்பில் இருக்கும் சிலர் கூட இருந்து இருக்கவேண்டுமென்பது என் கருத்து. அந்த நிர்வாக சீர்திருத்தக் குழு இன்று ஒரு பெரிய கேள்வித்தாளை அனுப்பி இருக்கிறது. அந்தக் கேள்வித்தாளுக்கு பதில் வந்தபிறகுதான் அதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு அது அறிக்கையைச் சமர்பிக்க வேண்டும். அந்த அறிக்கை எப்போது வரும் என்று தெரியாது. இந்த தேசிய நெருக்கடி காலத்தில் அது வரை நாம் தள்ளிப் போடக்கூடாது. ஆகவே, நிர்வாகச் சீர்திருத்தக் குழு உடனடியாக எங்கெங்கே சிக்கனம் செய்யலாம் என்பதை அவசரமாக ஆராய்ந்து ஒரு அறிக்கையை அரசுக்கு வழங்கவேண்டுமென்று அரசு உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாகத் துறையில் சிக்கனம் செய்வதற்கும், செலவைக் குறைப்பதற்கும், பண விரயத்தைத் தவிர்ப்பதற்கும் நிறைய இடம் இருக்கிறது என்பது என் கருத்து. அந்தக் கருத்தை பெரும்பாலும் எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதற்கு உடனடியாக ஆலோசனை கூறும்படி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவுக்கு அரசு ஆணையிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவில் ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனது நண்பர் லத்தீப் அவர்களுக்கு பதில் அளிக்கிற போது, உருது பேசுபவர்களை உரிய காலத்தில் பின் தங்கியோர்

பட்டியலில் சேர்க்க ஆவன செய்வேன் என்ற வாக்குறுதியை இந்தச் சபையில் அளித்ததற்காக நான் என் கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் அவர்களுக்கு என் இருதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி இங்கே நான் பல முறை சொல்லி இருந்தபோதிலும் கூட முன்னேற்றப்பாதையில் நல்ல பல திட்டங்கள் செய்யப்படாமை குறித்து நான் ஒன்றிரண்டு திட்டங்களைச் சுட்டிக்காட்டவேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். அண்மையிலே நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது அமராவதி ஆற்றின் குறுக்கே, ராஜபுரத்தில் ஒரு பாலம் கட்டித்தரவேண்டுமென்று வேண்டுகோள் செய்தபோது, அது உண்மையிலேயே தேவைதான், நீண்டநாட்களுக்கு முன்பே செய்து இருக்கவேண்டியகாரியம். இதற்கு விரைவிலே அனுமதி பெற்றுத்தருகிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது வரையில் இன்வெஸ்டிகேஷனுக்குக் கூட உத்தரவிடவில்லை என்று அறிகிறேன். ஆகவே, இந்தச் சபையில் நான் பணிவன்போடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்வது, அதற்கு உண்டான வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமென்றுதான்.

என்னுடைய தொகுதி மிகுந்த வறட்சியான பகுதி என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனால் எவ்வித நீர்ப்பாசன வசதித் திட்டங்களும் இல்லை. நொய்யாற்றில், நங்கம்பாளையம் அருகே அணை கட்டுவதால், என் தொகுதியைச் சார்ந்த பல கிராமங்களும், எனது நண்பர் கரூர் தொகுதி உறுப்பினர் நல்லசாமி அவர்கள் தொகுதியும் பயனடையும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை கடந்த 23 ஆண்டுகளாக நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கிறோம். அது பற்றி எவ்வித செயற்குறிப்பும் இது வரையில் ஏற்படுத்தப்படவில்லை. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதால் பெரிய விவசாயத்திட்டங்கள் நிறைவேறாது போனாலும், அப்படி கட்டுவதால், அந்தத்தேக்கத்தால் அருகே உள்ள கிணறுகளில் ஊற்று ஏற்படும். அங்கே உள்ள குடிதண்ணீர் பஞ்சம் போகும். இதைத் தவிர அந்தப்பகுதி மக்களுக்கு வேறு வழியில்லை. அங்கே உள்ள மக்கள் குடி தண்ணீர் வாங்கித்தான் குடிக்க வேண்டியிருக்கிறது. பாசன வசதியும் மிகக் குறைவு : இந்தத் தேக்கம் கட்டுவதால் அந்தப்பகுதி மக்களுடைய எழ்மை நிலைமையில் மாறுதல் ஏற்படும் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில், பொதுவாகவே குடி தண்ணீருக்கு மிக்க கஷ்டம். அதுவும் கோடைக்காலத்தில் குடிநீருக்காக மக்கள் கஷ்டப்பட்டு, இரண்டு, மூன்று மைல் தூரம் கூட போகக் கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. ஒரு கிராமத்தில் குடிநீர் கிடைக்க வேண்டும் என்றால் அதற்கான தனித்திட்டங்கள் வேண்டும். குடிநீர் வாரியம் திட்டங்களைத் தீட்டிச் செயல் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் ஆண்டிப்பட்டியில், பக்கத்திலுள்ள குடவனாரிலிருந்து, தண்ணீர் கொண்டு வந்து சுற்றியுள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க திட்டம் அமைத்துக் கொடுப்பதாக குடிநீர் வாரியத் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் திட்டத்தை விரைவில், எவ்வளவு விரைவில் சாத்தியமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சிறிய கிராமங்களுக்கு இந்த மாதிரி திட்டங்கள் வரும்போது, அதற்கான ஈட்டுத் தொகையை அந்த மக்கள் கட்ட முடியாமல் இருக்கிறது. ஆகவே, அந்த மாதிரி நிலையில் அரசாங்கமே அதையும் ஏற்றுக்கொண்டு, இந்தக் காரியங்களைச் செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில், பெரிய தொழிற்சாலைகளோ, சிறிய தொழிற்சாலைகளோ கிடையாது. ஆகவே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியின் பேரில் கருணை கூர்ந்து, ஒரு சில தொழிற்சாலைகளையாவது ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏற்படுத்தித் தருவார்கள் என்றும் நம்புகிறேன்.

எங்கள் பகுதியில், 'வெங்கட்டான்' என்கிற வெள்ளைக்கற்கள் கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு கண்ணாடிப் பொருள்கள் செய்யலாம் என்று விவரம் அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, என்னுடைய தொகுதியில் அப்படியொரு கண்ணாடித் தொழிற்சாலையை அமைக்கமுடியுமா என்பதை ஆராய்ந்து பார்த்து ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றப் பகுதிகளோடு பார்க்கும்போது, என்னுடைய தொகுதியில் குடிசை வாழ் மக்கள் மிக்க இடர்பாட்டோடு இருக்கிறார்கள். அவர்களுக்கு பிழைப்புக்கு வழியில்லை. வேலை வாய்ப்பு ஒன்றும் இல்லை. போதுமான வருவாய் இல்லை. ஆகவே, வாழ வழியின்றி மிக்க பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் முன்னேற்றம் காணத்தக்க முறையில் திட்டங்களைத் தீட்டி, இந்த ஆண்டிலேயே நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூர் முதலிய கிராமங்களில் அரிசனங்கள் வாழும் பகுதி மிக்க நெருகியதாகவும், சகதி கொண்டதாகவும் இருப்பதால், அவர்களுக்கு இன்னும் சற்று விரிவான இடம் வேண்டும். இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் பல முறை விண்ணப்பங்கள் செய்திருந்தும், இதுவரை கவனிக்கப்படவில்லை. அந்த மக்களுக்கு இருக்க இட வசதி செய்து கொடுக்க வேண்டும், அதற்கான துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக் கொண்டிருப்பவர்கள் பரம ஏழைகள். அவர்களுக்கு தாங்கள் வீடு கட்டிக் கொண்டு வசித்துக் கொண்டிருக்கும்

இடம் சொந்தமாக இல்லை. அந்த நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரைக் கேட்டுக் கொண்டு, அதற்கான உத்தரவை அவர்கள் உடனடியாக பிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன், வணக்கம். நன்றி.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கோரிக்கைகள் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சில குறைபாடுகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றைக்கு ஏறக்குறைய 14½ கோடி ரூபாய் அளவில் அரசாங்கம் இந்த மானியங்களைக் கொண்டு வந்திருக்கிறது. ஒரு சில மாதங்களுக்கு முன்புதான் நாம் வரவு-செலவுத் திட்டத்தை ஒட்டி மானியங்களைக் கொடுத்திருக்கிறோம். அதற்குள்ளாக, இவ்வளவு தொகை கேட்கவேண்டிய அவசர அவசிய காரியங்கள் என்ன? 14½ கோடி ரூபாய் கேட்பதற்கான காரியங்கள் என்ன என்று துருவித் துருவி பார்க்கும்போது, அவசர அவசியக் காரியங்கள் பல காட்சி அளிக்கவில்லை. ஒழுங்காக வரவு-செலவுத் திட்டத்திலே கேட்கத் தவறிப்போய் இப்பொழுது இடையிலே செருகுகிறார்கள் போல் இருக்கிறது.

ஏனென்றால், பலவற்றைப்பார்த்தேன். முதலிலே, 'Creation of 4 posts of Regional Public Relations Officers' இதிலே, நான்கு பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர் போஸ்டுகளை அரசாங்கம் நியமிக்க கேட்கிறது. உடனடியாக இடைக் காலத்தில் ஸப்ளிமெண்டரி பட்ஜெட்டில் கேட்பானேன்? ஏன் இந்த போஸ்டுகளை பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்பப் போவது இல்லையா?

அதே மாதிரித்தான், 'appointment of Administrative Report's Committee' இதையெல்லாம் வரவு செலவுத் திட்டத்திலேயே சேர்க்காமல், ஏன் உப மானியக் கோரிக்கையில் சேர்க்கிறார்கள்? அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிட்டி ஏற்படுத்த பல லட்ச ரூபாய்களை ஒதுக்கி, உடனடியாக என்ன தீர்வு காணப்போகிறார்கள்?

அதே மாதிரித்தான், Study on the incidence of taxation in Tamil Nadu' ஸ்டடி தான். எப்படி வரி இருக்கிறது என்பதைப் படிக்கப் போகிறார்கள். அந்தப்படிப்புக்கு என்ன அவசரம்? எவ்வளவு வரிப் பளு, பர்சண்டேஜ் என்ன என்பதையெல்லாம் அவசரமாக ஏன் செய்ய வேண்டும். உப மானியக் கோரிக்கையில் வருவானேன்? அதற்கென்ன அர்ஜன்ஸி?

அதே போலத்தான், staff for 'and acquisition for Salem Steel Plant' இந்த சேலம் ப்ளாண்ட் வருகிறது, வருகிறது, வருகிறது என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்து, எதிர்பார்த்து,

மக்களும் சலித்து விட்டார்கள். எப்பொழுதுதான் வருமோ தெரியவில்லை. மாநில அமைச்சர் அறிக்கை விட்டார், மத்திய அமைச்சர் அறிக்கை விட்டார் வருகிறது பாருங்கள், வருகிறது பாருங்கள் என்று. ஆனால், வரவில்லை. இந்த நிலையில் லாண்ட் அக்விஸிஷன் ஸ்டாஃப்புக்கு அவசரம் என்ன? எப்பொழுது ஆரம்பிக்கப் போகிறார்களோ தெரியாது. மத்திய சர்க்கார், தெரிவித்தவுடன், 'emergent provision for land acquisition' இருக்கிறது. அதன் கீழ் செய்யலாம். அதோடு இப்பொழுது அரசியல்சட்ட 25-வது அமெண்ட்மெண்டும் இருக்கிறது. காம்பென்ஸேஷன் கேட்டு, கோர்ட்டுக்குப் போவார்கள், தாமதம் ஆகும் என்று கிடையாது. நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம். பல இடங்களில் தொழில் பேட்டைகள் ஆரம்பிக்க என்று நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு ராணிப்பேட்டை போன்ற இடங்களில், தொழில்பேட்டை வரவில்லை. இதனால் என்ன ஆயிற்று? நிலத்தை ஆர்ஜிதம் செய்திருப்பதால், விவசாயிகள் விவசாயம் செய்ய முடியவில்லை. ஆர்ஜிதம் செய்த காரணம் நிறைவேறவில்லை. பல இடங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. விவசாயமும் செய்ய முடியவில்லை, ஆர்ஜிதம் செய்யப் பட்ட காரியமும் ஆகவில்லை. இப்படிப்பட்ட கால தாமதங்கள் இருக்கும் போது, சேலம் ஸ்டீல் ப்ளாண்டுக்கு லாண்ட் அக்விஸிஷனுக்கு ஸ்டாஃப் என்று உபமானியக் கோரிக்கையில் வரவேண்டியதைப் பார்த்தால் நாம் சற்று யோசிக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது. இருக்கின்ற அத்தனை டிபார்மெண்டுகளுக்கும் உபமானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. ஒரு வேளை, இந்த இலாகா கேட்டுவிட்டதே, நாமும் கேட்காமல் இருக்கக்கூடாது என்று ஒவ்வொரு இலாகாவும் கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறதோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. எல்லா இலாகாக்களுக்கும் தேவைப்படுகின்ற பல நல்ல திட்டங்களை தயாரித்து வரவு-செலவுத் திட்டத்தில் இப்பொழுதுதான் கொடுத்தோம். அப்படியிருக்கும்போது, இந்த இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளே, எல்லா இலாக்காக்களுக்கும் தேவைப்பட வேண்டிய அவசியம் என்ன என்பதைக் கடுமையாக யோசிக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அப்படிச் செய்தால்தான் சட்டசபைக்கு வரவு-செலவுத் திட்டத்தின் மேல் உள்ள அதிகாரங்கள் சரியாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்வியை எடுத்துக் கொண்டால் 'எ சேர் ஃபார் பஞ்சாபி என்றிருக்கிறது. பஞ்சாபி மொழியின் மேல் என்ன அவ்வளவு அக்கறை பிறந்து விட்டது? வேறு மொழிகள் இல்லையா? ஹிந்தி, இந்தியாவின் 'லிங்க்' மொழியாக இருக்கிறது-- அபிஷியல் லாங்வேஜ் என்று ஒத்துக்கொள்ள ஆசைப்படவில்லை —தொடர்பு மொழியாக இருக்கிறதே, அதற்கு ஒரு சேர் இருக்கிறதா? இல்லை. இந்தியாவில் எத்தனை மொழிகள் இருக்கின்றன? அவற்றிற்கெல்லாம் சேர் இருக்கிறதா? ஒரு வேளை, முதல் அமைச்சர் அமிர்தஸரசு போய்விட்டு வந்தால் இந்த

அக்கறை ஏற்பட்டதா? அல்லது முன்னாள் கவர்னர் உஜ்ஜல் ஸிங் இருந்தார்களே, அதனால் பஞ்சாபி மொழிக்கு ஒரு சேர் ஏற்படுத்த வேண்டும் என்று உடனடியாக பணம் கொடுங்கள் என்று அவசரமாக உபமானியத்தில் கேட்கிறார்களா? ஒன்றும் புரியவில்லை. வரவு-செலவுத் திட்டம் கொண்டு வரும்போது, இத்தனை மொழிகளுக்கு சேர்கள் ஏற்படுத்தலாம், இவ்வளவு செலவழிக்கலாம் என்று ஏன் யோசிக்கவில்லை?

அதே போன்று, தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க என்று ஒரு கோரிக்கை. அது உப மானியக் கோரிக்கையில் வருகிறது. ஏன் வரவு செலவு திட்டத்திலே அதற்கு என்று பணம் ஒதுக்கப்படவில்லையா, இப்பொழுதுதான் ஒதுக்கப்படுகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த நிலையில், பல மாணவர்கள் தமிழ் மொழியை பயிற்சி மொழியாகக் கொண்டவர்கள், இன்னும் தங்களுக்கு உதவித் தொகை வரவில்லையே என்று கதறிக் கொண்டிருக்கிறார்கள். டிசம்பர் மாதம் ஆகிவிட்டதே, இன்னம் மூன்று மாதங்கள்தானே பாக்கியிருக்கிறது, உதவித் தொகை எப்பொழுது வருமோ என்று ஏங்கிக் கொண்டு இருக்கிறார்கள். உதவிக்காகக் கொடுக்கிறார்களா அல்லது விளம்பரத்திற்காகவா என்று யோசிக்கவேண்டும். கொடுப்பதைக் காலாகாலத்தில் கொடுக்க வேண்டும். காலங் கடந்து கொடுப்பது உதவியாக இருக்காது. அதே நேரத்தில் தமிழ் மொழியைப் பயிற்சிமொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு இதுவரையில் காலதாமதம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன, ஏன் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்பதையும் ஆராய்ந்து விளக்க வேண்டும்.

அதே போன்று தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற செந்தமிழ் கல்லூரி மாணவர்களுக்கு உதவிப்பணம் கிடைக்கவில்லை. அதைப் பற்றி மாண்புமிகு திரு. க. அன்பழகன் அவர்களை சந்தித்து அக் கல்லூரி மாணவர்கள் கேட்டார்களாம். அதற்கு அமைச்சர் அவர்கள் பட்டை போடும் கல்லூரி மாணவர்களாகிய உங்களுக்கு என்ன அவசரம்? உதவித் தொகை வராவிட்டால் ஒன்றும் கெட்டுவிடாது. சத்திரத்தை இழுத்துமூடுவது போல் கல்லூரியை இழுத்து மூடிவிடுவேன் என்று கடுமையாகப் பேசியிருக்கிறார். பட்டை போடுகிறவர்கள் தான் உங்கள் கண்ணுக்கு தேட்டை போடுகிறவர்களாகத் தெரிகிறதா? அந்த மாணவர்கள் தமிழைத் தானே படிக்கிறார்கள். தமிழுக்கு நல்ல இடம் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு தமிழ்கல்லூரி மாணவர்களை இவ்வளவு இழிவாகப் பேசுவதை அனுமதிக்கலாமா? ஏன் அப்படிப் பேசினார்? உதவித் தொகை கொடுக்கமுடியாது. மத்திய சர்க்காரை கேள் என்றாராம். தமிழ்க் கல்லூரி மாணவர்களுக்கு கொடுக்கவேண்டிய உதவிப் பணம் எதற்கு மத்திய சர்க்கார் தருகிறது? மாநில சர்க்கார் கொடுக்க வேண்டியதுதானே? அதைக் கேட்டால் சத்திரத்தை இழுத்துப் பூட்டுவதுபோல, கல்லூரியை மூடிவிடுவேன் என்று அமைச்சர் சொல்லுகிறார் என்றால் . . .

திரு. து. ப. அழகமுத்து : தலைவரவர்களே, பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு அங்கத்தினர் பேசுகிறாரா? பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு பேசலாமா?

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ஆதாரத்தோடு தான் பேசுகிறேன். எந்த மாணவர் அமைச்சரிடம் மகஜர் கொடுத்தாரோ அதே மாணவர் அமைச்சர் சொன்ன பதிலை தங்கள் கையால் எழுதி அனுப்பியிருக்கிறார். அமைச்சர் அவர்களுக்கு வேண்டுமானால் காட்டுகிறேன். அவர் சொன்ன பதிலைப் படிக்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அவையில் இல்லாதபோது அவர் பேரில் குற்றச்சாட்டுகளை சொல்லலாமா?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: He knows that the Supplementary Demands are coming up for discussion and he must be in his seat.
அவர் சட்டசபையை அவ்வளவு மதிக்கிறார் என்று புரிகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கலெக்டர்கள் மாநாடு நடந்துக்கொண்டிருக்கிறது. முக்கியமான விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். சிவில் பாதுகாப்பு சம்பந்தமாக கலெக்டர்களுடன் பேச்சு நடந்துக்கொண்டிருக்கிறது அதற்காக அமைச்சர்கள் சென்றிருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்தில் வேலை இருக்கின்ற அமைச்சர்கள் மட்டும் அவையில் இருந்து கொண்டிருக்கிறோம். அதற்காக குற்றம் சொல்லக்கூடாது. யாரோ கடிதம் எழுதியிருக்கிறார் என்று சொல்கிறார்கள். எழுதியிருக்கலாம். அமைச்சர் அவர்கள் அவ்வாறு சொல்லியிருப்பார்களேயானால் அங்கத்தினர்களுக்கு உரிமையிருக்கிறது., கேள்வி கேட்டிருக்கலாம். இப்படிச் சொன்னது உண்மையா என்று கேட்டிருக்கலாம். கேட்டு பதில் வாங்கியிருக்கலாம். இவற்றைச் செய்யாமல் இப்படிப் பேசுவது முறையல்ல.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் யாரோ ஒருவர் எழுதிய காகிதத்தைப் படிக்கிறேன் என்று சொன்னார்கள். தலைவர் அவர்களின் அனுமதியைப் பெற்றுத்தான் எந்த ஒரு காகிதத்தையும் படிக்கவேண்டும். அம்மையார் அவர்கள் படிக்க முற்படுகிறார்களே, அது அவையின் வரம்புக்கு உள்பட்டதுதானா என்று அறிய விரும்புகிறேன்.

DR. H. V. HANDE: Sir, on a point of order. The Chief Whip of the Ruling Party has stated that the concerned Minister is not here and that has been supported by the Hon. Minister for Food with the observation that he has gone for a conference. That might be an absolute fact. But the discussion in this House is much more important than in any other place.

[Dr. H. V. Hande]

Another point is that when the concerned Minister is absent another Minister can reply to it and it is a joint responsibility. Otherwise, we will be restricting the discussion to the Demands which come under the concerned Ministers present here. For instance, now I have got to say something about the Demands coming under the purview of the Hon. Chief Minister and Hon. Minister for Education who are not now present in this House. So I want a ruling from the Chair whether we should speak only on the Demands which concern the Ministers present here now . . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இங்கே பேசுகிறவர்கள் யாரையும் பேசக்கூடாது என்று சொல்லவில்லை. முக்கியமான பிரச்னையாக இருப்பதால், தனிப்பட்ட அமைச்சரின் பேரில் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டாக இருப்பதால், கேள்வி நேரத்தில் கேள்வியாகப் போட்டால் அமைச்சரிடமிருந்து பதில் கிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்பதற்காக சொல்லப்பட்டது. அவர் சம்பந்தப்பட்ட அமைச்சர் இல்லாதபோது பேசுவது தவறு என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு ஒழுங்குப் பிரச்னைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. திரு. துரைமுருகன் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார். ஏதோ ஒரு காகிதத்தை வைத்துக் கொண்டு அம்மையார் படிக்க முற்படுகிறார் என்று சொன்னார்கள். அப்படி எல்லாம் சொல்லக்கூடாது. பொதுவாக எல்லா உறுப்பினர்களுக்கும் இந்த மன்றத்தில் கௌரவம் உண்டு. உங்களையும் பார்த்து நானே அப்படிச் சொல்லலாம். அம்மையார் அவர்கள் காகிதத்தை படிக்கக்கூடாது. அவர்கள் படிக்கவில்லை. படிக்கலாமா என்றுதான் கேட்டார்களே தவிர படிக்கவில்லை. பொதுவாக உறுப்பினர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், மன்றத்தில் உறுப்பினர்கள் சகல உரிமைகளுக்கும் உரியவர்கள். என்றாலும் பத்திரிக்கைச் செய்திகளை, காகிதங்களைப் படிக்க அவைத் தலைவரின் முன் அனுமதி வேண்டும்.

டாக்டர் ஹாண்டே அவர்களின் ஒழுங்குப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்னைதான். திரு. அழகமுத்து சொன்ன கருத்து சரியான கருத்தல்ல. சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கும் போதுதான் பேசவேண்டும் என்று சொல்லுவது சரியான கருத்தல்ல. அதைத்தான் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அரசாங்கம் என்பதில் எல்லா அமைச்சர்களுக்கும் கூட்டு பொறுப்பு உண்டு. முதலமைச்சர் அவர்கள் இங்கு இப்போது அவையில் இல்லை, வேறு ஒரு அமைச்சர் அவசரமான ஒரு காரியத்தை கவனிக்கிறார் என்றால், எல்லா அமைச்சர்களும் அவையில் இருந்தாகவேண்டும் என்ற மரபு கிடையாது. எந்த ஒரு அமைச்சர் அவையிலிருந்தாலும், அரசாங்க சார்பில் இருக்கிறார் என்ற மரியாதையுடன் தான் சட்டமன்ற நடவடிக்கைகள் கவனிக்கப்படுகின்றன. ஆகவே, எந்த ஒரு

[பேரவைத் தலைவர்]

அமைச்சர்மீதும் அவர் இல்லாத போது குற்றச்சாட்டை சொல்லி விமரிசிக்கவோ, கண்டிக்கவோ உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. அந்த அமைச்சர் எப்போது வருவார் என்று பார்த்துக்கொண்டு, அப்போதுதான் அவரைப் பற்றிய குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும் என்ற நியதி சட்டமன்றங்களுக்குக் கிடையாது. ஆனால் பொதுவாக ஒரு சம்பிரதாயம் என்னவென்றால், தனிப்பட்ட அமைச்சர்மீது குற்றச்சாட்டு சொல்லக்கூடிய நிலைமை இருக்குமானால், அந்த அமைச்சர் இருக்கிற நேரத்தில் சொல்லுவது நல்லது. அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பொறுப்பு ஏற்கும்படியான காரியங்களைச் செய்கின்ற நேரத்தில் அது அவர்களுக்கு குறைகளைப் போக்க ஒரு ஏதுவாக இருக்கும் என்று கருதலாம். அமைச்சர் இல்லாத நேரத்தில் அவர்மீது சொல்லப்படும் குற்றச்சாட்டிற்கு அவா வாய்ப்பு கிடைக்கின்ற போது பதில் சொல்லலாம். அம்மையார் அவர்கள் தம்முடைய பேச்சை சீக்கிரமாக முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இங்கே நான் செந்தமிழ்க் கல்லூரி விஷயத்தைப் பற்றி எடுத்துச் சொல்லுகிறேன் என்றால், இங்கே ஜாயிண்ட் ரெஸ்பான்சிபிலிடி உள்ள சட்டத்துறை அமைச்சர் இருக்கிறார். அவர் சகலமும் தெரிந்தவர். அவர் இருக்கும்போது இதைச் சொல்லி விளக்கம் பெற்றுக்கொள்ளலாம் என்பதற்காகச் சொல்லுகிறேன். ஏதோ இங்கு இல்லாத அமைச்சர் அவர்களைப் பற்றி பேச வேண்டும் என்பதற்காக அல்ல. சட்டமன்ற கூட்டத்தை விட முக்கியமான வேலை ஒரு அமைச்சருக்கு இருக்கிறது என்றால், அதைப் பற்றி நான் ஏதும் சொல்ல முடியாது.

ஆனால் எனக்குக் கிடைக்கின்ற நேரத்தில்தான் நான் விஷயத்தைச் சொல்லமுடியுமே தவிர, கேள்வி போட்டு பதில் வாங்குவதற்கு காலதாமதம் ஏற்படும். செந்தமிழ் கல்லூரியின் நூற்றாண்டு விழா கூட கொண்டாடி விடலாம் பதில் கிடைப்பதற்குள் என்ற ஐயப்பாடு இருப்பதால், சுடச்சுட பிரச்னைகளை எடுத்துச் சொல்லிவிட்டால், சுடச்சுட அதற்கு நிவாரணம் காண வழி கிடைக்கும். ஆகையால் நான் சொன்னேன். செந்தமிழ் கல்லூரி மாணவர்கள் அமைச்சர் அவர்களைச் சந்தித்து எங்களுக்கு ஒரு பரிகாரம் செய்யவேண்டும், எங்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை இன்னும் வரவில்லை என்று மரியாதையாக எடுத்துச் சொல்லிக் கேட்டபோது, அமைச்சர் அவர்கள் பணம் வரவில்லையா, எவ்வளவு பணம் வரவில்லை என்று கேட்டு ஆவன செய்வதாக பதில் அளித்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு, "பட்டை போடுகிறவர்களுக்கு என்ன அவசரம்"? என்கிறார் என்றால், எங்களைப் போன்று சமயப்பற்று உள்ளவர்களை இழித்துச் சொல்லுவதாக இருக்கிறது என்று தெரிவித்துக்

[1971 டிசம்பர் 18

[திருமதி த. ந. அனந்தநாயகி]

கொள்ள விரும்புகிறேன். பட்டை போடுகிற மாணவர்களுக்கு உதவித் தொகை என்ன அவசரம்? நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள், கல்லூரியை சத்திரத்தை மூடுவது மாதிரி மூடிவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார் என்றால், இந்த அரசாங்கம் கல்லூரிகளை, பள்ளிகளை நடத்தி படிப்புச் சொல்லிக் கொடுக்க வரவில்லை; சத்திரத்தை நடத்த வந்திருக்கிறது என்று கருதுகிறதா என்பதை விளக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் இன்றைக்கு பல லட்ச ரூபாய்களை கல்விக்காக ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் செயல்படுகின்ற முறையைப் பார்க்கின்ற போது, இன்றைக்கு பல கல்லூரிகள் அண்டர்-ஸ்டாஃப்டு (understaffed) ஆக இருக்கிறது. ஆசிரியர்களைப் போடுவதற்கு இன்றைக்கு பல லட்ச ரூபாய் கேட்டிருக்கிறார்கள். நான் ஒரு கல்லூரிக்குச் சென்றபோது, அங்கே பலதுறைகளில் சரியான ஆசிரியர்கள் இல்லை என்று சொன்னார்கள். 2, 3 ஆசிரியர்கள் இருக்கவேண்டிய இடத்தில் ஒரே ஒருவர் இருந்துகொண்டு கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார். பல கல்லூரிகளில் முதல்வர் அடிக்கடி மாற்றப்படுகிறார். Principals are very frequently transferred. இப்படி அடிக்கடி மாற்றினால் கல்லூரியில் அவருக்கு பிடிப்பு ஏற்படாது. கல்லூரியில் அவருக்கு அக்கறை இருக்காது. அதனால் கல்லூரி மாணவர்களின் படிப்பின் தரம் குறைந்துபோக நேரிடும். ஏதோ உத்தியோக உயர்வு என்ற முறையில் மாற்றப் படலாமே தவிர, மூன்று மாதத்திற்கு ஒரு முதல்வர், நான்கு மாதத்திற்கு ஒருவர் என்றால். அதன் விளைவு மாணவர்கள் மத்தியில் ஜெனரல் அன்ரெஸ்ட் ஏற்படுகிறது.

முற்பகல் 11-30 அடிக்கடி இப்படி முதல்வர்களையும், பேராசியர்களையும் மாற்றி வருவதால் மாணவர்களுக்கும் அவர்களுக்கும் ஒரு தொடர்பு—ஒரு பிடிப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே அரசாங்கம் மாணவர்களுக்கும் அவர்களுடைய ஆசான்களுக்கும் நெருங்கிய இணைப்பு இருக்கின்ற நிலையை ஏற்படுத்தி, ஆசிரியர்களை அடிக்கடி மாற்றக் கூடியதைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 'கம்யூனிட்டி டெவலெப்மென்ட்' அதைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன் கம்யூனிட்டி டெவலெப்மென்ட் டிப்பார்ட்-மென்டுக்கு பல லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலே பணிபுரிபவர்கள் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் நிறைய பேர் இருக்கிறார்கள். முன்பு இருந்த காங்கிரஸ் அரசாங்கம் அந்தத் தியாகிகள் 60 வயதுவரை பணியாற்றலாம் என்று சட்டம் செய்திருந்தது. காரணம் அவர்கள் உத்தியோகத்திற்கு வருவதே 50, 55 வயதில்தான். ஆனால் இப்போதிருக்கிற அரசாங்கம் அந்த உத்தரவை ரத்து செய்து, எல்லாப் பணியாளர்களும் 55 வயதில் ரிட்டயர் ஆக வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அதைத்தொடர்ந்து தியாகிகளின் பதவிக் காலமும் 55 வயதுவரைதான் என்று குறைந்துவிட்டது.

1971 டிசம்பர் 18]

[திருமதி த. ந. அனந்தநாயகி]

அதை எதிர்த்து 'ரிட்' மனு தாக்கல் செய்யப்பட்டது. கோர்ட்டிலும் தியாகிகள் வயதை 55-ஆக குறைத்தது செல்லாது என்று ஆணைப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் அரசாங்க உத்தரவினால் பாதிக்கப்பட்டவர்கள் வேலைக்குச் செல்லும் வழி ஏற்படவில்லை. கோர்ட் உத்தரப்படி விட்டுவிட்டால் பரவாயில்லை. அதற்குப் பதிலாக மீண்டும் தியாகிகளின் வயதை 55-ஆக குறைப்பதற்கு சட்டப்பூர்வமான நடவடிக்கையை எடுப்பதற்கு அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்புகிறது. நானும் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் தியாகிகளின் வயதைக் குறைக்கக்கூடாது. அவர்கள் சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள். அவர்கள் விஷயத்தில் அரசாங்கம் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

பொலிட்டிக்கல் ஸஃபரர்ஸ் 100 அல்லது 150 பேர்களுக்கு மேல் இருக்கமாட்டார்கள். அவர்களை மேலும் 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு பணியில் வைத்துக் கொள்வதினால் அரசாங்கத்திற்கு பெருத்த நஷ்டம் ஒன்றும் வந்துவிடப்போவதில்லை. நாம் சுதந்திரம் அடைந்தது பல லட்சக்கணக்கான வீரர்களின் தியாகத்தால் தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தங்கள் சொத்து, சுகங்களை யெல்லாம் இழந்து உயிரையும் தியாகம் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தியாகிகளுக்கு உதவி செய்யாமல் வேறு யாருக்கு இந்த அரசாங்கம் உதவி செய்யப் போகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தியாகிகள் மட்டும்தான் இருப்பதாகச் சொன்னார்கள். தியாகிகள் மட்டும் நியமிக்கப்படவில்லை. தியாகிகள் பெயரால் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் தியாகிகள் மட்டும் இருந்தால் பரவாயில்லை. பழைய எம்.எல்.ஏ.-க்கள், தேர்தலிலே நின்று தோற்றுப் போனவர்கள் கூட இதிலே தியாகிகள் என்ற முறையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லோரையும் போல் அவர்களுக்கும் கொடுப்பது என்பது முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படி அரசியல் கட்சிகளில் ஈடுபட்டவர்கள் இருந்தால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. நமது நாட்டைக் காக்க, நாம் சுகமாக வாழ தங்கள் சொத்து, சுகங்களையெல்லாம் இழந்து நிற்கும் சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு 60 வயது வரையில் வேலை கொடுத்தால் போதும். மற்றவர்களுக்கும் இந்தச் சலுகை கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சுதந்திரப் போராட்டத் தியாகிகளை ஒரு டிஃபரன்ட் கிளாஸாக ட்ரீட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களையும் 55 வயதில் வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டுமென்று மீண்டும் உத்தரவு பிறப்பிக்கப்படுமானால், அது உண்மையிலேயே அந்தத் தியாகிகளுக்கு—விடுதலை வீரர்களுக்கு காட்டக் கூடிய மரியாதை அல்ல. ஆகவே, கோர்ட்டிலே போட்ட

[திருமதி த. ந. அனந்தநாயகி]

உத்தரவுப்படியாவது, மீண்டும் தியாகிகள் வயதை 60 ஆக உயர்த்தி, இப்போது வேலை இழந்தவர்களையும் 60 வயது வரையில் வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஹெல்த் டிப்பார்ட்மென்ட் இந்த டிப்பார்ட்மென்டில் வேலைசெய்யும் ஸ்டாஃப்களுக்காகத்தான் அதிகத் தொகை செலவழிக்கப்படுகிறது. ஸ்டாஃப்களுக்கு எப்போதுமே நிரந்தரமாக செலவுத்தொகை ஒதுக்கப்பட வேண்டியதுதானே. அதை முதல் மதிப்பீட்டிலேயே ஒதுக்கியிருக்கலாம். துணை மதிப்பீட்டில் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது ஒழுங்காக மதிப்பிட்டிருந்தால்.

இன்றைக்கு அரசாங்க ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொண்டால், அங்கே ஒழுங்கான பராமரிப்புக் கிடையாது. ஒரு முறை வேலூர் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன். அந்த ஆஸ்பத்திரியில் என் தந்தையார் சிகிச்சை பெற்றுவந்தார். அங்கே பார்த்தால் நோயாளிகளுக்குப் போதுமான படுக்கை வசதி கிடையாது. நல்ல மருந்து கிடையாது. நல்ல திறமைபெற்ற டாக்டர்கள் கிடையாது. பொதுவாகச் சொன்னால் ஒழுங்கான பராமரிப்புக் கிடையாது. படுக்கைகள் போட்டிருக்கிறார்கள். ஆனால் அதிலே நோயாளி படுத்தால், எழுந்திருப்பது கஷ்டம். காரணம் படுக்கையிலே அப்படிப்பட்ட பள்ளங்கள் இருக்கின்றன. அவ்வப்போது படுக்கைகளைப் பழுதுபார்த்தால்தானே நன்றாக இருக்கும். எல்லா அரசாங்க மருத்துமனைகளிலும் இந்த நிலைதான் இருக்கிறது. ஆஸ்பத்திரியில் நல்ல மருந்து கிடையாது. மருந்து இருந்தால் டாக்டர் கிடையாது. டாக்டரும் இருந்து, மருந்தும் இருந்தால் படுக்கை கிடையாது. பண வசதி உள்ளவர்கள் பிரைவேட் நர்ஸிங் ஹோமுக்குச் சென்று சிகிச்சைப் பெற்றுக் கொள்கிறார்கள். பணம் இல்லாத ஏழைகள் அரசாங்க மருத்துவ மனைகளுக்குச் செல்கிறார்கள்.

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியை எடுத்துக்கொண்டால், அங்கே கிட்னி சம்பந்தப்பட்ட சிகிச்சைக்கு இருக்கிற நெஃப்ராலஜி பிரிவில் வேண்டிய வசதிச் செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். தமிழகத்தின் தலைநகரிலேயே இப்படிப்பட்ட நோய்களுக்கு சிகிச்சை செய்ய வசதி இல்லை என்றால் மற்ற இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் எப்படி இருக்கும்? எனவே, இந்தக் குறைகளைப் போக்கி, நல்லமுறையில் சிகிச்சை அளிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டம். இந்தத் திட்டத்திற்காகவும் உப மானியக் கோரிக்கையில் அதிகத் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். சத்துணவு சிறு சிறு மன்றங்கள் மூலம் வழங்கப்படுகிறது. பல மன்றங்கள் இன்று அரசியல் நோக்குடன்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அம்மையார் அவர்கள் 'எம்.ஜி.ஆர். மன்றங்கள் இருக்கின்றன; காமராஜ் மன்றங்கள் இருக்கின்றன.

[திருமதி த. ந. அனந்தநாயகி]

எல்லா மன்றங்கள் வழியாகவும்தான் வழங்கப்படுகிறது' என்று சொன்னார்கள். சில மன்றங்கள் கொஞ்சநாளில் இருக்கின்ற இடம் தெரியாமலேகூட போய்விடும். பல லட்சம் ரூபாய் இத்திட்டத்திற்காகச் செலவிடப்படுகிறது.

ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்குச் சத்துணவு வழங்க வேண்டுமென்று இருக்கிறது. கார்ப்பரேஷன் பள்ளிகள் மூலம் சத்துணவு வழங்கப்படுகிறது. பள்ளிகளில் ஐந்து வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள்தான் இருப்பார்கள். பள்ளிகளிலே விநியோகிப்பதற்குக் கொடுக்கப்படும் ரொட்டித் துண்டுகள் மாலை வேளைகளில் கடைத்தெருவிற்கு விற்பனைக்குச் செல்கிறது. அது ஒழுங்காக விநியோகம் செய்யப்படுகிறதா என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

சத்துணவுகளை சிறு சிறு மன்றங்கள் மூலம் வழங்கக்கூடாது. ஏனென்றால் அவை அரசியல் நோக்குடன் இயங்குகின்றன. அதோடு சில மன்றங்கள் இருக்கும் இடமே தெரியவில்லை. சில மன்றங்கள் இடம் விட்டு இடம் மாறிக்கொண்டே இருக்கின்றன. எனவே, இந்தியன் சைல்டு வெல்பேர், சோஷியல் வெல்பேர் போன்ற நிரந்தர ஸ்தாபனங்கள் மூலமாக இந்தச் சத்துணவுகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I wish to say a few words regarding the Appropriation Bill.

Sir, yesterday I was pained to see that nearly 39 Demands out of the 46 Demands were there here before us for different supplementary grants. Almost every Demand practically has been brought before the House for further allotment, under some excuse or other. I would particularly like to bring to the consideration of Government one point, now that we are going to disperse today, probably this is the last day of the session and I do not know whether the Speaker had decided that we should adjourn today or meet on Monday, let me say one thing.

Certain important things are engaging the attention of the public all over the State. One of the most important things that I would like the Government to understand is the manner in which we are hereafter going to apply the Defence of India Rules. How are we going to apply it, under what method we are going to apply it—this is an important point which I would like the Hon. Minister. (I think the Hon. Minister for Law would reply to it). Whatever be the legal position, I think the Hon. Minister will give a categorical assurance in this House that DIR (Defence of India Rules) will not be ruthlessly and mercilessly applied. Such an assurance I demand from the Hon. Chief Minister on the floor of the House.

There are already certain cases under DIR. We have recently arrested two persons. I am not going into the question of *sub-judice* or the merits of the case. I will confine myself strictly

[Dr. H. V. Hande]

within the precincts of law, since I should not be blamed later on as though I was talking on matters *sub-judice*. There is another aspect of the whole matter.

The Hon. Law Minister or the Hon. Chief Minister who is not now in his seat—they can decide. In our State we have at the moment a sort of peaceful atmosphere at least temporarily fortunately. In general we are now having peace in the country. It may be temporary or it may be for a long time. The point is, now the truce has been signed, now the cease fire has been signed, let us hope that it will be a permanent cease fire.

Because of the fact that the situation today is not as tense as it was yesterday or day before yesterday. I will be very happy if the Hon. Minister in his reply categorically gives two assurances. One is, I want the Hon. Minister to assure in this House that the ruthless application of the Defence of India Rules will not be undertaken. Afterwards, we have no chance to bring this to the attention of the House. The other assurance I want from the Hon. Minister is this. If necessary, he can even send a chit across to the Hon. Chief Minister. I would like the Hon. Law Minister to give an assurance in this House that the cases that are now made out against the victims under the Defence of India Rules will be withdrawn because the situation has changed. It will give confidence to the people, to the Press and everyone to act in the manner that we would say that there is a free Press. I shall not go into the merits. I would also request the Hon. Minister not to go into the merits of the cases. Because if he goes into the merits, then I will not be having any opportunity to give my point of view. I am not at all saying whether it is right or wrong. I am not going into the merits. I would request the Hon. Minister for Law to give an assurance (1) that the Defence of India Rules will not be applied ruthlessly and (2) that the cases will be withdrawn.

The second important point that I would like to refer to is with regard to taxes. This is a supplementary budget and a huge amount is sought to be raised through this Appropriation Bill. Especially after the Rule 82 Statement that was given by the Government saying that they are going to levy fresh taxes and that it will be brought before the House probably in the month of January, I would like the Hon. Minister for Law to assure us on the floor of this House that whatever taxation measures extra taxation measures that they are going to bring in this House, that will be done with caution, with care and that will be done very carefully. I want that assurance that the taxation measures which are going to be brought in here will not be repeated or will not be continued after the emergency ceases to exist. In other words, whatever extra amount we required for making good the emergency, that extra amount alone should be collected by way of additional taxation. Under this pretext we are going to increase for instance the bus fare from 3 1/8 to 4 paise. Long distance transport cost is going to be increased. But

[Dr. H. V. Hande]

I want an assurance that those taxation measures will be stopped or withdrawn and the old rates will be restored after the emergency is over. That assurance I want.

Then, I would like to refer only to two small points. With regard to the Madras Archaives I had given a complaint to the Chief Secretary and to the Hon. Chief Minister. The Hon. Chief Minister was good enough to take necessary action on that and after that a special audit party has been appointed by the Government and it is now examining the whole thing. But I find that there is some delay during the last six months. The speed with which the whole thing was being rectified and the speed with which action was being taken by the Chief Secretary and the Hon. Chief Minister has been slowed down and there is some delay. I want to know what is the reason for the delay. Still things are not happy in that department. The same things are going on. Lot of corruption cases have been discovered. I have got the answers from the Hon. Chief Minister also. He told me on the floor of the House that action was being taken and certain malpractices had been discovered. Therefore, I request the Hon. Minister for Law if it is possible he can give me the details in his answer—to see to it that immediate, necessary action is taken against the particular Officer who is responsible for these things.

Finally, I understand a particular college—Government College of Arts and Crafts in Poonamallee High Road—persons working there have not yet got the benefits of the recommendations of the Second Pay Commission most of the people have already got it, but for the past fifteen months the Second Pay Commission's recommendations have not been implemented in respect of the staff members of this particular Government College. I request the Government to find out what is the mistake there, what is the delay and why there is delay and see to it that immediate disbursement of the pay, etc., as per the recommendations of the Second Pay Commission is done. Thank you, Sir.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது பலகருத்துக்கள் இங்கே பேசப்பட்டன. இதற்குச் சம்பந்தப்படாத தனிப்பட்ட நிகழ்ச்சிகளைப்பற்றி சொல்லிய கருத்துக்களை எல்லாம் அந்தந்தத் துறையினர் நிச்சயம் கவனித்து நடவடிக்கை எடுப்பார்கள் என்பதையும் நான் முன்கூட்டி இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே பேசிய சில மாண்புமிகு அங்கத்தினர்கள் துணை மானியக் கோரிக்கை என்று கொண்டுவருவதே தவறு என்கிற எண்ணம்படப் பேசினார்கள். அப்படிப்பட்ட எண்ணத்தில் பேசி இருக்கமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். துணை

[திரு. செ. மாதவன்]

மானியக் கோரிக்கை என்று வருவது புதிதல்ல. இது தமிழ்நாட்டில் மட்டும் அல்ல. எல்லா இடங்களிலும் துணை மானியக் கோரிக்கை கொண்டு வருவது உண்டு. நமது தமிழகத்திலும் இதற்கு முன்னாலேயே துணை மானியக்கோரிக்கை என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது நாம் 14 கோடி ரூபாய்க்குத் தான் கொண்டுவந்திருக்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன்னாடி பார்த்தாலும் 20 கோடி, 19 கோடி ஏன் 41 கோடி என்ற அளவில் முதல் துணைமானியக் கோரிக்கை கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே துணை மானியக் கோரிகை என்று கொண்டுவருவதே தவறு என்று சொல்லமாட்டார்கள் என கருதுகிறேன்.

துணைமானியக் கோரிக்கை என்று கொண்டுவருவானேன், முன்கூட்டியே இந்தச் செலவினங்களுக்கான தொகையைப் பெற்றிருக்கக்கூடாதா என்று கேட்டார்கள். ஒவ்வொன்றுக்கும் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் இதுபோன்ற இனங்கள் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தற்குப் பின்னால் வருகிற செலவினங்களுக்காகத்தான். கொள்கைப் பிரச்சினையில் முடிவு எடுக்கிறபோது சில செலவினங்கள் வரும் இந்த துணைமானியக் கோரிக்கையில்தான் கொண்டுவரும்படி இருக்கும். இந்த அரசைப் பொறுத்தவரையில் சட்டசபையின் அனுமதி இல்லாமல் எந்த ஒன்றையும் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே தங்கமணி அவர்கள் மத்திய அரசாங்கத்தில் நியமிக்கப்பட்டது போன்று இங்கே அமைக்கப்பட்டுள்ள அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம் கமிஷன் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் தருகின்ற அறிக்கையை எல்லாப் பகுதியினரையும் வைத்துக்கொண்டு கலந்து பரிசீலித்தே இந்த அரசு முடிவு எடுப்பார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கம் கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்து அவை சரியான முறையில் நடைபெறச் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். பெரும்பாலும் சரியாக நடக்கின்றன. அப்படி நடைபெறாமல் இருக்கிற சங்கங்களைப் பரிசீலித்து மாநில சங்கத்தோடு ஒன்றுபடுத்தி தொழில் கூட்டுறவு சங்கம் என்ற முறையில் அடிக்கடி அவை மூடப்படாமல் இருக்க—ஏதாவது ஒரு பரிகாரம் காண முடியுமா என்பதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சேலம் உருக்காலைப்பற்றி பேசப்பட்டது. அது பற்றியும் இரண்டு—கருத்து வரும், வரும் என்று சொல்கிறீர்களே, எப்போது வரும் என்று கேட்கப்பட்டது. மற்றொன்று—இதற்கு ஏன் இவ்வளவு அவசரம் அவசரமாக நில ஆர்ஜிதம் செய்யப் படுகிறது என்றும் கேட்டார்கள். இவை இரண்டும் ஒன்றுக்

[திரு. செ. மாதவன்]

கொன்று முரண் என்பதை நம்மால் உணர முடிகிறது. சேலம் உருக்காலை நிச்சயமாக வந்தே தீரும் என்பதை மத்திய அமைச்சர் அவர்களும் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். அதில் சந்தேகம் வேண்டாம். ஆனால் எந்த எந்த உருக்குப்பொருள்—பராடெக்ட் மிக்ஸ்—உற்பத்தி செய்யப்படும் என்பதுதான் இன்னும் முடிவாகவில்லை. அதுபற்றியும் முடிவு எடுக்கப்படும் என்பதாக பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள்

நில ஆர்ஜிதம் என்று எடுத்துக்கொண்டால் நாம் ஒன்றும் செய்யவில்லை. நாங்கள் ஆட்சிப்பொறுப்புக்கு வருவதற்கு முன்பே பல ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் நில ஆர்ஜித சட்டத்தின்கீழ் உருக்காலைக்காக நோட்டிபிகேஷன் செய்யப் பட்டிருக்கிறது. யாரோ புதிதாகச் செய்துவிட்டார்கள், யாரோ அவசரம் அவசரமாகச் செய்துவிட்டார்கள் என்று சொல்வது தவறாகும். பின்னால் விலை ஏறிவிடப்போகிறதே என்பதாக முன்கூட்டியே அன்றைக்கு இருந்த அரசாங்கம் அதுபோல் நில ஆர்ஜிதத்திற்கு நோட்டிபிகேஷன் செய்தது என்று நான் கருதுகிறேன். அந்த அரசாங்கத்திற்கு இவர்கள் என்ன சான்றிதழ் வழங்கப்போகிறார்கள் என்று எனக்குத் தெரியாது.

இப்போது வந்திருக்கிற பிரச்சினை எல்லாம் நம்முடைய மத்திய அரசு நம் மாநிலத்தில் எந்தெந்தப் பகுதியிலே உடனடியாக நிலம் தேவை என்பதைப்பற்றி கண்டறிய ஒரு குழுவாக வந்து பரிசீலித்தார்கள். நம்முடைய அதிகாரிகளும் ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் நிலம் தேவையென்று, ஆர்ஜிதம் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதில் எந்தவிதமான தவறும் ஏற்படவில்லை.

அடுத்தபடியாக, தமிழ் படிப்பவர்களைப் பற்றி இங்கே சொன்னதாக ஒரு பிரச்சினை சொல்லப்பட்டது. தஞ்சை மாவட்டத்தை இணைத்துப் பேசும்போது தமிழைப்பயிற்சி மொழியாக எடுப்பவர்களைப்பற்றியும் சில கருத்துக்கள் பேசினார்கள். தமிழ் பயிற்சிக்கு ஜூன் மாதம் என்று அறிவித்து அதற்கான பணத்தைக் கேட்டிருக்கிறோம். தமிழ்க் கல்லூரிகளையும் பற்றி இணைத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்குள்ள உரிமையை ஆட்சேபிக்கவில்லை. பேராசிரியர் அன்பழகன் அவர்கள் நல்ல தமிழ்ப் பேராசிரியர். அவர் பல்லாண்டுக் காலம் தமிழுக்காக உழைத்தவர். அப்படிப் பட்டவர்கள் தமிழ்க் கல்லூரி மாணவர்களைப்பற்றி இழிவாகப் பேசினார்கள், தமிழைப்பற்றி இழிவாகப் பேசினார்கள் என்பதை நான் நம்புவதற்குத் தயாராக இல்லை. நீங்கள் தனியாக அந்த அமைச்சரிடம் இதைப்பற்றிக் கேள்வி கேட்டிருந்தால் சொல்லியிருப்பார்கள். அமைச்சர் மீது தவறான கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தை யாரோ கிளப்பி விட்டிருக்கலாம். அரசாங்கத்திற்கும், அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களுக்கும் தமிழைப் பற்றியும், தமிழ் படிப்பவர்களைப் பற்றியும் பழிக்கின்ற காலம் எப்போதும் ஏற்படாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. செ. மாதவன்]

அடுத்தபடியாக, தியாகிகளைப் பற்றிச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் தியாகிகளுக்கு என்னென்ன செய்திருக்கிறது என்பது பற்றி அவர்கள் நன்றாக அறிவார்கள். அவர்கள் மனத்திற்குள்ளேயே பாராட்டுவார்கள். வெளியிலே வேண்டுமானால், அதை ஒரு பிரச்சினையாக வைத்துப் பேசுவார்கள். தியாகிகள் காங்கிரஸ் கட்சியா மற்ற கட்சியா என்று கருதாமல், அவர்கள் செய்தத் தியாகத்தை மதித்து, மிகுந்த அளவிற்கு தியாகிகளுக்குப் பல நன்மைகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவத் துறையைப் பற்றிச் சொன்னார்கள். எதிர்க்கட்சி என்ற முறையில் தாங்கள் சொல்லவேண்டியதை மிகைப்படுத்திச் சொன்னார்கள். இங்கே கேட்டிருப்பது, இருக்கின்ற மருத்துவ விடுதிகளை விரிவுபடுத்தும்போது அதற்குத் தேவையான ஸ்டாப், மற்ற வசதிகள் செய்து தருகிறோம். இன்னும் அதிகமான நடவடிக்கைகள் தேவை என்று கேட்டார்கள். நியாயமான கோரிக்கைகளை எந்த அளவிற்கு வசதியிருக்கிறதோ, அந்த அளவிற்கு அதைச் செய்து கொடுக்க இருக்கிறோம். இதற்காக இனி ஆஸ்பத்திரியே வேண்டாம், இருக்கின்ற ஆஸ்பத்திரியே போதும் என்றார்கள். அது மிகமிகப் பயங்கரமான வாதம். இங்கிருக்கும் வசதிகளை கிராமப்புறம் பூராவும் பரவலாக விஸ்தரிக்க வேண்டும். சென்னையிலே இருந்துகொண்டு, சென்னையில் இருக்கின்ற வசதிகளைப் பார்த்துவிட்டு இதுவே போதும் என்று சொல்வது சரியல்ல. சென்னையிலே இருக்கின்ற வசதிகள் அத்தனையும் கிராமப்புற மக்களுக்கும் கிடைக்கும்படியாக நாடு பூராவிலும் வசதி செய்து கொடுக்கும்படிச் செய்ய வேண்டுமென்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும். இதிலே எந்தவிதமான தயக்கமும் கிடையாது.

அடுத்தபடியாக, இப்போது அறிவித்த வரிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்த அறிக்கையிலே நல்ல வார்த்தைகளையெல்லாம் பொறுக்கியெடுத்து போட்டிருக்கிறார். தமிழ்நாடும், அரசும் தன்னுடைய திட்டத்தைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசு வற்புறுத்தி வருகிறது. வரிகளை நெருக்கடிகால அடிப்படையில் விதிக்கலாம். இந்தவிதமான நெருக்கடி நிலைமையை உத்தேசித்து நிதிநிலைமைகளை மாற்றியமைக்கலாம். இது முதலாவதாகும். அடுத்தபடியாக, மத்திய அரசாங்கம் சில வரிகளைப் போட்டு எங்களுக்குத் தாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டு காரணங்களாலேதான் நாங்கள் வரிப் பிரேரணைகளைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த வரிகளை அவசர நிலைமை தீர்ந்தவுடன் ரத்து செய்து விடுவோம் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது; எல்லா வரிகளையும் எப்போதும் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்பதற்காக அப்படியே நீடிப்போம் என்றும் நினைத்துக்கொள்ளக்கூடாது. இந்த வரிகளை மத்திய அரசு போடச் சொல்லி, சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். பின்னால் சட்டம்

[திரு. செ. மாதவன்]

திருத்தும்போது அவற்றை வைத்துக்கொள்ளலாமா, விட்டுவிடலாமா என்பதைப்பற்றி பரிசீலிக்கலாம். நம்முடைய அரசாங்கத்திற்குத் தேவையான அளவுக்கு இது நீடித்திருக்க வேண்டுமா அல்லது மத்திய அரசாங்கம் நமக்கு வேண்டிய அளவிற்கு நிதியைக் கொடுத்துவிட்டால் இதை ரத்து செய்துவிடலாமா என்பதைப் பின்னர் யோசிக்கலாம். எதை எதை எந்த மாதத்தில் நிறுத்திவிடுவோம், எதை எதை எந்த மாதத்தில் விட்டுவிடுவோம் என்று இப்போது சொல்ல முடியாது. அவசர காலத்திற்கு 70 கோடி ரூபாய் தேவை என்று மத்திய அரசு சொல்லியது. இப்போது போர் நிறுத்தம் ஏற்பட்டதால் மகிழ்ச்சியடையக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்போது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் மொத்தமாக ஒரு முடிவு எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, பாதுகாப்புச் சட்டம் பற்றிச் சொன்னார்கள். இதுதான் கடைசி வாய்ப்பு என்று விளக்கம் அளித்துச் சொன்னார்கள். பலமுறை வாதிக்கப்பட்டது. எங்களுடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பாதுகாப்புச் சட்டத்தை அரசியல் நோக்கங்களுக்காக மற்றக் கட்சிகளை அடக்க வேண்டுமென்பதற்காக உபயோகிக்கிறோம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்ல மாட்டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். இன்றைக்கு அவர் யார் பக்கம் இருந்தாலும் அன்றைக்கு எங்கள் பக்கம் இருந்தபோது இந்த பாதுகாப்புச் சட்டம் யார், யார் மீது பாய்ந்தது, எப்படி எப்படி அடக்கப்பட்டது என்பதை அவர்கள் மிக விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் காலத்தையும் எங்கள் காலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இது நன்கு விளங்கும். இதுபோன்ற ஒரு சட்டத்தைப் பயன்படுத்தித்தான் நாங்கள் வாழ வேண்டுமென்கிற துர்ப்பாக்கிய நிலைமை எங்களுக்கு ஏற்படவில்லை. மற்றக் கட்சிகளை இந்தச் சட்டத்தின் மூலமாக அடக்க வேண்டுமென்ற கருத்து எங்களுக்குக் கொஞ்சம்கூட இல்லை.

அவர்கள் இன்றைக்கு உள்ள ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். அதை ஆழ்ந்து சிந்திக்கலாம். பத்திரிகை ஆசிரியர்கள் மீது என் நடவடிக்கை எடுக்கப்பட்டது, பாதுகாப்புச் சட்டம் போடப்பட்டது என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த அதிகாரம் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழும் வருகிறது. நாங்கள் எடுத்த நடவடிக்கை தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் வரவில்லை. குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள் வாதாடுவதற்கு வாய்ப்பு கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. குற்றம் செய்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில்தான் நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். நாங்கள் வற்புறுத்தி அவர்களைச் சிறைசாலையில் போட வேண்டுமென்ற கருத்து இந்த அரசாங்கத்திற்குக் கிடையாது. அப்படி ஒரு கருத்து சொல்லப்பட்டது. அந்தக் கருத்து மறுக்கப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாநில அரசும் போர் முயற்சிகளை எதிர்த்துச் செயல்படுகிறது என்கிற எண்ணம் நாட்டு மக்களுக்கு ஏற்படக் கூடாது. யார் எழுதினாலும், எவ்வளவு பெரிய தலைவராக

[திரு. செ. மாதவன்]

இருந்தாலும் தவறு தவறுதான். சொல்லப்படுகிற கருத்து உண்மையாக இருந்தால்கூட, சரியாக இருந்தாலும்கூட, போர் முயற்சிக்கு அவசர கால நிலைமைக்கு மாறாக, எதிர்க்குச் சாதகமாக இருந்தால், அது குற்றம் என்று சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு கருத்துச் சொல்லப்படுமானால் அது தவறுதான். "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாநில அரசும் நாட்டுக்கு எதிராக இல்லை, போர் முயற்சிக்கு எதிராக இல்லை. அந்நியர்களுக்குச் சாதகமாக இல்லை என்று அவர்கள் சொன்னால் கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்காது" என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சந்தேகம் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I concede that in 1965 the present Minister for Co-operation and the Hon. Chief Minister were wrongfully confined and even now I do not change that opinion. I am not going into the merits of the matter. Now there is a better climate and under the changed circumstances, will it be possible for the Government to withdraw cases ? That is the only point on which I want to get a clarification from the Hon. Minister.

நண்பகல் 12·00

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் நான் விளக்கமாகக் கூறியிருக்கிறேன், எல்லாத் தலைவர்களும் அது தவறு என்று சொன்னார்கள். எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் அந்தக் கருத்து தவறான கருத்து என்றும் கண்டிக்கப்படவேண்டிய கருத்து என்றும் சொன்னார்கள். அதற்குப் பின்னால்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

போர் நின்ற சூழ்நிலையை ஒட்டி ஏதாவது மாறுதல் இருக்குமா என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். போர் நிறுத்த அறிவிப்பு வருவதற்கு முன்பே நீதிமன்றத்திலே இருந்து கேட்கப்பட்டபொழுது அரசுத் தரப்பிலேயிருந்து பெருந்தன்மையைக் காட்டியிருக்கிறோம். இந்த மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களோ, இந்த மாநில அரசோ போர் முயற்சிகளுக்கு எதிராக இருந்தது என்று கருதி நான் எழுதவில்லை, அந்தக் கருத்து பொதுமக்களிடத்தில் ஏற்பட்டிருக்குமானால் நான் வருந்துகிறேன் என்று அவர்கள் தெரிவிக்கவேண்டும். குறிப்பிட்ட இந்த வழக்கானாலும் சரி, வேறு எந்தப் பிரச்னையாக இருந்தாலும் சரி, அரசாங்கம் பழி வாங்கும் எண்ணத்தில் செயல்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சீஸ்-பையர் ஏற்படுவதற்கு முன்னாலேயும் அந்தக் கருத்துத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. பெருந்தன்மையான கருத்து அந்தக் கருத்து. சீஸ்-பையருக்குப் பின்னாலே சொல்ல வேண்டுமென்பதல்ல, முன்னாலேயே சொல்லப்பட்டிருக்கிறது. இதைவிட டாக்டர் ஹாண்டே அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. எனவே, எங்களைப் பொறுத்த

[திரு. செ. மாதவன்]

வரையில் மிகவும் பெருந்தன்மையோடு நடந்து கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இச்சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பெருந்தன்மையோடு நடந்து கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் வருந்துகிறேன் என்றும் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும். அன்டர்டேக்கிங் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு நோக்கத்திலே சொன்னார்கள். இவர்கள் ஒரு நோக்கத்திலே சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் பெயில் கொடுக்கும்பொழுது ஒரு அன்டர்டேக்கிங் கொடுத்தால்தான் பெயில் கொடுக்கப்படும் என்று சொல்வது பெருந்தன்மையல்ல, சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர் அன்பழகன் அவர்கள் அப்படி சொல்லவில்லை, நான் ஏதோ தவறாகச் சொன்னேன் என்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பத்திரிகையில் வந்த செய்தியை நான் சொன்னேன், பத்திரிகைகளில் வந்த செய்திகள் எல்லாம் ஒட்டுமொத்தமாகத் தவறு என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ? பத்திரிகையில் வந்த செய்திக்கு மறுப்புக் கொடுக்காமல் இருக்கும்பொழுது நாங்கள் அதைக்குறித்துப் பேசுவது தவறு என்று சொல்வது சரிதானா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஒரு இடத்திலேகூட அவர்கள் சொல்கிறார்கள் என்று சொல்லவில்லை. தமிழுக்கு எதிராக தமிழிலே படிப்பதற்காக எந்தக் காலத்திலேயும் சொல்லமாட்டார்கள் என்ற கருத்தைத்தான் சொன்னேன்.

அன்டர்டேக்கிங் பற்றிச் சொன்னார்கள். மன்னிப்பு என்ற முறையில் அல்ல. அதைக்கூட அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் நினைக்கிறேன். "இந்த மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களோ அல்லது இந்த அரசோ போர் முயற்சிகளுக்கு எதிராகச் செயல்படவில்லை, செயல்பட்டார்கள் என்று கருதி நான் எழுதவில்லை, அந்தக் கருத்து பொதுமக்களிடத்தில் ஏற்பட்டிருக்குமானால் அதற்கு நான் வருந்துகிறேன்" என்று இதைத்தான் கேட்டிருக்கிறோம். இது எப்படித் தவறு என்று வழக்கறிஞராக இருக்கிற உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள் என்று தெரியவில்லை. இப்படிக் கேட்பது தவறு என்றால் அவர்கள் எழுதிய கருத்து சரியானது என்று கருதுவார்களானால் கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்தை சந்தேகிக்கப்படவேண்டிய சூழ்நிலையில் நான் இருக்கிறேன். ஆனால் அவர்களுடைய கட்சித் தலைவரே திரு. பொன்னப்ப நாடார் அவர்களே தைரியமாக எழுதப்பட்ட கருத்து தவறு என்று சொன்னார்கள். ஆகவே அப்படி அவர்கள் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். கட்சித் தலைவரே சொல்லிவிட்டார்கள் எழுதியது தவறு என்று. மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று அல்ல, எழுதியதையெல்லாம் மறுக்க

வேண்டுமென்று கேட்கவில்லை, பொதுவான கருத்தைத்தான் கேட்டிருக்கிறோம். எனவே, இதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

MR. SPEAKER: The questions is—

'That the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 (Land Acquisition Bill No. 55 of 1971) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clause 2, was put and carried.

Clause 1, thq Schedule, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

'That the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 (L.A. Bill No. 55 of 1971) be passed'.

MR. SPEAKER: The questions is—

'That the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 (L.A. Bill No. 55 of 1971) be passed'.

The motion was put and carried and the Bill was passed into law.

(இ) 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

(சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1971).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு 47/1971) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

நமது மாநில வருவாயைப் பெருக்கும்பொருட்டு, அரசு அறிவிக்கும் நாளன்றும் அந்நாள் முதற்கொண்டும் பதிவுப் பத்திரங்கள் எல்லாவற்றின் மீதான முத்திரைத்தாள் தீர்வையில் கூடுதலாக 2½ சதவீதத்திற்குமேல் வரி விதிப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இச் சட்ட முன்வடிவின்கீழ் கூடுதலாக விதிக்கப்படும் மேல்வரி, பரிமாற்ற உண்டிகள், காசோலைகள், புரோநோட்டுகள், கப்பல் சரக்குப் பட்டியல்கள், கடன் உத்தரவாதப் பத்திரங்கள், ஈட்டுறுதிப் பத்திரங்கள், பங்கு மாற்றம், கடன் ஈட்டுப் பத்திரங்கள், பதிலாள் அதிகாரப் பத்திரங்கள் (Proxies) உடைமைகளைப் பெறுவதற்கான பத்திரங்கள் (receipts) ஆகியவற்றுக்குப் பொருந்ாது. இவற்றின்மீது முத்திரைத்தாள் தீர்வை விதிக்க நாடாளுமன்றத்திற்கே அதிகாரம் உண்டு. இது தொடர்பாக, 1971-ம் ஆண்டு முத்திரைத்தாள் ஆயத் தீர்வைகள் (திருத்த) அவ்சரச் சட்டத்தைக் குடியரசுத் தலைவர் சாற்றுரைத்துள்ளார் என்பதை

*13-12-71-ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

நான் ஈண்டு குறிப்பிடலாம். 1899-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் மேற்படி அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி சட்டத்தின் 3 பிரிவின், பரிமாற்ற உண்டிகள், புரோநோட்டுகள், கப்பல் சரக்குப் பட்டியல்கள், கடன் உத்தரவாத பத்திரங்கள், ஈட்டுறுதி பத்திரங்கள், பங்கு மாற்றம், கடன் ஈட்டுப் பத்திரங்கள், பதிலாள் அதிகாரப் பத்திரங்கள், உடைமைகளைப் பெறுவதற்கான பத்திரங்கள் ஆகியவற்றின்மீது கூடுதலாக முத்திரைத்தாள் தீர்வை விதிக்க வகை செய்கிறது. எனவே, கூடுதலாகமேல்வரி விதிக்க வகை செய்யும் இப் புதிய பிரிவை இந்திய முத்திரைத்தாள் சட்டத்தில் 3 A.A. பிரிவாகச் சேர்த்துக்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவை இப்பேரவை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், அவசர நிலைமை ஏற்பட்டவுடனே சில புதிய வரிகள் போடப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் இங்கு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அப்பொழுதே இம்மாதிரியான வரிகள் அவசியந்தானு என்று சில உறுப்பினர்கள் ஆட்சேபணை எழுப்பினோம். இந்தக் குறிப்பிட்ட வரிகள் மூலமாக கிடைப்பதாக இருக்கிற பணம் 2 கோடிதான். அப்படி இருக்கும்பொழுது சாதாரணமானவர்களைப் பாதிக்கக்கூடிய வரிகள் விதிக்கக்கூடாது என்பதுதான் முக்கியம். அரசாங்கம் இந்தவிதமாக வரிகளை விதிக்கும்பொழுது சட்ட மன்றத்திலே நிறைவேற்றப்பட்டபிறகுதான் அது முடியும் என்பதை நான் அறிவேன். இந்தச் சட்டம்பற்றி நான் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட விஷயம்

'There shall be levied on the stamp duty chargeable under this Act as modified by the Tamil Nadu Stamp (Increase of Duties) Act, 1962 in respect of every registered instrument (other than bills of exchange, cheques, promissory notes, bills of lading, letters of credit, policies of insurance, an additional surcharge at the 'transfer of shares, debentures, proxies and receipts rate of two and a half per cent of such stamp duty.'

இது முக்கியமான பகுதியாக இருக்கிறது. பிராக்கட்டுக்குள் உள்ளவர்கள் பேரிலே வரி விதிக்கப்படுவதற்கு அதிகாரம் மத்திய அரசிடத்திலேதான் இருக்கிறது. அதில் அல்லாதவர்கள் நிலைமை வரும்பொழுது வரி விதிப்பதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. பத்தாயிரம் ரூபாய் வரையிலும் உள்ளதற்கு வரிவிலக்கு அளிக்கலாம் என்பது நான் கொடுத்திருக்கிற தீர்மானமாகும். அந்தத் தீர்மானத்தில் இருப்பதை முதல் வாசகத்திலேயே குறிப்பிடலாமென்று நினைக்கிறேன். அதாவது

[திரு. கே. டி. கே. தங்கமணி]

'every registered instrument for the value exceeding Rs. 10,000.' 'There shall be levied on the stamp duty chargeable under this Act as modified by the Tamil Nadu Stamp (Increase of Duties) Act, 1962 . . . . in respect of every registered instrument (other than bills of exchange. . .)'

என்ற முறையையாவது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமானால் சாதாரணமாக உள்ள சிறு சிறு வியாபாரிகள், தொழிலதிபர்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு இல்லாமல் இருக்கும். ஆகவே இந்த சர்சார்ஜைப் போடுவது சரியல்ல என்று நான் சொல்ல மாட்டேன்—சர்சார்ஜை இந்த அளவுக்குக் கட்டுப்படுத்தி விட்டால் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த இந்திய முத்திரைத்தாள் திருத்த சட்ட மசோதா, வருவாய்த்துறை அமைச்சரவர்களால் இங்கே கொண்டு வரப்பட்டிருப்பதை நான் இன்றைய நேரத்திலே கொள்கை பூர்வமாக ஆதரிக்கிறேன். பொதுவாக, நெருக்கடி நிலைமை ஏற்படும்பொழுது நாட்டிலே வளர்ச்சித் திட்டங்கள் தீட்டப்படும்பொழுது அரசாங்கத்திற்குப் பணம் தேவைப்படுகிறது. அப்படிப் பணம் தேவைப்படும்பொழுது ஏழை மக்களைப் பாதிக்காத வகையிலே எந்தெந்த வாயிலாக அரசு பணம் பெறமுடியுமென்று எண்ணும்பொழுது இந்த முத்திரைத் தாள் போன்ற துறைகளெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வருவது இயற்கைதான்.

அரசாங்கம் பெறுகின்ற கூடுதலான வருவாயை ஏழை மக்களிடமிருந்து அதிகமாகப் பெறாமல், அந்த வருவாய், அதனுடைய தன்மைகள் ஏழைமக்களை அதிகமாகப் பாதிக்காமல் இருக்கும் வகையில் சில துறைகளை அதிகமாக வருவாய்க்கு இலக்காக்குவது நியாயம் என்றுதான் நான் கருதுகிறேன். அந்த வகையிலே இந்த முத்திரைத்தாள் மீது எல்லா விதமான, இங்கே குறிப்பிடப்பட்ட அந்த சில அம்சங்களைத் தவிர மற்ற எல்லாவிதமான-ரெஜிஸ்டர்ட் டாகுமெண்ட்ஸ், ரெஜிஸ்ட்ரேஷன்களுக்கெல்லாம் 2½ சதவிகிதம் சர்சார்ஜ் என்று இந்த மசோதா வகை செய்கிறது. இப்படி எல்லாவிதமான டாகுமெண்டுகள் என்று சொல்லப்பட்டால் சாதாரணமாக இப்பொழுது விற்பனை முத்திரைத்தாள், சேல் டீட்களுக்கெல்லாம் 9-½ சதவீதம் இப்பொழுது நாம் அதற்கான கட்டணம் வசூல் செய்கிறோம். இப்பொழுது மேற்கொண்டு 2-½ சதவீதம் என்றால் அது 12 சதவீதமாக ஏற்பட்டு விடுகிறது. சாதாரணமாக சேல் டீட்களுக்கு அப்படிச் செய்தால் அதனுடைய விளைவுகள், எஃபெக்ட்ஸ் எல்லாம் சம்பந்தப்பட்டவர்கள்மீது அதிகமாக இருக்காது என்று சொல்லி ஒரு வகையிலே அது நியாயமாக இருக்கலாம். ஆனால் 'கிஃப்ட் டீட்', 'செட்டில்மெண்ட் டீட்' என்று இருக்கின்றன. சாதாரணமாக செட்டில்மெண்ட் ஒரு ஏழைகூட செய்யலாம். ஒரு ஏழைக்கு ஒரு வீடுதான் இருக்கலாம். அந்த வீட்டை ஏதோ ஒரு காரணத்திற்காக தன்னுடைய வாரிசு

[திரு. எம். ஏ. லத்தீப்]

களுக்கோ அல்லது பிடித்தமானவர்களுக்கோ அவர்கள் செட்டில்மெண்ட் செய்யலாம். அப்படிச் செய்யும்பொழுது அவர் பணக்காரராக இருக்கிறார் என்று கருதுவது சரியல்ல. ஏனென்றால் செட்டில்மெண்ட் டீட் செய்யும்பொழுது அதிகமாக ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலையை நான் வக்கீல் என்ற முறையிலே அறிந்திருக்கிறேன் என்ற காரணத்தால் அதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எத்தனையோ ஏழைகள், கிராமப்புறங்களில் பார்க்கலாம், கிராமப்புறங்களில் அதிகமாக விவசாயிகள் இருக்கிறார்கள், அவர்களுடைய நிலங்களைக் கடைசிக் காலத்திலோ அல்லது முந்தியோ ஏதோ பல காரணங்களுக்காக தானப்பத்திரம் செய்து வீடுகளைக் கொடுக்க எண்ணுகிறார்கள். அப்படி உழுகின்ற கொஞ்சம் நிலம் இருக்கும் விவசாயிகூட அப்படிக் கொடுக்க நினைக்கும்பொழுது அவர் பணக்காரன் அல்ல, ஏழை. தானம் யார் கொடுக்கிறானோ அவனே பணத்தைச் செலவு செய்து தானப்பத்திரம் எழுத வேண்டியதாயிருக்கிறது. இப்படி அதிகமாக கிராமப்புறங்களில் பார்க்கிறோம்.

மற்றும் சாதாரணமாக நகர்ப்புறங்களிலே வீட்டு மனைகள் என்று இப்படிக் கொடுக்கும்பொழுது இந்த ஒரு தன்மையைப் பார்க்கிறோம். ஆகையால் எல்லா டாகுமெண்ட்ஸ் என்று சொல்லப்படுகிற நிலையில், என்று குறிப்பிட்டிருப்பதாலே மற்ற 'டாகுமெண்ட்' எங்கெங்கே கன்வேயன்சஸ் நாம் செய்கிறோமோ, அங்கேயெல்லாம் இது விதிக்கப்படுகிறது என்ற முறையை மாற்றி, சேல் டீட் இருக்கலாம், மற்ற 'கிஃப்ட் டீட்' போன்றவைகளுக்கு விதிவிலக்கு தந்தால் இன்றைய சூழ்நிலையில் நன்றாகயிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதேநேரத்தில், சிறு தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்காக சிலர் மூலதனத்திற்காக தம்மிடத்திலே உள்ள ஒருசில சொத்துக்களை 'ஹைபாதிகேஷன்' செய்து சில பேங்குகளிலோ அல்லது ரெஜிஸ்டர்ட் மார்ட்கேஜ் போன்ற ஒருமுறையிலோ அவர்கள் "ஹைபாதிகேஷன்" செய்து தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கான பணத்தை அவர்கள் பெற வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகிறது. இந்த டாகுமெண்ட் ரிஜிஸ்தர் செய்து, மார்ட்கேஜ் செய்த பிறகுதான் பணம் கிடைக்கும். அப்படிப் பணம் பெற்று தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும். அந்த வகையிலேகூட சில தொழிற்சாலைகள் ஏற்படுத்தக்கூடிய "ஸ்மால் என்டர்பிரனர்ஸ்" என்று சொல்லப்படுபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விஷயத்திலே சில சலுகைகளைக் காட்டுவது, சர்சார்ஜ் இல்லாமல் இருக்க வேண்டுமென்ற ஒரு விதிவிலக்கை அளித்தால் நன்றாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தை மாண்புமிகு அமைச்சரவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக சிலவிதங்களிலே "ரூல் ஆஃப் பெர்ப்பெச்சுவட்டி"யிலே சர்சார்ஜ் இருக்கக்கூடாது.

It should change hands

[திரு. எம். ஏ. லத்தீப்]

அதுதான் வளர்ந்துவரும் ஒரு பொருளாதாரத்திலே, 'டெவலப்பிங் எகானமி'யிலே ஒரேயிடத்திலே பெர்ப்பெச்சுவட்டி இருக்கக் கூடாது. அங்கேயே நிலைத்திருக்கக்கூடிய தன்மை இருக்கக்கூடாது, மாற வேண்டும். சொத்துக்களெல்லாம் மாற வேண்டும். அப்படி வந்தால்தான் வளர்ந்துவரும் பொருளாதாரத்திற்கு ஆக்கமும், ஊக்கமும், வேகமும் ஏற்படும் என்ற ஒரு தத்துவத்தை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே பார்த்தால் மதிப்பிற்குரிய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் இன்றையதினம் அவையிலே கொண்டுவந்திருக்கும் இந்தத் திருத்த மசோதா உண்மையிலேயே இத்தகைய ஒரு நிலையை மாற்றி நம்முடைய பொருளாதாரத்திற்கு 'டயனமிஸம்', ஒரு ஊக்கத்தை, ஒரு வேகத்தைக் கொடுக்கும் என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

அதேநேரத்தில் நான் எடுத்துச் சொன்ன இந்தக் கருத்துக் களின்படி செய்தால் சிறுதொழில்களுக்கான வாய்ப்புகள் ஏற்பட, "ஸ்மால் எண்டர்பிரனர்ஸ்" இவர்களுக்கெல்லாம் தொழிற்சாலைகள் அமைக்க வழிவகை ஏற்படும். ஏழைகள் பலகாரணங்களுக்காகத் தங்களுடைய சார்புடைமைகளை மாற்றும்பொழுது அவர் களுக்குச் சலுகைகளை அளிக்கும்வகையிலே இந்தச் சட்டத்தில் எல்லா டாகுமெண்ட், "எவ்வெரி ரெஜிஸ்டர்ட் இன்ஸ்ட்ருமெண்ட்" என்று இருப்பதை மாற்றி ஒரு சிலருக்குச் சலுகைகளைக் காட்டி, அந்த வகையிலே மாற்றியமைத்தால் பயனுள்ளதாக இருக்கும், பொருளாதாரம் வேகம் அடைய நல்லதொரு வழிவகை செய்யும் என்ற கருத்தைக்கூறி மற்ற வகையிலே இந்தக் கருத்துக்களுக்கு உட்பட்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்த மசோதாவின்மீது கருத்து தெரிவித்த திரு. தங்கமணி அவர்கள் பத்தாயிரம் ரூபாய்க்குமேல் ஸ்டாம்ப் விற்பனையாகும் பத்திரங் களுக்கு மட்டும் இந்த சர்சார்ஜை வசூலிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இதிலே மொத்த வருமானமே நாங்கள் எதிர்பார்ப்பது 25 இலட்சம் ரூபாய் தான். இந்திய அரசாங்கம் கொடுத்திருக்கின்ற சில பட்டியல்களிலே இதுவும் இருப்பதாலே இந்த வரியைப் போட்டோம். வர வேண்டியது முழுதும் வராமல்போய், வசூலிப்பதிலே சிக்கல்கூட இருக்கும்.

இன்னொரு கருத்தை திரு. லத்தீப் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். 9½ சதவிகிதம் ஏற்கனவே இருக்கிறது, மேற்கொண்டு 2½ சதவிகிதம் என்று போட்டால் 12 சதவிகிதம் ஆகிவிடும் என்று சொன்னார்கள். இது சரியான கருத்து அல்ல. நாம் போட்டிருப்பது சர்சார்ஜ். ஸ்டாம்ப் டியூட்டியை உயர்த்த வில்லை. 9½ சதவிகிதம் தான் இருக்கிறது. சர்சார்ஜ், மொத்தமாக

[திரு. ப. உ. சண்முகம்]

ஒரு பத்திரத்தைப் பதிவு செய்யும்பொழுது 100 ரூபாய்க்கு ஸ்டாம்புகள் வாங்கும்பொழுது அதற்கு 2½ சதவிகிதம் என்று வாங்குவதுதானே தவிர, 9½ சதவிகிதத்தை 12 சதவிகிதமாக ஆக்குவது அல்ல. எனவே அந்தக் கருத்து சரியல்ல. இதனால் ஏழைகள் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். ஏனென்றால் சர்சார்ஜ் ரொம்பக் குறைவாகத்தான் வரும், அதைக் கட்டுவதற்கு யாரும் சிரமப்பட மாட்டார்கள். எனவே இருக்கும் நெருக்கடி நிலையில் அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : The question is—

"That the Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 47 of 1971), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : Now we shall take up the Bill, clause by clause.

Clause 2.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : The question is—

"That Clause 2 do stand part of the Bill '.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :—

"In the proposed new section 3-AA in Central Act II of 1899, after the words, "every registered instrument", add the words "for the value exceeding Rs. 10,000".

The amendment was duly seconded.

The amendment of Thiru K. T. K. Thangamani was put to vote and lost.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula, and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move—

"That the Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 47 of 1971), be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

[1971 டிசம்பர் 18

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தய-கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1971).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு பந்தய கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48[1971) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று இப்பேரவையை வேண்டுகிறேன்.

இம்மாநிலத்தின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படுவதற்குரிய குதிரைப் பந்தய வரியின்மீது, ஐந்து சதவீதம் மேல்வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இச்சட்ட முன்வடிவில் 2-வது பகுதியால் மேற்சொன்ன குதிரைப் பந்தய வரிச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ள புதிய 5-A பிரிவு இதற்கு வகை செய்கிறது.

திரைப்படக் காட்சிகளின் நேர்வில், நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய்க்கு மேற்படாதபொழுது (கேளிக்கை வரித்தொகையுட்பட) ஒவ்வொரு நுழைவுக் கட்டணத்தின்மீதும் கூடுதல் மேல் வரியாக ஐந்து காசும், நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய்க்கு மேற்படுகின்ற பொழுது, ஒவ்வொரு நுழைவுக் கட்டணத்தின் மீதும் கூடுதல் மேல் வரியாகப் பத்து காசும், குதிரைப் பந்தயங்களின் நேர்வில், நுழைவுக் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படாதபொழுது (கேளிக்கை வரித் தொகை உட்பட) ஒவ்வொரு நுழைவுக் கட்டணத்தின் மீதும் கூடுதல் மேல்வரியாக ஐம்பது காசும், நுழைவுக் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படுகின்றபொழுது ஒவ்வொரு நுழைவுக் கட்டணத்தின் மீதும் கூடுதல் மேல்வரியாக ஒரு ரூபாயும் விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சட்டமுன் வடிவின் 3-வது பகுதியால் தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ள புதிய 4-B பிரிவு இதற்கு வகை செய்கிறது.

மேற்சொன்ன வரி விதிப்புகள் 1—1—1972 முதற்கொண்டு செயலுக்கு வரும்.

பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை இச்சட்ட முன்வடிவை ஏற்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Chairman, Sir, I find that instead of taxing the taxable rich, we are drifting to the position of taxing the poorer sections of society so far as the race club is concerned. 90 per cent of the race club's collection is from the middle class and poor class who go to the races.

* 13-12-1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1971 டிசம்பர் 18]

[Thiru K. M. Subramaniam]

If taxes are raised on the race club I have no objection. I will support it. But it is now a surcharge and it will be passed on to the entrants, the poor people.

Race club is charging 20 per cent of the total income or more for their own existence and more than Rs. 1,36,00,000 has been earned as profit last year. The club is making a huge profit under an Act under which they are permitted to do under a licence and collecting money from the people.

What I suggest to Government and the Hon. Minister for Revenue is that instead of making a surcharge, why not ask the race club to pay 5 per cent more. They should pay that from their pocket. I say this because by such a method, entrance fee will not be affected. Now it is the other way about and the poor people who enter the race course will be affected by having to pay more.

Instead of abolishing the races, the Government are doing things which will help the club to pass on the surcharge on the entrants. What I say is why not charge 15 per cent on the stake money, Rs. 30,000, Rs. 20,000, etc. Such huge amounts are paid as stake money. Why not put a charge of 15 per cent on that ? The rich owners of horses may not grudge it. Besides, there is subsidy on food for the horses. We are not able to pay subsidy on food for our poor people but horses are given food on subsidy basis. Rs. 3 to 4 lakhs account for this. Where does the money come from ? From the payment of poor people who go to races. The incidence of this surcharge will fall not on the stewards but it will be passed on to the poor people who go to races. That is why I am not in favour of surcharge. But Government think of this surcharge since it is a sure way of collecting money.

Similarly there is the surcharge on entertainment tax. It will reflect on the poor people who go to cinemas. Here is a race club, which derives its income, from the people who come to the races. That is why I say, let the race club be nationalised and let the Government get all the money. But what do we find instead? We are not touching the rich people who are making a lot of money. That is why I have suggested modifications. I cannot bring the same as amendments since this is a Money Bill. I am suggesting this only to show how this measure will be at the expense of the poor people, even though you may get more revenue.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மாதிரி புதிதாக வரி போடுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதா இது. இந்த மசோதாவிலே இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று சினிமாவுக்குப் போகக் கூடியவர்களுக்கு, இன்னொன்று ரேஸ் பார்க்கப் போகக் கூடியவர்களுக்கு.

[திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்றைக்கு சினிமாவுக்குப் போகக்கூடிய மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. சினிமாவுக்குப் போகக் கூடியவர்களுக்கு ஏற்கனவே போடப்பட்ட வரி கொஞ்சம் ஜாஸ்தி. இரண்டு, மூன்று ரூபாய் கொடுத்து பார்க்கக்கூடியவர்களுக்கு அதிக வரி போட்டால் கூடப் பரவாயில்லை. அதிகமாக சினிமா பார்க்கக்கூடியவர்கள் கொடுக்கக் கூடிய கட்டணம் ஒரு ரூபாய், ஒரு ரூபாய்க்குக் குறைவாகத்தான் இருக்கும். அவர்களுக்கு ஏற்கனவே இருக்கக்கூடிய வரிக்கு மேல் போடக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. ஒரு ரூபாய்க்குக் கீழ் கட்டணம் கொடுப்பவர்களுக்குக் கூட ஐந்து பைசா போடப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது எந்த விதத்திலும் நியாயமாகப் படவில்லை. இந்த ஐந்து பைசா வரி போடுவதை நீக்கி விட வேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிறபகல் 12-30 **திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த பந்தயக் கேளிக்கை வரியை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

குதிரைப் பந்தயத்தைப் பொறுத்த வரையில் விதித்திருக்கிற வரி விகிதங்கள் மூலம் நமக்கு ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய்தான் கிடைக்கும். இன்னும் நமக்கு அதிகப்படியான வருமானம் இந்த குதிரைப் பந்தயத்தின்மீது வரி விதிப்பதால் கிடைக்கும். அதற்கான வழிவகைகள் இருக்கின்றன. அதில் ஒன்றிரண்டை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நுழைவுக் கட்டணம் என்பது ரூ. 1.50 விதித்திருக்கிறார்கள். அதேநேரத்தில் ரேஸ் கிளப்பிலிருந்து ஃப்ரீ பாஸஸ் கொடுக்கிறார்கள். 4,000 ப்ரீ பாஸஸ் கொடுக்கிறார்கள். இதன் பேரில் தலைக்கு இரண்டு ரூபாய் என்று கட்டணம் வைத்தால்—40-ல் பத்து ஆகிவிட்டது, இன்னும் 30 ரேஸ் பாக்கியிருக்கிறது, 1-ம் தேதிக்கு மேல் இருக்கிறது—அதன் மூலம் நமக்கு ஏறக்குறைய 2 லட்சம் ரூபாய் வருமானம் வரும். இரண்டு ரூபாய் கொடுக்க முடியாதவர்கள் அல்ல அவர்கள். அவர்கள், ப்ரீ பாஸஸ் பெறுகிறவர்கள் பெரிய பணக்காரர்கள், வசதிபடைத்தவர்கள். ஆகவே, இந்த இரண்டு ரூபாய் வரி விதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குதிரைச் சொந்தக்காரர்களுக்கும் குதிரைகளுக்கும் பரிசுகள் கொடுக்கப்படுகின்றன. போன ஆண்டு கணக்குப்படி இந்தப் பரிசுகள் மட்டுமே 46 லட்சம் ரூபாய்க்குக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் குதிரைக்கு தீனி வாங்கிப் போடுவதற்கு மானியம் கொடுத்து வருகிறார்கள். சென்ற ஆண்டு கணக்குப்படி 12 லட்சம் ரூபாய் அதற்காகக் கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய 60 லட்சம் ரூபாய் குதிரைச் சொந்தக்காரர்களுக்கும், பணக்கார

[திரு. ஏ. எம். இராஜா]

குதிரைகளுக்கும் செலவிடப்படுகிறது பொது மக்கள் பணத்திலிருந்து. இந்த 60 லட்சம் ரூபாய்க்கு 10 சதவிகிதம் வரி போட்டால் நமக்கு ஆறு லட்சம் ரூபாய் கிடைக்கும். அவர்கள் வசதி படைத்தவர்கள், அவர்களால் தாங்கிக் கொள்ளமுடியும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக இந்த 10 சதவிகிதம் வரி வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு அவர்களது மொத்த வருமானத்தை எடுத்துப் பார்த்தால் 13 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வந்திருக்கிறது. இந்த 13 கோடி ரூபாயில் அரசாங்கத்திற்கும், ரேஸ் க்ளப்பிற்கும் போக வெற்றி பெற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை சுமார் 9 கோடி ரூபாயாகும். வெற்றி பெற்றவர்கள் மீது வரி போடுங்கள். அவர்களிடம் (5%) சதவிகிதம் வரி போடுங்கள். வெற்றி பெற்றவர்கள் அதைக் கொடுக்கமாட்டேன் என்று யாரும் சொல்லமாட்டார்கள். அவர்கள் அதற்கு வருத்தப்பட மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் எதிர்பாராமல் கிடைத்தது அல்லவா ? ஆகவே அப் பணத்தின் மேல் 5 சதவிகிதம் வரி விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெற்றி பெற்றவர்கள் மீது வரி விதிப்பது என்பது முன்பு பழக்கத்தில் இருந்தது. நடுவில்தான் அதை எடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : வெற்றிபெற்றவர்களெல்லாம் எவ்வளவோ லூஸ் செய்த பிறகுதான் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : ஒன்பது கோடி ரூபாய் அளவிற்கு வெற்றி பெற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பேரில் 5 சதவிகிதம் வரி போட்டால் 45 லட்சத்திற்கு மேலாக நமக்கு சுலபமாகக் கிடைக்கும். மொத்தம் 50 லட்சம் வரையில் வரி கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : புதிதாக விதிக்க இருக்கிற கேளிக்கை வரிச் சட்டத்தின்மீது உறுப்பினர்கள் கருத்துக்களையெல்லாம் தெரிவித்தார்கள். திரு. தங்கமணி அவர்கள் ஒரு ரூபாய்க்கு கீழே உள்ள சினிமா டிக்கெட்டுகளில் கேளிக்கை வரி ஐந்து காசு போட வேண்டாமென்று சொன்னார்கள். ஐந்து காசு போடுவதினால் பெரிய பாதகம் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. வேறு வழியில்லை. இதன் மூலம் வருவாயைப் பெருக்கித்தான் தீரவேண்டும் என்பதால் அதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எம். எஸ். அவர்களும், திரு. ராஜா அவர்களும் நல்ல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த வரவு-செலவுத் திட்டத்தின்போது அவைபற்றிக் கவனிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்]

திரு. ராஜா அவர்கள் பாஸ்களின் மீது ஏன் வரி போடவில்லை போடுவதுதானே என்று கேட்டார்கள். பந்தயப் பணத்தின்மீதும் வரி போடலாம் என்று யோசனை சொன்னார்கள். பக்கத்திலுள்ள கே. எம். எஸ். அவர்கள் ஏராளமான பணத்தை விட்டுவிட்டுத்தான் அதைப் பெறுகிறார்கள், இதற்குள் அதற்கு வரி போடுவதா என்று கேட்டார்கள். நிறைய விட்டிருப்பார்கள் போல் இருக்கிறது. வருத்தப்படுகிறேன். அடுத்த மார்ச்சுக்குள் அந்த வரி வருவது பற்றி யோசிக்கலாம். அதற்குள் உறுப்பினர் அவர்கள் வெற்றிபெற வேண்டுமென்று வாழ்த்து கூறுகிறேன்.

ராஜா அவர்கள் வேறு நல்லபல யோசனைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் வரவு-செலவுத் திட்டத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எம். எஸ். அவர்கள் நுழைவுக் கட்டணத்தின்மீது போடுகிறீர்களே, ஏன் லாபத்தின் மீது போடவில்லை என்று கேட்டார்கள். கத்தரிக்காய் விற்பவர்கள் ரேஸ் கோர்ஸ்க்கு போகிறார்கள் என்று சொன்னார்கள். ஆச்சரியமாக இருக்கிறது. அப்படி ஒரு காலம் வந்திருக்கிறது என்றால் நாடு சுபிட்ச நிலைக்கு வந்திருக்கிறது—எப்போதும் அப்படி போவதுண்டு என்று அம்மையார் அவர்கள் சொல்கிறார்கள். எனக்கு அங்கே போய் பழக்கம் இல்லை. என் வாழ்நாளிலேயே ஒரே ஒரு முறைதான் உள்ளே போயிருக்கிறேன். சென்ற ஆண்டு பரிசுக் கோப்பை வழங்குவதற்காக அழைத்திருந்தார்கள், சென்றிருந்தேன். அடுத்த ஆண்டு, 26-ம் தேதி பரிசு கொடுக்க அழைத்திருக்கிறார்கள். செல்ல இருக்கிறேன். பரிசு அளிக்க செல்வேனே தவிர வேறு வகையில் சென்று வழக்கம் இல்லை. ஆகவே அதைப் பற்றி பேசிப் பேசி அந்தப் பழக்கத்தை உண்டாக்கி விடவேண்டாம் என்று கேட்டுக் கொண்டு இம் மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வெஜிட்டபிள் வெண்டார்ஸ் எல்லாம் சாதாரணமாகப் போகிறார்கள். கேட்பதைச் சொல்கிறேன். நான் அந்தப்பக்கமே போனதில்லை. அப்படிப் போவது வளமையினால் அல்ல, வறுமையினால்தான். பரிசு விழுமா விழுமா என்ற ஏக்கத்தால் போகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரேஸுக்குப் போவது பாவம் இல்லை. லட்சக்கணக்கான பேர்கள் போகிறார்கள். சட்டப்படி அனுமதித்த இடத்திற்கு யார் வேண்டுமானாலும் போகலாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி—

" தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தய-கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2 was put and carried.

Clause 3.

MR. DEPUTY SPEAKER : The question is :

" That Clause 3 do stand part of the Bill ".

THIRU K. T. K. THANGAMANI : Mr. Deputy Speaker, Sir, I move the amendment standing in my name, namely :—

" In the proposed new Section 4-B in Tamil Nadu Act X of 1939 sub-clause 1 (*a*), namely, ' five paise, where such payment does not exceed one rupee; and ' shall be deleted."

The amendment was duly seconded.

THIRU K. T. K. THANGAMANI : I request that this may be put to vote.

The amendment of Thiru K. T. K. Thangamani was put and lost.

Clause 3 was put and carried.

Clause 1, the Enacting formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move :

" That the Tamil Nadu Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 48 of 1971) be passed. "

The motion was put and carried and the Bill was passed into law.

7. அரசினர் தனித்தீர்மானங்கள்.

(அ) தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர நிலவரி சட்டத்தின் கீழ் வெளியிடப்பட வேண்டிய வரைவு அறிவிப்பு குறித்து.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir. I move :

" That the following draft notification to be issued under Clause (*b*) of sub-section (2) of section 1 of the Tamil Nadu Urban Land Tax, Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966), be approved as required by sub-section (4) of the said section.

Draft Notification

Under clause (*b*) of sub-section (2) of section 1 of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966), the Governor of Tamil Nadu hereby directs that the said Act shall come into force on the date of the publication of this Notification in the *Tamil Nadu Government Gazette* in the City of Madurai."

The motion was put and carried and the resolution was passed.

(ஆ) தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் சில விவர அட்டவணைகளைத் திருத்தும் வகையில் வெளியிடப்படவேண்டிய வரைவு விதி குறித்து.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

“ தமிழ்நாடு 1931-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) II, III -வது விவர அட்டவணைகளைத் திருத்தும் வகையில், மேற்படி சட்டத்தின் 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் மாநில அரசால் வெளியிடப்படவேண்டிய கீழ்க்காணும் வரைவு விதி, மேற்படி பிரிவின் (3) உட்பிரிவில் வேண்டியுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாக.

வரைவு விதி

தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 17-வது பிரிவு (1) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக்கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்படி சட்டத்தின் II, III விவர அட்டவணைகளுக்குக் கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்கிறார்.

திருத்தங்கள்.

(1) மேற்படி II-வது விவர அட்டவணையில் 1-வது இனத்தைச் சேர்ந்த (a) முதல் (c) வரையுள்ள பகுதிகளிலுள்ள கீழ்க்கண்ட பதிவுகளுக்குப் பதிலாக.

		ரூ.காசு.	ரூ.காசு.
(a)	3½ பரித்திறனுக்குக் குறைந்த திறனுள்ள சைக்கிள்கள், தொடர் வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன் படுத்தாவிட்டால். ..	9·00	12·00
(b)	3½ பரித்திறனுக்குக் குறைந்த திறனுள்ள சைக்கிள்கள், தொடர் வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன் படுத்தினாலும் மேற்படி 3½ பரித்திறனுக்கும் அதிகமான திறனுள்ள சைக்கிள்களைத் தொடர்வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன்படுத்தினாலும், பயன்படுத்தாவிட்டாலும். ..	12·00	15·00
(c)	மூன்று சக்கர சைக்கிள்கள் ..	12·00	15·00

[திரு. ச. இராமசந்திரன்]

கீழ்க் கண்ட பதிவுகளை அமைத்துக்கொள்ள வேண்டும், அவையாவன:—

		ரூ. காசு.	ரூ. காசு.
(a)	3½ பரித்திறனுக்கு குறைந்த திறனுள்ள சைக்கிள்கள், தொடர்வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன் படுத்தாவிட்டால் ..	9·90	13·20
(b)	3½ பரித்திறனுக்குக் குறைந்த பரித்திறனுள்ள சைக்கிள்கள் தொடர் வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன்படுத்தினாலும், மேற்படி 3½ பரித்திறனுக்கும் அதிகமான திறனுள்ள சைக்கிள்கள், தொடர்வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன்படுத்தினாலும் பயன் படுத்தாவிட்டாலும். ..	13·20	16·50
(c)	மூன்று சக்கர சைக்கிள்கள். ..	13·20	16·50

(2) 7-வது இனத்தில் (a) முதல் (e) வரையிலான பகுதிகளிலுள்ள கீழ்க் கண்ட பதிவுக்குப் பதிலாக

		ரூ.காசு.	ரூ.காசு.
(a)	700 கிலோ கிராம் எடைக்கு மேற்படாத சுமை ஏற்றப்படாத எடையுள்ளவை ..	30·00	39·00
(b)	700 கி. கிராமுக்கு அதிகமானால் ஆனால் 1500 கி. கிராமுக்கு மேற்படாத [சுமை ஏற்றப்படாத] எடையுள்ளவை ..	40.00	55·00
(c)	1500 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 2000 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை ..	49·00	70·00
(d)	2000 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 3000 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை ..	58·00	82·00
(e)	3000 கி. கிராமுக்கு அதிகமான (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை ..	70·00	100·00

கீழ்க் கண்ட பதிவுகளை அமைத்துக்கொள்ளவேண்டும், அவையாவன:—

(a)	700 கி. கிராம் எடைக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை ..	33·00	42·00
(b)	700 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 1500 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை ..	44·00	60·50
(c)	1500 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 2000 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை ..	53·90	77·00
(d)	2000 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 3000 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை ..	63·80	90·20
(e)	3000 கி. கிராமுக்கு அதிகமான (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை ..	77·00	110·00

[திரு. ச. இராமசந்திரன்]

(3) மேற்படி III-வது விவர அட்டவணையில் 1-வது இனத்திலுள்ள கீழ்க் கண்ட பதவிற்குப் பதிலாக;

	ரூ.காசு.	ரூ.காசு.	ரூ.காசு.	ரூ.காசு.
(a) இயந்திர விசையைக் கொண்டு இழுத்துச் செல்வதற்கான இணைப்புக் கொண்ட மோட்டார் ஸ்கூட்டர்கள் அல்லது சைக்கிள்கள் உட்பட, தொடர் வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படாத மோட்டார் சைக்கிள்கள்.	2·00	6·00	3·00	8·00

கீழ்க்கண்ட பதிவை அமைத்துக்கொள்ள வேண்டும், அதாவது,—

இயந்திர விசையைக் கொண்டு இழுத்துச் செல்வதற்கான இணைப்புக் கொண்ட மோட்டார் ஸ்கூட்டர்கள் அல்லது சைக்கிள்கள் உட்பட, தொடர் வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படாத மோட்டார் சைக்கிள்கள். ..	2·20	6·60	3·30	8·80

(4) மேற்படி III-வது விவர அட்டவணையில் 5-வது இனம் (a), (b), (c) பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ள பதிவுகளுக்குப் பதிலாக,—

(a) 700 கி. கிராம் எடைக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை. ..	4·50	14·00	7·50	19·00
(b) 700 கி. கிராம் எடைக்கு அதிகமான ஆனால் 2,200 கி. கிராம் எடைக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை.	6·50	19·00	7·50	22·00
(c) 2,200 கி. கிராமுக்கு அதிகமான (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை.	8·50	25·00	11·50	34·00

கீழ்க்கண்ட பதிவுகளை அமைத்துக்கொள்ளவேண்டும், அவையாவன :—

(a) 700 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை.	4·95	15·40	8·25	20·90
(b) 700 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 2200 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை. ..	7·15	20·90	8·25	24·20
(c) 2,200 கி. கிராமுக்கு அதிகமான (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை.	9·35	27·50	12·65	37·40

விளக்கக் குறிப்பு

இந்திய அரசு மேற்கொண்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு உதவும் வகையில் கூடுதல் நிதிவாயில்களைத் திரட்டும் நோக்கத்துடனும், இம் மாநிலத்தில் வளர்ச்சிப் பணிகளில் வேகம் தனியாமல் பார்த்துக் கொள்ளவும். கார்கள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் ஆகியவைகளுக்குத் தற்போதுள்ள வரிவீதத்தில் மேலும் 10 சதவீதம் கூட்டுவதன்மூலம் சிற்சில சரிக்கட்டல்களை அரசு செய்ய இத் தீர்மானம் வழிவகை செய்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(5) அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(ஆ) சென்னை மாநகராட்சி நிலைக்குழு உறுப்பினர்கள் தேர்தல் தொடர்பான விதிகள் குறித்து.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 6—12—1971-ம் நாளன்று பேரவையின் முன் வைக்கப்பட்ட சென்னை மாநகராட்சி நிலைக்குழு உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பான விதிகள் * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்தத் தீர்மானத்திலே . . .

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member first move his amendment.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :—

"In Rule 10, for the sentence, 'The candidate who obtains the largest number of votes, or, if there is more than one vacancy, as many of the candidates at the top of the poll as there are vacancies to be filled, shall be declared to have been duly elected' substitute the sentence, 'The declaration will be on the basis of proportional representation with single transferable vote'."

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I second the amendment

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

"In rule 5, insert the following as sub-rule (4); '(4) The election shall be based on the system of proportional representation by means of single transferable votes'."

THIRU J. JAMES : Sir, I second the amendment.

---

* 122-125-ம் பக்கங்களில் நான்காம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் டிபுடி ஸ்பீக்கர் சார், இந்தத் தீர்மானத்தின் பேரிலே நான் சாதாரணமாக ஒரு திருத்தத்தை கொண்டு வந்திருக்க மாட்டேன். ஆனால் இந்தச் சபையிலே ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளை கண்டிப்பாக உறுப்பினர்களுக்கு தெரிவிப்பது மாத்திரமல்லாமல், அரசு இம்மாதிரியான முறையிலே ஏற்கெனவே ஒத்துக்கொண்ட சில விஷயங்களை நிர்ப்பந்தத்தின் காரணமாக தீர்மானம் உருவமாக கொண்டு வந்து மாற்றுவது என்ற மரபு இனிமேல் இருக்கக்கூடாது என்று வலியுறுத்திக் கூறுவதற்காகத்தான். உங்களுக்குத் தெரியும். ஏற்கெனவே சென்னை மாநகராட்சி சம்பந்தமாக வந்த திருத்த மசோதாவில் சில திருத்தங்கள் இந்தச் சட்ட மன்றத்திற்கு முன்பாக கொண்டுவரப்பட்டன. அந்தத் திருத்தத்தில் ஒன்றுதான், இந்த நிரந்தர கமிட்டிகள் போன்றவற்றில் எல்லாம் பிரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதாகும். அந்தத் திருத்தமானது என்னுடைய பெயரில் ஒன்றும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேரிலும் ஒன்றாக இருந்தன. இரண்டு திருத்தங்களும் ஒரே குறிப்பிட்ட பிரிவுக்கு இருந்த காரணத்தால், ஒரே ஒரு திருத்தம் தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தமாகும். அந்தத் திருத்தத்தை இந்தச் சபை விவாதிக்கக் கூடிய நேரத்தில் ஆளும் கட்சி சார்பாக, அரசின் சார்பாக பல விதத்திலே கலந்து ஆலோசித்து அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்கிறோம், ஆனால் இப்போது திருத்த ரீதியாக வரவேண்டியது இல்லை . இப்போது அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படாமல் போனாலும் கூட, இந்தப் சபையிலே ஏற்கெனவே செய்து முறைப்படியான திருத்தமே இருந்தால் போதும், விதிகள் வகுக்கப்படுகிற போது, அந்த விதியின் அடிப்படையில் இந்தத் திருத்தத்தின் கருத்துக்களை கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். பொதுவாக விதிதான் சட்டத்தை இழுத்துக்கொண்டு போகிறது என்ற போக்கே மிகவும் தவறு என்பது என்னுடைய கருத்து. பல இடங்களில் இங்கே சட்டம் அமலாகிறபோது, சட்டம் அமலாகிறதா அல்லது விதி தான் அமலாகிறதா என்று சந்தேகம் எழுகிறது. இங்கே
Subordinate legislation, many times, is overriding parent legislation. அந்த மாதிரி போக்கு இருந்து கொண்டு இருக்கிறது. இது சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி கவனிக்க வேண்டிய விஷயம்.

இங்கே கூறப்பட்ட ஒரு கருத்து பற்றி, அதாவது, பிரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷனால் நன்மையா அல்லது மெஜாரிட்டி தேர்தலால் நன்மையா என்ற விஷயத்திற்கு, நான் போகவில்லை. இந்த அமைப்பு ஏற்படுவதற்கு முன்னால், இங்கே நமது சட்டமன்றத்தில், இந்தத் தொடர் ஆரம்பித்த அன்றைக்கு 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையை மாண்புமிகு கல்வி

யமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்தார்கள். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையிலே சொல்லியிருக்கக் கூடிய விஷயம்—

"ஒவ்வொரு நிலைக் குழுவிலும் 11 உறுப்பினர்கள் இருப்பர். மாநகராட்சி உறுப்பினர்களிலிருந்து பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் இந்த நிலைக் குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இத்திருத்த மசோதாவில் வகை செய்யப்பட்டது. இந்த மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோது, விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை பின்பற்றுவது உகந்ததாக இருக்கும் என உறுப்பினர்களில் சிலர் கருத்துத் தெரிவித்தனர். பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கும் முறை குறித்த விதித் துறைகளை நீக்க அதிகாரப் பூர்வமான திருத்தம் கொடுக்கப்பட்டது. அரசு வரையறுக்கக்கூடிய முறையில் தேர்தல் நடத்துவதற்கு வகை செய்யப்பட்டது. நிலைக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகளை இயற்றும்போது ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை பின்பற்றப்படுமென்று அறிவிக்கப்பட்டது."

I am very grateful to the Hon. Minister for re-stating the assurance given at the time when the original Bill was discussed.

இதற்கு இணங்க ஒற்றை மாற்று விகிதாச்சார பிரதிநிதித்துவ முறைக்கு வகை செய்யக்கூடிய வரைவு விதிகள் இயற்றப்பட்டன. பின்னர் அதில் சொல்லக்கூடிய சில விஷயங்களை மாநகராட்சியிடம் கேட்டபோது அவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள், ஏற்கெனவே பின்பற்றப்பட்டு வரும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறைக்குப் பதிலாக பெரும்பான்மை வாக்களிப்பு முறையை பின்பற்றலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாநகராட்சி மன்றம் போன்ற முக்கியமான நிறுவனத்தின் கருத்துக்களைப் புறக்கணிக்க இயலாதென அரசு முடிவு செய்து, பெரும்பான்மை முறையைப் பின்பற்றலாம் என்று மாநகராட்சி மன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்பதை தெரிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக்கூற ஆசைப்படுகிறேன். ஏற்கெனவே மாநகராட்சி உறுப்பினர்களைக் கலந்து கொண்டு இம்மாதிரியான ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கவேண்டும். அல்லது அந்தத் திருத்தம் வருகிறபோது அதைப்பற்றி பின்னால் யோசிக்கலாம் என்று சொல்லி இருக்கவேண்டும். ஒரு முறை ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னால், மீண்டும் ஒரு முறை அந்த மசோதாவுக்கு ஒரு திருத்தத்தைக்கொண்டு வந்து, அந்தத் திருத்தத்திலே வேண்டுமானால் வேறு ஏதாவது காரியத்தை சொல்லலாம்.

[1971 டிசம்பர் 18

[திரு. கே. டி. கே. தங்கமணி]

நான் நன்கு உணர்வேன். நாளைக்கு நிரந்தரக்கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்த நிரந்தரக்கமிட்டியில் மெஜாரிட்டியாக இருப்பவர்கள்தான் வருவதற்கு முடியும். எல்லாக்கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்க மாட்டார்கள். ஆனால் அப்படி நடைமுறையில் இருக்காது என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த மாதிரி நிலைமை ஏற்பட்டு விட்டால் மிகவும் கஷ்டமாகி விடும். இந்த ஒற்றை மாற்று விகிதாச்சார அடிப்படையில் கூட எதிர் கட்சிக்கு மெஜாரிட்டி கட்சி ஓட்டுப்போட்டால் தான் ஏதாவது ஒரு சீட்டாவது கிடைக்கும். இங்கே ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எல்லாமாக சேர்ந்து ஆலோசித்து 1 சீட்டோ 2 சீட்டோ வேறு கட்சிக்கு கொடுக்கலாம் என்று கொடுக்கிறோம். அது கன்வென்ஷனாக, மரபாக பின்பற்றப்படுகிறது. இப்படி கலந்தாலோசித்து செய்வதால், தேர்தல் நடைபெறுவதில்லை. இதை நாடாளுமன்றத்தில் கூட பின்பற்றுகிறார்கள். யாராவது அந்த முடிவை' ஏற்றுக் கொள்ளவில்லை என்று அந்தத் தேர்தலில் போட்டியிட்டால் அவர்கள் தோற்றுப் போவதைத்தான் பார்க்கிறோம். இந்தமாதிரி பண்புதான் பல நகராட்சிகளில் பின்பற்றப்பட்டதாக எனக்கு ஞாபகம். பல பெரிய மேதைகள் கூட சொல்லியிருக்கிறார்கள். There should be no politics in the Local Bodies

இப்படி இரண்டு ஆழமான, அடிப்படையான விஷயங்கள் இருந்தால் கூட, இப்படியாக இருக்கக்கூடிய நிரந்தரக் கமிட்டிகளில் மாற்றுக்கருத்து உள்ளவர்களை இணைத்து வைத்து செயல்படுவது அந்த மக்களுக்கு இன்னும் அதிக நம்பிக்கையை அளிக்கும். எல்லோரும் சேர்ந்து இருக்கிறார்கள் அதனால் நமக்கு நிச்சயம் நன்மை ஏற்படும் என்று நினைப்பார்கள். இப்படி செயல்படுவதில் சிக்கல்கள் ஏதாவது ஏற்படும் என்று சொன்னால், அதற்கு தகுந்த விதிகள் ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்த நிர்வாகக் கமிட்டிக்கு அதிகாரங்கள் ஜாஸ்தியாக இருக்கின்றன. ஆகவே, பொதுவாக ஒரு பகுதியில் இருக்கும் எல்லாக் கருத்து உள்ளவர்களுக்கும் இந்த நிரந்தரக் குழுவில் இடம் கொடுக்கும் வகையில் நம்முடைய சட்ட அமைப்பு இருக்கவேண்டும் அப்படி கொண்டு வருவது நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்றத்தில் அது மாதிரியான முறை அனுஷ்டித்து வருகிறோம். அது மற்ற இடங்களிலும் செயல்படுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். தேர்தலை எப்படி நடத்த வேண்டுமென்று சொல்கிறபோது நான் கொண்டு வந்திருக்கிற திருத்தம் இருக்கிறதே குறிப்பாக அந்த 10-வது பிரிவிலே தேர்தலைப்பற்றிச் சொல்லிவிட்டு, கடைசியில் அதை எப்படி நடத்துவது என்ற பகுதிக்குத்தான் திருத்தம் கொடுத்து இருக்கிறேன். அந்த முடிவின் அடிப்படையில் தான் சிங்கிள் டிரான்ஸ்பரபிள் ஓட் படி இருக்கவேண்டுமென்று வலியுறுத்துகிறேன். ஆகவே, எல்லோருமே இணைந்தொரு

1971 டிசம்பர் 18]

[திரு. கே. டி. கே. தங்கமணி]

மசோதாவை கொண்டுவராவிட்டாலும், இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையிலாவது ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட அடிப்படையில் இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன்.

Thiru K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, the hon. Member Thiru K. T. K. Thangamani has finished practically all arguments. I would not like to repeat the same I would like to enlighten the House on other points.

Standing Committees of the Corporation, unlike Standing Committees in the Legislature, are fundamentally committees of administration. There are three such committees in the Corporation. One is the all-powerful committee, subject to the control of Corporation Council and Government and that is the Central Committee. Up to now the practice has been, before the White Paper was introduced in 1919, to form a Committee consisting of all parties so that in the administration there may not be any hardship and noody would be left out. So far as election to the Council is concerned, it is fought on party basis but once the general election to the Council is over, then no question of party comes. In the standing committees, there is no place for politics. It has been the practice from 1947, the leaders of parties used to discuss and then the committees would be formed in which all parties would be represented.

There are three such Committees, Standing Committees on Education, Taxation and Finance Committee and Central Committee. I have been on the first two Committees and I have been in the Corporation from 1947. Even when there were only two D.M.K. members in the Council, one got a seat in one Standing Committee. Afterwards when the White Paper came, there was proportional representation in the Licence Appeals Committee and Accounts Committee. These were the committees under the White Paper. So far as the Central Committee is concerned, each circle committee sent in their representation. It is automatically formed by the members of the Circle Committees. But in the Taxation Appeals Committee and other committees, there was always proportional representation. In any committee consisting of more than 5 members, there was always proportional representation.

The White Paper specifically stated that there should be proportional representation, in the Budget and Licence Appeals Committee and also in the Accounts Committee. For Central Committee, each circle sent its own members, and majority of members of a particular party got representation so much so in the Central Committee, the present position is 5 members from Congress and 7 members from DMK. I am only trying to show that at no time there had been this question of 'simple majority'.

[Thiru K. M. Subramaniam]

Wisely a committee was formed by the Corporation Council to go into the question. We went through the draft clause by clause and it was decided by the party leaders that there would be proportional representation only. When the party leaders agreed, the draft was prepared and the Council also recommended likewise and sent the same to Government. The Council emphatically stated that there should be proportional representation in all standing committees. Now when I saw the present thing, I was shocked to find that what had been suggested by the Council had not been agreed to by the Government.

I know full well, as Deputy Leader of my party and as a member of the drafting committee, that only proportional representation was recommended by us and I hoped, that it would be accepted by Government. I gave an amendment when it was brought to the Assembly. I told that the Council had agreed to proportional representation and not to 'simple majority'. Government agreed and fully believing that the Government would do the right thing, I withdrew my amendment.

What I say is, once the legislature gives an opinion on anything it is final. It is never sent again for eliciting the further opinion of the local body. But Government again referred the matter to the Corporation. Now the Corporation Councillors began to see that the Government wanted the thing to be by 'simple majority'. After all, anybody would be happy if he could get easily elected on party basis to any Standing Committee of the Corporation.

பிற்பகல் 1-00 Now, Sir, what else can I do? This is democracy. In a democracy, in a democratic set-up the only thing we can do is to appeal to the people who believe in democracy. You have understood the problem. It is not as if you have not understood. I know the Hon. Minister himself must have understood the problem. The Minister has given us the assurance and that assurance must stand. The only argument against it seems to be or as mentioned to me by some friends, that if this is a homogeneous body it will be working well and if it is a heterogeneous body with different parties in the Council, they will be blocking it. I am a member of the Central Committee today and as a member of the Central Committee I have been going through for the last three years co-operating with the other members of the D.M.K. party.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். இப்போது திருவாளர் கே. எம். சுப்பிரமணியம் மத்திய குழு உறுப்பினர் அல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I stand corrected. That '*Kuzhu*' does not exist now and so. I am not a member. If that is a serious thing, I must accept it. I am coming to a very important point. For the last two years we have been

[Thiru K. M. Subramaniam]

working together. There was not a single occasion when there was a hitch in the body. There was not a single time when vote was taken. All the objections between us were settled by adjustment. That is the way you can build up. Unless there is this sort of election, you cannot stop these ill-feelings. We have no ill-feelings. I found my counterparts, D.M.K. members ready to accept any reasonable suggestion of mine and in the same way we accepted any reasonable suggestion made by them. Nothing will be blocked. Nothing has been blocked up to now.

From 1947 to 1971 I have been a member of the Corporation Council except for three years. During this period no statutory committee had any necessity for a quarrel. Nobody walked out of any statutory committee. Of course, when you read the papers you may think that in the open council we are having a cock-fight. You may think that we are all fighting. But inside the understanding is so good and we did the work so well. Administration has been going on so nicely. I think the Government is doing a very big injustice to the minority parties by bringing this.

Of course, the Hon. Member Thiru K. T. K. Thangamani said "I know they are going to have a few members selected from the opposition side." If election by majority is conceded, they will give us a chance, but it is a chance out of beggary and not a chance by right. If you are giving a chance in democracy, you must give a chance by right. I appeal to the Hon. Minister to reconsider the whole thing and then allow proportional representation in the name of justice, in the name of fair-play and in the name of democracy. That is all I can say, Sir.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை முழுமனதோடு வரவேற்று சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன். இன்றைய தினம் கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள பெரும்பான்மை வாக்குகளின் மூலம் தேர்ந்தெடுக்கின்ற முறையை அமலுக்கு கொண்டுவரவேண்டும் என்ற ஒரு முறை, இப்போது தான் புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற முறையல்ல. 1961-ஆம் ஆண்டுக்கு முன்பாக இந்த முறை தான் சென்னை மாநகராட்சியில் பின்பற்றப்பட்டு வந்த முறையாகும். அந்த முறை மாற்றப்பட்ட காரணத்தால், இன்றையதினம் அதே முறையை பின்பற்ற வேண்டும் என்றுதான் இந்தத் தீர்மானம் வற்புறுத்துகிறது என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

THIRU K. M. SUBRAMANIAM : So we are going back.

திரு. வை. பாலசுந்தரம் : எனவே தான் இந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே பேசுகின்றபோது என்னுடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவருடைய எண்ணம் மதிப்பிற்குரிய எண்ணமாக இருக்கலாம். நான் அதை வரவேற்கிறேன். ஆனால்

[திரு. வை. பாலசுந்தரம்]

[1971 டிசம்பர் 18

அதே நேரத்தில் நகராட்சி மன்ற நிர்வாகத்திற்கும் இப்படிப்பட்ட சட்டமன்ற நிர்வாகத்திற்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒருகால் நமது மதிப்புமிக்க உறுப்பினர் தங்கமணி அவர்களுக்கு இது தெரியாமல் இருக்கலாம். ஆனால் என்னுடைய மதிப்புமிக்க திருவாளர் கே. எம். சுப்பிரமணியம்,—நித்தம் நித்தம் மாநகராட்சியில் சுழன்று உழன்றுகொண்டு, மாநகராட்சியின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்துக்கொண்டு வருபவர்கள் நானும் அவரும்—அவர் இந்தத் தீர்மானத்தை வரவேற்கவில்லை என்கின்ற போது, அவர் கட்சியின்பால் கொண்ட எண்ணத்தினால் இதை வரவேற்கவில்லையே தவிர, உண்மை நிலைமை அவருக்கு நன்றாகப் புரியும் என்று கருதுகிறேன். 1959-ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை மாநகராட்சியை கைப்பற்றிய நேரத்தில் இந்த பெரும்பான்மை வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்ற முறைதான் அமலில் இருந்தது.

ஆனால் 1961-ஆம் ஆண்டு இந்த நிலையை அன்றைக்கு ஆண்டு கொண்டிருந்த, சட்டமன்றத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த காங்கிரஸ் அரசாங்கம் ரத்து செய்துவிட்டு, இன்றைக்கு இருக்கின்ற முறையை பின்பற்றிக்கொண்டு வந்துகொண்டிருக்கிறது. இப்படி ஏன் செய்தார்கள் என்று எண்ணிப் பார்க்கின்றபோது, கட்சிக் கண்ணோட்டத்தோடு அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசாங்கம் செய்தது என்று நிச்சயமாகச் சொல்லலாம். பெரும்பான்மை வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறை 1959-ம் ஆண்டு வரை இருந்தது என்று சொல்லப்படுகின்ற நேரத்தில், அன்றைய தினம் இங்கும் காங்கிரஸ் ஆட்சி இருந்தது, நகராட்சியிலும் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது. ஆகவே அந்த முறையை அங்கே வைத்திருந்தார்கள்.

அதற்குப் பின்னால், நகராட்சியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும், இங்கே சட்டமன்றத்தில் காங்கிரஸ் ஆட்சியும் ஏற்பட்ட காரணத்தால், அங்கே காங்கிரஸ்காரர்களுக்கு முக்கியத்துவம் இல்லை என்ற காரணத்தால், 1961-ல் சட்டத்தை மாற்றுகின்ற வாய்ப்பினை உருவாக்கினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் 1959-ல் நகராட்சியைக் கைப்பற்றிய இரண்டு ஆண்டுகளுக் குள்ளாகவே இந்த மாற்றத்தைச் செய்தார்கள் காங்கிரஸ் அரசினர் என்று பார்க்கின்றபோது, பச்சையான கட்சிக் கண்ணோட்டத்தோடு செய்யப்பட்டது என்பதைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதன் வழிமுறையை பின்பற்றி அன்றைக்கு இந்த மாறுதலைக் கொண்டு வந்தபோது, சென்னை மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை மதிப்புமிக்க திருவாளர் கே. எம். சுப்பிரமணியம் உணர்வார்கள். அதை ஏனோ இன்றைக்கு அவர் பேசவில்லை என்று பார்க்கின்றபோது, அவரும் கட்சிக் கண்ணோட்டத்தோடு தான் தம்முடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார் என்று கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

1971 டிசம்பர் 18]

[திரு. வை. பாலசுந்தரம்]

அந்த வகையில் பார்க்கின்றபோது, இந்த முறை சிறந்த முறையா அல்லவா என்று கருதுகின்றபோது, 1959-க்கு முன்னால் காங்கிரஸ் கட்சி இங்கும் நகராட்சியிலும் ஆளுங்கட்சியாக அலங்கரித்துக் கொண்டிருந்தபோது, இந்தமுறை அவர்களுக்கு உகந்ததாக இருந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு இங்கும் ஆளுங்கட்சி, மாநகராட்சியிலும் ஆளுங்கட்சி என்ற நிலை வந்தபோது, அவர்களுக்கு அந்த முறை வெறுப்பாக இருக்கின்றது. மாமியார் உடைத்தால் அது மண் கலம், மருமகள் உடைத்தால் அது பொன்கலம் என்று கூறுவார்களே அந்த நிலைமையில்தான் அவர்களுடைய போக்கு இருக்கின்றது என்று தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நிலைமைகளுக்கு மாறுபட்ட கருத்தைச் சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் காலஞ்சென்ற அண்ணா அவர்கள் கட்சியின் அடிப்படையில் தேர்தல்களில் ஈடுபடக்கூடாது என்ற கருத்தை 1968-ஆம் ஆண்டு நடைபெற்ற நகரமன்றத் தேர்தலிலே கூறினார்கள். அந்தக் கருத்தை மற்ற கட்சியினர் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். இன்றைக்கு இந்த அடிப்படை உண்மையை உணர்கின்ற அதே நேரத்தில், பெரும்பான்மை வாக்குமுறையால்தான் நகராட்சியில் சிறந்த நிர்வாகத்தை உருவாக்க முடியும்; அப்படிப்பட்ட முறையை பின்பற்றச் செய்வதன்மூலம் தான் நகர மக்களுக்குச் சிறந்த சமூகப்பணி செய்யமுடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றுள்ள முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஆறு குழுக்களில் ஒரு சிலர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாகவும் மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தால், நகராட்சிப் பணியில் சிக்கல் ஏராளமாக ஏற்பட்டு ஸ்தம்பிதம் ஏற்படும் சூழ்நிலை நகரசபையில் உருவாகும். பெரும்பான்மை வாக்குகள் மூலம் வெற்றி பெறுவதன் மூலம் சிறந்த நிர்வாகப் பணி 1961-க்கு முன்பாக நடைபெற்றுக்கொண்டு வந்தது. அன்றைக்கு இருந்த காங்கிரஸ் ஆட்சி, அந்த நிலைமையை மாற்றிய காரணத்தால், மாநகராட்சிக்கு கூடுதலாக 25 சதவிகிதம் செலவானது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

மாநிலத்திலே காங்கிரஸ் ஆட்சியும் மாநகரிலே கழக ஆட்சியும் நடைபெற்று வந்ததால் பழைய முறையை மாற்றி ஒற்றை மாற்றுச் சீட்டு முறையில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டுவந்தார்கள். ஆனால் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சித் துறைக்கு வந்திருப்பதால் நியாயத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள். பெரும்பான்மை வாக்கு மூலம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தால், திராவிட முன்னேற்றக் கழகம் எல்லா இடங்களையும் பிடித்துவிடுமே என்ற எண்ணத்தினால்தான் இதை எதிர்க்கிறார்களே தவிர நியாயத்தின் அடிப்படையை ஏற்க

[1971 டிசம்பர் 18

[திரு. வை. பாலசுந்தரம்]

மறுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும் பேசியபோது, எந்தவித குறைகளும் இதில் ஏற்படாது என்று அமைச்சரவர்கள் உறுதி கூறினார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

இன்றைக்கு மாநகராட்சி 20 லட்சத்திற்கு மேற்கொண்ட மக்களால் உருவாக்கப்பட்டது. இந்த 20 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட மாநகரத்தை வழி நடத்திச் செல்கிற 130-க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் அதிலே அங்கம் வகிக்கிறார்கள். அப்படி பெரும்பான்மை அங்கத்தினர்கள் நடத்திச் செல்கின்ற மாநகராட்சி யிலிருந்து நிலைக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் விதத்தில் மாற்றம் வேண்டுமென்று அரசாங்கத்தை வேண்டிக்கொண்டது. அதனடிப்படையிலே தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜனநாயகத்தின் அடிப்படையிலே அந்தக் கோரிக்கையை ஏற்று, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கும் நமது அரசையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன் ; வாழ்த்து கிறேன்.

இப்பொழுது இருக்கின்ற சிக்கல்களை உணர்ந்து, சமூகத்திற்கு நற்பணியாற்ற வேண்டுமென்ற கருத்தில், மாநகராட்சியின் கோரிக்கையை ஏற்று, பெரும்பான்மை வாக்குகள் மூலம் மாநகராட்சி நிலைக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டு மென்று கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தை நான் உளமார வரவேற்று, பாராட்டி, அமர்கிறேன். வணக்கம்.

Dr. H. V. HANDE: Hon. Speaker, Sir, I very briefly offer a few remarks. I, on behalf of my party strongly oppose this Resolution for the following reasons :—

Firstly, the contents of this Resolution have been incorporated in a different manner in a Bill passed by this House some time ago and at that time we were told by the Government that there would be a sort of proportional representation in the Corporation Committees. I do not know for what reasons, like a bomb-shell, suddenly a resolution was passed by the Council and that resolution was again communicated to the Government. I feel that the Government have been pressurised by the Corporation to pass this resolution and that is my charge. I would like the Hon. Minister in his reply to state whether my charge is wrong.

Another aspect of the matter is that we have been crying hoarse for the past several years that the administration of the Corporation and Municipalities, should, as far as possible, be above party politics and power politics. Almost all the parties gave an indication outwardly that they believe in a non-party administration in Local Bodies. But in spite of our efforts, we find that there is a practical tug-of-war between political parties in the administration of local bodies.

1971 டிசம்பர் 18]

[Dr. H. V. Hande]

I am sure the hon. Member Thiru K. M. Subramaniam will agree with me when I say that political issues should be put in cold storage and that should be forgotten there. Also the most important thing is that policy matters are not decided in the Corporation. Its administration related only to sewage, drinking water, etc., and there cannot be any difference of opinion in regard to these matters. So, there should be absence of party politics in the administration of local bodies. But the Corporation has pressurised the Government and the Government have succumbed to it. We the Members of the Assembly feel hurt that the Government should have got into this unfortunate position. I know that the Government have made up its mind in regard to this matter but we strongly oppose this Bill.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இங்கு கொண்டு வந்திருக்கும் இந்த விதித் திருத்தத் தீர்மானத்திலே எனக்கு முன்னால் பேசிய சட்டசபை அங்கத் தினர்கள், குறிப்பாக டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. எம். சுப்பிரமணியம் ஆகியோர் பேசியவற்றையெல்லாம் மிக உற்சாகமாக வரவேற்று, ஆதரித்து, மீண்டும் அரசாங்கம் இந்தத் திருத்தம் தேவைதானா என்பதைப் பரிசீலித்துப் பார்ப்பதுதான் ஜனநாயக முறை என்று குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

அந்தச் சட்டம் வந்தபோது கனம் அமைச்சரவர்கள் நன்றாக யோசித்துப் பார்த்துத்தான் கடைசியில் கொண்டு வந்தார்கள். நகராட்சியிலே அரசியல் கட்சிகளின் விருப்பு வெறுப்பு இருக்கக் கூடாது. அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. இம்மாதிரிப் பிரச்சினைகளை எல்லாம் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடாது. அது நல்லதும் அல்ல. அந்த அடிப்படையிலே ஒரு சுமுகமான முறையை உருவாக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு தான் ஒற்றை மாற்றுச் சீட்டு முறையை ஏற்படுத்தினார்கள். அந்த விதிமுறைகளை இன்று மாற்றவேண்டிய அவசியம் என்ன ? கார்ப்பரேஷன் கவுன்சிலிலிருந்து மாற்றவேண்டுமென்று பிரஷர் வரக் காரணமென்ன ? அவர்கள் நினைத்தபோது விதிகளை மாற்ற வேண்டுமென்று சொன்னால், உடனே அரசாங்கமும் அவர்கள் கேட்பது போல் செய்வதா ? நாம் ஒரு விதியை இந்த மாநில அவையிலே நிறைவேற்றுகிறோம் என்றால் நாம் அதைப் பரிசீலனை செய்யாமல், அதன் விளைவுகளை யோசிக்காமல் செய்கிறோமா ? அப்படி யோசனை செய்து, சட்டத்தைக் கொண்டு வந்தாலும், கார்ப்பரேஷன் கவுன்சில் அந்தச் சட்டத்தைத் திருத்தி அனுப்பும் அளவுக்கு நாம் அறிவில் குறைந்தவர்களா ? அல்லது திறமை இல்லாதவர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது முன்னால் ஏன் திருத்தம் கொடுத்தோம் என்பதை விளக்கினார்கள். கட்சியின் அடிப்படையிலே நிலைக் குழுவில் உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்று தெளிவாக இருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற

சூழ்நிலையில் அப்படி இருப்பதுதான் நல்லது. சர்க்கிள் கமிட்டியில் 10 பேர் இருக்கிறார்கள் என்றால், தி.மு.க.-வினர் 5 பேர், காங்கிரஸ் கட்சியினர் 3 பேர், கம்யூனிஸ்ட் கட்சியினர் 2 பேர் என்று இருந்தால் அதில் என்ன தவறு நடந்துவிடப்போகிறது? அப்படி கட்சிகளின் அடிப்படையில், அங்கத்தினர்களை நியமிப்பதற்கு ஒரு வாய்ப்பு இருந்தது.

ஆனால் இன்றைக்கு அந்த முறையை எடுத்துவிட்டு, மீண்டும் பழைய முறையைக் கொண்டுவருவது அவசியமா என்று கேட்டால், பழைய மேயர் காங்கிரஸ் ஆட்சியில் அப்படித் தான் இருந்தது, ஆகவே நாங்கள் மீண்டும் அந்த முறையைக் கொண்டு வருகிறோம், என்று சொல்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் தவறு செய்தார்கள் என்பதற்காகத்தான் மக்கள் உங்களை இங்கே ஆட்சி செய்ய அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் செய்த தவறையே நீங்கள் செய்தால் எங்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது ?

திரு. வை. பாலசுந்தரம் : நீங்கள் தவறு செய்தீர்கள் என்பதை இப்போதாவது உணருகிறீர்களா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : உணராமல் என்ன செய்வது ; தவறு செய்தோம் என்பதால் தானே மக்கள் உங்களைக் கொண்டு வந்தார்கள். எங்களைத் தள்ளி வைத்திருக்கிறார்கள். அதை உணராமல் எதைச் சொன்னாலும் நீங்கள் செய்தீர்களே ! நீங்கள் சொன்னீர்களே ; என்று கேட்டால் என்ன அர்த்தம் மேலும் அந்த மாதிரித் தவறுகள் நடக்கக்கூடாது, நல்லாட்சி நடக்கவேண்டும் என்றுதான் உங்களை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றுங்கள். அன்றைக்கு 1959-லே இருந்த சூழ்நிலை வேறு. இன்றைக்கு இருக்கும் சூழ்நிலை வேறு. காலத்திற்கேற்ற முறையில் நம் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் ; நாம் பக்குவப்படவேண்டும். இன்றைக்கு வட்டக் குழுக்களை அபாலிஷ் செய்துவிடுகிறார்கள். சிங்கள் மெஜாரிட்டியில் ஸ்டாண்டிங் கமிட்டி அமைக்கப்படும் என்றால் நிலைமை என்ன ஆகும்? எந்த கட்சி மெஜாரிட்டி ஓட்டுப்பெற்று பதவிக்கு வருகிறதோ அந்தக் கட்சி உறுப்பினர்கள்தான் ஸ்டாண்டிங் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற நிலைமை வந்துவிடும். இது ஜனநாயகத்திற்கு சரிதானா ? இங்கே கட்சிகளின் அடிப்படையில் செயல்படலாம். ஆனால் நகராட்சி நிர்வாகம் கட்சிக்கு அப்பாற்பட்டது. கட்சிக்கண்ணோட்டம், கட்சி மாச்சர்யம், கட்சி காழ்ப்பு உணர்ச்சி இல்லாமல் செயல்படுகிற நிலை இருந்தால்தான் மக்களுக்கு சிவிக் சம்பந்தமான பல நல்ல காரியங்களைச் செய்ய முடியும். சிங்கிள் மெஜாரிட்டி என்று வந்தாலும் மற்ற கட்சிக்காரர்களுக்கு இடமிருக்காது என்று சொல்ல முடியாது என்பது எல்லாம் ஆளும் கட்சியாக இருப்பது விரும்பி ஒன்றிரண்டு

இடங்களைக் கொடுப்பதாக இருப்பதுதானே ஸ்டாண்டிங் கமிட்டியில் இடம் பெற்று விட்டவர்கள்—கவுன்சில் கலைகிற வரையில்—கவுன்சிலர் பதவி இருந்து கொண்டிருக்கிற வரையில் இருப்பார்கள் என்றால் இது ஜனநாயக வளர்ச்சிக்கு சரியா என்பதைச் சிந்திக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி இதில் காப்பாற்றப்படவில்லை. இது சட்டசபை அங்கத்தினர்களின் அதிகாரத்தையே பறிப்பதாக இருக்கிறது, வலது கையால் கொடுத்ததை இடது கையால் பறிப்பது போல இருக்கிறது. ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்து நல்லதொரு முடிவுக்கு அரசு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி நிலைக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற முறை பற்றிய தீர்மானத்தினால் ஏற்பட்ட விளைவுகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள்.. முன்பு கொண்டு வந்ததற்கும், இப்போது கொண்டு வந்ததற்கும் மாறுபாடு இருப்பதாக டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்தத் தீர்மானத்தை முதலில் நான் கொண்டுவருகிறபோதே மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. எம். சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதுபோல, நிலைக்குழு உறுப்பினர்கள் ஒற்றைமாற்று ஓட்டுமுறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுவது சரியா, சிங்கிள் மெஜாரிட்டி ஓட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவது சரியா, எது நடைமுறைக்கு ஒத்ததாக அமையும் என்பதை எல்லாம் பரிசீலனை செய்து சிங்கள் மெஜாரிட்டி மூலம் தேர்ந்தெடுக்கும் முறைதான் நடைமுறைக்கு ஏற்றதாக அமையும் என்கிற அடிப்படையில் நான் சட்டம் கொண்டுவந்தேன். முன்பு நான் கொண்டு வந்தது சிங்கிள் மெஜாரிட்டி முறைதான். உறுப்பினர்கள் ஒற்றைமாற்று ஓட்டு முறைதான் நல்லது என்று சொன்னார்கள். அது நடைமுறைக்கு ஏற்றதாக அமையும் என்றால் விதிமுறைகளில் அப்படித் திருத்திக் கொள்ளலாம் என்பதான வாக்குறுதியைத்தான் நான் அவைக்கு அளித்தேன். மறுபடியும் மாநகராட்சி மன்றத்திற்குச் சென்றபோது அவர்கள் தங்கள் கருத்தையும் எடுத்துத் தெரிவிக்கிற முறையில் சிங்கிள் மெஜாரிட்டி முறைதான் நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் முதலில் ஒற்றைமாற்று ஓட்டுமுறை வேண்டும் என்று தெரிவித்துவிட்டு, இப்போது சிங்கிள் மெஜாரிட்டி முறை வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்களே, எது சரி, எதை எடுத்துக்கொள்வது என்றால் கடைசியாக என்ன தெரிவித்திருக்கிறார்களோ அதைத்தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த அவையைக் கலந்து கொள்ளாது நான் சட்டத்தில் திருத்தம் செய்திருந்தால் கொடுத்த வாக்குறுதியை மீறியதாக ஆகும். இந்த அவையினரின் கருத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

கிறேன். திருத்தச் சட்டம் கொண்டுவர அரசாங்கத்திற்கு இருக்கிறது. திருத்தம் கொடுக்க உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது.

இதிலே ஜனநாயகம் மதிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஜனநாயகம் மதிக்கப்படவேண்டும் என்கிற போது மாநகராட்சி மன்றத்தின் கருத்தை மதிப்பது தான் முறையாகும். மாநகராட்சி மன்றத்தினர் சிங்கிள் மெஜாரிட்டி முறை இருக்கவேண்டும் என்பதாக தங்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்துக்களை எடுத்து வழங்குகிற வகையில் இந்தப் பேரவையில் வீற்றிருக்கிற திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுக்கு, இங்கே பல நல்ல கருத்தை எடுத்து வைத்து வாதிடவும் மாநகராட்சி மன்ற கவுன்சிலிலே தம் கருத்தை எடுத்து வைத்து வாதிடவும் சந்தர்ப்பம் இருக்கிறது.

சிங்கிள் மெஜாரிட்டி முறை என்பது ஜனநாயகத்திற்கு முரண்பட்ட முறையும் இல்லை. மாறுபட்ட முறையும் இல்லை. எந்த முறையில் அதிகக் கோளாறுகள் இல்லை, நடைமுறைக்கு ஏற்றதாக அமையும் என்று பார்க்கிறபோது இந்த சிங்கிள் மெஜாரிட்டி முறைதான் சிறந்ததாக இருக்கிறது. முன்னாலும் மாநகராட்சி நிலைக்குழுக்களுக்கு இந்த முறையில்தான் தேர்தல் நடைபெற்று வந்திருக்கிறது. இடையில் வந்த ஒயிட் பேப்பர் அடிப்படையில் தான் ஒற்றைமாற்று ஓட்டுமுறை கொண்டுவரப்பட்டது. இதுவும் கூட நிர்வாக அமைப்பு சம்பந்தப்பட்ட கமிட்டிகளைப் பொறுத்த வரையில் சிங்கிள் மெஜாரிட்டி ஓட்டுமுறைதான் இருந்திருக்கிறது. அட்வைசரி கமிட்டியாக, பரிந்துரை செய்கிற குழுக்களுக்கு ஒற்றைமாற்று ஓட்டுமுறை மூலம் நடத்தி வந்திருக்கிறார்கள். நடைமுறைக்கு ஏற்றது, ஜனநாயக மாபை ஒட்டியது என்று பார்க்கிறபோது சிங்கிள் மெஜாரிட்டி முறைதான் சரியானதாக இருக்கிறது.

இதுபற்றி மற்ற மற்ற பெரிய நகராட்சிகளில் எந்த முறை கையாளப்படுகிறது என்று பார்த்தபோது குறிப்பாக கல்கத்தா மாநகராட்சி, பம்பாய் மாநகராட்சி, பங்களூர், டெல்லி, திருவனந்தபுரம், நாகபுரி போன்ற மாநகராட்சிகள் இங்கெல்லாம் நிலைக்குழுக்கள் சிங்கிள் மெஜாரிட்டியில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைகின்றன.

மாநகராட்சியில் கட்சிமாச்சர்யத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று திரு. கே. டி. கே. தங்கமணி போன்றவர்கள் சொன்னார்கள். கட்சிவேறுபாடு இன்றி எல்லோரும் சேர்ந்து ஒன்றாக நகர வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும் என்பதுதான் எல்லோருடைய விருப்பம். உள்ளாட்சி மன்றங்களை பொறுத்த வரை கட்சிக்கு அவசியமில்லை. மாநகராட்சியைப் பொறுத்த வரை கவுன்சிலர்ஸ், மேயர் என்பதைத்தவிர சட்டமன்றத்தில்

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

உள்ளதுபோல லீடர் ஆப் தி ஹவுஸ், லீடர் ஆப் தி அப்போசிஷன் போன்ற வேறுபாடுகள் சட்டத்தில் கிடையாது. ஆனால் இங்கே உள்ள முறைகளைப்பார்த்து அங்கும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்பதாக இடங்களை எதிர்எதிராகப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏன் எதிர்க்கட்சித் தலைவர் என்று இருக்கக் கூடாது, ஆளுங் கட்சித் தலைவர் என்று இருக்கக் கூடாது என்று பிரிந்து கொள்கிறார்களே தவிர சட்டதிட்டங்களில் அதற்கு இடமில்லை. நகராட்சி மன்ற உறுப்பினர்கள் கட்சிவேறுபாடின்றி ஒன்றுபட்டு பணியாற்றினால்தான் பல்வேறு பணிகள் சிறப்பாக நிறைவேறும். கட்சிமாச்சரியம் அங்கே தேவையில்லை. கட்சிமாச்சரியம் இல்லாது நடைபெற்று வருவதாக திரு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டாலும் கட்சிமாச்சரியத்தன்மை தலைதூக்கத்தான் செய்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த தீர்மானம் முடியும் பிற்பகல்
வரை இப்பேரவையின் நேரத்தை நீட்டிக்க, பேரவை அனுமதி 1.30
அளிக்கிறது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மறுபடியும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியதன் காரணமாக, அது அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கிறது என்று சொன்னார்கள்: மாநகராட்சி அரசை ஆட்டிப் படைக்கிறது என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஆட்டிப் படைக்கிற உரிமை அவர்களுக்கு வராது. அவர்கள் அனுப்பியதை நாம் ஏற்றுக்கொள்ளவும் செய்யலாம், வேண்டாமென்று தள்ளவும் செய்யலாம். நாம் செய்வதுதான் கடைசி முடிவு.

ஆகவே, நாட்டின் நடைமுறைக்கு ஏற்ற வகையில், நடைமுறைக்கு ஒத்துக்கொள்கிற வகையில் இருக்க வேண்டுமென்று செய்யலாம். மாநகராட்சி தன் எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு அதற்குள்ள அவசியம் இருக்கிற காரணத்தால் இதைச் செய்கின்றன. சென்னை மாநகராட்சியைப்போல வேறு பல நகராட்சிகளும் இருக்கின்றன. மாநகராட்சி தன் எண்ணங்களை இந்த அவைக்குத் தெரிவித்து இந்த அவை முடிவு எடுக்க வேண்டுமென்ற காரணத்தால் இதைக் கூறுகிறேன். எல்லா வகையிலும், எல்லாக் கட்சிகளும் நடைமுறையில் ஒத்துக்கொள்வதை ஏற்றுக்கொள்வார்கள். எல்லோரும் வழக்கமாகத் திருத்தம் கொண்டு வருவதைக் கொண்டு வருவார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் தங்களுடைய திருத்தங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய திருத்தம் பேரவையின் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

THIRU K. M. SUBRAMANIAM: I am pressing, Sir. When my amendment is being put to vote, I want to seek a clarification.

MR. SPEAKER: Now it is the time of voting and there cannot be clarification or expression of opinion. The hon. Member may resume his seat.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

MR. SPEAKER: The motion is talked out.

8. தன்னிலை விளக்கம்.

தான் கூறாத ஒன்றைக் கூறியதாக ஓர் உறுப்பினர் சொன்னது குறித்து மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு விளக்கம் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய காலை நிகழ்ச்சியின் இடை நேரத்தில் நான் மாவட்ட ஆட்சியாளருடைய மாநாடு ஒன்றிலே கலந்து கொள்ளச் சென்றிருந்தபோது—நான் இந்த அவையில் இல்லாதது ஒரு குறை அல்ல—நான் பேசாததை, நான் சொல்லாத ஒன்றை தான் சொன்னதாக ஒரு அங்கத்தினர் சொன்னதாக அறிந்தேன். நான் சொன்னதை விட்டுவிட்டு, சொல்லாததை, பத்திரிகைச் செய்தியை அடிப்படையாக வைத்து, என்னிடத்தில் பேசிய ஒருவர் எழுதிய கடிதத்தை வைத்து, திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், தமிழ் மாணவர்களையும், தமிழ்க் கல்லூரிகளையும் நான் இழிவுபடுத்திப் பேசியதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியாவது அவருக்கு ஒரு தமிழ்ப்பற்றினை இந்நிகழ்ச்சி உண்டாக்கியிருந்தால் நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

நான் ஒரு நிகழ்ச்சியிலே கும்பகோணத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்தபோது ஒரு மாணவர் மேடைமீது வந்து ஒரு வேண்டுகோள் கொடுத்தார். நான் அதைப் படிக்க முடியாததால் எதைப்பற்றி இந்த வேண்டுகோள், என்ன நிகழ்ச்சி என்றேன், நான். அந்த மாணவர் 'எங்கள் கல்லூரி மூடப்பட்டது, அதைப் பற்றித்தான் இந்த வேண்டுகோள்' என்று சொன்னார். 'உங்கள் கல்லூரி மூடப்பட்டதா? அது அரசினர் கல்லூரியா, தனியார் கல்லூரியா? ஏன் மூடப்பட்டது?' என்றேன் நான். 'தனியார் கல்லூரி, நாங்கள் ஸ்டிரைக் செய்தோம்' என்றார் மாணவர். "எதற்காக ஸ்டிரைக் நடத்தினீர்கள்?" என்று நான் கேட்டேன். 'மத்திய சர்க்கார் உதவிப் பணம் எங்களுக்கு அனுப்பி வரும். இப்போது அந்தப் பணம் அனுப்பவில்லை' என்றார் மாணவர். 'மத்திய சர்க்கார் பணம் அனுப்பவில்லையென்றால் என்னிடத்தில் முறையிடுகிறீர்களே?' என்றேன் நான். 'மத்திய சர்க்காருக்குத்

தெரிவிக்க வேண்டும்' என்றார் மாணவர். 'அப்படியென்றால், கல்வியமைச்சர் மூலமாக வேண்டுமானால் மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்துகிறோம்' என்றேன் நான். இந்தக் கல்லூரிக்கு மத்திய சர்க்கார் பணம் தருகிறது. அந்த உதவிப் பணம் நிறுத்தப் பட்டுவிட்டது. அது மாநில அரசாங்கத்தின் நேரடியான நிர்வாகத்தில் வருகிற கல்லூரியா என்றால் இல்லை, தனியார் கல்லூரி.

வேலை நிறுத்தம் செய்த அந்த மாணவர்கள் தமிழ்நாடு அரசாங்கத்தின் பஸ்ஸைத் தடுத்து நிறுத்தினார்கள். போக்கு வரத்துக்கு இடையூறு விளைவித்திருக்கிறார்கள். அதன் பின்னர் போலீசார் தலையிட்டு மாணவர்களைக் கலைக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. அதன்பிறகுதான் கல்லூரியை மூடியிருக்கிறார்கள். மாணவர்கள் வேலைநிறுத்தம் என்றால் எதற்காக பஸ்ஸை நிறுத்தினார்கள்? பிறகு அந்த மாணவரைப் பார்த்து, திருப்பனந்தாள் மடம் இலவசமாகச் சாப்பாடு போடுகிறார்களா, என்றேன் நான். 'ஆமாம்' என்றார் அந்த மாணவர். 'வேலைநிறுத்தம் நீங்கள் செய்தீர்களா? கல்லூரி முதல்வர் செய்தாரா?' என்றேன் நான். 'நாங்கள் கல்லூரிகளுக்குப் போகவில்லை' என்றார் அவர். 'நீங்களே கல்லூரிகளுக்குப் போகாமல் வேலைநிறுத்தம் செய்து, பஸ்ஸையும் நிறுத்திவிட்டு என்னிடத்தில் வந்து முறையிடுகிறீர்களே, நீங்கள் இலவச சாப்பாடு பெற்றுக்கொண்டு கல்லூரிக்குப் போகாமல் இருக்கிறீர்களே, தமிழ் படித்ததாகச் சொல்லிக் கொண்டு தமிழ் மாணவர்கள் பெயரைக் கெடுக்கிறீர்களே?' என்று கேட்டேன்.

தமிழ் மாணவர்கள் சிலருடைய தூண்டுதலால் ஆட்சிக்கு விரோதமாக திருப்பப்படுகிறார்கள். அரசாங்கத்தை எதிர்த்து மாணவர்கள் போராட்டம் நடத்த வேண்டுமென்று சிலர் தூண்டுபவர்களாக இருக்கிற காரணத்தால், நான் அவர்கள் போக்கைக் கண்டித்தேன். நான் அமைச்சராக இருக்கிற காரணத்தால் கண்டிக்கவில்லை. தமிழ் ஆசிரியர் என்கிற காரணத்தால் கண்டித்தேன். நீங்கள் கல்லூரிக்குப் போகாமல் இங்கே வந்து முறையிடுகிறீர்களே, அப்படி கல்லூரி மூடியிருந்தால் முறைப்படி விண்ணப்பம் செய்யுங்கள் என்று பதில் அளித்தேன். நான் அளித்த பதிலில் கடுமையான வார்த்தை எதுவும் இல்லை. வேண்டுமானால் கடுமையான குரல் இருந்திருக்கும். அது என் பிறப்புரிமை. ஆகவே இங்கே பேசப்பட்ட செய்தி உண்மைக்கு மாறானது. அப்படி ஒரு செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது என்று பல நண்பர்கள் தெரிவித்தனர். பல தவறான செய்திகள் வந்திருக்கிற பத்திரிகையை நான் பார்ப்பது இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்தார் . . . .

MR. SPEAKER: The Hon. Minister has given an explanation and the House is convinced of the same.

THIRU K. T. K. THANGAMANI: No debate is allowed when a statement is made.

[1971 டிசம்பர் 18

7. அரசினர் தனித் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ், (ஓய்வூதியம் பெறத்தக்க) நகராட்சிப் பணிகள் குறித்த பணி நிபந்தனைகள் முதலியவற்றை முறைப்படுத்துவதற்கான வரைவு விதிகள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 305-ஏ, பிரிவிற்கிணங்க, தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிப் பணிகள் (ஓய்வூதியம் பெறத்தக்க), குறித்து வகைப்பாடு, வேலைக்கு ஆள் சேர்த்தல், பணி நிபந்தனைகள், ஒழுங்குமுறை, மேல் முறையீடு, ஓய்வூதியம் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்குக் கீழ்க்கண்ட வரைவு விதிகளுக்கு ஏற்பளிக்க இந்த அவை தீர்மானித்துள்ளது.

1. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிப் பணி விதிகள் :

பாகம் 1—தொடக்கம்.

பாகம் 2—பொது விதிகள்.

பாகம் 3—பிரிவு 1. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொதுப்பணி விதிகள்.

பிரிவு 2. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிப் பொறியியல்—நீர்ப்பணிகள் பணிவிதிகள்.

பிரிவு 3. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சி நகர அமைப்புத் திட்டப் பணிவிதிகள்.

பிரிவு 4. கிளை I தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிப் பொதுச் சுகாதார ஒழுங்குமுறை விதிகள்.

கிளை II தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சி மருத்துவப் பணிவிதிகள்.

பிரிவு 5. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிக் கல்விப் பணிவிதிகள்.

2. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிப் பணி (ஒழுங்குமுறை-மேல் முறையீடு) விதிகள்.

3. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிப் பணிகள் ஓய்வூதிய விதிகள்.

பேரவை உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

1971 டிசம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த பதினைந்து நாட்களுக்கு முன்பு போர் மேகங்கள் சூழ்ந்திருந்த நேரத்தில் நாம் இந்தச் சட்டப் பேரவையில் கூடினோம். இன்றைய தினம் போர் மேகங்கள் கலைந்து, இந்தியா வெற்றிக் களிப்பில் திகழ்ந்திருக்கிற நேரத்தில் சட்டப்பேரவை மனநிறைவோடு கலைகிறது. பேரவை காலவரையறையின்றி, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர், மீண்டும் பேரவை கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. பிற்பகல் 1-40.

9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. STATUTORY RULES AND ORDERS.

Nil.

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

78. Return of Assets submitted to the House by the Hon. Chief Minister, Hon. Minister for Education and Local Administration, Hon. Minister for Industries, Hon. Minister for Co-operation, Hon. Minister for Transport and Members of Legislative Assembly (*vide* names below) :—

As on 31—3—1971 :

1. Hon. Dr. M. Karunanidhi, Chief Minister.
2. Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister for Education and Local Administration.
3. Hon. Thiru S. Madhavan, Minister for Industries.
4. Hon. Thiru Si. Pa. Aditanar, Minister for Co-operation.
5. Hon Thiru S. Ramachandran, Minister for Transport.

MEMBERS.

1. Thiru A. Arumugam.
2. Thiru C. Arumugam.
3. Thiru K. Rajamanickam.
4. Thiru J. S. Raju.
5. Thiru P. Ettiappan.
6. Thiru T. Ganapathy.
7. Thiru K. P. Kandasamy.
8. Thiru M. Kandasamy.
9. Thiru S. Kandappan.
10. Thiru M. V. Karivengadam.
11. Thiru J. Karunainathan.
12. Thiru N. V. Gurusami.

13. Thiru R. Govindarasan.
14. Thiru S. Sangumuthu Thevar.
15. Thiru S. Sadasivam.
16. Thiru A. P. Shanmugasundaram.
17. Thiru P. R. Shanmugam.,
18. Thiru M. Sathiamoorthy.
19. Thiru T. V. Sampath.
20. Thiru T. K. Siraimeettan.
21. Dr. S. A. Chinnaraju.
22. Thiru A. R. Subbiah.
23. Thiru M. Surulivel.
24. Thiru M. Surendran.
25. Thiru G. Jabamalai.
26. Thiru K. T. K. Thangamani.
27. Thiru T. C. Thimmaraya Gounder.
28. Thiru K. Thiruppathy.
29. Thiru S. M. Durairaj.
30. Thiru A. Devendiran.
31. Thiru N. Nachimuthu.
32. Thiru A. M. T. Nachiappan.
33. Thiru N. Nachiappan.
34. Thiru M. V. Narayanaswamy
35. Thiru M. Paramasivam.
36. Dr. S. M. Palaniappan.
37. Thiru K. Palanivelan.
38. Thiru V. Balasundaram.
39. Thiru K. H. Bomman.
40. Thiru V. Malaikkannan.
41. Thiru M. Meenakshisundaram.
42. Thiru K. K. Muthiah.
43. Dr. M. Moses.
44. Thiru S. K. Vadivelu.
45. Thiru S. Vadivel.
46. Thiru A. Velladurai.
47. Thiru J. James.
48. Dr. H. V. Hande.
49. Thiru V. C. Govindasamy.

79. Twenty-four Return of Assets as on 31st March 1971 submitted to the House by the Hon. Members of the Legislative Council.

80. A note on the Sethusamudram Project.

* 81. The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1971 (L.A. Bill No. 54 of 1971).

* 82. The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 (L.A. Bill No. 55 of 1971).

83. List of Unstarred Questions and Answers from Nos. 1 to 30.

இணைப்பு—1

[19-ம் பக்கத்தில் 561-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(இ) 1970-71-ஆம் ஆண்டு குதிரைப் பந்தயங்கள் நடைபெற்ற காலத்தின்போது, சென்னைக் குதிரைப் பந்தயக் கழகத்திற்குக் கீழ்க்கண்ட அதிகாரிகள் உதவி புரிந்துள்ளனர்:—

(1) கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சித் துறை இயக்குநராகவும், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வராகவும் இருந்து ஓய்வு பெற்ற டாக்டர் பெர்ட்டி ஏ. டிசௌசா 1970-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ஆம் நாள் வரை (அவர் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நாள்) கௌரவ கால்நடை மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றுவதற்கும், அதற்குரிய வீதாச்சார ஊதியத்தை பெறுவதற்கும் அனுமதிக்கப்பட்டார் அவர் ஓய்வு பெற்றதும், சென்னைக் குதிரைப் பந்தயக் கழகம் தற்போதுள்ள கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சித்துறை இயக்குநரும், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வருமான டாக்டர் ரத்தினசபாபதியவர்களை, 1970-71-ஆம் ஆண்டு குதிரைப் பந்தயங்கள் நடைபெறுங்காலத்தின் எஞ்சிய பகுதிக்கு ரூ. 1,500 மதிப்பூதியம் பெறுவதன்மேல், கௌரவ கால்நடை மருத்துவ அதிகாரியாகப் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. அரசு அதற்குத் தேவையான அனுமதியை வழங்கியது.

(2) சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பதவியுயர்த்தப்பட்ட விலங்குகள் மகப்பேற்றியல் பேராசிரியர் டாக்டர் வெங்கடசாமி, 1970-71-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய காலத்தின் போது, குதிரைப் பந்தயம் நடைபெறும் எல்லா நாட்களிலும் சென்னைக் குதிரைப் பந்தயக் கழகத்தின் கால்நடை மருத்துவத் தலைமை அதிகாரிக்குத் தொழில் நுட்ப உதவி புரியவும், குதிரைப் பந்தய நாளொன்றுக்கு ரூ. 50 ஊதியம் பெறவும் அனுமதியளிக்கப் பட்டார். இவ்வாறு அவர் புரியும் உதவி, அவரது சாதாரணக் கடமைகளுக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

* Despatched to Members on 17th December 1971.

(3) கீழ்க்கண்ட அதிகாரிகள், பகுதிநேர அடிப்படையில், கிண்டியிலுள்ள குதிரைகள் மருத்துவமனைக்கு (சென்னைக் குதிரைப் பந்தயக் கழகத்துடன் இணைக்கப்பட்டது) தொழில் நுட்ப ஆலோசனை உதவி புரிய, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வரான, கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சித் துறையின் இயக்குநரால் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் இவர்கள் செய்வதற்குரிய சாதாரணக் கடமைகளில் மேற்சொன்ன பணி குறுக்கிடுவதாக இருக்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரிலேயே இவர்களுக்கு மேற்சொன்னவாறு அனுமதியளிக்கப்பட்டது:—

(1) டாக்டர் எஸ். தாமோதரன்,
பதவியுயர்த்தப்பட்ட விலங்குகள் நோய்க்குறி இயல் பேராசிரியர்,

(2) டாக்டர் எம். ரங்கநாதன்,
பதவியுயர்த்தப்பட்ட புலாலுணவு ஆய்வுத்துறைப் பேராசிரியர்,

(3) டாக்டர் எச். என். அச்சுதன்,
உதவி ஆராய்ச்சி அதிகாரி,
(ஒட்டுயிர்களான குடற்புழுக்கள் ஆய்வு இயல்),

(4) டாக்டர் எல். வி. கோபாலகிருஷ்ணன்,
விலங்குகள் உடற்கூறு இயல் விரிவுரையாளர்,

(5) திரு. வி. வேணுகோபால்,
எக்ஸ்-கதிர் நிழற்படமெடுப்பவர்.

[*Subject.*—Animal Husbandry Department—Personnel—Services lent to Race Courses.]

(*a*) Yes.

(*b*) The following officers have rendered assistance to the Madras Race Club during the racing season 1970–71 :—

(1) Dr. Bertie A. D' Souza, retired Director of Veterinary Education and Research and Dean, Madras Veterinary College, was permitted to serve as Hony. Veterinary Officer up to 16th December 1970 (the date of his retirement from Government service) and to receive proportionate remuneration thereof. On his retirement the Madras Race Club requisitioned the services of the present Director of Veterinary Education and Research and Dean, Madras Veterinary College, Dr. Rathnasabapathy to serve as Hony. Veterinary Officer for the remainder of the race season 1970-71 on an honorarium of Rs. 1,500 and necessary permission was accorded by the Government.

(2) Dr. Venkataswamy, Upgraded Professor of Obstetrics, Madras Veterinary College, was permitted to render technical assistance to the Chief Veterinary Officer, Madras Race Club, on all racing days during the racing season 1970–71 and to receive a remuneration of Rs. 50 per race day without detriment to his normal duties.

(3) The following officers have been permitted by the Director of Veterinary Education and Research and Dean, Madras Veterinary College, to render technical consultation assistance to the Equine Hospital, Guindy (attached to the Madras Race Club) on part-time basis, subject to the condition that the work will not interfere with their normal legitimate duties in the Madras Veterinary College :—

(i) Dr. S. Damodaran, Upgraded Professor of Pathology;

(ii) Dr. M. Ranganathan, Upgraded Professor of Meat Inspection ;

(iii) Dr. H. N. Achuthan, Assistant Research Officer (Helminthology) ;

(iv) Dr. L. V. Gopalakrishnan, Lecturer in Physiology ; and

(v) Thiru V. Venugopal, Radiographer.

இணைப்பு-2

[20-ம் பக்கத்தில் 563-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

சீரணி தனி அதிகாரியின் கடமைகளும், பொறுப்புகளும்.

1. சமூகத்தின் பொதுநலனுக்கு தாமாகவே முன்வந்து பணிபுரிய விரும்பும் தொண்டுள்ளங் கொண்டவர்களைத் திரட்டி பொதுநலத் திட்டங்களை செயல்படுத்துதல்.

2. சீரணித் திட்டங்களையும், கோட்பாடுகளையும், அரசாங்க அளவில் பரிசீலனை செய்யவும், அரசுக்கு உதவவும், மற்ற துறைகளுடன் கலந்து திட்டங்களைத் தயாரித்தல், பரிசீலித்தல், செயல்படுத்துதல்.

3. மாவட்ட சீரணித் தலைவர்களுடனும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும், அந்தந்த மாவட்டங்களில் நேர்முக தொடர்பு கொண்டு சீரணிப் பணிகள் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் குறித்து ஆராய்வதும் பணிகளைத் துரிதமாக செயல்படுத்த உதவுதல்.

4. மாவட்டங்களில் சீரணிப் பணிகளை ஆய்வு செய்து, விரிவாகவும் துரிதமாகவும் செயல்படுத்த அரசு மூலம் அறிவுரைகள் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளல்.

5. சீரணித் திட்டத்தினை மாவட்ட அளவில் செயல்படுத்தும் பொறுப்பானது மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் இருப்பது போல், சென்னை நகரைப் பொறுத்தவரை சீரணிப் பணிகளை செயல்படுத்தும் நேரடிப்பொறுப்பு ஏற்று செயல்படுத்தல்.

[1971 டிசம்பர் 18

6. சென்னை நகர சீரணித்தலைவர் மற்றும் தொகுதித் தலைவர்களுடன் அவ்வப்போது கலந்துபேசி சென்னை சீரணிப் பணிகளுக்காக தொண்டர்களின் உழைப்பை பெருமளவில் திரட்டுதலும், சென்னை நகரச்சீரணி செயற்குழு கூட்டங்களில் செயலராக இருந்து அறிவுரைகள் வழங்குதலும், நகர சீரணிக்கான திட்டங்கள் வகுத்து செயல்படுத்தல்.

7. சென்னை நகர சீரணிப்பணிகளுக்காகவும், தொண்டர்களின் அணிவகுப்பு சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட துறையின் அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பணிகளைச் செவ்வனே நிறைவேற்றும் பொறுப்பும்.

8. மாநில சீரணி ஆலோசனை வாரியக்குழுவில், செயலராக பணியாற்றுவதும் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

9. சென்னை நகரில் சீரணி அறிவகங்களை மேற்பார்வையிடுதலும் நகரில் அவ்வப்பொழுது சீரணி மேற்கொள்ளும் துப்புறவு, பேருந்து பயணிகளை ஒழுங்குபடுத்துதல். சத்துணவுத் திட்டத்தை சரிவர நடத்தும் பணிகளையும் அவ்வப்பொழுது பார்வையிடுதல்,

10. சென்னை சீரணித் தொண்டர்களின் மாதாந்திர நேர்நடை மற்றும் இதர பயிற்சி ஒத்திகைகளை மேற்பார்வையிடுதல்,

11. சீரணிப் பணிகள் குறித்து அவ்வப்போது அரசின் கொள்கைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளலும், சீரணித் தொண்டர்களிடையே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய உயரிய நோக்கங்களைக் கடைப்பிடிக்க வலியுறுத்தி தன்னலமில்லா சேவையுணர்ச்சியை ஊக்குவித்தல் போன்ற பல்வகைப் பணிகளை மேற்கொள்ளல்.

இணைப்பு—3.

[21-ம் பக்கத்தில் 565-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

கோவை மாட்டத்தில் உள்ள மலைவாழ் மக்களுக்கு Schedule Tribes) அரசு கீழ்க்கண்டவாறு நன்மைகள் செய்தும வருகின்றது:—

(அ) வேளாண்மை

ஒரு ஏக்கர் புன்செய் நிலம் உடைய மலைவாழ் இனத்தவர்க்கு, கிணறு வெட்ட தலா ரூ. 2,000 மானியமாக அளிக்கப்படுகின்றது. இந்த மானியம் ரூபாய் 2,000 மூன்று தவணைகளில் வழங்கப்படுகின்றது. இத்திட்ட ஆரம்பத்திலிருந்து இதுவரை 35 நபர்களுக்கு இம்மானியம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) உழவு மாடுகள்

வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மலைவாழ் மக்களுள் ஒவ்வொருவருக்கும் இரண்டு உழவு மாடுகள், விதைகள்,

1971 டிசம்பர் 18]

விவசாயக்கருவிகள் இனமாகத் தரப்படுகின்றன. இவைகளின் மொத்த மதிப்பு ரூ. 500 இதுவரை 150 நபர்களுக்கு இம்மானியம் இது வகையில் தரப்பட்டுள்ளது.

(உ) வீடு வழங்குதல்.

மலைவாழ் குடும்பத்தினர் வசிப்பதற்கு, ஒரு குடும்பத்திற்கு ரூபாய் 1,250 மதிப்புள்ள வீடுகட்டி தரப்படுகின்றது. இந்த ரூ. 1,250-ல் 75 விழுக்காடு மானியமாகவும் 25 விழுக்காடு 100 மாதாந்திர தவணைகளில் திருப்பிக்கொடுக்கப்படவேண்டிய கடனாகவும் கருதப்படுகின்றன. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 300 வீடுகள் மலைவாழ் மக்களுக்கு கட்டப்பட்டுள்ளன.

(எ) இணைப்புச் சாலை அமைத்தல்.

மலைவாழ் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் போடப்படுகின்றன. இதுவரை 30 இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஐ) கருவிகள், உபகரணங்கள் வழங்குதல்.

தையல் இயந்திரம், தச்சு வேலைகருவிகள் மற்றும் பிரம்பு வேலைக்குறிய கருவிகள், முதலியன அந்தந்த தொழிலில் ஈடுபட்டுள்ள மலைவாழ் மக்களுக்கு இனமாக தரப்படுகின்றன. க(ஹ) சாரிளில் (கோபிதாலுகா) ஒரு தொழில் பயிற்சிப்பள்ளி அமைக்கப்பட்டுள்ளது. அப்பள்ளியில் 15 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றார்கள்.

(ஒ) குடிநீர் வசதி.

மலைவாழ் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படுகிறது.

(ஔ) கல்வி.

இங்குள்ள மலைப்பகுதிகளில், மலைவாழ் மக்களுக்காக 17 உண்டு உறைவிடப்பள்ளிகள் உள்ளன. சின்னதடாகம், மேல்பாபிபுதூர் ஆகிய இரண்டு இடங்களில் இரண்டு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும், விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கும், ஊட்டச்சத்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. இம்மாணவர்களுக்குத் தீபாவளி பொங்கல் காலங்களில் இரண்டு ஜதை ஆடைகளும் அரிசன மாணவர்களுக்குத் தரப்படுவதுபோல் உபகாரச் சம்பளமும் தரப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள்.

காடுகளில் உள்ள விளைபொருள்களை மலைச்சாதியினரிடமிருந்து நல்ல விலைக்கு வாங்குவதற்கு வனத்துறை கூட்டுறவு சங்கங்கள் 5 உள்ளன.

(இ) கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும், படிக்கும் மலைவாழ் மாணவர்களின் எண்ணிக்கை விவரம்:—

	மாணவர்கள்	மாணவியர்கள்	மொத்தம்
உயர்நிலைபள்ளிகள்	19	4	23
கல்லூரிகள்	இல்லை	இல்லை	இல்லை

இணைப்பு—4.

[97-ம் பக்கத்தில் கண்டுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

[SUBJECT.—*Rules—The Madras City Municipal Corporation Act,* 1919—*Rules relating to the election of members to the Standing Committees of the Municipal Corporation of Madras—Draft rules—Confirmed.*]

(*G.O. Ms. No.* 2655, *Rural Development and Local Administration, 4th December* 1971.)

(Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 4th December 1971.)

NOTIFICATION.

(*G.O. Ms. No.* 2655, *Rural Development and Local Administration, dated 4th December* 1971.)

In exercise of the powers conferred by sub-section (1) of section 6-B and sub-section (1) of section 59 read with clause (*a*) of sub-section (2) of section 347 of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), the Governor of Tamil Nadu hereby makes the following rules relating to the election of members of Standing Committees of the Municipal Corporation of Madras the same having been previously published as required by clause (*a*) of section 348 of the said Act.

RULES.

RULES RELATING TO ELECTION OF MEMBERS OF STANDING COMMITTEES OF THE MUNICIPAL CORPORATION OF MADRAS.

1. *Place of meeting.*—The election of members of a standing committee (hereinafter referred to as "the committee") shall be held in the office of the Corporation at a meeting of the council specially convened by the Mayor for the said purpose as soon as possible after the occurrence of any vacancy in the committee.

2. *Notice of the meeting.*—Notice of the day and hour of the meeting shall be given to the councillors atleast four clear days previous to the date of the meeting. Such meeting shall be presided over by the Mayor, or, in his absence by the Deputy Mayor, or, in the absence of both the Mayor and the Deputy Mayor, by a councillor (not intending to stand as a candidate at the election or any of the elections, as the case may be) chosen by the councillors present at the meeting to preside for the occasion (hereinafter referred to as "the president of the meeting").

3. *Election of members to more than one committee at the same meeting.*—A separate election shall be held for each committee. If elections are to be held at the same meeting of the council to fill vacancies in more than one committee, the order in which the elections are held shall follow the order in which the committees are mentioned in section 6-A. If however, the election to any committee is adjourned for any reason, the election for the committee next in order shall be proceeded with.

4. *Nomination of candidates.*—Every candidate for election shall be proposed by one councillor and seconded by another councillor. A candidate who has been proposed and seconded may withdraw his candidature by making a statement to that effect at the meeting of the council. The names of all the candidates who have been proposed and seconded and who have not withdrawn their candidature, shall be read out by the president of the meeting.

5. *Mode of election.*—(1) If the number of candidates, whose names are so read out, is equal to the number of vacancies, the president of the meeting shall declare all such candidates duly elected.

(2) If the number of candidates, whose names are so read out is less than the number of vacancies, the president of the meeting shall declare all such candidates duly elected and shall either call for fresh nominations or shall adjourn the election to fill up the remaining vacancies to the next meeting of the council.

(3) If the number of candidates, whose names are so read out, exceeds the number of vacancies, the votes of the councillors present at the meeting shall be taken by ballot. The Commissioner shall make adequate arrangements to secure the privacy of the ballot.

6. *Voting procedure.*—(1) Every councillor wishing to vote shall be supplied with a ballot paper which shall be in the following form and shall bear on the reverse the signature/facsimile of the president of the meeting and on which the names of all candidates referred to in sub-rule (3) of rule 5 shall be typed or legibly written.

Counterfoil No. ....

The Council of the Corporation of Madras. Election of member(s) to Standing Committee ....

Serial number of the elector ....

Foil No. ....

The Council of the Corporation of Madras. Election of member(s) to Standing Committee ....

BALLOT PAPER.

Names of candidates.	*Cross-mark.*
(1)	
(2)	
(3)	

(2) Each councillor shall then proceed to the place set apart for voting and shall there place a cross-mark with the instrument supplied for the purpose against the name of the candidate or the names of the candidates for whom he wishes to vote. He shall, then, fold up the ballot paper so as to conceal his vote and deposit the same in the ballot box placed in front of the president of the meeting.

(3) The ballot box shall be so constructed that the ballot paper may be placed therein but not extracted therefrom without the box being opened.

7. *Supply of fresh ballot paper in certain circumstances.*—If a member inadvertently spoils a ballot paper, he may return it to the president of the meeting, who shall, if he is satisfied of such advertence, issue to him another ballot paper and retain the spoiled ballot paper. The spoiled ballot paper shall immediately be cancelled and the fact of such cancellation shall be noted on its counterfoil.

8. *Counting of votes.*—The president of the meeting shall then open the box and count the votes in the presence of the members.

9. *Invalid ballot papers.*—Any ballot paper which bears the signature or any other mark of the councillor or on which cross-marks are placed against more candidates than there are vacancies to be filled, shall be invalid.

10. *Declaration of result of election.*—The candidate who obtains the largest number of votes, or, if there is more than one vacancy, as many of the candidates at the top of the poll as there are vacancies to be filled, shall be declared to have been duly elected. If there be an equality of votes between any two or more candidates and the addition of one vote to any one or more of such candidates will entitle him or them to be declared

duly elected, the president of the meeting shall decide by drawing lots in the presence of the council to which one or more of such candidates such additional vote shall be deemed to have been given and thereafter the candidates elected shall be declared.

11. *Candidates entitled to vote.*—Councillors who have been duly proposed and seconded as candidates may also take part in the ballot.

12. *Recording of proceedings.*—Immediately after the meeting, the President of the meeting shall—

(*a*) prepare a record of the proceedings at the meeting and sign it; and

(*b*) furnish the name or names of the person or persons elected as member or members of the committee to the Commissioner and also to the Director of Stationery and Printing, Madras for publication in the *Tamil Nadu Government Gazette.*

13. *Custody and disposal of ballot papers.*—(1) The president of the meeting shall, then, make up into a packet the unused ballot papers, used ballot papers, whether valid or rejected and all other papers relating to the election, seal up the packet and note thereon a description of its contents, the election to which it relates and the date thereof and hand over the packet to the Commissioner for safe custody.

(2) The packet shall not be opened and its contents shall not be inspected or produced except under the orders of a competent court.

(3) The packet shall be retained in safe custody in the office of the corporation for one year and shall, then, unless otherwise directed by the orders of a competent court, be destroyed.

HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g. (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill (s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad. Motion	..	**Adjournment Motion.**
Ann.	..	**Announcement.**
B.O.H.	..	**Business of the House.**
C.A.	..	**Calling Attention to a Matter of Urgent Public Importance.**
C.A.St.	..	**Calling Attention Statement.**
Consid.	..	**Consideration Stage of a Bill. This stage includes:—** **(i) Motion to refer to Select Joint Select Committee.** **(ii) Amendment to refer to Select/Joint Select Committee.** **(iii) Amendment to circulate.**

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

Consid. Cl.	..	Consideration of Clauses of a Bill.
D.E.E.	..	Demands for Excess Expenditure.
Dis. S.D. or D.S.D.	..	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G.	..	Demands for Supplementary Grants.
G.A.	..	Governor's Address.
G.D.	..	General Discussions.
H.A.H. Dis./H.H.D.	..	Half-hour Discussion.
Int.	..	Introduction stage of a Bill.
L.A.	..	Legislative Assembly.
L.C.	..	Legislative Council.
M.	..	Motion.
P.M.	..	Privilege Motion.
R/Res.	..	Resolution.
St.	..	Statement.

Index to Tamil Nadu Legislative Assembly Debates.

THIRD SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

15th to 18th December 1971.

VOLUME XIV (Nos. 1 TO 4).

PAGES

A.

ABDUL JABBAR, THIRU V. M.—

Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 91–93

Appropriation (No. 4) Bill, 1971 379–382

ACTS.

Agricultural Labourers (Fixation of Wages) Act, Extension to West Thanjavur 241–245

ADITANAR, THIRU SI. PA.—

Co-operative Societies (Second Amendment) Bill, 1971 ... ... 66–74, 75, 77, 78

ADMINISTRATION.

Thiruvalluvar Era, usage in Government records ... 17

AGRICULTURE.

Boring machines, hiring 140

Saffron cultivation 39

Technical schools 144

Thungapuram Small Land Owners Association's Petition ... ... 351–35[illegible]

Wells for Ethilodu Panchayat 349

Women Graduates ... ... 3[illegible]

ALAGARSAMY, THIRU S—

Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 ... ... 80–8[illegible]

PAGES

A—*cont.*

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 ... ... 80, 82–85, 103

Alleged move or failure of Government to take action against Rajaji and two Weeklies (*Swarajya* and *Kalki*) for publishing views supporting Yahya Khan (A.M.) 161–162

Apprognition (No. 4) Bill, 1971 ... ... 382–384, 385, 387, 391, 399

Bangla Desh—Felicitations on Victory (R) 269–271

Bus Route, Triplicane-Nanganallur 45

Co-operative Societies (Second Amendment) Bill, 1971 ... ... 64, 70, 71, 72, 75

Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains (A.M.) 361

Madras Corporation Standing Committee Members, Election Rules (M) 425–427

Reduced rice supply under "Rupee-a-measure Scheme" (C.A.) 172, 173, 174

ANBAZHAGAN, THIRU K.—

Adverse effects caused by the letting out of Tiruchi Alcohol Factory Drainage water into Uyyakkondan Canal (C.A. St.) 292–293

Alleged move or failure of Government to take action against Rajaji and two Weeklies (*Swarajya* and *Kalki*) for publishing views supporting Yahya Khan (A.M.) 154–156

Hunger-strike by Elementary School Teachers' Association (Salem Branch) against Family Planning drive by teachers and consequent hardships (C.A., St.) 169–171, 172

Personal explanation refuting remarks made by a Member 430–431

A—*cont.*

PAGES

ANIMAL HUSBANDRY—

Poultry Development, Chingleput district ... 225–228

Poultry market, Kerala's monopoly supply ... 226–228

ARCHAEOLOGY—

Ancient Sculpture, Kulasekarankottai 11–12

ARTS—

Ancient arts, development 332–333

B.

BACKWARD CLASSES—

House-site pattas 39–40

Inclusion of Gounder Community, representation 257–258

BALASUNDARAM, THIRU V.—

Madras Corporation Standing Committee Members, Election Rules (M) 421–424, 426

BILL(S)—

Agricultural Produce Markets (Amendment) Bill, 1971—

Message from President 78

Consid. 79–104

Consid. Cl. 104

Motion to pass 104

Passed 104

Appropriation (No. 3) Bill, 1971—

Message from Governor 310

Int. 310

Consid. 373

Consid. Cl. 373

Motion to Pass 373

Passed 373

Appropriation (No. 4) Bill, 1971—

Message from Governor 310

Int. 311

Consid. 373–400

PAGES

B—*cont.*

BILL(S)—*cont.*

Appropriation (No. 4) Bill, 1971—*cont.*

Consid. Cl. 400

Motion to Pass 400

Passed 400

Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971—

Consid. 406–411

Consid. Cl. 411

Motion to Pass 411

Passed 411

Co-operative Societies (Second Amendment) Bill, 1971—

Consid. 50–74

Consid. Cl. 74–78

Motion to Pass 78

Passed 78

Entertainments Tax (Amendment) Bill, 1971—

Message from Legislative Council agreeing without recommendation 372

Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971—

Consid. 400–405

Consid. Cl. 405

Motion to Pass 405

Passed 405

Legislature (Prevention of Disqualificatios) Amendment Bill 1971—Message from Legislative Council agreeing without amendment 372

Madras University (Amendment) Bill, 1971 ... 209–211

Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 174–209

Payment of Salaries (Amendment) Bill, 1971—Message from Legislative Council agreeing without amendment 372

Practitioners of Homoeopathy Bill, 1971—

Message from Legislative Council agreeing without amendment 50

PAGES

B—*cont.*

BOMMAN, THIRU K.H.—

Harijan Hostel, construction at Ootacamund ... 129–130

BRIDGES—

Causeway across Arni river 14

Overbridge, Ondipudur 251

Overbridge, Periapalayam 252

BUILDINGS—

Licence for quarrying stones 249

C.

CALLING ATTENTION—

Adverse effects caused by letting out of Tiruchi Alcohol Factory Drainage water into Uyyakkondan canal 291–294

Change of shifts in Rajapalayam Alagappa Cotton Mills and consequent hardships to workers ... 367–368

Danger facing Cotton Plantations in Coimbatore district due to non-availability of Pesticides ... 369–371

Hunger-strike by Elementary School Teachers' Association (Salem Branch) against Family Planning drive by teachers and consequent hardships 169–172

Reduced supply of rice under 'Rupee-a-measure Scheme' 172–174

CHAIR—

Announcement:

Previlege matter 364

Rulings and Observations—

Adjournment Motions—

Admissibility—

On 16th December 1971 the Chair called upon a Member to briefly explain how the matter given notice of by him namely, proposed action against Rajaji and *Swarajya* came within the purview of an Adjournment Motion and the Member commenced to explain. The Minister for

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Adjournment Motions—cont.

Admissibility—cont.

Public Health rose on a point of order and observed that the motion must be on a definite matter but it only referred to the 'proposed action' which was based on the assumption that the Government might take action in such and such direction and so there was nothing definite about it.

The Chair held that it was not a point of order. He had allowed the Member to explain how the matter came under the provisions relating to Adjournment Motions. Such laxity was shown to the Members who should of course not take too much advantage of it. It was not as if Members should not at all be given such opportunity. If that was the case, he would have rejected the motion in his Chamber itself 164

College Students' strike in Madurai and Madras and consequent closure of collages:

Consent was withheld on the ground that there was no need for the motion in the statement by the Minister 169

Madurai Vaigai floods and consequent loss of human life, disappearance of helicopter and damage to crops in Thanjavur district due to heavy rains.

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the Chief Minister's statement ... 366

Proposed action against Rajaji and Swarajya *Implications of Rajaji's writings in* Swarajya *and its publication in* Kalki *and failure to ban such publications* :

Consent was withheld on the ground that there is no need for the motion in the light of the statement made by the Chief Minister 153–164

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Adjournment Motions—cont.

Scope for discussion :

Before the Chair gave consent the Members should confine their remarks to explain how the matter came within the purview of an Adjournment Motion, how the responsibility of the Government was involved and what was the failure, omission or commission on the part of the Government and refrain from referring to matters of detail which were to be referred to only after the admission of the motion 155–158

Allegations :

With reference to the objections raised for a Member making certain allegations against the Miniser for Public Health when he was not present in the House, the Chair observed as follows :—

"All Members had equal rights and privileges. It was not in order for a Member to say that the other Member was reading some paper as the same remark could be made against the Member."

Since there was joint responsibility of the Cabinet it was not correct to say that an allegation against a Minister who was absent should not be made and that the Member should wait till the Minister came to the House and then only should make the allegation. Even in the absence of a Minister, Members had the right and privilege to make an allegation against him or criticise him. But the general practice and convention was to make such allegations when the Minister concerned was present so that he would have an opportunity to reply to the allegations made against him ... 385–387

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Decorum :

During question hour noticing some Members going here and there in the House, the Chair observed that during question hour, it would be better if the Members remained in their respective seats as he was not able to see who asked the question and who replied 347

Reference to Speaker :

Members should not refer to the Speaker in their speeches. Remarks like 'I recognise only one Speaker', 'We all abide by the Speaker's directions' etc., need not be specifically made as it was their duty to respect the Chair and abide by its directions. 63

Questions and Answers—

Supplementary Questions—

Newspaper reports :

Statements should not be based on newspaper reports. It was the will and pleasure of the Ministers to answer or refuse to answer such questions 231

Supplementaries should not be too long but should be brief 356

With reference to a supplementary put by a Member the Chair observed that Members should only ask questions. It was the duty of the Minister to answer questions. As the Member had put a leading question, he disallowed it 231

Ruling :

No Minister can give a judgment and no Minister can order a Member 68

There should be no comment on the ruling given by the Chair 64

Voting :

At the time of voting, there could not be any clarification or expression of opinion ... 430

PAGES

C—*cont.*

CHINNARAJU, DR. S. A.—

Loans to Dharmapuri District Harijan Co-operative Motor Transport Society 239, 240

Mathikettan Channel, formation in Harur taluk ... 345–346

X-ray Unit for Harur Government Hospital ... 336–337

CHINNASAMY, THIRU A.—

Cashewnut industry for Jayankondam 139–140

Marudayar Scheme, irrigation facilities to T. Pazhur 251–252

CITIES—

Madras City, development 335–336

COLLEGES—

Vacant seats, broadcasting 236

CO-OPERATION—

Achievements, propagation 349

House Building Society at Wandiwash, loans ... 40–41

Land Development Bank for Singanallur ... 347–348

Loans through Co-operative Central Banks ... 350

Loans to Dharmapuri District Harijans Co-operative Motor Transport Society 239–240

Nilakkottai—Marketing Society, dissolution ... 141

Palm Candy Industry, Tiruchendur 348–349

CORPORATIONS—

Mayoral Election on Communal basis, Madurai Corporation 330

Mayor of Madras, tenure of office 331

COTTON—

Danger facing cotton plantations in Coimbatore district due to non-availability of pesticides (C.A.) 369–371

COURTS—

Chamber for Advocates in Madurai, Construction ... 34–35

District Munsif Court for Vaniyambadi 35

Writ petitions, steps for quick disposal 32–34

CONFERENCES—

Police Officers Conference, decisions 2–4

PAGES

D.

DAMS—

Thoppiar Anicut Scheme 346

DEFENCE—

National Defence State Committee, inclusion of members 153

DENNIS, THIRU N.—

Cape Comorin Fruit Farm, Converting as Research Centre 112

Creche at Secretariat 20–21

Drought areas, drinking water facilities 241–244

Employees State Insurance Dispensaries, Madras city 237

Fishing Boats, distribution 237–239

Malaria Eradication Programme, grants to Corporation 221–222

Mortgage deeds in favour of Life Insurance Corporation, exemption from stamp duties 241

Oil Tanker Berth, Madras harbour 140–141

Post-graduate diploma Course in Psychiatry starting at Kilpauk Mental Hospital 222–224

Production of grains 350–351

Prohibition, propaganda by religious heads 8-9

Protected Water-supply Scheme, Kanyakumari district 111–112

Race Course, Veterinary Department Personnel's assistance 237

Ready-made Garments Unit by Women's Welfare Department, Tambaram 21

Salinity in soil, tests 254

Sheep overloading in lorries 43

Social Welfare Board's Funds, utilisation 339

Tourist Bungalows 256–257

PAGES

D—*cont.*

DHARMALINGAM, THIRU A. P.—

Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 ... ... 79–80, 94–104

Danger facing cotton plantations in Coimbatore district due to non-availability of pesticides ... 369–371

DISEASES—

Jaundice, cases in Government hospitals 224–225

DRAINAGE SCHEMES—

Loans to Madras Corporation 107–108

DURAISWAMY, THIRU S.—

Boring machines, hiring 140

Danger facing cotton plantations in Coimbatore district due to non-availability of pesticides ... 369, 371

Debts due to Central Government, repayment ... 112–113

District Development Council, election of Chairman . 12–13

Employees' State Insurance Scheme, construction of hospitals 126–127

Inclusion of Gounder community in Backward Classes, representation 257–258

Kalpakkam Atomic Power Station, Production ... 354–355

Madras City, development 335–336

Power supply to industries, Tiruppur 146–147

Radio sets for Harijan colonies, Tiruppur Panchayat Union 20

Roads in Tiruppur, widening 346–347

Salem Steel Plant, commissioning 341

Tiruppur temples fund, misappropriation 150-151

Writ petitions, steps for quick disposal 32–34

PAGES

E.

EDUCATION—

Donations to Colleges, prohibition 228–230

Law College for Madurai University 233

Private Colleges, taking over by Government ... 230–232

ELECTRICITY—

Kalpakkam Atomic Power Station, production ... 354–355

Rural Electrification Scheme 355–357

Supply to industries, Tiruppur 146–147

EMPLOYEES—

Archakas, Pay fixation 263–266

Creche at Secretariat 20–21

Death of Engineer in Ennore Thermal Power Station 258–259

Government Press, uniforms 17

Panchayat Union employees, provincialising ... 331–332

Public Works Department Engineers, deputation to Electricity Board 146

EMPLOYMENT—

Unemployed Engineers 137–138

ENCROACHMENT—

Singampuneri, eviction orders 14–15

F.

FACTORIES—

Cycle factory at Thanjavur, functioning 247

Salt factory for Valinokkam 138

Simpson group workers, return to duty 323–328

Sugar factory near Karapoondi 247–248

Yarn Processing Unit at Erode, expansion 250–251

FAMINE—

Drought, Chingleput district 22

PAGES

F—*cont.*

FERTILIZERS—

Manali, Fertilizer Plant 343–344

Unsold 144–145

FINANCE—

Pawn Broker's Shop—Interest rates 41–42

FINANCIAL BUSINESS—

D.S.G. (First), 1971–72 (G.D.) 298–304

D.S.G. (First), 1971–72, Voting—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 305

Agriculture 306

Animal Husbandry 306

Capital Outlay on Industrial Development 309

Capital Outlay on Irrigation 309

Capital Outlay on Industrial Development ... 309

Capital Outlay on Road Transport Schemes ... 309

Capital Outlay on Schemes of Government Trading 310

Cinchona 307

Community Development Projects, etc. 307

Co-operation 306

District Administration and Miscellaneous ... 305

Education 306

Famine Relief 308

Fisheries 306

Forest Department 309

General Sales-Tax and other Taxes and Duties—Administration 305

Head of State, Ministers and Headquarters Staff ... 305

PAGES

F—*cont.*

FINANCIAL BUSINESS—*cont.*

D.S.G. (First), 1971-72, Voting—*cont.*

Industries 307

Irrigation 307

Labour including Factories 307

Land Revenue 304

Loans and Advances by the State Government ... 310

Medical 306

Milk Supply Schemes 305

Miscellaneous 308

Pensions 308

Police 305

Public Health 306

Public Works—Establishment and Tools and Plant 308

Public Works—Grants-in-Aid 308

Public Works—Works 308

Road Transport—Schemes 308

Stationery and Printing 309

Welfare of Backward Classes, etc. 307

Welfare of Scheduled Tribes and Castes, etc. ... 307

D.E.E., 1967-68—

Administration of Justice 296

Animal Husbandry 297

Capital Outlay on Transport Schemes 299

Elections 295

Fisheries 296

Head of State, Ministers and Headquarters Staff ... 295

Loans and Advances by the State Government ... 298

Medical 296

Miscellaneous 297

PAGES

F—*cont.*

FINANCIAL BUSINESS—*cont.*

D.E.E., 1967-68—*cont.*

Police 296

Public Works—Establishment and Tools and Plant 297

Road Transport Schemes 297

Stamp Administration 295

State Legislature 295

Stationery and Printing 298

FISHERIES—

Fishing boats, distribution 237-239

Mechanised Fishing Boat Building Yard at Nagapattinam, expansion 239

FLOODS—

Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains (A.M.) 364-366

FOOD—

Bakery Unit in Public sector 131

Prices of edibles in hotels 27-31

FOODGRAINS—

Production 350-351

Reduced rice supply under "Rupee-a-measure Scheme" (C.A.) 172-174

Smuggling of wheat 245

FOREST—

Grazing lands, increase of licence fee 43

FRUITS—

Apple plantation, Doddapetta area 37

Banana Package Scheme, Ottapidaram ... 142-143

Cape Comorin Fruit Farm, converting as Research Centre 142

Jack Fruit, export 357

"Panai Nungu", export 141

PAGES

G.

GAZETTE—

Publication in Tamil 125–126

H.

HANDE, DR. H. V.—

Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 87–91

Alleged move of Government to take action against Rajaji and two Weeklies (*Swarajya* and *Kalki*) and failure to ban publication of views supporting Yahya Khan in these papers (A.M.) ... 154,155, 156, 157–158, 159

Appropriation (No. 4) Bill, 1971 ... ... 385–386, 391–393, 398

Bangla Desh, felicitations on Victory (R) 278–282

Car number plates in Tamil 352–353

Death of Engineer, Ennore Thermal Power Station 258–259

Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains (A.M.) 364

Drainage schemes, loans to Madras Corporation ... 107–108

Employment to unemployed Engineers 137–138

Hunger-strike by Elementary School Teachers Association (Salem Branch) against Family Planning drive by teachers and consequent hardships (C.A.) 169, 171, 172

Jaundice, cases in Government Hospitals 224–225

Kalpakkam Atomic Power Station, production ... 354–355

Madras Corporation Standing Committee Members, Election Rules (M) 424–425

Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 193–196

PAGES

H—*cont.*

HANDE, DR. H. V.—*cont.*

P.W.D. Engineers, deputation to Electricity Board 146

Rameswaram Temple, renovation 46–49

Rural Electrification Scheme 355–357

Smuggling of wheet 245–246

Thanjavur Medical College Hospital, death due to tetanus 122–123

Thungapuram, Small Land Owners Association's petition 351–352

Water supply and drainage schemes, Life Insurance Corporation loan to Municipalities and Corporation 108–111

HANDLOOMS—

Cloth from polyster fibres 344

HARBOUR—

Madras, construction of oil tanker berth 140–141

HARIJAN WELFARE—

Colony at Kilvenmani, delay in construction ... 127–128

Construction of hostel, Ootacamund 129–130

Harijan Colony for Pallipet sub-taluk 240–241

Radio sets for Harijan colonies 18–20

Radio sets for Harijan Colonies, Tiruppur Panchayat Union 20

Reservation in Government service 1–2

Scholarship, enhancement 128–129

HEALTH—

Adverse effects caused by letting out of Tiruchi Alcohol Factory Drainage Water into Uyyakkondan Canal (C.A.) 291–294

Advisory Committee on Leprosy, meetings ... 333–335

Malaria Eradication Programme, grants to Corporation 221–222

PAGES

H—*cont.*

HIDES AND HORNS—

Utilisation 248–249

HILL TRIBES—

Badaga Association, meeting with Minister 130

Coimbatore district, concessions 339–340

HISTORY—

Tamil Nadu History, constitution of Committee for compilation 117–119

HOSPITALS AND DISPENSARIES—

Denkanikota Local Fund Dispensary, upgrading ... 123

Dispensary for Palaya Jayankondan 225

Employees' State Insurance Dispensaries, Madras City 237

Employees State Insurance Scheme 126–127

Hospital for Sethur 123

Nurses Training, selection of males 124–125

Post-graduate Diploma Course in Psychiatry, starting at Kilpauk Mental Hospital 222–224

Taluk Headquarters Hospital for Gummidipundi ... 337

Thanjavur Medical College Hospital, death due to tetanus 122–123

Theni-Alinagar hospital, doctors 124

X-ray unit for Harur Government Hospital .. 336–337

HOUSING—

Centre's assistance 145–146

Political sufferers 353

Families evicted from Gudalore, allocation of alternate sites 130

Pattas to Backward Classes 39–40

PAGES

I.

ILANGOVAN, THIRU G.—

Village Officers, qualification 32

INDUSTRIES—

Cashewnut Industry for Jayankondam 139–140

Fruit Processing Unit for Kodaikanal 37

Kancheepuram Zari factory, functioning 35

Palmcandy Industry for Tiruchendur 348–349

Textool Company at Coimbatore, taking over ... 246–247

IRON AND STEEL—

Salem Steel Plant 341, 342, 343

IRRIGATION—

Marudayar Scheme, irrigation facilities to T. Pudhur 251–252

Mathikettan Channel, formation in Harur taluk ... 345–346

Sindalavadi Drainage Canal Water, utilisation ... 251

Water Cess, Amaravathi ayacut area 26

Water Cess for using Cauvery water through pumpsets 23–26

J.

JAILS—

Articles manufactured by prisoners 134

Life-term prisoners 134–136

JAMES, THIRU J.—

Co-operative Societies (Second Amendment) Bill, 1971 ... ... 56–58, 75, 76, 77, 78

Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains (A.M.) 364

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—

Madras Corporation Standing Committee Members, Election Rules (M) 415

JUTE—

Cultivation in Tamil Nadu 37

PAGES

K.

KADHAR BATCHA (*alias*) VELLAICHAMY, THIRU—

Artificial silk yarn distribution 249–250

Salt factory for Valinokkam 138

KAMATCHI, THIRU K.—

Adverse effects caused by letting out of Tiruchi Alcohol Factory Drainage Water into Uyyakkondan Canal (C.A.) 291–292

KANDAPPAN, THIRU S.—

Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 ... ... 187–193, 195, 205

KANDASAMY, MANALI, THIRU C.—

Harijan colony, delay in construction at Kilvenmani 127–128

KANDASAMY, THIRU K.—

Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains (A.M.) 364

Students strike in Madurai and Madras and consequent closure of Colleges (A.M.) 165

KARUNANIDHI, DR. M.—

Alleged move of Government to take action against Rajaji and two Weeklies (*Swarajya* and *Kalki*) and failure to ban publication of views supporting Yahya Khan (A.M.) 156–157, 162–164

Appropriation (No. 3) Bill, 1971 310

Appropriation (No. 4) Bill, 1971 311

Bangla Dash, felicitations on victory (R) 267–269, 285–289

Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains (A.M.) 365–366

D.E.E., 1967–68—Voting—

Administration of Justice 296

PAGES

K—*cont.*

KARUNANIDHI, DR. M.—*cont.*

D.E.E., 1967-68—Voting—*cont.*

Animal Husbandry 297

Capital Outlay on Transport Schemes 298

Elections 295

Fisheries 296

Head of State, Ministers and Headquarters Staff 295

Loans and Advances by the State Government ... 298

Medical 296

Miscellaneous 297

Police 296

Public Works—Establishment and Tools and Plant 297

Road Transport Schemes 297

Stamp Administration 295

State Legislature 295

Stationery and Printing 298

D.S.G. (First) 1971–72 G.D. 303–304

National Defence State Committee, inclusion of Members 153

Reduced rice supply under "Rupee-a-measure Scheme" (C.A.) 173–174

KITTAPPA, THIRU N.—

Archakas, Pay Fixation 263–266

Big Libraries for each district 233–235

Cashew Cultivators, Loans 143–144

Chidambaram Nataraja Temple 358

Cycle factory at Thanjavur, functioning ... 247

Donation to Colleges, prohibition 228–230

Express buses, Madras-Tiruchirappalli 358

PAGES

K—*cont.*

KITTAPPA, THIRU N.—*cont.*

Fruit Processing Unit for Kodaikanal 37

Gazette, Publication in Tamil 125–126

History of Tamil Nadu, Constitution of Committee for compilation 117–119

Housing, Centre's assistance 145–146

Jack fruit, export 357

Kancheepuram Zari factory, functioning ... 35

Land Ceiling limit, further reduction 131–133

Law College for Madurai University 233

Mechanized Fishing Boat Building Yard at Nagapattinam, expansion 239

Mayor election on communal basis 330

Mayor of Madras, tenure of office 331

Modern Rice Mills 141

Municipalities, powers 331

Oil exploration, Cauvery delta area 36

Overloading in Private buses, preventive steps ... 260–261

Pawn Brokers' shop, interest rates 41–42

Political sufferers, housing facilities 353

Prices of edibles in hotel 27–31

Private Colleges, taking over by Government ... 230–232

Prosperity Brigades, serivces for constructing shelters 15–16

Registration department, promotions 237

Tamil letters on helmets of Police 321

Temple renovation 45

Thiruvallnvar Era, usage in Government records ... 17

Vacant seats in Colleges, broadcasting 236

PAGES

K—*cont.*

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Denkanikota Local Fund Dispensary, upgrading ... 123

Salem Steel Plant, Tectonic Map of Kanjamalai ... 342–343

Tobacco Research Sub-Unit for Hosur 38

KUMARASWAMY, THIRU K. N.—

Apple plantation, Doddapetta area 37

Building stones, licence for quarrynig 249

Danger facing cotton plantations in Coimbatore district due to non-availability of pesticides (C.A.) 369, 371

Grazing lands under Forest Department, increase of licence fee 43

Kodaikanal, development as Tourist resort ... 145

Palm Candy Industry for Tiruchendur 348–349

Saffron cultivation in Tamil Nadu 39

Sub-Registrar's Office for Singanallur 237

Tourist Homes near Marudamalai temple 262–263

Uniform for Government Press employees 17

Water cess for using Cauvery water through pumpsets 23–26

L.

LABOUR—

Change of shifts in Rajapalayam Alagappa Cotton Mills and consequent hardships to workers (C.A.). 367–368

LAND(S)—

Adeenam lands in Kodaramkulam Panchayat water cess 341

Ceiling limit, further reduction 131–133

Inam Estates (Abolition and Conversion under Ryotwari Act), exemption to Mutts and Adeenams. 340

Reforms High Power Committee's working 133–134

Saline lands, conversion into cultivable lands ... 254

Salinity in soils, tests 254

L.—*cont.*

PAGES

LANGUAGES—

Car number plates in Tamil 352–353

Tamil medium, incentives to college students ... 9–11

LATHEEF, THIRU M. A.—

Alleged move or failure of Government to take action against Rajaji anw two Weeklies (*Swarajya* and *Kalki* for publishing views supporting Yahya Khan (A.M.) 161–162

Co-operative Societies (Second Amendment) Bill, 1971 59–63

District Munsif Court for Vaniyambadi 35

D.S.G. (First) 1971–72 (G.D.) 299–301

Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 402–404

Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 185–187

LAW AND ORDER—

Simpson group workers, protection 323–328

LIBRARIES—

Big Libraries for each district 233–235

Local Library Authority, matching grant 119

LOANS—

Cashew cultivators 143–144

Debts due to Central Government, repayment ... 112–113

Life Insurance Corporation for Water Supply and Drainage Schemes 108–111

LOCAL BODIES—

District Development Council, election of Chairman 12–13

M.

MADHAVAN, THIRU S.—

Appropriation ...(No. 3) Bill, 1971 ... ... 372, 373

Appropriation (No. 4) Bill, 1971 ... . 373, 386, 393–400

PAGES

M—*cont.*

MALAICHAMY, THIRU P.—

Articles manufactured in Jails 134

Saline lands, conversion into cultivable lands ... 254

MALAIKANNAN, THIRU V.—

Express bus service, Madurai–Rajasingamangalam ... 149

MANIAN, THIRU P.S.—

Achievements of Co-operative Department, propagation 349

Ancient Sculpture in Kulasekarankottai 11–12

Chamber for Advocates in Madurai, construction ... 34–35

Government Text Books, sale 329–330

Graduates in Agriculture, woman candidates ... 38

Nilakkottai Co-operative Marketing Society, dissolution 141

Nurses Training, selection of males 124–125

Panchayat Union employees, provincialisation ... 331–332

Rest House for Madurai City 49

Sholavandan Town Panchayat, upgrading ... 332

Taxis plying by Transport Department 149–150

Wells for Ethilodu Panchayat 349

MARUDHACHALAM, THIRU N.—

Coimbatore Municipal Employees' Provident Fund . 120

D.S.G. (First), 1971–72, G.D. 301–302

Families evicted from Gudalur, allocation of alternative sites 130

Pension, Farm labourers in Coimbatore Agricultural College 255

M—*cont.*

MILLS—

Modern Rice Mills 141

MINES AND MINERALS—

Sulphur, Javadu Hills area 36

MOHIDEEN, THIRU A. M.—

Bangla Desh, felicitations on Victory (R) 276–278

MONUMENTS—

Bharathiyar's residence at Ettayapuram, National monument 236

MOTION(S)—

Adjournment motions—

Alleged move of Government to take action against Rajaji and two Weeklies (*Swarajya* and *Kalki*) and failure to ban publication of views supporting Yahya Khan 153–164

Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains 364–366

Students' strike in Madurai and Madras and consequent closure of colleges 164–168

B.O.H., change in order 372

Madras Corporation Standing Committee Members, Election Rules 415–430

MUNICIPALITIES—

Cinema theatres, running 236

Coimbatore Municipal Employees' Provident Fund. 120

Electricity workers, wages 121

Powers 331

MUNUSWAMY, THIRU R. R.—

Night service buses 147–149

Poultry Market, Kerala's monopoly supply 226-228

Prosperity Brigade, services for Traffic Survey ... 15

M—*cont.*

MUTHIAH, THIRU M.—

Banana Package Scheme, Ottapidaram 142–143

Harijans, reservation in Government service ... 1–2

House-site pattas to Backward Classes 39–40

Prohibition, Propaganda Committee 6–8

Radio sets for Harijan colonies 18–20

Scholarships to Harijans, enhancement 128–129

N.

NACHIAPPAN, THIRU N.—

School in Kalvirayamalai, closure 12

Temple lands in small villages, administration .. 358–363

NARASIMHAN, THIRU A. C.—

Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 85–87

NATARAJAN, THIRU E. M.—

Scheduled Tribes in hill areas of Coimbatore district, concessions 339–340

NATARAJAN, THIRU N. V.—

Change of shifts in Rajapalayam Alagappa Cotton Mills and consequent hardships to workers (C.A. St.) 367–368

NEDUNCHEZHIYAN, DR. V. R.—

Draft rules to regulate the Municipal Services (Pensionable) (R) 432–433

Madras Corporation Standing Committee Members, Election Rules (M) 415, 427–429

Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 ... ... 197–204, 209

Students' strike in Madurai and Madras and consequent closure of colleges (A.M.) 165–168

PAGES

O.

OFFICERS—

Sub-Registrars Office for Singanallur 237

OILS—

Oil exploration, Cauvery delta area 36

P.

PALANISWAMY, THIRU N. K.—

Kalpakkam Atomic Power Station, production .. 354–355

PANCHAYATS—

Panchayat Union Employees, provincialisation ... 331–332

Sholavandan Town Panchayat, upgrading 332

PAPERS LAID ON THE TABLE—

Appropriation (No. 3) Bill, 1971 435

Appropriation (No. 4) Bill, 1971 435

Beggar Rehabilitation Fund, list of M.L.A's contributed 211

Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 48 of 1971) 311

Christian Succession (Repeal) Bill, 1971 105

Constitution of State Defence Personnel's Amenities Committees, Government Order 221

Employment Exchange (Payment of Allowance) Bill, 1971 105

Entertainments Tax Act, 1939, notification 105

Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 311

Industrial Employees Payment of Gratuity Bill, 1971 105

Khadi and Village Industries Board Act, 1959, notification 104

PAGES

P.—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Madras University (Amendment) Bill, 1971 ... 105

Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 105

Motor Vehicles Taxation Act, notification ... 311

Public Service Commission Regulations, 1954, notification 105

Return of Assets of M.L.Cs., list of names 434

Return of Assets of Ministers and M.L.A's., list of names 433–434

Sethusamudram Project, note 434

Unstarred Questions and Answers, list 435

PARAMASIVAM, THIRU M.—

Thoppiar Anicut Scheme 346

PARANTHAMAN, THIRU A.—

Co-operative Societies (Second Amendment) Bill, 1971 51–52

Drought, Chingleput district 32

PENSIONS—

Farm labourers in Coimbatore Agricultural College. 255

PERUMAL, THIRU A. R.—

Bangla Desh, felicitation on Victory (R) 274–275

PLANNING COMMISSION—

State Planning Commission, working 4–6

POLICE—

D.I.G'. posts 320

Motorcycles to Sub-Inspectors 321–322

Police station for Anchetty (Denkanikota taluk) ... 322

Research Centre, functions 319–320

Tamil letters on helmets 321

Training College, Vellore, shifting 320–321

PAGES

P—*cont.*

POLITICAL SUFFERERS—

Housing facilities 353

Pensions 113–117

PROHIBITION—

Propaganda Committee 6–8

Propaganda by religious heads 8–9

PROSPERITY BRIGADE—

Services for construction shelters 15–16

Services for Traffic Survey 15

Special Officer's duties 338–339

PUBLIC HEALTH—

See under ' Health '.

R.

RACE COURSE—

Veterinary Department personnel's assistance ... 337

RAJA, THIRU A.M.—

Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 408–409

State Transport bus stops 328–329

Water analysis in Coimbatore Agricultural College ... 253–254

RAJANGAM, THIRU N.—

Co-operative Societies (Second Amendment) Bill, 1971 58–59

RAJARAM, THIRU K.—

B.O.H., change in order 372

RAMACHANDRAN, THIRU S.—

Draft rule amending Schedules to Motor Vehicles Taxation Act, 1931 (R) 412–415

PAGES

R—*cont.*

RESOLUTION(S)—

Bangla Desh, felicitations on victory 267–291

Draft rule amending Schedules to Motor Vehicles Taxation Act, 1931 412–415

Draft notification under Urban Land Tax Act, 1966 411

Draft rules to regulate the Municipal Services (Pensionable) 432–433

ROAD(S)—

Kundakalpatty-Meladai Manickapuram, repairs ... 119

Tiruppur, widening 346–347

S.

SANDALWOOD—

Industry in North Arcot district 259–260

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Adeenam lands in Kodaramkulam Panchayat, Water cess 341

Advisory Committee on Leprosy meeting ... 333–335

Air Cooling plant, Thiruchendur temple 263

Badaga Association, meeting with Minister ... 130

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, exemption to Mutts and Adeenams ... 340

Jute cultivation in Tamil Nadu 37

Police Research Centre, functions 319–320

Poultry Development, Chingleput district 225–228

South Indian Cinema Employees Union's resolution . 338

Taxis with defective meters 43–45

Textool Company at Coimbatore, taking over ... 246–247

PAGES

S—*cont.*

SARATHY, THIRU M. P.—
- Bakery unit in public sector 131
- Municipalities to run cinema theatres, proposal ... 236
- " Panai Nungu " export 141
- State Planning Commission, working 4–6
- Temples, aid by UNESCO 49

SCHEDULED CASTES—
- Depressed class reservation in Government service. 22–23

SCHOOLS—
- Kalvirayan Malai, closure 12

SERVICES—
- Registration department, promotions 237

SHANMUGHAM, THIRU P. U.—
- Appropriation (No. 4) Bill, 1971 385–389
- Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 ... ... 406, 409–410, 411
- Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 400–401, 404–405
- Notification under Urban Land Tax Act, 1966 (R) ... 411
- Reduced rice supply under " Rupee-a-measure Scheme " (C.A. St) 172–173, 174

SILK—
- Artificial silk yarn, distribution 249–250

SOCIAL WELFARE—
- Board's funds, utilisation 339

SOMASUNDARAM, THIRU N.—
- Agricultural Labourers (Fixation of Wages) Act, extension to West Thanjavur 244–245
- Depressed class, reservation in Government Service. 22–23
- Panchayat Union employees, provincialisation ... 331–332

PAGES

S—*cont.*

SOUNDARAPANDIAN, THIRU P.—
- Dispensary for Palaya Jayankondan 225
- Hides and skins, factory for utilisation 248–249
- Kundakalpatty-Maladai Manickapuram Road, repairs 119
- Sindalavadi Drainage Canal Water, utilisation ... 251
- Tourists Home and Kalyana Mandapam, construction by Krishnarayapuram Thirukkanmaleswarar temple 151
- Water cess, Amaravathi ayacut area 26

SRINIVASAN, THIRU T. P.—
- Sugar factory near Karapoondi 246–247
- Sulphur, Javadu Hill area 36

STRIKES—
- Power-loom Unit, Madurai 16–17
- Students' strike in Madurai and Madras and consequent closure of colleges (A.M.) 164–168

SUBBIAH, THIRU A.R.—
- Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 94–95

SUBRAMANIAM, THIRU A.—
- Appropriation (No. 4) Bill, 1971 376–379
- Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains (A.M.) 364
- Land Development Bank for Singanallur 347–348
- Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 183–185
- Overbridge, Ondipudur 251

SUBRAMANIAM, THIRU K. M.—
- Alleged move of Government to take action against Rajaji and two Weeklies (*Swarajya and Kalki*) and failure to ban publication of views supporting Yahya Khan (A.M.) 155

PAGES

S—*cont.*

SUBRAMANIAM, THIRU K. M.—*cont.*

Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 ... ... 406–40'

Co-operative Societies (Second Amendment) Bill, 1971 ... ... 50–5.

D.S.G. (First) 1971–72, G.D. ... ... 298–29!

Madras Corporation Standing Committee Members, Election Rules (M) 415, 419–421

Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 196–197

Students' strike in Madurai and Madras and consequent closure of colleges (A.M.) 165

SUBRAMANIAM, THIRU M.—

Handloom cloth from Polyester fibres, manufacture. 344

Yarn Processing Unit at Erode, expansion 250–251

SUPPU, THIRU K.—

Change of shifts in Rajapalayam Alagappa Cotton Mills and consequent hardships to workers (C.A.) 367, 368

Hospital for Sethur 123

Madras University (Amendment) Bill, 1971 ... 209–211

SURENDRAN, THIRU M.—

Bangla Desh, felicitations on victory (R) 282–285

Co-operative Societies (Second Amendment) Bill, 1971 54–56

Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains (A.M.) 364

Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 ... ... 174–179, 193, 204–208

SURULIVEL, THIRU M.—

Co-operative Societies (Second Amendment) Bill, 1971 63–66

PAGES

S—*cont.*

SWAMIDHAS, THIRU A.—

D.I.G's posts 320

Salem Steel Plant, visit by Central Government Officials 342

Tamil medium, incentives to college students ... 9–11

T.

TAMIL NADU—

Constitution of committee for compilation of history of 117–119

TANK(S)—

Seetharamapuram tank in Pallipattu, repairs ... 344

Thalavai tank in Kaniyambadi constituency, repairs 344

TAXES AND DUTIES—

Mortgage deeds in favour of Life Insurance Corporation, exemption from stamp duties 241

TEACHER(S)—

Hunger-strike by Elementary School Teachers' Association (Salem Branch) against Family Planning drive by teachers and consequent hardships (C.A.) 169–172

TEMPLES—

Aid by UNESCO 49

Air Cooling Plant, Thiruchendur temple 263

Bifurcation of Devasthanams 151–153

Chidambaram Nataraja Temple 358

Krishnarayapuram, Thirukkanmaleswarar temple, construction of Tourist Home and Kalyana Mandapam 151

Lands in small villages, administration 358–363

Rameswaram, renovation 46–49

Renovation, Government grants 45

Tiruppur—Veeraraghavaswamy temple fund, misappropriation 150–151

PAGES

T—*cont.*

TEXT BOOKS—

Government Text Books, sale 329–330

THANGAMANI, THIRU K. T. K.—

Alleged move or failure of Government to take action against Rajaji and two Weeklies (Swarajya and Kalki) for publishing views supporting Yahya Khan (A.M.) 159–161

Appropriation (No. 3) Bill, 1971 ... ... 372, 373

Appropriation (No. 4) Bill, 1971 374–376

Bangla Desh, feliciation on victory (R) 271–274

Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 ... ... 407–408, 411

Bifurcation of Devasthanams 151–153

Deaths and damages in Madurai due to Vaigai floods and destruction of crops in Thanjavur district on account of heavy rains (A.M.) 364

D.E.E. 1963–68 Police 296

Electricity Workers in Municipalities, wages ... 121

Encroachment in Sigampuneri, eviction orders ... 14–15

Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 ... ... 401, 402, 405

Land Reforms, High Power Committee's working ... 133–134

Life term prisoners 134–136

Madras Corporation Standing Committee Members, Election Rules (M) 415, 416–419

Madurai Power-loom Unit, strike 16–17

Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1971 ... ... 179–183, 209

Pensions to political sufferers 113–117

Simpson Group workers' return to duty 323–328

Theni-Alinagar hospital, doctors 124

PAGES

T—*cont.*

THIRUVALLUVAR ERA—

Use in Government records 17

THOPPUR THIRUVENGADAM, THIRU—

Bharathiyar's residence at Ettayapuram, national monument 236

Local Library Authority, matching grant 119

Police Training College, Vellore, shifting 320–321

Prosperity Brigade, Special Officer duties 338–339

Sandalwood Industry in North Arcot district ... 259–260

Technical School in Agriculture 144

Temple renovation, Government grants 45

Thalavai tank in Kaniyambadi constituency, repairs 344

THIAGARAJAN, THIRU E. S.—

Bangla Desh, felicitations on victory (R) 285

Harijan Colony for Pallipet sub-taluk 240–241

National Water-supply Scheme, Tiruttani taluk ... 111

Seetharamapuram tank in Pallipattu, repairs ... 344

TOBACCO—

Research Sub-unit at Hosur 3, 8

TOURISM—

Kodaikanal, development as tourist resort 145

Rest House for Madurai City 49

Tourist Bungalows 256–257

Tourist home near Marudamalai temple 262–263

TRADE UNIONS—

South Indian Cinema Employees' Union's resolution 338

TRANSPORT—

Bus route, Triplicane-Nanganallur 45

Express buses, Madras-Tiruchirappalli 358

Express bus service, Madurai-Rajasingamangalam ... 149

PAGES

T—*cont.*

TRANSPORT—*cont.*
- Jeep bus service in hill areas 261
- Night service buses 147–149
- Old buses, replacement 261–262
- Overloading in private buses, preventive steps ... 260–261
- Sheep, overloading in lorries 43
- State Transport bus stops 328–329
- Taxis, plying by Transport Department 149–150
- Taxis with defective meters 43–45

V.

VEGETABLES—
- Vegetable Farm in Government Estate (Madras) ... 357–358

VENKATASWAMY, THIRU B.—
- Motorcycles to Sub-Inspectors 321–322
- Police station for Anchetty (Denkanikota taluk) ... 322

VEZHAVENDAN, THIRU K.—
- Annappa Naicken Kuppam Anicut water to Gummidipundi 252, 253
- Causeway across Arni river 14
- Old buses, replacement 261–262
- Overbridge, Periapalayam 252
- Taluk Headquarters Hospital for Gummidipundi ... 337

VILLAGE OFFICERS—
- Qualification Rules, relaxation 32

W.

WAHAB, THIRU K. A.—
- Ancient arts, development 332–333
- Co-operative House Building Society at Wandiwash, loans 40–41
- Co-operative Societies (Second Amendment) Bill, 1971 ... ... 5[illegible]

PAGES

W—*cont.*

WAHAB, THIRU K. A.—*cont.*
- Jeep bus service in hill areas 261
- Kalpakkam Atomic Power Station, production ... 354–355
- Loans through Co-operative Central Bank ... 350
- Manali Fertilizer plant 343–344
- Police Officers' Conference, decisions 2–4
- Prohibition, propaganda committee 6–8
- Unsold manure 144–145
- Vegetable Farm in Government Estate (Madras) ... 357–358

WATER-SUPPLY—
- Annappa Naicken Kuppam Anicut, water to Gummidipundi 252, 253
- Drought areas 241–244
- Kanyakumari district 111–112
- Life Insurance Corporation loan to Municipalities and Corporation 108–111
- National water-supply scheme, Tiruttani taluk ... 111
- Water analysis in Coimbatore Agricultural College 253–254

WOMEN'S WELFARE—
- Readymade Garments Unit by Women's Welfare Department, Tambaram 91

61539